[திரு. எம். பக்தவத்சலம்] [29th January 1963

னில் பாதுகாப்புக் காரியங்களுக்காக, பலவித மோட்டார் வண்டிகளை ஓட்டுவதற்கு ஏராளமான 'டிரைவர்கள்' தேவைப்படுவர். எனவே, தொழில் பயிற்சி நிலையங்களிலும், அரசாங்கப் போக்குவரத்துத் துறைகளிலும் 'டிரைவர்களின்' பயிற்சிக்கான ஒரு திட்டத்திற்கு அனுமதி அளித்துள்ளோம். இம்மாதிரி பயிற்சித் திட்டங்களைச் செயலாற்றுவதற்கு தனியார் பல் நிறுவனங்களும் முன்வந்துள்ளன. இத்திட்டத்தின்கீழ்ப் பயிற்சியாளர்களை நியமிக்கவும் பயிற்சி பெறுபவர்களுக்கு உதவிப் பணம் வழங்கவும் சுமார் ரூ. 6.45 லட்சம் செலவாகலாம். ஆனால், துணை மதிப்பீட்டில் ரூ. 100 மட்டுமே அடையாள ஒதுக்கமாகக் காட்டப்பட்டுள்ளது.

பாதுகாப்புப் படைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டு, நமது மருத்துவக் கல்லூரிகளில் பயிற்சி வசதிகளை அதிகரிக்க உத்தேசித்துள்ளோம். அடுத்த கல்வி ஆண்டின் தொடக்கத்திற்கு முன்பு அவைபற்றி தீர்மானிக்கப்படும். நர்சுகள், மருத்துவக் கலவை செய்பவர்கள் (Pharmacists) போன்ற டாக்டர்களுக்கு உதவியாக இருக்கும் பணியாளர்களுக்கான தற்போதைய பயிற்சி வசதிகளை அதிகரித்துள்ளோம். கூடுதலாக 400 நர்சுகளுக்குப் பயிற்சி அளிக்க அனுமதி அளித்துள்ளோம். அதற்காக ரூ. 15.19 லட்சம் நடைமுதல் செலவும், ரூ. 20.82 லட்சம் மீளா இனச்செலவும் பிடிக்கும். அடையாள ஒதுக்கமாக ரூ. 100 துணை மதிப்பீட்டில் ஒதுக்கப்பட்டுள்ளது.

நாட்டுப் பாதுகாப்புக்கும் அபிவிருத்தித் திட்டங்களுக்கும் நெருங்கிய சம்பந்தம் உண்டு என்பதைக் கனம் அங்கத்தினர்கள் ஒப்புக்கொள்வார்கள். விவசாய உற்பத்தியையும், தொழில் உற்பத்தியையும் அதிகரிப்பதன்மூலம்தான் நாளாவட்டத்தில் நாம் நமது பாதுகாப்புப் பலத்தை அதிகரிக்க முடியும். எனவே, உணவுத் தானியங்கள், பருத்தி, எண்ணெய் வித்துக்கள் போன்றவைகளின் உற்பத்தியைப் பெருக்க நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளோம். விவசாயம் சம்பந்தப்பட்ட மதிப்பீட்டில் பல புதிய திட்டங்கள் கண்டுள்ளன. சென்னை நகரம், திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், திருநெல்வேலி ஆகிய இடங்களிலும் அவற்றின் சுற்றுவட்டாரத்திலும் காய்கறி உற்பத்தியைப் பெருக்குவதற்கான திட்டத்தை கனம் அங்கத்தினர்களின் விசேஷ கவனத்திற்குக் கொணர விரும்புகின்றேன். இத்திட்டத்திற்கென ரூ. 13.72 லட்சம் செலவாகலாம். நடைமுறை ஆண்டில் எதிர்பார்க்கப்படும் செலவு துணை மதிப்பீட்டில் சேர்க்கப்பட்டுள்ளது. தென் ஆர்க்காடு மாவட்டத்தில் நிலக்கடலைத் தீவிர உற்பத்தி முன்னோடித் திட்டத்திற்கும் அனுமதி அளித்துள்ளோம். அதற்கு ரூ. 3.23 லட்சம் செலவாகும். அண்மையில் ரூ. 10.65 லட்சம் செலவில் மேற்கொண்டு இரண்டு யூனிட்டுகளைத் துவக்குவதற்கென அனுமதி அளித்துள்ளோம். நடுத்தர, சிறிய பாசனத் திட்டங்களுக்கான செலவையும் நாம் அதிகரித்துள்ளோம். மதுரை மாவட்டத்தில் மஞ்சளாற்றுக்குக் குறுக்காக ஓர் அணை கட்ட அனுமதி அளித்துள்ளோம்.



29th January 1963] [திரு. எம். பக்தவத்சலம்]

அதற்கு ரூ. 65.8 லட்சம் செலவாகும். வைகை நீர்த்தேக்கத் திட்டத்தின்கீழ் உள்ள திருமங்கலம் பிரதான கால்வாயைச் சீர்படுத்த ரூ. 13.5 லட்சம் செலவிட அனுமதியளித்துள்ளோம். இத்திட்டங்களுக்காகத் துணை மதிப்பீட்டில் ஓர் அடையாளத் தொகை சேர்க்கப்பட்டுள்ளது. இவற்றைத் தவிர பல சிறிய பாசனத் திட்டங்களுக்கும் நாம் அனுமதி அளித்துள்ளோம். புதிய கிணறு மானியத் திட்டத்தின்கீழ் கிணறுகள் வெட்டும் திட்டத்தைத் துரிதமாக நிறைவேற்றவும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம். புதிய கிணறு மானியத் திட்டத்தின்கீழ் ரூ. 25 லட்சம் கூடுதல் நிதி ஒதுக்கம் துணை மதிப்பீட்டில் சேர்க்கப்பட்டுள்ளது.

நாட்டின் தற்போதைய நெருக்கடி நிலைமையில் உணவுப் பற்றாக்குறை ஏற்படுவதையும், விலைவாசிகள் உயர்வதையும் தடுக்க வேண்டும். எனவே, இம் மாநிலத்தின் அரிசி மில் முதலாளிகளிடமிருந்து சுமார் 1 லட்சம் டன் அரிசியைக் கொள்முதல் செய்யும்படி மத்திய அரசினர் நம்மைக் கேட்டுள்ளனர். அதன்மூலம் நியாய விலைக் கடைகளுக்குத் தடங்கலின்றி அரிசி வழங்குவது சாத்தியம் ஆகும். அரிசி மில்கள் தாமாகவே முன்வந்து அரிசி வழங்குவதன் மூலம், அரிசியைக் கொள்முதல் செய்வதற்கான திட்டம் ஒன்றை நாம் தயாரித்துள்ளோம். இக் கொள்முதல் திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வருவதற்காகக் கூடுதல் பணியாளர்களை நியமிக்க துணை மதிப்பீட்டில் வகை செய்யப்பட்டுள்ளது. கொள்முதலுக்குத் தேவையான நிதி முழுவதையும் மத்திய அரசினர் முன் பணமாக வழங்குவர். பணியாளர்களுக்கான செலவையும் மத்திய அரசினரே ஏற்றுக்கொள்வர்.

தற்போதைய நிலையில் விலைவாசிகள் உயர்ந்துவிடாமல் தடுப்பதற்காக, உபயோகிப்போர் கூட்டுறவுச் சங்கங்களைப் (Consumers' Co-operatives) பரவலாக ஏற்படுத்தும் திட்டம் ஒன்றை அனுமதித்து இருக்கிறோம். மொத்த வியாபாரம் செய்யும் கூட்டுறவுச் சங்கங்களோடு, இக் கூட்டுறவுச் சங்கங்கள் இணைக்கப்பட்டிருக்கும். ஒரு லட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் தொகையுள்ள ஒன்பது நகரங்களில் இத் திட்டம் முதன்முதலில் செயல்படுத்தப்படும். இதற்காக, ஆண்டு ஒன்றுக்கு சுமார் ரூ. 37.97 லட்சம் செலவாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்தத் துணை மதிப்பீட்டில், ரூ. 31.63 லட்சம் சேர்க்கப்பட்டுள்ளது. தொழிற்சாலையில் பணிபுரியும் தொழிலாளர்களுக்காகவும் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தும் திட்டம் ஒன்றைத் துவங்கியுள்ளோம்.

இந்த நடைமுதல் ஆண்டின் தொடக்கத்திலிருந்து மிக முக்கியமான ஒரு சமூக நலத் திட்டத்தை நாம் மேற்கொண்டுள்ளோம். அதுதான் முதியோர் பென்ஷன் திட்டம். 65 வயதுக்கு மேற்பட்ட ஆதரவற்றவர்கள் எல்லோருக்கும் மாதமொன்றுக்கு ரூ. 20 பென்ஷன் பெறும் உரிமை வழங்கப்பட்டுள்ளது. இதற்காக, ஆண்டு ஒன்றுக்கு சுமார் ரூ. 25 லட்சத்திலிருந்து ரூ. 30 லட்சம் வரைதான் தேவைப்படும் என்று தொடக்கத்தில் கருதினோம். ஆனால் இது

வரை 40,000-க்கு மேற்பட்டவர்கள் இத் திட்டத்தின்கீழ் பயனைப் பெற்றுள்ளனர். ஆகவே, இத் திட்டத்தால், ஆண்டு ஒன்றுக்கு ரூ. 120 லட்சமும் அதற்கு மேலும்கூட செலவாகலாம் என்று இப்பொழுது தென்படுகிறது. நடைமுதல் ஆண்டில் மாத்திரம் இதற்காக ரூ. 40 லட்சம் தேவையெனக் கணக்கிடப்பட்டிருக்கிறது. பட்ஜெட்டில், அடையாள நிதியாக ரூ. 2 லட்சம்தான் ஒதுக்கப் பட்டுள்ளது. ஆகவே, இத் துணை மதிப்பீட்டில் கூடுதலாக ரூ. 38 லட்சம் கோரப்பட்டுள்ளது.

இன்றியமையாத இதர செலவுகள் அரசாங்கத்திற்கு எவ்வளவோ இருப்பினும், மாதம் ரூ. 150-க்கு மேல் ஊதியம் பெறும் அரசாங்கப் பணியாளர்களுக்கு, அகவிலைப்படியை உயர்த்துவது என்று அரசாங்கம் தீர்மானித்துள்ளது. ஸ்தல ஸ்தாபன ஊழியர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் இந்தச் சலுகை விஸ்தரிக்கப் படும். இவ்வாறு அளிக்கப்படும் படி உயர்வால், மாநில அரசாங்க ஊழியர்களின் அகவிலைப்படி, மத்திய அரசாங்க ஊழியர்களின் அகவிலைப்படிக்கு ஒப்ப அமைந்துவிட்டது. இதற்காகத் தேவைப் படும் தொகை, இத் துணை மதிப்பீட்டில் சேர்க்கப்பட்டுள்ளது.

துணை மதிப்பீட்டில் சேர்க்கப்பட்டுள்ள இதர திட்டங்கள்பற்றி விசேஷமாகச் சொல்ல வேண்டியதில்லையாயினும், இதனுள் கோரப் பட்டுள்ள செலவினங்களில் பெரும்பகுதி, அபிவிருத்தித் திட்டங் களுக்காகவும் தேசிய நெருக்கடி சம்பந்தமான திட்டங்களுக் காகவுமே என்பதை இச் சபை நன்கு அறியும்.

குறித்த கால அளவுக்குள் வகுத்த முறைப்படி இந்த மாநிலம் தனது அபிவிருத்தித் திட்டங்களை நிறைவேற்றியுள்ளதை கனம் அங்கத்தினர்கள் அறிவார்கள். பட்ஜெட்டில் ஆரம்பத்தில் ஒதுக்கிய தொகைகளுக்குச் சற்று அதிகமாகவே ஒவ்வொரு ஆண்டும் திட்டத்திற்காகச் செலவு செய்து வருகிறோம். நடை முதல் ஆண்டிலும் திட்ட வேலைகளில் முதலீடு எதிர்பார்த்ததற்கு மேலாகவே இருக்குமென நான் நம்புகிறேன்.

அபிவிருத்தித் திட்டங்களை நிறைவேற்றவும், தேசிய நெருக் கடியைச் சமாளிக்கவும் மக்கள் அதிகமாகச் சேமித்து, சேமித்த பணத்தைப் பாதுகாப்புச் சேமிப்புப் பத்திரங்கள், அஞ்சலகச் சேமிப்புப் பாங்குகள் முதலியவற்றில் முதலீடு செய்து உதவ வேண்டும். இந் நற்பணியில் பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன்கள், மாவட்ட அபிவிருத்திக் கவுன்சில்கள் போன்ற மக்கள் ஸ்தாபனங்கள் சிரத்தைகொள்ள வேண்டும். சிறு சேமிப்பு இயக்கத்தைத் தீவிரப்படுத்துவதற்காக மாவட்ட அளவில் கூடுத லான பணியாளரைச் சமீபத்தில் நியமித்துள்ளோம். அதன் பொருட்டு உண்டாகும் செலவு துணை மதிப்பீட்டில் சேர்க்கப்பட் டுள்ளது. இச் சிறு சேமிப்பு இயக்கத்தில் கனம் அங்கத்தினர்கள் எல்லோரும் தனி ஆர்வமும், உற்சாகமும் காட்டி அதன்மூலம் தேசப் பாதுகாப்புப் பணிக்கு உதவ வேண்டும் என்று கோரி, இந்தத் துணை மதிப்பீட்டை இம் மன்றம் அங்கீகரிக்க வேண்டு மென்று பணிவன்புடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.





## VII.—DISCUSSION ON THE GOVERNOR'S ADDRESS.

MR. SPEAKER: We will now proceed with the discussion on the Governor's Address.

Now the hon. Member, Sri T. P. Elumalai will move the Motion of Thanks to the Governor's Address.

SRI T. P. Elumalai: Mr. Speaker, I move—

'That an humble address be presented to the Governor in the following terms:—

"That the Members of the Madras Legislative Assembly assembled in this session are deeply grateful to the Governor for the Address* which he has been pleased to deliver to both the Houses of the Legislature assembled together on the 28th January 1963".

The motion was duly seconded.

MR. SPEAKER: The hon. Member, Sri T. P. Elumalai may now speak on his motion.

திரு. டி. பி. ஏழுமலை: கனம் சபாநாயகர் அவர்களே, மேன்மை தங்கிய கவர்னர் அவர்கள் ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தைப் பிரேரேபித்து நான் பேசுகிற வாய்ப்பினைப் பெற்றமைக்குப் பெருமைகொள்கிறேன். காரணம், மேன்மைதங்கிய கவர்னர் அவர்கள் தமிழ்நாட்டினுடைய முன்னேற்ற ஆக்க வேலை களை எல்லாம் ஒழுங்காக ஒன்று சேர்த்து சுருக்கமான முறையில் நமக்கு சில வழிவகைகளை வகுத்துக் கொடுத்திருக்கிறார்கள். இந்த வழிகளை எல்லாம் தமிழ்நாடு அரசாங்கம் திட்டமாக உருவாக்கி மேலும் அங்கத்தினர்களுடைய நல்ல ஒத்துழைப்பின் பேரில் தமிழ்நாட்டு மக்களுக்கு சேவை செய்வதற்காக இது அரிய பெரிய உரையாகும் என்று நான் கருதுகிறேன். என்னைப் பொறுத்த வரையில் இரண்டு சபைகளின் கூட்டுக்கூட்டத்தில் உரையாற்றிய கவர்னர் பெருமான் அவர்கள், அவர்கள் உரையில் பல விஷயங்களை எடுத்து நமக்குச் சொல்லியிருக்கிறார்கள். அதைவிட குறிப்பாக ஒன்றை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். கவர்னர் உரையின்போது இதுவரையிலும் திராவிட முன்னேற்றக் கழக அங்கத்தினர்கள் கலந்துகொள்ளாமல் இருந்து கொண்டிருந் தார்கள். ஆனால் நேற்றையதினக் கூட்டத்தில் கவர்னர் அவர்கள் ஆற்றிய பேருரையின்போது திராவிட முன்னேற்றக் கழகத் திலுள்ள அங்கத்தினர்கள் கலந்து கொண்டதற்கு நான் பெருமைப் படுகிறேன். காரணம் அவர்கள் சீன நாட்டின்மீது ஏற்பட் டிருக்கிற எதிர்ப்பின் காரணமாகத்தான் இந்த நிலைமை ஏற்பட்டது என்றிருந்தாலும், தமிழ்நாட்டு அரசாங்கத்தின் நல்ல வேலைத் திட்டங்களும், அரசாங்கத்தின் திட்டங்களின் மூலமாக ஏற்பட் டிருக்கின்ற முன்னேற்றமுந்தான் அவர்கள் இந்த கவர்னர் உரையின்போது கலந்துகொள்ள ஒரு வாய்ப்பினைக் கொடுத்தது என்று நான் எண்ணுகிறேன். மேலும் இதே முறையில் அநுசரித்து அவர்கள் பல உதவிகளை தமிழ்நாட்டுக்கும், தமிழ்நாட்டு அரசாங்

* Printed as Appendix II on pages 108-109.

கத்திற்கும் செய்யவேண்டும் என்று திராவிட முன்னேற்றக் கழக அங்கத்தினர்களைக் கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக தமிழ் நாட்டின் தேசிய ஒருமைப்பாட்டு விஷயத்தில் நாம் ஒன்றுபட்ட சக்தியோடு உழைக்கவேண்டுமென்று இந்த சமயத்தில் கேட்டுக் கொள்கிறேன். தேசிய பாதுகாப்பு என்று சொல்லுகிறபொழுது, தமிழ்நாட்டில் இருக்கின்ற அத்தனை தொழிலாளர்களும் முதலாளிகளும் தங்களால் இயன்ற அத்தனை உதவிகளையும் செய்து தேசிய பாதுகாப்புக்கு நல்லதொரு பலத்தைக் கொடுத்திருக்கிறார்கள் என்று சொன்னால் அது தமிழ்நாட்டு அரசாங்கத்தினுடைய செயல் என்பதை யாரும் மறுக்க முடியாது. அந்தச் செயலை மேலும் நல்ல முறையில் உருவாக்கி தேசிய ஒருமைப்பாட்டை வளர்ப்பதற்கு நாம் எல்லோரும் ஒத்துழைக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே முறையில் விவசாய அபிவிருத்தியிலும், மின்சார அபிவிருத்தியிலும், மற்ற தொழில் அபிவிருத்தியிலும் நல்ல முறையில் திட்டம் வகுத்து, திட்டச் செலவுகளிலும் கண்காணிப் போடு இருந்து, எவ்வாறு செயல்படவேண்டும் என்பதை கவர்னர் அவர்கள் தனது பேருரையில் சொல்லியிருக்கிறார்கள். அதையும் நாம் கவனத்தில் வைத்துக்கொண்டு ஒருசில திட்டங்களைக் குறைக்க வேண்டும் என்று சொல்லும்போது அதைப்பற்றி வேறு விதமாக எண்ணினாலும் இந்தத் திட்டங்களை எல்லாம் நல்லமுறையில் நிறைவேற்றி முடிப்பதற்கு, அனைவரும் நல்லமுறையில் ஒத்துழைக்க வேண்டும் என்று கவர்னர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில் எல்லா அங்கத்தினர்களையும் நான் மிகவும் கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமில்லாமல் நான் சார்ந்திருக்கிற செங்கற்பட்டு ஜில்லாவில் நான் வசிக்கின்ற திருவொற்றியூரில் ஏற்பட்டிருக்கின்ற —தொழில் திட்டங்கள் காரணமாக ஏற்பட்டிருக்கின்ற— தொழில்கள், அதன் காரணமாக ஏற்பட்டிருக்கின்ற தொழிலாளர்களின் முன்னேற்றகரமான நிலைமை, இவைகளை நாம் காண்கிறோம். அதோடு இப்போது, எரணூரில் போட் (படகு) ஓட்டுவதற்கான டீசல் என்ஜின் செய்கின்ற ஒரு தொழிற்சாலை ஆரம்பித்து இன்னும் பல தொழிலாளர்களின் முன்னேற்றத்திற்கு வழிவகை செய்யப் பட்டிருப்பதை நாம் பார்க்கின்றோம். இம்மாதிரி பெரிய திட்டங்களை நிறைவேற்றுகின்ற நேரத்தில் அங்கு இருக்கின்ற ஏழை மக்களுக்கு அவர்கள் இருக்கின்ற இடத்தை விட்டு வேறு இடங்களுக்கு செல்லவேண்டிய நிலைமை ஏற்படுகிறது. இம்மாதிரி அவர்கள் வேறு இடங்களுக்குச் செல்லவேண்டிய நிலைமை ஏற்படுகின்றபொழுது, அவர்கள் வேறு இடங்களுக்குச் செல்வதற்கு இடங்களை வாங்கித்தந்து உதவி செய்யவேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன். இதை நான் ஏன் குறிப்பிடுகிறேன் என்றால் சென்னையின் அருகில் இருக்கும் மாதவரம் என்ற இடத்தில் பால்பண்ணை ஒன்று ஏற்படுத்தப்பட்டது. இப்போது அந்தப் பால்பண்ணை மிகவும் பலன் தரக்கூடிய ஒரு பால்பண்ணையாக அமைந்திருக்கிறது. அது மட்டுமல்லாமல், இதன் மூலம் பல





கூட்டுறவு சொஸைட்டிகள் அமைத்து மாடுகளை வாங்கிக்கொடுத்து ஏழைமக்கள் நல்ல முறையில் வாழ்வதற்கு இது வசதியாக இயங்கி வருகிறது. அதோடு பால் கறந்து ஜீவனம் செய்கின்ற தொழிலாளர்கள் நல்ல முறையில் வாழ்வதற்கும் இந்தத் திட்டம் பயன் பட்டு வருகிறது. ஆனால் இந்தத் திட்டத்தை நிறைவேற்றுகின்ற பொழுது, அங்கே இருந்த பல விவசாய மக்களை வெளியேற்ற வேண்டிய நிலைமை ஏற்பட்டது. இதன் காரணமாக பல விவசாயக் குடும்பங்கள் பாதிக்கப்பட்டன. இம்மாதிரி பெரிய திட்டங்கள் ஏற்படுத்துகின்றபொழுது, பாதிக்கப்படுகின்ற ஒருசிலருக்கும் நல்லமுறையில் வேறு வாய்ப்புக்களை ஏற்படுத்திக்கொடுத்து அவர்களது வாழ்க்கையைச் சிதறவொட்டாமல் சர்க்கார் பார்த்துக் கொள்ளவேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

தேசீய ஒருமைப்பாடு என்று சொல்லுகின்றபோது, தேசத்திற்காக தனது உயிரையும் திரணமாக மதித்து சேவை செய்து வரும் ராணுவத்தினர் குடும்பங்களுக்கு நாம் தாராளமாக உதவி செய்ய வேண்டும் என்று இச்சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால் நான் வசிக்கின்ற இடத்தில் பலர் ராணுவத்தில் சேர்ந்து பணியாற்றிவருகிறார்கள். அவர்களுடைய குடும்பத்தைப் போய் அடிக்கடி சந்தித்துப்பார்த்து அவர்களுடைய சுக துக்கங்களை விசாரித்து வருவது வழக்கம். அந்த முறையில் ஒரு குடும்பத்திலிருந்து ஒரு தகப்பனோ அல்லது மகனோ ராணுவத்திற்குச் சென்றிருக்கும்போது, அவர்களை நாம் போய் அடிக்கடிப் பார்க்கும்போது, இந்தச் சர்க்காரும், இதிலுள்ள அங்கத்தினர்களும் நல்ல முறையில் ராணுவத்தினர் குடும்பங்களைக் கண்காணித்து கவனித்து வருகிறார்கள் என்ற சமாதானம் அவர்களுக்கு இருக்கும். இதன்மூலம் ராணுவத்தில் சேர்ந்து உழைக்கின்ற நண்பர்களுக்கு மேலும் நல்ல ஊக்கத்தைக் கொடுப்பதாக இருக்கும். ஆகவே நாம் ராணுவத்தினர் குடும்பங்களை அடிக்கடிப் போய் பார்த்து அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்துக்கொடுக்கவேண்டும். கவர்னர் அவர்கள் உரையில் ராணுவத்தினரின் பிள்ளைகளுக்கு கல்விச் சலுகை அளிக்க வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இவ்வாறு சலுகை அளிப்பதோடு மட்டுமல்லாமல், மேலும் பல பொருளாதார முன்னேற்றத்திற்கும் உதவிகரமாக இருக்கக்கூடிய பல உதவிகளையும் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக, முக்கியமாக நாம் விவசாயப் பெருங்குடி மக்களின் முன்னேற்றத்தை நாம் கவனித்துக்கொள்ள வேண்டும். நல்ல முறையில் உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்று சொல்லும்போது, நல்ல திட்டங்களை எல்லாம் போட வேண்டும் என்று நினைக்கின்றபோது நம்முடைய வருவாயையும் நாம் அதிகமாகத் தேடிக் கொள்ளவேண்டும். அப்படித் தேடிக்கொள்ளுகிறபொழுது, விவசாய மக்களுக்கு மேலும் தொந்தரவு கொடுக்காமல், மேலும் ஏதாவது வரிப்பளு ஏற்படாத முறையில் இருக்க வேண்டும் என்று பணிவோடு சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால்

சொன்னால் விவசாயிகளுக்கு அதிகமான அளவில் வரிப் பளு ஏற்படுத் தொந்தரவுகள் ஏற்பட்டால் திட்டங்களை நிறைவேற்று வதற்கு மக்களுக்கு உற்சாகம் ஏற்படாது. எவ்வளவோ திட்டங் களை நிறைவேற்றுகிற நமக்கு எந்தவிதமான தொந்தரவும் இல்லாத அளவில் இருக்க வேண்டும் என்று சர்க்காரைக் கேட்டுக்கொள் கிறேன். இந்த விஷயத்தில் சர்க்கார் நன்கு கவனம் செலுத்தி விவசாயப் பெருங்குடி மக்களுக்கும் விவசாயக் கூலிகளுக்கும் நல்ல தொரு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதோடு தொழிலாளர்கள் இருக்கக்கூடிய இடங்களில் எல்லாம் கூட்டுறவு முறையில் பண்டகசாலைகள் ஏற்படுத்த வேண்டும் என்று சர்க்கார் திட்டமிட்டிருக்கிறார்கள். 250 தொழிலாளர்கள் இருக்கின்ற இடத்தில் எல்லாம் பண்டகசாலை களை ஆரம்பிக்க வேண்டும் என்று அரசாங்கத்தில் திட்டமிடப் பட்டிருக்கிறது. ஆனால் இது சரியான முறையில் பயன்படவில்லை. அதோடு துரிதமாக இதை ஆரம்பிக்கும் உற்சாகம் இல்லாமல் இருக்கின்றார்கள். இதை மாற்றுகின்ற முறையில் பல உதவிகள் செய்து 150 தொழிலாளர்கள் இருக்கின்ற இடத்தில் எல்லாம் கூட்டுறவு முறையில் பண்டகசாலைகளை ஏற்படுத்துவதற்கும் வழி வகை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, மேன்மைதங்கிய கவர்னர் பெருமான் அவர்கள் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை முன்மொழியக்கூடிய சந்தர்ப்பத்தை எனக்குக் கொடுத்ததற்கு என் நன்றியையும் தெரிவித்துக்கொண்டு என் வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. ஜே. மாதா கௌடர்: கனம் சபாநாயகர் அவர்களே, நேற்றைய தினம் இந்த மன்றத்திலே நிகழ்த்திய கவர்னர் பெருமான் அவர்களுடைய உரைக்கு நன்றி செலுத்தும் தீர் மானத்தை நான் ஆமோதித்து எனது கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். கவர்னர் பெருமான் அவர்கள் இதற்கு முன் பல முறை இந்த மன்றத்தில் உரை நிகழ்த்தியிருந்தாலும்கூட நேற்றையதினம் நிகழ்த்திய உரை மிக முக்கியத்துவம் வாய்ந்தது. நம்முடைய மாநில கவர்னர் அவர்கள் மிகவும் அதிருஷ்டசாலி. நமது கவர்னர் பெருமான் அவர்கள் இந்த ஆண்டு நம் மாநிலத்தில் இருப்பார்களோ இல்லையோ என்று கருதிக் கொண்டிருந்த நேரத்தில், மறு முறை கவர்னராகப் பதவியை நீடித்துக் கொடுத்த பெருமை மத்திய அரசாங்கத்தைச் சேர்ந்தது என்றாலும், அவர் இந்த மாநிலத்தில் இருக்கும்போதே எல்லாக் கட்சிகளையும் சேர்ந்த அங்கத்தினர்கள் இருக்கக்கூடிய சபையில் உரை நிகழ்த்தி விட்டுத்தான் இந்த மாநிலத்தை விட்டுப் போவது என்று சங்கல் பம் வைத்துக் கொண்டிருந்தார் போலிருக்கிறது. நேற்றைய தினம் எதிர்க்கட்சியில் இருக்கிற நண்பர்கள் எல்லோரும், கடந்த 4, 5 ஆண்டுகளாக கவர்னர் பெருமான் உரை நிகழ்த்தும்போது வரவில்லை என்றாலும் இந்தக் கூட்டத்திற்கு நாங்கள் வருகிறோம் என்று வந்ததற்கு, அந்தப் பெருமை நம்முடைய கவர்னர் பெருமானைச் சார்ந்தது என்று நான் சொல்லிக்கொள்ள விரும்பு கிறேன். இதே முறையிலே என்றென்றைக்கும், இதிலிருந்து நழுவ விடுகிறோம் என்று சொல்லிவிடாமல், எதிர்க் கட்சியிலுள்ள



நண்பர்கள் நாட்டின் ஒற்றுமைக்குப் பாடுபடவேண்டுமென்று தங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன். எதிர்க்கட்சியில் இருக் கக்கூடியவரும், முன்பு இந்த சட்ட மன்றத்தில் உறுப்பினராக இருந்தவரும், இன்றைக்கு பாராளுமன்ற உறுப்பினருமாக மதிப்புக்குரிய அண்ணாதுரை அவர்கள் பாராளுமன்றத்தில் நேற் றைய தினம் மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டுமென்ற தொனியில் பேசியிருக்கிறார்—பிரிவினை கேட்கவில்லையென்றாலும் மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டுமென்ற தொனியில் பேசியிருக்கிறார். அவருடைய அந்தப் பணியில், அவர் என்ன கேட்டிருக்கிறாரோ அதற்கு, அவர் கேட்டிருப்பது சரி என்று அவரோடு ஒத்துழைக்க முன் வருகிறேன். எப்படி கவர்னர் பெருமான் உரை நிகழ்த்தக்கூடிய கூட்டத்திற்கு திராவிட முன் னேற்றக் கழக நண்பர்கள் வந்தார்களோ அதே முறையில் அவர் களோடு சேர்ந்து அதிக அதிகாரம் வேண்டுமென்று கேட்பதை நான் ஆமோதிக்கிறேன். இந்த நிலையில் மத்திய அரசினர் அதிக அதிகாரம் வைத்திருப்பதை மாநிலங்களுக்கு மேற்கொண்டு பெற்றுக்கொள்ளும் நடவடிக்கைகளைப் பற்றிப் பார்க்கவேண்டும்.

MR. SPEAKER: The hon. Member Sri J. Matha Gowder is going far away from the discussion on the Governor's Address. Let him come to the point under discussion.

SRI J. MATHA GOWDER: I am coming to the point.

இந்த மன்றத்திலே பேசும்போது நமக்கு என்னென்ன அதிகாரங்கள் வேண்டும். இந்த மாநிலத்திலுள்ள மக்களுடைய கஷ்டங்கள் போக என்னென்ன இடைஞ்சல்கள் இருக்கின்றன, மத்திய அரசினரால் என்னென்ன தடைகள் ஏற்படுகின்றன மக்க ளுக்கு நன்மை செய்வதில் என்று சீர்தூக்கிப் பார்த்து மேற் கொண்டு நடவடிக்கைகளில் இறங்கவேண்டுமென்று எல்லா எதிர்க் கட்சி அங்கத்தினர்களையும் உங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதே நோக்கில் இன்றைக்கு கவர்னர் பெருமான் ஆற்றிய உரை மிக முக்கியத்துவம் வாய்ந்தது என்று சொல்லக்கூடிய முறையில் சீனாக்காரன் நம்முடைய நாட்டை ஆக்கிரமித்திருக்கிற விஷயத்தை மிக மிக அவர் வற்புறுத்தி நமக்குக் காண்பித்திருக் கிறார். நாட்டினுடைய ஒற்றுமையை இப்படியே வளர்க்க வேண்டும். நாட்டு மக்களுடைய ஒற்றுமையைப் பார்த்துத்தான் சீனாக்காரன் வெளியேறியிருக்கிறான் என்று கண்கூடாகப் பார்த் திருக்கிறோம். வேறு எந்த விதத்திலும் நமக்குச் சாதகம் செய்ய வேண்டுமென்ற எண்ணத்தில் சீனாக்காரன் வெளியேறிவிடவில்லை. நாட்டு மக்களுடைய எழுச்சி எப்படி இருக்கிறது, நாட்டிலே குழப்பங்கள் இருக்கிறதா, பல்வேறு கட்சிகள் இருக்கக்கூடிய பாரத நாட்டிலே எப்படி ஒற்றுமை ஏற்படும் என்ற நோக்கத்தில் தான் வந்தான். நாட்டு மக்கள் இப்படி ஒற்றுமையாக வந்ததைப் பார்த்து பயந்து நம்முடைய நாட்டை விட்டு சீனாக்காரன் வெளி யேறியிருக்கிறான் என்பதைக் கண்கூடாகப் பார்த்திருக்கிறோம்.

இந்த ஒற்றுமையை நிலை நாட்ட நாம் பாடுபட வேண்டும். அதைத் தான் கவர்னர் பெருமான் தன்னுடைய உரையில் வற்புறுத்தி வற்புறுத்திச் சொல்லியிருக்கிறார். என்றாலும் இந்த நெருக்கடி நேரத்தில் நாம் சில காரியங்களைக் கைக்கொண்டோம். ஒரு சில கட்சிகளாலோ அல்லது ஒரு சில கட்சிகளைச் சேர்ந்தவர்களாலோ நாட்டுக்குக் குந்தகம் விளையலாம் என்று ஒரு சிலரைப் பாதுகாப்புச் சட்டப்படி ஜெயிலிலே வைக்கக் கூடிய சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கிறது. அதற்குக்கூட ஒரு சில பேர்கள் குறை கூறுகிறார்கள். எதற்காக வைத்திருக்கிறோம்? பாதுகாப்புக் கைதிகளாக வைத்திருக்கிறோம். . அவசர நிலைமை முடிந்து இனி ஆபத்து இல்லை என்ற நேரத்தில் வெளியே விட வைத்திருக்கிறோமேயல்லாது, அவர்கள் பேரில் குற்றம் சுமத்தி, விசாரணை செய்து குற்றவாளிகள் என்று தண்டனை கொடுக்கவில்லையே. அதைகூடக் குறை கூறக் கூடிய அளவில் ஒரு சில அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்கள், வயது மிக்கப் பெரியவர்கள் என்று சொல்லக் கூடியவர்கள் கூட இருக்கிறார்கள். அதைப் பார்க்கப் பரிதாபமாக இருக்கிறது. எந்த நோக்கத்தில் பந்தோபஸ்து சட்டப்படி ஒரு சில அரசியல் கட்சிகளைச் சார்ந்தவர்களை ஜெயிலில் வைத்திருக்கிறோமோ, அதை மறைத்து உள்நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்திக் கொண்டு, மக்கள் உற்சாகத்தைக் குறைக்கக் கூடிய அளவில் ஒரு சில அரசியல் கட்சித் தலைவர்கள் பேசுகிறார்கள் என்றால் அவர்களை வெளியிலே வைத்துக்கொண்டிருப்பது சரியா என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். அவர்களையும் பாதுகாப்புச் சட்டப்படி உள்ளே வைத்திருக்க வேண்டாமா? அந்த முறையில் அவர்களை உள்ளே வைத்தால் ஏதோ காமராஜர் வேண்டுமென்று செய்துவிட்டார்கள் என்று தம்பட்டம் அடித்தால் பிரயோசனம் என்ன? வயது முதிர்ந்து போக முதிர்ந்து போக, அனுபவம் அதிகமாக அதிகமாக மக்களை எப்படிப் பக்குவப்படுத்த வேண்டுமென்ற தோரணையில் நாட்டம் செல்லுகிறது. அதே நேரத்தில் ஒரு சிலருக்கு வயது முதிர்ந்து போக முதிர்ந்து போக . . .

MR. SPEAKER: There is no such thing in the Governor's Address. He has got only two minutes more.

SRI J. MATHA GOWDER: I am speaking only on National Integration. இந்த நிலையிலே பார்க்கும்போது திண்ணையிலே உட்கார்ந்து கொண்டிருக்கக் கூடிய ஒரு சில வயது முதிர்ந்த கிழவிகள், சதா தொண தொண என்று பேசிக்கொண்டு வீட்டில் இருப்பவர்கள் எப்படித் தொந்தரவு கொடுத்துக்கொண்டே இருப்பார்களோ அதே போல நம் தமிழ் நாட்டில் இருக்கக் கூடிய சிலர் வயது முதிர்ந்து போகப் போகத் தொண தொண என்று ஏதாவது சொல்லிக்கொண்டு, முற்போக்கான காரியங்களில் நாம் ஈடுபடும்போது தடங்கல் சொல்லிக்கொண்டே இருக்கிறார்கள். வெளியே இம்மாதிரி நெருக்கடி ஏற்படும் நேரத்தில் அவர்களை வெளியே விட்டு வைத்திருக்கக் கூடாது என்று கனம் அமைச்சர் அவர்களுக்கு உங்கள் மூலமாகச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.



அதே நேரத்திலே இன்றைக்கு சப்ளிமெண்டரி பட்ஜெட்டிலே நமது அமைச்சர் அவர்கள் 14 கோடி ரூபாய் அதிகம் வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அதுவும் இந்த நெருக்கடியான நேரத்தில் உப மதிப்பு போட்டிருக்கிறார்கள். அந்தச் செலவு செய்யும் நிலையும் இந்த நெருக்கடியால் வந்திருக்கிறது என்று சொல்லத் தேவையில்லை. இதைப் பற்றி பிறகு பரிசீலிக்கலாம் என்றாலும் எதற்காக ஒதுக்கியிருக்கிறோம் என்று பார்க்க வேண்டும்.

அதே நிலையில் உணவு உற்பத்தியை அதிகரிக்கவேண்டுமென்று கவர்னர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். உணவு உற்பத்தியை அதிகரிக்கவேண்டிய இந்த நேரத்தில் கவர்னர் பெருமான் அவர்கள் கடைசியாக ஒரு சட்டம் வருகிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். நஞ்சை நிலங்களுக்கும், புஞ்சை நிலங்களுக்கும் வரியை மாற்றி அமைக்கக் கூடிய ஒரு நிலையிலே சட்டம் வரப் போகிறது என்று சொல்லியிருப்பது குறித்து மக்களுக்கு குழப்பம் ஏற்பட்டிருக்கிறது. அதிக உற்பத்தி செய்ய வேண்டும் என்று சொல்லப்படுகிற நேரத்திலே விவசாய நிலத்திற்கு அதிக வரி போடுவது அவசியமா என்பதைப்பற்றி சற்று சிந்திக்க வேண்டும். இதிலே அவசரப்படக்கூடாது என்று கனம் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். 10.00 a.m. உணவு உற்பத்தி அதிகரிக்கவேண்டும் என்று சொல்லக்கூடிய இந்த நேரத்திலே இது அவசியமா, வேறு முறையிலே ஏதாவது ஒரு வரியைக் கண்டுபிடிக்கக்கூடாதா என்பதைப் பற்றி சிந்திக்கவேண்டும். வரி போடக்கூடாது என்று நான் சொல்லவில்லை. வேறு முறையிலே வரி போடக்கூடாதா என்பது பற்றிச் சிந்திக்க வேண்டும், விவசாயிகளுக்கு இப்பொழுது வரி போடுவது பொருத்தமா என்பது பற்றிச் சிந்திக்க வேண்டும் என்று நான் கனம் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக பொது சுகாதார இலாகாவையும் மருத்துவ இலாகாவையும் ஒருங்கு இணைக்க வேண்டும் என்று சர்க்கார் முடிவு எடுத்திருப்பதாக கவர்னர்பெருமான் உரையில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதற்கு முன்பு நான் இந்த மன்றத்திலே இதற்கு ஆட்சேபணை தெரிவித்திருக்கிறேன். . பொது சுகாதாரமும், மருத்துவமும் ஒன்றாக இணைந்தால் அவ்வளவு பொருத்தமாக இருக்காது. 1924-ம் ஆண்டிலே இதற்காக முயற்சி செய்யப்பட்டு, அந்த முயற்சி சரியில்லை என்று கைவிடப்பட்டிருக்கிறது. இன்றைக்கு மறுபடியும் 1963-ம் ஆண்டிலே இந்த இரண்டு இலாகாக்களையும் ஒருங்கு இணைக்க முயற்சி செய்யப்படுகிறது. நோய் தீர்ப்பு அவசியமா, நோய் தடுப்பு அவசியமா என்பது பற்றிச் சிந்திக்க வேண்டும். நோய் தடுப்பதை முக்கியமாகக் கவனித்தால் நோய் தீர்ப்பதில் அதிக கவனம் செலுத்தவேண்டிய அவசியம் இல்லை. சுகாதாரத்தில் முக்கிய கவனம் செலுத்தி நோய் தடுப்பைத் தீவிரப்படுத்தினால் நோய் தீர்ப்புக்கு அவசியமே இல்லை. இந்த இலாகாவுக்கு ஒதுக்கியுள்ள தொகையை அதிகரித்து சுகாதாரத்தை அபிவிருத்தி செய்தால், டாக்டர்களை உற்பத்தி செய்ய வேண்டிய அவசியம் இல்லை, மெடிகல் காலேஜ்களுக்கு அவசியம்

இல்லை. நோயை உற்பத்தி செய்துவிட்டு, பிறகு அதைத் தீர்ப்பதைவிட, நோய் தடுப்பதில் அதிக கவனம் செலுத்துவது பிரயோசனமாக இருக்கும். அவசர காலத்தில் சிக்கனத்திற்காகச் செய்யவேண்டுமானால் ஒருங்கு இணைக்கக்கூடிய வேறு இலாக்காக்கள் இருக்கின்றன. சர்க்காருக்கு இந்த எண்ணம் இருக்குமானால் இண்டஸ்டிரியல் டிரையினிங் இன்ஸ்டிட்யூட்டையும் . . . (மணி அடிக்கப்பட்டது).

I will finish within two minutes. I will suggest something.

இண்டஸ்டிரியல் டிரையினிங் இன்ஸ்டியூட்டும், அதனோடு வேலை கற்பித்துக் கொடுக்கக்கூடிய ஒரு இலாகாவும், வேலை தேடித்தரும் ஸ்தாபனமும் தனியாக வைக்கப்பட்டிருக்கிறது. இந்த இரண்டு இலாகாக்களையும் இணைத்துவிட்டால் ஒரு வேலை செலவு குறையுமா என்பதைப்பற்றி பரிசீலனை செய்யவேண்டும். மருத்துவம் சுகாதாரம் ஆகிய இரண்டு இலாகாக்களையும் இணைப்பதை கைவிட்டுவிட்டு, இண்டஸ்டிரியல் டிரையினிங் இன்ஸ்டிட்யூட்டையும் எம்ப்லாய்மெண்டு எக்ஸேஞ்சையும் ஒன்றாக இணைத்தால் சிக்கனம் ஏற்படும் என்று சொல்லிக்கொண்டு, கவர்னர் பெருமான் உரைக்கு நன்றி தெரிவித்துக்கொண்டு, என் உரையை முடிக்கிறேன்.

**திரு. எஸ். மாதவன்:** மதிப்பிற்குரிய சட்டமன்றத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்கள் ஆற்றிய உரையின் மீது என்னுடைய கருத்துக்களை இந்த மாமன்றத்தின் முன் வைப்பதற்கு எனக்கு வாய்ப்புத் தந்தமைக்கு முதலில் நன்றி தெரிவித்துக்கொண்டு, என்னுடைய கருத்துக்களைத் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். எடுத்த எடுப்பிலேயே நாங்கள் எதிர்பார்த்தபடி கனம் மாதா கௌடர் அவர்கள் நாங்கள் இந்த உரையிலே பங்குபெற்றமை குறித்து குறிப்பிட்டார்கள். நாங்கள் பிரிந்திருப்பதாகவும், சேர்ந்து கொள்ளவேண்டும் என்ற கருத்தைத் தெரிவித்தார்கள். நான் இதை ஒரு பிரச்னையாக ஆக்க விரும்பவில்லை. என்ற போதிலும், எங்களுடைய தலைவர் முன்னால் இந்த சட்டமன்றத்தில் எடுத்துரைத்த கருத்தை நினைவுபடுத்த ஆசைப்படுகிறேன். அவர் இந்த மன்றத்திலே விவாதத்தின்போது கூறியது என்னவென்றால், நாங்கள் கையாண்டு வருகிற ஒரு அரசியல் தத்துவத்தின்படி வடநாட்டு மத்திய சர்க்காரால் நியமிக்கப்படுகின்ற கவர்னர்பெருமானின் வரவேற்பு விழாக்களிலும், அவர் ஆற்றுகின்ற பேருரையிலும் கலந்து கொள்வதில்லை என்ற ஒரு தத்துவத்தை பின்பற்றி வருகிறோம் என்று தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஜனநாயகத்திலே தத்துவங்கள், முரண்பட்ட தத்துவங்களாகக்கூட இருக்கலாம் என்பதுதான் ஜனநாயகம் கூறும் விதியாகும். ஆகவே எங்களுடைய ஒரு தத்துவத்தை வலியுறுத்தும் அளவுக்கு வேறு கட்சி அங்கத்தினர்கள் ஒத்துக்கொள்ளாமல் இருந்தால், அதுபற்றி ஆச்சரியப்படுவதற்கில்லை. இருந்தபோதிலும் ஒரு அவசர காலத்தில் நாட்டின் நன்மைக்காக, இந்திய துணைக்கண்டத்தின் நன்மைக்காக எங்களுடைய தத்துவத்தையும் விட்டுக்கொடுப்போம் என்ற ஜனநாயகக் கொள்கை





எங்களுடைய இயக்கத்தில் இருக்கிறது என்பதைக் காட்டுவதற்காகத்தான் எங்களுடைய கட்சி இந்த முடிவை எடுத்தது என்பதை நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன். ஆகவே, இதை ஒரு பிரச்னையாக ஆக்கவேண்டாம் என்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

கவர்னர்பெருமான் உரையிலே இன்றைக்கு நாட்டினுடைய நிலைமையை, கம்யூனிஸ்டு சீனாவின் ஆக்கிரமிப்பைப்பற்றித் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த நேரத்திலே கனம் நிதி அமைச்சர் அவர்கள் முன்னால் நடைபெற்ற சட்டமன்றக் கூட்டங்களில் ஆத்திரத்துடன் பேசிய பேச்சுக்களெல்லாம் எங்களுடைய காதுகளில் ரீங்காரமிட்டுக் கொண்டிருக்கின்றன. அவர்கள் 'நாட்டு துரோகிகள், நாட்டைக் காட்டிக் கொடுப்பவர்கள்' என்று திருப்பித் திருப்பி இந்த மன்றத்தில் சொன்னார்கள். நாங்களெல்லாம் அப்பொழுதே சந்தேகப்பட்டோம். 'எந்த நாட்டை யாருக்குக் காட்டிக் கொடுத்தோம், எந்த நாட்டினருக்குக் காட்டிக்கொடுத்தோம்' என்று அவர்களைக் கேட்டபொழுது, அவர்கள் திருப்பித் திருப்பி அந்தக் கருத்தையே வலியுறுத்தினார்கள். நாங்கள்கூட இவ்வளவு விரைவிலே அவருடைய கருத்தை மாற்றுவதற்கு எங்களுக்குச் சந்தர்ப்பம் கிடைக்கும் என்று நம்பவில்லை. அந்தச் சந்தர்ப்பம் இப்பொழுது எங்களுக்குக் கிடைத்திருக்கிறது. அரசியல் அமைப்பு முறையிலே எங்களுக்கும் அவர்கள் கட்சியில் உள்ளவர்களுக்கும் கருத்து வேறுபாடு இருக்கலாம். அது இயற்கைதான். இருந்தபோதிலும், இந்த நாட்டைக் காட்டிக் கொடுக்க மாட்டோம் என்பதிலே கருத்து வேறுபாடு இருக்கக்கூடாது என்பதுதான் என்னுடைய தாழ்மையான எண்ணமாகும். கம்யூனிஸ்டு சீனா இந்த நாட்டின் மீது படையெடுத்துவிட்டது என்ற செய்தியைக் கேட்டவுடனேயே எங்களுடைய இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம் எந்தவிதமான கட்டுப்பாடும் இல்லாமல் அரசாங்கத்திற்கு ஆதரவு கொடுக்க முன் வந்திருப்பதை எல்லோரும் அறியவேண்டும். பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களின் கையைப் பலப்படுத்தவேண்டும் என்று எங்களுடைய தலைவரும், எங்களுடைய இயக்கமும் பலமுறை பல தொனிகளில் வற்புறுத்தி வருவதை இந்த மன்றம் உணர்ந்திருக்க வேண்டுமென்று நம்புகிறேன். அந்த முறையிலே நாங்கள் இந்த நாட்டினுடைய அரசியல் அமைப்பை மாற்றவேண்டும் என்ற கருத்துள்ளவர்கள். ஆனாலும்கூட, வேற்று நாட்டவன் இந்த நாட்டின் மீது படையெடுக்க முன்வந்தபொழுது எங்களுடைய கொள்கைகளையெல்லாம் ஓரளவுக்கு ஒதுக்கிவைத்துவிட்டு, நாட்டு நலனைப் பாதுகாப்பதற்கு, இந்த நாடு இன்னொரு நாட்டவனுக்கு அடிமைப்படாமல் இருப்பதற்கு என்ன செய்ய வேண்டுமோ அதையெல்லாம் செய்வோம் என்பதை நாங்கள் ஏற்கனவே கூறியிருக்கிறோம், அதை நான் மீண்டும் இந்த மன்றத்தில் கூற ஆசைப்படுகிறேன். நாங்கள் அதைப் பேச்சளவில் நிறுத்தி விடாமல், செயலளவிலேகூட எந்த முறையிலே நாட்டு மக்களிடத்திலே வலியுறுத்திப் பரப்பி வருகிறோம், நிதி திரட்டுவதற்கு எந்த முறையிலே ஆதரவு தந்து

வருகிறோம் என்பதை இந்த மன்றம் உணரும் என்று நினைக்கிறேன். அந்த முறையிலே ஆளும் கட்சியினருக்கும், திராவிட முன்னேற்றக் கழகத்தினருக்கும் கம்யூனிஸ்டு சீனாவை விரட்ட வேண்டும் என்ற ஒரு எண்ணத்திலே, கருத்திலே வேறுபாடு இருக்காது என்றுதான் நினைக்கிறேன். இந்த நாட்டு மக்களின் கருத்துக்களை ஒருமைப்படுத்தி, வேற்று நாட்டவனை நம்முடைய நாட்டிலிருந்து விரட்ட வேண்டும் என்ற கருத்தில் நாமெல்லாம் ஒன்றாக நிற்க வேண்டும் என்று கனம் மாதா கௌடர் அவர்கள் சொன்னார்கள். அதை ஏற்றுக்கொள்கிறோம் என்ற கருத்து உண்மைதான். என்றாலும், அதே சமயத்தில் எதிர்க்கட்சிகளை எந்த அளவுக்கு தங்களுடன் இழுத்துச் செல்ல ஆளும் கட்சியினர்கள் விரும்புகிறார்கள் என்பதிலே சந்தேகப்படவேண்டிய சூழ்நிலை இருக்கிறது.

கவர்னர் அவர்களுடைய பேருரையிலே டிபென்ஸ் கமிட்டி என்று ஒரு கமிட்டி ஏற்படுத்தி இந்த மாநிலத்திலே ஒற்றுமையான சூழ்நிலையை உண்டாக்குவதற்கு முயன்று வருகிறோம் என்று குறிப்பிட்டார்கள். ஆனால் அனுபவத்தில் பார்க்கும்பொழுது, அந்தக் காலத்தில் நடந்த வெள்ளைக்காரர் தர்பார்தான் நினைவுக்கு வருகிறது. அவர்களுடைய ஆட்சியில் இதுபோல் யுத்தக் கமிட்டிகள் ஏற்படுத்தி, மக்களுடைய ஆதரவைத் திரட்ட முன்வந்தார்கள். அந்த முறையைத்தான் இப்பொழுதும் பார்க்கிறோம். இந்தக் கமிட்டிகளுக்கு அங்கத்தினர்களைப் போடும்பொழுது, ஜனநாயக ரீதியிலே எதிர்க்கட்சியினர்களையும் கலந்துகொண்டு, யாரைப்போட வேண்டும், யாருக்கு அந்தக் கமிட்டிகளிலே அங்கம் கொடுக்கவேண்டும் என்ற ஒரு சூழ்நிலையை உண்டாக்கி, பின்னாலே ஒரு முடிவுக்கு வந்திருப்பார்களேயானால் நன்றாக இருந்திருக்கும். மாவட்ட அளவிலே போட்டிருக்கக்கூடிய கமிட்டிகளைப் பார்க்கும்பொழுது, அந்தக் கமிட்டிகளுக்கு அங்கத்தினர்கள் போட்டதற்குப் பின்னாலேதான், அங்குள்ள மக்கள் பிரதிநிதிகளுக்கு அதைப் பற்றித் தெரிவிக்கிறார்கள். அந்த முறை ஜனநாயக முறைக்கு ஒத்ததா என்பதை இந்த மாமன்றம் யோசிக்க வேண்டும். இந்த முறையை மாற்றி அமைத்து, எல்லாக் கட்சியினர்களையும் கலந்துகொண்டு இந்தக் கமிட்டிகளின் அங்கத்தினர்களை நியமனம் செய்தால், நிச்சயம் இந்த நாட்டிலுள்ள பல்வேறு கருத்து உள்ளவர்களும் இந்த அமைப்புகளில் இடம் பெறுவதற்கு வாய்ப்பு கிடைக்கும். அப்பொழுதுதான் ஜனநாயக முறையிலே எல்லோரும் ஒத்துழைக்கிறோம் என்ற உணர்வு மக்களிடத்தில் ஏற்படும். ஆனால் வெளியே ஒருவிதமாகக் கூறிவிட்டு, நடவடிக்கைகளிலே மக்களைக் கலக்காமல், எதிர்க் கட்சியில் உள்ளவர்களைக் கலக்காமல், இது போன்ற நடவடிக்கைகளை பின்பற்றினால் உண்மையிலேயே எப்படி ஒரு நல்ல சூழ்நிலையை ஏற்படுத்த முடியுமென்று இந்த மாமன்றம் யோசிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன். எங்களைப் பொறுத்தவரையில், கம்யூனிஸ்டு சீனாவின் ஆக்கிரமிப்பை நாங்கள் ஏன் எதிர்க்கிறோம் என்பதைக் கூற ஆசைப்படுகிறேன். நாங்கள் எதிர்கால மக்களைப்பற்றி சிந்திக்கிறோம்; எதிர்கால சரித்திரத்தைப் பற்றி சிந்திக்கிறோம். எதிர்காலத்தில் உள்ளவர்கள் எங்களைப் பற்றி என்ன சொல்லுவார்கள் என்ற



சிந்தனை எங்களிடையே தோன்றியிருக்கிறது. எதிர்காலச் சமுதாயம், இன்னொரு நாட்டினர் நம் நாட்டின்மீது படையெடுத்த பொழுது நாங்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து வெளி நாட்டானை எதிர்த்தோம், அதற்காக எங்களுடைய கொள்கைகளைக்கூட ஒதுக்கிவைத்துவிட்டோம் என்ற பெருமை எங்களுக்குக் கிடைக்க வேண்டுமென்று நாங்கள் விரும்புகிறோம். அதனால்தான் கம்யூனிஸ்டு சீனாவின் ஆக்கிரமிப்பை நாங்கள் முன் நின்று எதிர்த்து, எங்களுடைய ஒத்துழைப்பை அரசாங்கத்துக்குத் தர முன்வந்திருக்கிறோம்.

அடுத்தபடியாக, கவர்னர் அவர்களின் உரையில் நாட்டின் நிகழ்காலத்தைப் பற்றிக் குறிப்பிடவேண்டுமென்பதை நாம் எல்லோரும் அறிந்திருக்கிறோம். அவர்களுடைய உரையிலே ஒன்று இருக்குமென்று நாங்கள் எதிர்பார்த்தோம். ஆனால் அதை அங்கே காணாதது குறித்து நாங்கள் வருந்துகிறோம். இந்த யுத்த நிலைமைக் காரணமாக, மத்திய சர்க்காரால் கொண்டுவரப்பட்ட கட்டுத்திட்டங்கள் காரணமாக, தங்கக் கட்டுப்பாடு காரணமாக, நமது நாட்டிலே லட்சக்கணக்கான தொழிலாளர்கள் வேலை இழந்து தவிக்கிறார்கள். நகை செய்யும் தொழிலாளர்கள், கல் வேலை செய்யும் தொழிலாளர்கள், லட்சக்கணக்கானவர்கள், குறிப்பாகத் திருச்சி, கோயம்பத்தூர், மதுரை ஆகிய மாவட்டங்களில் கஷ்டப்படுகிறார்கள். அவர்களுக்கெல்லாம் சர்க்கார் என்ன மாற்றுப் பரிகாரம் செய்ய இருக்கிறது என்ற கருத்து இந்த உரையில் இருக்குமென்று நாங்கள் எதிர்பார்த்தோம். டில்லி பாராளுமன்றத்தில் இந்தக் கருத்து எழுப்பப்பட்டபொழுது, நிதி மந்திரி தேசாய் அவர்கள் இதைப் பற்றிப் பரிசீலித்து வருகிறோம் என்று கூறினார்கள். இந்தச் சட்டமானது டில்லி சர்க்காரால் கொண்டுவரப்பட்ட போதிலும், நம்முடைய மாநிலத்திலே பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் ஏராளமானவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு இந்த அரசாங்கம் மாற்றுவேலை தர முன்வருமா, அல்லது அவர்களுடைய வேலையைப் பாதிக்காத அளவுக்கு இந்தத் தங்கக் கட்டுப்பாடு விதிகளை மாற்றுவதற்கு மத்திய அரசாங்கத்துக்கு சிபார்சு செய்வதற்கு ஏதாவது திட்டம் இருக்கிறதா என்பன போன்ற கருத்துக்கள் இந்த உரையில் காணப்படாதது ஒரு குறை என்றே நான் கருதுகிறேன். நிச்சயமாக இதற்கு ஒரு பரிகாரம் தேட வேண்டியது அவசியமென்பதையும் நான் வலியுறுத்திச் சொல்லுகிறேன்.

இந்த மன்றத்திலே விலைவாசிகள் ஏறிவிட்டது குறித்து அடிக்கடி கருத்துக்கள் சொல்லப்படுகின்றன. கவர்னர் அவர்களின் உரையிலும்கூட இந்த யுத்த கால நிலையை உத்தேசித்து, விலைவாசி உயர்வை கட்டுப்படுத்த வேண்டுமென்ற கருத்து தொனிக்கிறது. உண்மையிலேயே இன்று நாட்டிலே பார்த்தால் நாளுக்குநாள் திடீர் திடீரென்று விலைவாசிகள் ஏறுவதைத்தான் நாம் பார்க்கிறோம். யுத்த காலத்திலாவது விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்துவதற்குத் தீவிரமான நடவடிக்கைகளை நமது சர்க்கார் கையாளவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. எஸ். மாதவன்] [29th January 1963

அடுத்தபடியாக, கவர்னர் அவர்கள் உரையிலே இந்த மாநிலத்தின் திட்ட அளவைப்பற்றி குறிப்பிட்டிருக்கிறார்கள். ஒன்றே ஒன்று நாங்கள் தேடிப் பார்த்தோம்; ஆனால் அது காணக் கிடைக்கவில்லை. இந்த யுத்த கால நிலையை உத்தேசித்து மாகாணங்களுக்குக் கிடைக்கக்கூடிய உதவியை டில்லி சர்க்கார் குறைக்குமா என்ற சந்தேகம் உருவெடுத்து வருவதை நாம் எல்லோரும் அறிவோம். இந்த அவசர கால நிலைமையை முன்னிட்டு அந்த உதவி குறைக்கப்படுமா, அதனால் திட்டங்கள் பாதிக்கப்படுமா என்ற சந்தேகம் நம்மிடையே இருக்கிறது. அதுபற்றி இந்த உரையில் ஒன்றும் காணப்படவில்லை. உண்மையிலேயே, நமது திட்டங்களுக்காக நாம் மத்திய சர்க்காரிடமிருந்து பெறும் உதவியானது குறைக்கப்படுமோ என்று எண்ண வேண்டியிருக்கிறது. அதனால்தான் இங்கே அதுபற்றி குறிப்பிடவில்லையோ என்று கருத வேண்டியிருக்கிறது. பொதுவாக, கட்டிட வேலைகளை நிறுத்தப் போகிறோம் என்று கவர்னர் அவர்கள் உரையில் சொல்லியிருக்கிறார்கள். அதே சமயத்தில் விவசாய உற்பத்தியைப் பெருக்குவதற்கு, செலவை அதிகப்படுத்தவேண்டுமென்ற கருத்து காணப்படுகிறது. இந்தக் கருத்து உண்மையிலேயே வரவேற்கப்பட வேண்டிய ஒரு கருத்தாகும். இந்தக் கருத்தை நமது மாநில அரசாங்கம் ஏற்றுக்கொள்ளுகிறதா, ஏற்றுக்கொண்டால் மத்திய அரசாங்கம் அவர்கள் தரும் உதவியை குறைத்துக் கொண்டாலும் கூட, நீர்ப்பாசன திட்டங்களை அபிவிருத்தி செய்து உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கான திட்டங்களை நிச்சயம் குறைக்க மாட்டோம் என்ற உறுதியை நமது மாநில சர்க்கார் மக்களுக்குத் தருமா என்று நான் அறிய விரும்புகிறேன். அதே சமயத்தில் சிறு பாசன வேலைகளைப் பற்றி கவர்னர் அவர்கள் உரையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். சிறுசிறு பாசன வசதிகளைப் பயன்படுத்தி உணவு உற்பத்தியைப் பெருக்க முடியும் என்ற கருத்து சர்க்கார் ஒப்புக் கொண்ட ஒரு கருத்தாகும். மைசூர் அரசாங்கத்தில்கூட சில திட்டங்களை அண்மையிலே வெளியிட்டிருக்கிறார்கள். பொதுக் கிணறுகளை ஏற்படுத்தி, அந்த முறையிலே சிறு பாசனத் திட்டங்களை அதிகரித்து, அதன் மூலமாக உணவு உற்பத்தியை பெருக்க முடியும் என்ற எண்ணம் மைசூர் அரசாங்கத்துக்கு ஏற்பட்டு, அதற்காகப் பல லட்சக்கணக்கான ரூபாய்களை ஒதுக்கியிருக்கிறார்கள். இந்த அவசர கால நிலைமையைப் பயன்படுத்தி இம்மாதிரித் திட்டங்களுக்கு அதிகமாக நிதியை ஒதுக்கி அவற்றை நடத்துவதற்கு அரசாங்கம் முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

கவர்னர் அவர்களின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் முறையில் பேச ஆரம்பித்த திரு. ஏழுமலை அவர்கள், ஒன்றைச் சுட்டிக்காட்டினார்கள். உரையின் இறுதிப் பகுதியிலே எப்போதும்போல் வரி விதிப்பைப் பற்றி குறிப்பிடப்பட்டிருக்கிறது. அந்த வரி விதிப்பானது விவசாய மக்களைப் பாதிக்குமோ என்ற ஒரு கருத்தை அவர் தெரிவித்தார். எதிர்க் கட்சியின் சார்பாக, நான் சொல்லிக் கொள்வது என்னவென்றால் விவசாயிகளின் மீது வரிப்பளுவை அதிகப்படுத்தக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்படுமேயானால் அது அரசாங்கத்துக்குப் பாதகமாக உருவாகும், மேலும் உணவு உற்பத்தியை குறைக்கக்கூடிய அளவுக்கு அது வந்துவிடுமோ என்று நாங்கள் சந்தேகப்படுகிறோம். அந்த முறையிலே விவசாயிகளின் மீது மேலும் மேலும் சுமத்தப்படும் வரிகளைக் கைவிட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.



29th January 1963] [திரு. எஸ். மாதவன்]

*புலவர் கா. கோவிந்தன்: கனம் சபாநாயகர் அவர்களே, கவர்னர் அவர்கள் ஆற்றிய உரையில் 'உணவும் வேளாண்மையும்' என்ற பகுதியில், மூன்றாவது திட்டத்தின் முதல் ஆண்டில் 2.04 லட்சம் டன் கூடுதல் உணவு உற்பத்தி செய்யப்பட்டது என்றும், நடைமுதல் ஆண்டுக்குக் குறிக்கோள் அளவு 4.85 லட்சம் டன்கள் என்று குறிப்பிட்டிருப்பது நமக்கு மகிழ்ச்சியை தெரிவிக்கின்ற வகையில் இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கிறது என்பதைக் காட்டுகிறது. ஆனால் இதே வாக்கியம் அடுத்த ஆண்டு கவர்னர் அவர்கள் ஆற்றப்போகும் உரையில் இருக்குமா என்று சந்தேகப்படக்கூடிய நிலையில் இப்பொழுது ஒரு சூழ்நிலை உருவாகியிருக்கிறது என்பதை இந்த மன்றத்திலே உள்ள அங்கத்தினர்கள் அறிந்திருப்பார்கள் என்று நான் நினைக்கிறேன். காரணம் என்னவென்றால், இந்த உணவு உற்பத்தி திட்டங்களின்கீழ் பெருவாரியாக உற்பத்தியாகிற உணவு தானியங்களுக்குக் கொடுக்கப்படுகிற விலையானது உழவர்களுக்குத் திருப்தியை அளிக்காமல் இருக்கிறது. உணவு உற்பத்தி என்று சொல்லும்போது, நீர் வளமும் நில வளமும்தான் ஆளுங்கட்சி அங்கத்தினர்களுக்கு நினைவுக்கு வருகிறது. மண் வளமும், மழை வளமும் இருந்தாலும் மக்களுடைய மன வளமும் தேவை என்பதை ஆளுங்கட்சியினர் உணர வேண்டும். அந்த மன வளம் இப்பொழுது அறவே அற்றுப்போயிருக்கிறது. விவசாயப்பொருள்களை உற்பத்தி செய்பவர்கள் அவர்கள் உற்பத்தி செய்கிற தானியங்களுக்கு உரிய விலையைப் பெற முடியாமல் இருக்கிறார்கள். இந்த நேரத்தில் விலைவாசிகள் குறைய வேண்டுமென்று போராட்டம் நடத்திய கட்சியைச் சேர்ந்த ஒரு உறுப்பினர் இப்பொழுது நெல் விலை குறைந்ததற்கு எதிர்ப்புத் தெரிவிக்கிறார் என்று யாரும் கருத வேண்டாம். "அரிசி விலையைக் குறையுங்கள்" என்று நாங்கள் சொன்ன நேரத்தில், அரிசி விலை மட்டும் குறைய வேண்டும் என்று நாங்கள் கருதவில்லை. அரிசியை முதலாக வைத்து, அதற்குத் துணையாக இருக்கின்ற எல்லாப் பொருள்களின் விலைகளும் குறைய வேண்டும் என்றுதான் நாங்கள் கருதினோம். "சோறு தின்றான்" என்றால், அது சோற்றை மட்டும் குறிக்காது. சோற்றோடு குழம்பு, ரசம், காய் கறிகள் முதலியவற்றையும் குறிக்கும். அந்த வகையில் அரிசி விலை மட்டுமல்லாது எல்லாப் பொருள்களினுடைய விலையுமே குறையவேண்டும். அது செய்யப்பட்டிருக்கிறதா என்றால், நிச்சயம் செய்யப்படவில்லை. நெல் விலை மட்டும் குறைந்திருக்கிறது. மற்றப் பொருள்களின் விலை ஏறுமுகமாக இருக்கிறது. இந்த நிலையை இப்படியே விட்டு வைத்தால், அடுத்த ஆண்டு உழவர்கள் எந்த வகையிலே தங்களுடைய உழைப்பைப் பயன்படுத்தி, உற்பத்தியைப் பெருக்க முடியும் என்பதை நாம் எண்ணிப் பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறோம். இதைப் பார்க்கும்போது, ஆளும்

கட்சிக்காரர்கள், 'அரிசி விலை குறையவேண்டும்' என்று சொன்ன எதிர்க் கட்சிக்காரர்கள்மீது பழி வாங்குவதற்காக இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையை உருவாக்கியிருக்கிறார்களோ என்றுகூட எண்ண வேண்டியிருக்கிறது. அரிசி விலை காரணமாகப் போராட்டம் நடத்திய காலத்தில், மந்திரிமார்கள் சென்ற இடங்களில் எல்லாம், உழவர் பெருமக்களைப் பார்த்து, "மூன்று படி அரிசி போடுங்கள் என்று திராவிட முன்னேற்றக் கழகத்தினர் கூறுகிறார்கள். அப்படி மூன்று படி அரிசி போடுவதென்றால், மூட்டை நெல் 10, 12 ரூபாய்க்குத்தான் விற்க வேண்டியிருக்கும், அப்படி விற்றால் உங்களுக்குக் கட்டுபடியாகுமா? அவர்களை நீங்கள் நம்பலாமா?" என்று கேட்டு வந்தார்கள். உழவர்களுடைய வெறுப்பை திராவிட முன்னேற்றக் கழகத்தார்மீது தூண்டிவிட வேண்டுமென்ற எண்ணத்தினால் ஆளுங் கட்சியினர் அப்படிச் சொல்லி வந்தார்கள். அதை இப்பொழுது செயல்படுத்துகிற நிலையிலே, நெல் விலை மட்டும் குறைந்து, மற்றப் பொருள்களினுடைய விலை ஏறுமுகமாக இருக்கத் திட்டம் வகுத்திருக்கிறார்களோ என்று எண்ண வேண்டியிருக்கிறது. பொருளாதார நிலை காரணமாகவோ அல்லது சாதாரண முறையிலோ நெல் விலை குறைந்திருக்கிறதா என்றால், இல்லை. மத்திய அரசாங்கத்தின் சார்பாக மாநில அரசாங்கம் நெல் கொள்முதல் செய்வது என்ற திட்டத்தின்படி அறுவடைக் காலத்தில் . . . .

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** கனம் சபாநாயகர் அவர்களே, நெல் விலை குறைந்திருக்கிறது, அரிசி விலை குறைந்திருக்கிறது, அப்படிக் குறைந்திருப்பதற்கு இந்த அரசாங்கம் தான் காரணம் என்று கனம் அங்கத்தினர் அவர்கள் எங்கள் மீது குற்றம் சாட்டுகிறார்கள் என்று நினைக்கிறேன். அதை நான் வரவேற்கிறேன்.

**புலவர் கா. கோவிந்தன்:** கனம் அமைச்சர் அவர்கள் இந்த நிலையை வரவேற்றார்கள். அதைப் பாராட்டுகின்ற வகையிலே நான் கூற வரவில்லை. நெல் அறுவடையாகி களத்திற்கு வருவதற்கு முன்பே, அரசாங்கம் இப்படி 'நெல் கொள்முதல் நாங்கள் செய்யப்போகிறோம்' என்று சொன்னார்கள். அதன் காரணத்தால் வியாபாரிகள் மார்க்கெட்டுக்குச் சென்று நெல் வாங்குவதை நிறுத்திக் கொண்டார்கள். தானிய ஈட்டின்மீது கடன் கொடுப்பதில் கூட்டுறவுச் சங்கங்களும் ஆர்வம் காட்டாத நிலையையும் அரசாங்கம் உண்டாக்கிற்று. இப்படிப்பட்ட காரணத்தினால் நெல் விலை இறங்கி இருக்கிறது. ஆனால், உணவு உற்பத்திக்கு அவசியமான பிண்ணாக்கு, உரம் முதலியவைகளின் விலை ஏறி இருக்கிறது. நெல்லை விற்று விவசாயிகளின் தேவைக்கு வேண்டிய பொருள்களை வாங்கச் செல்லும் நேரத்தில், அந்தப் பொருள்களின் விலையும் ஏறியிருக்கிறது. உற்பத்திச் செலவு ஏறியிருப்பதோடு வாழ்க்கைக்குத் தேவையான மற்றப் பொருள்களின் விலையும் ஏறியிருக்கும் நேரத்தில் நெல் விலை குறைந்தது என்றால் அது எப்படிப்பட்ட நிலையை நாட்டில் உண்டாக்கும் என்பதை அமைச்சர் அவர்கள் உணரவேண்டும்; ஆளுங் கட்சியினரும் உணரவேண்டும். அறுவடையாகி, அதை வியாபாரிகள் வாங்கி வைத்த பிறகு, இப்படிக் கொள்முதல் திட்டத்தைக் கொண்டுவரப் போகிறோம்



என்ற செய்தியை வெளியிட்டிருந்தால் இந்த நிலை உருவாகியிருக்காது. நெல் களத்திற்கு வருகிற நேரத்தில் இப்படிப்பட்ட செய்தியை வெளியிட்ட காரணத்தால்தான் இந்த நிலை உருவாகி இருக்கிறதென்பதை அரசாங்கம் உணரவேண்டும். ஆகவே, இப்பொழுது அரசாங்கம் செய்யக் கடமைப்பட்டிருப்பது எல்லாம், நெல்லை உரிய விலைக்கு வாங்க வழி செய்ய வேண்டும். இப்பொழுது நட்டு விளைகின்ற நெல்லை மார்க்கெட்டுக்குக் கொண்டு செல்லும் நேரத்தில், எந்த விலைக்கு விற்கவேண்டிவருமோ என்று சந்தேகப்படும் நிலையிலே உழவர்களை விட்டு வைக்கக் கூடாது. உற்பத்தியாகும் நெல் இந்த விலைக்குப் போகும் என்ற நிச்சயமான எண்ணம் உழவர்களுக்கு இருக்க வேண்டும். அந்த எண்ணம் ஏற்படும் வகையில் ஆட்சியாளர் செயலாற்ற வேண்டும். அறுவடையான பிறகு என்ன விலைக்கு விற்குமோ என்ற ஐயம் உழவர்கள் உள்ளத்திலே எழ இடமளிக்கக் கூடாது. விலைவாசி குறையவேண்டுமென்றால், நெல் விலை முதலாக எல்லாப் பொருள்களின் விலைகளும் குறைய வகை செய்ய வேண்டும். அந்த நிலையை உருவாக்க வேண்டும். அதை உருவாக்க ஆட்சியாளர் என்ன செய்தார்கள் என்பதை நாடு அறியும். பொருளாதார நிபுணர்கள் அறிவார்கள் என்று நாங்கள் கூற கடமைப்பட்டிருக்கிறோம். நெல் என்ன விலைக்கு விற்கும் என்ற உறுதி உழவர்களுக்கு இருக்க வேண்டும். அத்துடன், அரிசியை நாட்டின் செல்வ நிலைக்கு ஏற்றவாறு விற்கவும் ஏற்பாடு செய்ய வேண்டும். இடையிலே உண்டாகும் ஏற்றத் தாழ்வுகளை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்க வேண்டும். அப்படிப்பட்ட நிலையிலேதான் நாட்டிலே உற்பத்தி பெருக முடியும். சென்ற ஆண்டு, கிச்சிலி சம்பா நெல் அறுபது படி மூட்டை 29 ரூபாய்க்கு விற்றது. இந்த ஆண்டு, 24, 25 ரூபாய்க்குக் கூடக் கேட்பாரில்லையென்றால் எப்படி உழவர்கள் பாடுபட்டு மேலும் மேலும் உழைத்து உணவு உற்பத்தியைப் பெருக்க முடியும்? எப்படி அரசாங்கம் குறிப்பிட்டிருக்கும் 4.85 லட்சம் டன் அளவு அதிக உற்பத்தி ஏற்படும் என்பதை ஆட்சியாளர்கள் உணர வேண்டும். ஆட்சியாளர்களைக் குறை கூற நான் விரும்பவில்லை. நெல் விலை மட்டும் குறைய, மற்றப் பொருள்களின் விலை ஏறுகிற நிலையை உண்டாக்கியிருக்கிறார்கள். இதைத் தவிர்க்க வேண்டும் என்று நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

கவர்னர் தம் உரையில் மேலும் சில நிகழ்ச்சிகளைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். தேசீயப் பாதுகாப்பு நிதிக்குத் தமிழ்நாட்டின் உதவி இரண்டு கோடி ரூபாய் அளவை மீறியுள்ளது என்ற மகிழ்ச்சியைத் தெரிவித்திருக்கிறார்கள். ஐந்து கோடி ரூபாய் நம்முடைய குறிக்கோள் என்பதைக் கவர்னர் அவர்களுடைய உரையில் கூறத் தவறியிருக்கிறார்கள். இந்த இரண்டு கோடி ரூபாயில் ஏழை ஆசிரியர்கள், தொழிலாளர்கள் என்.ஜி.ஓக்கள் போன்ற பாட்டாளி மக்கள் கொடுத்த பணம் தான் பெருவாரியாக இருக்கிறது. ஆலை அரசர்களும், பல் முதலாளிகளும், பெரிய நிலப்பிரபுக்களும் கொடுக்க வேண்டிய அளவு கொடுத்திருந்தால், ஐந்து கோடி ரூபாய் அளவை எப்போதோ எட்டியிருக்கலாம் என்பதை இந்த ஆட்சியாளர் உணர வேண்டும்.

[புலவர் கா. கோவிந்தன்] [29th January 1963

ஹோம் கார்ட்ஸ் அமைப்பின்பேரால் ஆளும் கட்சித் தொண்டர்களுக்கு இடம் அளித்து எதிர்க் கட்சிகளை நசுக்குவதற்கு அந்த முறை கையாளப்படுமோ என்ற அச்சம் எங்களுக்கு இருக்கிறது. அந்த அச்சத்தைக் தவிர்க்கும் முறையிலே செயல் திட்டங்களை அமைக்க வேண்டும் என்று இந்த மன்றத்தின் மூலமாக நான் கேட்டுக் கொள்கின்றேன்.

இப்பொழுதிருக்கும் நெருக்கடி நிலைமை காரணமாகத் திட்டங்கள் திருத்தியமைக்கப்படும் என்று கவர்னர் உரையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். என்னுடைய மாவட்டத்தில் மருத்துவத் துறையில் மட்டும் பத்து லட்சம் ரூபாய் மதிப்புள்ள கட்டட வேலைகள் நிறுத்தப்பட்டிருக்கின்றன என்ற செய்தியை அறிந்தேன். மிக இன்றியமையாத தேவை என்று நிர்ணயிக்கப்படுகிற பகுதியையாவது குறைக்காமல் அவைகள் செயல்பட இடமளிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கின்றேன். அதே நேரத்தில், தேர்தலில் எதிர்க் கட்சித் தோழர்கள் வெற்றி பெற்ற இடங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் திட்டங்களை நீக்கி விடலாம் என்ற அந்த அரசியல் கண் கொண்டு பார்க்காமல், தாராள மனப்பான்மை காட்டவேண்டுமென்றும் நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

பொது சுகாதாரத் துறை, மருத்துவம், இன்ஜினீரிங், வனத் துறை ஆகிய இவற்றை அகில இந்திய சர்வீஸின் கீழ் கொண்டுவர வேண்டிய திட்டத்தைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அண்மையில் நடந்த தென் மண்டல முதல் அமைச்சர்கள் மாநாட்டில் நமது முதல் அமைச்சர் அவர்கள் ஒரு வாக்குறுதி கொடுத்து வந்திருக்கிறார்கள். "பப்ளிக் சர்வீஸ் தேர்வின்போது தமிழ் மொழி அறிந்திருக்கவேண்டும் என்ற நிலையை நான் வற்புறுத்தவில்லை, பிறகு வேண்டுமானால், அந்த அறிவு பெற்று விடலாம்" என்ற வாக்குறுதி கொடுத்து வந்திருக்கிறார்கள். அந்த நிலையினால், தமிழ்நாட்டில் வேறு மாநிலத்தவர்களுக்கு அதிக இடம் கிடைத்து தமிழ் நாட்டவர்களுக்குப் பாதகம் ஏற்படுமோ என்ற அச்சம் உண்டாகியிருக்கிறது. அகில இந்திய ரீதியில் இவைகளைக் கொண்டுவந்தால் இந்த மாநிலத்திலே அந்தந்தத் துறைகளிலே இருப்பவர்களுக்கு அதிக வாய்ப்பு இல்லாமல் மற்றவர்களுக்கு ஏற்பட்டுவிடுமோ என்ற அச்சம் எழுவதைத் தவிர்க்க நம்முடைய அரசாங்கம் முன்வரவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

ஆங்காங்கே இருக்கும் குடிசைகளை அகற்ற ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது. "சுகாதாரக் கேடான பகுதிகள் அதிகம் ஆவதைத் தடுக்க இயலாமலிருக்கிறது" என்று கவர்னருடைய உரையில் குறிப்பிட்டிருக்கிறார். அது குறித்து கொண்டுவரப் போகிற சட்டத்தினால் குடியிருப்பவர்களை வெளியேற்றும் திட்டம் தான் நடைபெறுமே தவிர, குடி நீர் வசதி, தெரு விளக்கு அமைத்தல் போன்ற திட்டங்கள் நடைபெறுமா என்ற சந்தேகம் எங்களுக்கு இருக்கிறது. தொழில் நிலையங்கள் எங்கு இருக்கின்றனவோ அவற்றுக்கு அருகாமையிலே தொழிலாளர்களுக்குக் குடியிருப்பு வசதிக்கான இடங்களை அமைக்கத் தக்க நிலையில்



29th January 1963] [புலவர் கா. கோவிந்தன்]

இந்தத் திட்டங்களை அமைக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன். ஆக, கவர்னருடைய உரையை எந்த முறையில் நோக்கினாலும், அது பாராட்டுக்குரிய முறையில் இல்லை என்று தெரிவித்து என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகின்றேன்.

* **திருமதி சி. கொளந்தை அம்மாள்:** கனம் சபாநாயகர் அவர் 10-30 a.m.
களே கவர்னர் அவர்கள் ஆற்றிய உரைக்கு நன்றியும் பாராட்டுதலையும் தெரிவித்துச் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். அவர்கள் ஆற்றியிருக்கும் உரையில் நமது ராஜ்யத்தினுடைய பல்வேறு திட்ட அடிப்படையிலே காட்டப்பட்டிருக்கின்ற ஊக்கத்தையும், உற்சாகத்தையும் வரவேற்று நாம் எப்படி எதிர்காலத்தில் செயல்படவேண்டுமென்பதை நல்ல முறையில் வற்புறுத்தி ஒவ்வொரு செயலிலும் எவ்வாறு ஊன்றி ஈடுபடவேண்டுமென்பதையும் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதோடு கூட நம்மை எதிர்த்து நிற்கின்ற சீன ஆக்கிரமிப்பைச் சமாளிக்கக்கூடிய உற்சாகத்தையும் நமக்குக் கொடுத்திருக்கிறார்கள். அதற்காக அவருக்குப் பாராட்டுதலையும் தெரிவித்து, ஒரு சில கருத்துக்களைப் பொதுவாக விவசாயப் பெருங்குடி மக்கள் சார்பாகவும், மற்றும் பல்வேறு துறைகளிலே ஈடுபட்டிருக்கின்றவர்கள் சார்பாகவும் கூற விரும்புகிறேன்.

என்னுடைய மாவட்டத்தைப் பொறுத்த வரைக்கும் இந்த ஆண்டு விவசாயம் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறது. அதற்கு முக்கியமான காரணம் பருத்திப் பயிரில் விழுந்த புழு தான். இந்தப் பருத்திப் புழு விழுந்தவுடன், ஒவ்வொரு பருத்திக் காய்க்குள்ளும் சென்று, சில நாட்களில் பெரிய புழுவாகி பயிரையே நாசம் செய்து விட்டது. என்ன மருந்து அடித்தும் போகவில்லை. சில வாரங்கள் இதுபற்றி ஆராய்ச்சி செய்த விவசாய இலாகாவின் ஆலோசனையின்படி பாலிடால் அடித்தார்கள். புழு சாகவில்லை. பாலிடாலில் அந்த புழுக்கள் மிதக்கின்றன. விவசாய இலாகா குறிப்பிட்டபடி புழுக்கள் சாகவில்லை. இதனால் நூற்றுக்கு நாற்பது, ஐம்பது பாகம் பருத்திப் பயிர் பாதிக்கப்பட்டிருக்கிறது. இப்படி இந்தப் புழுக்கள் பெரும்பாலான விவசாயிகள் தாங்கள் அந்தப் பயிர் வைக்க வாங்கின கடனைக் கூடத் திருப்பி அளிக்க முடியாத வகையில் கஷ்டப்படும்படியாகச் செய்துவிட்டது. ஆகவே விவசாய இலாகாவானது இதுபற்றி புதிதாக தீவிரப் பரிசோதனைகள் செய்து அடுத்த ஆண்டாவது இம்மாதிரி விவசாயிகள் நஷ்டமும், கஷ்டமும் அடையாமல் காப்பாற்றவேண்டும் என்று ஞாபகப் படுத்த விரும்புகிறேன். நான்கைந்து வருஷங்கள் முன்பாக ஏரோப்ளேன் மூலமாக மருந்து அடித்து நிலக்கடலைப் பயிருக்கு வந்த நோயைப் போக்கியது போல—பெரிய நிலப்பரப்பில் பருத்தி பயிர் வைத்திருக்குமிடங்களில் ஏரோப்ளேன் மூலமாகவாவது மருந்து அடித்து அந்த வியாதியினால் பயிர் நாசமடையாமல் பாதுகாக்க தக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

[திருமதி சி. கொளந்தை அம்மாள்] [29th January 1963

இன்றைக்கு நாடு முழுவதும் கோவாப்பரேடிவ் சொஸைடிகள் மூலமாகப் பல்வேறு உணவுப்பொருள்களை மக்களுக்கு விநியோகிக்கத்தக்க நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறோம். எனக்கு முன்பாக எதிர்க்கட்சியின் சார்பில் பேசிய ஓர் அங்கத்தினர் ஆளும் கட்சியைச் சார்ந்தவர்களுக்கு மனவளம் இல்லையென்று குறிப்பிட்டார்கள். ஆளும் கட்சியினருக்கு மன வளம் இருக்கிற காரணத்தினால் தான் இன்றைக்கு பாவம் என்று இரங்கி ஏழை எளிய ஆசிரியர்கள், என்.ஜி.ஓ.க்கள், கிராம உத்யோகஸ்தர்கள், போலீஸ்காரர்கள் இன்னும் மற்ற சிப்பந்திகள் எல்லாம் வாழக்கூடிய அளவுக்கு ஏராளமான பணத்தைக் கூட்டுறவுத் துறையில் செலவிட்டு ஆங்காங்கே கூட்டுறவு சொஸைடிகள் மூலமாக உணவுப் பொருள்கள், சர்க்கரை, காப்பிக்கொட்டை, விறகு போன்ற பல பொருள்கள் நியாய விலையில் கிடைக்க ஏற்பாடு செய்திருக்கிறோம். இதற்காக இந்தச் சர்க்காரை நாம் பாராட்டவேண்டும். மேலும் கூட்டுறவு சொஸைடிகளின் மூலமாக எவ்வாறு உர விநியோகம் செய்யப்படுகிறதோ அதுபோலவே பருத்திக் கொட்டையும் விநியோகம் செய்ய ஏற்பாடு செய்யவேண்டும். ஏனென்று கேட்டால் இன்றைய தினம் விவசாயிகள் ஒரு மூட்டை பருத்திக் கொட்டை வாங்கினால் 28 ராத்தல் ஒரு மணு என்கிறார்கள். ஆனால் கொண்டுவந்து அளந்தால் 25 ராத்தல் தேறமாட்டேன் என்கிறது. இப்படி 3 ராத்தல் குறைந்து போவதோடு கூட காய்ந்தும் இல்லை. இதனால் வேறு விவசாயிகள் நஷ்டமடைகிறார்கள். ஆகவே கூட்டுறவு சொஸைடிகள் மூலமாகப் பருத்திக்கொட்டை விநியோகம் செய்யவும் ஏற்பாடு செய்யவேண்டும்.

அதற்கடுத்தபடியாக விவசாயிகளுக்கு இப்போது நம்முடைய எஸ்.இ. (சூப்பிரண்டெண்டிங் என்ஜினியர்) அவசர நிலைமையை உத்தேசித்து 5 ஹார்ஸ் பவர் மோட்டார் வைத்துக்கொள்வதற்கு அனுமதி அளிக்கிறார்கள். ஐந்து ஹார்ஸ் பவர் என்பது எங்கள் பகுதியில் போதவே போதாது. மிக ஆழமான கிணற்றில் இருந்து தண்ணீர் இறைக்க வேண்டுமென்றால்—விவசாயிகள் எத்தனை ஹார்ஸ் பவர் மோட்டார் வேண்டுமென்று கோருகிறார்களோ அல்லது குறைந்தது பத்து அல்லது ஏழரை ஹார்ஸ் பவர் மோட்டார் வரையிலாவது வைத்துக்கொள்ள அனுமதி வழங்கும் வகையில் அந்தச் சட்டத்தைத் தளர்த்தி அனுமதி வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆதற்கடுத்தபடியாக கிணறுகள் வெட்ட பகலில் மின்சாரம் கொடுப்பது இல்லை. இரவில் 6 மணி நேரம் கொடுக்கிறார்கள். எங்கள் பகுதியில் அடிக்கடி கிணறு வெட்டவேண்டியதாக இருக்கிறது. அதுவும் அரசாங்கத்திடம் பல வகையில் கடன் வாங்கியவர்களுக்குத்தான் இந்த மின்சாரம் கொடுக்கப்படுகிறது. சொந்தப் பணத்தைக்கொண்டு கிணறு வெட்டுகிறவர்களுக்கு மின்சாரம் கொடுப்பதில்லை. அப்படியின்றி எங்கள் பகுதியில் கிணறுவெட்டுகின்றவர்களுக்குப் பகலிலேயே மின்சாரம் வழங்குவதற்கு அரசாங்கம் அனுமதி அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



29th January 1963] [திருமதி சி. கொளந்தை அம்மாள்]

பாசன வசதியைப் பொறுத்த வரைக்கும் எங்கள் வட்டாரம் மிகவும் வறண்ட பிரதேசம். அந்தப் பிரதேசத்தில் புதிய குளங்கள் ஏற்பாடு செய்வதற்கு ஒன்றிரண்டு திட்டங்கள் வகுக்கப்பட்டன. அது ஏழரை லட்சம், எட்டு லட்சம் செலவாகும் என்றால் அதிலிருந்து ஒரு சதவிகிதம் அல்லது 2 சதவிகிதம் கூட ரிடர்ன் இருக்காது என்று அத்திட்டங்களை கைவிட்டுவிடக் கூடாது. உணவு உற்பத்தி என்ற தலைப்பில் லாபம் இருக்கிறதோ இல்லையோ அத்திட்டங்களை மேற்கொள்ளவேண்டும். குளத்தில் நீர் தேங்கினால் ஆங்காங்குள்ள கிணறுகளிலாவது ஊற்றம் இருக்கும். ஆகவே அவற்றை நிறைவேற்றவேண்டுமென்று ஞாபகப் படுத்த விரும்புகிறேன்.

அடுத்தபடியாக நம்முடைய ராஜ்யத்திலுள்ள விளைபொருள்களின் விலையை அன்றாடம் வானொலியில் அறிவித்து வருகிறார்கள். ரேடியோவைத் திருப்பினால் தக்காளி விலை, உருளைக்கிழங்கு விலை எல்லாம் சொல்கிறார்கள். ஆனால் அன்றாடம் வானொலியில் அறிவிக்கின்ற விலைக்கு மார்க்கெட்டுக்குப் போனால் காய்கறிகளை வாங்க முடியாது. விலை கூடுதலாகவே இருக்கிறது. ஒன்று அறிவிக்கப்படுகிற விலைக்கு மார்க்கெட்டில் பொருள்கள் மக்களுக்குக் கிடைக்கும்படியாக விலையைக் கட்டுப்படுத்த வேண்டும். அல்லது இந்த வானொலி நிலைய டைரக்டர்கள் என்ன விலைக்குப் பொருள்கள் மார்க்கெட்டில் விற்கப்படுகிறதோ அந்த உண்மை விலையையாவது அறிவிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக நஞ்சை நிலத்திற்குத் தீர்வை புதிதாக விதிப்பது பற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. கீழ் பவானி, அமராவதி, பாம்பிக்குளம் போன்ற இடங்களில் ஏற்கனவேயே அதிகமான தீர்வை இருந்துகொண்டிருக்கிறது. இன்னும் அந்தத் தீர்வையை அதிகப்படுத்தினால் விவசாயப் பெருமக்கள் மிகவும் பாதிக்கப்படுவார்கள். பழைய வாய்க்கால் பகுதிகளுக்கு வேண்டுமானால் நஞ்சை நிலத் தீர்வையைக் கூட்டலாம். இம்மாதிரி ஏற்கனவே அதிகமாக வரி விதிக்கப்பட்டிருக்கும் கால்வாய்ப் பகுதியில் உள்ள நஞ்சை நிலத்திற்குத் தீர்வையைக் கூட்டக் கூடாது. ஏற்கனவே ஒரு விளக்கு என்று இருந்ததை இன்றையதினம் 3 விளக்கு வரை—பட்டிணங்களைப் போலவே கிராமத்தில் விவசாயிகள் மின்சாரம் உபயோகப்படுத்துகிறார்கள். அதற்கு மூன்றரை அணா யூனிட்டுக்கு என்று கட்டவேண்டியிருக்கிறது. எதிர்பாராத வேறு பல செலவினங்கள் இருக்கின்றன. நோயினால் வேறு பயிர் பாதிக்கப்பட்டு நஷ்டம் உண்டாகிறது. ஆகவே இவற்றையெல்லாம் உத்தேசித்து இந்தப் பகுதியில் உள்ள விவசாயிகளின் நஞ்சை நிலங்களுக்குத் தீர்வையைக் கூட்டக் கூடாது என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதற்கடுத்தபடியாக மீன் வளப் பாதுகாப்பு இலாகாவின் மூலமாக மாவட்டங்களுக்கு இவ்வளவு என்று பணம் ஒதுக்கியிருக்கிறார்கள். எனது பஞ்சாயத்து யூனியனுக்கு 15 ஆயிரம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். ஆனால் எங்கள் மாவட்டத்தில் மீனும் இல்லை. வளமும் இல்லை. குளமும் இல்லை. ஆகவே அந்தப் பணத்

ந்தக் கொண்டு விவசாயிகளுக்கு மிகவும் உபயோகமான டிராக்டர் வாங்கிக்கொள்வதற்கு அனுமதி அளிக்கவேண்டுமென்று கேட்டிருக்கிறோம். ஆனால் அங்கே ஒரு குளம் இருக்கிறது, அதில் நிறைய மீன் இருக்கிறது என்று கனம் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்தக் குளத்தில் மீனே இல்லை. ஆகவே எங்கள் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் கோரியிருக்கிறதுபோல அந்தப் பணத்தை மிகவும் உபயோகமாகச் செலவழித்துக்கொள்ள அனுமதி அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் எங்கள் மாவட்டத்தில் பெண்களுக்கு ஒரு பாலிடெக்னிக் ஏற்படுத்த வேண்டுமென்று கல்வி அமைச்சரிடமும், முதல் அமைச்சரிடமும் கேட்டிருக்கிறோம். அவர்கள் நிச்சயம் வழங்குவார்கள் என்று நினைக்கிறேன். உடனடியாக அந்த மாவட்டத்தில் ஒரு பெண்கள் பாலிடெக்னிக் பள்ளி ஏற்படுத்தித் தரவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

டிரெயினிங் ஸ்கூலில் படிப்பதற்காக 3000 பேர் அப்ளிகேஷன் போட்டால் 250 பேர்களுக்குத்தான் இடம் கிடைக்கிறது. மற்றவர்களுக்கு இடம் கிடைப்பதில்லை. ஒரு பஞ்சாயத்து யூனியன் பள்ளியில் ஏறத்தாழ 10 பேர் 'அன்ட்ரெயின்டு டீச்சர்ஸ்' இருக்கிறார்கள். இந்த மாதிரி பயிற்சி பெறாது இருக்கக் கூடிய ஆசிரியர்கள் எல்லாம் பயிற்சி பெற வசதியளிக்கும் வகையில், எப்படி எஞ்சினியரிங் கல்லூரியிலும், மருத்துவக் கல்லூரியிலும் அதிகப்படியான ஆட்களை எடுக்க உத்தேசித்திருக்கிறோமோ அதே போன்று டிரெயினிங் ஸ்கூல்களிலும் அதிகப்படியான பேர்களுக்குப் பயிற்சி கொடுக்க முற்படவேண்டும்.

அடுத்து, கலெக்டர் ஆபீஸ், தாலுகா ஆபீஸ் ஆகியவற்றில் இருந்து வரக்கூடிய தபால்கள் தாராளமாகத் தமிழிலேயே எழுதப்படவேண்டும். அந்த ஆபீசுகளிலிருந்து தமிழிலே தபால்கள் எழுதப்படுவதில்லை என்று சொன்ன நேரத்தில், டைப்ரைட்டர்கள் இல்லையென்று சொன்னார்கள். பின்பு டைப்பிஸ்ட் இல்லையென்று சொன்னார்கள். இப்போது ஒவ்வொரு ஜில்லாவுக்கும் 7, 8 டைப்ரைட்டர்கள் கொடுத்திருக்கிறார்கள். இனிமேற்கொண்டாவது அந்த ஆபீசுகளில் எல்லாம் தமிழிலே எழுதும் பயிற்சியைக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சிமெண்ட் இப்போது கண்ட்ரோல் விலைக்குக் கிடைப்பதில்லை. மூட்டைக்கு 12, 15 ரூபாய் கொடுத்தால் சிமெண்ட் தாராளமாகக் கிடைக்கிறது. அவ்வாறு அதிகப்படியான விலைக்கு விற்பவர்களை இப்போதிருக்கும் சிமெண்ட் கண்ட்ரோல் ஆக்டின் கீழ் ஒன்றுமே செய்ய முடிவதில்லை. கண்ட்ரோல் விலைக்கு அதிகமாக விலை வைத்து சிமெண்ட் விற்பவர்களைக் குற்றவாளி என்ற முறையில் தண்டிக்கவேண்டும். இது பற்றி அமைச்சரவர்கள் கவனித்து ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எங்கள் ஜில்லாவில் என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரை ஏதாவது ஒரு முறையில் பாசன வசதி செய்து தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். குந்தா திட்டத்திலிருந்து,





மேல் பவானியிலிருந்து தண்ணீர் வசதி செய்து தரவேண்டுமென்று சொன்னால், 'இல்லை, இல்லை' என்று பதில் வருகிற காரணத்தினால், ஏதாவதொரு வகையில் குளம், குட்டைகள் மூலமாகவாவது விவசாயத்திற்கு வேண்டிய தண்ணீர் வசதியைச் செய்து தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு இருக்கக் கூடிய சூழ்நிலையில் பஞ்சாயத்து யூனியன்கள் மூலம் காய்கறி உற்பத்தித் திட்டம், பழத்தோட்டங்கள் பயிரிடுதல் போன்றவற்றை நல்ல முறையில் உற்சாகத்துடன் நிறைவேற்றி வருவதற்காக என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

"செய்க பொருளைச் செறுநர் செருக்கறுக்கும்
எஃகதனிற் கூரிய தில்".

என்று வள்ளுவப் பெருமான் கூறுகிறார். எஃகு என்று தனியான ஆயுதம் ஒன்று செய்ய வேண்டியதில்லை. நமக்கு வேண்டிய பொருள்களை உண்டாக்கிக் கொண்டிருந்தால் அதனுடன் ஒப்பிடக் கூடிய வேறு ஆயுதம் இல்லை. தற்போது சீன ஆக்கிரமிப்பின் காரணமாக எல்லோரும் ஒன்றுபட்டிருக்கிறார்கள். பாரதியாருடைய வாக்குப்படி—

"ஆயிரம் உண்டிங்கு ஜாதி எனில்
அந்நியர் வந்து புகல் என்ன நீதி"

என்பதற்கொப்ப வேறு ஒருவன் நம்மை ஆக்கிரமிக்கும்பொழுது அவர்களை நாம் மன உறுதியுடன் தகர்த்து எதிர்த்து விரட்ட வேண்டும். நம்முடைய சென்ற கால பாரம்பரியம் அகிம்சை முறையாகும். ஆகவே, நாம் ஆயுதங்கள் செய்ய முற்படவில்லை.

"அறந்தரு தவத்தையாயும் அறிவினால் அவற்றை முற்றும் மறந்தனை அன்று இலக்குவன் வாக்கால் இராமன் போர் செய்யும் எண்ணம் கொள்ளவில்லை இனி போர் செய்ய வேண்டுமென்று குறிப்பிடுகிறார்", என்று கம்பன் கூறியதுபோல், எதிரி படையெடுத்து வந்திருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில் நாம் எல்லோரும் ஆயுதமாக இருக்கிறோம் என்பதை ஞாபகப்படுத்திக்கொள்ள விரும்புகிறேன். இப்போது நாட்டில் ஏற்பட்டிருக்கும் ஒற்றுமையானது என்றென்றைக்கும் நிலை நிற்கவேண்டும். நாம் சமீபத்தில் விவேகானந்தருடைய நூற்றாண்டு விழாவைக் கொண்டாடினோம். அவர் பல்வேறு மொழிகளைக் கற்று மேலை நாடுகளில் எல்லாம் இந்து மதத்தின் சிறப்பினை எடுத்துக் கூறும் பணியில் ஈடுபட்டிருந்தார். அவர் தெய்வ பக்தியுடன் பல்வேறு மொழிகளைக் கற்று இந்து மதத்தைப் பரப்பும் பணியில் ஈடுபட்டு ஆன்ம ஞானத்தில் வெற்றி பெற்றார். அதே போன்று இந்தக் காலத்திலும் பல்வேறு மொழிகளைப் பயிலுவதில் ஆட்சேபணை இல்லை என்ற நிலைமை வருமானால் நாட்டின் முன்னேற்றத்திற்கு வழி ஏற்படும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

எதிர்க் கட்சி அங்கத்தினர்கள் முன்பு பேசியபோது, "எங்களுக்கு ஓட்டுப் போட்டால் அரிசி விலை குறையும், பருப்பு விலை குறையும்" என்று பேசியவர்கள், இன்று இந்தச் சபையில் பேசும் போது 'நீங்களே ஆட்சியிலிருந்தாலும் இந்தப் பொருள்களின் விலையெல்லாம் குறையும்' என்ற அடிப்படையில் பேசினார்கள். காங்கிரஸ் அமைச்சர்கள், நெல் விலை, பருப்பு விலை ஆகியவற்றைக் குறைத்து விட்டார்கள் என்று சொன்னார்கள். ஒரு வருஷத்தில் எவ்வளவு தூரம் மாற்றம் ஏற்பட்டுவிட்டது என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். மன வளம் இல்லையென்று சொன்னார்கள். மன வளமும் தாராளமாக இருக்கிறது என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

கவர்னர் பெருமான் அவர்கள் பல்வேறு திட்டங்களைப் பற்றித் தம்முடைய உரையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். தங்கக் கட்டுப்பாட்டின் காரணமாக உண்மையிலேயே வருத்தப்படவேண்டியவர்கள் பெண்கள்தான். ஆனால் ஒரு பெண் கூட இது வரை அது பற்றி வருத்தப்பட்டதாகத் தெரியவில்லை. ஆனால் தங்க வேலை செய்கிற தொழிலாளிகள் ரொம்பப் பேர் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு மாற்றுத் தொழிலைக் கொடுப்பதற்கான திட்டத்தை வகுக்க வேண்டும். அவர்களுடைய தொழில் நுணுக்கமான தொழில். அவர்கள் வெயிலில் நின்று கடுமையான வேலை செய்து பழக்கமில்லாதவர்கள். ஆகவே, அவர்களுக்கு உகந்த தொழிலாகக் கொடுத்து ஆதரிக்க வேண்டுமென்று ஞாபகப்படுத்திக் கொண்டு, கவர்னர் பெருமான் அவர்களுடைய உரையைப் பாராட்டி என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. எஸ். ராமலிங்கம்** : கனம் சபாநாயகர் அவர்களே, கவர்னர் பெருமான் அவர்கள் ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை ஆதரிக்கும் முகத்தான் சில வார்த்தைகள் பேச எனக்குச் சந்தர்ப்பம் கிடைத்ததற்காக நான் உண்மையிலேயே பெருமைப்படுகிறேன். சீனர்களுடைய பச்சை ஆக்கிரமிப்பின் காரணமாக நாட்டிலே மிகவும் நெருக்கடியான சூழ்நிலை ஏற்பட்டு விட்டது. அந்த நெருக்கடியை எந்த வகையிலும் சமாளித்தாகவேண்டுமென்று கவர்னர் அவர்கள் உரையிலே குறிப்பிட்டிருந்தார்கள். பாடுபட்டுப் பெற்ற நாட்டினுடைய சுதந்திரத்தை எப்படியும் நாம் பாதுகாத்தாக வேண்டும். நாட்டினுடைய சுதந்திரத்தைப் பற்றிய அருமை பெருமை தெரியாத சில கட்சிக்காரர்கள் கூட இருந்தார்கள். சுதந்திரத்தைப் பெறுவதற்காகப் பாடுபட்ட காலத்தில் சுதந்திரத்தைப் பற்றி எவ்வளவு அருமை பெருமை இருந்ததோ அந்த நிலைமை இப்போது தோன்றியிருக்கிறது "ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோம்" என்று பாரதி அந்தக் காலத்திலேயே கனவு கண்டு பாடினான். 'இன்ப சுதந்திரம் இன்னருளால் பெற்றதன்றோ' என்றும்.

"வீர சுதந்திரம் வேண்டி நின்றார் பின்னர்
வேறொன்று கொள்வாரோ?"





என்றும் சொன்னார். சுதந்திரம் வீரமாகவும் இருக்கவேண்டுமென்று சொன்னார் இந்த நெருக்கடியான சூழ்நிலையிலே நாட்டிலே ஒரு நல்ல நிலைமை தோன்றியிருக்கிறது.

"ஆயிரம் உண்டிங்கு ஜாதி—எனில்
அன்னியர் வந்து புகல் என்ன நீதி"

என்று பாரதி சொன்னதைப் போல். நாட்டில் ஆயிரம் ஜாதிகள் இருந்தாலும், ஆயிரம் வேற்றுமைகள் இருந்தாலும், நாட்டிலே இப்போது ஏற்பட்டிருக்கக்கூடிய ஆக்கிரமிப்பின் காரணமாக ஒற்றுமையுணர்ச்சி தோன்றியிருக்கிறது. இன்று தோன்றியுள்ள இந்த நல்ல நிலைமை என்றுமே காக்கப்படவேண்டும். அதற்கு எதிர்க் கட்சியினர், குறிப்பாக திராவிட முன்னேற்றக் கழக நண்பர்கள், உள்ளபடியே உணர்ந்து, இன்று காட்டிய ஆதரவினை என்றும் காட்டினால் நாடு நல்ல நிலையை அடையும்.

"உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேரா தியல்வது நாடு."

என்று வள்ளுவர் கூறியிருக்கிறார். ஒரு நாடு பெருமையுடன் தலை நிமிர்ந்து நிற்க, உறு பசி அகற்றப்பட்டாகவேண்டும்; ஓவாப் பிணி நீக்கப்பட்டாகவேண்டும், செறு பகை இருக்கக் கூடாது. உறு பசியையும், ஓவாப் பிணியையும் அகற்றுவதற்கு ஆளும் கட்சியினர் வேண்டிய திட்டங்களைத் தீட்டி நிறைவேற்றி வருகிறார்கள். இப்போது செறு பகை தோன்றியிருக்கிறது. சீனர்களின் செறு பகையைப் போக்க எதிர்க்கட்சி நண்பர்களுடைய ஆதரவு மிக மிக அவசியமாக இருக்கிறது. அவர்கள் இன்று போல் என்றும் ஒற்றுமையுணர்ச்சியுடன் ஆதரவளிக்கவேண்டும். எதிர்க் கட்சி நண்பர் ஒருவர் பேசும்போது, அவர்களுடைய தத்துவத்தை— முரண்பட்ட தத்துவத்தை—ஒத்திவைத்திருப்பதாகச் சொன்னார்கள். ஒத்திவைப்பதில் அர்த்தமேயில்லை. ஒத்திவைப்பதை விட அதைக் கைவிட்டுவிடவேண்டும். இந்த நேரத்தில் ஒரு சூடு பட்டு விட்டது. நமக்கு புத்தி வந்து விட்டது என்ற நிலையில் நாம் அதை உணர்ந்து, ஏதோ அன்னியன் இந்த நேரத்தில் வந்தான், வந்த நேரத்தில் நம்மிடையே ஒற்றுமை உணர்ச்சி வந்து விட்டது, இயல்பாகவே வந்த அந்த உணர்ச்சியை இன்று போல் என்றுமே காக்க வேண்டும் என்று அவர்கள் ஒரு பாடமாக உணர்ந்து இதை ஒத்தி வைக்காமல் அதை அடியோடு மறந்து விடவேண்டுமென்று அவர்களை நான் மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன். பெரும் பகுதியான முதல் தரத் திட்டங்கள் எல்லாம் இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களில் நிறைவேற்றப்பட்டு விட்டன. எல்லா ஆறுகளிலும் பெரிய பெரிய அணைகளை எல்லாம் கூடுமான வரையில் கட்டி முடித்தாகி விட்டது. அதற்கு அடுத்தபடியாக பாசனத் திட்டங்களை வளப்படுத்த வேண்டுமென்று சொன்னால், உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்று சொன்னால், மத்திய தரத் திட்டங்களைப் பெருக்க வேண்டும். சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களை பெருக்க வேண்டுமென்று அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். உள்ளபடியே அது வரவேற்கத் தக்கது. பெரிய பெரிய திட்டங்கள்

முடிந்தவுடன் சின்னச் சின்ன திட்டங்களையெல்லாம் ஆங்காங்கு இருக்கக்கூடிய, லோக்கல் ரிசோர்ஸஸ் என்று சொல்லக் கூடிய, ஸ்தலங்களிலே இருக்கும் வாய்ப்புகளையும், வசதிகளையும், இயற்கை வளங்களையும்—இவைகளைப் பயன்படுத்தி வளப்படுத்தினால் அந்தந்த தொகுதிகளுக்கு ஏதாவது செய்ததாகவும் இருக்கும். ஒவ்வொரு தொகுதிப் பிரதிநிதிக்கும் இது நல்லது செய்ததாகயிருக்கும். இந்தத் தொகுதியில் இருந்து சென்ற பிரதிநிதி என்ன செய்தார் என்று வோட்டு அளித்த மக்கள் கேட்டால், இந்த ஏரியைக் கட்டினோம், இந்தக் குளத்தை வெட்டினோம், இந்த கிணற்றை வெட்டினோம் என்று சொல்ல, வந்ததற்கு பெருமையாக இருக்கும். ஆகவே, இதை மனதில் வைத்து மத்திய தரத் திட்டத்தையும், சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களையும் பரவலான முறையில் அமுலாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக, இந்த நெருக்கடியான நேரத்தில் தேசப் பாதுகாப்பு உதவிக்காக கிராமங்களில் வாழ்கிற, அறியாமையில் வாழ்கிற ஹரிஜன மக்கள் மிகவும் ஆதரவு கொடுத்தார்கள். உயர்தர வகுப்பில் உள்ளவர்கள், பொருளாதாரத் துறையில் மேல் மட்டத்தில் உள்ளவர்கள், இவர்களை விட ஏழை ஹரிஜன மக்கள் நன்றியோடு தானுண்ட நீரை தலையால் தருகிற தென்னையைப்போல் நன்றியறிதலோடு, அவர்களுக்காக கோடிக்கணக்கில் செலவிட்டாலும், இந்த இக்கட்டான நிலையில், இக்கட்டான நேரத்தில், அவர்கள் தங்களால் இயன்ற அளவு பொருள் உதவியும், ஆதரவும் தந்து உதவினர் என்பது பாராட்டத்தக்கதாகும். அப்படி ஹரிஜனங்கள் செய்த அளவிற்கு வாய்ப்பு வசதி படைத்தவர்களும் செய்திருந்தால் உள்ளபடியே இன்று சீனாக்காரர்களுக்கு அது ஒரு பெரிய சவாலாக இருந்திருக்கும் என்று நான் இந்த திட்டத்தில் எடுத்துச் சொல்ல ஆசைப்படுகிறேன். அப்படி ஹரிஜனங்கள் நன்றி காட்டியதற்கு அரசாங்கம் அவர்களுக்கு மேலும் மேலும் சலுகை காட்டத் தவறக் கூடாது. அவர்களுக்கு சலுகை காட்டப்படும் நேரத்தில் சிலருக்கு அது பொறாமையாகக் கூட இருக்கிறது. இவர்களுக்கு ஏன் கோடிக்கணக்கில் கொட்டி அழுகிறார்கள் என்று சிலர் பொறாமைப்படுகிறார்கள். ஹரிஜன மக்களை முன்னேற்றுவிக்க வேண்டுமென்று அன்று காந்தி அடிகள் கனவு கண்டார்கள். அதற்கேற்ப இவர்களும் இன்று நன்றி மறவா உணர்ச்சியுடன், தங்களது நன்றி மறவாத் தன்மையைக் காட்டிவிட்டார்கள். கவர்னர் அவர்கள் கடைசியாக கூறியிருக்கிறபடி, எதிரி நம் தலைவாசலில் நின்று கொண்டிருக்கும்போது நம்மிடையே கருத்து வேறுபாடுகள் இருந்தால் அவற்றை எல்லாம் மறந்து ஒன்றாக நின்று எதிரியை விரட்டியடிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆக, நாம் ஒற்றுமையாக இருந்து இன்று போல் என்றுமே நம் நாட்டின் சுதந்திரத்தை, நாட்டின் தன்மானத்தை காக்க, நாட்டைப் பாதுகாக்க, நம் நாட்டின் பொருளாதார நிலையைப் பெருக்குவதற்கு இன்று போல் என்றுமே ஒற்றுமையுடன் செயலாற்ற வேண்டும். நாட்டின் பணி அதுதான் என்று கூறிக்கொண்டு எனக்கு பேச சந்தர்ப்பம் அளித்ததற்கு என் நன்றியையும் தெரிவித்துக்கொண்டு முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.





* **திரு. ரா. வ. வீரப்ப செட்டியார்:** கனம் சபாநாயகர் அவர்களே, கவர்னர் பெருமான் அவர்கள் ஆற்றிய உரையின் மீது நான் சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். இந்த நெருக்கடியான நேரத்தில் பஞ்சாயத்துக்களுக்கும், பஞ்சாயத்து யூனியன்களுக்கும் முக்கியமான பணி கொடுத்திருப்பது பற்றி பெருமை கொள்வதோடு நன்றியும் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த நெருக்கடியான சந்தர்ப்பத்தில் உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்று உரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்றால் அரசாங்கம் விவசாயிகளுக்கு வேண்டிய சலுகைகள் கொடுக்க வேண்டும். நடப்பாண்டில் 4.85 லட்சம் டன் உணவு தான்ய உற்பத்தி செய்ய வேண்டுமென்ற குறிக்கோள் இருக்கிறது. இதற்காக அநேக நீர்ப்பாசனத் திட்டங்கள் செய்ய இயலாமல் இருக்கிறது. ஏனெனில், (Food Value) டன் ஒன்றுக்கு ரூ. 2,000 என்று மதிப்பீடு இருப்பதால் அநேக சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள் இந்த மதிப்பில் வராத காரணத்தால் செய்ய முடியவில்லை. ஆகையால் இந்த டன் வால்யூவை ரூ. 5,000 ஆக உயர்த்தினால் அநேக நீர்ப்பாசனத் திட்டங்களைச் செய்ய முடியும். அதனால் விவசாய உற்பத்தியும் பெருகும் என்பது என் கருத்து. மேலும் அநேக காலமாக அமுலுக்குக் கொண்டு வரப்படாமல் இருக்கும் நீர்ப்பானத் திட்டங்களை இந்த சந்தர்ப்பத்திலாவது அமுலாக்க முன் வந்தால் ஆயிரக் கணக்கான ஏக்கர் நிலங்களை நஞ்சை சாகுபடிக்குக் கொண்டு வந்து விவசாய உற்பத்தியை அதிகரிக்கலாம் என்பது என் கருத்து. எனது தொகுதியில் வெகு காலமாக இரண்டு திட்டங்கள் அமுலாகாமல் இருக்கின்றன. பன்முறை அதை எடுத்துச் சொல்லியும் அதை அரசாங்கம் அமுலுக்குக் கொண்டு வரவில்லை. இந்த சந்தர்ப்பத்திலும் அதைச் சொல்ல முன் வருகிறேன். அவை, சின்னார், தொப்பையாறு திட்டங்கள். அவற்றை அமுலுக்குக் கொண்டு வந்து இந்த நெருக்கடியைத் தீர்க்குமளவில் ஒரு வாய்ப்பினை எங்கள் பகுதியில் உள்ளவர்களுக்கும் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(திரு. கோ. வெங்கட்ராமன் அவர்கள் தலைமை.)

அதோடு விவசாயத்திற்கு மின்சாரம் கொடுப்பதில் அதிக காலதாமதம் ஏற்படுகிறது. ஆகவே மின்சாரத்தை அவ்வப்போது கொடுத்தால் உணவு உற்பத்தியைப் பெருக்க இது ஒரு சாதனமாக அமையும் என்பது என் கருத்து. அடுத்தபடியாக, நீர்பாசனத் துறையில் உள்ள என்ஜினியரிங் டிப்பார்மெண்டார் நீர்பாசனத் திட்டங்களைப் பரிசீலிப்பதில் மிகக் காலதாமதம் ஏற்படுகிறது. திட்டங்களை பரிசீலிப்பதில், அவற்றை விரைவாக பரிசீலனை செய்ய வேண்டுமென்று அவர்களுக்கு ஆணையிடுமாறு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். நகர்ப்புறங்களில், விறகு, பால் முதலியவை பற்றி கவர்னர் அவர்கள் உரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. மரங்கள் பல நட்டு உற்பத்தி செய்யப்படுவதாக கூறப்பட்டிருக்கிறது. இருப்பினும் நடைமுறையில் ஒரு கூப் காண்ட்ராக்டர் ஐந்து மைல் விஸ்தீர்ணத்திற்கு காண்ட்ராக்ட் எடுத்திருந்தால் 20, 25 மைல் விஸ்தீர்ணத்திற்கு காடுகளில் இருந்து விறகை வெட்டிக் கொண்டு போவதாக இருக்கிறது. [illegible]

[திரு. ரா. சு. வீரப்ப செட்டியார்] [29th January 1968

தவிர்க்க அரசாங்கம் தக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நகரப்புறங்களுக்கு பால் சப்ளைக்காக ஏற்பாடுகள் செய்யப்படவேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதற்காக இப்போது ஈரோட்டில் இருந்து சென்னைக்கு பால் கொண்டு வரும் திட்டம் அமுலில் இருப்பதுபோல் தர்மபுரியிலிருந்து சுமார் 300 லிட்டர் பால் ஒரு நாளைக்கு கிடைக்கும்—அதையும் இங்கு கொண்டு வருவதற்கு ஏற்பாடு செய்தால் இந்த நெருக்கடியைப் போக்க அது ஓரளவு உதவியாக இருக்கும். பின்னர் உருக்குத் தொழிற்சாலை பற்றி கூறியிருக்கிறார்கள். சென்ற ஆண்டு இந்த உருக்குத் தொழிற்சாலை சேலத்தில் நிறுவுவது என்ற பேச்சு இருந்தது. ஆனால் இந்த உரையில் இடத்தைப் பற்றி குறிப்பிடவில்லை. உருக்குத் தொழிற்சாலையை சேலத்தில் நிறுவுவதற்கு அமைச்சர் அவர்கள் முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். அடுத்தபடியாக, பஞ்சாயத்துக்களில் தெரு விளக்குகள் பாதி விளக்குகள்தான் எரிய வேண்டும் என்று உத்தரவிட்டிருக்கிறார்கள். இதனால் பொது மக்களுக்கு கஷ்டம் ஏற்படுவதால் இப்போது 200 மணி நேரம் எரியும் விளக்குகளை 100 மணி நேரம் எரிக்க உத்தரவிட்டால் பொதுமக்களின் சௌகரியம் பாதிக்காது என்பதை நான் அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன்.

11-09 a.m. மேலும் இந்த நெருக்கடியைத் தீர்ப்பதற்கு நஞ்சை நிலங்களுக்கும் புஞ்சை நிலங்களுக்கும் வரி விதிக்கவேண்டும் என்று கவர்னர் அவர்களது உரையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஏற்கனவே விவசாய மக்கள் வரிப்பளுவின் காரணமாக கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். இனியும் வரிகளை விதிக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும். வருவாயை அதிகரிக்கவேண்டும் என்றால், வட்டார வளர்ச்சித் திட்டத்திலுள்ள பல அதிகாரிகளுக்கு இப்போது வேலையில்லாமல் இருந்து வருகிறது. இவர்கள் மூலம் மாதம் ஒன்றுக்கு 2,000, 3,000 ரூபாய் சம்பளமாக கொடுக்கப்பட்டுவருகிறது. இம் மாதிரி பல வட்டார அதிகாரிகளை எடுத்துவிடவோ அல்லது இரண்டு மூன்று வட்டாரங்களுக்குச் சேர்ந்து ஒரு அதிகாரியாகவோ போட்டால் இதன் மூலம் 200 லட்சம் ரூபாய் சேமிப்பு செய்யலாம் என்று தோன்றுகிறது. அதோடு இப்போது இருந்து வரும் மதுவிலக்கை எடுக்கப் போவதில்லை என்று இன்று காலையிலும் அமைச்சர் அவர்களால் சொல்லப்பட்டது. ஆனால் இப்போது இருந்து வரும் மதுவிலக்கை எடுத்துவிட்டால், அதன் மூலம் சுமார் 50 கோடி ரூபாய் அரசாங்கத்திற்கு வருமானம் வரும் என்பதை தெரிவித்துக்கொண்டு எனக்கு இந்தச் சந்தர்ப்பத்தில் பேச வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொண்டு என் வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

*** திரு. வை. சங்கரன் :** கனம் தலைவர் அவர்களே, கவர்னர் பெருமான் அவர்கள் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை ஆதரிக்கும் வகையில் ஒரு சில வார்த்தைகள் சொல்ல முற்படுகிறேன். தற்காப்பு பணிகளுக்காக நம்முடைய நாட்டில் செய்திருக்கிற வேலைகளைப்பற்றியெல்லாம் நல்லமுறையில் கவர்னர் அவர்கள் உரையில் எடுத்துரைத்திருக்கிறார்கள். உண்மையிலேயே



29th January 1968] [திரு. வை. சங்கரன்]

ரிக்ரூட்டிங் சம்பந்தமாக எவ்வாறெல்லாம் ஏற்பாடுகள் செய்யப் போவதாக கவர்னர் அவர்கள் உரையில் காண்பிக்கப்பட்டிருக்கிறது. யுத்தப்பணிக்காக செல்லும் வீரர்களுக்கு செய்யும் உதவி விஷயத்தில் சில யோசனைகளை சொல்ல விரும்புகிறேன். நம் நாட்டுக்காக சென்றிருக்கும் யுத்த வீரர்களுக்கு, அவர்களுடைய குடும்பத்தினருக்கு நாம் பல சலுகைகளை செய்து வருகிறோம். உண்மையிலேயே, அவர்களுக்கு நாம் மிகவும் முக்கியத்துவம் கொடுக்கவேண்டும். நாட்டிலே அவர்கள் முதல் பிரஜைகள் என்ற முறையில் அவர்களுக்குத் தகுந்த மரியாதை கொடுக்கலாம். இவ்விதம் போய் வந்தவர்களுக்கு தனியாக பாட்ஜ் ஏதாவது கொடுத்து அவர்களுக்கு தனியாக பலசலுகைகளை கொடுக்க வேண்டும். அவர்களது குடும்பத்திலுள்ள குழந்தைகளுக்கு முழு கல்வி சலுகைகள் கொடுக்கவேண்டும். இன்னும் பல்வேறு ஹரிஜனங்கள் பிற்பட்ட வகுப்பினருக்கு கொடுக்கப்படும் கடன் உதவி போன்ற பல சலுகைகளை அவர்களுடைய குடும்பத்தினர்களுக்கு விஸ்தரிக்கவேண்டும். இந்தக் குடும்பத்தினர்களைப்பற்றி யுத்தத்திற்குச் சென்றிருக்கும் வீரர்களுக்கு எந்தவிதமான கவலையும் இல்லாமல் இருக்கவேண்டும். துரதிருஷ்டவசமாக, துர்பாக்கியமாக, யுத்தத்திற்காக சென்றிருக்கும் வீரர்கள் மரணமடைய நேர்ந்தால், தங்கள் குடும்பத்தின் எல்லாவிதமான பொறுப்புகளையும் அரசாங்கம் பார்த்துக்கொள்ளும் என்ற உத்தரவாதம் அவர்களுக்கு இருக்கவேண்டும். அந்த முறையில் அவர்களுக்கும் அவர்கள் குடும்ப சம்பந்தமாகவும், வாழ்க்கைக்காக எல்லாவிதமான வசதிகளையும் உடனடியாக செய்து கொடுக்க வேண்டும். அவர்கள் திரும்பிவந்தாலும் கூட அவர்களுக்கு எல்லாவிதமான வசதியும் செய்து கொடுக்கப்படவேண்டும். அவர்களுக்கு நாட்டில் முதல் கௌரவம் கொடுக்கவேண்டும் என்று சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, எனக்கு முன்னால் பேசிய நண்பர்கள் குறிப்பிட்டது போன்று தங்கக்கட்டுப்பாடு வந்ததின் காரணமாக பல் ஆயிரக்கணக்கான பொற்கொல்லர்கள் (கோல்ட்ஸ்மித்) பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆபரணத் தொழில் செய்பவர்கள் மட்டுமல்ல, ரெடிமேட் ஆபரணங்கள் செய்து வைத்து வியாபாரம் செய்துவரும் எங்கள் பக்கத்தில் உள்ள செட்டியார் சமூகத்தினரும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். முக்கியமாக ஆபரணத் தொழில் செய்கின்ற ஆசாரி சமூகத்தினர்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். நான் இரண்டாவதாக சொன்ன ஆசாரி சமூகத்தினர் தினசரி கூலிக்கு (பீஸ் மில்) வேலை செய்து தங்கள் வாழ்க்கையை நடத்திக் கொண்டிருப்பவர்கள். இப்போது கொண்டு வரப்பட்ட தங்கக் கட்டுப்பாடு காரணமாக அவர்கள் தொழில் முழுவதும் நின்று விட்டது. அவர்கள் எந்தவிதமான கிளர்ச்சியும் செய்யாமல் இருப்பதே நமக்கு பெரிய அதிர்ஷ்டம் என்று தான் சொல்ல வேண்டும். உதாரணமாக என் தொகுதியில் மட்டும் இவ்வேலையில் ஈடுபட்டிருப்பவர்கள் சுமார் 1,000 2,000 குடும்பங்கள் இருக்கின்றன. இப்பேர்ப்பட்டவர்களுக்கு உடனடியாக அரசாங்கம் ஏதாவது மாற்று வேலை கொடுக்க வேண்டும். இது அரசாங்கத்தினுடைய பிரதான பொறுப்பு.

அவர்கள் வேறு ஏதாவது வேலை செய்துகொள்ளட்டும், பார்த்துக் கொள்ளட்டும் என்று அரசாங்கம் சொல்லிவிடவோ இருந்து விடவோ முடியாது. எனக்கு முன்னால் பேசியவர்கள் குறிப்பிட்டதுபோன்று அவர்கள் நிழலில் இருந்து நுணுக்கமாக வேலை செய்து கொண்டிருந்தவர்கள். இவர்களுக்கு திடீரென்று வெளியில் வந்து கடினமான வேலை செய்வது கஷ்டமாக இருக்கலாம். இதையெல்லாம் பார்த்து, அவர்களுடைய படிப்பு, திறமை, தகுதிகளை தளர்த்தியும், அவர்களுடைய வயது வரம்புகளை தளர்த்தியும் நகரத்திலுள்ள பல மில்களில் வேலை கொடுக்க ஏற்பாடு செய்யலாம். அரசாங்கம் நடத்தக்கூடிய தொழிற்சாலைகளில் எல்லோருக்கும் வேலை கொடுக்க முடியாவிட்டாலும் தனி நபர்களுடைய தொழிற்சாலைகளில் வேலைக்கு அமர்த்துவதற்கு தனிப்பட்ட முதலாளிகளை அரசாங்கம் வற்புறுத்தலாம். ஒவ்வொரு மில்லிலும் இத்தனை பேரை எடுத்துக்கொள்ளவேண்டும் என்று அரசாங்கம் வற்புறுத்த வேண்டும். அவர்கள் இப்போது எந்தவிதமான வேலை செய்வதற்கும் தயாராக இருக்கிறார்கள். பொன் வேலை தான் கொடுக்க வேண்டும் என்று சொல்லிக்கொண்டிருக்கவில்லை. ஆகவே அவர்களுக்கு உடனடியாக மாற்றுவேலை தேடித் தருவதற்கு வழிசெய்யவேண்டும். ஒவ்வொரு இடத்திலும் எவ்வளவு பேர்கள் இவ்விதம் இருக்கிறார்கள் என்று ஸ்தல அதிகாரிகளை பட்டியல் தயார் செய்யச் செய்து அவர்களுக்கு உடனடியாக மாற்றுவேலை தேடிக் கொடுக்கவேண்டியது சர்க்காருடைய கடமை என்று சொல்லிக்கொள்ளவிரும்புகிறேன். இத்தொழிலின் மூலம் தங்கள் வாழ்க்கையை நடத்திவரும் செட்டியார் சமூகத்தினருக்கும் வேறு தொழில், தொழிற்சாலைகள் நடத்துவதென்றால் அதற்கும் உடனடியாக வேண்டிய வசதிகளை செய்து கொடுக்கவேண்டும் என்றும் அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மதுவிலக்கு சம்பந்தமாக அரசாங்கம் எடுத்துக் கொண்டிருக்கும் நிலையை நாம் அனைவரும் பாராட்ட வேண்டும். இன்றைக்கு மதுவிலக்கு இருந்து வருவதின் காரணமாக வெளிப்படையாக வருவாய் இழப்பு இருந்தாலும் மறைமுகமாக வருவாய் பெருமளவு நாட்டில் பெருகி வந்துதான் இருக்கிறது. பல கீழ்தரப்பட்ட மக்கள், அதிலும் குறிப்பாக ஹரிஜனங்கள் அதிகமாக இருக்கக் கூடிய இடங்கள், முக்கியமாக நகரங்களில் தோட்டி வேலை செய்துவரும் தொழிலாளர்கள் வாழும் இடங்கள் இவைகளில் எல்லாம் அவர்கள் வாழும் வீடுகளில் முன்னாட்களில் வெறும் சட்டிப்பானைகளைத்தான் பார்க்கமுடியும். ஆனால் இப்பொழுது நல்ல பித்தளை பாத்திரங்களைப் பார்க்கின்றோம். பசுமாடுகள் முதலியவைகள் கூட வாங்கிவிட்டிருப்பதையும் நாம் பார்க்கின்றோம். இதை யெல்லாம் கணக்கிட்டுப் பார்த்தால் நமது ராஜ்யத்தில் பல நூறு கோடிக்கணக்கான ரூபாய் வருவாய் ஏற்பட்டிருக்கிறது என்று நான் சொல்லவேண்டும். ஆகவே யார் எதைச் சொன்னாலும் நாடு அழிவதே ஆனாலும் இந்த மதுவிலக்குக் கொள்கையை கைவிட்டுவிடக்கூடாது என்பதை வலியுறுத்திச் சொல்லிக்கொள்ளவிரும்புகிறேன். திருட்டுத்தனமாக ஒன்றிரண்டு இடங்களில் மது அருந்துகிறார்கள் என்று சொல்லப்படுவதால் இந்தத் திட்டமே தோல்வி அடைந்துவிட்டது என்று





சொல்லிவிடமுடியாது. முன்னால் மதுக்கடை இருந்தபோது அதிலிருந்து சுற்றி ஓரிரு ஃபர்லாங் தூரத்தில் மது அருந்தியவர்கள் தங்கள் பெண்களை தெருக்களில் இழுத்துப் போட்டு அடிக்கின்ற கோரக் காட்சிகளை எல்லாம் இப்போது நம்மால் பார்க்க முடியாது. ஆகவே மது விலக்குக் கொள்கையை தளராமல் கைக்கொண்டிருக்கும் நமது அரசாங்கத்தை குறிப்பாக நமது முதல் அமைச்சர் அவர்களை நான் மிகவும் பாராட்ட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, ஐந்தாண்டுத் திட்டம் சம்பந்தமான பல்வேறு டெவலப்மெண்ட் திட்டங்களையும் குறைக்கப்போவதில்லை என்று சொல்லப்பட்டிருக்கிறது. கல்வி சம்பந்தமாகவும் எதையும் குறைக்கப்போவதில்லை என்று பல அறிக்கைகளில் சொல்லப்பட்டிருக்கிறது. மதுரையைப் பொறுத்த வரையில், சர்வகலாசாலை ஏற்படுத்துவது சம்பந்தமாக மூன்றாவது திட்ட காலத்தில் ஏற்படுத்துவதற்கில்லை என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் இதை ஒரு டெவலப்மெண்ட் பிராஜக்ட் என்ற முறையிலேயே எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். சர்வகலாசாலையைப் பொறுத்தமட்டில், "டெக்னிகல் எட்யூகேஷன்" தற்போது நமக்கு மிகவும் முக்கியமானது. ஆகவே வேண்டுமானால் "அவசரகாலம்" (எமர்ஜென்ஸி) வரைக்கும் அல்லது அது முடிந்து சில மாதங்களுக்கு தள்ளி வைக்கலாம். அதற்காக இப்பொழுதே ஒட்டுமொத்தமாக மூன்றாவது திட்ட காலத்திலேயே ஏற்படுத்துவதற்கில்லை என்று சொல்லிவிடக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன். ஏனெனில் அதிர்ஷ்டவசமாக "அவசர காலம்" என்பது இன்னும் ஒரு சில மாதங்களிலேயே முடிந்துவிடலாம். ஆகவே அவசர காலத்திற்கு மட்டும் தள்ளி வைத்துக் கொள்ளலாம்; ஒரேயடியாக தள்ளி வைத்துவிட வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு "மில்க் பிளாண்ட்" (பால்பண்ணைத் திட்டம்) சம்பந்தமாகவும் உடனடி நிறுவ வேலைகள் எடுத்துக்கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அதே போன்று பல பெரிய ப்ராஜெக்ட்டுகள் நம் ராஜ்யத்தில் மூன்றாவது திட்டத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன. தூத்துக்குடி துறைமுகத் திட்டம், உருக்காலைத் திட்டம், தாம்பரம்—விழுப்புரம் மின்சார ரயில் திட்டம், சேலம்-பங்களூர் இருப்புப் பாதை இணைப்புத் திட்டம் என்று இப்படி பல திட்டங்களை நாம் உருவாக்கி வைத்திருக்கிறோம். இந்தத் திட்டங்களெல்லாம் காலதாமதமின்றி சீக்கிரத்தில் நிறைவேற்றப்படவேண்டும். நாஷனல் எமர்ஜென்ஸி என்ற சாக்கில் இவைகளை தாமதப்படுத்தக் கூடாது. இவைகளெல்லாம் அடிப்படை அவசியமாக இருக்க வேண்டிய, நிறைவேற்றப்படவேண்டிய திட்டங்கள் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக நிறுத்தல் சம்பந்தமாக ஏப்ரலிலிருந்து புது முறை வருகிறது. உணவுப் பொருள்கள் சம்பந்தமாக நிறுத்தலா அல்லது முகத்தலா என்ற சர்ச்சை இருக்கிறது. அதாவது லிட்டர் முகத்தல் முறையில் வைத்துக்கொள்வதா அல்லது கிலோ கிராம் முறையில் வைத்துக்கொள்வதா என்ற சர்ச்சை இருந்து

வருகிறது. ஒரு சில இடங்களில் இரண்டையும் வைத்துக் கொள்ளலாம் என்று அதிகாரிகள் டைரக்ஷன் கொடுத்திருப் பதாகத் தெரிகிறது. அரிசி, நெல் போன்றவைகள் சம்பந்தப் பட்ட வரையில் நிறுத்தல் முறைதான் நன்றாக இருக்கும். முகத்தல் முறை இருக்கும்போது 54 அல்லது 60 தடவைகள் லிட்டர் போன்ற படி போட்டு அளக்கும்போது, ஏதாவது சிறு தவறு அந்தப் படியில் இருந்தாலும் மொத்தத்தில் 56 தடவைகள் தவறுதல்கள் நேருகிறது. மூட்டையைப் பூராவாக ஒரே தடவை யில் நிறுக்கும்போது அப்படித் தவறு ஏற்பட்டாலும், ஏற்படக் கூடிய தவறு ஒரே தடவையாக சிறியதாகத்தான் இருக்கும். ஒரு சில வியாபாரிகள் உணவு தானியங்களைப் பதப்படுத்துவதால் அதனால் வால்யூம் அதிகமாகக் காட்டக் கூடிய நிலை இருக்கிறது. நிறுத்தல் அளவை வைத்துக் கொண்டால் இந்தக் குறைகளை பெருமளவு போக்கலாம். பால், எண்ணெய் போன்ற திரவங்களுக்கு வேண்டுமானால் லிட்டர் அளவு—முகத்தல் அளவு—வைத்துக் கொள்ளலாம். உணவுப் பொருள்கள் விஷயத்தில், நெல், அரிசி, பருப்பு இவைகள் விஷயத்தில் ஒரே மாதிரியான நிறுத்தல் அளவு தான் இருக்கவேண்டும் என்று உத்திரவுகள் பிறப்பிக்கவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு நெல்லிலே ஒரு சிலர் பதரைக் கலந்து விடுகிறார்கள். பதர் இடை மிகக் குறைவானதால் நிறுத்தல் முறை இருந்தால் இதுபோன்ற கலப்பினால் கூட அதிக மாக பாதகம் கூட ஏற்படாது. ஏப்ரல் மாதத்தில் அமுலுக்கு வர இருப்பதால் இதையும் கவனித்து தகுந்த உத்திரவுகள் பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக சேல்ஸ்-டாக்ஸ் சம்பந்தமாக, ரூல்ஸ் பழைய படி திருத்தி அமைக்கப்படப் போகிறது. வரி விதிப்பு சம்பந்த மாக முறையில் அவசியம் என்று தெரியவரும் பல திருத்தங்கள் கொண்டுவர சட்டத்தை மாற்றவோ அல்லது விதிகளை மாற்றவோ நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளவேண்டும். குறிப்பாக, நெல் சம்பந்தமாக எடுத்துக்கொள்ளும்போது, நெல்லுக்கு வரி இருப் பதை எடுத்துவிட்டு அரிசி முனையில் வரியைப் போட்டுவிட்டால் குறிப்பாக விவசாயிகளுக்கு தற்போது இருக்கும் பாதிப்பு நீங்கி விடும். இது சம்பந்தமாக அமைச்சர் அவர்களிடத்தில் நான் பல தடவைகள் சொல்லியிருக்கிறேன். மறு முறை இந்தச் சட்டத் திற்கு வேண்டிய திருத்தங்களைப் பற்றி நன்றாகப் பரிசிலனை செய்து அவசியமான புதிய திருத்தங்கள் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக கோடை அபிவிருத்தி சம்பந்தமாக, அங்கே காஸ்மிக் ரிஸர்ச் ப்ளாண்ட் வைப்பதாகச் சொல்லப்பட்டிருக் கிறது. இம்மாதிரி ஒரு சில அபிவிருத்திகள் இருந்தால் மட்டும் போதாது. பெரிய பெரிய தொழில்களை ஏற்படுத்தி, மக்களை அங்கே ஈர்க்கும் நிலையில் அபிவிருத்தி செய்யப்படவேண்டும். அந்த மாதிரி இல்லாமல் ரிஸர்ச் ஸ்டேஷன் வைப்பதால், அல்லது சைனிக் ஸ்கூல் வைப்பதால் அங்கே ஒருசில நூறு பேர்தான் அதிகரிப்பு ஏற்பட முடியும். அதிகப்படியான மக்களை வர வழைக்கக் கூடிய முறையில், அங்கே நல்ல சிறந்த பல தொழில் களை அமைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





சிமெண்ட், ஷுகர் சம்பந்தமாக எடுத்துக்கொள்ளும்போது, சிமெண்டில் பற்றாக்குறை இருப்பதால் அதிலுள்ள ஊழலைப் போக்க முடியவில்லை. அதனுடைய விலை 6—7 ரூபாய் என்று இருந்தால், வெளியிலே 14 அல்லது 16 ரூபாய்க்கு குறைந்து கிடைக்கவில்லை. எங்கு பார்த்தாலும் பெரிய கூக்குரலாக இருக்கிறது. இதற்கு ஆங்காங்கு ஒரு அட்வைசரி கமிட்டி ஏற்படுத்தி பொது மக்களுடைய பிரதிநிதிகளைப் போட்டு அவ்வப் போது யோசனை சொல்லக் கூடிய முறையில் விநியோகம் செய்ய லாம் என்று சொல்லிக்கொள்கிறேன். அதே போன்று ஷுகர் விஷயத்திலும் தேவைப்பட்டால் செய்யவேண்டும்.

லாண்ட் அக்விஸிஷன் ஆக்ட் சம்பந்தப்பட்ட வரையில் பப்ளிக் பர்பஸுக்கு அக்விஸிஷன் செய்வதில் தற்போது கால தாமதம் ஆகிறது. பப்ளிக் பர்பஸுக்குச் செய்யும் போது உடனடியாகக் கைவசம் எடுத்துக்கொள்வதற்கு ஏற்றமுறையில் சட்டத்தைத் திருத்தியமைக்கவேண்டுமென்று சொல்லிக்கொள்ள ஆசைப்படு கிறேன்.

ஸ்லம் க்ளியரன்ஸ் சம்பந்தமாக நகரங்களில் இதுவரை மதுரையில் எந்தவித நடவடிக்கையும் கடந்த மூன்று ஆண்டுகளில் எடுத்துக்கொள்ளப்படவில்லை. உடனடியாக அங்கே திட்டங்களை நிறைவேற்றவேண்டும் என்று கேட்டுக்கொண்டு எனது உரையை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. வி. எல்லம்ம நாயுடு:** கனம் தலைவர் அவர்களே, கவர்னர் பெருமான் உரைக்கு நன்றிதனை தெரிவிக்கும் நேரத்தில் என் னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

அவருடைய உரையின் முற்பகுதியிலே, இந்த நாட்டின் மீது கம்யூனிஸ்ட் ஏகாதிபத்தியம் ஆக்கிரமிப்புச் செய்துள்ளதை வன்மை யாகக் கண்டிக்கும் முறையிலே இந்த நாட்டு மக்கள் நல்லாதரவு கொடுத்துள்ளதைப் பாராட்டியிருக்கிறார். இந்த நாட்டு மக்கள், தமிழக மக்கள், தலைவர்களிடம் நல்ல நம்பிக்கை வைத்தவர்கள். உதாரணமாக மத்திய அமைச்சரவையிலேயும், மாநில அமைச்ச ரவையிலேயும் உள்ள அமைச்சர்கள் மீது இணையில்லாத மதிப்பு வைத்தவர்கள். இந்த நாட்டை விட்டு அன்னிய ஆக்கிரமிப்பு நிறுத்தப்பட்டு வாபஸ் பெறப்படுகிறது என்றால் அதற்குக் காரணம் இந்த நாட்டு மக்களின் எழுச்சி. அதோடு நாட்டு மக்களின் எழுச்சி இந்த நாட்டிலே உள்ள எல்லாக் கட்சிகளையும் ஒன்றுபடுத்திவிட்டது என்று சொன்னாலும் கூட அது மிகை யில்லை. இந்த நாட்டின் முன்னேற்றப் பாதையிலே அரசாங்கத் திற்கு ஆதரவாக இல்லாத நண்பர்களும் கூட, நாட்டு மக்களின் எழுச்சியைப் பார்த்து, தமிழக மக்களின் எழுச்சியைப் பார்த்து, நாமும் இந்த சந்தர்ப்பத்தில் ஒத்துழைக்காவிட்டால் மக்க ளுடைய ஆதரவு நமக்கு இருக்காது என்று தங்களுடைய போக்கை மாற்றிக்கொள்ளும் அளவுக்கு உறுதுணையாக இருந்த நாட்டு மக்களை பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். நமது மக்களுக்கு தலைவர்கள்பால் அன்பு, தமிழக முதலமைச்சர், அமைச்சரவை மற்றும் மத்திய அமைச்சரவை எல்லாரிடத்திலும் அன்பு இருக்கிறது. அதனால் இன்றைய தினம் எல்லோரும் ஒன்று

[திரு. வி. எல்லம்ம நாயுடு] [29th January 1963

பட்டு விட்டோம். ஒன்றுபட்ட இனத்தைப் பார்த்து அன்னியர்கள் பயப்பட்டு விட்டார்கள். ஆக்கிரமிப்பை நிறுத்தி விட்டார்கள் அதற்குக் காரணமாக உள்ள தலைவர்களைப் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறோம். அதோடு அவர்கள் உரையிலே அபிவிருத்தித் திட்டங்களைப் பற்றி, யுத்தம் ஏற்பட்டிருக்கும் நிலையிலே கூட, அவைகளை நிறுத்தி வைக்கவேண்டாம், அவைகளை நல்ல முறையில் நிறைவேற்ற ஆவன செய்யவேண்டும் என்று சொல்லியிருக்கிறார். அபிவிருத்தித் திட்டத்திலே குறிப்பாக கிராம பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன்கள் இங்கு நன்கு செயல்பட்டு வருகின்றன. அவர்களுடைய சேவை, அவர்களுடைய பணி, பயன்படத் தக்கதாக இருக்க வேண்டும் என்று சொல்லியுள்ளார்கள். கிராமப் பஞ்சாயத்துக்களும், பஞ்சாயத்து யூனியன்களும் 26-ம் தேதியன்று தமிழகம் முழுவதும் கிராமவாரியாக, யூனியன் வாரியாக, நகரவாரியாக குழுக்களையும் பாதுகாப்புத் தொண்டர்களையும் ஏற்படுத்தியிருக்கின்றன. அவைகள் நல்ல முறையில் பணிபுரியவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். உற்பத்தியை அதிகப் படுத்தவேண்டுமென்று குழுக்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. கிராமங்கள் தோறும் விவசாயத்தை அதிகரிக்கவேண்டுமென்று இந்தக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. சர்க்கார் தரிசு, புறம்போக்கு இவைகளெல்லாம் ஏகதேசமாக ஒன்றும் சும்மா இல்லை. யாரோ ஒருவர் ஆக்கிரமித்திருக்கிறார்கள். அவைகளெல்லாம் யாராவது ஒருவருடைய ஆக்கிரமிப்புக்கு உட்பட்டிருக்கும். அத்தகைய ஆக்கிரமிப்புகளை அப்புறப்படுத்தி அந்த நிலங்களை பஞ்சாயத்துக்களிடம் அல்லது பஞ்சாயத்து யூனியன்களிடம் ஒப்படைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொண்டால் உற்பத்தி அதிகரிக்க வசதியாக இருக்கும். அதே நேரத்தில் ஹரிஜன மக்களுக்கு கிராமப் பஞ்சாயத்துக்களும் பஞ்சாயத்து யூனியன்களும் பணி புரியவேண்டிய நிலை இருக்கிறது. எங்கு பார்த்தாலும், எல்லா கிராமங்களிலும் இட நெருக்கடி ஏற்பட்டு வாழக் குடிசையின்றி தவிக்கிறார்கள். அத்தகைய மக்களுக்கு வசதி செய்துகொடுக்க நிலத்தை எடுத்துக்கொள்ள யோசித்து அதற்கு நடவடிக்கை எடுத்தால் அந்த நிலச் சொந்தக்காரர்கள், அவைகளை எடுக்க வகை இல்லாதபடி அப்பீல்களும், விண்ணப்பங்களும் போட்டு, அதன்மீது கிணறு வெட்டி, கோவில்கள் கட்ட முயற்சி செய்கிறார்கள். இவைகளைப் போக்க முயற்சி செய்யவேண்டும். அப்படிப் பார்க்கும்போது, சர்க்கார் தரிசு நிலங்களை ஆக்கிரமித்துள்ளவர்களை அகற்றுவதற்கும் நிலங்களை எடுத்துக்கொள்வதில் முட்டுக்கட்டையாக இருப்பதை தடுப்பதற்கும் இப்போது இருக்கக் கூடிய சட்டங்களை மாற்றி அமைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களும், மத்தியதர நீர்ப்பாசனத் திட்டங்களும், இப்பொழுது நடைபெறும் முறையைக் காட்டிலும் சற்று வேகமாக நடைபெறுவது அவசியமாக இருக்கும். எனக்கு முன்பு பேசிய பல நண்பர்கள் அதைப்பற்றிச் சொல்லிவிட்டார்கள். இருப்பினும், சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களை ஓராண்டு, இரண்டு ஆண்டுகள் என்று காலம் கடத்துவதை



29th January 1963] [திரு. வி. எல்லம்ம நாயுடு]

விட்டு, குறுகிய காலத்தில் அதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுப்பதற்கு ஆவன செய்யவேண்டும் என்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

உணவுப் பொருள் உற்பத்தியை அதிகப்படுத்தவேண்டும் என்ற முறையிலே இதற்கு முன்பு பேசிய நண்பர்கள் சொன்னார்கள். விலைவாசி அதிகரித்துவிட்டது உணவுப் பொருள்களுக்கு என்று சொன்னார்கள். அது உயர்ந்த காலம் இன்று இல்லை. அறுவடை காலத்தில் நெல்விலை மிக மிகக் குறைந்துவிட்டது. இப்பொழுது சென்று பார்த்தாலும் கூட அது தெரியவரும். இந்த விலை விவசாயிகளுக்கு ஒரு பெரிய கஷ்டமான நிலையை உண்டு பண்ணியிருக்கிறது. எல்லாவிதமான பொருள்களின் விலைகளும் ஏறத்தான் செய்கிறது. ஆனால் விவசாயிகளின் உற்பத்திப் பொருள்களின் விலை, நெல் விலை குறைந்துவிட்டது. கூட்டுறவு சங்கங்களை வைத்து விலைகளை அதிகப்படுத்தாமல் தடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருப்பது போலவே, உணவுப் பொருள்களின் விலை ஒரு குறிப்பிட்ட அளவுக்கு கீழே போகாமல், அதை தடுத்து நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ளுவது அவசியமாக இருக்கும். கூட்டுறவு சங்கங்கள் மூலமாகவே கூட இதைச் செய்யலாம். நெல் விலை என்று ஒரு தொகையைக் குறிப்பிட்டு, அதற்குக் கீழே நெல் விலை போகாமல் கூட்டுறவு சங்கங்கள் மூலமாகவோ அல்லது சர்க்கார் உணவுப் பொருள்கள் வாங்கும் இலாகா மூலமாகவோ, அதை வாங்குவதற்கு நாம் ஏற்பாடு செய்யவேண்டும்.

கோவை ஜில்லாவில் மின்சாரம் விவசாயிகளுக்கு இன்றியமையாத ஒன்று. இப்பொழுது இருக்கும் நிலையைப் பார்த்தால் ஏப்ரல்-மே மாதங்களில் கூட சிறிது கஷ்டம் ஏற்படலாம் என்று கவர்னர் அவர்களின் உரையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதைத் தீர்க்கும் பொருட்டு, நெய்வேலி போன்ற இடங்களில் அனல் மின்சார நிலையங்களை உடனடியாக ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்து, அந்த மின்சாரத் தட்டுப்பாட்டை நீக்குவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மின்சார அபிவிருத்திக்காக நாம் ஒதுக்கியுள்ள தொகையை எந்தக் காரணத்தைக்கொண்டும் குறைக்கக்கூடாது. இந்த அவசர காலத்திலும்கூட மின்சார உற்பத்தி தடைபடாத முறையிலே நாம் நடந்து கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

சுகாதாரமும், மருத்துவமும் மிகவும் இன்றியமையாதது. அந்த இரண்டு இலாக்காக்களையும் இணைப்பது பற்றி எனக்கு முன்பு பேசிய மாதா கவுடர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அந்த இரண்டு இலாக்காக்களும் இணைக்கப்படும் என்ற குறிப்பு கவர்னர் அவர்களின் உரையிலே காணப்படுகிறது. அந்த இலாக்காக்களை இணைக்காமல் தனித்தனியாக இயங்க விடுவதுதான் நலம் என்றும், அப்படி இணைத்தால் அவைகள் சரியாக நடக்காது என்ற கருத்தைச் சொன்னார்கள். மாதா கவுடர் அவர்கள் அது உண்மை தான். அந்த இரண்டு துறைகளும் தனித்தனியாக இயங்குவதற்கு நாம் வகை செய்தாகவேண்டும்.

[illegible]யாக நஞ்சை நிலங்கள் மீதும், புஞ்சை நிலங்கள் மீதும் [illegible]சல வரி விதிக்கலாம் என்ற யோசனை கூறப்பட்டிருக்கிறது. எனக்கு முன்பு பேசிய நண்பர்கள் அதைப்பற்றி அஞ்சியதுபோல், நானும் அதை அவ்வளவாக விரும்பவில்லை. காரணம் இப்பொழுது ஏராளமான வரிகளை நாம் விதித்திருப்பதாக மக்கள் கருதுகிறார்கள். ஒரு பக்கத்திலே அபிவிருத்தி வரிகள் என்ற பெயரினாலே பஞ்சாயத்துக்களும், பஞ்சாயத்து யூனியன்களும் அதிகப்படியான வரிகளை விதித்திருக்கின்றன. இன்றைக்கு நஞ்சை நிலத்திற்கு ஒரு ஏகராவுக்கு 5 ரூபாய் வரையிலும், புஞ்சை நிலத்திற்கு 2 ரூபாய் வரையிலும் வரி விதிக்கப்படுகிறது. வரியை இனி மேலும் அதிகப்படுத்திக்கொண்டே போனால் பஞ்சாயத்துக்கள் விதிக்கும் வரி, அரசாங்கம் விதிக்கும் வரி என்று வரிப்பளு அதிகரித்துவிடும் என்று நான் அஞ்சுகிறேன். அதுகுறித்து வேறு துறையிலே வருமானத்தை சரிக்கட்ட அரசாங்கம் யோசனை செய்தால் நலமாக இருக்கும். பஞ்சாயத்து யூனியன்கள் அபிவிருத்தித் திட்டங்களை நிறைவேற்றுவதற்காக உள்ள ஊழியர்கள் அதிகமாக உள்ள பிரதேசங்களில், அவர்களுடைய வேலைகளைக் குறைத்துக் கொண்டு, 3, 4 இலாக்கக்கள் இருக்கும் இடத்தில், அவைகளை ஒன்றிரண்டு இலாக்காக்களாக ஆக்கி, அதன் மூலம் அரசாங்கத்தின் வருவாயை நாம் அதிகரித்துக்கொள்ளலாம். அந்த ஊழியர்களுக்கு இந்த அவசர கால நேரத்திலே உள்ள வேலைகளைக் கொடுத்து உதவலாம். அதே நிலையிலே யூனியன்களிடமுள்ள ஜீப் போன்ற வாகனங்கள் பற்றியும் கூட கட்டுப்படுத்துவது நலமாக இருக்கும். அப்படி கட்டுப்படுத்தும்பொழுது அரசாங்கத்திற்கு ஒரு துறையிலே செலவும் குறையும், அரசாங்கத்திற்கு போக்குவரத்து வசதியும் அதிகமாகக் கிடைக்கும். இது பற்றி அரசாங்கம் யோசிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அவசரகால நிலையிலே தமிழ் நாட்டிலே குறிப்பாக கிராமங்களிலே பிரசாரம் மிக இன்றியமையாத ஒன்றாகும். இரண்டு, மூன்று நாட்களுக்கு முன்பு நடந்த கோவை ஜில்லா பாதுகாப்பு கவுன்சில் கூட்டத்தில் இந்த விஷயம் ஞாபகத்திற்குக் கொண்டுவரப்பட்டது. இப்பொழுதுள்ள பிரசார வசதியானது போதாது என்ற குறை அந்தந்த இலாகாவிலுள்ள அதிகாரிகளினால் சுட்டிக்காட்டப்பட்டது. ஒவ்வொரு ஜில்லாவிலும் இப்பொழுது உள்ளதைக் காட்டிலும், அதிகமான வாகன வசதிகள் செய்துகொடுக்கப்படவேண்டும். இப்பொழுது கோவை ஜில்லாவிற்கு ஒரு வாகனம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த வாகனத்தை வைத்துக்கொண்டு எவ்வாறு பிரசாரம் செய்யப்படுகிறது என்பதைப் பார்த்தால் மிகவும் கஷ்டமாக இருக்கிறது. அதை மனதில்கொண்டு, தமிழ் நாட்டு முழுமைக்கும் அம்மாதிரி நிலைமை இல்லாமல், அவசர நிலையிலே தேசிய பாதுகாப்புத் துறையிலே பிரசாரம் மிக வேகமாக செய்யப்படவேண்டும். அந்த முறையில் பிரசாரத் துறை அவசரமாக, அவசியமாக செயல்படவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். நமது ஆட்சியானது நல்ல முறையில் நடைபெற்றுவருவதைப் பாராட்டு[illegible]





கூட, கவர்னர் அவர்களின் உரையை வரவேற்று, அதற்கு நன்றி தெரிவித்துக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

* திரு. கோ. சி. மணி : கனம் தலைவர் அவர்களே, கவர்னர் பெருமானின் உரையின் மீது இன்றையதினம் விவாதம் நடந்து கொண்டிருக்கிறது. ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களானாலும் எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்களானாலும், இந்த உரையிலே எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிற கருத்துக்களைப் பொறுத்த வரையில், அவர்களிடையே ஏறத்தாழ ஒரேபடியான கருத்துக்களாக காணப்படுகிறது. குறிப்பாக ஆளும் கட்சியில் இருப்பவர்கள், நெருக்கடியை உத்தேசித்து எதிர்கட்சியினராகிய நாங்கள் எங்களுடைய கொள்கையை தாற்காலிகமாக ஒதுக்கி வைத்துவிட்டு அவர்களை ஆதரிக்கிற நிலைமையைப் பாராட்டிப் பேசியிருக்கிறார்கள். அவர்கள் அப்படிப் பேசியிருந்தாலும், கீழ்மட்டத்திலுள்ள காங்கிரஸ்காரர்கள் முழு மனதோடு அந்த நிலைமையைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்களா என்று பார்க்கும்பொழுது, உள்ளபடியே வருந்தப்படவேண்டிய நிலைமை தான் தென்படுகிறது. அந்த அளவுக்கு சில நிலைமைகளை ஆங்காங்கு இருப்பவர்கள் உற்பத்தி செய்கிறார்கள். குறிப்பாக நான் இதை எடுத்துச் சொல்லுவதற்கான காரணம், சம்பந்தப்பட்ட அமைச்சர்களும், பெரும்பாலான மேல்தசப்பட்ட காங்கிரஸ் உறுப்பினர்களும் இங்கே இருக்கிறார்கள். குறிப்பாக எங்கள் மாவட்டத்திலே சுற்றுப்பிரயாணம் செய்துகொண்டு கனம் தொழில் அமைச்சர் அவர்களும், நிதி அமைச்சர் அவர்களும் நிதி திரட்டுவதற்காக வந்தார்கள். அவர்களுடைய வருகையை எதிர்பார்த்து நாங்களெல்லாம் பஞ்சாயத்து யூனியன் மன்றத்தின் சார்பாக கட்சி வேறுபாடு அன்னியில், அந்தத் தொகுதிகளுடைய சட்டமன்ற உறுப்பினர்கள் என்ற முறையில், நமக்கு வந்திருக்கிற போராபத்தை முறியடிப்பதற்காக எடுத்துக்கொள்ளவேண்டிய முயற்சிகளில் இதுவும் ஒன்று என்று கருதி, ஊர் ஊராகச் சென்று தெருத் தெருவாகச் சென்று, வீடு விடாகச் சென்று நிதிவசூலித்து, அவர்கள் வருகிற தினத்தன்று நடைபெற்ற ஊர்வலத்தில் கலந்துகொண்டு, அமைச்சர்கள் ஆற்றுகிற உரையைக் கேட்பதற்கும் சென்றோம். கும்பகோணம் என்னுடைய டிவிஷன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த டிவிஷனில் நடைபெற்ற பொதுக் கூட்டம் நகர காங்கிரஸ் கட்சியின் சார்பாக நடைபெற்ற பொதுக் கூட்டம் என்று அறிவிக்கப்பட்டது. அதிலே அமைச்சர் அவர்கள் பேசியும் அந்தப் பொதுக்கூட்டம் நடந்தபொழுதும், அங்கே வந்திருந்த பஞ்சாயத்து யூனியன் மன்றத்தைச் சேர்ந்த தலைவர்கள் நிதி கொடுத்தும் அன்றைய நிகழ்ச்சியை முடித்தார்கள். ஊர்வலத்தில் நானும் கலந்துக்கொண்டு அமைச்சர்கள் பின்னாலே சென்றேன். நானும் அவர்கூடச் சென்று மேடையின் மீது உட்கார்ந்ததற்குப் பின்னாலே, சம்பந்தப்பட்டவர்கள் மேடையில் ஏறி அது நகர காங்கிரஸ் கட்சிக் கூட்டம் என்று அறிவித்தார்கள். பின்னாலே நான் மனவேதனையுற்று எழுந்திருக்கவேண்டிய நிலைமை அங்கே ஏற்பட்டது. [illegible], [illegible] என்றெல்லாம் [illegible]

நாங்கள் ஏதோ பிரிவினை பேசுகிறோம் என்று சொல்லுகிறார்களே தவிர, தங்களுக்குள்ள வாய்ப்பையும் வசதிகளையும் பயன்படுத்திக்கொண்டு அவர்களே எங்களைத் தாங்களாகவே பிரித்துவிடுகிறார்கள். அப்படிப்பட்ட நிலைமை இனிமேல் ஏற்படாமல் இருப்பதற்காகத்தான் நான் இதை இங்கே எடுத்துக் கூறுகிறேனே தவிர, இது ஒரு குறை என்று கூறுகிறேனே
11-30 a.m. தவிர, இது தவறு என்று கூட நான் குறிப்பிடவில்லை. இது அமைச்சர் அவர்களுக்குத் தெரியாமலும் இருக்கலாம் என்பதை உணர்ந்துதான் நான் இங்கே இதை எடுத்துச் சொல்லுகிறேன். இங்கே கவர்னர் அவர்கள் உரை மீது விவாதம் நடக்கும்போது எதிர்க்கட்சிக்காரர்களாகிய நாங்கள் எந்த அளவுக்கு ஒத்துழைக்கிறோம் என்பதைக் குறித்து அதிகப்படியாக பாராட்டு தெரிவிக்காமல் இருந்தபோதிலும் கூட, வெளியிலே எங்களுக்கு பாராட்டுதல் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இங்கே சட்ட மன்றம் கூடுகிற நேரத்திலே, எல்லாம் எங்கேயாவது பாதிக்கப்பட்ட ஒரு சாரார் தங்களுடைய கூக்குரலை எழுப்பின வண்ணமாகத்தான் இருக்கிறார்கள். முன்பு ஒரு முறை சட்டமன்றம் கூடியபோது அழுகும் பண்டங்கள் விற்கும் வியாபாரிகள் தங்களுடைய கூக்குரலை எழுப்பினார்கள். மற்றும் ஒரு தடவை இந்த மன்றம் கூடியபோது லாரி சொந்தக்காரர்கள் தங்களுடைய கூக்குரலை எழுப்பினார்கள். இப்பொழுது இந்த அவை கூடுகிற நேரத்தில் இந்த மாநிலத்திலுள்ள பொற்கொல்லர்கள் தங்களுடைய கூக்குரலை எழுப்ப ஆரம்பித்திருக்கிறார்கள். இப்படி சட்டமன்றம் கூடும்பொழுதெல்லாம் ஏதாவதொரு பகுதியினர் பாதிக்கக்கூடிய அளவுக்கு சட்டத் திட்டங்கள் கொண்டுவரப்படுகின்றன. டில்லியிலே கொண்டுவரப்பட்ட சட்டத்திற்கும் இந்த மாநிலத்திலே உள்ளவர்களுக்கும் சம்பந்தம் உண்டா என்றால், சம்பந்தம் இருக்கத்தான் செய்கிறது. பொற்கொல்லர்கள் ஒரு ஜாதியைச் சேர்ந்தவர்கள், தனி வகுப்பைச் சேர்ந்தவர்கள் என்றெல்லாம் சொல்லப்படுகிறது. எல்லா மதத்தைச் சேர்ந்தவர்களும் இந்தத் தொழிலிலே ஈடுபட்டிருக்கிறார்கள். ஒரு சிலர் தான் என்று கருத முடியாது. மெருகு கொடுப்பவர்கள், கம்பி இழுப்பவர்கள் என்று பார்க்கும்பொழுது ஒவ்வொரு சிறிய கிராமத்திலும் பத்து, பதினைந்து குடும்பங்கள் இருக்கத்தான் செய்கின்றன. நான் இங்கே ரயில் ஏறி வரும்பொழுது ஒவ்வொருவராக என்னை சந்தித்து, இதற்கு ஏதாவது ஒரு பரிகாரம் தேடித்தாருங்கள் என்று அழுத கண்ணீர் சிந்தியவண்ணமாகத்தான் கூறினார்கள். இப்படிப்பட்ட ஒரு நிலையை அமைச்சர் அவர்கள் நன்கு உணர்ந்து தக்க ஒரு பரிகாரத்தைத் தேடுவார்கள் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம். இந்த கவர்னர் உரையானது இந்த தங்கக்கட்டுப்பாடு நிகழ்ச்சிக்குப்பின்னர் உருவாக்கப்பட்டிருந்தும், இது பற்றி இங்கே கவர்னர் அவர்கள் ஆற்றிய உரையில் ஒன்றும் குறிப்பிடாமல் இருந்ததற்கு எங்களுடைய வருத்தத்தை தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

அடுத்தபடியாக, சிறு நீர்ப்பாசனங்களைப் பற்றியும், மத்தியதரப் பாசனத் திட்டங்களைப் பற்றியும், கவர்னர் அவர்கள் உரையிலும் சரி, நிதி நிலை அறிக்கையிலும் சரி, ஒவ்வொரு ஆண்டிலும்





இவ்வளவு லட்ச ரூபாய் செலவழிப்பதற்கு திட்டமிடப்பட்டிருக்கிறது, எதிர்பார்த்த பலன் கிட்டியிருக்கிறது என்றெல்லாம் சொல்லப்படுகிறது. மூன்றும் திட்ட காலத்தில் கூடுதலாக பதினேழு லட்சம் டன் உணவு உற்பத்தி செய்ய வேண்டுமென்று குறிக்கோள் நிர்ணயிக்கப்பட்டிருந்தபோதிலும், திட்டத்தின் முதல் ஆண்டில் 2.04 லட்சம் டன் கூடுதல் உற்பத்தி செய்யப்பட்டிருந்ததைக் குறித்து பாராட்டு தெரிவிக்கப்பட்டிருக்கிறது. பாராட்டுதல் தெரிவிக்கும் அளவுக்கு புள்ளி விவரங்கள் அடிப்படையில் உற்பத்தி இருந்த போதிலும், நடைமுறையில் எந்த அளவுக்கு உணவு உற்பத்தி பெருகியிருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதுவரை வருவாய் துறையின் கண்காணிப்பில் இருந்த சிறு பாசன திட்ட வேலைகளை ஸ்தல ஸ்தாபன இலாகாவிற்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்தப் பொறுப்பு ஸ்தல ஸ்தாபனங்களுக்கு மாற்றப்பட்டாலும், இடையிலே இன்னொரு இலாகா இருப்பதை அமைச்சர் அவர்கள் உணர்ந்திருப்பார்கள் என்று நினைக்கிறேன். பொது மராமத்து இலாகாவிற்கும் நீர்பாசன திட்ட வேலைகளுக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கிறது. பொது மராமத்துத்துறை, வருவாய்த்துறை, இவை இரண்டிற்கும் ஒரே அமைச்சர் இருந்தாலும்கூட, அந்தந்த இலாக்காக்களைப் பொறுத்த வரையில், தனித்தனியாக உயர்தர அதிகாரிகளும், கீழ்த் தர அதிகாரிகளும் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்—இப்படி பல இலாகாக்கள் இருப்பதினால்தான் சில சமயங்களில் இந்த நீர்ப்பாசன வேலைகள் தடைப்பட்டு போகும் நிலைமையும் ஏற்படுகிறது. தூர் எடுப்பது, சிறு மதகுகள் அமைப்பது, வடிகால்கள் அமைப்பது போன்ற வேலைகள் குடிமராமத்து வேலைகளாக கருதப்பட்டாலும் நிலப்பரப்புக்குத் தக்கவாறு நீர்ப்பாசன வசதி செய்து கொடுக்கப்பட்டிருக்கிறதா என்று பார்த்தால், அதற்கு நேர்மாறான நிலைமை தான் ஏற்பட்டிருக்கிறது.

என்னுடைய தொகுதியில் பழவாற்றிலே சிற்றிடையாநல்லூரில் ஒரு ரெகுலேட்டர் இருக்கிறது. பக்கத்திலே ஒரு கால்வாய் இருக்கிறது. அது சிற்றிடையாநல்லூர், திருலோகி, சூரியமலை போன்ற 15 கிராமங்களுக்கு பாய்ந்து திரும்பவும் அதே ஆற்றில் வந்து வடிகாலாக விழுகிறது. அப்படியிருந்தும் அந்தக் கால்வாயில் தண்ணீர் பாய்கின்ற அளவுக்கு தேக்கம் வைக்காமல், அந்த ரெகுலேட்டரை தூக்கிவிட்டு சீர்காழிக்கு பாசனத்திற்காக அந்தத் தண்ணீரைக் கொண்டுசெல்கிறார்கள். சிற்றிடையாநல்லூரில் அடைப்பதற்காக ஏற்பட்ட ரெகுலேட்டரை அடைப்பதில்லை. இதைப்பற்றி வருவாய்த்துறையிலே சொன்னால், மராமத்து இலாகாவிடம் சொல்லவேண்டும் என்கிறார்கள். மராமத்து இலாகாவிடம் சொன்னால், சீர்காழிக்கு தண்ணீர் கொண்டுபோவதற்கு தனி உத்தரவு இருக்கிறது என்று சொல்கிறார்கள். சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் எடுத்துச் சொன்ன போதிலும் இதுவரையிலும் எந்தவிதமான பதிலும் தரப்படவில்லை. பாய்ச்சல் கால் இல்லாமல் எங்கள் தொகுதியில் பலவிதக் கஷ்டங்கள் ஏற்பட்டிருக்கின்றன. மாயவரம் வட்டத்தில் ஆனங்கூரில் வடிகால் இல்லாமல்

பாசனத்திற்கு கஷ்டமாக இருக்கிறது. பெட் டாம் கட்டாமல் இருந்தாலும் சரி, சிறு மதகு ரெகுலேட்டர்கள் இல்லாமல் இருந்தாலும் சரி, அதனால் பாசன வசதி கெடுகின்ற நிலைமை இருக்குமேயானால், அதைச் சீர்படுத்திக் கொடுக்கவேண்டும். கீழ மருத்துவக்குடி, அம்மங்குடி, எலந்துறை, மகாராசபுரம், கடமங்குடி ஆகிய இடங்களிலே வடிகால் வசதி இல்லை. பாய்ச்சக்கால் வசதி இல்லை. பல மகசர்கள் அனுப்பியும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. தீவிர சாகுபடித் திட்டம் எங்களுடைய ஆடுதுறைப் பகுதியில் அமல் நடத்தப்பட்டு வருகிறது. பலவகைகளில் அரசாங்கம் உதவி செய்து கொடுத்தபோதிலும், சில இடங்களிலே வடிகால் வசதி இல்லாததினால் கஷ்டம் ஏற்படுகிறது. ஆகவே இதை நன்கு உணர்ந்து ஆவன செய்யுமாறு நான் அரசாங்கத்தை கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக கவர்னர் அவர்கள் உரையிலே சுகாதாரக் கேடான குடியிருப்புகளின் தொகை அதிகரித்துவருகிறது என்றும், இதனால் பொதுச் சுகாதாரம் பாதிக்கப்பட்டிருக்கிறதென்றும், இக் குறைகளைப் போக்குவதற்காக அரசாங்கம் ஒரு சட்டம் இயற்ற உத்தேசித்திருக்கிறது என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. எவ்வளவோ நல்லெண்ணங்களை மனதிலே வைத்து அரசாங்கம் நல்ல சட்டங்களைச் செய்தாலும் சில சமயங்களில் அது ஒரு பகுதியினருக்கு பாதகத்தை விளைவிக்கிறது. சுகாதாரக் கேடான பகுதிகளில் பெரும்பாலும் ஆதித்திராவிட பழங்குடி மக்களே வாழ்ந்து வருகிறார்கள். கிராமங்களை எடுத்துக்கொண்டால், நடுவயல்களிலும், பள்ளமான இடங்களிலும் அவர்கள் வசித்து வருகிறார்கள். இந்த சட்டத்தை நாம் கொண்டுவந்தோமானால் அந்த பகுதிகளிலிருந்து காலி செய்ய வேண்டியவர்கள் ஆதித்திராவிட மக்களாகத்தான் இருக்கும். அப்படி அவர்களை வெளியேறும்படிசெய்தாலும், அவர்களுக்கு மாற்று இடம் கொடுத்து அவர்கள் தொழிலுக்கும், போக்குவரத்து வசதிக்கும் இடையூறு விளைவிக்காமல் சமீபத்திலுள்ள இடங்களிலே குடியிருப்பு வசதி செய்துகொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நஞ்செய் நிலங்களின் மீதுள்ள தீர்வையை உயர்த்தவும், புஞ்செய் நிலங்களுக்கு நீர்த் தீர்வையை உயர்த்தவும் ஒரு மசோதா கொண்டுவரப்படுமென்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. போடப்படுகின்ற வரிகள், நஞ்செய் மீது போட்டாலும் சரி, புஞ்செய் மீது போட்டாலும் சரி, விவசாயிகளின் தலைமீதுதான் விழுகின்றன. பல நிலச் சீர்திருத்தச் சட்டங்களைச் செய்திருக்கிறோம். 30 ஸ்டாண்டர்டு ஏக்கர்களுக்கு மேல் நிலம் வைத்துக்கொள்ளக்கூடாது என்றும், 5 ஸ்டாண்டர்டு ஏக்கர்களுக்கு மேல் ஒருவர் சாகுபடி செய்யக்கூடாது என்றும் நிர்ணயம் செய்திருக்கிறோம். உழுபவனிடம் நிலம் போய் சேரும் வரை காத்திருந்து இப்பொழுது இந்த வரி விதிப்பது நிலங்கள் பிரிக்கப்படும் வரை காத்திருந்து இந்த வரி விதிப்பதாகத்தான் இருக்கிறது. வரி போட்டு விவசாயிகளைத் தொல்லைப்படுத்தவேண்டாம் என்று நான் அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளுகின்றேன். நெல்லின் விலை இறங்கியிருக்கும் அளவுக்கு மற்ற விளைபொருள்களின்



இறங்கவில்லை. மிளகாய் ஒரு வீசை விலை ரூ. 8.20-க்கு விற்றது. அதைக் கட்டுப்படுத்த அரசாங்கம் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. இப்பொழுது சுமார் ரூ. 6-க்கு விற்றுக் கொண்டிருக்கிறது. அதே போல், கலப்பை, மண்வெட்டி, உரம் முதலியவற்றின் விலையும் ஏறிக்கொண்டிருக்கிறது. இதையெல்லாம் கூர்ந்து கவனித்து, தக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டு, என்னுடைய உரையை இத்துடன் முடித்துக் கொள்கின்றேன்.

* திரு. சி. ம. அம்பிகாபதி: கனம் தலைவர் அவர்களே, நேற்றைய தினம் கவர்னர் பெருமான் அவர்கள் ஆற்றிய உரையை நான் வரவேற்று, அதன் மீது என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். "தேசியப் பாதுகாப்பு நிதிக்கு தமிழ்நாட்டின் உதவி இரண்டு கோடி ரூபாய் அளவை மீறியுள்ளது" என்று அவர்கள் குறிப்பிட்டார்கள். இதில் கோவை மாவட்டம் முதல் ஸ்தானம் வகிக்கிறது. அடுத்தபடியாக தஞ்சை மாவட்டம் இடம் பெறுகிறது. கோவை மாவட்டத்தைப் போல் அல்லாமல், எங்களுடைய தஞ்சை மாவட்டம் தொழில் வளம் பெறாமல், பின்தங்கி இருக்கிறது. இருந்தாலும் இரண்டாவது இடத்தைப் பெற்றிருக்கிறது என்றால், உள்ளபடியே நாட்டின் பாதுகாப்பில் எங்கள் மாவட்டவாசிகள் எவ்வளவு அக்கறை கொண்டிருக்கிறார்கள் என்பதை இது புலப்படுத்துகிறது. கடந்த அக்டோபர், நவம்பர் மாதங்களில் பெய்த பெரு மழையால், தஞ்சை ஜில்லாவில் குறுவை சாகுபடி அறுக்க முடியாத நிலை ஏற்பட்டிருந்தது. அதை அடுத்து விதை கிடைக்காத நிலை இருக்கிறது. இப்படிப்பட்ட நெருக்கடியிலும் நாங்கள் தேசியப் பாதுகாப்புக்கு நிதி திரட்டியிருக்கிறோம். இரண்டாவது சம்பா மகசூலின்போதும், கடும் மழையினாலும் பூச்சித் தொல்லையாலும் எலி வெட்டாலும் பயிர்கள் சேதம் அடைந்தன. சென்ற ஆண்டு கண்டு முதலுக்கும், இந்த ஆண்டு கண்டுமுதலுக்கும் 8 கலம் 6 கலம் வித்தியாசத்தில் அறுவடை செய்திருக்கிறோம். இவ்வளவு சிரமங்களுக்குமிடையே நாங்கள் அதிகப்படியான நிதி சேகரித்திருக்கிறோம். இதையெல்லாம் பார்க்கும்போது, தஞ்சை ஜில்லாவை மிக மிகக் கவனிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன். தஞ்சையில் இருக்கும் எங்களுடைய கஷ்ட நிலைமைக்கு ஒரு நல்ல பரிகாரம் தேடவேண்டுமென்றால், அவர்கள் உற்பத்தி செய்யக்கூடிய நெல்லுக்கு தக்க விலை கிடைக்கும் வகையில் விலை நிர்ணயம் செய்யப்படவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

தமிழ் நாட்டில் ஒரு லட்சம் டன் அரிசி வாங்கப்படவேண்டும் என்று மத்திய அரசாங்கம் ஒரு உத்தரவிட்டிருப்பதாகப் பத்திரிகையில் பார்த்தோம். தஞ்சை ஜில்லாவிலிருந்து வாங்க வேண்டிய அளவு 12 சத விகிதம் என்றும், குறிப்பிடப்பட்டது. மில்காரர்கள் அந்தத் தானியத்தை வாங்கவேண்டும் என்று ஒப்பந்தம் செய்திருக்கிறார்கள். தஞ்சை ஜில்லாவில் ஏறத்தாழ 200 பெரிய அரிசி அடிக்கும் மில்கள் இருக்கிறது. ஒரு மில்லில் ஒரு ஆண்டில் இருபதாயிரம் மூட்டைதான் உற்பத்தி செய்யப்படுவதாக குறிப்பிடுகிறார்கள். அப்படியிருக்கும்போது, தஞ்சை ஜில்லாவுக்கு நிர்ணயிக்கப்பட்ட 12 சதவிகித டார்ஜெட்டை

[திரு. சி. ம. அம்பிகாபதி] [29th January 1963

அங்கிருந்து வாங்கினால், மற்ற மாவட்டங்களிலிருந்து எத்தனை சத விகிதம் வாங்க முடியும்? ஆகவே, குறிப்பிட்ட அளவு நாம் வாங்க முடியுமா என்று நாம் ஆராய வேண்டிய நிலையில் இருக்கிறோம்.

இப்பொழுது அரசாங்கம் ஒரு விலையைக் குறிப்பிட்டு, அந்த விலைக்கு வாங்கிக் கொள்ளுகிறோம் என்று சொல்லிய பிறகு, அந்த நெல் வியாபாரிகள் அதற்குச் சம்மான விலையிலேதான் நெல் கொள் முதல் செய்கிறார்கள். அப்படி கொள் முதல் செய்யும்போது, 18 ரூபாய் கொள்முதல் விலை எங்களுக்குப் போதுமா என்பதைக் கவனிக்க வேண்டும். விவசாயிகளுக்குப் போதிய அளவு ஆதரவு அளிக்க வேண்டும். அவர்களுக்கு ஊக்கம் அளிக்க வேண்டுமென்றால், உற்பத்திக்கு தகுந்த விலை நிர்ணயிக்கப்பட வேண்டும். சரியான விலை நிர்ணயிக்கப்படாவிட்டால் நிச்சயமாக தஞ்சை ஜில்லா விவசாயிகள் மிகவும் பாதிக்கப்படுவார்கள். தஞ்சை ஜில்லா விவசாயிகள் தங்களிடமுள்ள தங்க நகைகளை வட்டிக் கடைகளில் அடகு வைத்துக்கூட விவசாயம் செய்யவேண்டிய நிலையில் இருக்கிறார்கள். சமீபத்திய தங்கக்கட்டுப்பாட்டின் காரணமாக, வட்டிக் கடைக்காரர்கள் நகைகளை மீட்டுக்கொள்ளுமாறும், குறிப்பிட்ட காலத்திற்குள் மீட்டுக்கொள்ளாவிட்டால் நகை ஏலத்திற்கு விட்டுவிடப்படும் என்றும் சொல்லி நோட்டீஸ் அனுப்பிவிட்டார்கள். நெல் கண்டுமுதல் ஆகவில்லை. இந்த நிலையில் வட்டிக் கடைக்காரர்களும் நோட்டீஸ் கொடுத்துவிட்டார்கள். இதனால் விவசாயிகள் படும் தொல்லை மிக மிகப் பரிதாபகரமாக இருக்கிறது. இதையெல்லாம் அமைச்சர் அவர்கள் கவனத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். தஞ்சை ஜில்லாவைப் பொறுத்த வரையில், சீக்கிரமாக ஒரு நல்ல முடிவுக்கு வந்து, அரிசி, நெல் விலையை நிர்ணயம் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன். விலை நிர்ணயம் செய்யும்போது, உற்பத்தியைப் பாதிக்காத அளவிலே விலைநிர்ணயம் செய்தாலொழிய விவசாயிகள் மிகவும் அவதிப்படுவார்கள்.

எங்கள் மாவட்டம் பாசன வசதியில் ஓரளவு முன்னேற்றம் அடைந்திருந்தாலும் வடிகால் வசதியில் பின்தங்கி இருக்கிறது. திருத்துறைப்பூண்டி, மன்னார்குடி தாலுக்காவை சேர்க்கும் கந்தப் பரிச்சான் வடிகால் திட்டம் நான்கு ஆண்டுகளுக்கு முன்னால் எடுத்துக்கொள்ளப்பட்டு, பாதி வேலை செய்யப்பட்டது. அவ் வேலை இன்னும் முடிவு பெறாமல் நின்றுவிட்டது. அதைத் துரிதமாக நிறைவேற்றினால், அந்தப் பகுதியிலே விவசாயிகள் படும் அவதியை நீக்கிய பெருமை நமக்கு ஏற்படும். திருத்துறைப் பூண்டி, நாகப்பட்டினம், நன்னிலம் தாலுக்காக்கள் கடலோரப் பகுதிகளாக இருப்பதால் தண்ணீர் தேங்கியிருக்கிறது. அங்கே ட்ரெயினேஜ் ஸ்கீம் ஏற்படுத்தப்படவில்லை. அந்தப் பகுதிகளிலிருந்து வந்திருக்கும் மனுக்களைப் பரிசீலனை செய்து, தக்க முறையிலே சீக்கிரத்தில் நல்ல வடிகால் வசதி செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, பேசுவதற்குச் சந்தர்ப்பம் அளித்த சபாநாயகருக்கு நன்றியைக் கூறி என் உரையை முடிக்கின்றேன்.



29th January 1963]

திரு. எஸ். ஜே. ராமசாமி: மதிப்பிற்குரிய சட்ட மன்றத் தலைவர் அவர்களே, கவர்னர் பெருந்தகையாரின் உரை மீது எதிர்க் கட்சியினராகிய எங்களுடைய கருத்துக்களைத் தெரிவிக்கின்றோம். சீன ஆக்கிரமிப்பைப் பற்றியும் கவர்னர்ப் பெருந்தகையார் குறிப்பிட்டிருக்கிறார். எங்களுடைய கருத்துக்கள் என்ன என்பது பற்றி மிக மிகத் தெளிவாகவே நாங்கள் செய்து காட்டிவிட்டோம். கவர்னருடைய உரையில் முதன் முதலாக நாங்கள் கலந்துகொள்ளக்கூடிய ஒரு வாய்ப்பு இந்த மன்றத்தில் இப்பொழுது ஏற்பட்டிருக்கிறது. நாங்கள் எதற்காகக் கலந்து கொண்டோம்? ஜனநாயகம் காப்பாற்றப்பட வேண்டும், ஜனநாயகத்திற்கு எப்போதுமே எங்கள் கழகம் மதிப்பளித்து, ஜனநாயக முறையைப் போற்றிப் புகழ்ந்து வந்திருக்கிறது. அந்த வகையில் சீன ஆக்கிரமிப்பு இருக்கிற வரையில் இந்த சர்க்காருக்கு எங்களுடைய மனம் திறந்த ஒத்துழைப்பைக் கொடுக்கத் தயாராயிருக்கிறோம். எங்களது தலைவர்களும் மிகத் தெளிவாக கழகத்தின் நிலையை எடுத்துக் காட்டிவிட்டார்கள், அதற்காக எங்களை ஆளும் கட்சியினர் பாராட்டவும், அந்தப் பாராட்டுக்கு நாங்கள் மகிழ்ச்சி தெரிவிக்கவும், அந்தப் பாராட்டுதலில் நாங்கள் திளைத்திருக்கவும் விரும்பவில்லை. ஆனாலும், ஜனநாயகம் காப்பாற்றப்படவேண்டும்; சீன ஆக்கிரமிப்பை எப்படியும் முறியடிக்கவேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன்தான் நாங்கள் இந்த அளவிலே விட்டுக் கொடுத்து, எங்களுடைய ஒத்துழைப்பை நல்கியிருக்கிறோம்.

அடுத்தபடியாக கவர்னர் அவர்கள் தம்முடைய உரையில் யுத்த உதவி நிதிக்கு நம்முடைய ராஜ்யத்தில் ரூபாய் 2 கோடிக்குமேல் வசூலாகியிருப்பதைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். கனம் முதல் அமைச்சர் அவர்களும் எங்கள் கட்சியைச் சேர்ந்தவர்களும் காட்டி வந்திருக்கும்படியான ஐக்கிய, உழைப்பு இவற்றோடு ஒப்பிடும்போது இந்த 2 கோடி என்பது மிகவும் குறைவானதாகும். இது மிகமிகக் கம்மியான தொகை என்று இந்த மன்றத்தில் குறிப்பிட விரும்புகிறேன். ஏனென்று கேட்டால் இந்த மாநிலத்தில் பெரிய பெரிய பஸ் முதலாளிகள் இருக்கிறார்கள். சினிமா தியேட்டர் ஓனர்கள் இருக்கிறார்கள். பட முதலாளிகள் இருக்கிறார்கள். இன்னும் கிராமங்களில் விவசாய நடுத்தர வகுப்பினர்கள் இருக்கிறார்கள். இவர்களிடம் எல்லாம் உண்டியலை எடுத்துக்கொண்டுபோய்க் கேட்டால் என்ன வசூலாகும்? குறிப்பாக பஸ் முதலாளிகள் தங்களுடைய ஒரு நாள் கலெக்ஷனைக் கொடுப்பது என்றால், பட முதலாளிகள் தங்கள் படத்தைப் பொறுத்த வரையில் ஓரிடத்தில் ஒரு நாள் கிடைக்கிற பணத்தையும் அதுபோல தியேட்டர் ஓனர்கள் தங்கள் தியேட்டர்களில் ஒரு நாள் ஆகும் கலெக்ஷனை, அதுவும் புதுப்படம் போடுகின்ற முதல் நாள் கலெக்ஷனைக் கொடுப்பது என்றால் போதும். இந்த யுத்த உதவி நிதிக்கு குறிப்பிடத்தக்க அளவு, பெருமைப்படக்கூடிய அளவுக்கு நம் ராஜ்யத்தில் நிதி சேரும். ஆகவே இவ் விஷயத்தில் நமது முதல் அமைச்சரும், நிதி அமைச்சரும் தக்க கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

*[திரு. எஸ். ஜே. ராமசாமி]* [29th January 1963

அடுத்து, கூட்டுறவுத் துறையின் மூலம் அரிசி போன்ற அத்யாவசியப் பொருள்களை விநியோகம் செய்வது பற்றி கவர்னர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். கோவாப்பரேடிவ் சொஸைடிகளை எடுத்துக்கொண்டால் அதில் இருக்கக்கூடிய ஊழல்கள் சொல்லும் அளவுக்கு இல்லை. ஜனநாயகம் ஜனநாயகம் என்று பேசப்படுகிறது. ஆனால் இன்றைய தினம் கூட்டுறவுத் துறையில் இருக்கக்கூடியவர்கள் தங்களுக்குள்ளேயே அத்தனை வசதிகளையும் பகிர்ந்து கொள்கிறார்களே தவிர வேறு யாரையும் உள்ளே புக விடுவது கிடையாது. கூட்டுறவுத் துறையில் அநேகமாக சர்வாதிகார ஆட்சியே இருக்கிறது என்று சொல்லலாம். தேவையானால் அத் துறையில் ஒழுங்கு ஏற்பட ஒரு சட்டம்கூட கொண்டுவரலாம் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். கூட்டுறவுத் துறையின் மூலமாகச் செய்யப்படுகிற நன்மைகள் ஜனங்களுக்கு நியாயமான முறையில் பகிர்ந்து கிடைக்கும்படிச் செய்யவேண்டும்.

அடுத்தபடியாகச் சிறு பாசன திட்டங்களுக்கு நிதி ஒதுக்கப்பட்டிருப்பது பற்றிக் குறிப்பிட்டார்கள். சிறு பாசனத் திட்டங்களில் ஒன்று பாலாறு அணைக்கட்டு. பாலாறு அணைக்கட்டின் மூலம் காவேரிப்பாக்கம் ஏரியானது நன்றாகப் பயன்படவேண்டும். இதுதான் முதன்மையானது. இந்தக் காவேரிப்பாக்கம் ஏரியில் அதிகத் தண்ணீர் தேக்கி வைத்துக்கொள்ள வசதிச் செய்யப்படவேண்டும். இந்த ஏரிக்கு வரும் கால்வாய்கள் ஒழுங்குச் செய்யப்பட்டால் ஆங்காங்கிருந்து தண்ணீர் வந்து இந்த ஏரி நிரம்பிவிடும். ஆகவே காவேரிப்பாக்கம் ஏரி, இதுபோன்று பாலாறு அணைக்கட்டுப் பகுதிகளில் இருக்கக்கூடிய ஏரிகள் தூர்வது செய்யவேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து இந்த மன்றத்தில் ஏற்கனவே பல உறுப்பினர்களால் எடுத்துச் சொன்னபடி நஞ்சை நிலங்களுக்குத் தீர்வையை அதிகப்படுத்த உத்தேசித்திருப்பது சரியல்ல என்று நானும் சொல்ல விரும்புகிறேன். நஞ்சை, புஞ்சை நிலங்களுக்குத் தீர்வையை அதிகப்படுத்தினால் நடுத்தர விவசாயிகள் மிகவும் பாதிக்கப்படுவார்கள் என்பது விவசாயத்துறை அமைச்சருக்கு நன்றாகத் தெரியும். ஏற்கனவே அவர்கள் பலவகையில் சிரமங்களுக்கு உள்ளாகியிருக்கிறார்கள். அவர்கள் கழுத்தில் ஏறி உட்கார்ந்து கொண்டிருப்பதோடு கூட, மேலும் மேலும் நட நட என்று கழுத்தை நெரிப்பது போல இந்த வரியையும் உயர்த்துவதுச் சரியல்ல என்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே புதிதாக உயர்த்துவதாக இருக்கிற நஞ்சை, புஞ்சை வரிகளை ரத்து செய்துவிடுவது மிகவும் நன்றாக இருக்குமென்று இந்த மன்றத்தில் தெரிவித்துக்கொண்டு இத்துடன் என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

* திரு. மு. ஷண்முகம்: கனம் தலைவர் அவர்களே, கனம் கவர்னர் பெருமான் ஆற்றிய உரையிலே தற்போது நாட்டுக்கு ஏற்பட்டு இருக்கும்படியான நெருக்கடி நிலைமையைச் சமாளிப்பதற்கு வகுக்க இருக்கிற வழி முறைகளைப்பற்றிக் குறிப்பிட்டிருப்பதற்கும், நாட்டு மக்கள் எவ்வாறு இந்தச் சமயத்தில் ஒத்துழைக்க



29th January 1963] *[திரு. மு. ஷண்முகம்]*

வேண்டுமென்று கூறியுள்ள அறிவுரைகளும் பாராட்டுதற்குரியன என்றாலும் அவரது உரையில் காணப்படும் சில குறைபாடுகளை எடுத்துச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

நெருக்கடி நிலைமையைச் சமாளிப்பதற்கு அரசாங்கம் மேற்கொண்டிருக்கும் செயல்களில் முக்கியமானது ஒன்று உணவு உற்பத்தியைப் பெருக்குவது. அதைப்பற்றி உரையில் பலயிடங்களில் குறிப்பிட்டிருக்கிறார்கள். முக்கியமாக நீர்ப்பாசனத் திட்டங்களைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனாலும் இவற்றினால் எல்லாம் விவசாயப்பெருங்குடி மக்களுக்கு ஏற்பட்டிருக்கிற உடனடி கஷ்டம் நீங்காது. இன்றைக்கு விவசாயத் துறையில் அவர்களுக்குப் பெருத்த சங்கடம் உண்டாகியிருக்கிறது. உணவுப்பொருள்களின் விலையைக் குறைக்கவேண்டுமென்று அரசாங்கம் சொல்கிறார்களே தவிர உணவுப் பொருள்களை உற்பத்தி செய்வதற்கு விவசாயிகளுக்குத் தேவையான உரம் போன்ற இதர பொருள்களின் விலையைக் குறைப்பதற்கு அரசாங்கம் முன்வரவில்லை. எந்த எந்த வகையில் விவசாயப் பெருங்குடி மக்களுக்கு விவசாயத் தொழிலில் ஊக்கத்தை உண்டாக்கலாமோ அந்த அந்த வகையில் ஊக்கத்தை உண்டாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. இதனால் எல்லாம் அவர்கள் சலிப்படைந்து இருக்கிறார்கள். உதாரணமாக நெல் விலை மூட்டை 22, 23 ரூபாய் என்றால் ஒரு மூட்டை பிண்ணாக்கின் விலை 34 ரூபாயாக இருக்கிறது. இந்த மாதிரியாக விலை உயர்வதற்கு நியாயமே இல்லை. மணிலாப் பயிரின் விலையை எடுத்துக் கொண்டாலும் பிண்ணாக்கு இப்படி உயர அவசியமே இல்லை. இப்படி பிண்ணாக்கு மூட்டை 34 ரூபாய் என்று விற்கிறார்கள் என்றால் இது அநியாய விலை. இதைக் கட்டுப்படுத்த அரசாங்கம் முன் வராது விவசாயிகளுடைய கையைக் கட்டுவதற்கு மட்டும் முன்வருவது சரியல்ல. இதைப்பற்றி எல்லாம் நன்கு ஆராய்ந்து எல்லாப் பொருள்களுக்கும் நியாயவிலையை ஏற்படுத்த வேண்டும்.

விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்யும் பொருள்களுக்கான 12-00 noon
விலையைத் தாங்களாகவே நிர்ணயிக்கக்கூடிய நிலைமையில் இல்லை என்பதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். விவசாயிகள் உற்பத்திக்காக வாங்கக் கூடிய பொருள்களின் விலையும், விவசாயக் கருவிகளின் விலையும் நியாயமற்ற முறையில் விற்கப்படுகின்றன. அந்தப் பொருள்களின் விலை ஏறிக் கொண்டிருப்பதைத் தடுப்பதற்கு அரசாங்கம் முன் வரவேண்டும். அவர்களுடைய குறையை நிவர்த்திப்பதற்கு என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்பது பற்றிக் கவர்னர் பெருமான் அவர்களுடைய உரையில் ஒன்றும் குறிப்பிடப்படவில்லை. விவசாயக் காரியங்களுக்குப் பயன்படும் பொருள்களின் விலை குறைந்தால்தான் உணவு உற்பத்தியைப் பெருக்குவதில் விவசாயிகளுக்கு ஊக்கமும் உற்சாகமும் ஏற்படும்.

அடுத்தபடியாக, விவசாயத்திற்கு மின்சாரமானது தேவைப்படும் அளவில் இப்போது வழங்கப்படுவதில்லை. சென்ற சட்டசபைக் கூட்டத்திலே, "மின்சார காரியங்களுக்காக மின்சாரமானது இரவு பகல் எந்த நேரமும் வழங்கப்படுகிறது" என்று

[திரு. மு. ஷண்முகம்] [29th January 1963

தெரிவித்தார்கள். ஆனால் அந்த நிலைமை இல்லையென்பதைக் கூற விரும்புகிறேன். அமைச்சர் அவர்களுக்கு உள்ளபடியே சரியான நிலைமை உணர்த்தப்படவில்லை என்றுதான் சொல்ல ஆசைப்படுகிறேன். மின்சாரமானது விவசாயத்திற்கு இரவில் ஒரு வாரமும், பகலில் ஒரு வாரமும் கொடுக்கப்படுகிறது. இரவு நேரத்தில் விவசாயத்திற்காக நீர் பாய்ச்சுவது என்பது சுலபமான காரியமல்ல. பெரும்பாலான விவசாயிகள் இரவு காலங்களில் மின்சாரம் தரப்படும் வாரத்தில் மின்சாரத்தை உபயோகப்படுத்தாமல் பகலில் மின்சாரம் வழங்கப்படும் வாரத்தில் மட்டுமே உபயோகப்படுத்திக் கொள்ளுகிறார்கள். ஆகவே, இதுபற்றிப் புனராலோசனை செய்து விவசாயத்திற்கு முழு நேரமும் மின்சாரம் வழங்குவதற்கான ஏற்பாட்டினைச் செய்யவேண்டுமென்று தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்து, அரிசி விலை அதிகமாக உயர்ந்துவிட்டிருக்கிறது. உபயோகிப்பவர்கள் அதிக விலை கொடுத்து வாங்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆனால் அதே நேரத்தில் உற்பத்தி செய்பவர்களுக்கும் நியாயமான விலை கிடைக்கவேண்டுமென்பது அவசியம். நியாயமான விலை உற்பத்தியாளருக்குக் கிடைக்கிறதா என்று பார்த்தால், இல்லை. அரிசியை விற்கும் விலைக்கு ஈடாக நெல்லுக்கு விலை கொடுத்து வாங்குவதில்லை. குறைந்த விலைக்கு நெல்லை வாங்கி அரிசியாக விற்கும்போது 50 சதவிகிதத்திற்கு மேல் அதிக விலைக்கு விற்று விடுகிறார்கள். இடையிலே இருக்கக் கூடிய தரகர்கள் அநியாயமான விலைக்கு அரிசியை விற்கிறார்கள். இதைக் கட்டுப்படுத்த அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுத்தாக வேண்டும். இந்த நெருக்கடி காலத்திலாவது அரசாங்கமே நெல் முதலிய தானியங்களை நேரடிக் கொள்முதல் செய்து கூட்டுறவு ஸ்தாபனங்கள் மூலம் மக்களுக்குக் கிடைக்கும்படி செய்தால் மிகவும் நன்மையாக இருக்கும். கவர்னர் பெருமான் அவர்களுடைய உரையிலே, மில்லர்களிடமிருந்து அரிசி கொள்முதல் செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். மில்லர்களிடமிருந்து அரிசி கொள்முதல் செய்வது விவசாயப் பெருக்கத்திற்கு உகந்த வழியல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். உண்மையிலேயே, மில்லர்களிடமிருந்து நாம் பெறக்கூடிய விலையானது இன்று உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்குக் கிடைக்கக்கூடிய விலை அல்லவே அல்ல. வேண்டுமானால், அரசாங்கம் நேரடியாக விவசாயிகளிடமிருந்து நெல்லாகக் கொள்முதல் செய்து கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக அரிசியாக மாற்றி விற்கக்கூடுமானால், அப்போது அரிசிக்குக் கொடுக்கக் கூடிய விலையானது விவசாயிகளுடைய கைக்குப் போய்ச் சேரக்கூடிய நிலைமை ஏற்படும். அந்த வகையில் கொள்முதல் செய்து விவசாயிகளுக்கு உற்சாகத்தையும், ஊக்கத்தையும் கொடுக்கவேண்டுமென்று தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, பால் சப்ளை பற்றிக் கவர்னர் பெருமான் அவர்கள் உரையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். பால் சப்ளை திட்டத்தைப் பொறுத்தவரையில் அரசாங்கம் மிகுந்த ஆதரவு கொடுத்து, நிதி உதவியும் அளித்து வருவதாகச் சொல்லப்



29th January 1963] [திரு. மு. ஷண்முகம்]

படுகிறது. பெரும்பாலும் பால் விநியோகமானது இன்று கூட்டுறவு ஸ்தாபனங்கள் மூலமாக நடைபெற்று வருகின்றன. பாலைக் கொள்முதல் செய்து விற்பனை செய்வதில் நிர்வாகத்தைப் பொறுத்தவரையில் போதுமான அளவு பயன்தரத்தக்க நிலைமையில் செயல்படவில்லையென்றுதான் சொல்லவேண்டும். பால் விநியோகிக்கும் கூட்டுறவு ஸ்தாபனங்கள் நியாயமான விலைக்குப் பால் கொடுப்பவர்களிடமிருந்து வாங்கி ஆதாயத்தையோ, லாபத்தையோ பாராது நியாயமான விலைக்கே வழங்குகிறார்கள். அந்த நிலைமையில் அந்தக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு விற்பனை வரி விதிப்பது அவ்வளவு பொருத்தமானதாகத் தெரியவில்லை. அந்தச் சங்கங்களுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்குக் கொடுத்தால் மேலும் பால் சப்ளை திட்டமானது அபிவிருத்தியடையும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாட்டிலே இப்போது ஏற்பட்டிருக்கக் கூடிய நெருக்கடி நிலைமையைச் சமாளிப்பதற்குத் தொழிலாளர்களுடைய ஒத்துழைப்பு மிக அவசியமானது. அந்த வகையில் அவர்களுக்குச் சலுகைகள் கொடுப்பதிலும், ஊக்கமளிப்பதிலும் அரசாங்கம் முக்கியப் பொறுப்பை ஏற்றுக் கொள்ளவேண்டும். சமீபத்தில் தங்கக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் மூலமாகப் பாதிக்கப்பட்ட பொற்கொல்லர்களின் நிலைமையை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். மத்திய அமைச்சர் கனம் தேசாய் அவர்கள் 'பொற்கொல்லர்களது தொழில் எந்த வகையிலும் பாதிக்கப்படவில்லை' என்று சொல்லியிருக்கிறார்கள். அது அவ்வளவு பொருத்தமானதாகத் தோன்றவில்லை. தற்போது பெரும்பாலான பொற்கொல்லர்கள் தொழில் இல்லாமல் இருக்கிறார்கள். கட்டுப்பாட்டுச் சட்டத்தின் காரணமாக நகை செய்ய யாரும் முன் வராத காரணத்தினால் பொற்கொல்லர்கள் வேலை இல்லாமல் இருந்து வருகிறார்கள்.

தற்காலிகமான நிலை என்று நாம் எண்ணக்கூடியதாக இருந்தாலும் இந்த தாற்காலிக காலத்திலாவது அவர்களுக்கு உணவு வசதி போன்ற வசதிகளைச் செய்ய அரசாங்கம் கடமைப்பட்டுள்ளது. ஆகவே, சிறு கைத்தொழில் ஸ்தாபனங்களில் அவர்கள் சலுகை பெறுவதற்கு, பொருளாதார உதவிகளை அவர்களுக்கு தாற்காலிகமாகவாவது கொடுத்து உதவுவதற்கு வேண்டிய வகையில் அரசாங்கம் பொறுப்பேற்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கடைசியாக, விவசாய நிலங்கள் மீது வரியை உயர்த்தியிருப்பது நியாயம் அல்ல என்ற நிலையை ஏற்கனவே எடுத்துச் சொல்லியிருந்தாலும் கூட விவசாய நிலங்கள் மீது வரியை உயர்த்துவது அவ்வளவு பொருத்தமல்ல என்று நான் மறுபடியும் எடுத்துக்காட்ட ஆசைப்படுகிறேன். நகராட்சி எல்லைக்குட்பட்ட நிலங்களுக்கு வரியை அதிகப்படுத்துவது பற்றி உரையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. நகராட்சி எல்லைகளுக்குள் உள்ள நிலங்களுக்கு இரட்டிப்பு வரி செலுத்த வேண்டியிருக்கிறது. அரசாங்கத் தீர்வை தவிர நகராட்சி விதிக்கும் செல்வரி, நகராட்சி நிலைமைக்கேற்றபடி விதிக்கும் வரியையும் செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, நகராட்சி எல்லைக்குள் இருக்கும்

விவசாய நிலங்களுக்கு இரட்டிப்பு வரிகள் கொடுக்க வேண்டியிருக்கிறது. இந்த நிலையில் அந் நிலங்கள் மேல் மேலும் வரி விதிப்பது நியாயம் அல்ல. அடுத்து, இன்று நாட்டில் ஒற்றுமை சக்தி வளர்ந்திருப்பது பற்றி கவர்னர் பெருமான் அவர்கள் பெருமைபடச் சொல்லியிருக்கிறார்கள். ஒற்றுமை சக்தி இந்த சந்தர்ப்பத்தில் ஏற்பட்டிருப்பதை அரசாங்கம் இன்று உணர்ந்ததுபற்றி பாராட்டுகிறேன். ஒற்றுமை சக்தி இந்த நாட்டுக்கு அவசியம் என்பதை இந்த நிலைமையிலாவது அரசாங்கம் உணர்ந்ததற்காக பாராட்டுவதோடு இந்த ஒற்றுமை சக்தி அழியாமலும், ஒழியாமலும் நல்ல முறையில் அதை நிலைநிறுத்த, அது நிலையாக ஏற்பட அரசாங்கம் போதிய கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அதற்குண்டான சமாதான முறையில் வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்வர் என்றும் நினைத்து, கவர்னர் அவர்கள் உரையில் என் கருத்துக்களைத் தெரிவிக்க வாய்ப்பளித்ததற்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

* திரு. கா. தா. பெருமாள் ராஜு : கனம் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்கள் உரையை வரவேற்று நான் சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். கவர்னர் அவர்கள் ஆற்றிய உரை மக்களிடையே நல்ல விழிப்பை ஏற்படுத்தியிருக்கிறது. நம் நாடு உலகம் வியக்கத்தக்க முறையில் முன்னேறிக்கொண்டு வருகிறது. இதை பார்த்துத்தான் சீனாக்காரன் நம் நாட்டின்மீது பொறாமை கொண்டு படையெடுத்திருக்கும் இந்த சந்தர்ப்பத்தில் இவ்வாறு கவர்னர் அவர்கள் உரையாற்றியிருப்பது மிகவும் முக்கியமாகும். மக்களிடையே ஒரு விழிப்பை ஏற்படுத்த இது பயன்படுகிறது. நமது தேசத்தில் ஒவ்வொரு கிராமத்திலும் பஞ்சாயத்துக்களும், பஞ்சாயத்து யூனியன் தலைவர்களும், ஆரம்ப ஆசிரியப் பெருமக்களும் முன் வந்து நல்ல முறையில் கிராமங்களில் தொண்டர் படை அமைப்பதற்காக அவர்களுக்கு நாம் முதலில் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம். அடுத்தபடியாக ப்ராவிடெண் பண்ட் நிதியை அதிகப்படுத்தியது பற்றி சந்தோஷம். டவுன் பஞ்சாயத்துக்களில் உள்ள அதிகாரிகளுக்கு சம்பளத்தை அதிகப்படுத்தாமல் இருப்பதைப் பற்றி நான் குறிப்பிட விரும்புகிறேன். அவர்களுக்கும் மற்ற அதிகாரிகளுக்குச் செய்திருப்பதைப் போல், சம்பள விகிதத்தை அதிகப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பின்னர், விவசாயம் பற்றி சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். விவசாயம் நம் நாட்டுக்கு இன்றியமையாதது. அயல்நாட்டுக்காரர்களுக்கு நமது சக்தியை உணர்த்துவதற்கு இது தேவைப்படுகிறது. விவசாயத்துறையில் நமது சர்க்கார் அதிக கவனம் செலுத்திக்கொண்டு வருகிறார்கள். விவசாயம் இல்லாவிடில் சண்டை செய்வதற்கே முடியாது. ஆகவேதான் விவசாயத்திற்காக அதிகச் செலவு செய்ய வேண்டுமென்ற நோக்கத்தோடு அதற்காகச் செலவு செய்வதில் சிறிதுகூடக் குறைத்துக்கொள்ளாமல் இருப்பதற்காக அரசாங்கத்தை நான் பாராட்டுகிறேன். பாசன வசதிகள் விஸ்தரிக்கப்படாத இடங்கள் பல இருக்கின்றன. ஆகவே பரந்த நோக்கத்துடன் அப்பகுதிகளில் இருக்கும் மக்கள் நன்கு வாழ சிறிய நீர்ப்பாசனங்கள், குளம் குட்டைகள் இவைகளை விஸ்தரிக்கவேண்டுமென்று



கொள்கிறேன். தாளவாடி, அந்தியூர் போன்ற பிற்பட்ட பகுதிகளில் நாம் சுதந்திரம் அடைந்து 15 ஆண்டுகள் ஆகியும் ஒரு அபிவிருத்தி வேலையும் செய்யப்படவில்லை. இதை சர்க்கார் கவனிக்கும் என்று நான் நம்புகிறேன். பழைய காலத்தில் வெட்டப்பட்ட வாய்க்கால்கள் பழுது பார்க்கப் படாமல் கரைகள் உடைந்து போகின்றன. குறிப்பாக தடப்பள்ளி அரங்கக்கோட்டையில் ஆண்டுதோறும் உடைப்பு ஏற்படுகிறது. இதைச் செப்பனிட்டால் தான் விவசாய உற்பத்தியை நல்ல முறையில் அதிகரிக்க முடியும். இதற்குமுன் ஒரு அங்கத்தினர் சொன்னார்கள். பழைய பாசன வசதிகள் ஏற்பட்ட இடங்களில் அதிக வரி விதிக்க வேண்டுமென்று சொன்னார்கள். அது தவறு. பழைய காலம் தொட்டே அவர்கள் வரி கொடுத்து நலிந்து போயிருக்கிறார்கள். புதிதாக வெட்டப்படும் இடங்களுக்கு வரி அதிகமாகப் போடவேண்டுமே தவிர பழைய இடங்களுக்குப் போடக்கூடாது. அடுத்தபடியாக உர வினியோகத்தில் விவசாயிகளுக்குக் கஷ்டமான நிலை இருக்கிறது. எங்கள் பகுதியை எடுத்துக் கொண்டால், ரசாயன உரம் ஏக்கர் ஒன்றுக்கு இரண்டு ராத்தல் கொடுத்தால் எவ்வாறு அபிவிருத்தி அடைய முடியும் என்று சிந்தித்துப் பாருங்கள். ஏன் ரசாயன உரம் அவசியம் என்றால், முன்பெல்லாம் ஒரு போகமாக இருந்தது இன்று இரண்டு போக விளைச்சலாக ஆக்கப்பட்டிருக்கிறது. ஆகவே இயற்கை உரம் தயாரிக்க முடியாத சூழ்நிலையில் இருக்கிறார்கள். ஆகவேதான் ரசாயன உரத்தை எதிர்பார்க்கும் நிலை இருக்கிறது. ரசாயன உரம் சரியானபடி விநியோகிக்கப்பட வேண்டும். ரசாயன உரத்தின்மேல் உள்ள கட்டுப்பாட்டை நீக்கி விட்டாலும் நல்லது. அடுத்தபடியாக விவசாயத்திற்கு மின்சாரம் வழங்குவதில் போதிய கவனம் செலுத்தப்படவேண்டும். வேறு வகையில் செலவிட்ப்படும் மின்சாரத்தை பாசன வசதிக்காக செலவழித்தால் நல்லது. டூரிங் டாக்கீஸ்களுக்கு கொடுக்கும் மின்சாரத்தைக் குறைத்து அல்லது கொடுக்காமலே வைத்து அதை விவசாய உற்பத்திக்காக செலவிட முற்பட்டால் நல்லது. சினிமாக்களுக்கு என்ன தேவையிருக்கிறது? அவர்கள் என்ஜின் வைத்து உற்பத்தி செய்கிறார்கள். அவற்றிற்காக செலவு செய்வது தேசத்திற்கு நஷ்டம் என்று எடுத்துக் கூறுவதோடு எனக்குப் பேச சந்தர்ப்பம் அளித்தமைக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

* திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : கனம் அவைத் தலைவர் அவர்களே, கவர்னர் உரையின்போது நாங்களும் பங்கு கொள்ள நேர்ந்தமைக்கு என் நன்றியை முதலாவது தெரிவித்துக் கொள்கிறேன். சீன ஆக்கிரமிப்பு விஷயத்தில் நாங்களும் முழு முயற்சியோடு பங்கு கொண்டு எந்த அளவுக்கு எதிர்க்க முடியுமோ அந்த அளவுக்கு எங்கள் எதிர்ப்பையும் தெரிவித்துக் வருகின்றோம். இன்னும் சீன ஆக்கிரமிப்பு எதிர்ப்புக்காக வேண்டிய வேலைகளைச் செய்து கொண்டிருப்போம் என்பதை இந்த மன்றத்தின் மூலமாக சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அதுமட்டுமல்ல, மேல்நாட்டுக் காரர்கள் இந்த நெருக்கடியான காலத்தில் நமக்கு முழு ஆதரவு தந்ததற்கு நாம் நன்றி செலுத்தக் கடமைப்பட்டவர்கள் ஆவோம்.

குறிப்பாக அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுகளுக்கு நாம் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம். பிரிட்டன் நாடானது நம்மால் புறக்கணிக்கப்பட்ட நாடு. அப்படியிருந்தும் இந்த நெருக்கடியான நேரத்தில் நமக்குப் பல உதவிகளை செய்து வருகிறார்கள். அதற்காக நாம் எப்போதும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம்.

மேலும், தேசீய பாதுகாப்பு காரணமாக, சில போலீஸ் படைகள் அமைக்கப்பட்டு வருகிறது. போலீஸ் படை என்று சொன்னவுடனேயே எனக்கு அதில்தான் கவனம் போகிறது. போலீஸ் படையை வளர்த்துக்கொண்டு போனால் ஓரளவுக்கு வேலையில்லாத் திண்டாட்டம் குறையும். அதோடு ஊக்கமுள்ள இளைஞர்கள் நல்ல உள்ளத்தோடு இதில் சேருகிறார்கள். ஆனால் அதே நேரத்தில், போலீஸ் வேலை செய்து கொண்டிருப்பவர்கள் தங்களுக்கு இருக்கின்ற பற்றாக்குறை காரணமாக அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். கடந்த போலீஸ் மான்ய விவாதத்தின் போது, நான் போலீஸாருக்கு இருக்கின்ற குறைகளை எடுத்துச் சொன்னேன். அதைப்பற்றி சர்க்கார் இதுவரைக்கும் எந்த விதமான நடவடிக்கையும் எடுத்திருப்பதாகத் தெரியவில்லை. ஒரு ஸ்டேஷனில் வேலை செய்கின்ற ஒரு போலீஸ் உத்யோகஸ்தர் ஐந்து மைல்களுக்கு அப்பால் சென்றால் அவருக்கு 1-¼ ரூபாய் (ஒன்றேகால் ரூபாய்) படி கொடுக்கப்படுகிறது. இந்த ஒன்றேகால் ரூபாய் படியை வைத்துக்கொண்டு எப்படி அவருடைய ஊதியத்தைப் பெருக்க முடியும். ஆகவே அவர்களுக்கு கொடுக்கப்படும் சம்பளம் அவர்களுடைய வாழ்க்கைக்கு போதாமல் இருக்கிறது. அதைச் சர்க்கார் பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டிருந்தேன். இதுவரைக்கும் சர்க்கார் எந்தவிதமான நடவடிக்கையும் எடுத்திருப்பதாகத் தெரியவில்லை. ஆனால் இப்போது நெருக்கடியின் காரணமாக போலீஸ்காரர்கள் மாதத்தில் 30 நாட்களும் வெளியில் செல்லவேண்டியிருக்கிறது. அப்படியிருந்தால் அவர்களுக்கு 20 நாட்களுக்கு மட்டும் தான் படி கொடுக்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இது அரசாங்கத்திற்கு தெரியுமோ, தெரியாதோ என்பது எனக்குத் தெரியவில்லை. எப்படியிருந்தாலும் போலீஸ் இலாகாவில் ஊறிய காரணத்தினால் இதைப்பற்றிச் சொல்லவேண்டியது என்னுடைய கடமை என்று எண்ணுகிறேன். இவ்விதம் படியை 20 நாட்கள் என்று கட்டுப்படுத்தியிருப்பது அவர்களுக்கு மிகவும் கடுமையாக இருக்கும். இதனால் அவர்கள் மிகவும் பாதிக்கப்படுவார்கள் என்பதை இந்த மன்றத்தின் முன்னால் கூற ஆசைப்படுகிறேன். அதே நேரத்தில் போலீஸ்காரர்களுக்கு பல குறைகள் இருக்கின்றன. அவைகளை எல்லாம் இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லுவதற்கு நேரமில்லையாதலால், இனிமேல் வருகின்ற விவாத நேரங்களில் கூறிக்கொள்கிறேன்.

அதற்கடுத்தபடியாக, பஞ்சாயத்து யூனியன்கள், பஞ்சாயத்துக்கள் தேச நெருக்கடியின் காரணமாக முழு மனதோடு தங்கள் ஒத்துழைப்பைத் தந்ததற்கு இந்த மன்றத்தின் சார்பாகவும், பொதுமக்கள் சார்பாகவும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேநோத்தில் பஞ்சாயத்து ஒன்றிப்பு மன்றங்களில்





வேலை செய்யும் சர்க்கார் சிப்பந்திகளில் முக்காலே மூன்று வீசமும் அடிக்கடி வேறு இடங்களுக்கு மாற்றப்படுகிறார்கள். ஒரே வருடத்தில் இரண்டு மூன்று இடங்களுக்கு மாற்றப்படுவதால், பள்ளிகளில் படிக்கும் அவர்களுடைய குழந்தைகளுடைய படிப்பையும் மாற்ற வேண்டிய நிர்ப்பந்தமான நிலைமை ஏற்படுகிறது. இம்மாதிரிப்பட்ட சூழ்நிலை உருவாகாமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன்.

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் முக்கியத்துவம் வாய்ந்தது, விவசாயம். விவசாயத்தைப் பற்றிப் பேசும்போது, அதில் நாம் மிகப் பொறுப்புள்ளவர்களாகவும் கவனம் செலுத்த வேண்டியவர்களாகவும் இருக்கிறோம். இதைப்பற்றி நான் விவரமாகப் போசவேண்டும் என்று நினைக்கிறேன். இப்போது அதற்கு நேரமில்லாததால் முக்கியமான சில கருத்துக்களை மட்டும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். விவசாயத்திற்கு முக்கியமாக நீர்வளம், நில வளம், உர வளம் இந்த வளங்கள் எல்லாம் ஒருங்கே அமைந்தால்தான் விவசாயத்தில் நாம் வெற்றி காண முடியும். அந்த நிலையில் தென்னார்க்காடு மாவட்டத்தில் அதிலும் குறிப்பாக திண்டிவனம், செஞ்சி, கள்ளக்குறிச்சி இம்மூன்று தாலூகாக்களிலும் விவசாயத்திற்குப் பல இடைஞ்சல்கள் இருக்கின்றன. நீர்ப்பாசனக் குறைவுதான் முக்கியமான காரணம். அங்கே நதிகள் பாய்வதில்லை. இந்த நிலைமையில் கிராமப் பகுதிகளில் புறம்போக்கு நிலங்கள் அதிகமாக இருக்கின்றன. இந்த நிலங்கள் எல்லாம் விவசாயத்திற்கு ஏற்றவைதானா என்று பரிசீலித்துப் பார்த்து, அதை விவசாயத்திற்கு கொண்டு வர முடியுமா என்று பார்க்கவேண்டும். இந்தப் புறம்போக்கு நிலங்களை எல்லாம் சரியாக அபிவிருத்தி செய்ய முடியாத காரணத்தினால் விவசாயம் தடைபடுகிறது. இதனால் பலர் விவசாயத்தை விட்டுவிட வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. இந்த நெருக்கடியான நோத்தில் அரசாங்கத்தின் கவனத்திற்கு நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். கள்ளக்குறிச்சி, செஞ்சி, திண்டிவனம் இந்த மூன்று தாலூகாக்களும் பிற்போக்கான தாலூகாக்களாக இருக்கின்றன. இந்த இடங்களிலுள்ள புறம்போக்கு நிலங்களை எல்லாம் நல்ல முறையில் சீர்படுத்த வேண்டும். எப்படிச் சீர்ப்படுத்துவது என்கின்ற சந்தேகம் வரலாம். இப்போது சர்க்காரிலிருந்து புல்டோலர் இயந்திரம் பல இடங்களில் வாடகைக்குக் கொடுக்கப்படுகிறது. போரிங் செட் வைப்பதற்கும் வாடகைக்கு கொடுக்கப்பட்டு வருகிறது. இதை விவசாயம் செய்கின்றவர்களுக்கு கொடுக்க வேண்டும். இதற்கான வாடகை கொடுக்க முடியாவிட்டால் கடனாகக் கொடுக்கலாம், அல்லது மான்யமாகக் கொடுக்கலாம். இவ்விதம் பல உதவிகளைச் செய்து கொடுத்தால் எங்கள் பகுதியிலுள்ள புஞ்சை நிலங்கள் எல்லாம் நல்லமுறையில் விவசாயத்திற்குக் கொண்டுவரப்படும். இதன் மூலம் விவசாயத்தை நல்ல முறையில் முன்னேறமுடியும். விவசாயம் என்கிற போது உரங்கள் என்பது குறிப்பிடத்தக்க ஒன்றாகும். குறிப்பாக சில இடங்களில் ஒரு போக மகசூலாக இருக்கின்ற காரணத்தால், ஒரே நோத்தில் உரங்கள் தேவைப்படுகின்றன. இப்போது வினி

*[திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்]* [29th January 1963

யோகிக்கப்பட்டுவரும் கூட்டுறவு சங்கங்கள் மூலம் போதுமான அளவுக்குக் கிடைப்பதில்லை. எவ்வளவுதான் முயன்று பார்த்தாலும் தேவைக்கு ஏற்றவாறு கிடைப்பதில்லை. சில நேரங்களில் செய்த முயற்சிகள் எல்லாம் வீணாகின்றன. விவசாயத்தைப் பெருக்கி அதன் மூலம் மக்கள் நன்மை பெற வேண்டும் என்று விரும்பினால், சர்க்கார் தரிசு நிலங்களை எல்லாம் சீர்படுத்துவதற்கு புல் டோஸர்களை லோன் மூலமாகவோ, மான்யமாகவோ கொடுத்து உதவவேண்டும். அதே நேரத்தில் தேவைக்குத் தகுந்தபடி உரங்களையும் கொடுத்து உதவ வேண்டும். அதோடு இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். திண்டிவனம் தாலூகாவில் பல ஏக்கர் நிலங்கள் வறண்ட பாலைவனமாக காட்சியளிக்கிறது. இந்த இடங்களுக்கு நீர்ப்பாசனத்தைக் கொண்டுவருவதற்கு எங்கள்
12-30 p.m. இடத்திற்கு மேற்கேயிருக்கும் திருவண்ணாமலை தாலூகாவில் இருக்கும் சாத்தனூர் அணைத் தண்ணீரை நந்தன்கால்வாய் என்ற கால்வாய் வழியாகக் கொண்டுவந்து சங்காவாணி ஆற்றில் இறக்கினால், அதிலிருந்து விவசாயத்திற்கு வேண்டிய தண்ணீரை பெற்றுக்கொள்வதற்கு வசதியாக இருக்கும். இதன் மூலம் விவசாயத்தைப் பெருக்குவதற்கும் ஏதுவாக இருக்கும். ஆகவே இது சம்பந்தமாகச் சர்க்கார் உடனடியாக கவனம் செலுத்தி ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பஞ்சாயத்து யூனியன்களில் வேலை பார்க்கும் சர்க்கார் சிப்பந்திகளில் அதிகமான பேர்களுக்கு ப்ராவிடெண்ட் ஃபண்ட் விஷயமாக நடவடிக்கை எடுக்கவில்லை என்று ஒரு சில அதிகாரிகள் குறை சொல்லியிருக்கிறார்கள். ப்ராவிடெண்ட் ஃபண்ட் என்ற தலைப்பில் வரும்போது, அதை அதிகப்படுத்துவது என்ற கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். இந்த நேரத்தில் இன்னும் சில உத்தியோகஸ்தர்களுக்கு ப்ராவிடெண்ட் ஃபண்ட் பிடிக்கவில்லை என்று சொல்லுகிறார்கள். இதையும் சர்க்கார் கவனத்திற்குக் கொண்டு வர ஆசைப்படுகிறேன்.

சிறு பாசன வேலைகள் என்ற தலைப்பில் எடுத்துக்கொண்டால் மரக்காணம் பகுதியில் ஏரிகளே கிடையாது. சில ஊற்றுக் குட்டைகளை வைத்து ஏற்றம் போட்டு வைத்து விவசாயம் செய்கிறார்கள். எத்தனை ஆண்டுகளுக்கு முன் இந்த ஊற்றுக் குட்டைகள் ஏற்பட்டனவோ அப்படியே இருந்துகொண்டு வருகிறது. அந்தப் பகுதிகளில் நீர்ப்பாசனம் பெருகவேண்டுமென்று சொன்னால், இந்த ஊற்றுக் குட்டைகளைத் தூர் எடுத்து, கூடுமான வரையில் மின்சார வசதி கொடுத்து, மோட்டார்வைத்து, பம்ப்செட் அமைத்துக் கொடுத்தால்தான் விவசாயத்தைப் பெருக்கமுடியும். அந்த இடத்திலே விவசாயத்தைப் பெருக்க இவைகள் இன்றியமையாதவை என்று கருதுகிறேன். இந்த நெருக்கடியான நேரத்திலாவது சர்க்கார் ஆவன செய்யும் என்று கருதுகிறேன். அவசியம் செய்யவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயம் இந்த நாட்டின் முதுகெலும்பு போல் இருந்தாலும் கூட, விவசாயத்திலே வெற்றி கண்டதாக கவர்னர் உரையிலே இருக்கிறது, அமைச்சரும் சொன்னார்கள். ஆனால் நான் விவசாயத்தால் வேதனைப் பட்டேன் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். காரணம் இந்த வருஷத்திலே அதிக மழை பெய்து குறிப்பாக எங்கள் ஜில்லாவிலே—எங்கள் ஜில்லாவை மணிலாக் கொட்டை ஜில்லா என்று சொல்லுவார்கள்—இந்த மணிலாக் கொட்டை விவசாயம் மழையால் பாதிக்கப்பட்டு, விவசாயக் குடிகள் எப்படி வாய்தா கட்டுவது என்று திணறிக்கொண்டிருக்கிறார்கள். அப்படி ஒரு நிலை அங்கு உருவாகியிருக்கிறது. நஞ்சைப் பயிரை எடுத்துக்கொண்டால் நன்றாகவே வந்தது—ஆனால் கதிர் வந்தவுடனேயே செத்து விட்டது. எதற்காகச் செத்ததோ தெரியவில்லை. கை மேல் பலன் வந்தது என்று எதிர் பார்த்த இந்த நேரத்தில் கையில் இருந்த பலனைப் பிடுங்கி எடுத்த மாதிரி செத்து விட்டது. பூச்சி எடுக்கிறோம் என்று சொல்லுகிறார்கள். ஆனால் ஏன் இப்படி வந்ததோ புரியவில்லை. அக்ரிகல்ச்சுரல் ஆஃபீஸரிடம் சொல்லியும் கூட அவர் கண்ணெடுத்தும் பார்க்கவில்லை, காதெடுத்தும் கேட்கவில்லை. அவருக்கும் ஒன்றும் புரியவில்லையாம். இந்த நிலை உருவாகியிருக்கிறது எனது வட்டத்திலே. இந்தப் பகுதிகளின் நிலைமையைச் சீர்தூக்கிப் பார்த்து வரி வஜா செய்துகொடுத்தால் நலமாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.



29th January 1963] *[திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்]*

அடுத்தபடியாக வரியைப் பற்றிப் பேசினார்கள். அதிக வரி என்றால் பொது மக்கள் வருத்தப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்று பரவலாக எல்லோரும் பேசினார்கள். மறுமுறையும் அதைப் பற்றிப் பேசிக்கொண்டிருப்பது நன்றாக இருக்காது என்று கருதுகிறேன்.

மதுவிலக்கு என்ற தலைப்பிலே வந்தால், மதுவிலக்கு என்ற வாசகத்தைப் பார்த்ததும் எனக்கு திக்கென்றது. இதற்கு முன் போலீஸில் இருந்த காரணத்தினால் மதுவிலக்கைப் பற்றி எனக்கு நன்றாகத் தெரியும். ஆனால் வெளிப்படையாகச் சொல்ல முடியவில்லை. இரகசிய போலீசாரோ அல்லது அதிகாரிகளோ கேட்டால் எனது கருத்துக்களைத் தெளிவாகச் சொல்ல ஆசைப்படுகிறேன். உண்மையிலேயே இப்போது மன்றத்தில் சொல்லவும் மாட்டேன், சொல்லவும் மனமில்லை. இந்த நிலையில் இருக்கிறேன் நான். அதே நிலையில் போலீசாரைப்பற்றி பரிந்து பேசவும் முடியவில்லை, போலீசார் மீது குறை சொல்லாமல் இருக்கவும் முடியவில்லை. மேலும் சென்னையைப் பொருத்த அளவில் மதுவிலக்கு சம்பந்தமாக பொய் கேஸ்களைப் போட்டு, பொது மக்களுக்கு—குறிப்பாக ஆதித் திராவிட மக்களுக்கு—தொந்தரவு கொடுக்கிறார்கள் என்று பரவலாக வதந்திகள் வந்துகொண்டிருக்கின்றன. அது உண்மையோ, பொய்யோ தெரியாது. உண்மை என்றால் வருந்துகிறேன்—பொய் என்றால் சொன்னவர்கள் தவறான பாதையில் போகிறார்கள் என்று கருதுகிறேன். பாமர மக்களுக்கு பாதகம் ஏற்படாமல் இருக்க சர்க்கார் ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த விவாதத்தில் கலந்துகொள்ள சந்தர்ப்பம் அளித்ததற்கு நன்றியையும் வணக்கத்தையும் சொல்லி முடித்துக் கொள்கிறேன்.

[29th January 1963

* **திரு. ஏ. கூ. காளியப்ப கவுண்டர்** : கனம் தலைவர் அவர்களே, மதிப்புக்குரிய கவர்னர் அவர்கள் ஆற்றிய உரையை ஆதரித்துச் சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். இப்போது இருக்கும் நெருக்கடியிலே கிராமத்தொண்டர் படை ஆரம்பித்திருக்கிறார்கள். அதிலே விவசாயத்திற்குத் தான் முக்கியத்துவம் கொடுத்திருக்கிறார்கள். விவசாயத்திலே விவசாயிகளுக்கு ரொம்பவும் கஷ்டம் இருக்கிறது. அதாவது உர லோன் ஒன்று வேண்டுமென்றால் ஏழு ஃபாரங்கள் எழுத வேண்டியிருக்கிறது. அதுவும் கர்ணத்திடமும் எழுதி வாங்கவேண்டியிருக்கிறது. அப்புறம் மேற்படி ஏழு ஃபாரத்திலும் கிராம சேவகர் இடத்தில் அத்தாட்சி வாங்க வேண்டும். இப்படியெல்லாம் மிகவும் கஷ்டங்கள் இருக்கின்றன. அதனால் I.M.S. லோனுக்கு என்று தனியாக தொகை ஒதுக்கி லோனில்தான் வாங்கவேண்டும் என்று நிபந்தனை இருக்கக் கூடாது. லோன் வேண்டுமேயானால் கொடுக்க வேண்டும். லோன் வேண்டாம் என்று சொல்கின்றவர்களுக்கு ரொக்கத்திற்கு வாங்க கொடுக்க வேண்டும். அப்படி இருந்தால் தான் விவசாயிகளுக்கு வீண் அலைச்சலும் உரம் வாங்குவதற்கு மேற்கொண்டு அதிகச் செலவும் ஆகாது. கூடிய சீக்கிரம் காலா காலத்தில் உரம் கிடைக்கும். எலெக்ட்ரிக் மோட்டார் லோன் அல்லது உர லோன் வேண்டுமென்றால் கூட்டுப்பட்டாதார் கையெழுத்து வேண்டுமென்று சொல்லுகிறார்கள். கூட்டுறவு சொஸைட்டிகளிலெல்லாம் கூட்டுப்பட்டா கையெழுத்து இல்லாமல் கடன் கொடுக்கிறார்கள். அது போல விவசாயிகளுக்கும் லோன் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். உரம் வாங்க கர்ணத்திடம் எத்தனை ஏக்கர் பயிர் செய்திருக்கிறது என்று சர்ட்டிஃபிகேட் வாங்க ரொம்பக் கஷ்டமாக இருக்கிறது. பொதுவாக கிராமத்தில் ஒவ்வொரு வயலுக்கும் தோட்டத்திற்கும் காட்டிற்கும் பெயர் இருக்கிறது. அந்த பெயர்களை வைத்து அவர்கள் ஒரு ரிஜிஸ்டர் தயார் செய்து யூனியனிடம் கொடுத்தால் அதை வைத்து பஞ்சாயத்து போர்டு பிரெஸிடெண்டும் கிராம சேவக்கும் கொடுப்பதற்கு சௌகரியமாக இருக்கும். கிராம சேவக்குகள் சர்வே ட்ரைனிங் பழகியிருக்க வேண்டும்.

நில்ச்சுவாந்தார்களுக்கும், குத்தகைதாரர்களுக்கும் பூமி விஷயமாக, உழவடை விஷயமாக தகராறு ஏற்படும்போது இது ஆர்.டீ.ஓ. கோர்ட்டுக்குப் போகிறது. இதனால் விவசாயிகளுக்கு ரொம்ப செலவும் கஷ்டமும் ஏற்படுகிறது. இதை பஞ்சாயத்து யூனியனுக்கே கொடுத்து அது யாருடைய சுவாதீனத்தில் இருக்கிறது என்று அவர்கள் தெரிந்து தீர்ப்பு செய்தால் நலமாக இருக்கும் என்று நினைக்கிறேன். அதற்கு மேல் அப்பீல் மாவட்ட கலெக்டருக்கு வைத்தால் நல்லது.

விவசாயத்திற்குத் தண்ணீர் தேவை, பாசன வசதி தேவை. ஹைவேஸ் டிபார்ட்மெண்டு சூபர்வைசர்களை எப்படி யூனியனோடு இணைத்திருக்கிறார்களோ, அதேமாதிரி லஸ்கர்களையும் யூனியனோடு இணைக்கவேண்டும். அதனால் ஓரளவுக்கு தண்ணீர் கஷ்டமில்லாமல் பாய ஏதுவாக இருக்கும்.



29th January 1963] [திரு. ஏ. கூ. காளியப்ப கவுண்டர்]

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 17 லட்சம் டன் உணவு உற்பத்தி அதிகம் செய்யவேண்டும் என்று கவர்னர் பெருமான் அவர்கள் உரையிலே கூறியிருக்கிறார்கள். எங்களுடைய தொகுதி ரொம்ப வரண்ட பிரதேசம். குந்தா திட்டத்திலிருந்து இப்பொழுது மின்சாரம் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அங்கே அணை கட்டுகிறார்கள். அந்த அணையிலிருந்து சுமார் 30,000, 40,000 ஏக்கரா நிலங்களுக்குப் பாசன வசதி செய்து கொடுப்பதாகக் கேள்விப்பட்டேன். அப்படிப் பாசனத்துக்கு கொடுக்காமல் 4, 5 தொகுதிகளுக்கும் அதைப் பிரித்துக் கொடுக்கும் முறையில் வாய்க்கால்வெட்டி தண்ணீர் கொடுத்தால் அந்த தொகுதிகளிலுள்ள குளம், ஏரி, குட்டை இவைகளில் தண்ணீர் நிரப்பினால் எல்லாக் கிணறுகளுக்கும் தண்ணீர் வந்துவிடும். அதோடு ஒரு வருஷத்தில் கருப்பு தானியம் இருபோகமும் புகையிலை ஒருபோகமும் சாகுபடி செய்யலாம். புகையிலையும் அதிகமாக உற்பத்தி செய்யலாம். அதனால் சென்டிரல் எக்ஸைஸ் டியூடி மூலம் அதிக வருமானம் கிடைக்கும். கோவை ஜில்லாவிலே பெரும்பாலும் தண்ணீர் இல்லாமல் வரண்ட பிரதேசம் என்பது அடிபட்டுப்போகும். அப்படி இல்லையென்றாலும் என்னுடைய தொகுதிக்கு இப்பொழுது இருக்கும் கீழ் அணைக்கட்டில் வாய்க்கால் வெட்டி தண்ணீர் பாய ஏதுவில்லாமல் மேடாக இருப்பதால் பம்பு செட் மூலமாக தண்ணீர் கொடுப்பதற்கு வசதி செய்தால் இன்னும் உற்பத்தி அதிகமாக்குவதற்கு சௌகரியமாக இருக்கும். விவசாயிகளுக்கு இரவில் மின்சாரம் கொடுக்கிறார்கள். பகலில் கொடுத்தால் ரொம்பவும் நலமாக இருக்கும். இத்துடன் என்னுடைய சிற்றுரையை முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. எஸ். நஞ்சுண்ட ராவ்** : கனம் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்களுடைய உரையை ஆதரித்து நான் பேசுகிறேன். கவர்னர் உரையில் சாதாரண விஷயங்களைப்பற்றி எல்லாம் சொல்லப்பட்டிருக்கிறது என்று ரோடிலுள்ள சாதாரண ஜனங்கள் பேப்பரில் படித்து சொல்லிக்கொண்டிருக்கும்போது எனக்கு மனதில் சந்தோஷம் ஏற்படுகிறது. கவர்னர் உரையிலே சாதாரண மக்கள் படித்துத் தெரிந்து கொள்ளவேண்டிய விஷயங்கள் எல்லாம் பற்றி குறிப்பிடப்பட்டிருக்கிறது. விவசாய உற்பத்தி பற்றியும், காய்கறி உற்பத்தியைப் பெருக்கவேண்டும் என்பது பற்றியும் அதில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. பேப்பர் கடை பக்கத்தில் சாதாரண ஜனங்கள் இதைப் படித்து இதைப்பற்றிப் பேசிக்கொண்டிருப்பதைப் பார்க்கும்போது எனக்கு மனதில் ஏற்பட்ட எண்ணத்தை நான் சொல்லவிரும்புகிறேன். தமிழ் நாட்டு அரசாங்கத்திலே நடைபெறுகின்ற திட்டங்கள் என்னென்ன இருக்கின்றனவோ அவைகளையெல்லாம் பற்றி மக்களுக்குச் சொல்லுகிற அளவுக்கு கவர்னர் அவர்களுடைய உரை அமைந்திருக்கிறது. தமிழ் நாட்டு அரசாங்கத்தினுடைய திட்டங்களுடைய விஸ்வரூபத்தையே கவர்னர் பெருமான் தன்னுடைய உரையிலே எடுத்துச் சொல்லியிருக்கிறார். காய்கறி உற்பத்தி முதல், காஸ்மிக்-ரே ரிஸர்ச் லெபாரட்டரி வரையில் எல்லா விஷயங்களும் அமைந்துள்ள கவர்னர் உரையைச் சாதாரண மக்கள் படித்து நம்முடைய தேசத்தில் நடை-

[திரு. எஸ். நஞ்சுண்ட ராவ்] [29th January 1963

பெறுகின்ற திட்ட வேலைகளுக்கெல்லாம் எந்த விதத்தில் சாதாரண மக்களும் உதவி செய்ய வேண்டும் என்று யோசிக்கின்ற அளவுக்கு ஒரு உணர்ச்சியை மக்களிடையே அது ஊட்டியிருக்கிறதென்று நம்புகிறேன். கவர்னர் பிரசங்கத்தைப் பற்றி சாதாரண மக்கள் பேசுவதைப் பார்த்து என் மனதில் ஏற்பட்ட எண்ணத்தை சபையின் முன்னால் பெருமையோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

கவர்னர் உரையிலே காய்கறி உற்பத்தி பற்றி சென்னை அரசாங்கம் நல்லதொரு திட்டத்தைக் கொண்டுவர இருக்கிறது என்று சொல்லி இருக்கிறார்கள். டவுன்களில் மட்டுமல்லாமல் பக்கத்திலுள்ள எல்லா காய்கறி விவசாயிகளுக்கும் இதன்மூலம் உதவி கிடைக்கவேண்டும். இதற்காக பட்ஜெட்டில் ரூபாய் 13.7 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அந்தத் தொகை இந்த வருஷத்திற்குப் போதுமானதாக இருக்கலாம். ஆனால் அடுத்த வருஷத்தில் இந்தத் தொகையை இரண்டு மடங்காக அதிகப்படுத்துவதற்கு அவசியம் ஏற்படுமென்று நினைக்கிறேன். காய்கறி உற்பத்தி செய்யும் சாதாரண கிராம ஜனங்கள் காய்கறிகளை குறைந்த விலைக்கு விற்கவேண்டிய நிலைமை ஏற்படுகிறது. இந்தியாவிலிருந்து ரஷ்யாவிற்கு வாழைப்பழங்களை 'கோல்டு ஸ்டோரேஜில்' வைத்து ஏற்றுமதி செய்யும் முறையைப்போல், காய்கறி அதிகமாக உற்பத்தியாகிற சந்தர்ப்பத்தில் திண்டுக்கல், மதுரை போன்ற பெரிய டவுன்களில் காய்கறிகளை 'கோல்டு ஸ்டோரேஜில்' வைத்து பின்னால் தேவைப்படும்போது விற்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். அப்படிச் செய்தால் காய்கறி உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு சரியான கூலி கிடைக்கும், தகுந்த பலன் கிடைக்கும் என்று நினைக்கிறேன்.

கவர்னர் பிரசங்கத்திலே ஒவ்வொரு கிராமத்திலும் கிராமத் தொண்டர் படை அமைத்து பஞ்சாயத்து யூனியன்களிலும் பஞ்சாயத்துக்களிலும் சமுதாய நலத் திட்டங்களுக்கு உதவியாக இருக்கும்படி ஏற்பாடு செய்யவேண்டும் என்ற திட்டத்தைப் பற்றி ரொம்பவும் ஜாஸ்தியாக சொல்லப்பட்டிருக்கிறது. என்னுடைய அபிப்பிராயத்தில், சமுதாய நல திட்டங்களுக்கு உதவியாக இருப்பதற்கு பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன்கள் தொடங்கப்பட்டது முதற்கொண்டே கிராமத் தொண்டர் படை திட்டம் ரொம்பவும் முக்கியம் தான். நம்முடைய சுதந்திர இந்தியாவில் குடியரசு நாட்டிலே 15 வருஷங்கள் ஆன பிறகாவது இந்தத் திட்டத்தைக் கொண்டுவந்ததுபற்றி எனக்கு ஒரு பெருமை உண்டு. காரணம், கிராம வாலிபர்களுக்கு ஓட்டுரிமை கொடுத்து, அவர்களுக்கு ஓட்டுரிமை கொடுத்த பிற்பாடு அவர்களின் கடமை என்ன, அவர்கள் என்ன என்ன செய்யவேண்டும், அவர்கள் உரிமைகள் என்ன என்று சொல்லிக்கொடுப்பதற்கு 'ஸோஷல் எஜுகேஷன்' என்று சொல்கின்ற முறையில் அவர்களுக்கு இதுவரையில் சந்தர்ப்பம் கிடைக்காமல் இருந்தது. இப்பொழுது அதற்கு சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது. சீனர்கள் படையெடுத்த பிறகு போம் டிலா எங்கிருக்கிறது, வாலாங் எங்கிருக்கிறது என்று தெரிந்து கொள்வதற்கு கிராம மக்கள் ஆர்வம் கொண்டிருக்



29th January 1963] [திரு. எஸ். நஞ்சுண்ட ராவ்]

கிறார்கள். இமயமலை எங்கிருக்கிறதென்று கூட தெரியாத கிராம மக்கள் இமயமலை இருக்குமிடத்தைத் தெரிந்துகொள்ள வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இந்த நெருக்கடியின் மூலம் நம்முடைய நாட்டு வாலிபர்களுக்கு சமூக கல்வி பெறுவதற்கு ஒரு பெரிய சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது. போம்டிலா எங்கிருக்கிறது, டோவாங் எங்கிருக்கிறது, வாலாங் எங்கிருக்கிறது என்று தெரிந்துகொள்ள அவர்கள் ஆவலாய் இருக்கிறார்கள். தந்தி பேப்பரில் இந்த ஊர்களின் பெயர்களைப் பார்த்துவிட்டு அந்த ஊர்கள் எங்கிருக்கிறதென்று ஆசிரியர்களைக் கேட்டு தெரிந்துகொள்ளவேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. மாடு மேய்க்கும் ஒரு சாதாரண வாலிபன், ஆடு மேய்க்கும் ஒரு சாதாரண வாலிபன் இமயமலை எங்கிருக்கிறது, டோவாங் எங்கிருக்கிறது என்று கிராமத்து ஆசிரியர்களையோ அல்லது இதர நண்பர்களையோ கேட்டுத் தெரிந்துகொள்ளவேண்டிய நிலைமை இன்று ஏற்பட்டிருக்கிறது. 'நாட்டிற்கு பெரிய ஆபத்து ஏற்பட்டிருக்கிறது, ரொம்ப கஷ்டம் ஏற்பட்டிருக்கிறது, நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது, நீங்கள் ஏதாவது 4 அணா, 2 அணா காமராஜருக்கு அனுப்பிவைத்தால் கூட காமராஜ் கையெழுத்துப்போட்டு ரசீது வந்துவிடும்' என்று சொல்லும்பொழுது, கிராம மக்கள் ஆச்சரியத்தோடு எங்களுக்கு ரசீது வந்துவிடுமா, நாங்கள் கண்டிப்பாக அனுப்புகிறோம், நம் நாட்டின் சுதந்திரம் காப்பாற்றப்படவேண்டும், சிக்கல் தீர்க்கப்படவேண்டும் என்று ஒரு சாதாரண கிராம வாலிபன் கூட நினைக்க வேண்டிய சூழ்நிலை இன்று ஏற்பட்டிருக்கிறது. ஆகையினாலே கிராம ஜனங்களுக்கு, கிராம வாலிபர்களுக்கு 'லீடிலன்ஷிப் டிரெயினிங்' கொடுப்பதற்கு இது ஒரு நல்ல சந்தர்ப்பம். இப்பொழுதாவது 15 வருஷங்கள் பூர்த்தியான பிறகாவது இந்தத் திட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டத்தை இந்த மன்றத்திலுள்ள எல்லோரும் வரவேற்கவேண்டும், இந்தத் திட்டத்தை நல்ல முறையில் பயன்படுத்தவேண்டிய முயற்சிகளைச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(கனம் சபாநாயகர் அவர்கள் தலைமை.)

சமுதாய நலத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டபோது பஞ்சாயத்துக்கும் அதற்கும் சம்பந்தம் இல்லாமல் இருந்தது. பிறகு சமுதாய நல திட்டங்களை நிறைவேற்றுவதற்கு பஞ்சாயத்து ராஜ்யம் தேவை என்று கருதி பஞ்சாயத்து ராஜ்யத் திட்டத்தைக் கொண்டுவந்தார்கள். அதற்குப் பிறகு பஞ்சாயத்து யூனியன்கள் ஏற்படுத்தப்பட்டன. சமுதாய நல திட்டங்களை நல்ல முறையில் நிறைவேற்றுவதற்கு எப்படி கிராம சபைகள் ஏற்படுத்தப்பட்டனவோ அதே மாதிரி வாலிப சபை, கிராமத் தொண்டர் படை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அது ஒரு பெரிய முக்கியமான திட்டம். ஆரம்ப சூரத்தனம் என்ற முறையில் இல்லாமல் தொடர்ந்து நல்ல முறையில் இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட வேண்டும். குடி மக்களுக்கு வேண்டிய பெருவாரியான திட்டங்களை நிறைவேற்றுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளை சர்க்கார் மட்டும் செய்தால் போதாது. இந்த மன்றத்திலுள்ள எல்லா அங்கத்தினர்களும், கிராமங்களிலுள்ள எல்லா

[திரு. எல். நஞ்சுண்ட ராவ்] [29th January 1963

முக்கியஸ்தர்களும் நல்ல முறையில் ஒத்துழைத்தால் இந்த கிராமத் தொண்டர்படை திட்டம் வெற்றிகரமாக நடக்கும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. நமது அரசாங்கம் அதற்கு வேண்டிய இன்ஸென்டிவ்களைச் செய்துகொடுக்கலாம். தொண்டர்கள் நல்ல முறையில் செயலாற்றுவதற்கு நல்லதொரு இன்ஸென்டிவ் புரோகிராமை அமைத்துக்கொடுக்கலாம். எந்த கிராமத்திலுள்ள தொண்டர்படை நல்ல முறையில் வேலை செய்கிறதோ, அவர்களுக்கு சென்னை மாகாணம் பூராவிலும் சுற்றுப்பிரயாணம் செய்வதற்கு வசதி செய்துகொடுக்கலாம். விவசாய உற்பத்தியைப் பெருக்குவதற்கும், நல்ல பல ஆக்க வேலைகளைச் செய்வதற்கும் வசதிகள் செய்து கொடுக்கலாம். மேலும் எந்த கிராமத் தொண்டர் படை நல்ல முறையில் வேலை செய்கிறதோ அதற்கு பாரத தரிசனத்திற்கு வசதி செய்துகொடுக்கலாம். என்னுடைய அபிப்பிராயத்தைச் சொன்னேன். சர்க்காருக்கு எது உசிதமென்று தோன்றுகிறதோ அந்த முறையில் ஒரு இன்ஸென்டிவ் புரோகிராமை அமைத்துக்கொடுத்தால் அது ஒரு பெரிய லீடர்ஷிப் புரோகிராமாக இருக்குமென்று நான் நம்புகிறேன்.

கவர்னர் அவர்கள் உரையில் மின்சாரத்தைப் பற்றி சொல்லியிருக்கிறார்கள். கிராம மக்கள் கனவிலே கூட தங்கள் குக்கிராமங்களுக்கு மின்சார வசதி கிடைக்குமென்று எதிர்பார்த்திருக்க மாட்டார்கள். இப்பொழுது குக்கிராமங்களுக்கெல்லாம் மின்சார வசதி செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அதிலே பல சிக்கல்கள் ஏற்பட்டிருக்கின்றன. விவசாயத்திற்கு மின்சார வசதி செய்துகொடுக்கும்போது 3 ஹார்ஸ் பவர் அல்லது 5 ஹார்ஸ் பவர் மோட்டார் வைத்திருந்தால்தான் கொடுக்கலாம் என்று பல கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருக்கின்றன. இதனால் கமலை வைத்து தண்ணீர் பாய்ச்சலாம் என்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. நீர்த் தேக்கங்களில் தண்ணீர் இல்லாமல் இருக்கும் நிலைமை கிராம மக்களுக்குத் தெரியாது. பகல் நேரத்திலேயே மின்சாரம் கொடுக்கவேண்டுமென்று என்ஜினியர்களிடம் சண்டை போடக் கூடிய நிலைமை கூட ஏற்பட்டிருக்கிறது. நெய்வேலி இரண்டாம் பகுதி திட்டம் பூர்த்தி அடைந்ததும் எல்லா விவசாயிகளுக்கும் பகல் நேரத்திலேயே மின்சாரத்தைக் கொடுத்து உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு உதவவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கவர்னர் அவர்களின் உரையில் 28-வது பாராவிலே கீழ்க்கண்டவாறு சொல்லப்பட்டிருக்கிறது :

"The Government of India have under consideration the constitution of All-India Services for Medical and Public Health as well as for Engineering and Forestry. This Government have agreed to principle to the formation of such services. Details of the schemes are being worked out in consultation with the Government of India."

மேலே குறிப்பிட்ட நான்கு சர்விஸ்களுடன் கல்வியையும் சேர்த்துக்கொண்டால் நல்லதென்று நான் நினைக்கிறேன். அதே போன்று அகில இந்திய ரீதியில் எந்தெந்த இலாகாக்கள் நல்ல



29th January 1963] [திரு. எல். நஞ்சுண்ட ராவ்]

முறையில் ஈடுபடமுடியுமோ அந்த மாதிரியான இலாகாக்களையும் சேர்த்துக்கொண்டால் நல்லது என்று தெரிவித்துக்கொண்டு, கவர்னர் அவர்களின் உரையை ஆதரித்து, என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

* திரு. ப. கா. முத்துவேலப்ப கவுண்டர் : கனம் சபாநாயகர் அவர்களே, கவர்னர் பெருமானின் உரையை ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். சென்ற வருடத்திலே உணவு தானியங்களின் விலை ஏறிவிட்டதென்றும், அதனால் மக்கள் பஞ்சத்தினால் கஷ்டப்படுகிறார்கள் என்றெல்லாம் எதிர்க்கட்சிக்காரர்கள் பேசிவந்தார்கள். அதற்காக தியாகம் கூட செய்தார்கள். அரசாங்கம் நல்ல திட்டங்களை நிறைவேற்றி, உணவுப் பஞ்சத்தை போக்க தீவிரமான நடவடிக்கைகள் எடுத்ததன் காரணமாக இப்பொழுது அநேகமாக எல்லா இடங்களிலும் உணவு தானியங்களின் விலை மிகவும் குறைந்துவிட்டது. இதைப்பற்றி எதிர்க்கட்சியிலே உள்ள ஒரு அங்கத்தினர் கூட, நெல் விலை மிகவும் குறைந்துவிட்டது, அதனால் விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கின்றனர், ஆகவே விலை மேலும் குறையாமல் பாதுகாப்பு அளிக்கவேண்டுமென்று அரசாங்கத்தை கேட்டுக்கொண்டார். அது உண்மைதான். விலை மிகவும் குறைந்துவிட்டது. நெல் விலை அதிகமாகக் குறைந்தால் விவசாயிகளுக்கு ஊக்கம் இருக்காது. அதனால் உணவு உற்பத்தி பெருகுவதில் தடை ஏற்படும். ஆகவே விலைகள் குறையாமல் இருப்பதற்கு ஓர் அளவுக்கு விவசாயிகளைப் பாதுகாக்கவேண்டியது அரசாங்கத்தின் கடமை என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

கவர்னர் பெருமான் உரையில் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் கூடுதலாக 17 லட்சம் டன் உணவு உற்பத்தி செய்ய வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. இதை நான் வரவேற்கிறேன். என்னுடைய கோபிசெட்டிபாளையம் தொகுதியிலே உணவு தானியங்களைப் பெருக்குவதற்கு இயற்கையாகவே வசதி இருக்கிறது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். கீழ் பவானி ஏரியாவிலே சுமார் 2 லட்சம் ஏக்கருக்கு தண்ணீர் பாய்கிறது. அந்த தண்ணீர் புன்செய் சாகுபடிக்குத்தான் என்ற வகையில் முதலிலே திட்டம் வகுக்கப்பட்டது. அதன் பேரில் முதல் 4, 5 வருடங்களில் புன்செய் சாகுபடி செய்து, புன்செய் தானியங்கள் நல்ல முறையில் உற்பத்தியில்லாததினால் மக்கள் கனம் ரெவின்யூ அமைச்சர் அவர்களிடத்தில் முறையிட்டார்கள். நெல் பயிரிடுவதற்கு அனுமதிகொடுத்து முதல் போகம் 4 மாதத்திற்கும், அடுத்த போகம் 3½ மாதத்திற்கும் தண்ணீர் வசதி செய்து கொடுத்தால் நெல் பயிர் சாகுபடி செய்யமுடியும் என்று தெரிவித்தார்கள். அதே மாதிரி அரசாங்கம் அனுமதி கொடுத்ததன் காரணமாக இப்பொழுது எங்கள் பகுதியில் ஏராளமான நெல் உற்பத்தி ஆகியிருக்கிறது. அங்குள்ள மக்களின் பொருளாதார நிலையும் உயர்ந்திருக்கிறது. குடியானவர்கள் தங்கள் இஷ்டம்போல்தான் பயிர் செய்ய விரும்புகிறார்கள். பூமியின் தரத்திற்கு தகுந்தவாறு பயிர் செய்கிறார்கள். எந்த மாதிரி விலை நிலவரம் இருக்கிறதோ அதற்குத் தகுந்தவாறு பயிர் செய்கிறார்கள். சிறிது காலம் பருத்தி பயிர் செய்தார்கள். இப்பொழுது மூன்று வருஷ காலமாக

[திரு. ப. கா. முத்துவேலப்ப கவுண்டர்] [29th January 1963

நெல் சாகுபடி செய்கிறார்கள். அவ்வாறு மூன்று வருஷ காலம் நெல் சாகுபடி செய்யாதவர்களுக்கு தண்டத் தீர்வை போடப் பட்டிருக்கிறது. அதனால் குடியானவர்கள் வருத்தப்படுகிறார்கள். இந்த மாதிரி தண்டத் தீர்வை போடவேண்டிய அவசியம் இல்லை. அவர்கள் ஒன்றும் தெரியாதவர்கள். மூன்று வருஷ காலமாக ஏன் நெல் பயிர் செய்யவில்லையென்று கேட்டால் அவர்களுக்கு என்ன தெரியும்? ஆகவே இந்த தண்டத் தீர்வை போடக்கூடாது என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் கீழ் பவானி பகுதியில் ஒரு தடை விதித்திருக்கிறார்கள். சிறு வாய்க்கால், பெரிய வாய்க்காலுக்குப் பக்கத்திலே எலக்டிரிக் மோட்டார் வைக்கக்கூடாது என்று ஒரு கட்டுப்பாடு வைத்திருக் கிறார்கள். பெரிய வாய்க்காலாக இருந்தால் 2 பர்லாங்கு தூரத் திற்குள் மோட்டார் வைக்க முடியாது. சிறிய வாய்க்கால் பக்கத்திலே செல்லும்போது 1 பர்லாங்கு தூரத்திற்குள் மோட்டார் வைக்கமுடியாது. கிளை வாய்க்கால்களைப் பொறுத்த
1-0 p.m. வரையிலும் கூட இந்த மாதிரி கஷ்டம் இருக்கிறது. என்ஜினியர் களைக் கேட்டால் ஊற்று நீரை இழுத்து விடுமென்று சொல்கிறார் கள். முதலிலே புன்செய் தானியம் மட்டும்தான் பயிர் செய்யலாம், நெல் பயிர் செய்தால் தண்ணீர் கிடையாது என்று சொல்லி வந்தார் கள். பிறகு அமைச்சர் அவர்கள் உத்தரவு போட்டதின் பேரில் இப்பொழுது நெல் சாகுபடி நடந்துவருகிறது. ஆகவே இந்த மாதிரி பயப்படவேண்டிய அவசியமில்லை. எலக்டிரிக் மோட்டார் வைத்துக்கொள்வதற்கு வசதி செய்து கொடுத்தால் 1 லட்சம் ஏக்கரில் நல்ல முறையில் உணவு உற்பத்தி செய்யமுடியுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

கோபிச்செட்டிபாளையம், சத்தியமங்கலம், கால்வாய்க்கொம்பை பகுதிகளில் வரும் தண்ணீரை விவசாயத்திற்குப் பயன்படுத்தும் வகையில் ஓர் அணை கட்டினால், ஆயிரம் ஏக்கரா நஞ்சை நிலத் திற்குப் பாசன வசதி ஏற்படுவதோடு கூட, அந்தப் பகுதியிலுள்ள பத்தாயிரம் ஏக்கராக்களில் இருக்கும் கிணறுகளுக்குத் தண்ணீர் கிடைக்கும். அதன் மூலம் நல்ல விவசாய உற்பத்திக்கு வழி ஏற்படும்.

செம்மணுக்கம்பாளையம் பள்ளம் குறித்து சர்வே நடப்பதாகத் தெரிகிறது. அந்த சர்வே முடிந்துவிட்டதா, இல்லையா என்பது இன்னும் தெரியவில்லை. மழைக் காலங்களில் கொங்கர்பாளையம் பள்ளத்திலும் ஏராளமான தண்ணீர் வருகிறது. அதைத் தடுத்தால் முப்பதாயிரம் ஏக்கராக்களில் உள்ள கிணறுகளுக்குத் தண்ணீர் கிடைப்பதோடு, ஆயிரம் ஏக்கரா நஞ்சை நிலங்கள் சாகுபடிக்கு வரக்கூடும்.

தடைப்பள்ளி, அரக்கன்கோட்டை சானலின் கீழ் நாற்ப தாயிரம் ஏக்கரா நஞ்சை நிலம் இரு போகமாக விளைந்து கொண்டிருக்கிறது. அந்த சானல் லோயர் பவானிக்குக் கீழ்ப் பக்கமாக ஓடிக்கொண்டிருக்கின்றது. அதில் லோயர் பவானியின் கழிவு நீர் அதிகமாக வந்து மழை காலத்தில் அந்த வாய்க்காலின் கரையை உடைத்து விடுகிறது. அதனால், அந்தப் பகுதியில் தண்ணீர் இல்லாமல் போய்விடுகிறது. கரை கட்டுவதற்குப் பத்து,



29th January 1963] [திரு. ப. கா. முத்துவேலப்ப கவுண்டர்]

இருபது நாட்கள் ஆகின்றன. அதற்குள் பயிர் வாடி, விவசாயிகள் நஷ்டப்படுகிறார்கள். அந்தக் கரையை நல்ல முறையில் செப்பனிடு வதற்கு அமைச்சர்கள் வந்து பார்த்து, இதை ஸ்பெஷல் ஸ்கீமிலே கொண்டுவந்து நிறைவேற்ற ஏற்பாடு செய்வதாகச் சொன்னார்கள். இந்த வருஷத்திலாவது அதை ஸ்பெஷல் ஸ்கீமிலே கொண்டுவந்து, நல்ல முறையில் செப்பனிட்டுக் கொடுக்கும்படி நான் கேட்டுக் கொள்கின்றேன்.

அரக்கன்கோட்டை வாய்க்காலை அகலப்படுத்தி, சிறு கால்வாய் கட்ட திட்டம் போடப்பட்டிருக்கிறது. 450 ஏக்கராக்களுக்குத் தண்ணீர் பாயும்படியான திட்டம் அது. அதை இன்னும் இரண்டு இடங்களில் மேட்டுப் பகுதிகளில் பிரித்துவிட்டால் ஆயிரம் ஏக்கராக்களுக்குப் பாசனம் ஏற்படும். இந்தத் திட்டத் தையும் நடத்திக் கொடுக்குமாறு நான் கேட்டுக்கொள்கிறேன்.

லோயர் பவானித் தண்ணீர் பூமியிலே பாய்ந்து ஓடையிலே ஏராளமான தண்ணீர் கசிந்து வீணாகிறது. ஈரோட்டிலிருந்து சத்தியமங்கலம் வரையில் 34 பள்ளங்களில் ஏராளமான தண்ணீர் போகிறது. அதனால் ரோடுகளுக்கு இடைஞ்சல் ஏற்படுகிறது. அந்தத் தண்ணீரை மேல் பள்ளங்களில் கட்டித் தேக்கினால் ஒவ்வொரு பள்ளத்திலும் 300, 400 ஏக்கராவுக்குப் பாசன வசதி ஏற்படும். நல்லதொரு திட்டம் வகுத்து, கசிவுத் தண்ணீரைப் பயன்படுத்தினால், ஏழாயிரம் முதல் எட்டாயிரம் ஏக்கரா வரையில் நிலம் பாசன வசதி பெறும்.

பாலப்பாளையம் பள்ளம், அரசூர் பள்ளங்களிலும் நீர் அதிகமாக வருகிறது. லோயர் பவானிப் பகுதியில் கோபிச்செட்டிப்பாளையம் தாலுகாவில் இரண்டு கிராமங்கள்தான் தண்ணீர் வசதி பெறாத வைகளாக இருக்கின்றன. அவற்றின் தலை எழுத்து சரியாக இல்லை என்றுதான் சொல்லவேண்டும். அந்தக் காலத்தில் இருந்த பெரியவர்கள் இந்தக் கிராமங்களுக்குத் தண்ணீர் தேவையில்லை என்று சொல்லிவிட்டார்களாம். அந்தக் கிராமங்களைச் சுற்றி இருக்கும் பகுதிகளெல்லாம் நஞ்சையாக நல்ல வளம் பெற்றிருக்கும்போது இந்தக் கிராமங்கள் மட்டும் வாடி வதங்கி யிருக்கின்றன. நமது முதல் அமைச்சர் அவர்களிடத்தில் சென்று, மேல் பவானித் திட்ட வாய்க்காலிலிருந்து நம்பியூர், புஞ்சை புளியம்பட்டி பகுதிக்கு ஒரு வாய்க்கால் பிரித்துக்கொடுக்கும்படி கேட்டுக்கொண்டோம். லோயர் பவானியில், 83 ஆயிரம் க்யூசெக்ஸ் தேவை என்று திட்டம் இட்டிருந்ததாகவும் இப்பொழுது 140 க்யூசெக்சுக்கு அதிகமாகக் கொண்டு போய் விட்டதாகவும், அதனால் தண்ணீர் லோயர் பவானியில் இரண்டு மடங்காகிவிட்டது என்றும் இன்ஜினியர்கள் சொன்னார்கள். லோயர் பவானி வாய்க்காலிலிருந்து அந்த இரு கிராமங்களுக்குத் தண்ணீர் கொடுத்தால் ஏழாயிரம் ஏக்கர் நல்ல புஞ்சையாகும். அதை அமைச்சர் அவர்கள் கவனித்து, பெரியவர்கள் செய்த தவற்றைப் பேரன்மார்கள் அனுபவித்துக்கொண்டே இருக்க வேண்டும் என்ற நிலை நீடிக்காமல், நல்லதொரு திட்டத்தை வகுத்து, அந்த பூமிகளை நஞ்சை ஆக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டு என் சிற்றுரையை இத்துடன் முடித்துக் கொள்கின்றேன்.

வேண்டும். அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் எவ்வளவோ பிரச்னைகள் வருகின்றன. கூடுமான வரையில் கட்டுப்பாடு கூடாது என்ற வகையில்—உணவுப் பிரச்னை போன்றவைகளில் கட்டுப்பாடுகள் இல்லாமல் நாம் சமாளிக்க வேண்டும் என்ற வகையில்தான்—இந்த அரசாங்கம் நடவடிக்கைகள் எடுத்து வருகின்றது என்பதை கனம் அங்கத்தினர்கள் அறிவார்கள். ஆகவே கட்டுப்பாடு அவசியமாகயிருக்கிறபோது கட்டுப்பாடு வேண்டும் என்பதை அங்கத்தினர்கள் ஒப்புக்கொள்வார்கள். ஆனால், இதனால் இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் லட்சக் கணக்கான தொழிலாளர்களுக்கு வேலை பாதிக்கப்பட்டிருக்கிறது என்று சொல்வது மட்டும் சரியல்ல. இந்தத் தொழிலில் லட்சக் கணக்கில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பது உண்மை. எல்லோருக்கும் இந்தக் கவலை ஏற்பட்டிருக்கிறது. அதே நேரத்தில் ஏன் இவ்வாறு கட்டுப்பாடு வந்தது என்பதையும் நாம் தெரிந்துகொள்ள வேண்டும். இப்போது கனம் அங்கத்தினர் அவர்கள் விளக்கமாக இதைப்பற்றி சொன்னார்கள். பொதுவாக தங்கம் வெளியிடங்களிலிருந்து திருட்டுத்தனமாக வருகிறது. இதனால் அந்நியநாட்டு செலாவணி பாதிக்கப்படுகிறது. இம்மாதிரி திருட்டுத்தனமாக வருவதற்கு நாம் இடம் கொடுக்கக்கூடாது என்பதற்காகத்தான் இந்த உத்தரவு வந்திருக்கிறது என்பதை கனம் அங்கத்தினர்கள் அறிவார்கள். இந்த நெருக்கடியான நேரத்தில் இம்மாதிரியான ஒரு உத்தரவு வந்திருந்த போதிலும். இம்மாதிரியான உத்தரவு நம் நாட்டில் மட்டுமல்ல, மற்ற நாடுகளிலும் இருக்கிறது. கட்டுப்பாடு இருக்கிறது. நகை செய்வதிலும் உத்தரவு இருக்கிறது—கட்டுப்பாடு இருக்கிறது. வடநாட்டில் மட்டுமல்ல, இங்கிலாந்தில் 9 காரட்டில் தான் நகை செய்யவேண்டும் என்று இருக்கிறது. அவ்விதம் நகை செய்து கொண்டிருக்கிறார்கள். வட நாட்டில் இருப்பவர்களுக்கும் நகை ஆசை இருக்கிறது. இங்கிலாந்தில் இருப்பவர்களுக்கும் நகையின் மீது ஆசை இருக்கிறது. அங்கேயும் இம்மாதிரியான கட்டுப்பாடுகள் எல்லாம் இருக்கின்றன. நம்மைப் போல் வடநாட்டிலுள்ளவர்களும் நகை அதிகமாக அணிந்து கொண்டுதான் இருக்கிறார்கள் என்பதை நாம் பார்க்கின்றோம். ஆகவே நகையில் ஆசையைக் குறைக்க வேண்டும் என்று சொல்லவில்லை. நகையில் ஆசை இருப்பது நல்லதுதான். அதை நான் எதிர்க்கவில்லை. கையில் பணம் வைத்திருப்பதை நகையாக போட்டுக்கொள்ளலாம் என்ற எண்ணம் இருப்பது இயற்கை. அதற்காக கையிலிருக்கின்ற பணத்தையெல்லாம் கொண்டு தங்கத்தை வாங்க வேண்டுமா என்பதைப்பற்றித்தான் நாம் சிந்திக்கவேண்டும். ஏதோ 20 காரட்டில் தான் நகை செய்வது என்ற பழக்கம் நம்மிடையில் இருந்து வந்துவிட்டது. இம்மாதிரியான பழக்கங்கள் எத்தனையோ நம்மிடத்தில் இருக்கின்றன. பழக்கங்கள் எல்லாம் மாறாமல் அப்படியே இருக்கவேண்டும் என்று சொல்லுவது சரியல்ல. இப்போதுள்ள கட்டுப்பாடு முறைப்படி 14 காரட்டில் நகை செய்ய முடியுமா, முடியாதா என்பதை நாம் பார்க்கவேண்டும். எனது சக (கனம்) அமைச்சர் அவர்கள் கையிலுள்ள பென்சில் இருக்கிறது—அதுவும் தங்கத்தில் செய்தது தான். என்னிடத்தில் பேனா இருக்கிறது, இதிலுள்ள "நிப்"

14 காரட்டில் செய்யப்பட்டதுதான் உறுதியாக இருக்கிறது. வருஷக்கணக்காக உறுதியாக இருந்து நமக்கு உதவுகிறது. கடிகாரம் இருக்கிறது—என் கையில் இருக்கக்கூடிய ரிஸ்ட் வாட்ச் 14 காரட்டில் செய்யப்பட்டதுதான். ரோல்ட் கோல்ட் ஆகும். 1956-ல் ஜெனிவாவில் வாங்கியது. இப்போதும் உறுதியாக இருக்கிறது. எப்போதும் கையில் கட்டிக் கொண்டிருக்கிறேன். இரவு நேரங்களில் தூங்கும் போது கூட கையில் கட்டிக் கொண்டு தான் இருக்கிறேன். இவை எல்லாம் நன்றாகத்தான் இருக்கின்றன. அதல்லாமல் 22 காரட்டில் தான் செய்யவேண்டும் என்றும், அப்படித்தான் சாஸ்திரம் இருக்கிறது என்று சொல்வது, 22 காரட் என்றிருந்தால் தான் நகைகள் பண்ண முடியும் என்று சொல்வது எல்லாம் சரியல்ல. ஆனால் சில பேர்கள் இந்தச் சந்தர்ப்பத்தை வைத்துக்கொண்டு தொழிலாளர்களிடையே அனாவசியமான பீதியை உண்டாக்குகிறார்கள். இனிமேல் உங்களுக்குத் தொழில் கிடையாது, கடை வைத்திருப்பவர்களுக்கு எல்லாம் இனிமேல் வியாபாரம் செய்யமுடியாது என்றெல்லாம் பீதியை கிளப்பி விடுகிறார்கள். இவ்விதம் சொல்வதின் காரணமாக ஏழைத் தொழிலாளர்கள் கவலைப்படுவது இயற்கை. மதுவிலக்கை கொண்டு வந்தபோதும் சில தொழிலாளர்களுக்கு வேலையில்லாமல் தான் இருந்தது. அதற்காக மதுவிலக்குத் திட்டமே தவறு என்று சொல்லிவிட முடியுமா? இந்த மன்றத்தைப் பொறுத்தவரை அவ்விதம் யாரும் சொல்லமாட்டார்கள் என்பது உறுதி. ஒரு திட்டத்தின் காரணமாக வேலையில்லாமல் போகுமானால் அதைத் தவிர்ப்பதற்கு வேறு பல வேலைகளை செய்கிறோம். இப்போது தங்கக்கட்டுப்பாடு வந்ததின் காரணமாக நிலைமை சிறிதளவு மோசமாகி இருப்பதை அரசாங்கமும் உணர்ந்துதான் இருக்கிறது. அரசாங்கமும் இதில் கவலை கொள்கிறது. இன்னும் அரசாங்கம் மேற்கொண்டு கவனம் செலுத்தும். ஆனால் 14 காரட் மூலம் தங்க நகைகளை செய்யவே முடியாது என்று சொல்வது சரியல்ல. இதில் பயிற்சி கொடுப்பதற்கும்—இலவசமாக பயிற்சி கொடுப்பதற்கும்—இதற்காக மானியங்கள் கொடுப்பதற்கும் அரசாங்கம் தயாராக இருக்கிறது. இப்போது இருக்கின்ற கட்டுப்பாடுகளில் ஏதாவது தளர்த்தவேண்டுமென்றால் அந்த தளர்த்துவதற்கும் தங்கக்கட்டுப்பாடு போர்டார் தயாராக இருக்கிறார்கள் என்று அறிவித்திருக்கிறார்கள். இதை கனம் அங்கத்தினர்கள் அறிவார்கள். 14 காரட்டில் எவ்வளவோ நகைகளை செய்யலாம் "டைமன்ட்" நகைகள் செய்வதில் சில கஷ்டங்கள் இருப்பதாக முறையிட்டார்கள். அதற்காக சில கலப்புகள் சேர்த்தால் போதும் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இதைப்பற்றியும் ஆராய்ச்சி நடந்து கொண்டிருக்கிறது. கொஞ்ச நாட்களுக்குத்தான் இந்த நிலைமை இருக்கும். இதற்கான ஆராய்ச்சிகள் எல்லாம் நடந்துகொண்டிருக்கின்றன. அதன் மூலம் டைமன்ட் நகைகள் எந்த முறையில் செய்ய முடியும் என்பதையும் நாம் பார்க்கலாம். இதில் ஏதாவது கஷ்டங்கள் இருந்தால் வேண்டிய அளவு கட்டுப்பாடுகளை தளர்த்துவதற்கும் தங்க போர்டார் தயாராக இருக்கிறார்கள். இவற்றில் எல்லாம் வேண்டிய கவனம் செலுத்தப்படும். இம்மாதிரி 14





காரட்டில் நகை செய்யமுடியாது என்று சொன்னால் அவ்விதம் செய்யமுடியும் என்று அவர்களிடம் நம்பிக்கை ஊட்டி, இம்மாதிரி மாற்றி செய்யலாம் என்ற எண்ணத்தை அவர்களிடம் பரப்ப வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஆகவே இந்தப் பிரச்னை அவசரப் பிரேரணையாக கொண்டுவருவதற்கு உகந்தது அல்ல. இன்னும் கொஞ்சம் இருந்து பார்க்கலாம். நமது பட்ஜெட் விவாதத்தின்போது இன்னும் நிலைமை சீர்திருந்திவிடும். அப்போது யாராவது ரூல் 41-ன் கீழ் விளக்கம் கேட்டால் மேலும் அப்போது இருக்கின்ற நிலைமைகளை விளக்கி அறிக்கை தருகிறேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

கனம் சபாநாயகர்: இப்பிரேரணையைக்கொண்டு வந்த கனம் அங்கத்தினர் அவர்கள் பூர்வாங்கமாக பேசவேண்டியதை எல்லாம் பேசிவிட்டார்கள். இப்போதுள்ள நிலைமையில் இதற்கான விளக்கங்களை கேட்டபின்னால் இப்பிரேரணை அவசரப் பிரேரணையாக அனுமதிக்கப்படுவதற்குத் தகுதியில்லை என்று நான் முடிவு செய்கிறேன்.

(2) ALLEGED INDISCRIMINATE BEATING OF THE PUBLIC BY THE POLICE.

MR. SPEAKER: Notice of another adjournment motion has been given by the hon. Member Sri Sasivarna Thevar.

* திரு. டி. எல். சசிவர்ணத் தேவர்: கனம் சபாநாயகர் அவர்களே, சென்ற 17-ம் தேதி மதுரை நகரத்தில் ஒரு பிரஜையை சில போலீஸ்காரர்கள் விசாரணை செய்வதற்கு என்று கைது செய்து போலீஸ் ஸ்டேஷனுக்கு கொண்டுவந்து இருக்கிறார்கள். விசாரணை செய்வதற்கான வழியை எல்லாம் தவறி அவரை பலாத்காரமாக தாக்கியதின் காரணமாக அந்த நபர் போலீஸ் ஸ்டேஷனிலேயே மரணம் அடைந்ததாக நிச்சயமாகத் தெரியவருகிறது. இதைப் பற்றி நான் பூரணமாக விசாரித்ததில் சாதாரண மூன்று போலீஸ் கான்ஸ்டபிள்கள் சேர்ந்துதான் இவ்வாறு தாக்கியிருக்கிறார்கள் என்று தெரிய வந்தது. இதைப்பற்றி நான் 18-ம் தேதி கலெக்டர் அவர்களுக்கு தந்தி மூலம் தெரிவித்தேன். 20 அல்லது 21-ம் தேதி நாது மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் அவர்களுக்கும் எழுதியிருக்கிறேன்.

கனம் சபாநாயகர்: இம்மாதிரி ஏதாவது நடந்தால் யார் விசாரணை செய்யவேண்டும்? அவ்வாறு யாராவது விசாரணை செய்தார்களா என்பதை கனம் அங்கத்தினர் அவர்கள் தெரிவிக்க முடியுமா?

திரு. டி. எல். சசிவர்ணத் தேவர்: இதைப்பற்றி R.D.O. விசாரிக்க நியமிக்கப்பட்டிருந்ததாக பின்னால் தெரியவந்தது. இதில் உண்மையான குற்றவாளிகள் யார் என்பதைக் கண்டு பிடித்து அவர்கள் பேரில் தயவு தாட்சண்யம் இல்லாமல் தண்டிக்கவேண்டும் என்பதற்காகத்தான் இந்தப் பிரேரணையை கொண்டு வந்திருக்கிறேன். ஆகவே இதை அனுமதிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கனம் சபாநாயகர்: இதற்காக நியமிக்கப்பட்டவர் விசாரணை செய்து முடித்துவிட்டார்களா, அதன் விவரம் என்ன?

திரு. டி. எல். சசிவர்ணத் தேவர்: அதைப்பற்றி எனக்குத் தெரியாது.

கனம் சபாநாயகர்: அதைத் தெரிந்து கொள்ளாமல் இப்பிரேரணையை எப்படிக் கொண்டு வரலாம்?

திரு. டி. எல். சசிவர்ணத் தேவர்: அதை எல்லாம் தெரிந்து கொள்வதற்காகத்தான் இப்பிரேரணையை கொண்டு வந்திருக்கிறேன்.

* கனம் திரு. எம். பக்தவத்சலம்: கனம் சபாநாயகர் அவர்களே, இதுவும் அவசரப் பிரேரணைக்கு உகந்தது அல்ல என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். இந்தச் சம்பவத்தைப்பற்றி கனம் அங்கத்தினர் அவர்கள் தந்தி கொடுத்திருக்கிறார்கள். முதலமைச்சர் அவர்களுக்கு எழுதியிருக்கிறார்கள். இப்போது அவசர பிரேரணையாக இதைக் கொண்டுவந்திருக்கிறார்கள். இதைப்பற்றி என்ன நடந்தது, விசாரணையில் என்ன தெரிவித்தார்கள் என்பதை எல்லாம் கனம் அங்கத்தினர் அவர்கள் நன்றாக விசாரித்து தெரிந்து கொண்டிருக்கலாம். இதைப்பற்றி விசாரிக்க ஆர்.டி.ஓ. நியமிக்கப்பட்டிருக்கிறார். விசாரணை நடந்திருக்கிறது. இவையெல்லாம் கனம் அங்கத்தினர் அவர்களுடைய ஸ்தலத்திலேயே நடந்திருக்கிறது. இதெல்லாம் நடந்திருந்திருந்தும் இப்போது கனம் அங்கத்தினர் அவர்கள் இந்தப் பிரேரணையை கிளப்பியிருக்கின்ற நேரத்தில், இதில் நடந்த விவரங்களை எல்லாம் இன்னும் கூடுதலாக தெரிந்து சொன்னால் நன்றாக இருந்திருக்கும். ஜனவரி 15-ம் தேதி ஒரு கான்ஸ்டபிள் மது விலக்குக் குற்றம் சம்பந்தமாக வலைதோப்பு என்ற இடத்திற்குப் போனார். அங்கு அந்த கான்ஸ்டபிளை நாலைந்து பேர்கள் சேர்ந்து அடித்திருக்கிறார்கள். அந்தக் கான்ஸ்டபிள் அங்கிருந்த ஒரு அம்மாளிடமிருந்து சில லாகிரி வஸ்துக்களை எல்லாம் கைப்பற்றிக்கொண்டு வந்திருக்கிறார். இதைப்பற்றி விசாரணை செய்ததின் பின்னால் குற்றவாளி என்று கருதப்பட்ட ஒருவரைக் கைது செய்து சிறையில் வைத்திருந்தார்கள். அங்கேயே கைது செய்யப்பட்டவர் இறந்து போய்விட்டார். இதைப்பற்றி விசாரிப்பதற்காக ஆர்.டி.ஓ. நியமிக்கப்பட்டார். ஆர்.டி.ஓ. விசாரித்து ரிப்போர்ட் செய்ததில் அவர் இயற்கையாகவேதான் இறந்து போனார் என்று தெரிவித்திருக்கிறார். மேலும் இதைப்பற்றி விசாரணை செய்கிறேன் என்றும் சொல்லியிருக்கிறார். ஆஸ்பத்திரியில் போஸ்ட் மார்ட்டம் செய்ததிலும், போஸ்ட் மார்ட்டம் செய்த டாக்டர் அவர்களும், யாரும் இவரை அடித்ததாக தெரியவில்லை, காயங்கள் எதுவும் பட்டிருப்பதாக தெரியவில்லை, இயற்கையாகவேதான் இறந்திருக்கிறார் என்று சொல்லியிருக்கிறார். மேற்கொண்டும் பரிசீலனை செய்வதாக சொல்லியிருக்கிறார். அப்படியிருக்கும்போது போலீஸ்காரர்கள் தாக்கியதாக இருந்தால் அதைப் பற்றி நாங்கள் விளக்க கடமைப்பட்டிருக்கிறோம். அதன் பேரில் நடவடிக்கை எடுக்கவும் கடமைப்பட்டிருக்கிறோம். தவறுதல் நடந்தால் அதன் பேரில் நடவடிக்கை





எடுக்கத் தயாராக இருக்கிறோம். அதல்லாமல் போலீஸ்காரர்கள் அடித்ததினால் அவர் இறந்து போனார் என்று சொல்வது சரியல்ல. ஆகவே இது அவசரப் பிரேரணையாக கொண்டு வருவதற்கு உகந்தது அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

MR. SPEAKER: As this matter comes under the day-to-day administration and as there are certain procedures for investigation by the Revenue Divisional Officer and other officers concerned and also as there are not sufficient matters placed before the House, I withhold my consent for raising it.

## IV.—DISCUSSION ON THE GOVERNOR'S ADDRESS—*cont.*

MR. SPEAKER: Now the discussion on the Governor's Address will be continued. The hon. Member, Sri A. Swamidhas, will now speak.

* திரு. ஏ. சுவாமிதாஸ்: மதிப்பு மிக்க சபாநாயகர் அவர்களே, கவர்னர் பெருமான் அவர்கள் யுத்த நெருக்கடியை மனதில் வைத்துக்கொண்டு தங்களுடைய பேருரையை ஆற்றி இருக்கிறார் 9-00 a.m.
அவருடைய பேருரையில் வேளாண்மைத் துறையில் அதிக உற்பத்தி செய்வதற்கான திட்டம் வகுத்திருப்பதையும் குறிப்பிட்டிருக்கிறார். அது வரவேற்கக் கூடியது. உண்மையிலேயே நாடு உணவு உற்பத்தியைப் பொறுத்த வரையில் சுய தேவையைப் பூர்த்தி செய்து கொள்ளக் கூடிய அளவில் இருந்தால் மட்டுமே நாம் எந்த எதிரியையும் சமாளிக்க முடியும். ஆனால் அவருடைய பேருரையில் சூசகமாக இன்னொன்றையும் குறிப்பிட்டிருக்கிறார். நிலத்தீர்வை விதிக்கவேண்டும், அதன் மூலமாக வருமானத்தைப் பெருக்கவேண்டும் என்றும் குறிப்பிட்டிருக்கிறார். இது விவசாயிகளைப் பொறுத்த அளவில் அவ்வளவு வரவேற்க முடியாது. உணவு உற்பத்தியில் ஈடுபட்டிருக்கக் கூடிய விவசாயிகளுக்கு ஊக்கம் கொடுக்கவேண்டுமென்றால், இன்னும் அவர்களை அந்தத் துறையில் அதிகமாக ஈடுபடச் செய்யவேண்டுமென்றால், உண்மையிலேயே உணவுப் பொருள்களைப் பயிர் செய்கிற நிலங்களுக்கேனும் வரியைப் போடாமல் இருப்பது மிக நலம் என்று கருதுகிறேன். இன்னும் சொல்லப்போனால் நெல் பயிர் செய்யப்படுகிற, காய்கறி பயிர் செய்யப்படுகிற நிலங்களுக்கேனும் வரி விதிக்காமல் இருப்பது நலம். கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்த அளவில் உணவு உற்பத்தியைப்பற்றி ஒன்று கூற ஆசைப்படுகிறேன். நெல் பயிர் உற்பத்தி செய்வதோடு அங்கு கிழங்குப்பயிர்—மரச்சீனி கிழங்கு என்று அங்கு சொல்லுவார்கள்—அதிகமாக மலையடிவாரத்தில் மக்கள் உற்பத்தி செய்கிறார்கள். அந்த மலைப் பகுதியெல்லாம் அரசாங்கத்திற்குச் சொந்தமான இடங்கள். விவசாயிகள் குத்தகைக்கு எடுத்து அந்த இடத்தில் மரச்சீனி கிழங்கு பயிர் செய்து வருகிறார்கள். இப்போது அரசாங்கத்திடமிருந்து, குறிப்பாக வன இலாகாவிலிருந்து ஒரு உத்திரவு வந்திருக்கிறது. யாரெல்லாம் மரச்சீனி கிழங்கு மலையடிவாரத்தில் பயிர் செய்கிறார்களோ அவர்களெல்லாம் வெளியேறி விடவேண்டும்; அந்த இடங்களில் மரங்களைப் பயிரிடப் போகிறோம் என்று சொல்லுகிறார்கள்.

[திரு. ஏ. சுவாமிதாஸ்] [30th January 1963

அவகூட கால நெருக்கடியை உத்தேசித்தாவது மரச்சீனி கிழங்கு உற்பத்தி செய்கிற இடங்களை விவசாயிகளுக்கு குத்தகைக்குக் கொடுத்தால் மிக நலமாக இருக்கும் என்று இந்த மன்றத்தில் குறிப்பிட விரும்புகிறேன்.

அதோடு கழிந்த பட்ஜெட்டிலே எங்கள் மாவட்டத்திற்கு பட்டணங்கால் திட்டத்தைப் புகுத்தியிருந்தார்கள். இந்த ஆண்டிலேயே இதைத் தொடங்கிவைக்கப் போகிறோம் என்று மதிப்புக்குரிய முதலமைச்சர் கூறியிருந்தார்கள். அந்தத் திட்டத்தைப் பற்றி இந்த உரையில் ஏதாவது இருக்குமா என்று நாங்கள் ஆவலோடு எதிர்பார்த்தோம். உண்மையிலேயே முதலமைச்சர் அவர்கள் இந்தத் திட்டத்தை நிச்சயமாக நிறைவேற்றித் தருவார் என்ற நம்பிக்கையில் நான் அதைப்பற்றி அதிகமாகக் கூற விரும்பவில்லை.

இன்னும் எங்கள் மாவட்டம் தமிழகத்தோடு இணைந்து ஆறு ஆண்டுகள் ஆகியும், திரு-கொச்சி அரசாங்கத்திலிருந்து இந்த அரசாங்கத்திற்கு ஊழியத்திற்கு மாற்றப்பட்ட ஆஃபீஸர்கள், இதர அலுவலர் ஆகியவர்களுக்குரிய சர்வீஸ் இண்டெக்ரேஷன் இன்னும் முற்றுப் பெறவில்லை. அது கன்னியாகுமரி மாவட்டத்திற்கு ஒரு முக்கிய பிரச்னையாக இருக்கிறது. குறிப்பாக ஆசிரியர்களுடைய பிரச்னை மிகவும் முக்கியமாகும். இன்னும் இந்தப் பிரச்னை தீர்ந்தபாடில்லை. மதிப்புக்குரிய கல்வி அமைச்சர் அண்மையில் கன்னியாகுமரி வந்தபோது இந்தப் பிரச்னையைக் கூடிய சீக்கிரம் முடித்துத் தருவோம் என்று சொல்லியிருக்கிறார். அங்கு இருக்கும் சிக்கல்களில் ஒன்றிரண்டை இந்த மன்றத்திற்குக் கூற லாம் என்று ஆசைப்படுகிறேன். திரு-கொச்சியோடு நாங்கள் இருந்த காலத்தில் தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் படிப்பு—கல்வித்தரம்—வேறுபாடாக இருந்தாலும், ஒரே அடிப்படையில் சம்பளம் பெற்றுக்கொண்டு வந்தார்கள். ஏழாவது படித்தவர்களாக இருந்தாலும், 9-வது படித்தவர்களாக இருந்தாலும், எஸ்.எஸ்.எல்.ஸி. படித்தவர்களாக இருந்தாலும், யாவரும் ஒரே வேலை பார்த்த காரணத்தினால் ஒரே சம்பளம் பெற்றுக்கொண்டு இருந்தார்கள். ஏழாவது வகுப்புக்கு, 4-வது வகுப்பு படித்த பின்னர் 7-வது வகுப்பில் சர்க்கார் பரீட்சை நடத்தி 'டமில் ஸ்கூல் லீவிங் ஸர்ட்டிஃபிகேட்' கொடுப்பார்கள். அதற்குப் பிறகு ஆசிரியர் பயிற்சி அளித்து வந்தார்கள். ஒன்பதாவது வகுப்புக்கு, 7-வது வகுப்பு படித்து தமிழிலே 8, 9-வது வகுப்புகள் படிக்க வேண்டும். இதைக் கற்றுக் கொடுக்கும் பள்ளியை 'டமில் ஹையர் ஸ்கூல்' என்று சொல்லுவார்கள். எஸ்.எஸ்.எல்.ஸி. கற்றுக் கொடுக்கும் பள்ளியை இங்கிலீஷ் ஸ்கூல் என்று சொல்லுவார்கள். ஒன்பதாவது வகுப்புப் படித்தவர்களுக்கும், எஸ்.எஸ்.எல்.ஸி. படித்தவர்களும் ஒரே ட்ரைனிங்—ஒரு வருஷ ட்ரைனிங் கொடுத்து ஒரே சம்பளம் கொடுத்து வந்தார்கள். சென்னையோடு இணைந்த பின்னர், 7-வது வகுப்புப் படித்து கற்றுக் கொடுக்கும் ஆசிரியர்கள் 150 பேர்களுக்கு உட்பட்டு இருப்பார்கள். ஒன்பதாவது வகுப்பு படித்தவர்கள் கொஞ்சம் அதிகம் பேர்கள் இருப்பார்கள்.



30th January 1963] [திரு. ஏ. சுவாமிதாஸ்]

இவர்கள் எல்லோருக்கும் திரு-கொச்சி அரசாங்கம் கொடுத்து வந்ததைப் போல் ஒரே அடிப்படையில் சம்பளம் கொடுக்கவேண்டுமென்று வற்புறுத்தினோம். அவர்களுடைய கல்வியில் வித்தியாசம் இருந்தாலும், ஒரே வேலை பார்க்கிற காரணத்தினால் ஒரே சம்பளத்தைக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாகச் சொல்லப் போனால், 9-வது வகுப்பு என்று சொல்லுவது தமிழிலே நல்ல முறையில் பயிற்சி பெறுகிற வகுப்பு. 9-வது வகுப்பு தமிழ் படிக்கும்போது பீ.ஏ.-க்கு வைத்திருக்கிற தமிழ் பாடப் புத்தகம் படிக்கிறார்கள். அதோடு 9-வது வகுப்புப் படித்தவர்களுக்கு எஸ்.எஸ்.எல்.ஸி. வரை தமிழ் கற்றுக் கொடுக்க லைஸென்ஸ் கொடுத்திருக்கிறார்கள். அவர்களுள் நன்றாகத் தமிழிலே பாட்டு இயற்றக் கூடிய வல்லமை உடையவர்களும் உண்டு. அவர்களுடைய திறமையை மனதில் வைத்து எஸ்.எஸ்.எல்.ஸி. படித்தவர்கள் பெறும் சம்பளத்தைக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்போது ஒரு புதிய பிரச்னை கிளம்பியிருக்கிறது. திரு-கொச்சியில் செகண்டரி கிரேட் ஆசிரியர்களுக்கு பப்ளிக் சர்விஸில் உட்படுத்த ஆங்கிலத்தில் 35 மார்க்குகள் இருந்தால் போதும். ஆனால் சென்னையில் 40 மார்க்குகள் இருந்தால் மட்டுமே சர்விஸ் கமிஷனுக்கு உட்படுத்த முடியும். சென்னையோடு இணைந்த பின்னர் இந்த மாவட்டத்தில் கேரள சர்க்கார் பரீட்சை தான் நடந்தது. 1958-ம் ஆண்டு மார்ச் வரையில் கேரள சர்க்கார் பரீட்சைதான் நடைபெற்றது. திரு-கொச்சி விதிப்படி ஒரு மாணவன் தேர்ச்சி பெற ஆங்கிலத்தில் 35 மார்க்குகள் எடுத்தால் போதும். சென்னையிலே ஆங்கிலத்திலே 40 மார்க்குகள் எடுத்தால்தான் தேர்ச்சி பெற முடியும். 1958-ம் ஆண்டு வரையில் கேரள சர்க்கார் பரீட்சை எழுதிய மாணவர்கள் 35 மார்க்கு தகுதியை ஆங்கிலத்தில் பெற்றிருந்தாலும் இங்கே 40 மார்க்குகள் எடுத்தவர்களைப் போல சலுகை நல்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆசிரியர் B.T அதோடு, தர உயர்வைப் பொறுத்த அளவில் களுக்கு இதுகாறும் அனுபவத்தை வைத்துக்கொண்டு தர உயர்வு கொடுத்து வந்தார்கள். B.T. ஆசிரியர்களுக்கு அவர்களுடைய அனுபவத்தை வைத்துக்கொண்டு ஃபர்ஸ்ட் கிரேட் தர உயர்வு செய்யப்பட்டார்கள். அண்மையில் ஒரு தர உயர்வு லிஸ்ட் வெளியிடப்பட்டது. அந்த லிஸ்டில் கன்னியாகுமரியிலிருந்து ஒருவருமே இல்லை. சென்னையில் இருப்பதைப் போன்று அக்கவுண்ட்ஸ் டெஸ்ட், டெபுடி இன்ஸ்பெக்டர்ஸ் டெஸ்ட் இவைகளில் அவர்கள் தேறாத காரணத்தினால் தர உயர்வு கொடுக்கப்படவில்லை என்று சொல்லுகிறார்கள். உண்மையிலேயே அவர்களும் அந்தப் பரீட்சைகளில் தேறியிருக்கவேண்டியதுதான். ஆனால் அவர்களுக்கு ஒன்றுசெய்திருக்கலாம். அவர்களுடைய அனுபவத்தை வைத்துக்கொண்டு அவர்களுக்கு தர உயர்வை கொடுத்துவிட்டு, இன்னும் 3 ஆண்டுகாலத்திற்குள் சென்னைக் கல்வி இலாகாவின் திட்டத்தின்படி உள்ள பரீட்சைகளையெல்லாம் பாஸ் செய்துவிட வேண்டும் என்று வரையறை கொடுத்திருக்கலாம். அம்மாதிரி

அவர்களுக்கு வரையறை வைத்துத் தர உயர்வு கொடுக்கவேண்டும் என்று மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன்.

மது விலக்கு பற்றி எங்கள் ஜில்லா பொதுமக்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதையும் இந்த மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவர ஆசைப்படுகிறேன். மதுவிலக்கைக் கொண்டு வந்தது மிகவும் நல்லதுதான். ஆனால் அதைத் தீவிரமாக அமுல் நடத்தும் கூடிய வழிவகைகளைப் பார்க்கும்பொழுது, பொது மக்களுடைய மனத்தில் ஒரு அச்சம் ஏற்படுகிறது. எந்த மது விலக்கு வழக்கையும் கோர்ட்டுக்குக் கொண்டு சென்ற பிறகு அங்கு கூடுதலான சாட்சிகளை விசாரிப்பதற்கான வழிவகைகள் இல்லை. எந்த போலீஸார் மது விலக்கு வழக்கைக் கொண்டுவந்தார்களோ அவர்களுடைய வாக்குமூலத்தை வைத்துக்கொண்டுதான் தீர்ப்பு அளித்து விடுகிறார்கள். குறிப்பாக ஒரு சம்பவம் எனக்குத் தெரியும்.

MR. SPEAKER: The hon. Member is questioning the judgments of Courts.

திரு. ஏ. சுவாமிதாஸ்: போலீஸ்காரர்களுடைய சாட்சியங்களை வைத்துக்கொண்டே அவர்கள் கொண்டு வந்த மது விலக்கு வழக்கில் அப்படியே குற்றம் சாட்டிவிடுகிறார்கள். அதோடு கூட ஒன்று சொல்ல ஆசைப்படுகிறேன். அங்கே கிருஷ்ணா பார்மஸி, சுதந்திரா பார்மஸி போன்ற மருந்துக் கடைகள் இருக்கின்றன. அந்தக் கடைகளில் அரிஷ்டம் என்ற ஒரு வகை மருந்து விற்கிறார்கள். சென்னையிலும் அந்த மருந்து இருக்கிறது. அந்த அரிஷ்டத்தைச் சாப்பிட்டவர்களை மது அருந்தினார்கள் என்ற அடிப்படையில் வழக்குத் தொடருகிறார்கள். ஒன்று அத்தகைய கடைகளில் அரிஷ்டம் விற்காத வகையில் செய்ய வேண்டும். இல்லை என்றால், அரிஷ்டம் சாப்பிடுபவர்கள் மீது மது விலக்குச் சட்டத்தின்கீழ் வழக்குத் தொடரக் கூடாது. எங்கள் பக்கத்தில் திருட்டு முறையில் கள்ளச் சாராயம் காய்ச்சுவது, மது உற்பத்தி செய்வது குறைந்துவிட்டது. காரணம் கிருஷ்ணா பார்மஸி, சுதந்திரா பார்மஸி போன்ற மருந்துக் கடைகள் அரிஷ்டத்தை விற்பனை செய்கிறார்கள். அதில் அதிகமான கவனம் செலுத்த வேண்டும். அந்தக் கடைகளுக்கு லைசென்ஸ்கள் வழங்காமல் இருப்பதுதான் நலம். தவறான வழியில் போதை தரக்கூடிய மருந்து வகைகளைச் சேர்த்து அரிஷ்டம் தயாரிக்கிறார்கள் என்று பலர் கூறுகிறார்கள்.

அதோடுகூட எங்கள் மாவட்டத்தில் தொழில் வாய்ப்பு அதிகமல் இருப்பதுதான் நலம். தவறான வழியில் போதை தரக்கூடிய இல்லாத மாவட்டங்களில் ஒரு ஆலை ஏற்படுத்தவேண்டும் என்று அரசாங்கம் தீர்மானித்திருக்கிறார்கள். பல மாவட்டங்களில் ஆலைகள் தொடங்குவதற்காக அனுமதி வழங்கியிருக்கிறார்கள். கூட்டுறவு முறையிலாவது எங்கள் மாவட்டத்திலும் ஒரு ஆலை அமைத்துத் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் மாவட்டத்தில் ஏறத்தாழ 6,000 பொற்கொல்லர்கள் இருக்கிறார்கள். அவர்களுடைய நிலையைச் சற்று ஊன்றி கவனிக்க



வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, எனக்குப் பேசுவதற்கு அனுமதி அளித்த கனம் சபாநாயகர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டு, என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* திரு. எம். எஸ். செல்வராஜன்: கனம் சபாநாயகர் அவர்களே, கவர்னர் அவர்களுடைய உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை ஆதரிக்கும் முகத்தான் சில வார்த்தைகள் சொல்லப் பிரியப்படுகிறேன். கவர்னர் அவர்கள், நமது நாட்டின் கோட்டைச் சுவர் இமயத்தில் சீனத் திருடர்கள் கன்னம் வைத்தார்கள், அரவம் கேட்டு நாட்டினுடைய விழிப்பைத் தெரிந்து திரும்பப் போயிருக்கிறார்கள் அல்லது ஓடியிருக்கிறார்கள் என்ற செய்தியை இந்தச் சபைக்கு அறிவித்ததோடு மட்டும் அல்லாமல், நம்மிடத்திலுள்ள விழிப்பையும், இந்த ராஜ்யத்து மக்கள்—குழந்தை முதற்கொண்டு வயோதிகர் வரையில்—எவ்வளவு தயாரான நிலைமையில் இருக்கிறார்கள் என்ற செய்தியையும் நாட்டிற்கும் உலகிற்கும் அறிவித்திருக்கிறார்கள். சென்ற திருடன் வரலாம், ஆகவே விழிப்புடன் இருக்கவேண்டும் என்று நம்மை ஜாக்கிரதை படுத்தி இருக்கிறார்கள்—எச்சரிக்கையும் செய்திருக்கிறார்கள். நாம் செய்ய வேண்டிய காரியங்கள் பலவற்றை குறிப்பாக ஞாபகப்படுத்தி, விவசாயத் துறையில் இந்த நாட்டு மக்கள் எத்தகைய கவனம் செலுத்த வேண்டும் என்பதை அழகாகச் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். இது அபூர்வமான ஒரு பெரிய அறிக்கை. இதற்கு முன்பு இல்லாத அளவுக்கு விசேஷத் தன்மை வாய்ந்த அறிக்கை.

இந்த அறிக்கையில் பல்வேறு காரியங்கள் பற்றி குறிப்பாகச் சொல்லப்பட்டிருந்தாலும்கூட, நான் அறிந்த மட்டில் தூத்துக்குடி துறைமுகத்தைப்பற்றி தென்பகுதி மக்களுக்கு—இந்த ராஜ்ய மக்களுக்கு—விசேஷ அக்கறை உண்டு. தூத்துக்குடி துறைமுக வேலை எந்த அளவுக்கு பாதிக்கப்படும், அல்லது துரிதமாக நிறைவேற்றப்படும், என்ற கேள்வி மக்கள் மத்தியில் இருந்துகொண்டு இருக்கிறது. இதை அரசாங்கம் ஒத்துக்கொள்ளும் என்று நினைக்கிறேன். வட பகுதி அன்னிய ஆக்கிரமிப்புக்கு உட்பட்டு இருக்கக்கூடிய காலத்தில் நாம் விழிப்புடன் இருக்கவேண்டியது அவசியம். தென் பகுதியில் சிறிய துறைமுகமாக இருந்தாலும் சரி, பெரிய துறைமுகமாக இருந்தாலும் சரி, நாம் எவ்வளவு ஜாக்கிரதையாக, எவ்வளவு அவசரமாக அதற்கு துரித முக்கியத்துவம் கொடுத்து முன்னுக்குக் கொண்டு வரவேண்டும் என்பதை உணர்ந்து, இது அவசிய, அவசர முக்கியத்துவம் உள்ள தேசியக் கடமை என்பதை உணர்ந்து இந்த அரசாங்கமும், மத்திய அரசாங்கமும் இது சம்பந்தமாக துரிதமாக முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

விசுவகர்மாக்களின் பிரச்னையும் ஒரு தேசிய பிரச்னைதான். மில் அபிவிருத்தி அல்லது துணிகளின் தேக்க நிலை இவற்றின் காரணமாக நெசவுத் தொழிலாளர்களுக்கு ஏற்பட்டிருந்த கஷ்டங்களை நிவர்த்திப்பதற்கு அவசர முக்கியத்துவம் கொடுத்து

[திரு. எம். எஸ். செல்வராஜன்] [30th January 1968

எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் போல பல்லாயிரம் விசுவகர்மாக்கள் கஷ்டத்திற்கு உள்ளாகியிருக்கிற நிலைமையில் எங்கெங்கே கஞ்சித் தொட்டிகள் ஆரம்பிக்க வேண்டியது அவசியம் என்பதில் கூட கவனம் செலுத்த வேண்டும் என்பது எங்கள் கோரிக்கை. அதுமாத்திரமல்ல. ஆங்காங்கு இருக்கக்கூடிய இண்டஸ்ட்ரியல் டிரைனிங் ஸ்கூல்களில் எந்த அளவுக்கு வயது வரம்பு, கல்வி வரம்பு—இவைகள் சம்பந்தமாகச் சலுகைகள் கொடுக்க முடியுமோ அவற்றையெல்லாம் அளிக்க வேண்டும். மேலும், குறுகிய கால பயிற்சியெல்லாம்கூட கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். கொல்லப்பட்டரை, தச்சுப்பட்டரை இவைகளில் அவர்களுக்கு மாற்றுத் தொழில்கள் தேடித்தருவதிலும் அக்கரை காட்டி, அதற்கு அவசர முக்கியத்துவம் கொடுக்கவேண்டும் என்பது எங்கள் கோரிக்கை.

சில அபிவிருத்தி வேலைகளுக்குக்கூட, அணைக்கட்டுகள் கட்டுவதற்கு, சில பகுதிகளில் அனுமதி வழங்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. திருநெல்வேலி ஜில்லாவில் கீரியாறு, பம்பாறு போன்ற திட்டங்கள்கூட பரிசீலனை நிலையில் இருந்தன. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் பரிசீலனையிலிருந்த அந்தத் திட்டங்களின் வாடையைக்கூட மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்தில் காணுமே என்ற கவலை எங்களுக்கெல்லாம் உண்டு. என்ன விதத்தில் இது சம்பந்தமான பேச்சுக்களெல்லாம் கேரள அரசாங்கத்துடன் நடந்திருக்கின்றன என்பது பற்றியெல்லாம் அரசாங்கம் இந்தச் சபைக்குத் தெரிவித்தால் நல்லது. இந்த ராஜ்யத்திற்கு பெரிய அளவுக்கு உதவியாக இருக்கக்கூடிய திட்டங்களில் ஒன்ருக அது இருக்கும் என்று நாங்கள் கருதுகிறோம்.

இந்த அரசாங்கத்தார் மின்துறையிலே சில கட்டுத் திட்டங்களை விதித்திருக்கிறார்கள். வீடுகளுக்கும், மற்ற துறைகளுக்கும் மின்சாரம் வழங்குவதிலே ஓரளவுக்கு தாமதம் இருக்குமானாலும் கூட, விவசாய பம்பு செட்டுகளுக்கு துரிதமாக மின்சாரம் வழங்குவதற்கு எல்லாவிதமான ஏற்பாடுகளையும் செய்யவேண்டுமென்பது எங்கள் கோரிக்கை.

திருச்செந்தூர் கூட்டுறவு நூற்பு மில்லை இரண்டு ஷிப்டுகளுடன் முதலமைச்சர் அவர்களும், தொழிலமைச்சர் அவர்களும் சமீபத்தில் ஆரம்பித்து வைக்கிருர்கள். தேசமெல்லாம் எல்லா பாக்டரிகளிலும், நூற்பு மில்களிலும் மூன்ருவது ஷிப்டு ஆரம்பிப்பதற்கு அனுமதி கொடுக்கக்கூடிய நிலையில், நாசரத்-திருச்செந்தூர் ஸ்பின்னிங் மில்லில் மூன்ருவது ஷிப்டு தொடங்கப்பட்டால் 150 குடும்பத்தினர்கள் வாழ்வு பெறுவதோடு கூட, உற்பத்தியையும் அதிகமாகப் பெருக்க முடியும். ஆகவே, அதற்குரிய வழிவகைகள் செய்யவேண்டுமென்று நாங்கள் கோருகிறோம்.

தாம்பரபாணி தீரத்தில் பல காலமாக லோகலைஸேஷன் திட்டம் தாமதமாவதன் காரணமாக ஆயிரக்கணக்கான ஏகராக்களில் பயிரிடுபவர்கள் பல ஆண்டுகளாகத் தண்டத் தீர்வை செலுத்திவருகிருர்கள். அதற்கு ஒரு விடிவு காலம் வேண்டும்.



30th January 1968] [திரு. எம். எஸ். செல்வராஜன்]

அரசாங்கம் நிலத்திற்கு தண்ணீர் தீர்வையை அதிகப்படுத்த வேண்டும் என்று நினைத்திருக்கக்கூடிய இந்த நேரத்தில் அதற்குரிய ஒரு நல்ல முடிவு துரிதமாக எடுக்கவேண்டும். சமீபத்தில்கூட—1958-ம் வருஷத்தில் கூட—மணிமுத்தாறு விதியின் கீழ் இந்த நிலங்கள் அதிகமான தீர்வைக்கு உட்பட்டிருக்கின்றன. எங்கள் ஜில்லாவில் இருக்கும் நிலங்களெல்லாம் 'ஏ' கிளாஸ் நிலம் என்று சொல்லப்பட்டு நிலத் தீர்வை அதிகப்பட்டிருப்பதுடன் ரூ. 3, 4 என்றிருந்ததை அதிகமாக்கி 12½ ரூபாயாகத் தண்ணீர் தீர்வை விதிக்கப்பட்டிருக்கிறது. அரசாங்கம் உத்தேசித்திருக்கக்கூடிய அபிவிருத்தி வரி விதிப்பின் கீழ் தாம்பரபாணி, மணிமுத்தாறு தீரங்கள் வருமா என்பதை ஜாக்கிரதையாகப் பரிசீலித்து, சாத்தூர் போன்ற இடங்களுக்கு விதிவிலக்கு கொடுத்திருப்பதுபோல், திருநெல்வேலி ஜில்லாவில் தாம்பரபாணி, மணிமுத்தாறு தீரத்திற்கும் விதிவிலக்களிக்க பரிசீலிக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இத்தகைய நல்ல விஷயங்களில் கவனம் செலுத்தக்கூடிய அரசாங்கம் இலங்கையிலிருந்து வந்தவர்களுக்குக்கூட நல்ல வழிவகைகள் செய்திருக்கிறார்கள். அவர்களுக்குச் சில சலுகைகள் கொடுத்திருக்கிருர்கள். குறிப்பாக கல்வித் துறையில் ஹாஸ்டல்களிலும், பள்ளிகளிலும் சலுகைகள் கொடுத்திருக்கிருர்கள். ஆனால் அனுபவத்தில் பார்த்தால் அந்தச் சலுகையை ஒரு மாணவன்கூட அனுபவிக்கவில்லை. அரசாங்கம் அதற்குரிய விதிகளைச் செய்து ஆண்டுகள் கடந்துவிட்டன. இருந்தாலும்கூட கல்வி அதிகாரிகள் அதற்குரிய பாரங்களை ஒழுங்காக கொடுத்து, அவர்கள் அந்தச் சலுகைகளை பெறுவதற்குரிய வழிவகைகளைச் செய்யவில்லை. அத்தகைய மாணவர்கள் முறையாக இந்த சலுகைகளைப் பெற வழி செய்யவேண்டும். இன்னும் சொல்லப்போனல், எங்கெங்கே அவர்கள் குவியலாக இருக்கிருர்களோ அந்த இடங்களுக்கெல்லாம் எம்பிளாய்மெண்ட் எக்ஸேஞ்சு உத்தியோகஸ்தர்கள் சென்று மொபைல் ரிஜிஸ்டிரேஷன் செய்வதற்கு வேண்டிய வழிவகைகளைச் செய்யலாம் என்பது என்னுடைய கருத்து.

ராணுவ வீரர்களுடைய குடும்பங்களின் நலன்களை கவனிப்பதில் அரசாங்கம் அக்கறை காட்டிக்கொண்டு வருகிறது. கிராமங்களிலே சில மாஜி பட்டாளத்தினருக்கு நிலங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. அவர்கள் அங்குள்ள புறம்போக்கு நிலங்களை அனுபவித்துக் கொண்டிருக்கிருர்கள். இன்றைக்கு அவர்களில் சிலர் திரும்பவும் பட்டாளத்துக்கு அழைக்கப்பட்டிருக்கிருர்கள். அவர்களுக்கு காலாகாலத்தில் பட்டாக்கள் வழங்கப்படாமல் இருந்திருக்கலாம். இன்றைய தினம் அவர்கள் கிராமங்களில் இல்லாததைக் காரணமாக வைத்துக்கொண்டு பக்கத்திலுள்ளவர்கள் அந்த நிலங்களை அபகரித்தோ அல்லது ஆக்கிரமித்தோ தங்களுக்குச் சொந்தமாக ஆக்கிக்கொண்டு விடப்பார்க்கிருர்கள். புறம்போக்கு நிலங்களைப் பொறுத்தவரையில் யார் கைக்கு நிலம் மாறுகிறதோ அவர்களுக்குத்தான் உரிமை இருக்கிறது என்று கருதப்படுவதினால், இந்த மாஜி ராணுவத்தினரின் நிலங்கள் பிறர்

கைகளுக்கு மாறாமல் இருப்பதற்கு ரெவின்யூ அதிகாரிகள் வேண்டிய நடவடிக்கைகள் எடுத்து, எவ்வளவு துரிதமாக அவர்களுக்கு பட்டா கொடுக்க முடியுமோ அவ்வாறு பட்டாக்கள் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதைப்போல ராணுவ சிப்பந்திகளின் குடும்பங்களில் சிலர் ஆசிரியர் தொழிலில் ஈடுபட்டிருக்கின்றனர். அத்தகையவர்கள் செகண்டரி கிரேட் அல்லது ஹையர் கிரேட் பயிற்சி பெற்றவர்களாக இருந்தால் அவர்களுக்குக் கட்டாயமாக முன்பாத்தியதை கொடுத்து பஞ்சாயத்து யூனியன்களில் உள்ள பள்ளிக்கூடங்களில் வேலைகள் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். குறிப்பாக ராணுவத்தினருடைய மனைவியர், ஆசிரியர் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். ஆகவே இது விஷயத்தில் அதிக கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இத்துடன் கவர்னர் அவர்களின் உரைக்கு நன்றி தெரிவிக்கக் கூடிய தீர்மானத்தை ஆதரித்து, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

* திரு. சி. கோதண்டராம பாகவதர்: கனம் சபாநாயகர் அவர்களே, கவர்னர் அவர்களின் உரையை ஆதரித்து சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். கவர்னர் அவர்கள் உரையில் சீனாவின் ஆக்கிரமிப்பைப் பற்றியும், நாட்டின் நிலைமையைப் பற்றியும், மக்களின் கடமைகளைப் பற்றியும் குறிப்பிட்டிருக்கிறார்கள். உண்மையிலேயே சீனாவின் துரோகச் செயலைக் கண்டு, அதுவும் சென்ற அக்டோபர் மாதம் 20-ந் தேதி நமது பாரத புண்ணிய பூமியின் மீது படையெடுத்து நமக்குச் சொந்தமான நிலத்தைக் கைப்பற்றியதை குறித்து, தென்னாட்டு மக்கள் அச்செயலை வன்மையாகக் கண்டிக்கிறார்கள். மாணவர்களும், மாணவிகளும் ஊர்வலங்களில் கலந்துகொண்டு 'சீனர்கள் ஒழிக, சூ-என்-லாய் ஒழிக' என்று கோஷம் இட்டு வருகிறார்கள். தமிழ் நாட்டிலுள்ள பலர் இன்றைக்கு தேசியப் பாதுகாப்பு நிதிக்கு தாராளமாக நன்கொடை கொடுத்து வருகிறார்கள். சர்வ கட்சிகளையும் சேர்ந்த மக்களும் இன்று ஒத்துழைத்து தாராளமாக நன்கொடை வழங்கி வருகிறார்கள்.

கைத்தறி பட்டு ஜரிகை சேலைகள் தயாரிக்கும் நெசவாளர்கள் இன்று ஜரிகை இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள். அவர்களுக்கு வேண்டிய ஜரிகை சூரத் என்ற நகரிலிருந்து கிடைத்து வந்தது. ஜரிகை இல்லாத காரணத்தினால் இப்பொழுது உற்பத்தி குறைந்துவிட்டது. டில்லி, பம்பாய் முதலிய இடங்களில் தமிழ் நாட்டு ஜரிகை சேலைகளுக்கு கிராக்கி அதிகமாக இருக்கிறது. ஆகவே நமது அரசாங்கம் சூரத்திலிருந்து தாராளமாக அவர்களுக்கு ஜரிகை கிடைக்கும்படி ஏற்பாடு செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆரணியில் ஒரு கல்லூரி ஏற்படுத்தவேண்டுமென்று மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். ஆரணி தாலுகா, போளூர் தாலுகா, வந்தவாசி தாலுகா, செய்யாறு தாலுகா மக்களின்



நலனுக்காக ஆரணியில் ஒரு கல்லூரி ஏற்படுத்தவேண்டுமென்று மீண்டும் கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* திரு. து. ப. அழகமுத்து: மதிப்பிற்குரிய சட்டமன்றத் தலைவர் அவர்களே, கவர்னர் பெருமான் அவர்களுடைய உரையின்மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்லுவதற்கு எனக்குச் சந்தர்ப்பம் அளித்ததற்கு முதலாவதாக என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கவர்னர் பெருமான் அவருடைய உரையில் சீன ஆக்கிரமிப்புக்குப் பிறகு நாட்டிலே ஏற்பட்டுள்ள விழிப்பு உணர்ச்சியைப் பற்றியும், பாதுகாப்பு நிதிக்குப் பணம் குவிந்துள்ளதைப் பற்றியும் குறிப்பிட்டு, இந்த ஆக்கிரமிப்பின் காரணமாக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளைக் குறித்தும், எடுக்கப்போகிற நடவடிக்கைகளைக் குறித்தும், திட்டங்களை நிறைவேற்றுகிற தன்மையை விளக்கியும் கூறியிருக்கிறார்கள். பாதுகாப்பு நிதி வசூலைப் பொறுத்தவரையில், நாட்டு மக்கள் மிகப் பெருவாரியான அளவிலே, பாதுகாப்பு நிதிக்கு பணம் கொடுத்து வருகிறார்கள். இந்த நிதி திரட்டும் முயற்சியிலே நம்முடைய மாநில அமைச்சரவை மிகவும் சிறப்பான முறையிலே பணி ஆற்றியிருக்கிறது. ஆனால் இதில் ஒரு குறை என்னவென்றால், அமைச்சர்கள் எல்லா ஊர்களுக்கும் சென்று நிதி திரட்டுகிற போது, பொதுப்படையான முறையிலே இல்லாமல், ஆளுங்கட்சியின் சார்பாகவே நிதி திரட்டப்படுகிறது என்ற எண்ணத்தை உண்டுபண்ணக்கூடிய வகையிலே அவர்களது முயற்சி இருந்து வருகிறது. அதைபோலவேதான் பாதுகாப்பு கமிட்டிகள் அமைப்பதிலும். மாநில ரீதியில் அமைக்கப்பட்டிருக்கிற கமிட்டியிலும் சரி, மாவட்டங்களில் அமைக்கப்பட்டிருக்கிற கமிட்டியிலும் சரி, அங்கத்தினர்களைப் போட்டிருப்பது பொதுவாக பாராட்டக்கூடிய முறையிலே இல்லை. மற்றவர்களுக்கு போதுமான பிரதிநிதித்துவம் இல்லை என்கிற நிலையிலே அமைக்கப்பட்டிருக்கிறது. இதை நான் ஏன் குறிப்பிடுகிறேன் என்றால், மற்றவர்களுக்கு அதிகமாக பிரதிநிதித்துவம் கொடுக்க வேண்டும் என்பதற்காக அல்ல. கவர்னர் பெருமான் குறிப்பிட்டதுபோல், எல்லோரிடமும் ஒரு ஐக்கிய உணர்ச்சி ஏற்பட்டிருக்கிறது என்பதைப் பிரதிபலிக்கும் வகையில் இந்தக் கமிட்டிகள் அமைக்கப்படவில்லை என்பதற்காகத்தான் இதைச் சொல்லுகிறேன். இந்தக் கருத்தை அடிப்படையாக வைத்துக்கொண்டு "ஹோம் கார்டு" படை அமைக்கும்பொழுது, எல்லோருக்கும் சந்தர்ப்பம் அளிக்கக் கூடிய வகையில் அதை அமைக்கவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். அதைப்போலவே, ஊர்பாதுகாப்பு படைகளை ஏற்பாடு செய்கின்ற பொறுப்பை சேவாசதனம் போன்ற ஸ்தாபனத்திடம் ஒப்படைக்க ஏற்பாடு செய்யப்படும் என்று குறிப்பிட்டுள்ளார்கள். இந்த சேவாசதனங்கள் எவை, எவ்வாறு இயங்கும், என்று தெரிந்துகொள்ள முடியவில்லை.

[illegible] கட்டுப்படுத்துவதற்காகக் கூட்டுறவு [illegible] திறவப்போவதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்தக் கூட்டுறவு சங்கங்கள் பெரும்பாலும் நகர்புறங்களிலேதான் இருக் கின்றனவே ஒழிய, கிராமப் புறங்களில் உள்ளவர்கள் குறைந்த விலையிலே சாமான்களைப் பெறுவதற்கு வழி செய்யக்கூடியதாக இல்லை.

அடுத்தபடியாக, யுத்த நெருக்கடியை உத்தேசித்து போக்கு வரத்து வசதிகளை கட்டுப்படுத்தப்போவதாகவும், அதை மறு பரிசீலனை செய்வதாகவும் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த யுத்த நெருக்கடி என்ற காரணத்தை வைத்துக்கொண்டு, போக்குவரத்து வசதிகளைக் குறைப்பதென்றால் மக்களுக்குப் பாதகம் ஏற்படாத வகையிலே செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குறிப் பாக, கிராமப்புறங்களிலே உள்ளவர்கள் போக்குவரத்து வசதியை பெற்று வருவது குறைந்துவிடக்கூடாது. அப்படி ஏதாவது கட்டுப்படுத்த வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டால் இருக்கின்ற பஸ்களின் ரூட்களுக்கு வேரியேஷன் கொடுப்பதன் மூலமாக கிரா மங்களில் உள்ளவர்களுக்கு வசதி செய்து கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். மறு பரிசீலனை செய்யும்போது, பஸ் போக்கு வரத்தை தேசிய மயமாக்குகின்ற ஒரு நிலைமை ஏற்படுமேயானால் அது மிகவும் பாராட்டக்கூடிய முறையிலே இருக்கும்.

அடுத்தபடியாக, திட்டவேலைகளைப் பற்றிக் குறிப்பிடும்போது, பஞ்சாயத்துக்களிலே அபிவிருத்தி ஏற்பட்டிருப்பதைப் பெருமை யாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். பஞ்சாயத்து யூனியன்களிலே இருப்பவர்கள் நல்ல முறையில் வேலை செய்கிறார்கள் என்றும் குறிப் பிட்டிருக்கிறார்கள். வேலை நடைபெறுவதற்குள்ள குறைகளில் ஒரே ஒரு நிகழ்ச்சியை மட்டும் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். மூன்றாவது பிரிவு பஞ்சாயத்து யூனியன்களில் தொழில் வளர்ச்சியைக் கவனிப்பதற்காக விஸ்தரிப்பு அதிகாரிகள் நியமிக்கப்படாமல் இருக்கிறார்கள். இதன் காரணமாக வேலைகள் தாமதப்படுகின்றன. யுத்த நெருக்கடியைக் கருதி, அம்மாதிரி உத்தியோகஸ்தர்களை நியமிப்பதில்லையென்று கருதுவார்களே யானால் அந்த வேலைகளை மற்ற உத்தியோகஸ்தர்களிடம் கொடுத்து கவனிக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சிக்கனத்தைப் பற்றி கவர்னர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்

9-30 a.m. கள். வேலைத் திட்டங்களிலே சிக்கனத்தைக் கையாளுவோம் என்று பொதுப்படையாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறதே தவிர, நிர்வாகத் துறையில் எந்த அளவு சிக்கனம் கையாளப்படும் என்று குறிப் பிடப்படவில்லை.

விவசாயத்தைப் பெருக்குவதற்கு சிறிய நீர்ப்பாசனத் திட்டங் களை நிறைவேற்றப் போவதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இது வரையிலும் கவனிக்கப்படாமல் இருந்த சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள் இப்பொழுது கவனிக்கப்படுவதிலே ஓரளவு சந்தோஷ படுகிறேன். நடுத்தர நீர்த் தேக்கங்கள் என்ற வகையிலே, புதிதாக ஒன்றிரண்டு திட்டங்களை ஆரம்பிக்கப் போவதாகக் கூறி





யிருக்கிறார்கள். கொல்லிமலைத் திட்டம் பரிசீலனை முடிந்து, எஸ்டி மேட் தயாராகியுள்ள இந்த நிலையில் சேர்க்கப்படாமல் விட்டு விடப்படுவதற்காக நான் வருத்தப்படுகிறேன். அதே சமயத்தில், எங்கள் பகுதியில் ஜமீன் வசமிருந்த ஏரிகள் மிக மோசமான நிலையில் இருந்து வந்திருக்கின்றன. அவைகள் இப்பொழுது சர்க்காருக்கு மாற்றப்பட்டிருக்கின்றன. அந்த ஏரிகளெல்லாம் இதுவரை பழுது பார்க்கப்படாமல் பாசன வசதிக்கு அதிக உப யோகமல்லாத நிலையில் இருந்து வருகின்றன என்ற சூழ்நிலை யைக் கருத்திற்கொண்டு, அவைகளை ரிப்பேர் செய்வதற்கான காரியங்களைச் செய்யவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளு கின்றேன்.

தொழிலாளர் நல்லுறவு ஏற்பட்டு வருவதாகக் குறிப்பிட்டிருக் கிறார்கள். தொழிலாளர்களைப் பற்றிக் கூறும்போது, மில்களி லுள்ள தொழிலாளிகளைக் கருத்திற்கொண்டுதான் பொதுவாகப் பேசப்படுகிறதே தவிர, மற்ற சிறு தொழில்களிலேயுள்ள தொழி லாளிகளைப் பற்றி எந்தவிதமான குறிப்பும் அதிலே இல்லை. எனக்கு முன்னால் பேசியவர்கள் எல்லோரும் குறிப்பிட்டது போல, நகைத் தொழிலாளர்கள் இப்பொழுது மிகவும் கஷ்டப் பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு உடனடியாக என்ன பரிகாரம் செய்யப்படவேண்டும் என்பதைப்பற்றி கவர்னர் உரை யில் குறிப்பிடப்படவில்லை. அதைப் போலவே, கைத்தறி நெசவுத் தொழிலாளர்களைப்பற்றியும் ஒன்றும் குறிப்பிடாமல் விட்டிருக் கிறார்கள்.

மின்சாரத்தைப் பற்றி சென்ற தடவை கவர்னர் உரையில் குறிப்பிட்டபோது, "ஆண்டொன்றுக்கு 1,500 கிராமங்களுக்கு மின்சாரத்தை வழங்க இருக்கிறோம்" என்று குறிப்பிட்டிருந்தார் கள். ஆனால்—இப்பொழுது "வேலைகள் திருப்திகரமாக நடை பெற்று வருகின்றன" என்று குறிப்பிட்டிருக்கிறார்களே தவிர, முன்னால் கூறியபடி எந்த அளவுக்கு நிறைவேற்றப்பட்டது என்று அவர்கள் குறிப்பிடவில்லை. யுத்த நெருக்கடியை உத்தேசித்து மின் சாரத்தைக் குறைந்த அளவு பயன்படுத்துவதாக இருந்தாலும் கூட, கிராமங்களுக்கு விவசாயத்திற்கு மின்சாரத்தை விஸ்தரிப் பதிலே தயக்கம் காட்டக் கூடாது என்று நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

நஞ்சை நிலங்களுக்கு வரியையும் புஞ்சை நிலங்களுக்குத் தண்ணீர்த் தீர்வையையும் உயர்த்துவது இந்தச் சந்தர்ப்பத்தில் விவசாய உற்பத்தியைப் பெருக்குவதற்கு அனுகூலமாக இருக் காது. நிதி அமைச்சர் அவர்கள் முன்பு குறிப்பிட்டது போல், இவைகளை மறு பரிசீலனை மட்டும் செய்து, வரிகளை உயர்த்தாமல் இருந்தால் நன்றாக இருக்கும் என்று நான் தெரிவித்துக் கொள்ளு கின்றேன்.

இந்த உரையில், [illegible] படகுகளுக்கான [illegible] தொழிற்சாலை ஒன்றை ஏற்படுத்த வேலைகள் நடந்துகொண்டிருப் பதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். சென்ற [illegible],

குறிப்பிட்டபோது, ஜப்பானிய ஒத்துழைப்போடு ஆழ்கடல் மீன் பிடிப்பு திட்டம் ஒன்றை ஏற்படுத்த முயற்சிகள் நடைபெற்று வருவதாகக் குறிப்பிட்டிருந்தார்கள். அந்தத் திட்டந்தான் இதுவா? இல்லையென்றால், ஜப்பானியரோடு ஒப்பந்தம் செய்து கொள்வது எந்த நிலையில் இருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

சென்ற உரையில், தனியார்த் துறையில் பெரிய உருக்கு தொழிற்சாலை யொன்றையும், ரசாயன தொழிற்சாலை யொன்றையும், மூன்று சர்க்கரை ஆலைகளையும் ஏற்படுத்துவதற்கான பேச்சு வார்த்தைகள் நடந்துகொண்டிருக்கின்றன என்று குறிப்பிட்டிருந்தார்கள், அது பற்றி இந்த உரையில் ஒன்றும் குறிப்பிடப் படவில்லை என்று கூறி, என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. கரு. சீமைச்சாமி:** பெரு மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, கவர்னர் பெருமான் ஆற்றிய உரையின் மீது என்னுடைய கருத்துக்களை நான் தெரிவிக்க விரும்புகிறேன். கவர்னர் பெருமானுடைய உரையை நான் வரவேற்பதற்கில்லை. காரணம், அதிலே எதிர்பார்த்தவை காணப்படவில்லை.

கிழக்கு இராமநாதபுரம் பகுதி பல ஆண்டுகளாகவே கைவிடப்பட்ட ஒன்றாகும். பெரிய பெரிய நீர்ப்பாசனத் திட்டங்களெல்லாம் பூர்த்தியாகி விட்டன என்று கவர்னர் உரையில் குறிப்பிட்டிருக்கிறது. இராமநாதபுரம் ஜில்லாவைப் பொறுத்த வரையில், பெரிய திட்டங்கள் உருவாக்குவதற்கு ஒன்றும் இல்லை என்று சொல்லப்படுகிறது. ஆனால், இராமநாதபுரம் ஜில்லா வளமடைய, அது நல்ல முறையில் செழித்தோங்க ஒரு பெரிய திட்டம் இருக்கிறது. அது தான் மேல் பெரியார் திட்டம். அந்தத் திட்டத்தைப் பற்றி நமது மாநில அரசாங்கம் நமது அண்டை மாநிலமான கேரள அரசாங்கத்துடன் பேச்சு வார்த்தை நடத்தி, அங்கே மேற்கு நோக்கி ஓடும் ஆறுகளின் தண்ணீர் எந்த விதமான உபயோகமும் இல்லாமல், கடலில் சங்கமம் ஆகாமல், அந்த ஆறுகளைக் கிழக்கு நோக்கி திருப்பிப் பெரியாற்றில் விட்டால், கிழக்கு இராமநாதபுரம் பகுதி செழிப்பாவதற்கு வசதி இருக்கிறது. அந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டால், மதுரை மாவட்டத்தில் ஒரு பகுதியும், கிழக்கு இராமநாதபுரம் பகுதியில் கிட்டத்தட்ட இரண்டரை லட்சம் ஏக்கராவும் பாசன வசதி பெற முடியும். இது குறித்துப் பல தடவை பேசியிருக்கிறோம். கனம் அங்கத்தினர் திரு. மூக்கையா தேவர் அவர்களும் இதுபற்றி பல கேள்விகள் கேட்டு, மராமத்து அமைச்சர் கவனிப்பதாகவும் கூறியிருக்கிறார்கள். அந்தத் திட்டம் என்ன நிலையில் இருக்கிறது என்று தெரியவில்லை. கேரள அரசாங்கத்தோடு இத்திட்டம் பற்றிப் பேச்சு வார்த்தை நடத்தப்பட்டிருக்கிறதா? இல்லையென்றால், எப்பொழுது நடத்தப்படும்? இப்பொழுதிருக்கும் அவசர நெருக்கடி காரணமாக, யாருக்கும் எந்தவிதமான கட்சி மாறுபாடும் கருத்து வேறுபாடும் இல்லாதிருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில் அதுபற்றி கேரள சர்க்காருடன் பேசுவதற்கு நல்ல சந்தர்ப்பம் இருக்கிறது என்று நான் கருதுகிறேன். ஆகவே,



கனம் முதல் அமைச்சர் அவர்கள் இதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தால் உண்மையிலேயே நாடு நல்ல முறையில் செழித்தோங்க வசதியாக இருக்கும் என்று நான் சொல்ல விரும்புகிறேன்.

கிழக்கு இராமநாதபுரம் பகுதி அநேக கண்மாய்களைக் கொண்டது. ஐயாயிரம் ஏரிகள் இருக்கின்றன. ஜமீன் காலத்தில் கால்வாய்கள் தூர்ந்து மராமத்து இல்லாமல் அழிந்திருக்கின்றன. இந்தப் பகுதியில் உள்ள கண்மாய்களைச் சிறந்த முறையில் மராமத்து செய்வதில் விசேஷ கவனம் செலுத்த வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுவதாகக் கூறப்பட்டிருக்கிறது. கிழக்கு இராமநாதபுரம் பகுதியிலும் சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களைச் சிறந்த முறையில் நிறைவேற்ற ஏற்பாடு செய்யவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

இராமநாதபுரம் மாவட்டம் பொதுவாக பல பெருமைகளைக் கொண்டது. இந்த ஆண்டு நாடு முழுவதும் விவேகானந்தரின் நூற்றாண்டு விழா கொண்டாடப்பட்டது. விவேகானந்தரை வெளிநாட்டுக்கு அனுப்பி, இந்தியாவின் பெருமையை நிலை நாட்டிய பெருமை இராமநாதபுரம் ஜில்லாவுக்கு உரியது என்று நான் பெருமையோடு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இராமநாதபுரம் பகுதி கடல் வளமுள்ள பகுதி, இராமநாதபுரம் பகுதி நில வளமுள்ள பகுதி, இராமநாதபுரம் பகுதி கனிவளமுள்ள பகுதி, ஆனால், அது புறக்கணிக்கப்பட்டிருக்கிறது. காரணம் என்ன என்றுகூடத் தெரியவில்லை. ஒரு வேளை நமது மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் அவர்கள் இராமநாதபுரம் மாவட்டத்தில் பிறந்திருப்பதன் காரணத்தினாலோ என்னவோ தெரியவில்லை, அந்தப் பகுதி புறக்கணிக்கப்பட்டிருக்கிறது. பெரியவர்கள் தாங்கள் பிறந்த மாவட்டத்திற்கு நல்லது செய்தால் இம்மன்றத்தில் கூடியிருக்கும் மதிப்பிற்குரிய கனம் அங்கத்தினர்கள் ஏதாவது நினைத்துவிடுவார்களோ என்ற காரணத்தினாலோ என்னவோ தெரியவில்லை அவர்கள் செய்ய மறுக்கிறார்கள். ஆகவே, உங்களையெல்லாம் நான் வேண்டி விரும்பி கேட்டுக் கொள்ளுகிறேன். எங்கள் மாவட்டம் முதல் அமைச்சர் அவர்கள் சார்ந்த மாவட்டம், அது புறக்கணிக்கப்பட்டிருக்கிறது. அந்த மாவட்டத்தைச் சார்ந்தவர்கள் நல்லபடியாக வாழவேண்டுமென்ற காரணத்திற்காக அங்கே பல திட்டங்களை நிறைவேற்றுவதற்கு நீங்கள் ஆதரவு அளிக்கவேண்டும். குறிப்பாக, மேல் பெரியார் திட்டத்தை நிறைவேற்றிக் கொடுத்தால் அது பெரிய மதிப்பளிப்பதாக இருக்கும்.

வைகைக் கால்வாய்ச் சீரமைப்புத் திட்டத்தைப்பற்றி கவர்னர் உரையில் ஒருவித குறிப்பும் காணப்படவில்லை. இது வருந்தத் தக்கது. வைகைக் கால்வாய் சீரமைப்புத் திட்டத்திற்கு மூன்றரை கோடி செலவாகும் என்றும், அது 1962-63-ல் துவக்கப்படும் என்றும் சொல்லப்பட்டது. அதுபற்றி இப்பொழுது ஒரு குறிப்பும் காணப்படவில்லை. நேற்று விவசாய அமைச்சர் அவர்கள்

[திரு. கரு. சீமைச்சாமி] [30th January 1963

பேசியபோது, 'இந்த அவசர கால நிலை காரணமாகத் தடங்கல் இல்லாமல், நீர்ப்பாசன திட்டங்கள் நிறைவேற்றப்படும்' என்று சொன்னார்கள். ஆகவே, வைகைக் கால்வாய்ச் சீரமைப்புத் திட்டத்தை உடனடியாகத் துவக்க ஆவன செய்யுமாறு நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

நிலங்களுக்கு வரி விதிப்பதைப்பற்றிக் கவர்னர் அவர்களுடைய உரையில் கூறியிருக்கிறார்கள். இது பற்றி சென்ற பட்ஜெட் கூட்டத்திலும் நாங்கள் பேசி இருக்கிறோம். வரி உயர்வு உண்மையிலேயே உணவு உற்பத்தியைப் பாதிக்கும். இந்த அவசர கால நெருக்கடியில் விவசாயிகளை தட்டிக் கொடுத்து விவசாய உற்பத்தியைப் பெருக்குவதில் அவர்களுக்கு ஆசையை உண்டாக்க வேண்டும். 'Army moves by its stomach' என்று நெப்போலியன் கூறினார். பட்டாளம் வயிற்றிலே வளருகிறது. சாப்பாடு இல்லாவிட்டால் பட்டாளம் நடக்க முடியாது. எவ்வளவு பெரிய உயர்ந்த கருவிகள் இருந்தாலும், சக்திவாய்ந்த அணுகுண்டு ஹைட்ரஜன் குண்டு எல்லாம் இருந்தாலும், உணவு இல்லாவிட்டால் ஒன்றும் செய்யமுடியாது. ஆகவே, இந்த அவசர கால நிலையை ஒட்டி, விவசாயிகளைத் தட்டிக் கொடுத்து அவர்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுக்காவிட்டால், அவர்களுக்கு உணவு உற்பத்தி செய்வதில் உள்ள ஆர்வம் குறையக் கூடும். ஆகவே, வரிகளை நிச்சயமாகத் தளர்த்தவேண்டும், அறவே நீக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

விலைவாசி பற்றியும் கவர்னர் உரையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. விலைவாசி விஷம்போல் ஏறிக்கொண்டிருக்கிறது. ஆனால், உணவுப் பண்டங்களுக்கு மாத்திரம் விலைக் கட்டுப்பாடு கொண்டு வருவதென்றால், அது விவசாயிகளை அமுக்குவது போல் ஆகும். அறுவடை காலத்தில் விளைபொருள்களின் விலையைக் கட்டுப்பாடு செய்து, சாதாரண சமயத்தில் தளர்த்தி விடுவதால், விலைவாசி ஏறிவிடுகிறது. விவசாயிகள் அறுவடை செய்தவுடனே அவர்கள் உற்பத்தி செய்கிற பொருளைக் குறைந்த விலைக்கு விற்றுவிட்டு, அவர்களுக்கு தேவையான பொருள்களை அதிகமாக விலைக்கு வாங்கவேண்டியிருக்கிறது. விலைக் கட்டுப்பாடு என்றால் அத்தனைப் பொருள்களுக்கும் இருக்கவேண்டும். உணவுப் பண்டங்களுக்கு மாத்திரம் விலைக் கட்டுப்பாடு வைத்துவிட்டு, மற்ற பொருள்களுக்கு விலைக் கட்டுப்பாடு வைக்காமல், தான்தோன்றித்தனமாக இருந்தால், அது விவசாயிகளைப் பாதிக்கும் என்பதும் கனம் விவசாய அமைச்சர் அவர்களுக்கு நன்கு தெரிந்திருக்கும். இப்போது விவசாயம் செய்து கொண்டிருக்கக்கூடியவர்களுக்கு எவ்வளவு கஷ்டம் இருக்கிறது என்பது எல்லோருக்கும் தெரியும். அவர்களுக்கு வேண்டிய உரம் கிடைப்பது இல்லை. நல்ல விதைகள் கிடைப்பதில்லை. உரம் கள்ளமார்க்கெட்டில் கிடைக்கிறது என்றாலும் அவை நல்ல உரமாக இருப்பது இல்லை. அதுவும் நாட்டில் நெருக்கடி நிலைமை பிரகடனம் செய்யப்பட்டிருக்கிறபொழுது விவசாயப் பெருங்குடி மக்களுக்கு எவ்விதக் கஷ்டமும் இல்லாமல் ரசாயன உரம் கிடைக்கச் செய்தால் தான் அவர்கள் இன்னும் உற்சாகத்தோடு அத்துறையில் ஈடுபட முடியும்.



30th January 1963] [திரு. கரு. சீமைச்சாமி]

யுத்த காலத்தில் உணவு உற்பத்தி பாதிக்கப்படாமல் பார்த்துக் கொள்வதுதான் மிகமிக முக்கியமான காரியம் என்பதை இந்த மன்றத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

நேற்று காங்கிரஸ் கட்சி உறுப்பினர் ஒருவர் பேசும்போது வயது வந்தவர்கள் தொண தொண என்று பேசிக்கொண்டிருப்பது போலவே பேசுகின்ற பெரியாரை வெளியே விட்டு வைக்கக் கூடாது, கைது செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். வயது வந்தவர்கள் பேசுவது—நியாயத்தை எடுத்துச்சொல்வது, நடந்து கொள்ள வேண்டிய முறையை எடுத்துச் சொல்வது—கசப்பானதாக இருக்கலாம். ஜனநாயக நாட்டில் எல்லோருக்கும் தங்கள் கருத்துக்களை எடுத்துக் கூற உரிமை இருக்கிறது. வயது வந்தவர்கள் பேசுகிறார்கள் என்றால் தங்களுடைய பழைய அனுபவங்களை வைத்துக்கொண்டு பேசலாம். அத்தகையவர்களுடைய கருத்தை நாம் ஏற்றுக்கொள்ளா விட்டாலும் அவர்களுடைய பேச்சு உரிமைக்குத் தடை விதிக்கவோ, அவரையே கைது செய்யவோ முயல்வது நாகரீக நாட்டில், ஜனநாயக நாட்டில் மேற்கொள்ளத் தக்ககாரியம் அல்ல. அவசர கால நெருக்கடி நிலைமை அவர்கள் பேச்சினால் உண்டாயிற்று? அதை உண்டாக்கியவர்கள் அவர்களா? கைது செய்ய வேண்டியது இந்த நெருக்கடிக்குக் காரணமாக இருந்தவர்களையா, அல்லது நெருக்கடி சமயத்தில் நல்ல கருத்துக்களைத் தெளிவாக எடுத்துச் சொல்லும் பெரியவரையா? என்பதை யோசித்து பார்த்து பெரியவர் சொல்லுகின்ற அனுபவ உரைகளை ஏற்றுக்கொண்டு செயல்படுவதே நியாயமானதாக இருக்குமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், நேற்று கவர்னர் உரையில் நான் மிகவும் ஆர்வத்துடன் எதிர்பார்த்த ஒன்று இல்லை. கடந்த ஐந்தாறு ஆண்டுகளுக்கு முன்பாக முதுகுளத்தூர் கலவரத்தில் கைது செய்யப்பட்டு தண்டனை அடைந்தவர்களுடைய தண்டனை காலத்தை இந்த அவசரகால நெருக்கடி நிலைமையை உத்தேசித்து குறைத்து, அவர்களை விடுதலை செய்யவேண்டுமென்ற கோரிக்கை முதல் அமைச்சரிடமும், கவர்னர் அவர்களிடமும் செய்துகொள்ளப்பட்டிருக்கிறது. சிறையில் உள்ளவர்கள் எல்லாம் வீரமிக்கவர்கள். இன்றைக்கு அவர்களுடைய சேவையை நாட்டுக்கு நல்ல முறையில் பயன்படுத்திக்கொள்ள முற்படவேண்டும். கவர்னர் அவர்கள் அதைப்பற்றி ஒன்றும் கூறவில்லையென்றாலும் நல்லெண்ணத்தின் அடையாளமாக அவர்களை நெருக்கடி கால நிலைமையை உத்தேசித்து விடுதலை செய்வதற்குத் தக்க ஏற்பாடுகள் எடுத்துக் கொள்ளவேண்டுமென்று இந்த மன்றத்தின் மூலமாக கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக தொண்டர் படை. தொண்டர் படை அமைக்கும் விஷயத்தில் பஞ்சாயத்து யூனியன்களுக்கு மிகவும் முக்கியமான பங்கு இருக்கிறது. எந்தமுறையில் அந்தப் படை அமைக்கப் படவேண்டும், எந்த முறையில் அவர்களுக்குப் பயிற்சி அளிக்கப் படவேண்டும் என்பது பற்றி திட்டவட்டமாக அறிவிக்க வேண்டும். முன்னூற்று எழுபத்து மூன்று பஞ்சாயத்து யூனியன்கள் இருக்கின்றன என்றாலும் ஒரு யூனியனுக்கு 5,000 தொண்டர்

[திரு. கரு. சீமைச்சாமி] [30th January 1963

ஆக்கச் சேர்க்கப்படக்கூடும். ஆகவே போதுமான இன்ஸ்ட்ரக்டர்களை உடனடியாக நியமித்து அந்தத் தொண்டர்களுக்கு நல்லதொரு பயிற்சியை அளிக்கத்தக்க நடவடிக்கையை உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என்று கனம் நிதி அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அதோடு, ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு வெண்கல மணி இருக்கவேண்டும். சாதாரண காலங்களில் அந்த வெண்கல மணியை அடிக்கக் கூடாது. அந்த வெண்கல மணியை அடித்தால் உடனடியாக கிராமத் தொண்டர் படையினர் பொது மக்கள் எல்லோரும் ஒன்று கூடிப் பேசுவதற்குச் சந்தர்ப்பம் இருக்கவேண்டும். அந்த முறையில் ஒவ்வொரு கிராமத்திலும் வெண்கல மணி வாங்கி வைத்துக்கொள்ளவும் அனுமதி அளித்து உதவி செய்ய வேண்டுமாறு கனம் நிதி அமைச்சரைக் கேட்டுக் கொள்கிறேன்.

கவர்னர் அவர்கள் உரையின் மீது ஓரிரு வார்த்தைகள் கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன். கவர்னர் அவர்கள் தன் உரையின் முற்பகுதியில் கொடுங்கோலர்களாகிய சீனர்கள் அநாகரீகமான முறையில் ஆக்கிரமிப்பு செய்து இருப்பதை விரிவாக எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அந்த ஆக்கிரமிப்பை நம் தேசமும், நம் மக்களும் எவ்வாறு சமாளித்தார்கள், எவ்வாறு சமாளித்துக் கொண்டு வருகிறார்கள் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். முக்கியமாக, நம்முடைய நாட்டிலே சீன ஆக்கிரமிப்பு ஒரு புதிய தேசபக்தியை எழுப்பியிருக்கிறது. எதிர்பார்க்காத சமயத்தில் ஏற்பட்டதாக இருந்தாலும் அதனால் உண்டான தேசபக்தியாகிய தீ தேச மக்களிடையே ஓர் புத்துணர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகமாக இருந்தாலும் சரி, கம்யூனிஸ்டு கட்சியாக இருந்தாலும் சரி, சுதந்திராக் கட்சியாக இருந்தாலும் சரி அவர்கள் அனைவருமே இந்தத் தியாகத் தீயில் பொசுங்கியிருப்பார்கள் தங்கள் தங்கள் கருத்துக்களில் ஊன்றியிருந்தால். இந்த நிலைமையை நன்றாகப் புரிந்துகொண்டுதான் கம்யூனிஸ்டுகளும் சரி, திராவிட முன்னேற்றக் கழகத்தினர்களும் சரி அந்தத் தீயில் பொசுங்கிவிடக்கூடாது என்று ஒதுங்கி நின்று விட்டார்கள். அவர்கள் தேசப் பாதுகாப்புக்கு அளித்து வருகிற ஒத்துழைப்பைக் கண்டு தேசமே மகிழ்ச்சி அடைகிறது. திராவிட முன்னேற்றக் கழகத்தினர் இந்த அரசியல் ஞானத்தைப் பெற்றிருப்பது பாராட்டுவதற்குரியதாகும். இது போலவே எப்பொழுதும் அவர்கள் பாரத நாட்டின் ஏற்றத்தைத் தங்களுடைய அலங்காரச் சொற்களினாலே எடுத்துக்கூறி தேசத்தின் பெருமையை உயர்த்துவார்கள் என்று நம்புகிறேன். அடுத்தபடியாக திராவிட முன்னேற்றக் கழகநண்பர்கள் தங்கள் தங்கள் கட்சிக்கு தி.மு.க. என்று பெயர் கொண்டிருப்பதை பா. மு. க. என்று மாற்றிக் கொண்டாக வேண்டும். அக் கழகம் இனி பாரத முன்னேற்றக் கழகமாகப் பணியாற்றினால் தான் இந்த நாட்டின் அரசியலில் எதிர்காலத்தில் அவர்களுக்கு இடமுண்டு. இந்தப் பெயரையே வைத்திருந்தால் அரசியல் உலகில் எதிர்காலத்தில் அவர்களுக்கு நிச்சயமாக இடமில்லையென்று எடுத்துக் கூற விரும்புகிறேன்.



30th January 1963] [திரு. டி. கார்ச்சா கவுடர்]

அடுத்தபடியாக நாம் சுதந்திரம் அடைந்து 15 ஆண்டுகளாகி பதினாறாவது ஆண்டும் பிறந்துவிட்டது—ராமராஜ்யத்தை அமைத்திருப்பதாகப் பிரகடனம் செய்து வந்தோம். ராமாயணத்தை உற்று நோக்கினால் ராமன் எங்கிருந்தபோதும், காட்டில் முனிவர்கள் மத்தியில் இருந்தபோதும், நாட்டில் இருந்தபோதும், குகையில் இருந்தபோதும் காண்டீபத்தையும், பாணத்தையும் நீக்காமல் இருந்தான். ஆனால் 16 ஆண்டுகளாகக் காண்டீபத்தையே மறந்து இருந்தோம். நல்ல சமயத்தில் சீனாக்காரன் நமக்கு துப்பாக்கி, குண்டு இவற்றின் நினைவை உண்டாக்கி அவற்றை நாமும் எடுத்து வைத்துக்கொள்ள உதவியதற்கு நன்றி செலுத்த வேண்டும்.

கடந்த அக்டோபர் மாதம் 20-ஆம் தேதி முதற்கொண்டு பாராளுமன்றத்திலும், டெல்லியிலும் இருந்து சதா நாட்டு மக்களை நோக்கிக் கூவிக் கொண்டிருக்கிற குரலையும் நாம் கேட்கிறோம். அதேநேரத்தில் சென்னையில் இருந்து ஒலித்துக்கொண்டிருக்கிற ஒலியையும் கேட்கிறோம். அங்கிருந்து வருகிற தெய்விகக் குரலுக்கும், இங்கிருந்து ஒலிக்கிற சாத்தானின் குரலுக்கும் நமக்கு வித்தியாசம் தெரியாமல் இல்லை.

கடைசியாக நமது திட்டங்களைப் பற்றி—கல்வித் திட்டங்கள், தொழில்கள் பற்றி—கவர்னர் அவர்கள் குறிப்பிட்டுள்ள ஒவ்வொரு வார்த்தையையும் நாம் ஏற்றுக்கொள்ளவேண்டும். இன்னும் அத்துறையில் தீவிரமாக முயற்சி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். எங்களுடைய மாவட்டம் மற்ற மாவட்டங்களைப் போன்றது அல்ல. மிகவும் குளிர் பிரதேசம். அங்கே உருளைக் கிழங்கைத்தான் நம்பியிருக்கிறோம். காய்கறி அதிகம் உற்பத்தி செய்கிற திட்டத்தின் அடிப்படையில் அங்கே உருளைக்கிழங்கை உற்பத்தி செய்ய உதவியாக ஒரு உத்தியோகஸ்தரை அனுப்பியிருந்தார்கள். அவரும் வந்து அங்கே என்ன என்ன திட்டங்களைப் போடலாம் என்று ஆராய்ந்து கொண்டு வந்திருக்கிறார். ஆனால் கடந்த மூன்று ஆண்டுகளாக அங்கே லேட் ப்ளைட் என்ற வியாதியினால் உருளைக்கிழங்கு விதை மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது. தவிர, அந்த மாதிரி உருளைக்கிழங்கு பழுதுபடுவதைத் தடுக்க 'டைதென்' என்னும் மருந்தை அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யவேண்டும். அந்த மருந்தை அதிகப்படியாக இறக்குமதி செய்து விவசாயிகளுக்குக் கொடுக்க வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

நேற்று நமது எதிர்க்கட்சி நண்பர் கனம் மாதவன் அவர்கள் பேசும்போது, "நிதியமைச்சர் அவர்கள் சென்ற தடவை சபையில் பேசும்போது எங்களைத் தேசத் துரோகிகள், காட்டிக் கொடுப்பவர்கள் என்று கூறினார்கள்" என்று குறைபட்டுக் கொண்டார். நம்முடைய நிதியமைச்சர் அவர்கள், எப்படி தாய் தன்னுடைய குழந்தைகளைக் கண்டித்துத் திருத்தவேண்டுமோ அந்த முறையில் அவர்களை ஒரு வருஷ காலமாகத் திருத்தியிருக்கிறார்கள். இப்போது அவர்கள் திருந்தி விட்டார்கள். தாயானவள் குழந்தைக்குத் தின்பண்டங்கள் வழங்குவது போல, தாயாக இருந்து அவர்களைத் திருத்திய நிதியமைச்சர் அவர்கள், அவர்களுக்குச் சென்னை

[திரு. டி. கார்ச்சா கவுடர்] [30th January 1963]

நகர் மேயர் பதவியைக் கொடுத்திருக்கிறார்கள் என்று சொல்லிக் கொண்டு, கவர்னர் பெருமான் உரையை ஆதரித்து என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

* திரு. ஆ. தங்கவேலு : கனம் சட்டமன்றத் தலைவர் அவர்களே, மேன்மை தங்கிய கவர்னர் பெருமான் அவர்கள் உரையின் மீது எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பளித்ததற்காக என்னுடைய நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாட்டிலே இன்று ஏற்பட்டுள்ள இந்த நெருக்கடி நேரத்தில் எல்லோருடைய ஒத்துழைப்பையும் நாடுகின்ற இந்த நேரத்தில், பிரதமர் நேரு அவர்கள் கூட எல்லாக் கட்சிக்காரர்களும், எல்லா மக்களும் ஒன்று சேர்ந்து யுத்தத்திற்கு ஆதரவு கொடுக்கவேண்டு மென்று வேண்டுகோள் விடுத்திருக்கும் இந்த நேரத்தில், நாங்கள் எங்களுடைய கொள்கைகளை யெல்லாம் ஒதுக்கிவைத்து விட்டு முழு ஆதரவையும் கொடுத்து வரும் இந்த நேரத்தில், எனக்கு முன்னால் பேசிய கனம் உறுப்பினர் திரு. கார்ச்சா கவுடர் அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தினருக்கு இந்த நாட்டிலே இடம் இல்லை' என்று ஹிட்லர் பாணியில் குறிப்பிட்டது மிகவும் வருந்தத்தக்கதாகும்.

இன்று ஆக்கிரமிப்பு நோக்கத்துடன் சைனாக்காரன் படை எடுத்து யுத்த ஆயத்தங்களைச் செய்து கொண்டிருக்கும் நிலைமை யில் நாட்டு மக்களுக்கு, குறிப்பாக கிராமப் பகுதி மக்களுக்கு, யுத்த நிலைமைகளை எடுத்து விளக்கவேண்டியிருக்கிறது. அதற்கு முக்கியமான சாதனமாக இருப்பது இன்றைக்கு வானொலியாகும். பொதுவாக கிராமங்களுக்கு வானொலிப் பெட்டிகள் வழங்கப்பட் டிருந்தாலும், கிராமங்களையடுத்து இருக்கக்கூடிய ஹரிஜன மக்கள் வசிக்கும் பகுதிகளில் வானொலிப் பெட்டிகள் இல்லை. வானொலிப் பெட்டிகளை ஒவ்வொரு ஹரிஜன காலனிக்கும் வழங்க ஏற்பாடு செய்து ஹரிஜன மக்களும் உண்மையான செய்திகளைப் புரிந்து கொள்ள வசதி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஹரிஜன் மக்களுக்கு வீடு கட்ட மனை வழங்குவதில் மிகக் கால தாமதம் ஏற்படுகிறது. குறிப்பாக, என்னுடைய பகுதியில் திண்டி வனம் வட்டத்தில் அநேக இடங்களில் ஹரிஜன மக்கள் வசிப்ப தற்கு இடம் இல்லாமல், மனைக்காக விண்ணப்பம் செய்து இரண்டு மூன்று ஆண்டுகள் ஆகியும் மனை கிடைக்காமல் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். கூடுமான அளவு சீக்கிரமாக அவர்களுக்கு வீட்டு மனை வழங்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளவேண்டுமென்று அமைச்சர் அவர்களை வேண்டிக்கொள் கிறேன்.

இப்போது விவசாயிகளுக்கு நீர்ப்பாசன வசதிகளைச் செய்து கொடுப்பதற்காக 'இர்ரிகேஷன் பிளானிங் டிவிஷன்' என்ற அமைப்பை எஞ்சினியரிங் டிப்பார்ட்மெண்டில் ஏற்படுத்தியிருக் கிறார்கள். என்னுடைய பகுதியிலே ஆற்றுப் பாய்ச்சலோ, அது மூலம் தண்ணீர் வந்து ஏரி நிரம்பக்கூடிய வகையோ கிடையாது.



30th January 1963] [திரு. ஆ. தங்கவேலு]

பொதுவாக, மழை பெய்துதான் ஏரி நிரம்ப வேண்டும். 'இர்ரி கேஷன் பிளானிங் டிவிஷன்' மூலம் மழை பெய்யாத காலங் களிலும் குறைவாக பெய்யும்பொழுதும் அந்த ஏரிகளுக்குத் தண்ணீர் கொண்டுவருவதற்கான வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். திண்டிவனம் வட்டத்தில் சாரம் ரிவர் என்று ஒரு கால்வாய் இருக்கிறது. சமீபத்தில் நவம்பர், டிசம்பரில் பெய்த மழையில்கூட சில பகுதிகளில் ஏரி நிரம்பி வழிந்து விட்டது. அனம்பாக்கம், பாங்குளத்தூர், கம்பூர், காட்டுப் புஞ்சை, களவாய், ஆவணிப்பூர் போன்ற பகுதிகளில் ஏரிகளில் தண்ணீர் நிறைய வசதியில்லாத காரணத்தால் விளைச்சல் பாதிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, சாரம் ரிவர் என்ற கால்வாய் கோனேரிக் குப்பம் சமீபம் ஒரு கால்வாய் வெட்டி அதன் மூலம் கம்பூர், பாங்குளத்தூர் அனம்பாக்கம், காட்டுப் புஞ்சை, களவாய், ஆவணிப்பூர் போன்ற பகுதிகளில் உள்ள ஏரி களுக்குக் கால்வாய் மூலம் தண்ணீர் நிரம்ப வசதி செய்து கொடுப் பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை உடனடியாக ஐ.பி.டி. மூலம் எடுக்க வேண்டுமென்று வேண்டிக்கொள்கிறேன். விவசாயிகளுக்கு ஆண்டுதோறும் சர்க்காரால் உரம் வழங்கப்பட்டு வருகிறது. விவசாயிகளுக்கு உரம் ஒரு ஆண்டில் நான்கு மாதங்களில்தான். அதாவது ஆவணி, புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை மாதங்களில் தான் தேவைப்படுகிறது. ஆனால் உரமானது வருஷம் பூராவும் பர்மிட்டு முறையில் ஆங்காங்கு கொடுக்கப்படுகிறது. விவசாயி களுக்குத் தேவையுள்ள நான்கு மாதங்களில், தேவையில்லாத எட்டு மாதங்களில் வழங்கப்படுகின்ற உரத்தை சேர்த்துவைத்துப் பிரித்துக் கொடுத்தால் அவர்களுக்கு உதவியாக இருக்கும். தேவை யில்லாத எட்டு மாதங்களில் உரத்தை விநியோகிக்கும்போது, விவசாயிகளால் வாங்கமுடியாத நிலையில், பணம் உள்ளவர்கள் உரத்தை வாங்கிச் சேமித்து வைத்து, விவசாயிகளுக்குத் தேவை யான மாதங்களில் கள்ள மார்க்கெட்டில் விற்கிறார்கள். இதைத் தடுக்க கூட்டுறவு சொசைடிகள் மூலம் எட்டு மாத உரத்தைச் சேமித்து வைத்து விவசாயிகளுக்குத் தேவையான நான்கு மாதங் களில் வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கிராமங்களில் பம்புசெட் மோட்டார்களுக்கு 10-00 a.m.
ஷெட் கட்ட உடனடியாக சிமெண்ட் கிடைப்பதில்லை. அது பத்து மூட்டைகளுக்கு உள்ளாக இருந்தால் கிராம மணியக்காரர் அல்லது பஞ்சாயத்து போர்ட் தலைவர் கையெழுத்துப் போட்டால் உடனடி யாக கொடுப்பதாகயிருக்கிறது. ஆனால் அதற்கு மேல் கொஞ்சம் தேவைப்பட்டால்கூட அதற்கு ப்ளான் போட்டு எஸ்டிமேட் போட்டு அதிகாரிகளிடம் கையெழுத்து வாங்கி கொடுத்தால்தான் முடியும் என்ற நிலையிருக்கிறது. அதனால் இப்போது என்ன ஏற் படுகிறது என்றால் உடனடியாக தங்கள் வேலைகளைச் செய்ய முடி யாமல் ப்ளான் போடுகிறவர்களைத் தேடி அதற்காக அதிகப் பணம் செலவு செய்ய வேண்டியிருக்கிறது. ஏற்கனவே இருந்தது போல் பஞ்சாயத்து போர்ட் தலைவர் அல்லது மணியக்காரர் ஒரு சர்டிபிகேட் கொடுத்தால் கொடுப்பதற்கு வழிவகை செய்தால் நல்லது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

விவசாயிகளுக்கு புது நில வரி விதிப்பதாக இருக்கிறது. ஏற்கனவே விதிக்கப்பட்டுள்ள வரிகளினால் அவர்கள் தாங்க முடியாத நிலையில் இருக்கிறது. பஞ்சாயத்துக்கள் போட்ட வரிகளும் ஏற்கனவே போடப்பட்டுள்ள வரிகளும் இருக்கின்றன. மின்சாரக் கட்டணம்கூட சென்ற ஆண்டு 10 சதவிகிதம் அதிகப்படுத்தப்பட்டு அவ்வகையிலும் அவர்களுக்கு வரிப் பளு ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, மீண்டும் மீண்டும் விவசாயிகள் மீது இந்த பளுவைச் சுமத்தினால் அவர்கள் பாதிக்கப்படுவார்கள். இந்த நில வரியைக் கைவிட்டு விட்டு வேறு வழியில் செல்லுவதுதான் நல்லது என்று நான் இந்த சந்தர்ப்பத்தில் எடுத்துக் கூற விரும்புகிறேன்.

அடுத்து, பஞ்சாயத்து யூனியனில் உள்ள ஆசிரியர்கள் அடிக்கடி மாற்றப்படுகிற குறை இப்போது அதிகமாகிக் கொண்டிருக்கிறது. டி.ஈ.ஓ.-வின் அனுமதி பெற்று மாற்ற வேண்டுமென்ற நிலை இருக்கிறது. அதை இப்போது ஓரளவு ஒதுக்கி வைத்து விட்டு தங்கள் இஷ்டம்போல் காரியங்களை செய்து கொண்டிருக்கிறார்கள். இதனால் ஆசிரியர்கள் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே, முன்னர் இருந்தது மாதிரி டி.ஈ.ஓ. அனுமதி பெற்று மாற்ற வேண்டும் என்ற நிலை கண்டிப்பாக இருக்க வேண்டும்.

தங்கக் கட்டுப்பாட்டினால் என் பகுதியில் ஆயிரத்துக்கு மேற்பட்ட பொன், வெள்ளித் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் பட்டினி கிடக்கவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. இரண்டு மூன்று மாதங்களுக்கு முன்னால் தங்கத்தின் விலை திடீரென்று குறைந்த காரணத்தினால் அவர்கள் ஓரளவு பாதிக்கப்பட்டார்கள். இப்போது இந்தத் தங்கக்கட்டுப்பாட்டின் மூலம் அவர்கள் மேலும் பாதிக்கப்பட்டு பட்டினிகிடக்க வேண்டிய கொடுமையான நிலை இருப்பதால் கனம் அமைச்சர் அவர்கள் கவனிப்பதாகச் சொன்னதை உடனடியாக நிவாரணம் அளிக்கும் வகையில் எந்தெந்த வகையில் செய்ய முடியுமோ அப்படிச் செய்ய மாவட்ட கலெக்டர்களுக்கு உடனடியாக வேண்டிய தாக்கீது அனுப்பி அவர்களுக்கு வேண்டிய பரிகாரம் அளிக்கும்படிக்

10-01 a.m. கேட்டுக் கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

* திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார்: கனம் சபாநாயகர் அவர்களே, கவர்னர் அவர்கள் உரை மீது நான் சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். ஒரு நெருக்கடியான நேரத்தில் நாம் இருந்து கொண்டிருக்கிறோம். நீர்ப்பாசனம் சம்பந்தமாக மைனர் இர்ரிகேஷன் ஸ்கீமில் இன்று எட்டு கோடி ரூபாய் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதில் பாதித் தொகை செலவு செய்யப்பட்டதாகத் தெரிகிறது. மேற்கொண்டு சென்டரிலில் இருந்து அதிக அலாட்மென்ட் கொடுப்பதாகத் தெரிய வருவதால் அதற்காக ஒரு 'List of works' தயார் செய்து தொகை வாங்கவேண்டும். அதன் மூலம் நமக்கு அதிக நன்மை ஏற்படும். ஜமீன் பிரதேசங்களில் இப்போது மராமத்து செய்யப்பட்டிருக்





கிறது. ஆனால் பழைய இடங்களை அப்படியே புதுப்பித்திருக்கிறார்கள் அல்லது அபிவிருத்தி செய்திருக்கிறார்கள். ரீமாடலிங் ஸ்கிம்தான் தேவை. பழைய மடைகளை re-condition செய்ய வேண்டும். குளங்கள் மட்டும் மராமத்து செய்திருக்கிறார்கள். சில இடங்களை அளவிற்குமேல் அதாவது பாசனத்திற்கு அதிகமான மடைகளை ஜமீன்தார்கள் கட்டி வருகின்றார்கள். அவைகளை அப்படியே வைத்து begin செய்யப்பட்டு இருக்கிறது. மடை பெரியதாகயிருக்கும். எதிர்பார்க்கும் நிலையை விட அதிகமாக தண்ணீர் போய்க்கொண்டிருக்கும். ரீமாட்லிங் ஸ்கீம் மூலம் மைனர் இர்ரிகேஷன் ஸ்கீமை அபிவிருத்தி செய்தால் தண்ணீர் வசதியைப் பெருக்க முடியும். இப்போது குடி மராமத்தை பஞ்சாயத்துக்களிடமும், பஞ்சாயத்து யூனியன்களிடமும் கொடுப்பதாக அறிக்கையிலிருந்து தெரியவருகிறது. 24-வது பாராவில் "With this object in view, a special drive is now being made to see that the kudimaramath works, which have hitherto been under the control of the Revenue Department, are entrusted directly to Panchayats and Panchayat Unions for maintenance and proper upkeep." என்றிருக்கிறது. தமிழ் உரையில் "இனி பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன்களின் நேரடிப் பொறுப்பில் விட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது" என்றிருக்கிறது. ஆங்கிலத்தில் "are entrusted directly to Panchayat and Panchayat Unions" என்றிருக்கிறது. தமிழில், நடைமுறையில் உள்ளதை பயன்படுத்தியதாகத் தெரிகிறது. தமிழில் சொல்லியிருப்பதுதான் நடைமுறையில் இருக்கிறது. இன்று பஞ்சாயத்து அல்லது பஞ்சாயத்து யூனியனிடத்தில் குடிமராமத்து கொடுக்கப்படவில்லை. இனிமேல்தான் கொடுக்கப் போகிறார்கள்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: பஞ்சாயத்துக்களிடம் கொடுப்பது முன்னமேயே ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. தஞ்சாவூரில் அது அமுலில் கூட இருக்கிறது. ஆங்கிலத்தையே அசலாக எடுத்துக் கொள்ளலாம் இதைப் பொறுத்தமட்டில்.

திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார்: கொடுக்க வேண்டியது என்பது வரவேற்கத்தக்கது. அதனால் பல நன்மைகள் எதிர்பார்க்கலாம். அதோடு பஞ்சாயத்தினிடம் இர்ரிகேஷன் கண்ட்ரோலையும் கொடுப்பது நல்லது. வில்லேஜ் ஆபீசர்களிடம் அந்தக் கண்ட்ரோல் இருக்கிறது. அதில் சில தவறுகள் ஏற்பட வழியிருக்கிறது. Chain of Irrigation Tank. பொறுப்பை ஒரு ஹெட்மேனிடம் ஒப்படைக்கும்போது டெயில் எண்ட் பாசனம் அடுத்த கிராமத்தில் உள்ளதாக இருக்கும். ஆதலால் ஒரு அதிகாரியிடம் கொடுக்கும்போது தவறுகள் ஏற்படுகின்றன. ஆகவே இர்ரிகேஷன் ஸிஸ்டம் கண்ட்ரோலை பஞ்சாயத்து யூனியனிடம் கொடுத்து விட்டால் நல்ல அபிவிருத்தி ஏற்படும்.

அடுத்தபடியாக, புறம்போக்கு இடங்கள் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. அதில் ஏதாவது அபிவிருத்தி செய்ய வேண்டுமென்றால் ரெவின்யூ டிபார்ட்மெண்டிடம் கேட்டு செய்ய வேண்டியிருக்கிறது. அதில் சில சிக்கல்கள் இருக்கின்றன. புறம்போக்கு

[திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார்] [30th January 1963

நிலங்களில் உணவுப் பொருளையும் உற்பத்தி செய்ய வழி செய்ய வேண்டும். இப்போதுள்ள சட்டப்படி மரங்கள்தான் வளர்க்கலாம், விறகு வகைக்கு மரங்களும் வளர்க்கலாம் என்றிருக்கிறது. அத்துடன் உணவுப் பொருள் உற்பத்தி செய்வதற்கு வழி செய்வதற்கு சட்டத்தில் இடம் இருக்க வேண்டும். அதை ரூல்ஸில் செய்தால் போதும்.

பின்னர் ரோடு டெவலப்மெண்ட் அவசியம். ரோடு டெவலப்மெண்ட் போர்ட் என்று ஸ்டேட் லெவலில் இருப்பது போல் டிஸ்ட்ரிக்ட் லெவலிலும் தேவை. எந்த ரோடில் பஸ் ரூட் விடலாம், எந்தெந்த ரோடை அபிவிருத்தி செய்ய வேண்டும் என்பதை எல்லாம் கவனித்துச் செய்ய ஸ்டேட் லெவலில் இருப்பதைப் போல் டிஸ்ட்ரிக்ட் லெவலிலும் ஒரு போர்ட் அல்லது கமிட்டி இருந்தால் நல்ல வேலைகள் செய்ய முடியும். ஆகவே சட்டப்படி டிஸ்ட்ரிக்ட் லெவலில் ஒரு ரோடு டெவலப்மெண்ட் போர்ட் போட வழி செய்ய வேண்டும்.

பின்னர் நஞ்சை தீர்வை சம்பந்தப்பட்ட உயர்வை வரவேற்கிறேன். சிலர் அது அவசியமில்லை, அதனால் பாதகம் ஏற்படும் என்று சொல்கிறார்கள். பல ஆண்டுகளாக குறைந்த தீர்வை தான் செலுத்திக் கொண்டு வருகிறார்கள். ரீ-செட்டில்மெண்டுக்குப் பிறகு 30 ஆண்டுகள் ஆகின்றன. இதற்கிடையில் தீர்வை உயரவேயில்லை. உற்பத்திச் செலவு அதிகமாகியிருக்கிறது என்று ஒப்புக்கொள்கிறேன். முதல் தரத்திற்கு 60 சதவிகிதம் உயர்வு என்று நினைக்கிறேன். செகண்ட் க்ளாஸ் ஸோர்சுக்கு 40 சதவிகிதம் உயர்வு வரவேற்கத்தக்கது. அதைக் கொடுக்க வேண்டியதுதான். நஞ்சை வைத்திருப்பவர்கள் அதனால் பாதிக்கப்படுவதில்லை.

நகைத் தொழிலாளிகள் சம்பந்தமாகப் பலர் பேசினார்கள். நகை வியாபாரிகள் பற்றி கவலையில்லை. வேலை செய்பவர்கள்தான் இப்போது பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். கிட்டத்தட்ட 5 லட்சம் தொழிலாளிகள் இதனால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு 100 ரூபாய் கொடுத்தால்தான் லைசென்ஸ் கொடுக்கப்படும், என்று சட்டத்தில் இருந்து கொண்டிருக்கிறது. நகை வியாபாரிகளுக்கு இதனால் பாதகமும் இல்லை. அவர்களுக்கு இந்தச் சட்டத்தால் ஒருவித கஷ்டமும் இல்லை. தொழில் செய்பவர்கள் தான் கஷ்டப்படுகிறார்கள். மதுவிலக்கு வந்தபோது ஃப்ரீ லைசென்ஸ் கொடுத்தது போல் இத்தொழிலாளர்களுக்கும் ஃப்ரீ லைசென்ஸ் கொடுத்து, தமிழ் நாடு சம்பந்தப்பட்ட நம் கஷ்டத்தை மத்திய சர்க்காருக்குத் தெரிவிக்க வேண்டியது நம் கடமை. இங்கு 14 காரட்டில் வேலை செய்யத் தெரியாமல் இருக்கிறார்கள். தமிழ் நாட்டுக்குத் தனியாக இந்தச் சட்டத்தைத் திருத்தி நம் தொழிலாளர்களுக்கு ஃப்ரீ லைசென்ஸ் கொடுத்து கண்காணிப்பு மூலம் அவர்கள் வேலைக்கு இடைஞ்சல் இல்லாமல் இருக்க வழி செய்ய வேண்டும்.

ஸ்லம் கிளியரன்ஸ் பற்றி விரிவான சட்டம் வருவதாக தெரிகிறது. அதை சிறிது யோசித்துச் செய்ய வேண்டிய கட்டத்தில் இருக்கிறோம். நம்மால் குடியிருப்புக்கு வழி செய்ய முடியாமல்



30th January 1963] [திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார்]

பல பேர்கள் பலவிடங்களில் குடியிருக்கிறார்கள். அவர்களை உடனடியாக அப்புறப்படுத்துவதற்குரிய சட்டம் வந்து விட்டால், முக்கியமாக அரிஜனங்கள் மிகவும் பாதிக்கப்படுவார்கள். நாம் எவ்வளவு தான் சட்டத்தைப் போட்டாலும் அதை அமல் நடத்துவதற்கு ரெவின்யூ டிபார்ட்மெண்டிலுள்ள ரெவின்யூ இன்ஸ்பெக்டரிடம் தான் ஒப்படைக்கவேண்டியிருக்கிறது. ஆகவே ஸ்லம் கிளியரன்ஸ் ஆக்ட் கொண்டு வரும்போது இதைப்பற்றி நன்றாக ஆலோசித்துக் கொண்டு வந்தால் நலமாக இருக்கும். இல்லை என்றால் ஏழை மக்கள் மிகவும் பாதிக்கப்படுவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்ததாக, அமோனியம் சல்பேட் உரம் வழங்குவதில் சில கஷ்டங்கள் இருக்கின்றன. கூட்டுறவு சங்கங்களின் மூலமாகக் கொடுக்கப்பட்ட போதிலும் சில இடங்களில் 101 கிலோகிராம் இருக்கவேண்டிய மூட்டைகள் 80 அல்லது 81 கிலோகிராம் தான் நிறை இருக்கிறது. இதனால் பலவிதமான கஷ்டங்கள் இருக்கின்றன. இதை உடனடியாகக் கண்டுபிடித்து நடவடிக்கையும் எடுக்கமுடியவில்லை. அதோடு மிக்ஸர் உரத்தைப் பொறுத்த அளவில் அடல்ட்ரேஷனைக் கண்டுபிடிக்கவேண்டுமென்றால் சென்னை, அல்லது கிண்டிக்கு அனுப்பித்தான் கண்டுபிடிக்க வேண்டியிருக்கிறது. அப்படியில்லாமல் அந்தந்த இடத்திலேயே (ஸ்பாட்டிலேயே) இந்த அடல்ட்ரேஷனைக் கண்டுபிடிக்க ஏதாவது நடவடிக்கை எடுத்தால் இதை வாங்கி உபயோகிப்பவர்களுக்கு மிகவும் நன்மையாக இருக்கும்.

அடுத்தபடியாக, என் தொகுதியைப் பொறுத்தவரையில் பல நீர்ப்பாசனத் திட்டங்கள் இருந்து கொண்டிருக்கின்றன. சில இடங்களில் அனேகமாக எந்தவிதமான வேலைகளும் நடைபெறவில்லை. ஆனால், துருவிப்பார்க்கும்போது பல நீர்ப்பாசன திட்டங்களுக்கு வழியிருக்கின்றன. ஆனால் இதில் மனம் வருந்தப்பட வேண்டியிருப்பது என்னவென்றால், இர்ரிகேஷன் டிபார்ட்மெண்டும், ரெவின்யூ டிபார்ட்மெண்டும் இணைந்து வேலை செய்யாமல் இருப்பது தான். இர்ரிகேஷன் டிபார்ட்மெண்ட் ஒரு திட்டம் வேண்டும் என்று சொல்லி ரெவின்யூ டிபார்ட்மெண்டக்குப் போகும்போது அவர்கள் அதில் வருவாய் ஏதாவும் இல்லை என்று சொல்லித் திட்டத்தை விட்டுவிடுகிறார்கள். இவ்விதம் சொல்லுவதின் காரணமாக திட்டம் தடைபட்டுப் போய்விடுகிறது. ஒன்று இர்ரிகேஷன் டிபார்ட்மெண்ட் பொறுப்பில் விட வேண்டும், அல்லது ரெவின்யூ டிபார்ட்மெண்ட் பொறுப்பில் விட வேண்டும். இப்போது இரண்டு பேரும் சேர்ந்து இருந்து முடிவு எடுக்கவேண்டியிருப்பதின் காரணமாக ஏழெட்டு திட்டங்கள் நடைபெறாத நிலைமையில் இருந்து கொண்டிருக்கின்றன. ஆகவே அரசாங்கம் இதைப்பற்றி நன்றாக ஆலோசித்துப் பார்த்து ஏதாவது ஒரு டிபார்ட்மெண்டின் கீழ் மட்டும் இந்தப் பொறுப்பை விட்டுத் திட்டங்களைச் சீக்கிரமாக நிறைவேற்றுவதற்கு வழிவகை செய்யவேண்டும் என்று கேட்டுக் கொண்டு இதில் பேச சந்தர்ப்பம் தந்தமைக்கு தங்களுக்கு நன்றி தெரிவித்து என் வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்

[30th January 1963

* திரு. ஆ. கு. சுப்பையா: கனம் சபாநாயகர் அவர்களே, மதிப்பிற்குரிய கவர்னர் அவர்கள் செய்த பிரசங்கத்தை இன்றைய தினம் மொத்தமாக நாம் பாராட்டாமல் இருக்க முடியாது. நமது தேசத்தில் சமீப காலத்தில் ஏற்பட்டு இருக்கக்கூடிய நெருக்கடியான கால கட்டத்தில் நமது தமிழகம் மாத்திரமல்ல, இந்தியா முழுவதிலும், பல கட்சிகள் இருந்தாலும், பல கருத்து வேறுபாடுகள் இருந்தாலும், நமது பாரதத்தைப் பாதுகாத்தாக வேண்டும் என்கின்ற நிலையில் ஒன்றுபட்டு நம்முடைய எதிர்ப்பைக் காட்டியிருக்கிறோம். இதைப் பார்த்து உலகமே இன்று வியந்திருக்கிறது. அந்த அளவுக்கு கடந்த காலத்தில் நிலைமை மாறியிருக்கிறது. தமிழகத்தில் உள்ள சகல மக்களும்—தொழிலாளர்கள், விவசாயிகள், இதர துறையிலுள்ள கலைஞர்கள் அத்தனைபேரும்—தங்களால் இயன்ற எந்த அளவுக்கு உதவி செய்யமுடியுமோ அந்த அளவுக்கு பொருளுதவி கொடுத்தும், ஆபரணங்களைக் கொடுத்தும் உதவியிருக்கிறார்கள். இதையெல்லாம் பார்க்கும்போது இந்தியாவைப் பாதுகாப்பதற்குப் பெரியதொரு ஒற்றுமையை நாம் வளர்த்திருக்கிறோம் என்பதை நாம் சொல்லாமல் இருக்க முடியாது.

அடுத்தபடியாக, இன்றையதினம் கவர்னர் அவர்களுடைய உரையில் பார்க்கின்ற போது, சில முக்கியமான விஷயங்களை குறிப்பிட்டிருக்கிறார்கள். விலைவாசியை கட்டுப்படுத்துகின்ற முறைகளைச் சீக்கிரமாகச் செய்து கொடுக்கவேண்டும் என்கின்ற முறையில், விறகுக் கடைகளை திறக்கவேண்டும் என்று பல ஏற்பாடுகளை அரசாங்கம் செய்து கொண்டிருக்கிறது. அம்மாதிரியான ஏற்பாடுகளில் ஜன நெருக்கம் அதிகமாக இருக்கக்கூடிய இடங்களில் இவ்வாறு விறகுக்கடைகள் திறப்பது என்று அரசாங்கம் யோசித்துக்கொண்டிருப்பதாகத் தெரிகிறது. இதில் ஜன நெருக்கம் அதிகமாக இருக்கும் வட சென்னையில் இவ்வாறு விறகுக் கடைகள் திறப்பதற்கு எந்தவிதமான அறிகுறிகளும் இல்லை என்று சொல்வதை நான் கேள்விப்படுகிறேன். அது உண்மையாக இருக்குமானால் அது சரியல்ல; அந்தப்பிரதேசத்தில் நிச்சயமாகத் திறப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன்கள் ஆற்றியிருக்கக்கூடிய சேவையைக் குறைத்து மதிப்பிடுவதற்கில்லை. நம் ராஜ்யத்தில் பஞ்சாயத்துக்கள் முன்னேற்றத்தில் தீவிரமாக முனைந்திருக்கின்றன. மிகப்பெரிய பணிகளை எல்லாம் ஆற்றி வருகிறார்கள். இதர வேலைகளை நிறைவேற்றுவதிலும் முன்னணியில் இருந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே மேலும் பஞ்சாயத்துக்களுக்கு உதவி செய்யக்கூடிய முறையில், சில உதவிகளை அரசாங்கம் செய்து கொடுக்கவேண்டும். அப்படிச் செய்கின்றபோது, கால்நடை நிலையங்களைப் போதுமான அளவுக்கு ஏற்படுத்தவேண்டும். ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கும் மூன்று கால்நடை முதல் உதவி நிலையமும், கால்நடை நிலையமும் இருந்தாகவேண்டும். அதற்குத் தகுந்தபடி நிலையங்களை ஏற்படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தஞ்சை மாவட்டத்தைப்



30th January 1963] [திரு. ஆ. கு. சுப்பையா]

பொறுத்தவரையில் பஞ்சாயத்து யூனியன்கள் எல்லாம் போட்டி போட்டுக்கொண்டு புறம்போக்கு நிலங்களை எல்லாம் எடுத்து அதில் தென்னங்கன்றுகளை வைத்துவிடுகிறார்கள். இவ்விதம் தரிசு நிலங்களில் எல்லாம் தென்னங்கன்றுகளை வைத்துவிடும் போது, ஏற்கனவே அதில் ஆக்கிரமித்துக்கொண்டிருக்கும் தனிநபர்கள் இடத்தை கொடுக்க மறுத்துவிடுகிறார்கள். ஆகவே, இதில் பஞ்சாயத்து யூனியன்களுக்கு வேண்டிய உதவிகளை அரசாங்கம் செய்து கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் உணவு வேளாண்மையை பொறுத்தவரை நாம் 17 லட்சம் டன் உணவு உற்பத்தி செய்தாக வேண்டும். படிப்படியாக, நாம் உற்பத்தியைப் பெருக்கிக்கொண்டிருக்கிறோம். இதற்கு, மேலும் உற்பத்தி செய்யக் கூடிய அளவில், சிறு பாசனத் திட்டங்களை எல்லாம் நிறைவேற்றியாக வேண்டும். எங்கள் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் தண்ணீர் வடிகால்களை அதிகமாக ஏற்படுத்திக்கொடுக்கவேண்டியது அவசியமாகும். திருத்துறைபூண்டி தாலூகாவைப் பொறுத்தவரையில் அமைச்சர் அவர்கள் ஒரு கேள்விக்கு பதில் சொல்லும்போது 12 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் வெள்ளத்தால் மூழ்கி பல ஆயிரக்கணக்கான ரூபாய்க்கு சேதமும் ஏற்பட்டிருப்பதாகத் தெரிவித்தார்கள். அந்தத் தாலூகாவில் இருக்கக்கூடிய விவசாயிகள் வடிகால் வசதியில்லாமல் பல இன்னல்களுக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களை அந்தத் துன்பத்திலிருந்து மீட்டாக வேண்டும். அவர்களுக்கு மீண்டும் உற்சாகத்தையும் ஊக்கத்தையும் கொடுத்தாக வேண்டும். அந்த முறையில் நீர்ப்பாசன வசதிகள் செய்து கொடுக்கவேண்டியது ஒருபுறமிருக்க வடிகால் வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டியதும், இருக்கின்ற வாய்க்கால்களை எல்லாம் தூர் எடுத்துக்கொடுக்கவேண்டியதும் உடனடி தேவையாக இருக்கிறது. ஆகவே, அதற்கு அரசாங்கம் வேண்டிய நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இன்றையதினம் அரிசிக் கொள்முதல் செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருப்பதாகத் தெரிகிறது. அரிசி மில்காரர்களிடமிருந்து 10 சதவிகிதம் வாங்கிக்கொண்டு மீதம் 90 சதவிகிதத்தை மில் முதலாளிகள் தங்களுடைய பிரியத்திற்கு ஆதாயத்திற்கு விற்கலாம் என்ற முறையில் அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருப்பதாகத் தெரிகிறது. அது மாத்திரமல்ல. அவர்களுக்கு போனஸ் வேறு கொடுக்கப் போவதாகக் குறிப்பிடுகிறார்கள். மில் முதலாளிகளுக்கு போனஸ் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை. விவசாயிகளுக்கு—உணவுப் பொருள்களை நேரடியாக உற்பத்தி செய்துகொண்டிருக்கக் கூடிய விவசாயிகளுக்கு—அந்த போனஸைக் கொடுக்க அரசாங்கம் முன் வந்தால் விவசாயிகள் தீவிரமாக உற்பத்தியில் ஈடுபடுவார்கள்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** விவசாயிகளின் சார்பாக கனம் அங்கத்தினர் அவர்கள் பேசுகிறார்கள். போனஸையும் சேர்த்து எந்த விலைக்கு மில்லர்களிடமிருந்து வாங்குகிறோமோ அந்த விலைக்கு விவசாயிகள் கொடுக்கத் தயாராக இருக்கிறார்கள் என்று அவர்கள் கூறுவார்கள் என்றால், விவசாயிகள் அதை ஒப்புக்கொள்வார்கள் என்றால் அதை ஏற்றுக்கொள்ளலாம்—விவசாயிகளிடம் ப்ரொக்யூர் செய்யலாம். விவசாயிகளிடம் நேரடியாகப் ப்ரொக்யூர் செய்வதால் அவர்களுக்கு தொல்லை ஏற்படும் என்று, வியாபாரிகள் தங்களுக்கு வரக் கூடிய லாபத்தில் கொஞ்சம் குறைத்துக் கொடுக்கச் செய்யவேண்டும், வியாபாரிகள் காணிக்கையாகக் கொடுக்கவேண்டும் என்பதுதான் இந்தத் திட்டம்.

**திரு. ஆ. கு. சுப்பையா:** விவசாயிகளுக்குப் போதுமான உதவிகளைச் செய்து, அவர்கள் உற்பத்தி செய்யக் கூடிய உணவுப் பண்டங்களால் ஆதாயம் கிடைக்கக் கூடிய அளவில் இருந்தால் எந்த விதமான தகராறும் இல்லாமல் சர்க்காருக்குக் கொடுக்கத் தயாராக இருப்பார்கள். ஆகவேதான், விவசாயிகளுக்கு உற்சாகம் ஊட்டக் கூடிய முறையில் போனஸ் கொடுக்க மற்றும் இதர வசதிகள் செய்து கொடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நில வரி சம்பந்தமாகச் சில விஷயங்களைச் சொல்ல வேண்டியிருக்கிறது. சென்ற பட்ஜெட் கூட்டத்திலேயும் கூட சபையில் இருக்கும் அங்கத்தினர்கள் இந்த வரியைப் பற்றி யோசிக்கவேண்டும் என்ற கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். நானும் வரியே கூடாது என்று சொல்லவில்லை. வரி விதிப்பது அவசியம் தான். அதன் மூலம் தான் இப்போது ஏற்பட்டுள்ளது போன்ற நெருக்கடி நிலைமைகளைச் சரிக்கட்ட முடியும். யார் யாருக்குத் தாங்குவதற்குச் சக்தியிருக்கிறதோ அவர்களிடமிருந்து வரிபோட்டு வசூலிக்க துரித நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். விவசாயிகள் சம்பந்தப்பட்டவரையில் சிறு அளவு நிலம் வைத்திருக்கக்கூடியவர்களுக்கு விதிவிலக்கு அளிக்க அரசாங்கம் ஆலோசிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். விதி விலக்கு அளிப்பார்கள் என்றும் நான் நம்புகிறேன். அந்த முறையில் இந்த வரி விஷயத்தை இன்றைய தினம் அரசாங்கம் ஆலோசிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நமது ஐந்தாண்டுத் திட்டங்களை விட்டுவிட வேண்டுமென்று பெரிய அளவுக்குப் பிரசாரங்கள் ஒரு பக்கம் அரசாங்கத்திற்கு எதிராக நடந்துகொண்டிருக்கின்றன. அது மட்டுமல்லாமல் நமது மதிப்புக்குரிய நேருஜி அவர்கள் தலைமைக்கே ஆபத்து வரும் அளவுக்கு ஒரு பக்கத்தில் பேசப்பட்டு வருகிறது. இதற்கெல்லாம் ஒரு சிறிதும் செவி சாய்க்காமல், இன்றைய தினம் தேசத்தில் ஏற்பட்டிருக்கக்கூடிய நெருக்கடி நிலைமையில் ஒரு சிறிதும் மாறாமல் உறுதியாக ஐந்தாண்டுத் திட்டங்களை நிறைவேற்றவேண்டுமென்று சர்க்கார் தீவிரமாக முனைந்துகொண்டிருக்



கிறார்கள். சோவியத் யூனியனுடைய உதவியோடு ஆரம்பிக்கப்பட்டிருக்கக்கூடிய நெய்வேலித் திட்டம் முதல் யூனிட் முடிந்து இரண்டாவது வேலை துவங்கிக்கொண்டிருக்கிறது என்ற சந்தோஷகரமான செய்தியைக் கேள்விப்படுகிறோம்.

அடுத்தபடியாக தமிழ் நாட்டிலே பெரிய அணு மின் நிலையம் ஒன்றைக் கல்பாக்கத்தில் ஆரம்பிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்று கேள்விப்படுகிறபோது மற்ற ராஜ்யங்களைவிட இன்றைய தினம் தமிழ் நாட்டிலே தொழில் வளர்ச்சி துரிதமாக முன்னேறிக்கொண்டிருக்கிறது என்று இந்த சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இந்த நிலைமையை எல்லாம் கணக்கில் எடுத்துக்கொண்டு பார்த்து நேருஜியின் நடுநிலைமைக் கொள்கையை வலுவாக ஆதரிப்பதோடுகூட, போட்டிருக்கக்கூடிய ஐந்தாண்டுத் திட்டங்களை நல்ல முறையில் நிறைவேற்ற சகல அங்கத்தினர்களும் முன்வர வேண்டும், நமது நாட்டில் இருக்கக்கூடிய மக்களும் ஒன்றாக உதவ வேண்டும் என்று சொல்லிக்கொண்டு எனது வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**திருமதி ராஜாத்தி குஞ்சிதபாதம்:** தலைவர் அவர்களே, கவர்னர் பெருமான் அவர்களுடைய உரையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். இந்த ஆண்டு கவர்னர் பெருமான் அவர்களுடைய உரை மற்ற ஆண்டுகளில் நிகழ்த்தியதைவிட மிக முக்கியத்துவம் வாய்ந்தது என்று யாரும் குறிப்பிடாமலேயே விளங்கக்கூடிய முறையில் நாம் இருக்கிறோம். முந்தைய ஆண்டுகளில் எதையெதை எதிர்பார்க்கவில்லையோ, எதையெதை சிந்தனையில் கூட சிந்திக்கவில்லையோ அல்லது எதெல்லாம் நடக்கும் என்று எதிர்பார்த்தோமோ, எதிர்பார்த்தது நடக்கவில்லை, அதோடு நடக்காது என்று எண்ணிய அத்தனையும் இந்த ஆண்டு நடப்பதைப் பார்க்கிறோம். ஆகவே கவர்னர் உரை பெருமை மிக்கது, இந்த ஆண்டு சிறப்புற்று விளங்குகிறது என்று குறிப்பிட விரும்புகிறேன். ஜனநாயக முறையில் செல்லுகிற அரசாங்கம் கடமைக்குப் பாடுபடுகிறது. மக்களுக்காகவே பாடுபடுகிற அரசாங்கம், திட்டங்களைக் கடமையுணர்ச்சியுடன் நிறைவேற்றுகிறோம் என்று சொல்லுகிற முறையில் நல்ல பாதையில் சென்றுகொண்டிருக்கிறோம், நெருக்கடியான நிலைமை வந்தபோதும் அந்தப் பாதையிலேயே சென்று கொண்டிருக்கிறோம் என்று சொல்லும்போது இந்த ஆண்டு கவர்னர் உரை சிறப்புற விளங்குகிறது என்பதற்காக இந்த அரசாங்கத்திற்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம்.

வடக்கு எல்லையில் நம்மை வந்து தாக்கிவிட்டார்கள் பக்கத்து நாட்டு சீனத்தார். நம்முடன் நட்புக் கொண்டிருந்த, பற்றுக் கொண்டிருந்த, அவர்கள் படையெடுத்து விட்டார்கள். இருந்தாலும் அதைக் கண்டு நாம் அஞ்சி விடவில்லை, பயந்து உட்கார்ந்து விடவில்லை. அதைச் சமாளிக்கும் நிலைமையில் மக்களும் அரசாங்கத்திற்கு ஆதரவு கொடுத்தார்கள். எதிர்த்து

[திருமதி ராஜாத்தி குஞ்சிதபாதம்] [30th January 1963

நிற்கும் நிலைமைக்கு வந்து மேலும் முன்னேறிச் செல்லும் அளவுக்கு மக்கள் ஆதரவு கொடுத்து விட்டார்கள். "வட எல்லை தானே! நமக்கு இல்லை" என்று சொல்லாமல் "தான் ஆட விட்டாலும், தன் சதை ஆடும்" என்ற முறையில், "யாரோ?" "யாருக்கோ?" என்று இல்லாமல் நல்ல முறையில் நிலைமை உருவாகியிருப்பதை இன்று பார்க்கிறோம். "இந்திய உப-கண்டம்" என்று சொல்லி வந்த நிலை போக "இந்த நாடு" என்று பேசக் கூடிய வாய்ப்பு வரும்போது கவர்னர் உரை சிறப்புப் பெற்றது என்று நான் சொல்லுவதில் தவறில்லை என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். இன்றைய தினம் பாதுகாப்புக் குழுவையும் நல்ல முறையில் அமைத்திருக்கிறார்கள். அண்மையில் அமைச்சர்கள் மாவட்டங்களுக்குச் சென்ற போது அள்ளி அள்ளிக் கொடுத்தோம். இரண்டு கோடி வரையில் கொடுத்திருக்கிறோம். இன்றும் கொடுக்கத் தயாராக இருக்கிறோம். தங்கக் கட்டுப்பாடு வந்துவிட்டது. அதனால் தயங்கி விடுகிறோம் என்று இல்லாமல் கட்டுப்பாடு வருவதற்கு முன்னாலே 22 காரட், 24 காரட் இருக்கக்கூடிய நகைகளை எல்லாம்---ஏன்? பெண்கள் தாலியைக் கூட கொடுக்கக்கூடிய அளவுக்கு நாட்டில் கடமையுணர்ச்சி இருக்கிறது. நாட்டிலே பிரிவினை சக்திகள் ஏற்பட்டு, ஒற்றுமையை ஏற்படுத்த அரசாங்கம் ஒரு கமிட்டி அமைத்து அதன் மூலமாக நடவடிக்கைகளைக் கைக் கொண்டிருக்கும்போது, இந்தச் சீன படையெடுப்பு "ப்ளெஸ்ஸிங் இன் டிஸ்கய்ஸ்" என்றுகூடச் சொல்லத் தக்க அளவில், ஒருமைப் பாடுக் கமிட்டிக்குக்கூட வேலை இல்லாமல் ஒரேயடியாக ஆதரவு ஏற்பட்டு, ஒற்றுமை ஏற்பட்டு, எந்த விதத்திலும் அன்னியரை, ஆக்கிரமிப்பாளர்களை முறியடிக்கும் முறையில் மக்கள் எழுச்சி ஏற்பட்டிருக்கிறது. இந்த சமயத்தில் ஒன்று ஞாபகம் வருகிறது. "பூனை இருக்கிற இடத்தில் தான் எலி பேரன் பேத்திகளை எடுக்கும்" என்று சொல்லுவார்கள். நம் நாட்டின் மீது சீனாக்காரன் படையெடுத்திருக்கக்கூடிய நேரத்தில் மக்களிடம் அடக்க முடியாத ஆர்வம், பாலர்கள் முதல் பழுத்தவர்கள் வரையில், ஐந்து வயதுப் பிள்ளைகூட பத்திரிகையைப் பார்த்து விட்டு "டவாங் எங்கு இருக்கிறது?", "வலாங் எங்கு இருக்கிறது?" என்று சொல்லக்கூடிய முறையில் இந்த நாட்டு முன்னேற்றத்தில், இந்த நாட்டின் பாதுகாப்பில் மன ஒற்றுமை ஏற்பட்டிருக்கிறது. இன்னும் வளர்ந்தும் வருகிறது. இன்றைய தினம் கவர்னர் உரையில் இதற்குரிய பாகத்தைக் கொடுத்து இருப்பது வரவேற்கத் தக்கது, கடமை உணர்ச்சி ஏற்பட்டிருப்பதை அழகாகக் கூறியிருக்கிறார்.

கவர்னர் உரையிலே வரி விதிப்பைப் பற்றிச் சொல்லும்போது நமக்குக் கசக்கிறது. நல்ல திட்டங்கள் என்றால், "காய்கறி உற்பத்திக்காக 13 லட்சம் ரூபாய் ஒதுக்கி இருக்கிறோம், அதற்காக மூன்று ஆண்டுத் திட்டம் வகுத்திருக்கிறோம், முதல் ஆண்டே 20,000 ராத்தல் அதிகமாக உற்பத்தி ஆகவேண்டும்" என்று சொல்லும்போது இனிக்கிறது. அதே நேரத்தில் விவசாயிகளுக்கு வரி என்றவுடன் கசக்கிறது. விவசாயிகளுக்காக கோடி கோடியாகச்

10-30 a.m.



30th January 1963] [திருமதி ராஜாத்தி குஞ்சிதபாதம்]

செலவு செய்து திட்டங்களை நிறைவேற்றியிருக்கிறோம். பரம்பிக் குளத்தில் கூட முதலமைச்சர் சென்ற போது "7,000 ஏக்கர் நிலத்தைப் பாசனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறோம்" என்று சொல்லும்போது இனிக்கிறது. எதிர் கட்சியில் இருக்கிறவர்கள் குறிப்பிட்டார்கள். எதுவும் எதிர்பாராது நடக்கிறது. எதிர்க் கட்சியில் ரூபாய்க்கு மூன்று படி அரிசி போடவேண்டும் என்று சொன்னவர்கள், ஆளும் தரப்பிலிருந்து ரூபாய்க்கு மூன்று படி அரிசி எப்படி போட முடியும், அப்படி ஆகிவிட்டால் ஏழை விவசாயியின் நிலை என்ன ஆகும் என்று சொன்னபோது எள்ளி நகையாடிப் பேசியது போக, மாமியார் உடைத்தால் மண் குடம், மருமகள் உடைத்தால் பொன் குடம் என்று சொல்லக்கூடிய முறையில் அந்த நிலைக்கு வந்து விட்டார்கள். நேற்றுகூட எதிர் தரப்பிலே உள்ள அங்கத்தினர் அவர்கள் 'மாமியார், மாமியார்' என்று பல தடவை சொல்லி கிண்டல் செய்ததைப் பார்த்தோம். மாமியார் இன்று நல்ல மருமகளாக ஆகிவிட்டார்கள் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். எதிர்தரப்பில் இருக்கின்றவர்கள் போனவருஷம் இதே சபையில் அரிசி விலை ஏறிவிட்டது என்று சொல்லிக்கொண்டிருந்தார்கள். ஆனால் இன்று விவசாயிகளுடைய நிலைமை முறிந்து விடுமோ, அரிசி விலை குறைந்து போய் விட்டதே, யாரும் கேட்பார் இல்லையா, மூட்டை ஒன்றுக்கு 23, 24 ரூபாய்க்கு மேல் அரிசி விலை போகக்கூடாத நிலைக்கு ஆளும் தரப்பினர் செய்து விட்டார்களே என்று அவர்களே சொல்லக்கூடிய நிலைமை இருக்கிறது. மாமியார் நல்ல மருமகளாக ஆகிவிட்டோம் என்று இந்த சமயத்தில் கூறாமல் இருக்க முடியாது. 10-30 a.m.

தங்கக் கட்டுப்பாடு பற்றிச் சொல்லாவிட்டாலும் கூட ......

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி:** மருமகள் வேண்டுமானால் மாமியாராக ஆகிவிடலாம். மாமியார் மருமகளாக ஆகிவிடமுடியாது. (சிரிப்பு).

**திருமதி ராஜாத்தி குஞ்சிதபாதம்:** இன்றைக்கு மருமகளாக இருப்பவர்கள் நாளைக்கு மாமியாராக ஆகவேண்டும் என்று கனம் அங்கத்தினர் அவர்கள் கூறுகிறார்கள். என்ன சாபக்கேடோ தெரியவில்லை, மாமியார், மாமியார் என்று சொல்லி பெண்களையே தாக்குகிறார்களே தவிர, மாமனார் உயர்ந்தவர் என்று கொண்டிருக்கிறார்கள், அவரைப்பற்றிப் பேசுவதாகத் தெரியவில்லை. (சிரிப்பு). ஆளும் கட்சியிலிருப்பவர்களைப் பற்றி பெருமைப்படுத்தி பேசியதற்கு நாங்களெல்லாம் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம்.

அடுத்தபடியாக, நகை செய்யும் தொழிலாளர்கள் பற்றி ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். நகைத் தொழிலாளர்கள் பிறர் நகைக்கின்ற அளவுக்கு இன்றைக்கு வாழ்க்கையிலே பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். பிற மாவட்டங்களைச் சேர்ந்த அங்கத்தினர்கள் கூறியதுபோல் எங்கள் மாவட்டத்திலும் ஆயிரக் கணக்கான நகைத் தொழிலாளர்கள் வேலை வாய்ப்பு இல்லாமல், வறுமையால் வாடித் தவிக்கின்றார்கள். இரண்டு, மூன்று நாட்

*[திருமதி ராஜாத்தி குஞ்சிதபாதம்]* **[30th January 1963**

களுக்கு முன் எங்களிடம் இரண்டு, மூன்று தொழிலாளர்கள் வந்தார்கள். 'மத்தியானம் 4 மணி வரையில் ஒன்றும் சாப்பிடவில்லை, கையில் காசு கிடையாது, இப்பொழுதுதான் ஹோட்டலில் 2 தோசை வாங்கிச் சாப்பிட்டுவிட்டு வந்தோம், பள்ளியிலிருந்து வந்த பாலகனுக்குக்கூட கொடுப்பதற்கு உணவு கிடையாது, பொறி கடலையையும் சர்க்கரையையும் வாங்கிக் கொடுத்தோம்' என்று பரிதாபகரமான செய்தியைச் சொன்னார்கள். அதை அமைச்சர் அவர்களுக்கு நான் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். அவர்களுடைய நிலைமை மிகவும் பரிதாபகரமாக இருக்கிறது. அவர்கள் வீட்டிற்குள் உலை வைத்து பட்டரை வைத்திருப்பவர்கள். போலீஸார் அவர்கள் வீட்டிற்குள்ளே சென்று அந்த உமிப்பட்டரையில் கை வைத்துப் பார்த்து அது சூடாக இருந்தால், உடனே அவர்களை போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துச் செல்லக்கூடிய பரிதாபகரமான நிலை அந்தத் தொழிலாளர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. அந்தத் தொழிலாளி உள்ளே ஏதாவது ஆணியை தட்ட ஆரம்பித்துவிட்டால், உடனே தங்கத்தைக் தட்டுகிறார்கள் என்று சொல்லி அழைத்துச் செல்லக்கூடிய நிலைமை மிகவும் பரிதாபகரமானது. அதனால் பாதிக்கப்படாதவர்கள் நகை வியாபாரிகள் தான். அவர்கள் ரூ. 50,000-க்கு ரெடிமேட் நகைகள் வைத்திருந்தால், எக்ஸைஸ் அதிகாரி டிக்ளரேஷன் கேட்கும்பொழுது, 50,000 ரூபாய்க்கு நகை இருக்கிறது என்று டிக்ளரேஷன் தரப்போவதில்லை. ஐந்தாயிரம் ரூபாய்க்குத்தான் நகை ஸ்டாக் இருக்கிறது என்று டிக்ளேர் செய்வார்கள். அந்த 5,000 ரூபாய் நகையைத் தான் அவர்கள் பிப்ரவரி 10-ம் தேதிக்குள் விற்கவேண்டிய நிலை ஏற்படும். மீதியுள்ள 40,000, 50,000 ரூபாய் நகையை அடுத்த ஆண்டுகளில் அவர்கள் 5 லட்ச ரூபாய்க்கு வேண்டுமானாலும் கள்ள மார்க்கெட்டில் விற்கக்கூடிய வசதி அவர்களுக்கு இருக்கிறது. அதே சமயத்தில் நகைத் தொழிலாளர்கள் மிகவும் சங்கடமான நிலைமையில் இருக்கிறார்கள். கைத்தறி தொழிலாளர்களுக்கு நூல் கட்டுப்பாடு போன்ற சமயங்களில் சிரமங்கள் வந்தபொழுது, அரசாங்கம் ஒரு கைத்தறிக்கு 10, 15 ரூபாய் கொடுத்து உதவினார்கள் என்று என்னிடம் வந்து அவர்கள் சொன்னார்கள். அதேபோல திருமதி லூர்தம்மாள் சைமன் அவர்கள் அமைச்சராக இருந்த பொழுது கன்யாகுமரி வட்டத்தில் மீன்பிடிப்புத் தொழிலாளர்களுக்கு சங்கடம் ஏற்பட்டபொழுது சில நிவாரணங்கள், உதவிகள் அளித்தார்கள் என்று கேள்விப்படுகிறோம். ஆகவே, இந்த நகைத் தொழிலாளர்களுக்கும் அவர்கள் கஷ்டத்தை நிவர்த்திக்கும் பொருட்டு கொஞ்சம் இடைக்கால நிவாரணமும் அளித்து உதவவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பதினன்கு காரட் நகைகளை அணிந்துகொள்ளுவதற்கு பெண்கள் மறுக்கிறார்கள் என்பது அல்ல. நாகரிகம் வளர வளர, படித்த பெண்கள் அநேகமாக நகை போடுவதை நிறுத்திவிட்டார்கள். ஏதோ பழைய காலத்து நாகரிகத்தில் வளர்ந்த பெண்கள் சிலர் தான் நகைகளைச் சுமந்து கொண்டிருக்கக்கூடிய நிலை இருக்கிறது. அதுவும் ஐந்து, ஆறு ஆண்டுகளுக்குள் சுருக்கமாகப்



**30th January 1963]** *[திருமதி ராஜாத்தி குஞ்சிதபாதம்]*

போய்விடும். நாங்களாகவே நகைகளை நிராகரிக்கக்கூடிய காலம் வந்துகொண்டிருக்கிறது. பதினன்கு காரட் நகைகள் அணிய நாங்கள் தயாராக இருக்கிறோம், எதைக் கேட்டாலும் கொடுப்பதற்கு தயாராக இருக்கிறோம். ஆனால் இந்தத் தொழிலாளிகளின் கஷ்டமான நிலைமையை நிவர்த்திப்பதற்கு ஏதாவது அவசியம் உதவி செய்யவேண்டும்.

அடுத்தபடியாக, கவர்னர் அவர்களுடைய உரையில் நெல்லை மாவட்டத்தினருக்கு ஆறுதல் அளிக்கக்கூடிய எந்தவிதமான ஒரு திட்டமும் பற்றி குறிப்பிடப்படவில்லை என்பதைத் தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். எங்கள் நெல்லை மாவட்டத்திற்கு எந்தத் திட்டத்தைக் கொடுத்தீர்கள்? ஏதாவது பெரிய திட்டங்களை அளித்தீர்களா? பரம்பிக்குளம், ஆளியாறு திட்டம் போன்று ஏதாவது அணைக்கட்டு திட்டத்தைக் கொடுத்தீர்களா? தூத்துக்குடி துறைமுகம் இன்னும் தூங்கிக்கொண்டிருக்கும் நிலைமையில் தான் இருக்கிறது. இந்த நெருக்கடியான நிலைமையில் தூத்துக்குடி துறைமுக அபிவிருத்தி வேலையை நிறுத்தி வைத்துவிடுவார்களோ என்றும் அஞ்சவேண்டியிருக்கிறது. அதைப்பற்றி பேச்சே இல்லாமல் இருந்து விடுமோ என்று அஞ்சுகிறோம். எங்கள் நெல்லையில் எப்படியாவது ஒரு மருத்துவ கல்லூரி ஏற்படுத்தவேண்டும். அதற்கு 6 கோடி, 7 கோடி ரூபாய் ஆகும் என்று கனம் நிதி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனாலும் பரவாயில்லை. எங்கள் நெல்லையில் எத்தனையோ ஆதரவு இருக்கிறது. பல திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு ஆதரவு கொடுத்திருக்கிறோம். தொழில் அமைச்சர் அவர்கள் பாலிடெக்னிக் ஏற்படுத்துவதாகச் சொன்னார்கள். நெல்லையில் ஒரு பாலிடெக்னிக் ஏற்படுத்தப்படும் என்று கூறப்பட்டிருக்கிறது. அது பெண்களுக்கா, ஆண்களுக்கா என்று குறிப்பிடப்படவில்லை. ஏற்கனவே ஆண்களுக்கு ஒரு பாலிடெக்னிக் நெல்லையில் இருக்கிறது. அதோடு சேர்த்து பெண்களுக்கும் நெல்லையில் ஒரு பாலிடெக்னிக் ஆரம்பிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

செட்டில்மெண்டு விஷயமாக திரு. செல்வராஜன் அவர்கள் கூறியதுபோல், வெள்ளையர் காலத்தில் செட்டில்மெண்டு செய்யப்பட்ட நிலங்கள் இன்னும் அப்படியே இருந்துகொண்டிருக்கின்றன. 15, 16 வருஷங்களாகப் பயிரிட்டுக்கொண்டு வந்தவர்களுக்கு பாத்தியதை இல்லாமல் இருக்கிறது. அவர்கள் பல ஆண்டுகளாக நிலத்தில் உழைத்தும்கூட அவர்களுக்கு அந்த நிலத்தில் உரிமை இல்லாமல் இருக்கிறது. அந்த நிலங்களை உடனடியாக செட்டில்மெண்டு செய்யவேண்டும். விவசாய அபிவிருத்தித் திட்டங்கள் வரும்பொழுது நிலங்களை செட்டில்மெண்டு செய்து அவர்களுக்கு உடனடியாக நிலத்திற்கு பட்டா போட்டுக் கொடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். கவர்னர் அவர்களுடைய உரையின்மீது நடக்கும் விவாதத்தில் கலந்து கொள்ள வாய்ப்பு பெற்றமைக்கு என்னுடைய நன்றியறிதலையும் மகிழ்ச்சியையும் தெரிவித்துக் கொண்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

[30th January 1963

* திரு. அ. ராமசந்திர ராயர்: கனம் சபாநாயகர் அவர்களே, நான் கவர்னர் பெருமான் உரையை வரவேற்று, எனது சிற்றுரையை வழங்க முன்வந்துள்ளேன். சீன ஆக்கிரமிப்பாளர், பஞ்சசீலம் என்றெல்லாம் பேசிக்கொண்டு, நயவஞ்சகமாக நம்முடைய நாட்டின் ஒரு பகுதியை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கும்பொழுது, நமது நாட்டைப் பாதுகாப்பதற்காக சர்வ கட்சிகள் ஒன்றுகூடி ஆக்கப்பணிகளில் ஈடுபட்டு, தங்களுடைய திறமையையும், புத்திசாலித்தனத்தையும் பயன்படுத்தி ஆக்கிரமிப்பைத் தடுப்பதற்கு வேண்டிய முயற்சிகள் செய்துவருவது பற்றி எனது மனமார்ந்த சந்தோஷத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். அது மாத்திரமல்ல. திராவிட முன்னேற்றக் கழகத்தினர் ஆக்கப் பணிகளில் ஈடுபட்டு, அவர்களும் தேசியப் பாதுகாப்புக்காக நிதி திரட்டித்தந்து, இன்னும் வேண்டிய எல்லா உதவிகளையும் செய்வோம் என்று அறிவித்ததுபற்றி நாம் ரொம்பவும் சந்தோஷப்பட வேண்டும். நேற்று கனம் அங்கத்தினர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் உரையாற்றுகையில் ஆளுங்கட்சியினர் தங்களைப் பற்றி கிண்டலாகச் சொல்லுகிறார்கள், நல்ல முறையில் வரவேற்றுச் சொல்லவில்லை என்று சொன்னார்கள். அவர் அப்படிச் சொன்னதைப் பற்றி நான் வருத்தப்படுகிறேன். அப்படி நாங்கள் சொல்லவில்லை. முன்பெல்லாம் கவர்னர் அவர்கள் உரை நிகழ்த்திய போது அவர்கள் வராமல் இருந்து இந்தத் தடவை அவர்கள் கவர்னர் உரையின்போது வந்திருந்து ஆக்கமும் ஊக்கமும் அளித்ததுபற்றி நாங்கள் சந்தோஷப்படுகிறோம். கிண்டல் என்று வார்த்தைக்கே இடம் இல்லை. அது மாத்திரமல்ல. விலைவாசி உயர்வினால் மக்களுக்குத் துன்பம் ஏற்பட்டிருக்கிறது. விலைவாசி ஏறியிருக்கிறது என்று அவர்கள்தான் முன்பு சொன்னார்கள். இப்பொழுது குறைந்துவிட்டது என்று அவர்களே சொல்லுகிறார்கள். இன்று நாட்டில் உலவும் ஆக்கிரமிப்பை ஒழிப்பதற்கு நம்முடைய சக்திகள் அனைத்தையும் ஒன்று திரட்டவேண்டும் என்று பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் கூறியிருக்கிறார்கள். ஆயுதபலம், படைப்பலம் ஆகியவற்றைக்கொண்டு மட்டும் நாம் எதிரியை வெற்றிகொள்ள முடியாது. மக்களுடைய எழுச்சியும் முக்கியம் அதுவும் ஒரு முக்கியமான கடமை என்று கூறப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது. ஆக்கிரமிப்பிலிருந்து நாம் பாதுகாத்துக் கொள்ளவேண்டுமானால், விவசாய உற்பத்தியையும், உணவு உற்பத்தியையும் அதிகப்படுத்துவதும் மிகவும் அவசியம். அதைப் பற்றி கவர்னர் உரையில் நல்ல முறையில் விரிவாக விளக்கப்பட்டிருக்கிறது. காய்கறி உற்பத்திக்காக தேவையான நிதியும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இப்பொழுது அநேகமாக எல்லா அரசினர் தோட்டங்களிலும் பூஞ்செடிகளை வளர்த்து, அவற்றைப் பொழுதுபோக்கு நிலையங்களாக ஏற்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். இதைவிட, அங்கெல்லாம் காய்கறிச்செடிகளைப் பயிரிட்டு, அவைகளில் காய்கறிகள் காய்த்துத் தொங்குவதை பார்த்தால் மிகவும் அழகாக இருக்கும். அந்தக் காய்கறிகளிலிருந்து வரக்கூடிய வருமானத்தைப் பாதுகாப்பு நிதிக்கு கொடுத்துவிடலாம். இந்த விஷயத்தில் அரசாங்கம் தக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



30th January 1963] [திரு. அ. ராமச்சந்திர ராயர்]

இன்றைய தினம் நாம் நிறைவேற்றியுள்ள முதலாவது, இரண்டாவது, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டங்களெல்லாம் நம்முடைய நாட்டின் ஆக்க வேலைகளுக்கு அடிகோலாக இருந்து வருகின்றன என்பது நமக்கு நன்கு விளங்குகிறது. ஒரு நாடு படை பலத்தையும், ஆயுத பலத்தையும் மட்டும் வைத்திருந்தால் போதாது. உணவுப் பற்றாக்குறை இல்லாமல் இருக்கவேண்டும். இந்த மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களின் காரணமாக உற்பத்தி பெருகியிருப்பதால் நமக்கு ஒரு துணிச்சல் ஏற்பட்டு ஆக்கிரமிப்பாளரை எதிர்க்கக்கூடிய அளவுக்கு ஒரு சக்தி ஏற்பட்டிருக்கிறது. நாம் அவர்களை விரட்டியடிக்க ஒரு திட சங்கல்பம் செய்துள்ளோம். மூன்றாவது திட்ட காலத்தில் மேற்கொண்டு 17 லட்சம் டன் உணவு உற்பத்தி செய்யவேண்டும் என்று குறிகோள் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இது வரவேற்கத்தக்கது.

இப்பொழுது தேசிய நெருக்கடி காலத்தில் நமது மாநிலத்தில் ஒரு பாதுகாப்பு கமிட்டி அமைக்கப்பட்டிருக்கிறது. சர்வ கட்சிகளிலிருந்தும் 90 அங்கத்தினர்கள் பொறுக்கியெடுக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால் இந்த சபையில் பேசும்போது, எதிர்க்கட்சிகளைக் கலந்து ஆலோசிக்கவில்லையென்றும், மனம் போன போக்குப்படி இந்தக் கமிட்டியை அமைத்துவிட்டார்களென்றும் குறை சொன்னார்கள். அது ஒரு விதத்தில் நல்லது என்றே நான் நினைக்கிறேன். இவ்விதம் கமிட்டி அமைப்பதில் எல்லோரையும் கலந்து செய்வதைவிட, ரகசியமான முறையில் ராஜ தந்திரத்துடன் காரியங்கள் செய்வது நல்லது. இப்பொழுது நெருக்கடி காலத்தில் சீனர்களை விரட்டியடிப்பதுதான் நமது குறிக்கோளாக இருக்கவேண்டுமே தவிர, மற்ற குறைகளைப் பற்றி மிகைப்படுத்த வேண்டியதில்லை.

உணவு உற்பத்தியைப் பெருக்குவது மட்டுமல்லாமல், பால் உற்பத்தி அதிகரிப்பதற்கு திட்டங்கள் வகுக்கப்பட்டிருக்கின்றன. பால் உற்பத்தி அதிகரிப்பதற்கு கால்நடைகளுக்கு வேண்டிய தீவனம் சரியான முறையில் கிடைக்கும்படி செய்யவேண்டும். பருத்திக்கொட்டையின் விலை அதிகமாயிருக்கிறது, அதை கட்டுப்பாடு செய்துகொடுக்கவேண்டுமென்று சொன்னார்கள். கூட்டுறவு முறையில் விநியோகம் செய்தால் பால் பண்ணைகள் விருத்தியடைவதற்கு உதவியாக இருக்கும். விவசாய உற்பத்தியைப் பெருக்குவதற்கு உரங்கள் தேவை. இப்பொழுது ரசாயன உரங்களை அதிக அளவுக்கு உபயோகிப்பதால் அவைகள் பூமியிலிருந்து சக்தியை இழுத்துக்கொண்டு விடுவதால் வயல்களின் தன்மை குறைந்துகொண்டு வருகிறது. எங்களுடைய தென்னாற்காடு ஜில்லாவைப் பொறுத்தவரையில் பிண்ணாக்கு ஒரு சிறந்த உரமாக இருந்து வருகிறது. கூட்டுறவு முறையிலேயோ அல்லது சப்ஸிடி கொடுத்தோ பிண்ணாக்கின் விலையைக் குறைத்து விவசாயிகளுக்குக் கொடுத்தால் நிலம் கெட்டுப்போகாமல் இருக்கும், விவசாய உற்பத்தியும் அதிகரிக்கும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, கல்விக்காக 4 கோடி ரூபாய் அதிகமாக ஒதுக்கப்பட்டிருப்பது மகிழ்ச்சிக்குரியது. கல்விதான் எல்லாவற்றிற்கும் அடிப்படையாக இருக்கிறது. ராணுவப் பயிற்சிக்கும் ஓரளவு

கல்வி அறிவு பெற்றிருக்கவேண்டும். கல்லூரிகளிலும் அதிகமான அளவுக்கு என்.ஸி.ஸி. படையை நிறுவப்போவதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இவையெல்லாம் வரவேற்கத்தக்க அம்சங்கள்.

இன்று விவசாயிகளின் மீது அதிகமான அளவுக்கு வரி விதிக்கப் போவதைப் பற்றி எல்லா கட்சிகளும் குறை கூறிக்கொண்டிருக்கிறார்கள். வரியே போடவேண்டாமென்று நான் சொல்லவில்லை. வருஷா வருஷம் கணக்கு எடுத்துப் பார்த்தால் விவசாயிகளின் வரிப்பளு அதிகரித்துக்கொண்டே போகிறது. அவர்கள் மிகவும் துன்புறுகிறார்கள். ஆகவே மற்ற இனங்களில் உள்ள வரி விகிதத்தை ஓரளவு அதிகப்படுத்தி அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். விவசாயிகள் இந்த நாட்டின் முதுகெலும்பு எனக் கருதப்படுகிறார்கள். அவர்களுடைய மனது புண்பட்டால் நம்முடைய நாட்டின் வளம் குறைந்துவிடும். ஆகவே எந்த அளவுக்கு அவர்களுக்கு வரி விதிக்கலாமோ அந்த அளவுக்கு மட்டும் வரி விதித்து, இதர வரிகளிலிருந்து சரிக்கட்டிக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எனக்கு இந்த சந்தர்ப்பத்தில் பேசுவதற்கு அவகாசம் கொடுத்ததற்கு, தங்களுக்கு, எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

MR. SPEAKER : The House will now adjourn and meet again at 11-15 a.m.

The House then adjourned and reassembled at 11-15 a.m.

* திரு. வா. சொ. சு. மணி : சட்ட மன்றத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்களுடைய உரையின் மீது என்னுடைய சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். அவருடைய உரையிலே, தேசியப் பாதுகாப்புக்கு அனுசரணையாக மாநில அளவிலும் மாவட்ட அளவிலும் பாதுகாப்புக் கமிட்டிகள் அமைக்கப்பட்டு உள்ளன—என்று தெரிவித்துள்ளார்கள். மாநில அளவிலே அமைக்கப்பட்டுள்ள கமிட்டியில் சரியான பிரதிநிதித்துவம் இல்லை என்று சொல்வதுடன், அது கட்சிக் கண்ணோட்டத்துடன் அமைக்கப்பட்டிருக்கின்றது என்பதை நான் கூறிக்கொள்ளாமல் இருக்க முடியவில்லை. மாவட்ட அளவிலே அமைக்கப்பட்டுள்ள கமிட்டியிலே கூட, உண்மையிலே பொது மக்களுடன் தொடர்பு கொண்ட பல பிரமுகர்களை அங்கத்தினர்களாகச் சேர்த்துக் கொள்ளவில்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். குறிப்பாக, மதுரை மாவட்டக் கமிட்டியில், சில முக்கிய பிரமுகர்கள் சேர்த்துக் கொள்ளப்படவில்லை. மதுரை நகரத்தின் பொதுமக்களுடைய பேராதரவு பெற்று, பொது மக்களோடு தொடர்பு கொண்டுள்ள சில பிரமுகர்களையும், சீன ஆக்கிரமிப்பை எதிர்த்துப் பல மேடைகளில் பேசி, பாதுகாப்பு நிதி திரட்டுவதில் அதி தீவிரமாக இருப்பவர்களையும் கூட அந்தக் கமிட்டியில் சேர்த்துக்கொள்ளவில்லை. வெள்ளையன் ஆண்டபோது, யுத்த காலக் கமிட்டி அமைக்கப்பட்டதைப் போல, "பட்ட, பட்ட" பேர்களையும் பஸ் அதிபர்களையும், மில் அதிபர்களையும், பெரு நிதி





படைத்த பணக்காரர்களையும் தான் அதில் சேர்திருக்கிறார்களே தவிர, உண்மையிலேயே பொது மக்களோடு தொடர்புள்ள பிரமுகர்களை அதில் உறுப்பினர்களாகச் சேர்க்கவில்லை—என்பதை நான் இங்கே சுட்டிக் காட்டாமல் இருக்க முடியவில்லை. இதை நான் குறையாகச் சொல்லவில்லை.

சீனர்களுடைய ஆக்கிரமிப்பின் காரணமாக நாட்டில் நல்ல ஐக்கியமும் ஒற்றுமை சக்தியும் புத்துணர்ச்சி பெற்று காணப்படுவதை நாட்டின் பாதுகாப்புக்கு ஆதாரவாக இருக்கிறது என்ற முறையில் கவர்னருடைய உரையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. நாட்டில் ஒற்றுமைச் சக்தி உருவாகியிருக்கும் இந்த நேரத்தில், அந்த ஒற்றுமைச் சக்திக்கு குந்தகம் விளைவிக்கும் முறையில் இந்திய சர்க்கார், தேவையில்லாத நேரத்தில், தேவை இல்லாத ஒன்றை, அதாவது பிரிவினைத் தடைச் சட்டத்தை மக்களுடைய பிரஜா உரிமையையும், ஜீவாதார உரிமையையும் பறிக்கப்படும் அளவிலே கொண்டுவந்தார்கள். மக்களுக்குத் தங்களுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்ல பேச்சு சுதந்திரமும், எழுத்துச் சுதந்திரமும் இல்லாமல் செய்வதற்கான முறையிலே அந்தச் சட்டம் அமைந்துள்ளது. அந்தச் சட்டத்தினால் பெரிதும் பாதிக்கப்படுபவர்கள் இன்றைய அரசியல் நிலையில், தமிழ்நாட்டிலுள்ள பெருங்குடி மக்கள்தான் என்று நான் சொல்ல விரும்புகிறேன். மக்களுடைய அடிப்படை உரிமை பறிக்கப்படும் நிலை ஏற்பட்டால், அதற்குச் சரியான பாதுகாப்பு கொடுக்கவேண்டியது நமது மாநில சர்க்காரின் தலையாய கடமை என்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஜனநாயகத்தைக் காப்பாற்ற போர் முயற்சியில் ஈடுபட்டுள்ள நேரத்தில்—ஜனநாயகப் பண்பையே சீர் குலையச் செய்யும்படியான சட்டத்தைக் கொண்டுவருவது நேர்மையற்ற செயலாகும். மனிதனுடைய உரிமையைப் பாதிக்கும் செயல், பறிக்கும் செயல், வெளியில் இருந்து உண்டாகிறபோது அதில் இருந்து மக்களைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு இந்த மாநில அரசாங்கத்திற்கும் உண்டு என்று மீண்டும் சொல்லிக்கொள்கிறேன். இந்த அம்சத்தை கவர்னர் பெருமான் தம்முடைய உரையில் எடுத்துக் கூறவில்லையென்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, பாதுகாப்புக்கு, தேசப் பாதுகாப்புக்கு உற்பத்தியைப் பல துறைகளிலும் பெருக்க வேண்டியதன் அவசியத்தை கவர்னர் தம் உரையில் குறிப்பிட்டுள்ளார்கள். உற்பத்தியைப் பெருக்குவது என்றால் வேளாண்மைக்கே முதன்மையான ஸ்தானம் கொடுக்கப்படவேண்டும். விவசாய உற்பத்தி பெருக்கினால்தான் எந்த யுத்த நெருக்கடியையும் சமாளித்துக் கொள்ள சந்தர்ப்பம் ஏற்படும். ஆகவே ஆட்சியாளர்கள் உழவர்களுக்கு வேண்டிய எல்லா உதவிகளையும் உடனடியாகச் செய்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறார்கள். குறிப்பாக இன்றைய தினம் விவசாயத்திற்குத் தேவையான உரம் தக்க காலத்தில் கிடைப்பதில்லை. ஏதோ பர்மிட் முறை என்று வைத்திருக்கிறார்கள். அந்த பர்மிட் முறையில் உர மூட்டை வாங்குவது என்றால் உழவு காலத்தில் கேட்டால் அறுவடை காலத்தில் கிடைக்கிறது. ஆயிரக்

கணக்கான உர மூட்டைகள் சொசைடி கோடவுனில் தேங்கிக் கிடக்கின்றன. இருந்தும் அதிகாரிகள் காலாகாலத்தில் பெர்மிட் விநியோகம் செய்வதில்லையென்று மக்கள் சொல்கிறார்கள். இது பற்றியும் ஆராய்ந்து காலா காலத்தில் விவசாயிகளுக்கு உரம், விதை முதலியன கிடைக்கச் செய்வதற்கு தக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு வெள்ளாண்மை செய்வதற்கு மின்சாரம் சரியான முறையில் சப்ளை செய்யப்படவேண்டியதாக இருக்கிறது. ஆனால் ஏதோ சில சட்ட திட்டங்களைப் போட்டு, கட்டுப்பாடுகளை விதித்து சரியான முறையில் மின்சாரம் சப்ளை செய்வது கிடைப்பது. மோட்டார், பம்பு செட்டுகள் வைத்துள்ள உழவர்களுக்குத் தேவையுள்ளபோது காண்டு கொடுக்கப்படுவதில்லை. இதனால் வெள்ளாண்மை பெரிதும் பாதிக்கப்படுகிறது. அவசரகால நெருக்கடியை முன்னிட்டு வெள்ளாண்மைக்கு எவ்விதக் கட்டுப்பாடுமின்றி மின்சாரம் சப்ளை செய்யப்படுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தமிழகத்திலே மலைப் பிரதேசத்தில் ஏலம் பயிரிடுகிறார்கள். அந்த ஏலமானது நமக்கு அந்நியச் செலாவணியைச் சம்பாதித்துக் கொடுக்கும் கிருஷி. அந்தக் கிருஷியைப் பயிரிடும் மக்கள் தமிழகத்தில் இருக்கிறார்கள். அந்த ஏலத்தினுடைய விலை ஒரு நிலையில் இல்லாத காரணத்தினால்—அடிக்கடி விலையில் ஏற்படுகிற ஏற்றத் தாழ்வினால் அதை உற்பத்தி செய்பவர்கள் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே கார்டமம் போர்டு ( Cardamom Board ) ஒன்று ஏற்படுத்தி ஏல விவசாயிகளைப் பாதுகாக்க மத்திய சர்க்காருக்கு சிபாரிசு செய்யுமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, சிமிண்டு விநியோகத்தைப்பற்றி எனக்கு முன்பே பல அங்கத்தினர்கள் பேசினார்கள். அதற்கும் பர்மிட் முறை வைக்கப்பட்டிருக்கிறது. தேவை உள்ளவர்கள், தேவை இல்லாதவர்கள் எல்லோரும் பர்மிட் வாங்குகிறார்கள். இதனால் சிமிண்டு உண்மையில் தேவைப்படுகிறவர்களுக்குக் கிடைக்காமல் போகிறது. முன்பு ஏதோ ஒரு முறையில் டீலர்கள் கொடுத்து வந்தார்கள். இப்போது பர்மிட் முறை என்று வந்த காரணத்தினால் அவசரத்திற்கு, சிமிண்டு தேவையுள்ளவர்களுக்கு மூட்டை ஒன்று பதினைந்து, பதினாறு ரூபாய்க்குக் கூடக் கிடைப்பது இல்லை. ஆகவே சிமிண்டு பெர்மிட் முறையை எடுத்துவிட வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன். வணக்கம்.

(திரு. சிரஞ்சீவிலு நாயுடு அவர்கள் தலைமை.)

* திரு. சி. பொன்னுசாமி: கனம் தலைவர் அவர்களே, கனம் கவர்னர் பெருமான் அவர்கள் உரையை ஏற்று ஏற்றி நன்றி
11-20 a.m. செலுத்தக் கடமைப்பட்டுள்ளேன். அவர்களுடைய உரைக்கு மிகவும் முக்கியத்துவம் கொடுத்துச் சிந்திக்கிறபோது, அவரே தம்முடைய உரையில் நாட்டுக்கு ஏற்பட்டுள்ள ஆபத்தைப் பற்றியும், அதை நாட்டுமக்கள் எவ்வாறு எதிர்நோக்கி வெற்றி





பெற வேண்டும் என்பதைப் பற்றியும் குறிப்பிட்டுள்ள விஷயங்கள் நம்மைக் கவர்கின்றன. சீன ஆக்கிரமிப்பானது நம்முடைய நாட்டை மட்டும் பாதிக்கக் கூடிய விஷயம் அல்ல. உலகத்திலுள்ள ஜனநாயக நாடுகள் அத்தனையையும் பாதிக்கக் கூடிய ஒன்றாகும் என்பதை உலகநாடுகள் யாவும் உணர்ந்திருக்கின்றன. சீன அரசாங்கத்தின் கொள்கை பயங்கரமானது, ஜன நாயகத்திற்கே மிகவும் ஆபத்தானது. இந்தியா மட்டும் அல்ல. உலக நாடுகள் அனைத்தும் விழிப்பாக இருந்தாலொழிய உலக நாடுகள் அனைத்தும் அழியக்கூடிய பயங்கர உலக யுத்தம் ஏற்படலாம் என்பதை நன்கு உணர்ந்து இந்தியாவின் நடுநிலைக் கொள்கையை, உத்தமன் பண்டிட்ஜி நேருவின் நடுநிலைக் கொள்கையை ஆதரிக்க முன்வந்திருக்கிறார்கள். இன்றைக்கு ஜன நாயக நாடுகள் மட்டும் அல்ல, ஏனைய சர்வாதிகார நாடுகளும்கூட யுத்தத்தை உலகத்தின் எந்த மூலையிலும் விரும்பவில்லை. ஆகவே தான் நம்முடைய நடுநிலைக் கொள்கை தகர்க்கப்படாமல் நமக்கு உதவி செய்ய முன் வந்திருக்கின்றன என்றால் மிகையாகாது. ஆகவே தான் எல்லா நாடுகளும் நமக்குத் தேவையான ராணுவ தளவாடங்களைக் கொடுத்துதவ முன்வந்திருக்கின்றன. இதுதான் ஓர் புதுமை. ருஷ்ய அதிபர்கூட இன்றைக்கு என்ன சொல்கிறார். ஒரு குண்டு போடப்படுமானால் அமெரிக்கா மட்டும் அழிந்து போகாது. ருஷ்யாவும் அழிந்துபோகும். ஒரு குண்டில் 80 கோடி மக்கள் அழிந்து விடுவார்கள் என்று சொன்னால் இன்றைய தினம் உலக யுத்தம் ஏற்படுவதனால் உண்டாகக் கூடிய ஆபத்தை எல்லோரும் உணரவேண்டும். ஆகவே இன்றைக்கு இந்தியாவுக்கு ஏற்பட்டுள்ள ஆபத்தை நிதானமாக, வீரமாக எதிர்த்து நின்று சமாளித்தாகவேண்டும் என்பதை நாம் எல்லோரும் உணர வேண்டும். சீனாவைப் போன்ற ஒரு நாட்டுடன் எதிர்த்து நின்று நாம் நம்முடைய எல்லையைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டுமென்றால், இன்னும் அதிகமான வலுப்பெற்றாக வேண்டும். ராணுவத் தளவாடங்களைச் சேர்த்துக் கொண்டாக வேண்டும். அதற்கு நிதி அதிகம் தேவைப்படும். இவற்றையெல்லாம் கவர்னர் அவர்கள் மிகத் தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இன்றைக்கு இந்த நாட்டிலுள்ள எந்தக் கட்சியாக இருந்தாலும் சரி, கம்யூனிஸ்ட் கட்சியாக இருந்தாலும் சரி, திராவிட முன்னேற்றக் கழகமாக இருந்தாலும் சரி—இந்த நாட்டில் பிறந்த ஒவ்வொரு இந்தியனும் இந்த நாட்டைப் பாதுகாத்தாக வேண்டும். நாம் ஒவ்வொருவரும் நம் கடமையைச் செய்தாக வேண்டும். நம் கடமையைச் செய்வதற்கு பிறர் நம்மைப் பாராட்ட வேண்டும் என்று எதிர்பார்க்காமல் நம் கடமையைச் செய்யவேண்டும். நம்முடைய நாட்டை நாம் பாதுகாத்துக் கொள்ளத் தவறினால் ஒன்று அடிமையாவோம். இன்றொன்று நம் நாட்டு வருங்கால மக்களின் வெறுப்புக்கு ஆளாவோம். ஆகவே, நம் நாட்டை எல்லா வகையிலும் பாதுகாத்துக்கொள்ள நாம் எல்லா வகையிலும் பாடுபடவேண்டும், ஒத்துழைக்கவேண்டும் என்று கவர்னர் குறிப்பிட்டிருப்பதை வரவேற்கிறேன்.

[திரு. சி. பொன்னுசாமி] 30th January 1963

நமக்கு ஆறு லட்சத்து அறுபதினாயிரம் கிலோவாட் மின்சாரம் குறைவாக இருந்தது. அதை நிவர்த்தி செய்ய அணுசக்தி மின்சார நிலையம் நிறுவப்படவேண்டும் என்றோம். ஹொகனேகல் திட்டம் பூர்த்தியானாலும் அணுசக்தி மின்சார நிலையம் தேவை என்று சொன்னோம். இந்திய பாரதத்தின் ஒரு பகுதியில் இன்று அணுசக்தி மின்சார நிலையம் நிறுவப்படப்போகிறது என்பது நமக்கெல்லாம் மகிழ்ச்சி அளிக்கக் கூடியதாகும். இப்படி நம் நாடு—நம் தமிழ்நாடு எல்லாவகையிலும் நலம்பெற சிந்திக்க வேண்டும்—மகாகவி பாரதி கொண்ட உணர்ச்சி போல, "செந்தமிழ் நாடெனும் போதினிலே—இன்பத் தேன் வந்து பாயுது காதினிலே" என்று உணர்ச்சி பொங்கி நாள் செல்லச் செல்ல, காலம் செல்லச் செல்ல, நம்முடைய நாடு செழிப்பு அடைய நாம் பாடுபடவேண்டும். செழிப்படைந்து வருகிறது என்று நாம் பெருமைப்படலாம்.

11-30 a.m. இப்போது பல திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுக் கொண்டு வருகின்றன. சேலத்தில் இரும்புக் கனித் திட்டம் உருவாகிக் கொண்டு வருகிறது. தூத்துக்குடித் திட்டம் கைவிடப்படுமோ என்று பலர் அஞ்சிக் கொண்டிருந்தாலும் கூட, நான் தெரிந்து கொண்ட அளவு அந்தத் திட்டம் கைவிடப்படாமல் நடந்து கொண்டுதான் வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். தூத்துக்குடி துறைமுகத்திற்காக ஒதுக்கப்பட்ட இரண்டு கோடி ரூபாயையும் 1963-64-ம் ஆண்டிலேயே செலவழிக்கவேண்டுமென்று நம்முடைய மாநில சர்க்கார் மத்திய சர்க்காருக்கு வேண்டுகோள் விட வேண்டுமென்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

எந்த நாட்டை எடுத்துக் கொண்டாலும், போக்குவரத்து வசதிகளை அதிகப்படுத்துவது மிகவும் அவசியமாகும். இரண்டாவது மகா யுத்தத்தின்போது ஜெர்மன் நாடானது ரோடு போட்டு போக்குவரத்து வசதியை அதிகப்படுத்திக் கொண்டது. தற்காலத்தை எடுத்துக் கொண்டாலும் நம்மை ஆக்கிரமித்த சைனு நாம் அறியாமலே ரோடுகளைப் போட்டு போக்குவரத்து வசதியைப் பெருக்கிக் கொண்ட காரணத்தால்தான் நம்மைத் தாக்கிப் பின் போகச் செய்ய முடிந்தது என்பதை நாம் யாரும் மறந்துவிட முடியாது. போக்குவரத்து வசதிகள் ஒரு நாட்டின் பாதுகாப்புக்கு மிக மிக அவசியமாகும். நம்முடைய பாரதத் திருநாட்டைப் பொறுத்தவரையில் ஏறக்குறைய 3,500 மைல் நீளமுள்ள கடற்கரை பகுதியில் தேசியப் பெருஞ்சாலைகள் போடப்பட்டிருப்பதில் கன்னியாகுமரியிலிருந்து சென்னைக்கு, சுமார் 620 மைலுக்கு இன்னும் தேசீய நெடுஞ்சாலை போடப்பட வில்லை. இந்தப் பகுதியிலுள்ள பாலங்களையெல்லாம் உடனடியாகக் கட்டுவதற்காக மத்திய சர்க்கார் இரண்டு கோடி ரூபாய் சாங்ஷன் செய்திருக்கிறார்கள் என்று கேள்விப்படுகிறேன். இந்த நெடுஞ்சாலையைப் போட மொத்தத்தில் ஐந்து கோடி ரூபாய் ஆகுமென்று தெரிகிறது. ஆகவே, அந்த வேலையை இந்த ஆண்டிலேயே தொடங்க வேண்டுமென்று மத்திய சர்க்காரை மாநில



30th January 1963] [திரு. சி. பொன்னுசாமி]

சர்க்கார் கேட்கவேண்டுமென்று நான் சொல்ல ஆசைப்படுகிறேன். கடற்கரை ஓரங்களில் மீனவ மக்களும், எளிய மக்களும் வாழ்கிறார்கள். அந்தப் பகுதிகளில் எல்லாம், ரோடுகள் மிக, மிக அவசியம். புன்னைக்காயல் என்பது ஒரு சிறு கிராமம். புன்னைக் காயலுக்கும் ஆத்தூருக்கும் இடையில் ரோடு போட மத்திய சர்க்கார் இரண்டு லட்சம் ரூபாய் சாங்ஷன் செய்திருந்தார்கள். அந்த வேலை இப்போது நடைபெறவில்லை. அந்தக் கிராமம் மீன் வளம் நிறைந்த கிராமம், ஆகவே, அந்தப் பகுதியில் போக்குவரத்து வசதி மிகவும் அவசியம் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, நமது மதிப்பிற்குரிய கவர்னர் பெருமான் அவர்கள் 'ஸ்லம் கிளீனர்ஸ்' பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். அது மிக, மிக முக்கியமானது. சென்னையில் வீதி ஓரங்களில் பலர் வாழும் நிலைமையைப் பார்க்கும்போது மனம் சகிக்கவில்லை. அவர்களுக் கெல்லாம் குடியிருப்பு வசதி செய்து கொடுப்பது மிக, மிக அவசிய மாகும்.

நாம் இப்போது சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களுக்கு முக்கியத்துவம் அளித்து வருகிறோம். இப்போது தூத்துக்குடியில் போரூரணித் திட்டம் உருவாகிக் கொண்டிருக்கிறது. அதற்கு 50,000 ரூபாய் செலவாகும் என்று தெரிகிறது. அந்தச் சிறிய தொகையைச் செலவு செய்து அந்தத் திட்டத்தை நிறைவேற்றிக் கொடுப்பதன் மூலம் அந்தப் பகுதியிலுள்ள 200 ஏக்கர் தரிசு நிலங்கள் புஞ்சை நிலங்களாக மாற வசதி ஏற்படும். அந்தக் காரியத்தை உடனடியாகச் செய்ய வேண்டுமென்று பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

நம்முடைய பாரத நாட்டில், குறிப்பாகத் தமிழ் நாட்டில் அநேக கிராமங்களில் மக்கள் குடிதண்ணீர் இல்லாமல் கஷ்டப் பட்டுக் கொண்டிருக்கிறார்கள். நம்முடைய மாநில அரசாங்கம் நாட்டு மக்களுக்குக் குடிதண்ணீர் வசதி செய்து கொடுக்க வேண்டுமென்பதில் அக்கறையோடு இருக்கிறது என்பதை நான் அறிவேன், ஆகவே குடிதண்ணீர் வசதி செய்து கொடுக்க வேண்டிய கிராமங்களுக்கெல்லாம் உடனடியாக இந்த பட்ஜெட் ஆண்டிலேயே (1963-64) குடிதண்ணீர் வசதியைச்செய்து கொடுக்கவேண்டும். உணவின்றி இருக்கலாம், ஆனால் நீரின்றி இருக்க முடியாது. ஆகவே, இதற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நம்முடைய மத்திய சர்க்கார் எப்படி உத்தியோகஸ்தர்களுடைய ஓய்வு பெறும் வயதை 58 ஆக உயர்த்தியிருக்கிறார்களோ அதே போன்று நம்முடைய மாநில சர்க்காரும் உத்தியோகஸ்தர்களுடைய ஓய்வு பெறும் வயதை உயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பொதுவாக, இப்போது மனிதனுடைய சராசரி வயது (ஆவரேஜ் ஏஜ்) நாம் சுகாதார ரீதியில் பல திட்டங்களைப் போட்டுப் பாதுகாப்புக் கொடுப்பதின் காரணமாக கூடிக் கொண்டேபோகிறது. மேலும், வாலிபத்தின்

இப்போது யுத்தத்திலும், பாதுகாப்புப் படையிலும் சேர்ந்து கொண்டிருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில் உத்தியோகஸ்தர்களுடைய வயதை 58 என்று ஆக்கவேண்டியது அவசியமென்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

பொன் வேலை செய்யும் தொழிலாளர்களைப் பொறுத்தவரை அவர்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். பதினைந்து லட்சம் அகதிகளுக்குத் தொழில் கொடுத்த நமது சர்க்கார், பனைமரத் தொழிலாளர்களுக்கு வாழ்வு கொடுத்த நமது சர்க்கார், நிர்க்கதியாகத் தெருவுக்கு வந்து விட்ட நெசவுத் தொழிலாளருக்கு வாழ்வு கொடுத்த நமது சர்க்கார் இப்போது பாதிக்கப்பட்டிருக்கும் பொன் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கும் வேறு தொழில் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும். ஏறக்குறைய 15 லட்சம் தொழிலாளர்கள் இப்போது பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். பங்களூரில் இந்துஸ்தான் பாக்டரியில் இவர்களுக்கு வேலை கொடுப்பதாகக் கேள்விப்படுகிறேன். அதே போன்று மற்ற மற்றத் தொழிற்சாலைகளில் அவர்களுக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக்கொண்டு, இது சம்பந்தமாக மாநில சர்க்கார் ஒரு அறிக்கைவிட வேண்டுமென்றும் அப்பொழுதுதான் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆறுதல் ஏற்படுமென்று சொல்லிக்கொண்டு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. ஆ. துரை அரசன்:** மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, கவர்னர் அவர்களுடைய உரையின் மீது நானும் பேசுகின்ற ஒரு நல்ல வாய்ப்பினை எனக்கு ஏற்படுத்தித் தந்தமைக்காக என்னுடைய இதயம் கனிந்த நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். கவர்னர் அவர்களுடைய உரையிலே, நாட்டின் நெருக்கடியை முன்னிட்டு விவசாயத் துறையை மேலும் அபிவிருத்தி செய்வதற்காக சிறு நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் வேலைகளைத் துரிதப்படுத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படுவதாக அறிவித்திருக்கிறார்கள். குறிப்பாக, தஞ்சை மாவட்டத்திலே எங்களுடைய பகுதிகளை எடுத்துக் கொண்டால், இங்கே ஆளும் கட்சியைச் சேர்ந்த நண்பர்கள் சிலர் குறிப்பிட்டதைப் போல் 1951-ஆம் ஆண்டுக்கு முன்னதாக ஜமீன் இனாம்களாக இருந்த நூற்றுக்கணக்கான கிராமங்கள் சர்க்காரால் எடுத்துக்கொள்ளப்பட்டது. அங்கு உள்ள ஏரிகள் சுமார் 50 ஆண்டு காலமாக மராமத்து செய்யப்படாமல் இருக்கின்ற நிலைமை இன்னும் நீடிக்கிறது. என்னுடைய பகுதியில் சுமார் 600, 700 ஏரிகளுக்கு மேல் நீண்டகாலமாக மராமத்து செய்யப்படவில்லையென்பது ஒருபுறம் இருக்க, ஆறு, ஏழு ஆண்டுகளுக்கு முன்னால் அடித்த புயலால் உடைபட்டுப்போன மடைகள்கூட இன்னும் கட்டப்படாமல் இருக்கின்ற நிலைமையைக் காண்கிறோம். இந்த நிலைமைகளையெல்லாம் மாற்ற, துரிதமாகச் சம்பந்தப்பட்ட இலாகாவினருக்கு உத்தரவிட்டு சிறு நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் ஏரி மராமத்து வேலைகளைத் துரிதமாக்கவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்





கிறேன். என்னுடைய தொகுதியில் அறந்தாங்கிக்கு வட பகுதியில் செலட்டூரில் சோட்டுப்புளிவாத்தலை என்று இருக்கிறது. அதைப் புதுப்பிக்க வேண்டுமென்று அந்த வட்டாரத்திலுள்ள விவசாயப் பெருங்குடி மக்கள் 15 ஆண்டுகளாக முயற்சி எடுத்துக் கொண்டு வருகிறார்கள். அமைச்சர் அவர்கள் அங்கு வரும்போதெல்லாம் அவர்களிடம் விண்ணப்பங்கள் தந்திருக்கிறார்கள். பல மாநாடுகள் கூட்டி தீர்மானங்கள் நிறைவேற்றியிருக்கிறார்கள். இருந்தபோதிலும் அதைப் புதுப்பிக்கும் வேலை இன்று வரை துவங்கப்படவில்லை. அதை விரைவில் துவக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாமடக்கி பக்கத்தில் கல்லுக்குளம் அருகில் ஒரு காட்டாறு ஓடுகிறது. அதில் ஒரு அணை கட்டினால் 6,000 ஏக்கர் வரை பாசன வசதி பெற வாய்ப்பு இருக்கிறது. அதை அந்த வட்டார விவசாயிகள் எடுத்துக்காட்டி அந்த அணையைக் கட்ட 1954-ஆம் ஆண்டிலிருந்து முயற்சி எடுத்து வருகிறார்கள். ஆவடையார் கோவில் பகுதியில் நமது விவசாய அமைச்சர் அவர்கள் கல் நாட்டு செய்த அணைக்கட்டு நீங்கலாக மனமேல்குடி, மணலூர் போன்றவிடங்களில் அணைகட்டிட திட்டமிட்டு நமது மாநில என்ஜினியரால் சர்க்கார் பார்வைக்கு வைக்கப்பட்டிருப்பதாகக் கேள்விப்படுகிறேன். அதை விரைவில் துவக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன். மேலும், ஆவடையார் கோவில் தென்பகுதியில் ஓடுகிற சிறு, சிறு காட்டாறுகளை, அருணசலக் காவேரி, பொன்பேத்தியாறு, பாம்பாறு, கொலுவனாறு போன்றவைகளில் அணை போடுவதினால் கிட்டத்தட்ட 15,000 ஏக்கர்களுக்கு மேல் பாசன வசதி செய்து கொடுக்க முடியும். இதை ஏற்கனவே மகஜர்கள் மூலம் அரசாங்கத்திற்கு அறிவித்திருக்கிறார்கள். அந்த வேலையையும் விரைவில் துவக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, அறந்தாங்கி பக்கத்தில் ஓடுகிற நரசிங்கக்காவேரியில் இரண்டு லட்சம் ரூபாய் செலவில் என்று கருதுகிறேன், ஒரு திட்டம் போடப்பட்டு அத்திட்டம் நீண்ட காலமாக செயலற்றுக் கிடக்கிறது. அதையும் செயலாக்க முனைய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த ஆண்டு நல்ல பருவ மழை பெய்திருக்கிறது. நாம் எல்லாம் மகிழ்ச்சியடையத்தக்க அளவிற்கு இரண்டாம் போக சாகுபடிக்கு ஏரிகளில் தண்ணீர் இருக்கிறது. விவசாயத்திற்கு வேண்டிய கடன் வசதி போன்ற பிற வசதிகளை ஏப்ரல் மாதத்திற்குள்ளே செய்து கொடுக்க வேண்டுமென்று சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கடந்த ஆண்டு உர சப்ளை குறித்து வேறு பல இடங்களில் உள்ள குறைகளைப் பற்றிச் சொன்னார்கள். எங்கள் மாவட்டத்தில், குறிப்பாக என் பகுதியில் போதுமான அளவு கள்ள மார்க்கட் தவிர்க்கப்பட்டு அவ்வப்போது விவசாயிகள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, எப்போது அதிகாரிகளிடம் உரம் வேண்டுமென்று

விண்ணப்பித்தோமோ அந்த நேரத்தில் எல்லாம் அவர்கள் திறமையாக வேலை செய்து நல்ல முறையில் உர விநியோகம் செய்திருக்கிறார்கள். அண்மையில் கலெக்டர் அவர்களுக்கு எழுதியபோது கேர்டை சாகுபடிக்கு ஒவ்வொரு கோவாப்பரேடிவ் சொஸைடியிலும் ஐந்து டன் உரம் வரை வைக்க ஏற்பாடு செய்திருப்பதாக அறிவித்தார்கள். ஆக விவசாயிகளுக்கு வேண்டிய எல்லா வசதிகளையும் இந்த நேரத்தில் துரிதமாக செய்துகொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் பகுதியில் சமீப காலத்தில் வரி வசூல் கொடுமைகள் அதிகமாகி வருகின்றன. கடந்த கூட்டத்திலேயே இதுபற்றிக் கூறியிருக்கிறேன். எங்கள் பகுதியில் வரி வசூலிக்கப்பட்டு கிராம அதிகாரிகளால் மோசடி செய்யப்பட்டிருக்கிறது. இது சம்பந்தமாக சட்டமன்றத்திற்கு ஒரு கேள்வி அனுப்பியிருந்தேன். குறிப்பிட்ட கேஸ்களை அரசாங்கத்தின் நேரடிக் கவனத்திற்கு கொண்டு வரலாம் என்று பதில் வந்தது. வட்டம் வாரியாக கையாடல் இருப்பதால் கொண்டு வர முடியவில்லை. அந்தாங்கியை எடுத்துக் கொண்டால் நான்கு லட்சம் ரூபாய் பாக்கி என்றால் இரண்டு லட்சம் தான் மக்கள் செலுத்த வேண்டியிருக்கும். வசூலிக்கப்பட்டவர்களிடமே மேலும், மேலும் வசூலிக்கப்படுகிறது. திருநாளூர் வட்டத்தில் 18,000 ரூபாய் மோசடி செய்த ஒருவர் தண்டிக்கப்பட்டிருக்கிறார். சுப்பையா தேவர், சுப்பையா பிள்ளை, வெங்கடகிருஷ்ணய்யர் போன்றவர்கள் கொடுத்திருக்கும் ரசீதுகள் பரிசீலிக்கப்படவில்லை. இன்னும் ஒரு நிகழ்ச்சி கூறுகிறேன். வாங்கினவர்களிடமே திரும்பவும் கிஸ்தி வசூலிக்கிறார்கள். கா. துரைச்சாமி என்பவர் பட்ட கடனுக்காக கடன் வாங்காதவரிடமே வசூலித்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட கொடுமைகள் எங்கள் வட்டத்தில் ஏராளமாக இருக்கின்றன. கடந்த நவம்பர் 21-ம் தேதி இது சம்பந்தமாக நாங்கள் ஒரு சர்வகட்சி கூட்டம் நடத்தி 21 அம்சங்கள் கொண்ட ஒரு தீர்மானம் போட்டு எல்லாத் தரப்பட்ட அதிகாரிகளுக்கும், அமைச்சர்களுக்கும் அனுப்பியிருக்கிறோம். இவைகளைப் பரிசீலனை செய்ய ஒரு விசாரணை குழு நியமித்து எங்கள் தாலுகாவில் உள்ள ஊழல்களைப் போக்கவேண்டும்.

அடுத்து, நெடுஞ்சாலை வேலைகளை துரிதமாக செய்யவேண்டும். பின்னர், புறம்போக்கு நிலங்களை பழங்குடி மக்களுக்கு கொடுப்பதில் மிராசுதார்கள் தொந்தரவும் ஊராட்சிமன்றத் தொந்தரவும் அதிகமாயிருக்கிறது. இவைகளைப் பரிசீலனை செய்து அவர்கள் உழுது கொண்டிருக்கிற நிலங்களை அவர்களுக்குப் பட்டா செய்து கொடுத்தும், குடியிருப்பு மனைக்கும் வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. ஆர். எஸ். ஆறுமுகம்:** தலைவர் அவர்களே, கம்யூனிஸ்ட் சீனாவின் பச்சை ஆக்கிரமிப்பு குறித்து அதில் நம் நாட்டு மக்கள் எவ்வளவு உணர்ச்சியுடன் இருக்கிறார்கள் என்பதைப் பற்றி மேன்மைதங்கிய கவர்னர் அவர்கள் உரையில் சொல்லப்பட்டிருக்கிறது. தமிழ் நாட்டு முதலமைச்சர் அவர்கள் ஜில்லாக்களில் இது சம்பந்தமாகச் சுற்றுப்பிரயாணம் செய்த சந்தர்ப்பங்களில் லட்சக்கணக்கான மக்கள் 'இந்த நாட்டுக்காக என்ன





தியாகங்கள் செய்ய வேண்டும், எந்தச் சவாலை நாங்கள் ஏற்க வேண்டும், எதற்கும் நாங்கள் தயாராக இருக்கிறோம் என்பதை ஆரவாரம் செய்து தங்கள் உணர்ச்சிப்பெருக்கைக் காட்டினார்கள். திடீரென்று சீனாக்காரன் நம் நாட்டின் மீது படை எடுத்த சந்தர்ப்பத்தில் கூட நமது தலைவர்கள் நிதானத்தை இழக்காது, அவசரப்படாது, அதற்காக நடுநிலைக் கொள்கையை தளர்த்தி விடாது, அதைச் சமாளித்திருக்கிற பெருமை நம் நாட்டு தலைவர்களுக்கு உண்டு. அதுகுறித்து வெளிநாட்டுத் தலைவர்கள் கூட பாராட்டிப் பேசியிருக்கிறார்கள் என்பதை நான் எடுத்துச் சொல்ல ஆசைப்படுகிறேன். நம் நாட்டுக்கு ஏற்பட்ட நெருக்கடியைச் சமாளிப்பதற்கு நம் சர்க்காரால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் பாராட்டுதற்குரியது.

ஒரு நாட்டிற்கு யுத்த காலத்தில் எப்படி போர் தளவாடங்கள் முக்கியமோ, எப்படி அவைகளை தயாரிப்பது முக்கியமோ, அதே போல், உணவு உற்பத்தியைப் பெருக்குவதிலும் அக்கரை காட்ட வேண்டுமென்று நம் அரசாங்கம் முனைந்திருக்கிறது. அதற்காக என்னென்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டும், எப்படி உணவு உற்பத்தியைப் பெருக்க முடியும் என்பதைப் பற்றியும் மேன்மை தங்கிய கவர்னர் அவர்கள் அவர்களது உரையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். உணவு உற்பத்திக்கு எவ்வளவுதான் ஆக்கம் அளித்தாலும், உழுது தொழில் செய்கிற உழவனுக்கு எவ்வளவு உற்சாகமும் ஆக்கமும் அளிக்கிறோமோ அதையும் பொறுத்துதான் உணவு உற்பத்தியும் பெருகும் என்பதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். அதோடு நாட்டின் அவசர நிலைமையை முன்னிட்டு வேறு சில திட்டங்கள் கைவிடப்பட்டிருக்கின்றன.

சில ரோடுகள், பெரிய, பெரிய பாலங்கள் இப்போது அவசியமில்லை என்று விட்டிருக்கலாம். இருந்த போதிலும் போக்குவரத்தும் உணவு உற்பத்திக்கு அவசியமானது என்பதை நாம் மறந்து விடக்கூடாது. சில ரோடுகள், சில பாலங்கள் இல்லாததால் போக்குவரத்து வசதி இல்லாததால் உணவு உற்பத்திப் பெருக்கு தடைபடுகிறது. ஆகவே, சில திட்டங்களை கைவிடும்போது அவற்றை கவனித்து செய்ய வேண்டுமென்று ஞாபகப்படுத்த விரும்புகிறேன். உதாரணமாக, உடையார்பெட்டி—சீவலப்பேரி ரோடு இருக்கிறது. அதில் சீவலப்பேரி பக்கத்தில் ஒரு தாம்போதி கட்ட அந்த ரோடு ஜில்லா போர்ட் நிர்வாகத்தில் இருந்தபோது 80,000 ரூபாய்க்கு எஸ்டிமேட் போட்டு 11,000 ரூபாய் செலவும் செய்யப்பட்டது. ஆனால் இந்த ரோட்டை ஹைவேஸுக்கு மாற்றியதின் காரணமாக அந்த தாம்போதி கட்டும் வேலையை நிறுத்தி விட்டார்கள். இப்போது ரிவைஸ்ட் எஸ்டிமேட் போட்டு வேறு ஒரு காண்ட்ராக்டர் டெண்டர் கொடுத்து இருக்கிறார்கள். இதில் ஏற்கனவே 11 ஆயிரம் ரூபாய் செலவு செய்யப்பட்ட வேலை தாம்போதி இல்லாததின் காரணமாக சுமார் 20 கிராமங்களுக்கு உணவு உற்பத்தி பெருக்கத்துக்குக்கூட தடை ஏற்படுகிறது. ஆகவே, இம்மாதிரி ஏற்கனவே செய்துவிட்ட வேலைகளை எல்லாம் நிறுத்திவிடக்கூடாது என்பதையும் ஞாபகப் படுத்திக்கொள்கிறேன்.

[திரு. ஆர். எஸ். ஆறுமுகம்] [30th January 1963

அடுத்தபடியாக, இப்போது கிராமங்களில் தொண்டர்படை அமைப்பதற்கு அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது. இதன் காரணமாக மக்களிடம் ஊக்கமும், உற்சாகமும், உணர்ச்சியும் ஏற்பட்டிருக்கிறது. இதை நான் மிகவும் பாராட்ட விரும்புகிறேன்.

பொது சுகாதாரத்தையும், மருத்துவத் துறையையும் சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்போவதாக மேன்மை தங்கிய கவர்னர் அவர்களுடைய உரையில் குறிப்பிட்டிருப்பது மிகவும் வரவேற்கக்கூடிய விஷயம் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மேலும், இப்போது டிரஷரிகள் எல்லாம் ரெவின்யூ டிப்பார்ட்மெண்டிலிருந்து பிரிந்து செயலாற்றி வருகிறது. தாலுக்கா சப் டிரஷரிகளில் யாராவது பணம் செலுத்தவேண்டும் என்று சென்றால் (பகல்) 12 மணிக்கு மேல் எந்த பில்லையும், எந்த செல்லானையும் எடுக்கமாட்டோம் என்று சொல்லிவிடுகிறார்கள். தாலூகாக்களில் இருக்கும் ஷெட்யூல்ட் பாங்குகள் எல்லாம் 2 மணி வரையில் இவ் வேலையைச் செய்கின்றன. சாதாரணமாக கிராமங்களிலிருந்து தாலூகாவுக்குப் போய் பணம் செலுத்த, 12 மணி ஆகிவிட்டது என்றால் பணம் செலுத்துவதற்கு வழியில்லாமல் அங்கேயே தங்க வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. சிலர் பாங்குகளிலிருந்து பணம் எடுத்து கஜானாக்களில் கொண்டு வந்து செலுத்த வேண்டும் என்றால் 12 மணியாகிவிட்டது, இனி செலுத்த முடியாது என்று சொல்லிவிட்டால், அந்தப் பணத்தையும் கையில் வைத்துக்கொண்டு அங்கேயே தங்க வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. ஆகவே, கஜானாக்களும் 2 மணி வரையில் இயங்குவதற்கு வழிசெய்யும் வகையில் ஓர் உத்தரவு பிறப்பிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன்கள் மூலமாக நாட்டில் பல நல்ல காரியங்களை நிறைவேற்றி ஜனநாயகத்தை நாட்டில் வளர்த்துக்கொண்டிருக்கிறோம். புறம்போக்கு நிலங்களில் எல்லாம் மரங்களை நடுங்கள் என்று அரசாங்கத்திலிருந்து உத்தரவு போட்டிருக்கிறார்கள். அது நமது நாட்டினுடைய அபிவிருத்திக்கும் உணவு அபிவிருத்திக்கும், விறகுக்கும் நல்லது தான். இருந்தாலும் கூட, கிராமங்களுக்குப் பக்கத்திலுள்ள குடியிருப்பு மனைகளில் எல்லாம் தென்னங்கன்றுகளை நட்டுவிடுகிறார்கள். இதன் காரணமாக அரிஜன மக்கள், பிற்பட்ட சமூகத்தினர் இவர்களுக்கு குடியிருப்பு விஸ்தரிப்புக்குக் கஷ்டங்கள் ஏற்படுகின்றன. திருநெல்வேலியில் சில கிராமங்களில் பிற்பட்ட சமூகத்தினர்களுக்கு, அதாவது மறவர்கள் இனத்தவர்களுக்கு காலனி கட்டவேண்டும் என்று நத்தம் குடியிருப்பைப் போய் பார்த்தபோது, அத்தனை நிலங்களிலும் தென்னங்கன்றுகள் நடப்பட்டிருந்தன. இதனால் பல கஷ்டங்கள் ஏற்பட்டன. ஆகவே, தென்னங்கன்றுகள் நடுவது நல்லது என்றிருந்தாலும்,



30th January 1963] [திரு. ஆர். எஸ். ஆறுமுகம்]

இப்போதுள்ள இட நெருக்கடியான காலத்தில், குடியிருப்புக்கு எந்தவிதமான தடையும் இராத விதத்தில் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அரிஜன நலம் பற்றி கவர்னர் அவர்களுடைய உரையில் ஒன்றும் சொல்லப்படவில்லை என்றாலும், பட்ஜெட் நேரத்தில் இதைப்பற்றி விரிவாகச் சொல்லலாம் என்று தான் விடப்பட்டிருக்கிறது என்று எண்ணுகிறேன். அரிஜன நிதியிலிருந்து பஞ்சாயத்துக்களின் மூலம் ரோடுகள், ஸ்கூல்கள் போன்றவைகள் கட்டுவதற்கு உதவித் தொகைகள் கொடுக்கப்பட்டு வந்தன. இதனால் பல ரோடுகள், பள்ளிகள் ஏற்பட்டு வந்தன. இப்போது இந்த வேலைகளை எல்லாம் அங்கேயுள்ள பஞ்சாயத்துக்களே கவனித்துக்கொள்ளவேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே, இப்போது எல்லா பஞ்சாயத்துக்களுக்கும் இந்த அரிஜன நிதியிலிருந்து உதவி கிடைக்க முடியாததின் காரணமாக ரோடுகள், பள்ளிக்கூடங்கள் இவைகளை ஏற்படுத்த முடிவதில்லை. ஆகவே, அரிஜன நிதியிலிருந்து உதவித் தொகை கொடுப்பதற்கு, முன்னால் இருந்தது போலவே நிதி உதவி செய்து கொடுக்க வழி வகை செய்து கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, போதனாமுறை பயிற்சி பெறுகிற மாணவர்களுக்கு இவ்வாண்டு இதுவரை ஸ்டைஃபண்ட், ஸ்காலர்ஷிப்கள் கொடுக்கப்படவில்லை. இதன் காரணமாக, அவர்கள் சாமான்கள் வாங்குவதற்கும் சாப்பாட்டுக்கும் அவதிப்படுகிறார்கள். அவைகளை வருடக்கடைசியில் கொடுக்கலாம் என்றில்லாமல் சீக்கிரமாகவே கொடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், குடிதண்ணீர் திட்டத்திற்காக நாம் எத்தனையோ திட்டங்களை நிறைவேற்றி வருகிறோம். இப்போது நமக்கு வேண்டிய பொருளாதார சிக்கனத்தையும் முன்னிட்டு ஒரு யோசனை சொல்ல விரும்புகிறேன். சாதாரணமாக எல்லா கிராமங்களிலும் மின்சாரத்தின் உதவி கொண்டு ஓவர்-ஹெட் டாங்க் கட்டிக்கொள்கிறார்கள். அதே நேரத்தில் கிணறுகள் வெட்டுவதற்கும் திட்டம் போடுகிறார்கள். இரண்டும் ஒரே நேரத்தில் செய்கிறார்கள். இவ்விதம் கிணறுகள் வெட்டுவதற்கு திட்டமிட்ட NOON
பின்னால் ஓவர் ஹெட் டாங்க் கட்டினால் நஷ்டம் தான் ஏற்படும். ஆகவே, புதிதாகக் கிணறுகள் வெட்டுவதற்குப் பதிலாக எல்லா இடங்களிலும் ஓவர் ஹெட் டாங்க் கட்டுவதற்கு இருந்தால் அதை கவனித்து நடந்து கொள்ளுவது நல்லது என்று எண்ணுகிறேன்.

இந்த மாத ஆரம்பத்தில் திருநெல்வேலியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதின் காரணமாக பல குளங்கள், வாய்க்கால்கள் உடைந்து போயின. பல வீடுகள் வெள்ளப்பெருக்கால் சேதமடைந்தன. அந்த நேரத்தில் பி.டபிள்.யூ. டிப்பார்ட்மெண்டார், ரெவின்யூ அதிகாரிகள் எல்லோரும் நல்ல முறையில் உதவி புரிந்தார்கள். அவர்களுக்கு எல்லாம் பெருமையோடு பாராட்டுதல்களைத் தெரி

வித்துக் கொள்கிறேன். ஒன்று சொல்ல விரும்புகிறேன். அதாவது நன்றால் வெள்ளப்பெருக்கில் எந்த இடத்தில் உடைப்பு ஏற்பட்டதோ அதே இடத்தில் தான் இப்போதும் உடைப்பு ஏற்பட்டிருக்கிறது. உடைப்பு ஏற்படக்கூடிய இடங்களில் நல்ல முறையில் செங்கல் சிமிண்ட் கான்கிரீட் மூலம் கட்டவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இம்மாதிரி குறைகளை நீக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, எனக்கு இதில் பேசுவதற்கு சந்தர்ப்பம் தந்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொண்டு என் வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. எம். எஸ். மணி :** சட்டமன்றத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் கவர்னர் அவர்களுடைய உரையைப்பற்றி விவாதிக்கிறபொழுது ஒன்றை நாம் எல்லோரும் கவனத்தில் கொள்ளவேண்டும் என்று தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன். மறைந்த உலகப் பெரியார் காந்தியார் அவர்களுடைய நினைவுதினம் இன்று. இன்றையதினம் அவரை நினைத்துக் கொள்வதோடு மட்டு மல்ல, அவர் விட்டுச்சென்ற அறநெறியை உலகத்திற்குப் பரப்புவதற்கு நாம் தயாராக இருக்கிறோம் என்ற அளவில், திரா விட முன்னேற்றக் கழகச் சட்டமன்றக் கட்சியின் சார்பாக எங்கள் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கவர்னர், அவர்களுடைய உரையில் யுத்த நெருக்கடியைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். உள்ளபடியே இந்த யுத்த நெருக் கடியை ஆலோசித்து எங்களுடைய உயிர்ப் பிரச்னையாக இருக்கக் கூடிய எங்கள் கட்சிக் கொள்கையை ஒத்தி வைத்து இதற்கான பணியில் முழு ஆதரவைத் தந்து வருகிறோம். ஆனால் இப்படிப் பட்ட நேரத்தில் வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்சுவது போல் அருமை காங்கிரஸ் நண்பர்களில் சிலர் எல்லா பிரச்னைகளையும் ஒதுக்கி வைத்துவிட்டு ஒன்றாக சேர்ந்து வந்துவிட வேண்டும் என்று வற்புறுத்திக் கூறி வருகிறார்கள். உள்ளபடியே அவர் களுக்கு ஒன்று சொல்ல ஆசைப் படுகிறேன். மறைந்த பெரியார் காந்தியார் அவர்கள் சொல்லியதுபோல், காங்கிரஸ் கட்சியைக் கலைத்துவிட்டு கட்சிச் சார்பற்ற சர்க்கார் இந்த நாட்டில் நடக்க வேண்டும் என்று காங்கிரஸை அவர் இறப்பதற்கு முன்னால் கேட்டுக்கொண்டார்கள். அந்தக் கருத்தை . . . .

12-00 noon. **கனம் திரு. எம். பக்தவத்சலம் :** மகான் காந்தியடிகளுக்கு அஞ்சலி செலுத்துவதாகச் சொல்லி விட்டு, அவர்கள் சொன்னதைப் புரிந்துகொள்ளாமல், சொல்லாததைச் சொல்லுவது முறையல்ல. அப்படிச் சொல்லுவது மகானுக்கு அஞ்சலி செலுத்துவது அல்ல என்று தாழ்மையோடு தெரிவித்துக்கொள்கிறேன். காந்தியடிகள் மறைந்த நாள் வரையில் காங்கிரஸ் கட்சியின் வேலைகளில் பெரும் அளவுக்கு அக்கறை எடுத்து வந்தார்கள். அதிகமாகத் தெரிந்தவர்கள் அதை விட்டு விட்டு மற்றதைப் பேசட்டும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

**திரு. எம். எஸ். மணி :** எனவே, ஒரு அரசியல் கட்சியின் பேரால் இன்றையதினம் ஆட்சி நடைபெறுவது அனைவரும் அறிந்ததே. கட்சிச் சார்பற்ற சர்க்கார் என்று சொல்லும்போது, கட்சி சார்பற்ற



சர்க்கார் ஆட்சி நடத்துகிறோம் என்று சொன்னால், நாங்களும் அவர்கள் சொல்லுகிற யோசனையைப் பரிசீலிக்க வாய்ப்பாக இருக்கும் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். யுத்த நெருக்கடியைப்பற்றிச் சொல்லும்போது எனது அருமை நண்பர் கார்ச்சா கவுடர் அவர்கள் ஒரு மேற்கோள் காட்டினார்கள். இராமாயணத்தில் இராமன் தன்னுடைய காண்டீபத்தை 14 ஆண்டுகள் தோளிலிருந்து இறக்கவில்லை என்று குறிப்பிட்டார்கள். உண்மையிலேயே இராமாயணத்தைப் பற்றிச் சொன்னார்கள் என்று என்னால் கருத முடியவில்லை—இராமாயணத்தைப் படித்து விட்டுச் சொல்லுகிறார் என்று தான் நினைக்கிறேன். இராமனுக்கு காண்டீபம் இருப்பதாக நான் படித்ததில்லை. அர்ச்சுனனுக்குத் தான் காண்டீ பம் உண்டு, இராமனுக்கு கோதண்டம் என்று தான் படித்திருக் கிறேன். இது நமது அமைச்சருக்கு நல்ல முறையில் தெரியும். அவர் அதை மறுப்பார் என்று கருதுகிறேன். அவர் அப்படிச் சொல்லாத காரணத்தினால் நான் அதைப் பற்றிச் சொல்ல வேண் டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டு விட்டது..

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் அங்கத்தினர் அவர்கள் சொல்லுவதற்காகத்தான் அதை விட்டு வைத்தேன்.

**திரு. எம். எஸ். மணி :** அடுத்தபடியாக, யுத்த நெருக்கடியை உத்தேசித்து, தொழிலாளர்கள்—முதலாளிகள் பிரச்னையைப் பொருத்த அளவில் சுமுக நிலை ஏற்பட்டிருக்கிறது என்று கவர்னர் அவர்கள் குறிப்பிட்டார்கள். நாங்களும் தி.மு.க. தொழிற் சங்கத்தின் சார்பில் யுத்த நெருக்கடி தீரும் வரையில் எந்த வித வேலை நிறுத்தங்களும் ஆர்ப்பாட்டங்களும் செய்வதில்லை என்று உறுதி எடுத்துக்கொண்டிருக்கிறோம். ஆனால் இந்த நேரத்தில் அமைச்சர் கவனத்திற்கு ஒரு பிரச்னையைக் கொண்டுவர விரும்பு கிறேன். திருச்சியில் ஒரு பெரிய பஸ் முதலாளி ஒரு வருஷம் ஆகியும் இன்னும் கோர்ட்டில் கொடுத்த தீர்ப்பை அமுல் நடத்த வில்லை. கலெக்டரிடம் ரெக்கவரி பெட்டிஷன் போட்டும், ரூ. 2,500 அளவுக்கு பணத்தை ஒரு தொழிலாளிக்கு வாங்கிக் கொடுக்க முடியாத நிலை இருக்கிறது. இது போன்ற நிர்ப்பந்தம் வரும் போது நாங்கள் என்ன செய்ய முடியும்? ஆகவே, அமைச்சர் அவர்கள் கவனித்து இப்படிப்பட்ட நிலைமையை உருவாக்காமல் இருக்க அதிகாரிகளுக்குத் தெளிவாகச் சொல்லவேண்டுமென்று இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, ராணுவ உதவி பற்றிப் பேசும்போது, ராணு வத்தில் இருக்கிற பேர்களுக்கு மிகச் சிறந்த உதவியாக இரத்த தானம் கொடுக்க வேண்டுமென்று சொல்லுகிறார்கள். இரத்த தானம் கொடுக்க ஏராளமான பேர்கள் முன் வருகிறார்கள். அப்படிக் கொடுக்க முன் வருகிறவர்கள் யாரிடம் கொடுப்பது, எங்கே கொடுப்பது என்று தெளிவாக இல்லாமல் அப்படிப்பட்ட நிலை பல ஊர்களில் இருக்கிறது. அதைப் பற்றி அமைச்சர் அவர்கள் விளக்கமான ஒரு அறிக்கை கொடுத்தால் நலமாக இருக்கும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். திருச்சியை

எடுத்துக் கொண்டால் இரத்த தானம் கொடுக்கச் செல்லும்போது அரசாங்க மருத்துவ விடுதியில் "இங்கே ட்யூப் இல்லை" என்று சொல்லுகிறார்கள். அமைச்சர் அவர்கள் நல்ல முறையில் இது பற்றி ஒரு அறிக்கை கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மத்திய சர்க்கார் இன்றைய தினம் தங்கக் கட்டுப்பாட்டினைக் கொண்டு வந்திருக்கிறது. இந்த நேரத்திற்கு இந்தக் கட்டுப்பாடு அவசியம் தான். இராணுவ தளவாடங்கள் வாங்க தங்கம் அவசியம். இந்தக் கட்டுப்பாட்டின் காரணமாக திருச்சி ஜில்லாவில் எனது தொகுதியைப் பொருத்த வரையில் 15,000 தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். தமிழகம் பூராவிலும் 4 லட்சம் ஆபரணத் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. அது மட்டுமல்லாமல் செயற்கை வைரங்கள் செய்யக் கூடியவர்கள் இரட்டிப்பு மடங்கு பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதோடு அரசாங்கம் 3 லட்சம் ரூபாய் மூலதனம் போட்டு செயற்கைக் கல் தொழிற்சாலை ஒன்றை திருச்சியில் ஆரம்பித்திருக்கிறார்கள். அங்கு 1-½ லட்சம் ரூபாய் அளவுக்கு உற்பத்தி செய்யப்பட்ட செயற்கைக் கற்கள் தேங்கிக் கிடக்கின்றன. இந்தத் தொழிலாளர்களுக்கு நல்ல நிலைமையை உண்டுபண்ண நாம் முதலிலே நல்லவேலைத் திட்டத்தை உருவாக்க வேண்டும். திருச்சி நகரத்தைப் பொறுத்த வரையில் சமீபத்திலே நகைக் கடைகளில் இருக்கிற தங்கம் எவ்வளவு என்று கஸ்டம்ஸ் இலாகாவினர் பரிசீலனை செய்தபோது ஏறத் தாழ 50 லட்சம் ரூபாய் அளவுக்கு ஸ்டாக் இருப்பதாகத் தெரிகிறது. எனவே அவர்களும் தொழிலாளர்களுக்கு வேலை கொடுக்க முடியவில்லை. அந்த தொழிலாளர்களுக்கு வேறு வேலையும் கிடைக்கவில்லை. இந்த நிலையில் அவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் குறிப்பிடுகிறார்கள், "தங்கக் கட்டுப்பாட்டை நாங்கள் வரவேற்கிறோம், ஆனால் எங்களுக்கு மாற்றுத் தொழில் ஏதாவது கொடுங்கள், வேலை செய்யத் தயாராக இருக்கிறோம், இப்போது வேலை இல்லாமல் கஷ்டப்படுகிறோம்" என்று. மத்திய சர்க்காரோ அல்லது மாநில சர்க்காரோ புதிய தொழில் துவக்கும்போது அவர்களுக்கு முதலிடம் கொடுக்கவேண்டும், அவர்களுக்கு சலுகை கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறார்கள். அதுவும் தவிர, இராணுவத்தில் அல்லது போலீஸில் அல்லது மற்ற ஸ்தாபனங்களில் சேரும்போது சில முறைகள் வைத்திருக்கிறார்கள். அந்த முறைகளைக் கொஞ்சம் தளர்த்தினால் பெருவாரியான அளவில் அந்த வேலைகளில் சேர முடியும் என்று இந்த சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். 14 காரெட்டில் நகை செய்யலாம் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் அதில் உள்ள ஒரு சூழ்நிலையை மட்டும் இங்கே சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். 14 காரெட்டில் செய்யும்போது குளிர்ப் பிரதேசத்தில் அந்த நகையைப் போட்டுக் கொள்ளலாம். உஷ்ணப் பிரதேசத்தில் போட்டுக் கொள்ளும்போது களிம்பு ஏறி, காதிலும் மூக்கிலும் புண் ஏற்படும் நிலை உண்டாகும் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இந்த நிலை குளிர் பிரதேசத்தில் உண்டாகாது என்பதையும்





தெரிவித்துக்கொள்கிறேன். தங்கத்தில் செம்பு, வெள்ளி ஆகியவற்றைக் கலந்து தான் செய்ய முடியும். கற்கள் பதிக்க மெதுத் தன்மை வேண்டியிருக்கிறது. 14 காரெட்டில் இந்த மெதுத் தன்மை கெட்டு விடுகிறது. ஆகையால் கற்கள் பதித்து நகை செய்ய முடியாது இருக்கிறது என்று அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். இன்றைய தினம் திருச்சி நகரத்தைப் பொறுத்த வரையில் ஒரு நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஏழைத் தொழிலாளர்கள் வேலை இல்லாத காரணத்தினால், ஏற்கனவே செய்து வைத்திருக்கிற, வீட்டில் இருக்கக்கூடிய தங்க நகைகளை அடகு வைக்கலாம், அல்லது விற்கலாம், என்று கடைக்குச் சென்றால் அங்கே அவைகளை வாங்குவதில்லை. நகையை விற்க முடியவில்லை. 22 காரெட்டில் செய்து வைத்திருந்த சங்கிலி அறுந்து விட்டது என்று ரிப்போர் செய்தால் இப்போதைய சட்டப்படி ரிப்போர் செய்கிறவனைப் பிடித்துக் கொண்டால் என்ன செய்வது? இதையெல்லாம் மத்திய சர்க்காருக்கு மாநில சர்க்கார் எடுத்துச் சொல்லவேண்டுமென்று இந்த சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இறுதியாக, இத்தனை தொழிலாளர்களுடைய நிலையை அனுசரித்து இந்த மாமன்றம் அவர்களை கவனத்தில் வைத்து அவர்களுக்கு ஏதாவது வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு எனது உரையை முடித்துக் கொள்கிறேன்.

* திருமதி பி. கே. ஆர். லக்ஷ்மிகாந்தம் : கனம் தலைவர் அவர்களே, நமது மேன்மை தங்கிய கவர்னர் பெருமானார் உரைக்கு நன்றி தெரிவிக்கும் இந்த நிகழ்ச்சியிலே நானும் கலந்துகொள்ளக்கூடிய ஒரு வாய்ப்பைக் கொடுத்தமைக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். கவர்னர் பெருமானார் ஒவ்வொரு ஆண்டும் உரை நிகழ்த்துகிறார்கள். அதே மாதிரி இந்த ஆண்டும் உரை நிகழ்த்தியிருக்கிறார்கள். என்றாலும் மற்ற ஆண்டுகளுக்கும் இந்த ஆண்டுக்கும் பெருத்த வித்தியாசம் இருக்கிறது. மற்ற ஆண்டுகளில் சுதந்திர நாட்டிலே நாம் திட்டங்களை நிறைவேற்றுவதிலே கண்ணும் கருத்தும் கொண்டவர்களாக இருந்தபோது கவர்னர் பெருமானுடைய உரை நிகழ்ந்தது. ஆனால் இன்றைய சூழ்நிலை மிகவும் மாறியிருக்கிறது. அந்த சுதந்திரத்துக்கு எங்கே ஆபத்து வந்து விடுமோ என்ற சூழ்நிலையில், எவ்வாறு மக்கள் மனதை நம்முடைய சுதந்திரத்தைப் பாதுகாப்பதில் திருப்பவேண்டும் என்ற கண்ணோட்டத்துடனும், மேலும் நம்முடைய நாட்டுத் திட்டங்களை ஒன்று கூட குறைவுபடாமல் நிறைவேற்றினால்தான் சுதந்திரத்தைப் பாதுகாப்பதில் மக்கள் கவனம் முழுவதும் இருக்கும் என்ற கண்ணோட்டத்துடனும் இந்த உரை நிகழ்த்தப்பட்டிருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது. இன்னொரு விசேஷம் என்னவென்று கேட்டால், இது வரையில் மதிப்புக்குரிய திராவிட முன்னேற்றக் கழக அங்கத்தினர்கள் அனைவரும் அரசியல் அமைப்பிலே கவர்னர் அமைப்பு இருப்பதைத் தாம் ஒத்துக் கொள்ளவில்லையென்றும், மேலும் வட நாட்டிலிருந்து வந்த ஒருவரை நமது கவர்னராக நியமித்திருப்பதை ஒத்துக்கொள்ள

வில்லை என்றும் சொல்லி அவர்கள் கலந்துகொள்ளாமல் இருந்தார்கள். ஆனால் நாட்டினுடைய சூழ்நிலையை அனுசரித்து அவர்கள் தங்களுடைய கொள்கையையும் ஒதுக்கிவைத்துவிட்டு நாட்டினுடைய பாதுகாப்பு முயற்சிகளில் தீவிரமாக ஒத்துழைப்பு தந்துகொண்டுவருகிறார்கள். அதன் காரணமாக கவர்னர் அவர்களுடைய அழைப்பையும் ஏற்றுக்கொண்டு இந்த மாமன்றத்திலே கவர்னர் உரை நிகழ்த்தியபோது அவர்கள் அதில் கலந்து கொண்டது அனைவருக்கும் மகிழ்ச்சியைக் கொடுக்கிறது. அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் இந்த உரையிலே மிகவும் விறுவிறுப்பான முறையில் தற்காப்பு முயற்சிகளுக்காக செய்ய வேண்டிய அனைத்தையும் செய்திருக்கிறோம் என்று கூறி அவைகளுக்கு மக்கள் தங்களுடைய உயர்ந்த ஒத்துழைப்பையும், உறுதியான, சுறுசுறுப்பான ஒத்துழைப்பையும் கொடுத்திருப்பதற்காக தமிழக மக்களுக்கு நன்றி தெரிவித்திருக்கிறார்கள். அதனால் மக்களுடைய உற்சாகம் இன்னும் அதிகமாகும் என்பதில் சந்தேகமில்லை. தற்காப்பு முயற்சிக்காக செய்யப்படும் காரியங்களிலே தொண்டர் படை அமைப்பு, ஊர்க்காப்பு அமைப்பு ஆகிய அமைப்புகள் அமைக்கப்பட்டிருப்பதைப் பற்றியும் அவர்கள் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்கள். நாம் இன்னும் மேலும் மேலும் இந்த வேலைகளில் உற்சாகத்துடன் ஈடுபடவேண்டும். சுதந்திரத்தைக் காப்பாற்றுவதற்காகத் திட்டங்களை நிறைவேற்றுவதிலேதான் நம்முடைய நோக்கமெல்லாம் இருக்கவேண்டும் என்பதை வற்புறுத்திச் சொல்லும் முறையில் அவர்கள் உரை அமைந்திருக்கிறது என்று சொன்னால் அது மிகை ஆகாது.

நமது நாட்டில் உற்பத்தி அதிகரிக்கப்படவேண்டும். வெளிநாடுகளிலிருந்து நாம் வரவழிக்கின்ற ஒவ்வொரு பொருளும் நமது தேசத்தின் தற்காப்புக்காகத்தான் இருக்கவேண்டுமேயொழிய, மற்ற பொருள்கள் அனைத்தும் நம்முடைய நாட்டிலேயே செய்யப்படவேண்டும் என்ற முயற்சியிலே நாம் இருக்க வேண்டும். அதற்காக தொழில்களை உறுதிப்படுத்துவதிலும், தொழில்களை அதிகப்படுத்துவதிலும், உற்பத்தியை அதிகப்படுத்துவதிலும் எவ்வளவு கவனம் செலுத்தவேண்டுமோ அவ்வளவு கவனம் செலுத்தப்படும் என்கிற உறுதியையும் கவர்னர் அவர்களின் உரையிலே எடுத்துக்காண்பித்திருக்கிறார்கள். நமக்கு இப்பொழுது மின்சாரம் அதிகமாகத் தேவையாக இருக்கிறது. உணவு உற்பத்திக்கு மின்சாரம் வேண்டுமென்று விவசாயிகள் கேட்கிறார்கள். அதே போல தொழிற்சாலைகளில் செய்யப்படுகின்ற பொருள்களின் உற்பத்தியையும் அதிகரிப்பதற்கு மின்சாரம் வேண்டுமென்று அவர்களும் கேட்கிறார்கள். இந்தச் சூழ்நிலையில் நாம் எவ்வளவு மின்சாரம் உற்பத்தி செய்தாலும்கூட, மழையின்மையின் காரணமாக நீர் மட்டம் குறைந்திருப்பதால் ஓரளவுக்கு மின்சாரம் உற்பத்தி குறைவாக இருக்கிறது. அதனால் மின்சாரத்தைப் பொறுத்தவரையில் சில கட்டுப்பாடுகளும் தட்டுப்பாடும் செய்யவேண்டிய சூழ்நிலையிலே சர்க்கார் இருக்கிறார்கள். எனவே நெய்வேலியில் மூன்றாவது மின்சார உற்பத்தி யூனிட்டை சீக்கிரமாக நிர்மாணித்து முடிப்பதற்குத்





தேவையான சிப்பந்திகளை அவசரமாக சர்க்கார் கொடுத்து உதவி அதற்கு வேண்டி ஆவன செய்வது குறித்து நாம் எல்லோரும் சந்தோஷப்படுகிறோம். நாட்டு நிலைமைக்கு உகந்த முறையில், சூழ்நிலைக்கு உகந்த முறையில் கவர்னர் அவர்களின் உரையானது அமைந்திருப்பது பற்றி இந்த மன்றத்தில் இருக்கின்ற அத்தனை அங்கத்தினர்களும் சந்தோஷப்படுகிறவர்களாக இருக்கிறோம்.

பொற்கொல்லர்கள் பற்றி, அதாவது தங்க ஆபரணங்கள் செய்கின்ற தொழிலாளர்கள் பற்றி, பேசாதவர்கள் இந்த மன்றத்திலேயே இருக்கமாட்டார்கள் என்று நினைக்கிறேன். எல்லோரும் அதைப்பற்றிப் பேசியிருக்கிறார்கள். தங்கக் கட்டுப்பாட்டைப் பற்றி நான் எதுவும் கூற ஆசைப்படவில்லை. ஏனென்று கேட்டால் அதை நாங்கள் வரவேற்கிறோம். பெண்கள் எல்லாம் அதை எதிர்ப்பார்கள் என்று ஒரு சிலர் நினைக்கலாம். ஆனால் தியாகம் செய்வதிலே, நாட்டுத் தற்காப்பு முயற்சியிலே எந்த அளவுக்கு ஆண்களுக்கு தியாகம் செய்யக்கூடிய உரிமை இருக்கிறதோ அந்த அளவுக்கு தியாகம் செய்யக்கூடிய உரிமை பெண்களுக்கும் இருக்கிறது. அந்த உரிமையை விட்டுக்கொடுக்கமாட்டோம். ஆகவே தங்க ஆபரணம் என்ன, வைர ஆபரணம் என்ன எதை வேண்டுமானாலும் கொடுக்கத் தயாராக இருக்கிறோம். அதற்காக பெண்கள் தியாகம் செய்வதற்கு இன்றைக்கு தயாராக இருக்கிறார்கள் என்பதை பெண்கள் சார்பாக நான் இந்த மன்றத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இருந்தாலும்கூட, அதனால் பிழைக்கக்கூடிய தொழிலாளர்களுக்கு ஆபத்து வரும்போது அதை நாம் எடுத்துச்சொல்ல வேண்டியிருக்கிறது. அதற்காக அவர்களுக்கு அந்த வேலையைக் கொடுத்துத்தான் நிவாரணம் அளிக்கவேண்டும், அந்த சூழ்நிலையை உருவாக்கவேண்டும் என்று நான் சொல்லவில்லை. அவர்களுக்கு மாற்று வேலை கொடுக்கவேண்டும் என்பதுதான் என்னுடைய வேண்டுகோள். மாற்று வேலை என்று சொல்லும்போது அவர்கள் கற்றுக்கொண்டிருக்கின்ற வேலைக்கு அனுசரணையாக இருக்கிற வேலையாக இருந்தால் அவர்கள் அதை சுலபமாக கற்றுக்கொள்ளக்கூடிய நிலையிலே இருப்பார்கள். இப்பொழுது இண்டஸ்டிரியல் டிரெயினிங் ஸ்கூல் என்று சொல்லிப் பல பள்ளிக்கூடங்களை நாம் நிறுவியிருக்கிறோம், இன்னும் நிறுவப்போகிறோம். அம்மாதிரியான தொழிற் பயிற்சி கொடுக்கும்போது அவர்களுடைய வேலைக்கு உகந்த மாதிரி அதற்கு அடுத்தாற்போல் இருக்கக்கூடிய வேலைகளிலே அவர்களுக்கு பயிற்சி கொடுப்பது நலம் என்று நான் கருதுகிறேன். அப்படிச் செய்யவேண்டுமென்று நாம் நினைத்தாலும்கூட அதற்கு சில விதிகள், கட்டுப்பாடுகள் இருக்கின்றன. அம்மாதிரி பயிற்சி பள்ளிக்கூடங்களில் சேர்த்துக்கொள்ளப்படுபவர்கள் இரண்டு விதிகளுக்கு உட்பட்டு இருக்க வேண்டும். ஒன்று, அவர்களுக்கு கல்வித்தரம் எவ்வளவு இருக்க வேண்டுமென்பது. குறைந்த பட்சம் அவர்கள் 8-வது வகுப்பு வரைக்கும் படித்தவர்களாக இருக்க வேண்டும் என்ற ஒரு திட்டம் இருக்கிறது. அதைப்போலவே வயது வரம்பு ஒன்றும் இருக்கிறது. ஆனால் நகை செய்யும் தொழிலிலே ஈடுபட்டிருப்பவர்கள் அனைவருக்கும் படிப்புத் தரம்

அந்த அளவுக்கு இருக்கும் என்று சொல்ல முடியாது. ஆகவே, அவர்களுடைய தொழிலுக்கு அனுசரணையாக இருக்கின்ற தொழில்களில் பயிற்சி அளிக்கும் திட்டங்களில் அவர்களுக்கு விதி விலக்கு அளித்து, வயது சம்பந்தமாகவும், படிப்பு சம்பந்தமாகவும் விதிவிலக்கு அளித்து, அவர்களை அந்தப பயிற்சிப் பள்ளிகளில் சேர்த்துக்கொண்டு அவர்களுக்கு மாற்று வேலை கொடுப்பது நல மாகும் என்ற என்னுடைய கருத்தை நான் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். இன்னும் புதிய தொழிற்சாலைகளை நாம் ஏற்படுத்தும்போது இம்மாதிரி தொழிலாளர்களுடைய லிஸ்டை சர்க்கார் கலெக்டர்கள் மூலம் தயார் செய்து வைத்துக்கொண்டு அவர்களுக்கு மாற்று வேலை கொடுக்க வேண்டும். மாற்று வேலை கொடுப்பது ஒருபுறம் இருக்க, உடனடியாக நிவாரணம் அவர்களுக்குத் தேவை என்பது நமக்கு நன்றாக விளங்குகிறது. எப்படியாவது அவர்களுடைய குடும்பத்தினுடைய வயிற்றைக் கழுவுவதற்கு, அவர்களுக்கு உண்ண உணவு கிடைப்பதற்கு வேண்டிய வழிவகைகளை நாம் உடனடியாக செய்யவேண்டும். அதற்கு நம் சர்க்கார் பொறுப்பு எடுத்துக்கொண்டு ஏற்பாடு செய்யவேண்டுமென்று நான் மிகவும் பன்னிப் பன்னி கேட்டுக்கொள்கிறேன். முன்பு கைத்தறித்தொழிலாளர்களுக்கு அவ்வப்போது நாம் கஞ்சித் தொட்டிகள் ஏற்படுத்துவது போன்று இந்தத் தொழிலாளர்களுக்கும் கஞ்சித் தொட்டியை ஏற்படுத்தி வேண்டிய நிவாரணத்தை அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நாட்டிலே உணவுப் பொருள்களின் விலை ஏறவிடக் கூடாது, அப்படி விலை ஏறினால் மக்கள் சங்கடப்படுவார்கள், துன்பப்படுவார்கள் என்று கருதி கன்ஸ்யூமர் சொசைடிகள் என்ற கூட்டுறவு சொசைடிகளை நகரங்களில் நமது சர்க்கார் ஏற்படுத்தியிருக்கிறார்கள். மதுரையிலும்கூட அம்மாதிரி சுமார் ஆறு கடைகள் திறக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் அந்தக் கடைகளெல்லாம் ஜில்லா கூட்டுறவு மார்க்கெட்டிங் சொஸைட்டிகளின் மூலமாகத்தான் திறக்கப்பட்டிருக்கின்றனவே ஒழிய, உபயோகிப்போர்கள் சேர்ந்து கூட்டுறவு சங்கம் அமைத்துக்கொள்ளவேண்டுமென்று நினைத்தாலும் கூட அவர்களுக்குக் கொடுக்கப்படவில்லை. ஆகவே, அம்மாதிரி கன்ஸ்யூமர் சொஸைடிகளை அவர்களுக்குக் கொடுத்து உதவலாம் என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். மேலும் இதுபோன்று கூட்டுறவு சங்கங்களை அதிகரிப்பது நலம் என்று நான் கருதுகின்றேன். ஏனென்று கேட்டால் மதுரையைப் பொறுத்தவரையில் நான் பார்த்திருக்கிறேன், அந்தக் கடைகளில் நல்ல உணவுப் பொருள்கள் மலிவான விலைக்குக் கிடைக்கின்றன. ஆகவே இதுபோன்ற கடைகள் விஸ்தரிக்கப்பட வேண்டும். வார்டு ஒன்றுக்கு ஒரு கடையாவது இருந்தால் நலமாக இருக்கும். இப்பொழுது இந்தக் கடைகள் மூலம் 13 பொருள்கள் விற்கப்படுகின்றன. அவைகளோடுகூட இன்னும் சில பொருள்களையும் சேர்த்து விற்பதும் நன்மை பயக்கக்கூடியதாக இருக்கும்.

அடுத்தபடியாக, கூட்டுறவு சங்கங்களிலும் மற்ற தனிப்பட்டவர்களும் உற்பத்தி செய்யக்கூடிய கைத்தறித் துணிகள் விற்பனையாகாமல் தேங்கிக் கிடக்கின்றன. வட நாட்டுக்கு அனுப்பப்பட்ட



சரக்குகள், யுத்தத்தின் காரணமாக வியாபாரமே அங்கு ஸ்தம்பித்துவிட்டதால் அங்கே விற்பனையாகாமல் தேங்கிக் கிடக்கின்றன. வட நாட்டிற்கு அனுப்பப்பட்ட துணிகள் திரும்பி வந்துகொண்டிருக்கின்றன. அவைகளெல்லாம் விற்பனையாகாமல் தேங்கிக் கிடக்கின்றன. அப்படி அவைகள் தேங்காமல் அவைகளை விற்பதற்கு கூடிய சீக்கிரம் நாம் முயற்சி செய்யவேண்டும். அதில் நாம் துரிதமாக கவனம் செலுத்தி தேங்கிக் கிடக்கின்ற துணிகள் விற்பனையாவதற்கு வேண்டிய ஏற்பாடு செய்யவேண்டும். இல்லையென்றால் பொற்கொல்லர்கள் போன்று இந்தத் தொழிலாளர்கள் சம்பந்தமாக இன்னொரு 'பிராப்ளம்' வந்துவிடும் என்று நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

மேலும், நம்முடைய மாநிலத்திலே மதுவிலக்கு தொடர்ந்து நீடிக்கவேண்டுமென்று தெள்ளத் தெளிவாக நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் தெரிவித்ததற்காக எனது நன்றியை அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன். வயதுவந்தோர் திட்டத்தின் கீழ் பலருக்கு பென்ஷன் தொகை கொடுக்கப்பட்டிருக்கிறது. இன்னும் பலருக்கு பென்ஷன் தொகை கொடுக்கப்படவில்லை. விசாரணை செய்யப்படாமல் பல மனுக்கள் இருக்கின்றன. தாசில்தார் அவர்களுக்கு உத்தரவு போட்டு இவைகளையெல்லாம் சீக்கிரம் கவனித்து, பாக்கியுள்ளவர்களுக்கும் பென்ஷன் தொகை கிடைக்கும்படி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

*திரு. சோ. ஆறுமுகம்: சட்டமன்றத் தலைவர்கள் அவர்களே, இன்றைய தினம் கவர்னர் அவர்களுடைய உரைமீது பேசுகின்ற ஒரு வாய்ப்பினை எனக்குக் கொடுத்தமைக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். கவர்னர் அவர்களுடைய உரையில், மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் நல்ல முன்னேற்றம் அடைந்திருக்கிறோம் என்று குறிப்பிட்டிருந்தாலும், அந்த முன்னேற்றத்திற்கு காரணம் நமது விவசாயப் பெருங்குடி மக்கள் என்பதை நான் வலியுறுத்த விரும்புகிறேன். விவசாயப் பெருங்குடி மக்கள் எந்த அளவுக்கு நமது சர்க்காருடைய வேண்டுகோளுக்கு அடி பணிந்து, சர்க்காருக்கு ஆதரவு தருகிறார்களோ, எந்த அளவுக்கு அவர்கள் உற்பத்தியைப் பெருக்குகிறார்களோ, அதுவரையிலும் நாம் நம்முடைய தேசிய நெருக்கடியை சமாளிக்க முடியும். ஆகவே, அந்த அளவுக்கு விவசாயிகள் முன்வர வேண்டுமென்று நேருஜி அவர்கள்கூட வற்புறுத்தியிருக்கிறார்கள். இந்த நேரத்தில், அப்படிப்பட்ட விவசாயிகளைப் பாதிக்கும் வகையில் நன்செய் நிலங்களுக்கும், புன்செய் நிலங்களுக்கும் அதிக அளவுக்கு வரி விதிப்பது, நியாயம்தானா என்பதை சற்று யோசித்துப்பார்க்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இன்றைய தினம் விவசாயப் பெருங்குடி மக்கள் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குத் தேவைப்படும் உரங்கள் கிடைப்பதே அரிதாக இருக்கிறது. விவசாயத்திற்காக அவர்கள் செலவு செய்கிற அளவுக்குக்கூட அவர்களுடைய வருமானம் உயராமல் இருக்கின்ற நேரத்தில், மேலும்

[திரு. சோ. ஆறுமுகம்] [30th January 1963

அவர்கள் மீது வரி விதிப்பது அவ்வளவு நல்லதல்ல என்பதைத் தான் நான் வலியுறுத்த விரும்புகிறேன். தேசிய நெருக்கடி நிலைமையை முன்னிட்டு ஒரு புறம் அவர்களை நாம் ஊக்குவிக்கிறோம்; மற்றொரு புறம் அவர்களைத் தாக்கும் முறையில் வரி விதிக்கிறோம். இது எப்படியிருக்கிறதென்றால், குழந்தையை தொட்டிலில் போட்டு தூங்குவதற்காக தொட்டிலை ஆட்டிவிட்டு, பின்னர் அது தூங்கக்கூடாது என்று நினைத்து அதைக் கிள்ளிவிடுவதுபோலத் தான் இருக்கிறது. 'விவசாயிகளே, நீங்கள் எந்த அளவுக்கு உற்பத்தியைப் பெருக்குகிறீர்களோ, அந்த அளவுக்குத்தான் நெருக்கடி நிலைமையை சமாளிக்க முடியும்' என்று சொல்லிவிட்டு, அதன் பிறகு அவர்கள் மீதே வரியைச் சுமத்துவது அவ்வளவு நல்லதல்ல. ஆகவே, இந்த வரி விதிப்பை மறு பரிசீலனை செய்துகொண்டு, பட்ஜெட் விவாதத்தின் போது கொண்டுவரலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்பொழுது பென்ஷனுக்கான வயது 58 ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது. இது கூடாது என்றுகூட நான் சொல்லுவேன். வயதை 58 ஆக உயர்த்த வேண்டியிருந்தால், 25 வயதிற்குள்ளேயே சர்க்கார் பணியில் சேர வேண்டுமென்று இருக்கின்ற விதியை மாற்றி 28 வயது வரையில் சேரலாம் என்று நம்முடைய மாநில சர்க்கார் மத்திய சர்க்காருக்குச் சிபாரிசு செய்து அனுப்பவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஊர்க்காவல் படைகளை நாம் இப்பொழுது அமைத்து வருகிறோம். அந்தப்படை என்ன பணிகள் செய்யவேண்டுமென்பதைப்பற்றி தெளிவாகக் குறிப்பிடவில்லை. கிராமத்திலே அமைக்கப்படுகின்ற தொண்டர் படைக்கு பக்கத்திலுள்ள போலீஸாரைக் கொண்டு மாதம் ஒரு முறையாவது துப்பாக்கிப் பயிற்சி கொடுப்பதற்கு வழிவகை செய்தால்தான் கிராமத் தொண்டர் படைக்கு ஒரு உற்சாகம் ஏற்படும். ஆகவே அப்படிப்பட்ட பயிற்சி கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாய உற்பத்தி கமிட்டிகள் அமைத்திருக்கிறோம். அந்தக் கமிட்டிகள் சொல்லுகின்ற யோசனைகளை தாசில்தாரோ அல்லது கலெக்டரோ நன்கு பரிசீலனை செய்து அவற்றிற்கு முக்கியத்துவம் கொடுக்கக்கூடிய ஒரு சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டும். அப்படி ஒரு முறையை ஏற்படுத்தினால்தான் அந்த உற்பத்தி கமிட்டிகள் கிராமங்களிலே பணி புரிகின்ற நேரத்தில், அவர்கள் சொல்லுகின்ற யோசனைகளை சர்க்கார் உடனடியாக கவனிக்கிறார்கள், ஆகவே இந்தக் கமிட்டியில் தொடர்ந்து பணியாற்றவேண்டும், விவசாய உற்பத்தியில் அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டுமென்ற ஆர்வம் ஏற்படும். அதன்மூலமாகத்தான் நல்ல முறையில் இந்தக் கமிட்டிகள் பணி புரிய முடியும் என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, பிரசாரப் பணி கமிட்டி ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பிரச்சாரப் பணி கமிட்டிக்கு சர்க்கார் பத்திரிகைகளை அனுப்பவேண்டும். தேச ஒற்றுமையை வலியுறுத்து



30th January 1963] [திரு. சோ. ஆறுமுகம்]

கிற நல்ல பத்திரிகைகளை சர்க்கார் இந்த விளம்பரக் கமிட்டிகளுக்கு அனுப்பி வைக்கவேண்டும். அப்படி நல்ல பத்திரிகைகளை அனுப்பிவைத்தால்தான், அவைகளிலிருந்து கிடைக்கின்ற செய்திகளை அந்தக் கமிட்டி நன்கு புரிந்துகொண்டு மக்களிடத்திலே பரப்புவதற்கு உதவியாக இருக்கும்.

இப்படிப்பட்ட கமிட்டிகள் மூன்று அமைத்திருக்கிறோம். கிராமங்களிலே இருக்கின்ற பஞ்சாயத்துக்களும், பஞ்சாயத்து யூனியன்களும் நல்ல முறையில் அக்கறை எடுத்துக்கொண்டிருக்கின்றன. ஆனால் பொது மக்களிடையே உற்சாகம் அதிகம் ஏற்படாமல் இருக்கிறது. கிராமங்களில் தொண்டர் படை நிறுவுவதிலே மக்களுக்கு சந்தேகம் ஏற்பட்டு வருகிறது. எங்கே ஒரு பெரிய சண்டை ஏற்பட்டுவிட்டால் அந்த சமயத்தில் கிராமத்திலே இருக்கிற தொண்டர் படையை போர்க்களத்திற்கு அனுப்பிவிடுவார்களோ, ஆகவே இந்த தொண்டர் படையில் சேரக்கூடாது என்ற எண்ணம் மக்களிடையே பரவி வருகிறது. ஆகவே இப்படிப்பட்ட கருத்துக்களுக்கு இடம் கொடுக்காமல் இருப்பதற்கு சர்க்கார் ஒரு அறிக்கையை வெளியிடவேண்டும். கிராமத்திலே அமைக்கப்படும் தொண்டர்படை அந்தந்த கிராமங்களிலே குழப்பங்கள் ஏற்படாமல் இருப்பதற்கும், தங்களைத் தாங்களே காப்பாற்றிக் கொள்வதற்கும், ஊரைக் காப்பாற்றிக்கொள்வதற்கும்தான் அவசியமாக இருக்கும் என்று நிலைமையை தெளிவுபடுத்தி ஒரு அறிக்கை வெளியிட்டால், அதன் பிறகு ஏராளமான கிராம மக்கள் இந்தப் படையிலே சேர முன் வருவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

முக்கியமாக, விவசாயிகளின் மீது வரி போடுவது நல்லதல்ல என்பதை கனம் அமைச்சர் அவர்களுக்கு வலியுறுத்திச் சொல்லி விரும்புகிறேன். நான் பஞ்சாயத்துத் தலைவன் என்ற முறையில் மக்களை அணுகி இந்த தேசிய பாதுகாப்புக் கமிட்டியில் சேருங்கள் என்று சொல்லுகிற நேரத்தில் சர்க்கார் வரி போடுவதை எங்களால் எதிர்க்க முடியவில்லை, நாங்கள் சொல்லுவதை இந்தச் சர்க்கார் கேட்கவில்லை என்றெல்லாம் சொல்லுகிறார்கள். இந்தக் கமிட்டியில் சேர்ந்தால் சர்க்கார் கடைப்பிடிக்கின்ற கொள்கைகளுக்கு நாங்கள் கட்டுப்படவேண்டியவர்கள், ஆகவே இதில் சேருவதற்கு எங்களுக்கு இஷ்டமில்லை என்று சொல்லுகிறார்கள். அதே நேரத்தில் கிராமத்திலுள்ள விவசாய பெருங்குடி மக்கள்தான் இந்தப் பாதுகாப்பு கமிட்டிகளில் அங்கம் வகித்து வருகிறார்கள். ஆகவே, அவர்கள் மீது வரி போடுவது நல்லதுதானா என்பதை தயவு செய்து சிந்தித்துப் பார்த்து, மறு பரிசீலனைக்கு விட்டு, இந்த வரியை நீக்கி விடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக, சேலம் மாவட்டத்திலே ஒரு மருத்துவக் கல்லூரியை நிறுவ வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. எம். பி. முத்துக்கருப்பண்ணசாமி கவுண்டர்: சபைத் தலைவர் அவர்களே, கவர்னர் பெருமானுடைய உரைக்கு நன்றி செலுத்தும் வகையில் சில வார்த்தைகள் நான் பேச விரும்புகிறேன்.

[30th January 1963

[திரு. எம். பி. முத்துக்கருப்பண்ணசாமி கவுண்டர்]

1961-62-ம் ஆண்டில் கவர்னர் பெருமான் நிகழ்த்திய உரையில், நம் நாட்டில் லட்சியங்களை நல்ல முறையில் பூர்த்தி செய்யவேண்டுமென்று கூறியிருந்தார்கள். இவ்வாண்டில் ஒரு முக்கியமான சம்பவம் ஏற்பட்டுவிட்டது. அதாவது சீனர்கள் நமது நாட்டின் மீது படையெடுத்ததன் காரணமாக நாட்டில் ஒரு நெருக்கடி நிலைமை ஏற்பட்டிருக்கும் சூழ்நிலையில் கவர்னர் அவர்கள் தற்போது உரை நிகழ்த்த வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. சென்ற ஆண்டில் எதிர்க் கட்சியைச் சார்ந்த சில கனம் அங்கத்தினர்கள் கவர்னர் உரையில் கலந்துகொள்ளவில்லை. பல வருஷங்களாகவே அவர்கள் கலந்துகொள்ளாமல் தான் இருந்திருக்கிறார்கள். ஆனால் இந்த நெருக்கடியான நிலைமையில், நம் நாட்டை எப்படியும் காப்பாற்ற வேண்டும், அன்னியனுக்கு இடம் கொடுக்கக் கூடாது என்ற காரணத்தினால், அவர்கள கட்சி பேதத்தையும், கிளர்ச்சியையும் ஒதுக்கி வைத்துவிட்டு, எல்லோரும் ஒற்றுமையாக இருந்து நாட்டை காப்பதற்கான வழி வகைகள் என்ன என்ன என்பதை இந்தச் சட்ட மன்றத்தில் கூற முற்பட்டிருக்கிறார்கள். அதைக் கண்டு நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். அதற்காக அவர்களை நான் பெரிதும் பாராட்டுகிறேன்.

சீனர்கள் முன்னேறி வந்தாலும், வராமலிருந்தாலும், நமது நாட்டை எப்படியும் நல்ல முறையில் ஸ்திரப்படுத்த வேண்டும் என்பதுதான் கவர்னருடைய உரையிலிருந்து தெரிய வருகிறது. நாட்டின் அபிவிருத்தித் திட்டங்கள் முக்கியத்துவம் பெற்றுவிட்டன. சில திட்டங்களில் தடையும் ஏற்பட்டுள்ளது. எல்லா அபிவிருத்தித் திட்டங்களிலும் முக்கியமானது விவசாய அபிவிருத்தித் திட்டம். நமது தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில், பெரிய நீர்ப்பாசனத் திட்டங்களையெல்லாம் நாம் நிறைவேற்றிவிட்டோம். சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களில், கிணறு வெட்ட மானியங்கள் கொடுத்து உதவுவது என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது. ஆனால், சிறிய திட்டங்கள் இன்னும் நடைபெறாமல் இருக்கின்றன. அவை நடைபெற நாளாகும். மானியங்கள் கொடுத்து, கடன்கள் கொடுத்து கிணறுகள் வெட்டி விவசாய உற்பத்தியை அதிகமாக்க வேண்டுமென்று நினைத்தாலும், அவை பூர்த்தியடைய இன்னும் நான்கு வருஷங்களாகிவிடும். ஆனால் அதற்குள்ளாக நஞ்சைக்கும், புஞ்சைக்கும் வரியை அதிகப்படுத்தப் போவதாகத் தெரிகிறது. சென்ற ஆண்டிலும் வரி விதித்தார்கள். அதையும் மக்கள் ஏற்றுக்கொண்டு செலுத்தி வந்தார்கள். தற்போது அதை இன்னும் அதிகப்படுத்தப் போவதாகத் தெரிகிறது. அப்படி அதிகமாக வரி விதிப்பதாயிருந்தால், அதனால் விவசாயிகளுக்கு மிகவும் பாதகம் ஏற்படும். விவசாயிகள் ஏற்கெனவே பல வழிகளில் வரி செலுத்திக்கொண்டே வருகிறார்கள். பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன்கள் இவைகளுக்குப் பல வரிகளையும், கல்வி செஸ் போன்ற வரிகள் செலுத்துகிறார்கள். யுத்த நெருக்கடி காரணமாக மின்சாரம் உபயோகித்தாலும் உபயோகிக்காவிட்டாலும், அவர்கள் வரி செலுத்திக்கொண்டுதான் வருகிறார்கள். அதிக வரி செலுத்துகிறார்களே தவிர அதற்



30th January 1963]

[திரு. எம். பி. முத்துக்கருப்பண்ணசாமி கவுண்டர்]

கேற்றபடி, அதிக வருமானம் விவசாயிகளுக்குக் கிடையாது. என்னுடைய தொகுதியாகிய, கோயில் பாளையம் தொகுதியில் புஞ்சை, நஞ்சை, தோட்டம் என்ற பிரிவுகள் இருக்கின்றன. ஆனால், அரசாங்கம் வரி வசூலிக்கும்போது, நஞ்சைக்கும், புஞ்சைக்கும், தோட்ட நிலத்திற்கும் சமமாகவே வாங்குகிறார்கள். நஞ்சை நிலம் என்பது ஆற்றுப் பாசனம் உள்ள இடம். அதிக மழை பெய்த காலங்களில் ஓடைகளில் தண்ணீர் வந்தால், அதைக் கொண்டு சில புஞ்சை நிலங்களில் நெல் விளைச்சல் ஏற்படலாம். அந்தத் தண்ணீர் மூன்று மாதத்திற்குத்தான் கிடைக்கும். பிறகு, இரண்டு மாதங்களுக்குக் கிணற்று நீரை இறைத்துத்தான் அந்த மகசூலை எடுக்கவேண்டியிருக்கிறது. அப்படியிருந்தும், நஞ்சை நிலத்திற்கு விதிக்கப்படும் அதிகத் தீர்வைதான் இப்படிப்பட்ட புஞ்சை நிலங்களுக்கும் விதிக்கிறார்கள். இதை நமது அமைச்சர் அவர்கள் நன்கு ஆராய்ந்து பார்த்து எந்த எந்த இடம் நஞ்சை நிலம், எந்த எந்த இடம் புஞ்சை நிலம் எந்த இடத்தில் தண்ணீர் இறைத்து இப்படி நஞ்சைப் பயிர் வைக்கப்படுகிறது என்பதைக் கவனித்து, இடத்திற்குத் தகுந்தாற்போல் வரி விதிக்க ஏற்பாடு செய்ய வேண்டும். அப்படி இல்லாமல், எல்லா இடங்களுக்கும் உயர்ந்த பட்ச வரி விதிப்பது தடுக்கப்படவேண்டும் என்று நான் மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

விலைவாசி குறைக்கப்படவேண்டுமென்று பேசிக்கொண்டிருந்தார்கள். ஆனால், விவசாயிகளின் நிலைமையை எடுத்துக்கொண்டால், முந்திய போகத்திலே கூட, நிலக்கடலை விவசாயம் பாதிக்கப்பட்டுவிட்டது. தற்போது, பருத்தி, புகையிலை விவசாயங்களும் பாதிக்கப்பட்டிருக்கின்றன. இந்த நிலைமை என்னுடைய தொகுதியில் ஏற்பட்டிருக்கிறது. விளைபொருள்களின் விலை குறையவேண்டும் என்று சொல்லும்போது, விவசாயக் கூலி அதிகமாகி இருக்கிறது. மற்ற சாதனங்களின் விலையும் அதிகமாகியிருக்கிறது. "விலைவாசியைக் குறைத்து விடு" என்று சொல்லி விளைபொருள்களின் விலையை ஒரு புறம் குறைத்து, மற்றொரு புறம், விவசாயிகள் வாங்கவேண்டிய பொருள்களின் விலை உயர்வாகவே இருந்தால், விவசாயிகளின் நிலை என்ன ஆகும் என்று யோசிக்க வேண்டும். அதோடு வரியையும் அதிகமாக விதித்தால் விவசாயமே செய்ய முடியாத நிலைமையில்தான் தவிக்க நேரிடும். ஆகையால், நமது அமைச்சர் அவர்கள் நன்றாக யோசித்து, இனிமேல் போடக்கூடிய வரியைப் போடாமலும், ஏற்கனவே போட்டிருக்கும் எல்லா வரிகளைக் குறைக்கவும் ஆவன செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பம்ப் செட் கடன் விவசாயிகளுக்கு கூட்டுறவு சொஸைட்டி மூலமாகக் கொடுத்தால், அதை ஐந்து வருஷங்களில் திருப்பித் தரலாமென்று இருக்கிறது. ஆனால், பஞ்சாயத்து யூனியன் மூலமாகக் கொடுத்தால் மூன்று வருஷ தவணைதான் இருக்கிறது. இதைப்பற்றி நான் முன்பும் இந்தச் சட்ட மன்றத்தில் எடுத்துச் சொல்லியிருக்கிறேன். அது இப்பொழுது என்ன நிலையில் இருக்

இறது என்று தெரியவில்லை. மூன்று வருஷ கெடு இருப்பதைக் குறைந்தது ஐந்து வருஷக் கெடுவாக உயர்த்திக் கொடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மது விலக்கை மற்ற மாநிலங்களில் ரத்து செய்யவேண்டுமென்று சொல்லிக் கொண்டிருந்தார்கள். ஆனால், நமது தமிழ்நாட்டில், நமது முதலமைச்சர் அவர்கள், மது விலக்கை ரத்து செய்யப் போவதில்லை என்று வன்மையாகக் கண்டித்துச் சொல்லிவிட்டார்கள். அதை நான் பெரிதும் பாராட்டுகிறேன். மது விலக்கு எடுக்கப்பட்டு விட்டால், கிராமப் புறங்களில் பெரிய தொல்லைகளும் தகராறுகளும், திருட்டுக்களும் ஏற்படக்கூடும். கிராமங்களில் கட்சிகளும், கலகங்களும் ஏற்பட்டு பெருந்த தொல்லைகள் ஏற்படக் கூடும், இப்பொழுது மது விலக்குத் திட்டம் அமுலில் இருக்கும் போது மட்டும் கள்ளச் சாராயம் காய்ச்சப்படுவதில்லையா என்று ஒரு சிலர் கேட்கக் கூடும். இருந்தாலும், இன்றைக்குத் திருட்டுத் தனமாகத்தான் செய்யவேண்டும். குடித்துவிட்டு வெளியே வந்தால் போலீசார் பிடித்துக்கொள்ளுவார்களோ என்ற பயம் இருக்கிறது. அச்சம் ஏற்படுகிறது. அதனால், பகிரங்கமாக யாரும் குடித்துவிட்டு வர முடியாத நிலையில் இருக்கிறார்கள். மதுக் கடைகளை மீண்டும் திறந்துவிட்டால் , பகிரங்கமாகக் குடித்துவிட்டு, எந்த ஒரு கெட்ட செய்கையையும் செய்யக் கூடிய நிலை ஏற்பட்டுவிடும். அப்படிப்பட்ட நிலைமை ஏற்படுவதை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன்.

அடுத்ததாக, நகைத்தொழிலாளர்களுடைய நிலைமை. 14 காரட் தங்கத்தில் தான் நகைகள் பண்ணவேண்டுமென்று கட்டுப்பாடு கொண்டு வந்திருப்பது பற்றி நான் பெரிதும் பாராட்டுகிறேன். ஆனால் அந்த நகைகளைச் செய்து வந்த தொழிலாளர்கள் இதனால் பாதிக்கப்படாமல் நாம் பார்த்துக்கொள்ள வேண்டும். அவர்கள் இதுவரை ஒரு கலையாக—அந்த நகைத் தொழிலில் மிகவும் நுட்பமாக, நுணுக்கமாகப் பல வேலைகளைச் செய்து வந்திருக்கிறார்கள். அவர்களுக்கு மாற்றுத்தொழில் எதையாவது தரமுடியும் என்று சொல்ல முடியாது. இதுவரையில் அவர்கள் செய்து வந்த தொழிலுக்கு ஏற்ற வகையில் அவர்களுடைய ஆற்றல், சக்தி இவற்றுக்கு ஏற்ற வகையில் மாற்றுத்தொழில் கொடுக்க அரசாங்கம் சிந்தனை செய்யவேண்டும். விவசாயிகளாக இருந்தால் பாவாயில்லை. எந்தத் தொழிலிலும் ஈடுபடுவார்கள். ஆனால் நகைத்தொழிலாளர்கள் அப்படியில்லை. ஆகவே அவர்களுக்குச் சிரமம் ஏற்படாத வகையில் தக்க ஏற்பாடு செய்யவேண்டும் என்று கனம் அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன். இந்தச் சந்தர்ப்பத்தில் பேச எனக்கு அனுமதி தந்த கனம் தலைவர் அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. ஆர். நாராயணன் :** கனம் சட்டமன்றத் தலைவர் அவர்களே, வணக்கம். இந்தச் சட்ட மன்றத்திலே எனக்கு முன் பேசிய சில அங்கத்தினர்கள் கவர்னர் உரையைப் பாராட்டியும், 



அவரை வாழ்த்தியும் பேசினார்கள். ஆனால் நான் கவர்னர் அவர்கள் உரையைப் பாராட்ட வேண்டிய கடமையிலும், பாராட்ட முடியாவிட்டாலும் ஏற்றுக்கொள்ளவேண்டிய நிலையிலும் இருக்கிறேன். தகப்பன், பிள்ளை என்றால், தகப்பன் செய்கிற காரியம் தவறாக இருந்தாலும் எப்படி பிள்ளை, தகப்பனைக் கண்டிக்க முடியாதோ அதே தன்மையில் தான் நான் இன்றைய தினம் அரசாங்கம் செய்கிற தவறான காரியங்களைக் கண்டிக்கவும் முடியாத நிலைமையில் இருக்கிறேன். அரசாங்கம் ஒரு திட்டத்தைக் கொண்டுவந்து அதைத் சரிவர நிறைவேற்ற தவறுகின்ற போதும் அதைத் தவறு என்று பேச இன்றைக்கு முடியவில்லை.

நம்முடைய அரசாங்கம் முதல் ஐந்தாண்டுத் திட்டம், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் என்று பல திட்டங்களை நிறைவேற்றியிருக்கிறார்கள். இவற்றின் மூலம் மக்களுக்கு ஏற்பட்டுள்ள நன்மைகள் என்ன என்று ஆராய்ந்து பார்க்கவேண்டும். ஆங்காங்கே ரோடுகள் போடவில்லையா, குடிதண்ணீர் வசதி செய்து கொடுக்கப்படவில்லையா, இவையெல்லாம முன்னேற்றம் இல்லையா என்று கேட்கலாம். நாட்டு மக்களுக்காக இந்த அரசாங்கம் போட்டுள்ள அபிவிருத்தித்திட்டங்களைப்பற்றி எல்லாம் சில நூல்களின் மூலமாக மக்களுக்குப் பிரசாரம் செய்தும் வருகிறார்கள். ஆனால் நாங்கள் இதை நன்றாக எடுத்துச் சொல்ல முன் வருகிறபோது எதிர்க்கட்சிக்காரர்கள் சொல்கிறார்கள் என்று ஆத்திரப்படாமல் இத்திட்டங்களை எவ்வாறு போட்டு பயன் இல்லாமல் செய்கிறோம் என்பதை அரசாங்கம் சிந்திக்கவேண்டும். குடி தண்ணீர் திட்டம் தேவைப்படுகிற இடத்தில் குடிதண்ணீர் திட்டம் கொண்டுவரப்பட்டால் நல்லது. குடிதண்ணீர் திட்டம் அபிவிருத்தித் திட்டம் என்றாலும்கூட அதைக் காவேரிப் பாசனம் உள்ள இடத்தில் போடுவது சிறப்பான பயனை அளிக்குமா என்பதைச் சிந்திக்கவேண்டும். பெரம்பலூர் வட்டாரத்தில் சின்னாறு நீர்த் தேக்கம் ஒன்று ஏழு லட்சத்து இருபத்திமூவாயிரத்து நூற்று நாற்பத்திரண்டு ரூபாய் செலவில் போடப்பட்டது. அந்த நீர்த் தேக்கம் அமைக்கப்பட்டு இரண்டு ஆண்டுகள் ஆகின்றன. அதனால் பாசனம் அடைந்த பூமி எவ்வளவு? எந்த எந்தப் பிரதேசம் எத்தகைய நன்மையைப் பெற்றிருக்கிறது? என்பதைப் பற்றிய விவரங்களைத் தெரிந்து கொள்ள ஒரு கேள்வி போட்டேன். அதற்கு கனம் அமைச்சர் அவர்கள் அளித்திருக்கும் பதிலில் மொத்தம் 716 ஏக்கர் பாசன வசதி பெறலாம் என்றாலும் இதுவரையில் 270 ஏக்கரே பாசன வசதி பெற்றிருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். பாக்கி நிலங்கள் ஏன் சாகுபடிக்கு வரவில்லை? இதைப் பற்றி ஆராய்ந்தார்களா?

பெரம்பலூர் வட்டாரத்தில் வேப்பூர் யூனியன் என்று சொல்லக் கூடிய பிரதேசத்தில் ரோடு வசதி செய்துகொடுப்பது என்றால் 10 ஆண்டுகளில் கூட முடியாது, அப்பேர்ப்பட்ட மண்வளமுள்ள இடம். செந்துறை வட்டாரத்தை எடுத்துக்கொண்டால் முதல் நாள் மழை பெய்து மறு நாள் மண்வெட்டிப்போட்டால் கூட மறுநாள் இறுகிவிடும். இந்த பூமியின் அமைப்பு இப்படி. இப்படிப் பட்ட பிரதேசத்திற்குப் பல இடங்களில் சில சில இயற்கை நிலை

களும் மாறி இருக்கின்றன. நாம் ஒரு திட்டத்தை வகுக்கும்போது அந்தத் திட்டத்தின் இயற்கையை நன்றாக உணர்ந்து அதற்கு ஏற்றபடி திட்டம் வகுப்பதில்லை.

சாதாரணமாக, இப்போது உடையார் பாளையத்தையும் பொன்பரப்பியையும் எடுத்துக் கொண்டால், அங்கே குடிதண்ணீர் வசதி மிகவும் இன்றியமையாததாகும். தேசிய பாதுகாப்பு நிதிக்குப் பணம் வசூல் செய்ய கனம் அமைச்சர்கள் வந்திருந்தபோது கூட அங்குள்ள குடிதண்ணீர் நிலைமையை நேரில் அறிந்திருக்கலாம். தண்ணீர் குடித்தால் எரும்பன்லாவது வயிற்றில் வண்டல் படியும். உணவுப்பொருள்களைவிட அந்தப் பகுதியில் குடிதண்ணீர் மிகவும் அவசியம்.

சென்ற சட்டசபையில் கூட திரு. விஸ்வநாதன் அவர்கள் இதைப்பற்றி பல முறை சொல்லியிருக்கிறார்கள். அதற்கடுத்தாற்போல திரு. ராமலிங்கம் அவர்கள் பலமுறை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள், நானும் பலமுறை சொல்லியிருக்கிறேன். பல கேள்விகள் கேட்டிருக்கிறேன் அந்தப் பிரதேசத்திற்கு உடனடியாக குடிதண்ணீர் வசதி செய்துதரப்படவேண்டும் என்று ஏதோ சில போரிங் பம்புகள் வைத்தார்கள் என்றால் அது ஒரு நாள் தண்ணீர் வருகிறது. பல நாள் வருவது இல்லை. தேசிய நெருக்கடி காரணமாக உடையார் பாளையம் தாலுக்காவில் குடிதண்ணீர் திட்டத்தை எடுத்துக்கொள்ள முடியாது என்று சொல்வது சரியல்ல. எப்படியாகிலும், தேசிய நெருக்கடி நிலைமை இருந்தாலும்கூட, இத்திட்டத்தை நிறைவேற்ற வேண்டும். அந்தப் பகுதி மக்கள் குடிதண்ணீர் வசதி இல்லாத காரணத்தினால் நாம்புச் சிலந்தி வியாதியினால் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். கை கால் முடக்கப்பட்டு தடியூன்றி நடக்கிறவர்கள் பலர். அதோடு யானைக்கால் வியாதியும் அந்தப் பகுதியில் பரவி வருகிறது. எனவே உடனடியாக இவ்வாண்டாவது அப்பகுதிக்கு குடிதண்ணீர் வசதி செய்து கொடுக்கத் தக்க ஏற்பாடு செய்ய வேண்டுமாய் கனம் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

தென்னாற்காடு ஜில்லாவை எடுத்துக்கொண்டால் ஏமனேரி நீர்ப்பாசனம் இருக்கிறது. திருச்சி ஜில்லாவை எடுத்துக் கொண்டால் காவேரி பாய்ச்சல். நடு மத்தியில், ஐம்பது, அறுபது மைல் விஸ்தீரணம் இப்படி பாசன வசதியின்றி புஞ்சை நிலமாக இருந்து வருகிறது. இங்கே நஞ்சை பூமியாக்க வழிவகை இருக்கிறதா என்று பார்க்கவேண்டும். சென்ற வருஷத்திலே காவேரி நீரை அதிகமாக லால்குடி வட்டாரத்திலும், மற்ற வட்டாரத்திலும் பாழ்படுத்திவிட்டதை முன்னிட்டு இப்போது ஒரு என்ஜினியரை நியமித்து அதைப் பற்றி ஆராய்ச்சி செய்ய ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அவரும் தண்ணீர் சேதமாகாமல் எப்படி எப்படி பாசனத்திற்கு அனுமதிக்கலாம் என்று அறிக்கை கொடுத்துவிட்டார். அதை நன்கு ஆராய்ந்து இந்த வட்டாரத்திலுள்ள வெள்ளார் நீர்த் தேக்கமும், வெலிங்டன் ரிசர்வாயரும், மற்ற ஏரிகளுக்கும் தக்க வகையில் நிரம்ப வழி செய்தால் நல்ல பயன் விளையும். இதையும் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.





அரியலூரில் தற்போது யானைக்கால் நோய் அதிகமாகப் பரவி வருகிறது. அதற்கு ஒரு ஆஸ்பத்திரியை தனியாக ஏற்படுத்தி அங்குள்ள மக்களைக் காப்பாற்றவேண்டுமென்று அரசாங்கத்திற்கு நினைப்பூட்டுகிறேன்.

அதேமாதிரி ஒரு அரசினர் கல்லூரி ஒன்றையும் அந்த வட்டாரத்தில் ஏற்படுத்தவேண்டும். சுற்று வட்டாரத்திலுள்ள மாணவர்கள்—ஜயகுண்டத்திலிருந்தும் பலவிடங்களில் இருந்தும் மாணவ மாணவிகள் வந்து படிப்பதற்கு வசதி ஏற்படும். ஆகவே உடனடியாக அரசாங்கச் செலவில் ஒரு அரசினர் கல்லூரியை அந்த வட்டாரத்தில் அமைத்துக்கொடுக்கும்படியாகக் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், எங்களுடைய வட்டாரத்தில் இருக்கும் மக்கள் மோஸ்ட் பாக்வர்ட் கம்யூனிடி மக்களாக இருந்து வருகிறார்கள். ஹரிஜன மக்களுக்கு எப்படிப் பல சலுகைகளைக் கொடுக்கிறார்களோ அதே மாதிரி பல சலுகைகளைக் கொடுத்து அவர்கள் முன்னேற்றம் அடையும்படியாகச் செய்யவேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டு என் சிற்றுரையை முடித்துக்கொள்கிறேன்.

* **திரு இர. பொன்னப்ப நாடார் :** தலைவர் அவர்களே, கவர்னர் அவர்களுடைய பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது ஒரு சில கருத்துக்களை இந்த மன்றத்தின் முன் வைக்க விரும்புகிறேன். முதல் முதலிலே கன்னியாகுமரி ஜில்லாவைப் பொறுத்த வரை என்னென்ன திட்டங்களைப் பற்றிக் கவர்னர் உரையிலே சொல்லப்பட்டிருக்கிறது என்பதைப் படித்துப் பார்த்தேன். குமரி ஜில்லாவிலே ரப்பரை நடுவதற்குப் புதியதொரு திட்டம் உருவாக்கப்பட்டிருப்பதாக அவர்களுடைய உரையிலே கூறப்பட்டிருக்கிறது. மற்றப்படி வேறு உருப்படியான திட்டங்கள் குமரி ஜில்லாவைப் பொறுத்த மட்டில் கூறப்பட்டிருக்கின்றனவா என்று பக்கங்களைப் புரட்டிப் பார்த்தேன். ஆனால் முக்கியமான பல திட்டங்கள், அந்த ஜில்லாவைப் பொறுத்தவரை கைவிடப்பட்டிருக்கின்றனவோ என்று நாங்கள் ஐயப்படக்கூடிய நிலையிலே இருக்கிறது என்பதை அரசாங்கத்துக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

முக்கியமாக, சிற்றாறு-பட்டணங்கால் திட்டமானது, பாசனத் திட்டமாக ஒப்புக்கொள்ளப்பட்டு, பிளானிங் கமிஷனால் அங்கீகரிக்கப்பட்டு கடந்த பட்ஜட்டிலேயே உட்படுத்தப்பட இருந்தது. அந்தத் திட்டமானது விரைவிலே உருவாகுமென்று மக்களெல்லாம் அபிலாஷையுடன் இருந்தனர். ஆனால் எங்கள் ஜில்லா மக்களுடைய அபிலாஷை இதுகாறும் பூர்த்தி செய்யப்படவில்லையென்பதைப் பணிவாக அரசாங்கத்துக்குத் தெரிவிக்க முன் வருகிறேன். உணவு உற்பத்திக்கு முக்கியத்துவம் அளித்து வருகிறோம். குறிப்பாக, நாஞ்சில் நாட்டுப் பிரதேசம் நெல் அதிகமாகச் சாகுபடி ஆகின்ற பிரதேசம். தீவிர சாகுபடித் திட்டத்தில் பல ஜில்லாக்கள் இப்போது எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன. அதற்காக அரசாங்கத்துக்கு நாங்கள்

[திரு. இர. பொன்னப்ப நாடார்] [30th January 1963

எப்போதும் கடமைப்பட்டவர்களாக இருக்கிறோம். எங்கள் ஜில்லாவையும் தீவிர சாகுபடித் திட்டத்தில் உட்படுத்த முடியுமா என்பதைப் பற்றி அரசாங்கம் ஆழ்ந்த பரிசிலனை செய்யவேண்டுமென்று பணிவாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எங்களுடைய ஜில்லாவிலே கூட்டுறவு அடிப்படையிலே ஒரு நூற்பு ஆலையைத் துவக்கவேண்டுமென்று அரசாங்கத்திலிருந்து திட்டமிட்டார்கள். அதற்காக சுமார் மூன்று லட்சம் ரூபாயும் வசூல் செய்யப்பட்டு அந்தப் பணத்தைப் பாங்கில் போட்டு வைத்தார்கள். ஏனைய ஜில்லாக்களில் கூட்டுறவு அடிப்படையில் நூற்பு ஆலைகளை உருவாக்கியிருப்பதைப் போல் எங்கள் ஜில்லாவிலும் ஏற்படும் என்று எதிர்பார்த்திருந்தோம். ஆனால், இதுவரை அதன் மீது எந்த விதமான முடிவும் எடுக்கப்படவில்லையென்பதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். எங்களுடைய ஜில்லா தொழில் வளம் மிகவும் குன்றிய ஜில்லா. மலையாளப் பகுதியிலிருந்து இப்போது தமிழகத்தோடு சேர்ந்திருக்கிறோம். மலையாளத்தோடு சேர்ந்திருந்தபோது அந்தப் பகுதி மிகவும் பிற்பட்ட பகுதியாக இருந்தது. மலையாள அரசாங்கம் எங்களுக்கு அன்று நீதி வழங்கவில்லை. இப்போது தாயகத்தோடு வந்து சேர்ந்திருக்கும் எங்கள் ஜில்லாவுக்கு விரைவில் ஒரு நூற்பு ஆலையை உருவாக்கித் தரவேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறேன்.

பாதுகாப்புப் பணிக்காக உற்பத்தி செய்யப்படும் சில ஆயுதங்களுக்குத் தேவையான உலோகப் பொருள்கள்—மானுசைட், இல்மனைட் போன்றவை—கன்னியாகுமரிக் கடலோரத்தில் இருக்கின்றன. இப்போது மணவாளக்குறிச்சி என்ற இடத்தில் அவற்றை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அங்கு அரசாங்க ஆலை ஒன்றும் இருக்கிறது. அணு ஆயுதங்கள் உற்பத்தி செய்ய அந்தப் பொருள்கள் உதவியாக இருக்குமென்று நிபுணர்கள் கூறுகிறார்கள். இன்று அங்குள்ள பாக்டரியில் இரண்டு ஷிப்ட் வேலை செய்கிறார்கள். மூன்றாவது ஷிப்ட் துவங்கவும் வழி இருக்கிறது. தனியார் துறையில் இருக்கும் இன்னொரு பாக்டரி மூடப்பட்டிருக்கிறது. அந்த பாக்டரியையும் திறந்து வேலை செய்ய முடியுமா என்பதைப் பற்றி அரசாங்கம் ஆலோசிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நமக்கு மின்சாரம் மிகவும் பற்றாக் குறையாக இருக்கிறது. எங்கள் பகுதியில் கோதையாறு மின்சாரத் திட்டத்தை ஆரம்பிக்க அரசாங்கம் பரிசிலனை செய்து, மூன்றாவது திட்டத்தில் அதனை உட்படுத்த பூர்வாங்க நடவடிக்கைகளை மேற் கொண்டது. அந்தத் திட்டம் வெற்றிகரமாக இருக்குமென்று நிபுணர்களும், அரசாங்கமும், மந்திரிகளும் கூறியிருக்கிறார்கள். அதைப் பற்றிய அறிக்கையும் விடுத்திருக்கிறார்கள். அந்தத் திட்டம் விரைவில் உருவாக்கப்பட்டால் நலமாக இருக்குமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.



30th January 1963] [திரு. இர. பொன்னப்ப நாடார்]

திருவிதாங்கூர்-கொச்சியிலிருந்து மாற்றப்பட்ட பல உத்தியோகஸ்தர்களுக்குப் பல குறைகள் இருக்கின்றன. அது பற்றிப் பரிசிலித்து, அவர்களுக்கு உத்தியோக உயர்வானாலும் சரி, உத்தியோக இணைப்பானாலும் சரி, அரசாங்கம் கருணை கூர்ந்து செய்ய வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

கட்டடங்கள் கட்டுவதற்கு சிமெண்ட், இரும்பு தேவையாக இருப்பதால் கட்டடங்கள் கட்டுவதை நிறுத்தி வைக்கவேண்டுமென்று அறிக்கையிலே கூறப்பட்டிருக்கிறது. ஆனால் ஆஸ்பத்திரிகள், பள்ளிக்கூடங்கள் ஆகியவற்றுக்கான கட்டடங்கள் கட்டுவதற்கு அனுமதி கொடுப்பது பற்றிப் பரிசிலிக்கவேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறேன். எங்கள் ஜில்லாவில் பல பள்ளிக்கூடங்கள் ஷெட்டுகளிலேயே செயல்பட்டு வருகின்றன. அவற்றிற்கெல்லாம் கட்டடங்கள் கட்ட முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. ஆகவே, கட்டடங்கள் கட்டுவதை நிறுத்தவேண்டுமென்றால் இந்தப் பள்ளிக்கூடங்களுக்கெல்லாம் வருகிற வருஷத்தில் மிகவும் கஷ்டங்கள் ஏற்படும் என்பதை அரசாங்கம் உற்றுக் கவனித்து இது போன்றவற்றிற்கு ஏதாவது விதி விலக்குக் கொடுப்பதுபற்றி ஆலோசனை செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கடலோரத்தில் வாழும் மக்களுக்குப் பலவிதமான கஷ்டங்கள் இருக்கின்றன. எங்கள் பகுதியில் கடலோரத்தில் ஏராளமான மீனவர்கள் குடியிருக்கிறார்கள். அவர்களுக்கு அரசாங்கம் விசைப்படகுகளை வழங்கி இருக்கிறார்கள். அந்த விசைப்படகுகளைப் பழுது பார்க்கப் பயிற்சி பெற்றவர்கள் கிடைப்பதில்லை. ஸ்பேர் பார்ட்ஸ் கிடைப்பதும் கஷ்டமாக இருக்கிறது. இன்னொரு சிக்கல், மீனவர்கள் வருஷத்தில் நான்கைந்து மாதங்கள்தான் கடலில் சென்று தாராளமாக மீன் பிடிக்க முடிகிறது. ஏனைய மாதங்களில் விசைப்படகுகள் அப்படியே பயனின்றி இருக்கின்றன. ஆகவே, பக்கத்தில் இருக்கும் பகுதிகளில் அவர்களுக்கு மீன் பிடிக்க வசதி செய்து கொடுக்கவேண்டும். கொச்சி, நீண்டகரை போன்ற கேரளப் பகுதிகளில் மீன் பிடிக்க ஏதாவது வழிவகைகளைச் செய்து தரமுடியுமா என்பதைப்பற்றி அரசாங்கம் ஆலோசிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தற்போது எங்கள் ஜில்லாவிலும் நகைத் தொழிலாளர்களைப் பொறுத்தவரை அவர்களுக்கு கஷ்டமான நிலைமை உண்டாகியிருக்கிறது. அரசாங்கத்திலிருந்து கூட்டுறவு முறையில் பட்டறைகள் ஏற்படுத்தி 14 காரட் தங்கத்தில் நகைகள் செய்ய முடியுமா என்பதை ஆராய்ந்து அவர்களுக்கு வேலை கொடுக்க வேண்டும். மீனவர்களுக்குத் தற்காலிகமான கஷ்டங்கள் ஏற்பட்டபோது நம்முடைய அரசாங்கம் உதவி செய்ததுபோல் இப்போது நகைத் தொழிலாளர்களுக்கும் உடனடியாக நிவாரணம் அளிக்க முடியுமா என்பதைப் பற்றியும் ஆலோசித்துப் பரிகாரம் காணவேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே கூறிக் கொண்டு கவர்னர் பெருமான் பேருரையை ஆதரித்து, ராஜ்யத்

[திரு. இர. பொன்னப்ப நாடார்] [30th January 1963

தில் ஏற்பட்டிருக்கும் ஒற்றுமை உணர்ச்சி நீடுழி காலம் வாழ எல்லோரும் பாடுபட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

*திரு. வி. அருணாசலம்: மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே,
1-00 p.m. இன்றைய தினம் கவர்னர் பெருமான் அவர்களுடைய உரையின் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல சந்தர்ப்பம் அளித்தமைக்கு என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். விவசாய நிலங்களுக்கு வரி விதிப்பது குறித்து இந்த உரையில் சொல்லப்பட்டிருக்கிறது. ஏற்கனவே விவசாயிகள் வரி விதிப்பை தாங்க முடியாத அளவிற்கு அந்த நிலையை அடைந்திருக்கிறார்கள். பஞ்சாயத்து போர்ட், பஞ்சாயத்து யூனியன் இவைகளின் வரி விதிப்பினால் தாங்க முடியாத வரியைத் தாங்கிக் கொண்டிருக்கும் விவசாய மக்கள் இதனால் மிகவும் துன்பப்படுவார்கள் என்று கூற விரும்புகிறேன். தஞ்சை மாவட்டம், தேசியப் பாதுகாப்பு நிதிக்காக கோவை மாவட்டத்தைவிட அதிகமாக வாரி வழங்கியிருக்கிறது என்பதை ஆளும் கட்சியைச் சார்ந்த உறுப்பினர் அவர்களே குறிப்பிட்டார்கள். தஞ்சை மாவட்ட விவசாய மக்கள் இந்த வரி விதிப்பினால் மிகவும் அவதியுறுவார்கள் என்பதை நான் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

அடுத்து, மீன் பிடி தொழிலாளர் பற்றி ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். பட்டுக்கோட்டை தாலூகாவில் சேது ரஸ்தா ஓரமாக உள்ள கடலோரப் பகுதிகளில் மீன்பிடி தொழிலாளர்கள் ஏராளமாக இருக்கிறார்கள். அவர்களுக்கு இதுவரை ஒரு பாதுகாப்பும் கொடுக்கவில்லை. அவர்களுக்கு படகுகள், விசைப் படகுகள், இவைகள் வாங்குவதற்கு நீண்டகாலக் கடன்கள் கொடுக்க அரசாங்கம் முன் வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, நீர்ப்பாசனம் சம்பந்தமாக துரிதமாக வேலைகள் நடைபெற்று வருகிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். தஞ்சை மாவட்டத்தில் எங்கு சென்றாலும் காட்டாறுகள் ஆங்காங்கு குறுக்கிட்டு அதில் வருகிற தண்ணீர் வீணாக கடலில் போய் சேருகிறது. அதனால் கடைமடை பாசனத்தில் இருக்கிற விவசாயிகள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆற்று நீர் போதுமான அளவு கிடைக்காமல் அவர்கள் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, காட்டாறுகளில் அணைகள் கட்டி நீர்ப்பாசனத்திற்கு வழி செய்தால் உணவு உற்பத்தியை நாம் பெருக்க முடியும். காட்டாறுகளில் அணைகட்டும் திட்டம் போடப்பட்டிருக்கின்றது. அவைகளை உடனடியாக நிறைவேற்ற சர்க்கார் முன்வரவேண்டும். நெல், அரிசி இவைகளுக்கு விலைவாசி குறைவாக இருந்தாலும் அதை நாங்கள் வரவேற்கிறோம். மற்ற பொருள்களின் விலைவாசி குறைவாக இருந்தாலும் அதை நாங்கள் வரவேற்கிறோம். மற்ற பொருள்களின் விலைவாசி ஏற்றத்தை தடுக்கவும் சர்க்கார் முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும். எந்த முனையில் பார்த்தாலும் விவசாயிகள் மீளமுடியாத நிலையில்



30th January 1963] [திரு. வி. அருணாசலம்]

தங்கள் வாழ்க்கையை நடத்திக்கொண்டு வருகிறார்கள். விவசாய காரியத்திற்காக வாங்கும் அத்தனை சாதனங்களின் விலையும் இன்று உயர்ந்திருக்கிறது. ரசாயன உரம் ஆகட்டும், விவசாயிகள் அன்றாடம் வாங்கி உபயோகிக்கும் பொருள்களாகட்டும், அவைகளின் விலைகள் ஏறியிருக்கின்றன. விவசாயிகள் விவசாயத்தை நம்பித்தான் வாழ்கிறார்கள். அவர்களுக்கு வேறு தொழில்கள் இல்லாதிருப்பதால் ஜீவிக்கவே தடுமாறுகிறார்கள். பெரிய மிராசுதார்கள் இதைப்பற்றி கவலைப்பட மாட்டார்கள். ஆனால் நடுத்தர விவசாயிகள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள்.

அடுத்து, பஞ்சாயத்துக்களில் உரக்குழிகள் வெட்டுவதற்கு, உரங்கள் தயாரிப்பதற்கு அதிகப்படியான அளவில் கடன் கொடுக்கப்படுகிறது. ஆனால் கிராம பஞ்சாயத்துக்கள் உரவகைகளை சேகரிப்பதற்கு முடியாத நிலை இருக்கிறது. நகரப் பஞ்சாயத்துக்களில் கழிவுப் பொருள்களை சேகரிப்பதற்கும், உரக் குழிகள் தயார் செய்வதற்கும் தகுந்த முறைகள் அமைந்திருக்கின்றன. கிராமப் பஞ்சாயத்துக்களில் இந்தக் கடன் அளித்து உரக் குழிகள் தயார் செய்ய முயற்சி எடுத்துக்கொள்ள முடியாத நிலையில் தான் இருக்கிறது. அதற்குப் பதிலாக அங்குள்ள விவசாயிகளுக்கு கால்நடைகள் வாங்க நீண்ட காலக் கடன்கள் கொடுத்து உதவ வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மின்சாரம் விரைவாக விஸ்தரிக்கப் படுகிறது என்று அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. பட்டுக்கோட்டை தாலூகாவில் சிற்சில இடங்களில்தான் இருக்கிறது. பல கிராமங்களுக்கு மின்சாரம் விஸ்தரிப்பதாக இருந்தாலும் அதற்கு துரிதமாக நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, புறம்போக்கு நிலங்களை முக்கியமாக பெரிய நிலச்சுவான்தார்களும் மிராசுதார்களும் ஆக்கிரமித்துக் கொண்டு தங்களிடம் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். ஏழை மக்கள் வைத்துக்கொண்டிருக்கும் புறம்போக்கு நிலங்களைக் கூட மிராசுதார்கள் பிடுங்கிக்கொள்ளும் நிலைதான் இருக்கிறது. ஏழை மக்கள், ஹரிஜன மக்கள் அவற்றை விட்டு விட்டு போகாமல் இருக்கும் நிலைதான் இன்றும் இருக்கிறது. ஆக, புறம்போக்கு நிலங்களை, விவசாயத்திற்கு லாயக்குள்ள நிலங்களை நஞ்சை நிலங்களை, நிலம் இல்லாத ஏழை மக்களுக்கு பட்டா செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கிராமப் பஞ்சாயத்துக்கள் மூலம் தொண்டர் படையமைத்து கிராம மக்களுக்கு சேவை செய்ய வேண்டுமென்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. பஞ்சாயத்து தலைவர்கள் எவ்வளவோ முனைந்தும், கஷ்டப்பட்டுப் பார்த்தும் அதில் சேருவதற்கு முன்வர மறுக்கிறார்கள். தொண்டர் படை மூலம் பயிற்சி அளித்து இன்று நடக்கும் சீன யுத்தத்திற்கு தங்களை பயன் படுத்திக்கொள்வார்களோ என்று பயப்படும் அளவு கிராமங்களில் எவ்வளவு முயன்றும் தொண்டர் படை அமைக்க கஷ்டமாக இருக்கிறது. இந்த உரைமீது பேசுவதற்கு எனக்கு சந்தர்ப்பம் அளித்த தலைவர் அவர்களுக்கு எனது நன்றியை தெரிவித்துக்கொண்டு இந்த அளவில் முடித்துக் கொள்கிறேன்.

[30th January 1963

*(கனம் சபாநாயகர் அவர்கள் தலைமை)*

* **திரு. கி. இரா. சம்பந்தம்:** கனம் சபாநாயகர் அவர்களே, கவர்னர் அவர்கள் உரையில் அவர்கள் கூறிய சில கருத்துக்களை ஆதரித்து நான் ஒரு சில கருத்துக்களையும் சேர்த்துச் சொல்லலாம் என்று ஆசைப்படுகிறேன். பாதுகாப்பு வேலையில் மத்திய அரசாங்கமும் நமது அரசாங்கமும் நல்லமுறையில் ஈடுபட்டதின் காரணமாக சைனு பின்னடையும்படியான ஒரு நிலை ஏற்பட்டதை, நல்லதொரு சூழ்நிலை உருவாகியிருப்பதை கவர்னர் அவர்கள் தமது உரையில் தெரிவித்துள்ளார்கள். நம் நாட்டை முன்னேற்றப் பாதையில் கொண்டு போகையில் நாம் எல்லோரும் கண்ணும் கருத்துமாக இருந்து வேலை செய்ய வேண்டுமென்று வற்புறுத்தியிருப்பதை நான் வரவேற்கின்றேன். தமிழில் ஒரு பழமொழி உண்டு. "பந்திக்கு முந்தி, படைக்கு பிந்தி" என்று சொல்வார்கள். இந்தப் பழமொழியைப் பார்த்தால் படைக்குப் போகிறவர்களை பின்னடைய நிறுத்தச் சொல்வது மாதிரி இருக்கிறது. பந்திக்கு முன்னர் போனால் சாப்பாடு கிடைக்கும், படைக்கு போகும்போது தலைவனாக இருப்பவன் கடைசியில்தான் இருக்க வேண்டும். தலைவன் முன்னால் போய் அவன் மாண்டு விட்டால் தோல்வி அடையவேண்டியதுதான். ஆகவேதான் அப்படி வந்தது அந்த மொழி. அதைப்போலே நாம் எல்லோரும் இப்போது பாதுகாப்பு முறையில், அதற்காக எல்லோரும் உத்வேகப்பட்டு (வார்-மைண்டட்) உறுதியோடு நிற்கிறோம். எந்த விதமான எதிர்ப்புக்கும் நாம் தயாராக இருக்கவேண்டும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்ததாக, இப்போது நெல்விலை ஓரளவு சரிந்திருக்கிறது. இதன் காரணமாக விவசாயிகள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஜமீன்தார்களும் மிராசுதார்களும் அதிக ஏக்கர் நிலங்களை வைத்து விவசாயம் செய்தார்கள். இப்போது அந்த நிலைமை இல்லை. இன்று நிலச்சீர்திருத்தம் வந்ததின் பின்னால் சிறிய பட்டாதார்கள் எல்லாம் அதிகமாக இருக்கிறார்கள். தங்களுக்கு இருக்கக்கூடிய அத்தனை வருமானத்தையும் நெல் சாகுபடி செய்வதிலேயே போட்டு செலவு செய்து வருகிறார்கள். இந்த நிலைமையில் விலை சரியுமானால் விவசாயிகள் மிகவும் பாதிக்கப்படுவார்கள். அதை நான் சர்க்காரின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். ஏற்கனவே விவசாயிகளுக்கு கொடுக்கப்பட்டு வந்த போனஸ் இப்போது வியாபாரிகளுக்கு கொடுக்கப்படப்போவதாக தெரிகிறது. என்னிடத்தில் விவசாயிகள் வந்து கேட்கிறார்கள், 'அன்னியன் இருந்த காலத்தில்கூட விவசாயிகளுக்கு போனஸ் கொடுக்கப்பட்டதே, ஆனால் இப்போது அதை நிறுத்தி வியாபாரிகளுக்கு மட்டும் போனஸ் கொடுக்கப்படுகிறதே, ஏன் விவசாயிகளுக்குக் கொடுக்கக்கூடாது?' என்று கேட்டு என்னை துன்புறுத்துகிறார்கள்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** போனஸ் என்ற வார்த்தையை பலர் தவறாக எடுத்துக்கொண்டிருப்பதாகத் தெரிகிறது. சென்ற முறையில் இருந்தது போலவே, இப்போது இருக்கக்கூடிய விலையில், தாங்களாகவே சிறிது குறைத்து யார் கொடுக்கிறார்களோ,



30th January 1963] *[திரு. எம். பக்தவத்சலம்]*

அவர்களுக்கு அந்த முழு விலையும் கொடுப்பதாக முடிவு செய்யப்பட்டது. இவ்விதம் குறைத்து கொடுக்க வேண்டும் என்று வியாபாரிகள் கேட்டுக்கொள்ளப்பட்டார்கள். அவர்களும் ஒத்துக்கொண்டார்கள். இவ்விதம் குறைத்துக்கொடுக்கின்ற வித்தியாசத்திற்குத்தான் போனஸ் என்ற பெயர் வந்துவிட்டது. இந்த போனஸ் என்று கருதப்படுகிற விலையும் சேர்த்து விவசாயிகள் கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறார்கள் என்றால் அவர்களிடம் போய் விலைக்கு எடுத்துக்கொள்ளலாம். மில்காரர்கள் தங்களுடைய லாபத்தின் ஒரு பகுதியை விட்டுக்கொடுத்து குறைத்து கொடுக்க முன் வந்திருக்கிறார்கள். இவ்விதம் நிலைமை ஏற்பட்டிருப்பது நல்லதா கெட்டதா என்பதைத்தான் நாம் பார்க்க வேண்டும். ஏதோ கொஞ்சம் விலை குறைந்துவிட்டதால், ஒரேயடியாக விலை சரிந்து விட்டது என்று சொல்லிவிட முடியாது. கட்டுப்படியாகாத அளவுக்கு விலை குறைவதாக இருந்தால் விவசாயிகளை பாதுகாத்துக்கொள்ளலாம் என்று மத்திய அரசாங்கம் கூறியிருக்கிறது. இந்த அரசாங்கமும் அதற்கு எப்போதும் தயாராக இருக்கும் என்பதையும் கூறிக்கொள்கிறேன்.

**திரு. கி. இரா. சம்பந்தம்:** இவ்விதம் விலை குறைந்ததின் காரணமாகத்தான் இப்போது வியாபாரிகள் மூட்டைக்கு 14, 15 ரூபாய்க்கு நெல்லை வாங்கி வைத்திருக்கிறார்கள். இன்னும் விலை குறைந்து கொண்டேதான் போகும் என்றுதான் தெரிகிறது. ஏதோ நெல்லை வாங்க வேண்டும் என்பதற்காக விலையை குறைப்பது சரியல்ல.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** அக்கிரமமாக விலையை குறைத்து யாரும் வாங்க முடியாது. அவ்விதம் விவசாயிகள் கொடுக்கவேண்டிய தேவையில்லை. அவர்களது நெல்லை மார்க்கட்டிங் ஸொஸைட்டி மூலமாக, அங்கு கொண்டு போய் வைத்துவிட்டு, தங்களுக்கு வேண்டிய ரூபாயை பெற்றுக்கொள்ளலாம். நல்ல விலை வந்ததின் பின்னால் ஸொஸைட்டியின் மூலமாக விற்கலாம்.

**திரு. கி. இரா. சம்பந்தம்:** எப்படியிருந்தாலும், நிலைமைகளை நன்றாக சீர்தூக்கிப்பார்த்து, சரியான முடிவு எடுக்கவேண்டும். பொதுவாக இப்போதுள்ள நிலைமையில் விலை குறைந்தால், விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்படுவார்கள். அவ்வாறு பாதிக்கப்படுவார்கள் என்றால், நெல் உற்பத்தி எல்லாம், கரும்பு உற்பத்தியாகிவிடும் என்று நினைக்கிறேன். நெற்களஞ்சியமாக விளங்கிய தஞ்சை மாவட்டம் கரும்பு உற்பத்திக்குப் போய்விடும் என்று கருதுகிறேன். ஆகவே, நெல் உற்பத்தியை பெருக்குவதற்கு வசதியாக விவசாயிகளை நல்ல முறையில் காப்பாற்றுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, விவசாயிகள்மீது இன்னும் வரி விதிக்கப் போவதாக தெரிகிறது. பொதுவாக, விவசாயிகள் எல்லாம் பல காலம் கஷ்டப்பட்டு மூன்று ஏக்கர், நான்கு ஏக்கர், ஐந்து ஏக்கர்

[திரு. கி. இரா. சம்பந்தம்] [30th January 1963

நிலம் வாங்கி வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த நிலைமையில் இப்போது அவர்கள்மீது மேலும் வரியைப்போட்டால் அவர்கள் தாங்க முடியாத நிலைமை தான் ஏற்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். முன்பெல்லாம் முதல் தரமாக இருந்த நிலங்கள் எல்லாம் இப்போது தரம் மிகவும் குறைந்து விட்டது. இதில் பொருளாதார கொள்கைப்படி "லா ஆஃப் டிமினிஷிங் ரிட்டர்ன்" முறை வேலை செய்ய துவங்குகிறது. முன்னால் இருந்ததுபோல் இப்போது கண்டு முதல் வருவதில்லை. இந்த நிலைமையில் வரியைக் கூட்டப்போகிறோம் என்று சொல்வது சரியல்ல. ஆகவே, இதைப் பற்றி அரசாங்கம் நன்றாக சீர்தூக்கிப்பார்க்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, வடிகால் திட்டத்தை பொறுத்தவரையில், ஏற்கனவே பஞ்சாயத்து யூனியன்கள் மூலமாக சென்ற ஆண்டில் இந்த வேலையை செய்து வந்தார்கள். நல்லமுறையில் வடிகால்களும் வெட்டப்பட்டன. ஆனால் இதில் பல குறைகள் இருக்கின்றன. தஞ்சை ஜில்லாவில் பல இடங்களில் வடிகாலும் வாய்க்காலும் ஒன்றாக இருப்பதினால் பள்ளம் இருக்கின்ற பக்கத்திலேயே பாதிக்கப்படுகிறது. இதை சீர்படுத்துவதற்காக இன்ஜினியர்கள் எல்லாம் கூடி முடிவு எடுத்திருப்பதாக தெரிகிறது. அதன்படி இதில் என்ன அபிவிருத்தி செய்திருக்கிறார்கள் என்று தெரியவில்லை. எல்லா இடங்களிலும் வடிகால் வெட்டப்பட்டிருக்கின்றனவா என்று பார்த்து, வடிகால்கள் எல்லாம் வெட்டப்பட்டதை மேற்பார்வை செய்யவேண்டிய பொறுப்பை இன்ஜினியர்களிடமே விடவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இப்போது கல்வித்திட்டங்கள் எல்லாம் வேகமாக முன்னேறி வருவதை நாம் பார்க்கின்றோம். ஆனால் படிப்பின் தரம் மிகவும் குறைவாக இருக்கிறது. தரம் குறைந்த பிள்ளைகளாகத்தான் இருந்து வருகிறார்கள். காரணம், ஐந்தாவது வகுப்பு வரையிலும் 25 பிள்ளைகளுக்கு ஒரு ஆசிரியர் இருக்க வேண்டும் என்று இருந்த விதி இப்பொழுது 40 பிள்ளைகளுக்கு ஒரு ஆசிரியர் என்று மாற்றப்பட்டு இருக்கின்றது. மேல் வகுப்புகளில் வேண்டுமென்றால் 40, 50 பிள்ளைகளை வைத்துக்கொண்டு ஒரு ஆசிரியர் பாடம் சொல்லிக் கொடுக்கலாம். ஆனால் ஆரம்பப் பள்ளி வகுப்பில் அவ்விதம் முடியாது. இப்போதுள்ள நிலைமையில் ஒன்றாவது, இரண்டாவது, மூன்றாவது வகுப்புகளில் எல்லாம் 40, 50 பிள்ளைகளை வைத்துக்கொண்டு ஒரு ஆசிரியரே பாடம் நடத்திக் கொண்டிருப்பார். ஓரே ஆசிரியர் பள்ளியிலும் இதே கதிதான். நிற்க, இதைப்பற்றி நாம் நன்றாக சிந்திக்கவேண்டும். முக்கால்வாசி மாணவர்களுக்கு சர்க்காரால் உபகாரச் சம்பளம் கொடுக்கப்படுவதால் மாணவர்களிடமிருந்து சம்பளம் வசூலாகவில்லை. ஆகவே, உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்களுக்கு, மானேஜ்மெண்டார் சில மாதங்களில் சம்பளம் கொடுக்க முடியவில்லை. ஹயர் எலிமெண்டரி ஸ்கூல் ஆசிரியர்களுக்கு எல்லாம் சர்க்காரே மாதா மாதம் சம்பளம் கொடுத்து வருகிறார்கள். ஆனால் சில முனிசிபல் மானேஜ்மென்ட் இவைகளில் நடத்தப்படும் பள்ளிக்கூடங்களிலுள்ள ஆசிரியர்களுக்கு டிசம்பர் மாதம் வரையிலும்தான் சம்ப



30th January 1963] [திரு. கி. இரா. சம்பந்தம்]

ளம் ஒழுங்காகக் கொடுக்கப்படுகிறது. அதன் பின்னால் நான்கு மாதங்கள் சம்பளம் இல்லாமல்தான் வேலை செய்ய வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. காரணம், அவர்களுக்கு நிதி வசதியில்லாததுதான். கன்னியாகுமரி ஜில்லாவை எடுத்துக்கொண்டால், அதாவது கேரளாவில் நடைபெறும் முறையை எடுத்துக் கொண்டால், மானேஜ்மென்ட் பள்ளிக்கூடத்தில் வேலை செய்யும் தலைமை ஆசிரியர் தயார் செய்யும் சம்பளப் பில்லை கஜானா ஆபீஸர் செய்து ஆசிரியர்களுக்கு சம்பளம் பட்வாடா செய்யப்படுகிறது. வருட கடைசியில் ஆடிட் செய்த பின்னால் மீதி இருந்தால் மானேஜ்மென்ட் வசம் கிராண்ட் கொடுத்துவிடுவார்கள். இதன் காரணமாக ஆசிரியர்கள் நல்ல முறையில் வேலை செய்ய முடிகிறது. இதைப்பற்றி நான் தனியாக கனம் அமைச்சர் அவர்களிடத்திலும் விவாதித்தேன். கல்வி இலாகா டைரக்டர் அவர்களிடத்திலும் விவாதித்தேன். ஆகவே இந்த விஷயத்தில் நல்லதொரு முடிவை எடுத்தால், பள்ளிக்கூடத்தில் வேலை செய்கின்ற ஆசிரியர்களுக்கும், படிக்கின்ற மாணவர்களுக்கும், மானேஜ்மெண்டுக்கும் நலமாக இருக்கும். ஆகவே, இதைப் பற்றி அரசாங்கம் யோசித்து நல்லதொரு முடிவு எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

லோக்கல் அட்மினிஸ்ட்ரேஷனில், முனிசிபாலிட்டிகளிலெல்லாம் மானேஜர் என்றும், கிளார்க்குகள் என்றும் பலர் வேலை செய்து கொண்டு வருகிறார்கள். பஞ்சாயத்து யூனியனில் வேலை செய்கிறவர்களை ரெகுலரைஸ் செய்து சம்பளம் கொடுத்து வருகிறோம். இப்போது வேலை செய்ய முடியாத கிழவர்களுக்கு பென்ஷன் கொடுத்து வருகிறோம். ஆனால் இப்போது முனிசிபாலிட்டிகளில் வேலை செய்யக் கூடியவர்களுக்கு சம்பள ரெகுலேஷன் கிடையாது. அவர்களுக்கு பென்ஷன் கிடையாது. இந்த மாதிரி திரிசங்கு சொர்க்க நிலையில் லோகல் அட்மினிஸ்ட்ரேஷனில் இருக்கிறவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் நல்ல முறையில் வேலை செய்ய தாலுகா ஆபிஸ்களில் இருக்கக் கூடியவர்களை அவ்வப்போது மூன்று வருடத்திற்கு ஒரு தடவை மற்ற இடங்களுக்கு மாற்றுவது போலச் செய்தாலும் நல்லதுதான். இப்போது ஒரே இடத்தில் இருப்பதால் தவறுகள் ஏற்படுகின்றன—அவர்களுக்கு மினிமம் க்வாலிபிகேஷன் வைத்து ரெகுலரைஸ் பண்ண வேண்டும்; அல்லது சர்வீஸ் கமிஷன் மூலம் போட்டால்கூட நலமாக இருக்கும். அதோடு அவர்களுடைய திறமைக்குத் தக்கவாறு மேல் உத்தியோகங்களுக்குப் போக வாய்ப்பு இருக்கும். ஆகையால் அதையும் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ப்ரைமரி ஹெல்த் சென்டர்ஸ் என்று ஒவ்வொரு ஊரிலும் ஏற்படுத்தியிருக்கிறோம். . .

**கனம் சபாநாயகர்:** கனம் அங்கத்தினருக்கு அளிக்கப்பட்ட நேரம் முடிந்துவிட்டது. அடுத்தபடியாக இன்னும் ஒரு அங்கத்தினர் பேசவேண்டும். அவருக்கு ஒதுக்கப்பட்டுள்ள 10 நிமிடங்கள் தான் இருக்கிறது. அவருடைய நேரத்தை கனம் அங்கத்தினர் எடுத்துக்கொண்டால் என்ன செய்வது?

[30th January 1963

**திரு. கி. இரா. சம்பந்தம்:** இன்னும் ஒரு நிமிடத்தில் முடித்து விடுகிறேன். இப்போது மெடிகல், ஹெல்த் ஆகிய இரண்டு இலாக்காக்களையும் ஒன்று சேர்க்கத் தீர்மானம் செய்து வருகிறார்கள். அது நல்லதுதான். இப்போது ஒவ்வொரு பிளாக்கிலும் ப்ரைமரி ஹெல்த் செண்டர்ஸ் கட்டிவிட்டார்கள். அவைகளுக்கு மருந்து சரியாக வருவதில்லை. டாக்டர்கள் இருப்பதில்லை. அவைகளை ரிப்பேர் செய்யக்கூட முடியாத நிலை ஆரம்பத்தில் இருக்கிறது. என்னுடைய தொகுதியில் ஒரு ப்ரைமரி ஹெல்த் செண்டர் இருக்கிறது. அதிலே பேஷெண்ட்ஸ் இருக்க முடியாது. மழை பெய்தால் தண்ணீர் ஒழுகுகிறது. சும்மா தொட்டால் எலெக்ட்ரிக் ஷாக் அடிக்கிறது. பஞ்சாயத்து யூனியன் தலைவரிடம் அதை ரிப்பேராவது செய்யலாம் என்று சொன்னால், 'நாங்கள் செய்யக்கூடாது, அது கவர்ன்மென்ட் பில்டிங்' என்று சொல்லி விட்டார்கள். என்ஜினீயரிடத்தில் போய்ச் சொன்னால், 'நாங்கள் ஒன்றும் செய்ய முடியாது, ஏனென்றால் இந்த பில்டிங் இன்னும் எங்களுக்கு ஹாண்ட் ஓவர் செய்யப்படவில்லை' என்று சொல்லுகிறார்கள். இதனால் பொது ஜனங்கள் பாதிக்கப்படுகிறார்கள். ப்ளாக்கில் செய்வதை உடனே பப்ளிக் வொர்க்ஸ் டிபார்ட்மென்ட் எடுத்துக்கொள்ளவேண்டும். இல்லாவிட்டால் மக்கள் பாதிக்கப் படுவதாக இருக்கிறது. ஆகையால் இதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று சொல்லி, கவர்னர் உரையை ஆதரித்து எனது உரையை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. எம். வி. கரிவேங்கடம்:** கனம் சட்ட அவைத் தலைவர் அவர்களே, கவர்னர் உரைமீது ஒரு சில கருத்துக்களைச் சொல்ல ஒரு வாய்ப்பை நல்கியமைக்கு எனது உளம்கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கவர்னர் உரையிலே சீன ஆக்கிரமிப்பை பற்றித்தான் பெரும் பாலும் காணப்படுகிறது. சீன ஆக்கிரமிப்பைப் பொறுத்தவரையில், நமது பாதுகாப்பு முயற்சிகள் தளராது, கண்காணிப்பு தொடர்ந்து நடந்துகொண்டிருக்கும் என்ற முறையிலே கவர்னர் உரையிலே வாசகங்கள் அமைந்திருக்கின்றன. சீன ஆக்கிரமிப்பைப் பொறுத்தவரையில் ஆறு நடுநிலை நாடுகள் கொழும்பு வில் சந்தித்து ஒரு சிலப் பிரேரணைகளை அங்கீகாரம் செய்து, அவைகளை எடுத்துக்கொண்டு திருமதி பண்டாரநாயகா அவர்கள் சீனப் பிரதமரைச் சந்தித்து, அதற்குப் பின்னால் சீனப் பிரதமர் அவர்கள் அந்த கொழும்பு மாநாட்டுப் பிரேரணைகளை ஒத்துக் கொள்வார் என்ற எண்ணம் அவருக்கு உண்டாகிற நிலையிலே, அத்தகைய நம்பிக்கை கொண்டு டில்லிக்கு வந்து, பின்னால் நமது பிரதமரைச் சந்தித்து, அதற்குப் பின்னால் இந்திய அரசாங்கத்தின் முடிவு கொழும்புப் பிரேரணைகளை ஒத்துக்கொள்வதாக இருக் கிறது என்று அறிந்த பின்னால், அந்த முடிவை அரசாங்கம் அறிவித்த பின்னர், சீனக்காரர்கள் அந்த முடிவை ஏற்றுக் கொள்ளவில்லை. அது இப்போது கொழும்பு ப்ரொபோஸல்களை ஏற்றுக்கொள்ளவில்லை என்ற முடிவுக்கு வந்திருக்கிறது. அதோடு மட்டுமல்லாமல் ஒரு பக்கத்தில் போர் நிறுத்தப்



30th January 1963] [திரு. எம். வி. கரிவேங்கடம்]

பிரகடனத்தைச் செய்திருக்கிறது—யுத்த தளவாடங்களை வாபஸ் பெறுகிறது. அதே நேரத்தில் வாபஸ் பெறப்படுகிற அந்த இடத்தில் நமது படைகள் போகக் கூடாது, வரக்கூடாது என்று சொல்லுகிறார்கள். அதே நேரத்தில் திபேத் போன்ற எல்லாப் பகுதிகளிலும் சீனு தன்னுடைய யுத்த தளவாடங்களையும் போர் விமானங்களையும். . .

**கனம் சபாநாயகர்:** இது பார்லிமெண்ட் அல்ல. தாங்கள் இப்போது பேசுவதைப் பார்த்தால் ஃபாரின் பாலிஸியைப் பற்றிப் பேசுவது போலத் தோன்றுகிறது. அதைப் பற்றி பார்லிமெண்டில்தான் பேசவேண்டும்.

**திரு. எம். வி. கரிவேங்கடம்:** கவர்னர் உரையிலே அதைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகையால்தான் அதைப் பற்றிப் பேசுகிறேன். சீனு தன் யுத்த முயற்சிகளைத் தளர்த்துவதாக இல்லை. எந்த சந்தர்ப்பத்திலும் யுத்தம் வரலாம் என்ற நிலை இருப்பதால், யுத்த முயற்சிகள், பாதுகாப்பு முயற்சிகள் தளராது நீடித்து நடக்கவேண்டும் என்ற முறையில் கவர்னர் அவர்கள் உரை அமைந்திருக்கிறது. இதை இந்த நாட்டிலே உள்ள அத்தனை கட்சிகளும் ஏகமனதாக வரவேற்கின்றன. அதோடு மட்டுமல்லாமல் நமது விசேஷ ஆயுத போலீஸ் படையும், மற்ற படைகளும் இந்திய அரசாங்கத்திற்கு உதவியாக அனுப்பப் பட்டிருப்பதாக குறிப்பிடப்பட்டிருக்கிறது. அப்படி குறிப்பிடப் பட்டிருக்கும் அதே நேரத்தில் 'இந்தியா ரிஸர்வ்ஸ்' என்ற போலீஸ் படை இங்கு தயாரிக்கப்படுகிறது. இதற்கு ஆள் சேர்க்கப்படுகிறது என்ற விவரமும் காணப்படுகிறது. அதே சந்தர்ப்பத்தில் 7,000 கேடெட்டுகளையும், கிராமத் தொண்டர் படையையும் அமைக்கப் போவதாகக் குறிப்பிடப்படுகிறது. இத்தனை பாதுகாப்பு முயற்சிகள் போதுமா என்று பார்க்கும் போது, கிராமத் தொண்டர் படையினருக்கு நல்ல முறையில் நவீன ஆயுதங்களை எப்படியெப்படி உபயோகிப்பது என்று பயிற்சி அளிக்க அரசாங்கம் வகை செய்யவேண்டுமென்று சொல்ல ஆசைப்படுகிறேன். இந்த துணைக்கண்டத்தைப் பொறுத்த வரையில்—இந்திய துணைக்கண்டத்தின் சுதந்திரத்தைப் பொறுத்த வரையில், சீனக்காரர்களுக்கு இங்கே உள்ளவர்கள் தங்கள் சுதந் திரத்தை இழக்க சம்மதிக்கமாட்டார்கள், அப்படிப்பட்ட நிலைமை வருமானால் இந்திய துணைக்கண்டத்திலே ஒரு ஆள்கூட இருக்கமாட்டார்கள், புல் பூண்டுதான் இருக்கும் என்று அவர் களுக்குப் புரிகின்ற அளவுக்குப் பாதுகாப்பு முயற்சிகளும், கிராமத் தொண்டர் படை அமைப்பும் இருக்கவேண்டும். அதற்கான முயற்சியில் அரசாங்கம் ஈடுபடவேண்டும் என்று அரசினரை மிகவும் விரும்பி, வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். அதே சந்தர்ப்பத்தில், நிச்சயமாக இதற்கான வழிவகை சொல்லப்பட் டிருந்தாலும்கூட நல்ல முறையில் அவைகள் செயல்பட ஊக்கு விக்கவேண்டுமென்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

கிராமத்தில் தொண்டர்படை அமைக்கச் சொல்லுகிற நேரத்தில், எங்கே தங்களை சீனு யுத்தத்துக்கு அனுப்பி விடுவார் களோ என்ற அளவுக்கு மக்களிடையே அச்சமும், பயமும் இருப்ப

தாகச் சொன்னார்கள். நிச்சயமாக அத்தகைய அச்சத்தையும் பயத்தையும் போக்கி, நாட்டுக்கு எத்தத் தியாகத்தையும் செய்து, நாட்டைக் காக்கும் நிலையை உண்டாக்க அரசாங்கம் நல்ல முறையில் பிரச்சாரத்தைச் செய்ய வேண்டும். இந்த மாமன்றத்தில் உள்ள அங்கத்தினர்கள் செய்யவேண்டும். ராமன் ஆண்டால் என்ன, ராவணன் ஆண்டால் என்ன என்ற நிலை மாறி, இந்திய துணைக்கண்டத்தின் சுதந்திரத்தைக் காக்க எத்தகைய தியாகத்தையும் செய்யத் தயாராக இருக்கவேண்டியதாக இருக்கிறது. இப்போது ஏற்பட்டுள்ள போராட்டம் மக்களாட்சிக்கும், சர்வாதிகாரத்திற்கும் இடையே ஏற்பட்டுள்ள ஒரு போராட்டமாகும். பிரிவினையைக் கோருகிற திராவிட முன்னேற்றக் கழகம்கூட இந்தப் போராட்டத்திலே அரசாங்கத்திற்கு ஆதரவு தருகிறது. இந்த ஆதரவை நல்ல முறையில் பயன்படுத்தி, கட்சிக் கண்ணோட்டத்தில் பார்க்காமல், நடு நிலைமைக் கொள்கை நல்லதா அல்லது கெட்டதா, நடு நிலைமைக் கொள்கை வேண்டுமா வேண்டாமா,
1-30 p.m. கூட்டுச் சேராக் கொள்கை வேண்டாம் என்று யாராவது பேசக்கூடிய பேச்சுக்களையும், நிச்சயமாக ஒரு கட்சியில் உள்ள தொண்டர்கள் மறுப்புத் தெரிவித்தாலும், ஆளும் பொறுப்பில் உள்ள அமைச்சர்கள் இத்தகைய மறுப்புகளில் ஈடுபடாமல், அவர்களுடைய பேச்சும், சொல்லும், செயலும் இருக்க வேண்டும் என்று நான் மன்றாடி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். நெருக்கடியான நிலையில் அனைவரையும் அழைத்துச் செல்லவேண்டிய நிலையில் இருக்கக் கூடியவர்கள், நடு நிலைமைக் கொள்கை கூடாது என்று யாராவது சொன்னாலும், அமைச்சர்கள் அதை மறுத்துச் சொல்லக்கூடாது; மற்றவர்கள் வேண்டுமானால் சொல்லிக்கொள்ளட்டும். ஏனென்றால் அந்தக் கட்சியில் உள்ளவர்கள் யுத்த முயற்சிக்கு என்னென்ன செயல்களில் ஈடுபடுகிறார்களோ, முயற்சிகளில் ஈடுபடுகிறார்களோ அவைகளில் தளர்ச்சி ஏற்படும், தட்டு ஏற்படும், தடை ஏற்படும். ஒரு கட்சியில் உள்ளவர்கள் சொல்லக் கூடிய கருத்துக்களுக்கு மறுப்பு அளித்து, அதன் மூலம் அந்தக் கட்சியின் தொண்டர்கள், அல்லது தலைவர்களின் ஆதரவு குறையும் அளவுக்கு பேச்சுக்கள் இருக்கக்கூடாது என்று மீண்டும், மீண்டும் வலியுறுத்திச் சொல்ல ஆசைப்படுகிறேன். கவர்னர் உரையில், யுத்த நெருக்கடி நிலை என்றாலும், திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட தொகையில் வெட்டு இல்லை, ஆனால் ஒரு சில திட்டங்கள் நிறுத்தப்பட்டு, யுத்த கால முயற்சிக்கு என்னென்ன தேவையோ அவைகளுக்கு அதிகமான தொகை ஒதுக்கப்பட்டு, துரிதப்படுத்தப்பட்டிருக்கிறது என்று காண்கிற நேரத்தில் அது நிச்சயமாக வரவேற்கத் தக்கதாக இருக்கிறது.

உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்காக கூடுதலான தொகை அளிக்கப்பட்டிருக்கிறது, சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களுக்கு ஆக்கம் அளிப்பதற்காகவும், உற்சாகம் அளிப்பதற்காகவும் அதிகத் தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறதென்று கவர்னர் உரையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே சொல்லப்பட்டிருக்கிற மஞ்சளாறுத் திட்டம், சோமுகி நதித் திட்டம், பாலாறு அணைக்கட்டு அபிவிருத்தித் திட்டம் ஆகியவைகள் கவர்னர் அவர்கள் உரையில்





இடம்பெற்றிருக்கின்றனவே ஒழிய, எனது தொகுதியில் உள்ள சின்னாறு அணைக்கட்டு திட்டத்தைப் பற்றி ஒன்றும் குறிப்பிடப்படவில்லை. சின்னாறு என்ற பெயர் சிறியதாக இருந்தாலும் அது ஒரு பெரிய அணைக்கட்டுத் திட்டம். அது சம்பந்தமாக புள்ளி விவரங்கள் மறைக்கப்பட்டிருக்கின்றன. . . (மணியடிக்கப்பட்டது). I will continue my speech tomorrow Sir.

MR. SPEAKER: The hon. Member has got only two minutes more. Is he going to talk for two minutes tomorrow? கனம் அங்கத்தினர் அவர்கள் நின்றுகொண்டிருக்கிற சமயத்தில் பேசி முடித்துவிடலாம்.

திரு. எம். வி. கரிவேங்கடம்: ஆகவே சின்னாறு அணைக்கட்டுத் திட்டத்தை நிறைவேற்றும்படி நான் வலியுறுத்துகிறேன். நமது பிரதமர் அவர்கள் தற்காப்பு முயற்சியில் உற்பத்திப் பெருக்கம் மிகவும் முக்கியம் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே சின்னாறு அணைக்கட்டுத் திட்டம் அவசியம் சேர்த்துக்கொள்ளப்படவேண்டும். அந்தத் திட்டம் இந்த உரையில் இடம் பெறாதது மிகவும் வருந்தத்தக்கது.

மின்சாரத்தைப் பொறுத்த வரையில் மூன்றாவது அணுசக்தி நிலையம் நமது நாட்டில் ஏற்படுத்தும்போது அது தமிழ் நாட்டில் அமையும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. வரும் கோடை மாதங்களில் மின்சார சப்ளை நிலைமை சங்கடப்படலாம் என்றும் கூறப்பட்டிருக்கிறது. மின்சார உற்பத்தியை அதிகரிப்பதற்காக நெய்வேலியில் மூன்றாவது மின்சார உற்பத்தி யூனிட்டை இந்த ஆண்டு மே மாதத்திற்குள்ளாக நிர்மாணித்து முடிப்பதற்கும், மேட்டூர் சுரங்க மின்சாரத் திட்டத்தின் மூன்றாவது, நான்காவது யூனிட்டுகளை மூன்றாவது திட்டக் காலத்திலேயே நிர்மாணிக்கவும் முயற்சி செய்யப்படுவதாக சொல்லப்பட்டிருக்கிறது. சென்ற மாதத்தில் என்னுடைய தொகுதியில் உள்ள ஹொகநகல் திட்டப் பகுதியை தொழிலமைச்சர் அவர்கள் பார்வையிட வந்தார்கள். 1-34 p.m. எல்லா இடங்களையும் சுற்றிப் பார்த்தார்கள். அதற்குப் பின்னால் கன்யாகுமரி மாவட்டத்தில் தென்மண்டல மாநிலங்களின் முதலமைச்சர்கள் கூட்டம் நடந்தது. அதில் மத்திய அமைச்சர் திரு. லால்பகதூர் சாஸ்திரி அவர்களும் கலந்துகொண்டார்கள். அதற்குப் பிறகு நமது முதலமைச்சர் அவர்களும், மைசூர் மாநில முதலமைச்சர் அவர்களும் சந்தித்து இதுபற்றிப் பேசி, அந்த இடத்தை இரண்டு பேர்களும் சேர்ந்து பார்வையிடுவார்கள் என்று பத்திரிகைச் செய்தி கூறியது. நமது முதலமைச்சர் அவர்கள் தக்க நடவடிக்கை எடுத்து இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு முயற்சி செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மற்றத் திட்டங்களை நிறைவேற்ற வேண்டாமென்று நான் சொல்லவில்லை. இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதனால் அதிகமாக மின்சாரம் கிடைக்கும், இது நல்ல பலன் தரக்கூடிய திட்டம். ஆகவே ஹொகநகல் அணைக்கட்டுத் திட்டத்தை சீக்கிரமாக நிறைவேற்ற ஏற்பாடு செய்யவேண்டுமென்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

[திரு. எம். வி. கரிவேங்கடம்] [30th January 1963

அடுத்தபடியாக . . .

**கனம் சபாநாயகர்:** இப்பொழுது நேரமாகிவிட்டது. பிறகு வேண்டுமானல் பார்த்துக்கொள்ளலாம்.

The House will now adjourn and meet again at 8-30 a.m. tomorrow.

The House then adjourned.

## V.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

### A. Statutory Rules and Orders.

82. *Notification issued with G.O. P. No. 3958, Revenue, dated 29th October 1962 amending the Revenue Department Notification issued in G.O. Ps. No. 2252, Revenue, dated 22nd May 1962. regarding the delegation of powers to assess dealers with turnover of Rs. 50,000 and less vested with the Deputy Commercial Tax Officers and Joint Commercial Tax Officers. [Laid on the Table of the House under section 53 (5) of the Madras General Sales Tax Act, 1959 (Madras Act I of 1959).]*

83. *Notification issued with G.O. Ms. No. 2695, Local Administration, dated 12th December 1962 amending rules regarding the qualifications of officers and servants of Municipal Councils. [Laid on the Table of the House under section 304 (d) of the Madras District Municipalities Act, 1920 (Madras Act V of 1920).]*

84. *Notification issued with G.O. Ms. No. 2658, Local Administration, dated 6th December 1962 amending the rules relating to establishment under Municipal Councils. [Laid on the Table of the House under section 304 (d) of the Madras District Municipalities Act, 1920 (Madras Act V of 1920).]*

85. *Notification issued with G.O. Ms. No. 4036, Home, dated 26th November 1962 regarding the issue of general Import Permit to the Indian Molasses Company (Private), Limited, Madras, for the import of the molasses from Mysore State. [Laid on the Table of the House under section 54 (3) of the Madras Prohibition Act, 1937 (Madras Act X of 1937).]*

### B. Reports, Notifications and other papers.

*16. *Notice of Demands for Grants for further expenditure in the year 1962–63 (English and Tamil).*

*17. *Demands for Grants for further expenditure and detailed supplementary estimates thereof for the year 1962–63 (English and Tamil).*

*18. *Speech of the Hon. Minister for Finance presenting the First Supplementary Estimates for 1962–63 to the Madras Legislature on the 29th January 1963.*

* Placed on the table of the House on 29th January 1963.



## APPENDIX.

*[1-ம் பக்கத்திலுள்ள 11 எண்ணுள்ள நட்சத்திரக் குறியிட்ட கேள்வியின் பதிலைக் காண்க]*

### தமிழ்நாடு பஞ்சாயத்து யூனியன்

*நகரப் பஞ்சாயத்து தலைவர்களின் பிரதிநிதிகள் மகாநாடு, 21—9—1962.*

**தீர்மானங்கள்.**

**தீர்மானம் 1.**

நகரப் பஞ்சாயத்து நிர்வாகம் சிறமையாகவும், சுமுகமாகவும் நடைபெற நடைமுறையிலும், அமைப்பிலும் அடியிற்கண்ட முக்கிய மாறுதல்கள் செய்யப்பட வேண்டுமென இம்மகாநாடு அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறது —:

1. ஜனத்தொகை 10 ஆயிரத்துக்கும் வருட வருமானம் ரூ. 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட நகரப் பஞ்சாயத்துக்களின் வருவாய் இனங்களும், சர்க்கார் கிராண்ட்களும், ஜில்லா முனிசிபல் சட்டத்திலுள்ளதைப் போல் அமைக்கப்பட வேண்டும்.

2. ஜனத்தொகை 10 ஆயிரத்திற்குள்ளும் வருட வருமானம் ரூ. 50 ஆயிரத்திற்குட்பட்ட பஞ்சாயத்துக்களின் நிர்வாக முறையும், பஞ்சாயத்துச் சட்டத்தில் உள்ளதைப் போல் இருப்பினும், வருவாய் இனங்களைப் பொறுத்த வரை கிராமப் பஞ்சாயத்துக்களைப் போல் அமைய வேண்டும்.

3. நிர்வாக அதிகாரிகள் தற்போதுள்ளதைப் போலன்றி நிர்வாக விஷயங்களின் தலைவரைக் கலந்து செயல்படும்படி ஏற்பாடு செய்ய வேண்டும்.

4. தபால்கள் எல்லாம் தலைவர் மூலமாக நிர்வாக அதிகாரிக்கு அனுப்பவேண்டும். அதே மாதிரி பஞ்சாயத்திலிருந்து அதிகாரிகளுக்கும், சர்க்காருக்கும் தலைவர் மூலமாகவே தபால்கள் அனுப்பப்பட வேண்டும்.

5. நிர்வாக அதிகாரி லீவில் போகும்போது தலைவருக்கு நிர்வாக அதிகாரங்களனைத்தும் கொடுக்கப்பட வேண்டும்.

6. தலைவர் அங்கீகாரத்திற்குப் பிறகுதான் நிர்வாக அதிகாரி செக் போட வேண்டும்.

7. அப்பாயிண்ட்மெண்ட் கமிட்டியே புதிய நியமனங்கள் செய்வதுடன், சிப்பந்திகளின் தண்டனை, பதவி உயர்வு, அப்பீல் முதலியவற்றை முடிவு செய்ய வேண்டும்.

8. சானிட்டரி சிப்பந்திகளுக்குக் கொடுக்கும் வீட்டு வாடகை அலவன்ஸ் ரூ. 3-ம் எல்லா நகரப் பஞ்சாயத்து சிப்பந்திகளுக்கும் கிடைக்க வேண்டும்.

9. சானிட்டரி இன்ஸ்பெக்டர், இதர சுகாதார சிப்பந்திகள் பஞ்சாயத்தின் கண்ட்ரோலில் செயல்பட வேண்டும்.

10. சானிட்டரி இன்ஸ்பெக்டர் தனது டைரியை மாதாந்திரக் கூட்டத்தில் வாசித்து அங்கீகாரம் பெறவேண்டும்.

11. ஒவ்வொரு அஸிஸ்டெண்ட் என்ஜினியருக்குக் கீழும் ஒரு சூப்பர்வைசர் பிரத்தியோகமாக நகரப் பஞ்சாயத்துகளுக்கென நியமிக்கப்பட வேண்டும். நகரப் பஞ்சாயத்துக்களின் வேலைகளுக்கு வேண்டிய சிமிண்ட் தாமதமின்றி கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

12. அவசர காலங்களில் ரூ. 1,500 வரை எஸ்டிமேட் தயாரித்து பஞ்சாயத்துக்களின் அனுமதியுடன் வேலை செய்வதற்கு நிர்வாக அதிகாரிகளுக்கு அதிகாரம் கொடுக்க வேண்டும்.

13. புதிய நியமனங்கள் செய்யும்போது எம்பிளாய்மெண்ட் எக்சேஞ்சில் பதிந்திருந்தால் போதும் என்றிருக்க வேண்டும். அவர்கள் சிபார்சு செய்பவர்களைத்தான் நியமிக்க வேண்டுமென்று இருக்கக்கூடாது.

14. தலைவருக்கென ஒரு பியூன் நியமிக்கப்பட வேண்டும். வசதியுள்ள இடங்களில் டெலிபோன் வைத்துக்கொள்ள அனுமதி கொடுக்க வேண்டும்.

15. பஞ்சாயத்து குமஸ்தாக்கள், ரெவின்யூ இன்ஸ்பெக்டர்கள், சானிட்டரி மேஸ்திரிகள், பில் கலெக்டர்கள் மூன்று வருடத்திற்கு மேல் தலைவரின் அபிப்பிராயம் பெற்று மாறுதல் செய்ய வேண்டும்.

16. தொழில் வரியை அந்தந்த தொழிற்சாலை அதிபரிடமே வசூலிப்பதற்கனுகூலமாய் சட்டத்தில் வகை செய்ய வேண்டும்.

17. பஞ்சாயத்து யூனியன் சிப்பந்திகளுக்கும், நகரப் பஞ்சாயத்து சிப்பந்திகளுக்கும் மாதச் சம்பளத்தில் வித்தியாசம் இருக்கக்கூடாது.

18. பஞ்சாயத்துக்கு வேண்டிய கணக்கு, பில் புத்தகங்கள், பாரங்கள் அந்தந்த ஜில்லாவிலேயே அச்சடித்து சீக்கிரம் கிடைக்க வகை செய்ய வேண்டும். அல்லது சர்க்கார் அச்சு யந்திர சாலையிலேயே அச்சடித்துத் தாமதமின்றி கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

19. காரியாலயக் கட்டிடம் கட்ட விரும்பும் அல்லது விஸ்தரிக்க விரும்பும் நகரப் பஞ்சாயத்துக்களுக்கு ரூ. 7,500 கிராண்டும், ரூ. 7,500 இருபது வருட கடனுமாகக்



கொடுத்து, கட்டிடம் கட்ட வசதி செய்து தர வேண்டும். மேற்கொண்டு தேவைப்படும் பணத்தை பஞ்சாயத்தே போட்டுக்கொள்ளலாம்.

20. நகரப் பஞ்சாயத்துக்களில் பாதுகாக்கப்பட்ட குடி தண்ணீர் திட்டமும், சாக்கடைத் திட்டமும் விரைவில் நிறைவேற்ற ஏற்பாடு செய்ய வேண்டும்.

21. வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிப்பதற்காக நகரப் பஞ்சாயத்து ஒவ்வொன்றிலும் தொழில் பள்ளி ஒன்று நடைபெற வேண்டும். தொழிற்சாலை ஒன்றும் நடைபெற வேண்டும்.

22. (அ) நகரப் பஞ்சாயத்துக்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை அப்புறப்படுத்த வேண்டுமென தீர்மானம் போட்டால் உடனடியாக அப்புறப்படுத்த ஏற்பாடு செய்ய வேண்டும்.

(ஆ) பஞ்சாயத்து எல்லைக்குள் இருக்கும் ஒப்படைக்கப் படாத புறம்போக்கு நிலங்களை பஞ்சாயத்துக்கள் விரும்பினால் அவர்களுக்கே அந்த நிலங்களைக் கொடுத்துவிட வேண்டும்.

23. சினிமா தியேட்டர்களை பரிசோதனை செய்ய நகரப் பஞ்சாயத்துத் தலைவர்களுக்கும் அதிகாரம் கொடுக்க வேண்டும்.

24. டிவிஷனல் பஞ்சாயத்து அதிகாரி உத்தியோகத்திற்கு பஞ்சாயத்து விஸ்தரிப்பு அதிகாரிகளிலிருந்துதான் நியமிக்க வேண்டும்.

25. தாலூகா தலைநகரங்களில் நெருப்பணைக்கும் மோட்டார் படை வைக்க வேண்டும்.

26. நகரப் பஞ்சாயத்துத் தலைவர்கள் தேர்தலும், பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் தேர்தலும் நேரடியாக வயது வந்தோர் ஓட்டர் ஜாபிதாவை வைத்து, இரகசிய ஓட்டு முறை மூலம் நடத்த வேண்டும். தற்போதுள்ள மாதிரி அங்கத்தினர்கள் மூலம் தேர்தல் நடத்துவது கூடாது. லஞ்சம் கொடுப்பது, ஆட்களை மறைத்து வைத்தல் முதலியவற்றைத் தடுப்பதற்கு இதுவே சிறந்த வழி.

27. அமைச்சர்கள், மாகாண அதிகாரிகள், ஜில்லா கலெக்டர், ரிவின்யூ டிவிஷனல் ஆபீசர் ஆகியவர்களின் சுற்றுப் பிரயாணத் திட்டம் நகரப் பஞ்சாயத்துத் தலைவர்களுக்கு அனுப்ப வேண்டும்.

28. ஹைவேஸ் ரோடுகளில் ஆக்ரமிப்புகளுக்கு லைசென்ஸ் கொடுக்கும் அதிகாரத்தை நகர பஞ்சாயத்துக்கே கொடுத்துவிடலாம். அதன் மூலம் கிடைக்கும் வருவாய் அந்தந்த பஞ்சாயத்தைச் சேர வேண்டும்.

29. திருவிழா காலங்களில் சுகாதார சம்பந்தமான காரியங்களுக்குச் செலவாகும் நிதியில் பாதியை சம்பந்தப்பட்ட தேவஸ்தான நிதியிலிருந்து வசூலிக்க சர்க்கார் உத்திரவிட வேண்டும்.

30. பள்ளி மாணவர்களின் சம்பளச் சலுகை, மற்றும் காலர்ஷிப் அப்ளிகேஷன் பாரங்களில் நகரப் பஞ்சாயத்துத் தலைவர்கள் கையெழுத்திட்டு, அத்தாட்சி கொடுக்க அதிகாரம் கொடுக்க வேண்டும்.

31. யூனிவர்சிடி செனட்டுக்கு ஜில்லா போர்டிலிருந்து ஒரு பிரதிநிதியை முன்பு அனுப்பியது போல, பஞ்சாயத்து யூனியன்களின் பிரதிநிதியாக ஒருவரை ஒவ்வொரு ஜில்லாவிலிருந்தும் அனுப்ப ஏற்பாடு செய்ய வேண்டும்.

**தீர்மானம் 2.**

நிதி நிலைமையில் அடியிற்கண்ட மாறுதல்கள் ஏற்பட வேண்டுமென்று தீர்மானிக்கிறது.—

1. 1958-ம் வருட சட்டம் அமுலுக்கு வருவதற்கு முன் இருந்தது போல் ரோடுகளில் மெட்டல் பண்ண, தார் போட, சிமிண்ட் ரோடு போட, பாலம் கட்ட ஐம்பது சதவிகிதம் சர்க்கார் கிராண்ட் கிடைக்க வழி செய்ய வேண்டும்.

2. 1958-ம் வருட சட்டம் அமுலுக்கு வருவதற்கு முன்னிருந்தது போல் நகரப் பஞ்சாயத்து எல்லைகளிலுள்ள ஹைவேஸ் ரோடுகளிலும், யூனியன் ரோடுகளிலும் உள்ள மரங்களின் பலனை நகரப் பஞ்சாயத்துக்களே ஏலம்விட்டு, அதன்மூலம் கிடைக்கும் வருவாயை நகரப் பஞ்சாயத்துக்களே அடையவேண்டும்.

3. நகரப் பஞ்சாயத்துக்களின் அதிகார விஸ்தீரணத்திற்குள்ளிருக்கும் எல்லா நீர்ப்பாசன குளங்களிலும், இதர புறம்போக்கு நிலங்களிலும் மரம் வைத்து, பாதுகாத்து, அவைகளை விற்று அந்த வருவாயைப் பஞ்சாயத்துகளுக்குச் சேர்த்துக்கொள்ள ஏற்பாடு செய்ய வேண்டும்.

4. கேளிக்கை வரி வருமானம் முழுதும் அந்தந்த நகரப் பஞ்சாயத்துக்கே கிடைக்கச் செய்யவேண்டும்.

5. பிரைவேட் மார்க்கெட்டுகளை நஷ்டஈடு கொடுத்து ஆர்ஜிதம் செய்துகொள்ள நகரப் பஞ்சாயத்துக்களுக்கும் அதிகாரம் கொடுக்க வேண்டும்.



3-4 Carte Nil
GOVERNMENT OF MADRAS ... SECRETARIAT

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY.

**Saturday, the 2nd February 1963.**

The House met in the Assembly Chamber, Fort St. George, at half-past eight of the clock Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

## I.—QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS.

*உல்லாசப் பிரயாணிகளுக்கு இடவசதி (கொல்லிமலை)*

* 41 கேள்வி.—**திரு. து. ப. அழகமுத்து:** கனம் செய்தித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

கொல்லிமலை அடிவாரத்திலுள்ள புளியஞ் சோலையில் கோடை காலத்தில் உல்லாசப் பிரயாணத்திற்கு வரும் பிரயாணிகள் தங்குவதற்கு இடவசதி செய்து தர உத்தேசமுண்டா?

**கனம் திரு. ஜி. பூவராகன்:** இல்லை, ஐயா.

*Tiruverambur Panchayat Union (Office buildings)*

* 42 Q.—SRI K. A. MATHIALAGAN (on behalf of SRI M. KALYANASUNDARAM). Will the Hon. the Chief Minister be pleased to state the reasons for the delay in constructing the office buildings for Tiruvarambur Panchayat Union in Tiruchirappalli North Development district and when the work is expected to be completed?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** திருவரம்பூர் பஞ்சாயத்து யூனியன் அலுவலகக் கட்டிடம் கட்டுவதற்கான இந்த மனையை அடைவதற்குத் தாமதம் ஏற்பட்டதால் தான் மேற்படி கட்டிடம் கட்டவும் தாமதப்பட்டது. இப்போது மனையை எடுத்துக் கொண்டுவிட்டோம். இந்த வேலை மேற்கொள்ளப்பட்டு விரைவில் நிறைவேற்றப்படும்.

**திரு. கரு. சீமைச்சாமி:** தமிழகத்திலுள்ள பஞ்சாயத்து யூனியனின் மன்றங்களுக்கு எத்தனை கட்டிடங்கள் கட்டப்பட்டிருக்கின்றன? எத்தனை வாடகை கட்டிடங்களில் செயல்பட்டு வருகின்றன?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** தனியாக கேள்வி போட்டால் பதில் அளிக்கப்படும்.

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி:** பொதுவாக பஞ்சாயத்து யூனியன் மன்ற கட்டிடங்கள் கட்டுவதை எல்லாம் நிறுத்தப்பட்டிருக்கின்றனவே, அவைகள் மீண்டும் எப்பொழுது துவங்கப்படும்?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** இந்த நெருக்கடி நிலைமையையொட்டி புதிதாக கட்டிடங்கள் கட்டுவது நிறுத்திவைக்கப்பட்டிருக்கிறது. நெருக்கடி நிலைமை தீர்ந்தபிறகு அவை எல்லாம் எடுத்துக்கொள்ளப்படும்.

**திரு. டி. கார்ச்சா கவுடர்:** பஞ்சாயத்து யூனியன் கட்டிடங்கள் கட்டுவது கிராமப் புறங்களிலே அல்லாமல் நகரப்புறங்களிலே தான் கட்டப்பட்டு வருகின்றன என்பதை கனம் அமைச்சர் அவர்கள் அறிவார்களா? அந்தக் கட்டிடங்களை கிராமங்களிலே கட்டுவதற்கு உத்திரவு போடுவார்களா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** பஞ்சாயத்து யூனியன் கட்டிடங்கள் நடுஸ்தலமாக இருக்க வேண்டும். அதனால்தான் நகரங்களிலே கட்டப்பட்டு வருகின்றன.

*Jails (Overcrowding)*

* 43 Q.—SRI S. MADHAVAN : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) whether there was any overcrowding in jails in July 1962; and

(b) if so, the action taken in the matter?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Yes, except in the Central Jail, Salem and the District Jail, Pudukkottai.

(b) All available spare space inside the jails, such as Civil Debtor Yards, workshops, out-quarantine, etc., were used to accommodate prisoners. In Madras Central Jail, they were accommodated in the open enclosures with sentries at the locked gates. In the case of the Sub-Jails, surplus prisoners were transferred to the nearest Central Jail.

(அ) சேலம் மத்திய சிறை, புதுக்கோட்டை மாவட்டச் சிறை ஆகியவை நீங்கலாக ஏனைய சிறைகள் எல்லாவற்றிலும் கைதிகள் அளவுக்கு மேல் இருந்தனர்.

(ஆ) சிறைகளில் காலியாயிருந்த எல்லா இடத்திலும் அதாவது சிவில் கடனாளிகளை அடைத்து வைக்கும் இடம், வேலைப் பட்டறைகள், குவாரன்டைன் யார்டு போன்ற இடங்களில் கைதிகள் அடைத்து வைக்கப்பட்டனர். சென்னை மத்திய சிறையில் இவர்கள் திறந்த வெளி அடைப்பில் அடைத்து வைக்கப்பட்டு இந்த அடைப்பின் கதவுகளுக்கு வெளியே காவலாளிகள் வைக்கப் பட்டனர். சப்-ஜெயில்களைப் பொறுத்த வரையில் அதிகப்படியான கைதிகள் அருகிலுள்ள மத்திய சிறைக்கு மாற்றப்பட்டனர்.

* 44 Q.—SRI S. MADHAVAN : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) whether a tin shed is used for locking up the prisoners in Pudukottai Jail; and

(b) if so, the capacity of that shed?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) No Sir.

(b) Does not arise.



**திரு. கே. ஏ. மதியழகன்:** சென்னை மத்திய சிறையில் இருக்கிற ஆஸ்பத்திரியில் ஆரம்ப சிகிச்சை கொடுக்கத் தவறிய காரணத்தினால்தான் விலைவாசி போராட்டத்தில் ஈடுபட்ட கோ. சு. மணி கோரமரணம் அடைந்தார் என்பது சர்க்காருக்குத் தெரியுமா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** அத்தகைய தகவல் சர்க்காரிடம் இல்லை.

**திரு. ஆ. தங்கவேலு:** சட்டமன்றத் தலைவர் அவர்களே, வேலூர் மத்திய சிறையிலுள்ள பலதாப்பட்ட கைதிகள் மழை காலத்தில் உணவு அருந்த இடவசதியில்லாமல் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அவர்களுக்கு உணவு அருந்துவதற்கு இடவசதி செய்து கொடுக்க சர்க்கார் ஏற்பாடு செய்யுமா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** மழை அதிகமாக இருந்த காரணத்தினால் அந்த அசௌகரியம் ஏற்பட்டது. சாதாரணமாக மழை காலங்களிலே சௌகரியம் இருக்காது. பெரிய இடங்களில் இருப்பவர்கள்கூட மழை அதிகமாக இருந்தால் சாப்பிடும் இடத்திற்குப் போய்வருவது கஷ்டமாக இருக்கிறது.

**திரு. கே. ஏ. மதியழகன்:** மத்திய சிறை ஆஸ்பத்திரியில் தலைமை டாக்டர் ராமநாதன் அவர்களை, கோ. சு. மணியின் மரணத்திற்குப்பிறகு மாற்றப்பட்டதின் காரணம் என்ன?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** தனியாகக் கேள்விபோட்டால் பதில் அளிக்கப்படும். ஒன்று அவர்கள் அந்தச் சிறையில் இறந்தவர்க்கு அனுதாபியாக இருந்தார், அதனால் மாற்றப்பட்டார் என்று நினைப்பது சரியல்ல.

**திரு. பி. பழனிப் பிள்ளை:** உணவு விலைவாசி போராட்டத்தில் ஈடுபட்டு ஜெயிலுக்குச் சென்ற தோழர்களை அவர்கள் உடல் நல்ல நிலையில் இருக்கும்போதே ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லப்பட்டார்கள் என்பது உண்மையா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** அதெல்லாம் டாக்டர்கள் பார்த்து செய்யவேண்டிய விஷயம்.

**திரு. முனு. ஆதி:** சென்னை மத்திய சிறையில் சுகாதார வசதி இல்லாமலும், போதிய கக்கூசுகள் இல்லாமலும் இருக்கின்றன. அதனால் அத்தனை கைதிகளும் சிறையில் கஷ்டப்பட்டார்கள். இனி மேலாவது அங்குள்ள கக்கூஸ்களை மாற்றி அமைக்க முயற்சிப்பார்களா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** சென்னை சிறையிலே நான் இருந்தபோது எப்படி இருந்ததோ அப்படியேதான் இப்பொழுதும் இருந்துகொண்டிருக்கிறது. மேலும் சீர்திருத்தம் செய்ய வேண்டும். மத்திய சிறைச்சாலையை ரெட்ஹில்ஸில் கட்டுவதாக திட்டங்கள் இருப்பதால் இப்போதுள்ள நெருக்கடி நிலைமையில் அது எடுத்துக்கொள்ளப்படவில்லை.

**திரு. மா. இராசாங்கம்:** மதுரை சிறையிலே குஷ்டரோகிகள் போன்ற கொடும் வியாதியஸ்தர்களை மற்ற கைதிகளுடன் சேர்த்து அடைத்து வைத்திருக்கிறார்கள். இதற்கு சர்க்கார் பரிகாரம் தேட முன்வருமா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** என்னிடம் தகவல் இல்லை. குறிப்பாக எழுதி அனுப்பினால் ஏதாவது நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்தால் நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. வி. எஸ். எஸ். மணி:** கைதிகளுக்குக் கொடுக்கப்படும் உணவுகள் தற்காலத்திற்கு ஏற்றவாறு மாற்றுவதற்கு சர்க்கார் ஏற்பாடு செய்யுமா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** மாற்றவேண்டிய அவசியம் இல்லை. கொடுக்கப்படவேண்டிய உணவு சத்துள்ளதாக இருக்க வேண்டும். இப்போது அப்படி அளிக்கப்பட்டுவருகிறது. எடை கூட ஏறிக்கொண்டுவருகிறது.

**திரு. கே. ஏ. மதியழகன்:** மத்திய சிறையிலே உள்ள ஆஸ்பத்திரியில் மாடுகளுக்குப் போடும் ஊசியைப்போல் கூர் மழுங்கிப் போன ஊசியைப்போட்டு சித்திரவதை செய்கிறார்கள் என்பது உண்மையா? அதேபோல் நோயாளிக்குக் கொடுக்கும் மருந்துகளிலும் தண்ணீரை அதிகமாக கலந்து கொடுக்கிறார்கள் என்பது உண்மையா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** சித்திரவதை செய்கிறார்கள் என்று சொல்வது சரியல்ல. டாக்டர் குழந்தைகளுக்கு முதல் தடவையாக ஊசி போடும்போது அழும். அடுத்த தடவை சிரித்துக்கொண்டே, போட்டுக்கொள்ளும். சாதாரணமாக டாக்டர் மருந்து கொடுக்கவேண்டிய அவசியம் இல்லை என்று சொல்லும்போது வியாதியஸ்தர்கள் வேண்டுமென்று சொன்னால், அவர்களைத் திருப்திசெய்வதற்காக மருந்தில் தண்ணீர் கலந்து கொடுக்கிறார்கள். ஒரு டாக்டரே என்னிடம் சொன்னார் ஒருவரை திருப்தி செய்வதற்காக டிஸ்டில்ட் வாட்டரை இன்ஜக்ஷன் செய்ததாக. ஆகையால் இதையெல்லாம் நாம் தவறாக நினைப்பதற்கு இடம் இல்லை.

**திரு. டி. கார்ச்சா கவுடர்:** ஜெயிலிலே காலை சிற்றுண்டிக்கு இரண்டு கோழி முட்டையும், பாலும் கொடுப்பதாகச் சொல்லுகிறார்களே உண்மையா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** அதைப்பற்றி எனக்குத் தெரியாது.

**திரு. ஆர். ரங்கசாமி:** வெளியில் இருப்பவர்களைக் காட்டிலும் ஜெயிலில் இருப்பவர்களுக்கு அதிக வசதிகள் இருந்தால், அதிகம் பேர் சிறைக்குச் செல்ல நினைக்கமாட்டார்களா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** எல்லோரும் சுதந்திர உணர்ச்சி உள்ளவர்கள். சிறைக்குப் போவதை யாரும் விரும்ப மாட்டார்கள் என்று நம்புகிறேன்.



**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி:** கனம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள் சென்னைச் சிறைச்சாலையில் நாங்கள் இருந்த சமயத்தில் கூட சுகாதார வசதிகள் இல்லாமல் இருந்தது என்று. சுதந்திரம் பெற்று ஏறக்குறைய 16 ஆண்டுகள் ஆகியிருக்கின்றன. ஏன் இன்னும் அதைச் சீர்திருத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கவில்லை?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** அந்தச் சிறைச்சாலையை மாற்ற வேண்டும் என்ற நோக்கத்தோடுதான் அங்கு பெரும் அபிவிருத்தித் திட்டங்கள் நிறைவேற்றப்படவில்லை.

**திரு. முனு. ஆதி:** சு. கா. படையினர் உள்ளே வந்தபோது ஆறு மணிக்கு மேல் ஜெயில் விசிட்டர் என்ற முறையில் ஆளும் கட்சி உறுப்பினர் அங்கு சென்று பீடி, சிகரட் போன்ற வசதிகளைச் செய்து கொடுத்தது தெரியுமா? மறு நாள் காலையிலும் விஸிட்டர்ஸ் வந்து வேண்டிய ஏற்பாடுகள் செய்து போனது தெரியுமா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** அதெல்லாம் எனக்குத் தெரியாது. கனம் அங்கத்தினர் அவர்களுக்குத் தெரிந்திருந்தால் அதை எனக்கு எழுதி அனுப்பலாம்.

### கலெக்டர் அலுவலகம் (செங்கற்பட்டு மாவட்டம்)

*45 **கேள்வி.**—திரு. முனு. ஆதி: கனம் பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தற்போது செங்கற்பட்டு மாவட்ட கலெக்டர் அலுவலகம், சைதாப்பேட்டை டோல்கேட் அருகில் இருப்பதை மாற்றி, செங்கல்பட்டு மாவட்டத்திற்குள்ளேயே அமைக்கும் உத்தேசமுண்டா?

(இ) ஆம் எனில் இதற்காக அரசாங்கம் எடுத்துள்ள முயற்சி என்ன?

THE HON. SRI V. RAMAIAH: (அ) & (இ) At the instance of the Municipal Councils, Kancheepuram and Chingleput the Government are examining the question of shifting the head-quarters of the Chingleput district. A report has been called for from the Board of Revenue in the matter.

**திரு. முனு. ஆதி:** அதைக் காஞ்சிபுரத்திற்கு மாற்றுவதற்கு பெருவாரியானவர்கள் முயற்சி செய்வதாக நான் கேள்விப்படுகிறேன். மத்திய இடமாக செங்கல்பட்டு நகரத்தில் வைத்தால் சுற்று வட்டார தாலுகாக்களுக்கு மத்திய இடமாக இருக்கும் எனக் கருதி அதை செங்கல்பட்டில் வைக்க எண்ணம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. வெ. ராமைய்யா:** இதைக் குறித்து பரிசீலனை செய்தபொழுது காஞ்சிபுரம் அல்லது செங்கல்பட்டு மத்திய இடமாக இல்லை. ஆனால் இப்போது இருக்கக் கூடிய இடத்தில் இருந்து

செங்கல்பட்டு அல்லது காஞ்சிபுரத்திற்கு போக வேண்டுமென்ற கோரிக்கையைத்தான் இப்போது பரிசீலனை செய்து கொண்டிருக்கிறோம். மத்திய இடம் என்று தேர்ந்தெடுக்க வேண்டுமென்றால் இந்த இரண்டு இடமும் பொருத்தமாக இருக்காது. இதை எல்லாம் பரிசீலனை செய்து முடிவு எடுக்க வேண்டும். இப்போதுள்ள நெருக்கடி நிலையில் அந்த முடிவு விரைவாக வருமா என்பது எனக்கு சந்தேகமாக இருக்கிறது.

திரு. அ. ராகவ ரெட்டி : தற்போது இருக்கும் இடமே செங்கல்பட்டு ஜில்லாவிற்கு மத்திய இடமாக இருக்கிறது. அதை அப்படியே நிறுத்தி வைக்காமல் காஞ்சிபுரம், செங்கல்பட்டு போன்ற பகுதிகளுக்கு மாற்றவேண்டுமென்ற பிரச்னை ஏன் வருகிறது என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமைய்யா : கனம் அங்கத்தினர் அவர்களின் கேள்வியை எதிர்பார்த்தே நான் முன் கேள்விக்குப் பதில் சொல்லியிருக்கிறேன். இப்போது இருக்கக் கூடியது பொருத்தமான இடமா இல்லையா என்பது பற்றி பல கோரிக்கைகள் வந்து பரிசீலனை செய்து கொண்டிருக்கிறோம். எல்லாவிதமான விவரங்களை வைத்துத்தான் முடிவு எடுக்க வேண்டும். அது விவரங்கள் தெரிந்த பிறகு தான் எடுக்க முடியும்.

திரு. ஜே. மாதா கவுடர் : காஞ்சிபுரத்தில் வைக்கக் கூடாது என்று கனம் அங்கத்தினர் முனு ஆதி அவர்கள் சொல்கிறார்கள். காஞ்சிபுரவாசிகள்மீது கனம் அங்கத்தினர் அவர்களுக்கு வெறுப்பு எப்போது உண்டாயிற்று என்று சொல்லமுடியுமா ?

(பதில் இல்லை.)

திரு. அ. ராகவ ரெட்டி : காஞ்சிபுரம் தென் கோடியில் இருக்கிறது.

MR. SPEAKER : Is the hon. Member, Sri A. Raghava Reddi, replying to the question put by the hon. Member, Sri J. Matha Gowder ?

SRI A. RAGHAVA REDDI : Sir, I am putting a separate question.

காஞ்சிபுரம் செங்கற்பட்டு ஜில்லாவின் தென்னண்டைக் கோடியில் இருப்பதால் தற்போது இருக்கிற இடமே வசதியாக இருக்கிறது. அதை அப்படியே இருக்க வேண்டுமென்று பல தட்வை சர்க்காரின் கவனத்திற்கு கொண்டு வந்திருக்கிறோம். அதை அப்படியே நிறுத்திவைக்க சர்க்கார் ஆலோசனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமைய்யா : இதையெல்லாம் பரிசீலனை செய்யும்போது கனம் அங்கத்தினர் அவர்களின் ஆலோசனையையும் அரசாங்கம் பரிசீலனை செய்யும்.





திரு. கரு. சீமைச்சாமி : இராமனுதபுர மாவட்ட.

கனம் சபாநாயகர் : இது செங்கல்பட்டு மாவட்டம் பற்றியது. . . . . இப்படி ஒவ்வொரு ஜில்லாவையும் பற்றி கேட்டால் ?

The question is not very relevant.

### சித்தேரி (மதுராந்தகம் வட்டம்)

* 46 கேள்வி.—திரு. கே. ஏ. மதியழகன் (திரு. க. ர. நல்லசிவம் சார்பாக) : கனம் பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு மாவட்டம், மதுராந்தகம் வட்டம், சிறுமயிலூர் கிராமத்திலுள்ள 'சித்தேரி'யைப் புதிப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டதா ?

(இ) இல்லையானல், ஏன் ?

THE HON. SRI V. RAMAIAH : (a) Yes. The work is under execution.

(b) Does not arise.

### *Dam across the Nagavathi River*

* 47 Q.—SRI R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Works be pleased to state—

(a) whether there is any proposal to construct a dam across Nagavathi River near Palayur Thope in Arakasanahally village in Dharmapuri taluk; and

(b) if so, when?

THE HON. SRI V. RAMAIAH : (a) No, Sir.

(b) Does not arise.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் : இத்திட்டத்தினல் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் பலன் அடையும் என்று தெரிய வருவதால் இதைப் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ள அரசாங்கம் உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமையா : இந்தத் திட்டம் பரிசீலனை செய்யப்பட்டு அதை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவில்லை. இது காவேரியோடு இணையக்கூடிய ஒரு கிளை நதியின் திட்டம். காவேரியில் இணையும் கிளை நதித் திட்டத்தை அமைக்க வேண்டுமென்றால் அது காவேரியை பாதிக்காமல் இருக்க வேண்டும், மற்ற திட்டங்களைப் பாதிக்காமல் இருக்க வேண்டும். அதோடு மட்டுமல்லாமல் இத்திட்டத்தைப் பரிசீலனை செய்தபோது ஏறத்தாழ ஒரு கோடிக்கு மேல் இத்திட்டத்திற்கு செலவு செய்ய வேண்டும்.

அதனால் கிடைக்கும் பலன், 1,500 ஏக்கருக்குத்தான். அதனால் பாசன வசதி ஏற்படும். ஆகவே இப்போதுள்ள நிலைக்கு இது கட்டுபடியாகாத திட்டம்.

## Electric Train Service

*48 Q.—SRI K. A. MATHIALAGAN (on behalf of SRI M. KALYANASUNDARAM): Will the Hon. the Minister for Works be pleased to state—

(a) whether any proposal has been made to Southern Railway authorities, or the Railway Ministry for increasing the frequency of Electric Train Service between Madras Beach and Tambaram Stations; and

(b) if so, the details thereof?

THE HON. SRI V. RAMAIAH: (a) & (b) No such proposal has been made by this Government. Our information is that no such suggestion has been received recently by the Railway Board or the Southern Railway authorities.

***திரு. கே. ஏ. மதியழகன்:*** வளர்ந்து வருகிற சென்னை நகரின் ஜன நெருக்கடியைக் குறைப்பதற்காக ப்ராட் கேஜை அரக்கோணம் வரையிலும் மீட்டர் கேஜை விழுப்புரம் வரையிலும் மின்சாரப்பாதை அமைக்க மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்குள் முயல வேண்டும் என்ற சிபார்சை மத்திய அரசாங்கத்திற்கு இந்த அரசாங்கம் செய்யுமா?

***கனம் திரு. வெ. ராமையா:*** முக்கிய கேள்விக்கும் இந்த உப கேள்விக்கும் சம்பந்தம் இல்லை. முக்கிய கேள்வியில் உள்ளது "ஃப்ரீக்குவன்சியை" அதிகப்படுத்த முடியுமா என்பது. அதற்கு நான் விவரமாக பதில் அளித்திருக்கிறேன். கனம் அங்கத்தினர் அவர்கள் கேட்கும் கேள்விக்கு பதில் வேண்டுமென்றால் தனி கேள்வி வேண்டும்.

***திரு. முனு. ஆதி:*** வண்டிகள் போதாமைக்குக் காரணம் ஜன நெருக்கடிதான். சில நேரங்களில் ரெயிலில் ஏறும்போது முன்னாலுள்ள "கௌ காச்" லைனைத் தொட்டால் புறப்பட்டு வண்டி ஓட்டுவதில்லை. அது நான் கண்ட அனுபவம். ஆகவே அதிகப்படி வண்டிகளை வரவழைத்து மூன்று வண்டிகளை இணைத்து அனுப்பினால் நல்லது. அதையாவது இந்த அரசாங்கம் மத்திய அரசாங்கத்திற்கு சிபார்சு செய்யுமா?

***கனம் திரு. வெ. ராமையா:*** பீக் ஹவர்ஸில் பத்து நிமிடங்களுக்கு ஒரு வண்டி ஓடுகிறது. இப்பொழுதுள்ள வசதிகளை வைத்துக்கொண்டு இவ்வளவு அதிகமாகத்தான் வண்டி விட முடியுமே தவிர இன்னும் அதிகப்படுத்தினால் சரியாக வராது. அதிகமாக வண்டிகளை வரவழைத்து போக்குவரத்து வசதியை அதிகப்படுத்த வேண்டுமென்ற கோரிக்கையை மத்திய அரசாங்கத்தினிடம் இந்த அரசாங்கம் சொல்லும்.



## நதிகள்

*49 கேள்வி.—***திரு. கே. ஏ. மதியழகன் (திரு. க. ர. நல்லசிவம் சார்பாக):*** கனம் பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) பல்வேறு ராஜ்யங்களுக்குள் ஓடும் நதிகளை மத்திய சர்க்கார் மேற்பார்வையின்கீழ்க் கொண்டு வருமாறு நமது மாநில சர்க்கார் மத்திய சர்க்காருக்கு யோசனை கூறியுள்ளனரா?

(இ) அதற்கு மத்திய சர்க்கார் என்ன பதில் கொடுத்துள்ளனர்?

THE HON. SRI V. RAMAIAH: (a) No Sir.

(b) Does not arise.

***திரு. கே. ஏ. மதியழகன்:*** குல்ஹாத்தி கமிஷன் அறிக்கை நம் சர்க்காருக்கு கிடைத்திருக்கிறதா? அதில் ஆந்திர நதிகளின் தண்ணீர் சென்னைக்கு கிடைப்பதற்கான ஏதாவது வழிவகைகள் கண்டிருக்கிறதா, அப்படிக் கிடைத்திருந்தால்?

***கனம் திரு. வெ. ராமையா:*** குல்ஹாத்தி கமிஷன் ரிப்போர்ட் நம் அரசாங்கத்திற்கு வந்திருக்கிறது. அது பிரதம என்ஜினியரின் பரிசீலனையில் இருக்கிறது. பரிசீலனை முடிந்த பிறகு மேலும் அது சம்பந்தப்பட்ட விவரங்களை நான் சபைக்கு தெரிவிக்க முடியும்.

***திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி:*** தேச ஐக்கியம் என்று சொல்கிற நேரத்தில் நதிகளில் வரக்கூடிய தண்ணீரை பிரித்துக் கொள்வதில் ஐக்கிய மனப்பான்மை இல்லை என்பது அரசாங்கத்திற்கு தெரியுமா? பாலாறு ஓடுகிற இடங்களில் இப்போது நெருப்பு ஓடுவதை உணர்ந்து தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுமா?

***கனம் சபாநாயகர்:*** எங்கே நெருப்பு ஓடுகிறது?

***கனம் திரு. வி. ராமையா:*** ஆறு ஓடும் இடங்களில் நெருப்பு அவர்கள் கண்களுக்குத் தென்படுவது இயற்கைக்கு மாறான நிலை. கனம் அங்கத்தினர் அவர்கள், ஐக்கியத்தை விரும்பும் இந்த நேரத்தில் ஜீவநதிகளில் ஓடும் தண்ணீர் எல்லோருக்கும் கிடைக்கும் சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டுமென்று சொன்னார்கள். அந்த முயற்சியை நாம் மட்டும் எடுக்கவில்லை. இந்தியாவைப் பொறுத்தவரை ஒவ்வொரு மாநிலத்திலும் அந்த முயற்சியை எடுத்து வருகிறார்கள், எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக மத்திய அரசாங்கம் அதைத் தீவிரமாக ஆராய்ந்து அதற்கு வேண்டிய முயற்சிகள் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

***திரு. கே. ஏ. மதியழகன்:*** கோவை நகர குடிதண்ணீர் பிரச்னைக்காக சிறுவாணி ஆற்றிலிருந்து தண்ணீர் கொண்டு வருவது சம்பந்தமாக நமது முதலமைச்சர் அவர்கள் கேரள அரசாங்கத்

[2nd February 1963

திற்கு நெடுநாளுக்கு முன் எழுதிய தபாலுக்கு பதில் வந்ததா? பதில் வரவில்லையென்றால் எப்போது வருமென்று எதிர்பார்க்கப் படுகிறது?

**கனம் திரு. வெ. ராமையயா**: தனி கேள்வி வேண்டும்.

### *Pennaiar Basin*

* 50 Q.—SRI R. S. VEERAPPA CHETTIAR: Will the Hon. the Minister for Works be pleased to state—

(a) whether the Government are aware that the Land-owners in Pennaiar Basin could not utilise the channel water of the Krishnagiri Reservoir Project for their Agricultural purposes owing to drought conditions; and

(b) if so, whether the Government propose to give kist remission to the lands under Pennaiar Basin?

THE HON. SRI V. RAMAIAH: (a) No drought conditions prevail in Pennaiar basin area.

(b) Does not arise.

*திரு. ரா. சு. வீரப்ப செட்டியார்*: சென்ற ஆறு மாத காலமாக இந்த வாய்க்காலில் தண்ணீர் விடாத காரணத்தால் இங்கு போடப் பட்டிருக்கும் வரியை ரத்து செய்யமுடியுமா என்று கேட்கிறேன்?

**கனம் திரு. வெ. ராமையயா**: இப்போது தண்ணீர் ஓடிக் கொண்டிருக்கிறது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

*திரு. ரா. சு. வீரப்ப செட்டியார்*: இந்த வாய்க்காலில் தண்ணீர் விடப்படவில்லை என்று அங்குள்ள மக்களிடமிருந்து அரசாங்கத் திற்கு மனு வந்திருக்கிறதா?

**கனம் திரு. வெ. ராமையா**: இப்போது அந்த வாய்க்காலில் தண்ணீர் ஓடிக்கொண்டிருக்கிறது.

*திரு. ரா. சு. வீரப்ப செட்டியார்*: வாய்க்காலில் தண்ணீர் விடப் படவில்லை என்பது கனம் அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா?

**கனம் சபாநாயகர்**: அமைச்சர் அவர்கள் தண்ணீர் ஓடிக் கொண்டிருக்கிறது என்று சொல்லுகிறார்கள். ஆனால் நீங்கள் தண்ணீர் விடவில்லை என்று சொல்கிறீர்கள்.

**கனம் திரு. வெ. ராமையயா**: என்னிடத்தில் இருக்கிற விவரங் களின்படி பார்க்கும்போது, வாய்க்காலில் தண்ணீர் ஓடிக்கொண் டிருப்பதாகத்தான் இருக்கிறது. இதற்கு மாறுபட்ட நிலைமை இருக்குமானால் அதைப்பற்றி கனம் அங்கத்தினர் அவர்கள் எனக்கு எழுதி அனுப்பினால் அதைப்பற்றி கவனிக்கிறேன்.

**MR. SPEAKER**: A suggestion of joint inspection by both the hon. Member and the Hon. Minister and if necessary by the Speaker (Laughter).



2nd February 1963]

### *State Bus Service (New routes to Bangalore)*

* 51 Q.—SRI R. S. VEERAPPA CHETTIAR: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether there is any proposal to ply State transport buses from Tiruchirappalli to Bangalore and Coimbatore to Bangalore; and

(b) if so, the details thereof?

THE HON. SRI R. VENKATARAMAN: (a) A proposal to open a new route—Tiruchirappalli to Bangalore is under consideration. The route—Coimbatore to Bangalore is not proposed to be operated by the Madras State Transport Department at present.

(b) The details in regard to the proposal to operate the route—Tiruchirappalli to Bangalore—are under examination.

*திரு. கே. ஏ. மதியழகன்*: இந்த நடைமுறை ஆண்டில் எந் தெந்த புதிய ரூட்டுகளில் பஸ் விடுவதாக உத்தேசிக்கப்பட்டிருக் கிறது?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்**: பட்ஜெட் விவாதத்தின் போது "டிமாண்ட் ஃபார் கிராண்ட்ஸ்" வரும். அப்போது இந்த விவரங்களை எல்லாம் தெரிந்து கொள்ளலாம்.

*திருமதி சி. குழந்தையம்மாள்*: தலைவர் அவர்களே, திருச்சிராப் பள்ளியிலிருந்து பங்களூருக்கு பஸ் போகும்போது அது கோயம் புத்தூர் வழியாக செல்லுவதற்கு அரசாங்கத்தார் வேண்டிய ஏற் பாடு செய்வார்களா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்**: அந்த வழியாக போகாது போல் இருக்கிறது.

### *Village Officers (Mayuram taluk)*

* 52 Q.—SRI R. S. VEERAPPA CHETTIAR: Will the Hon. the Minister for Works be pleased to state—

(a) whether it is a fact that the Village Officers of Mayuram taluk have not been paid the Commission for the collection of Thakkavi and other loans; and

(b) if so, the details thereof?

THE HON. SRI V. RAMAIAH: (a) It is a fact that the payment of commission to the Village Officers of Mayuram taluk for the collection of loans has not been made for the three faslis 1369, 1370 and 1371.

(b) According to the scheme of payment of commission for arrears of loan collection, the payment of commission should be made only during the time of Jamabandi, i.e., in the month of May of every year for Mayuram taluk. The Orders of the Board of Revenue permitting the Collectors to incur expenditure were

received by the Collector only after the Jamabandi for Fasli 1369 was over and so payment of commission could not be made. For Fasli 1370, allotment of funds had not been applied for the reason that the commission for Fasli 1369 itself was not disbursed. For Fasli 1371, necessary funds have been provided in the Budget for 1962–63 and instructions have been issued to the Tahsildars to spend the allotment within the financial year 1962–63 and for the final settlement of the claims.

*Foodgrains, etc. (Agmarking of)*

*30 Q.—SRI G. CHIRANJEEVULU NAIDU (on behalf of Sri V. Sankaran): Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) whether the Government have any proposal for compulsory agmarking of commodities like foodgrains, edible oils, ghee and butter before sale; and

(b) if so, the details thereof?

THE HON. SRI P. KAKKAN: (a) No Sir.

(b) Does not arise.

திரு. டி. கார்ச்சா கவுடர்: ஸார், உருளைக் கிழங்குக்கும் 'அக்மார்க்' போடப்படவேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அது எப்போதிலிருந்து அமுலாகும் என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன்: இப்போது என்னிடத்தில் இருக்கின்ற தகவல்களில் இதுபற்றி விவரம் இல்லை. தனியாக கேள்வி போட்டால் பதில் சொல்லுகிறேன்.

MR. SPEAKER: Questions are over.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

II.—ANNOUNCEMENTS.

(1) ELECTION TO THE MADRAS LAND IMPROVEMENT BOARD.

MR. SPEAKER: I have to announce that three nominations for election to the Madras Land Improvement Board have been received. As the number of candidates duly nominated is equal to the number of vacancies to be filled namely, three, I have declared the following three candidates to have been duly elected to the Madras Land Improvement Board:—

1. Sri A. Ramachandra Rayar.
2. Sri A. P. Dharmalingam.
3. Sri M. D. Thiagaraja Pillai.

III.—GOVERNMENT RESOLUTION.

(1) CONSTITUTION OF TOWNSHIP.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Mr. Speaker, Sir, I move:



"That in pursuance of sub-section (1) of section 4 of the Madras Panchayats Act, 1958 (Madras Act XXXV of 1958), the House do resolve that each of the areas specified in column (1) of the Table below which is an industrial, labour or institutional colony as noted in the corresponding entry in column (2) thereof be declared to be a township".

TABLE.

| Description of area. (1) | Whether institutional, industrial or labour colony. (2) |
|---|---|
| (1) The Aravankadu Cordite Factory area comprised within the jurisdiction of Ketti, Hubbathali, Jagathala and Coonoor revenue villages of the Nilgiris District. | Institutional colony. |
| (2) The Madukkarai Cement Factory area comprised within the jurisdiction of Madukkarai revenue village of the Coimbatore District. | Labour colony. |
| (3) The Annamalai University Campus area comprised within the jurisdiction of Usappur, Tiruvetti-kulam and C. Kothankudi revenue villages of the South Arcot District. | Institutional colony. |
| (4) The Sankarnagar (Thalaiyuthu) Cement Factory area comprised within the jurisdiction of Naranammalpuram revenue village of the Tirunelveli District. | Industrial colony. |
| (5) Harveypatti Mill area comprised within the jurisdiction of Tirup-parankundram revenue village of the Madurai District. | Labour colony. |
| (6) The Manimuthar Project area comprised within the jurisdiction of Manjolai, Ayan Singampatti, Zamin Singampatti and Aladiyur Panchayats of the Tirunelveli District. | Industrial colony. |

Section 4 of the Madras Panchayats Act, 1958, empowers the State Government to constitute townships for specified non-municipal areas. Areas which are industrial, labour or institutional colonies or health resorts require special administration for development. The Government have considered that the development of such areas should be entrusted to *ad hoc* Township Committees consisting of both officials and non-officials rather than a panchayat consisting of only members elected by the residents of

the area. Therefore, the Government propose to constitute these Township Committees. It is proposed to form these Townships with effect from 1st April 1963. It is also proposed to issue notifications under section 4 (1), (2) and (3) of the Madras Panchayats Act, 1958, declaring the said six areas as Townships, constituting committees for administering the affairs and notifying the strength and term of members of the Townships. Copies of these Notifications will be placed on the Table of the House, shortly. A Note explaining the description of the area, strength, etc., of the said six Townships has been placed on the table of the House. I do hope that the House will accept this motion.

**MR. SPEAKER**: The resolution is before the House for discussion.

* **திரு. எம். எஸ். செல்வராஜன்**: கனம் சபாநாயகர் அவர்களே, அரசாங்கம் கொண்டு வந்திருக்கக் கூடிய பிரேரணையானது தொழிலாளர்கள், மற்றுமுள்ள தொழிலாளிகள் நிறைந்த பகுதிகளை எல்லாம் ஒன்று சேர்த்து விருத்தி செய்வதற்காக—நல்ல நோக்கத்தோடு—இவற்றை டௌன் ஷிப்பாக கொண்டுவரவேண்டும் என்பதுதான். மற்ற ஜில்லாக்களில் இருக்கக்கூடிய விவரங்கள் எனக்கு அதிகமாக தெரியாவிட்டாலும் திருநெல்வேலி ஜில்லாவைப் பொறுத்தவரையில் டௌன் ஷிப்பாக அமைக்கப்படவிருக்கும் இரண்டு பகுதிகளைப்பற்றி எனக்கு நன்றாகத் தெரியும் ஒன்று மணிமுத்தாறு பகுதி டௌன் ஷிப் என்ற பெயரால் பக்கத்திலுள்ள பஞ்சாயத்துக்களை எல்லாம் இணைத்து ஒன்றாக ஆக்கவேண்டும் என்பது அரசாங்கத்தினுடைய பிரேரணை. இப்போது மணிமுத்தாறு டௌன்ஷிப்-க்கு அரசாங்கம் உத்தேசித்திருக்கின்ற இடங்களில் மாஞ்சோலை என்பதும் அடங்கியிருக்கிறது. மணிமுத்தாரிலிருந்து ரோடு மார்க்கமாக 27½ மைல் தூரத்தில்தான் மாஞ்சோலை இருக்கிறது. மாஞ்சோலையைப் பொறுத்தவரை மாறுபட்ட தொழிலாளர்கள் நிறைந்த ஒரு பகுதி. தேயிலைத் தொழிலாளர்கள் அங்கு ஏராளமாக இருக்கிறார்கள்.

9-00 a.m. ஐயாயிரம் ஜனத்தொகை கொண்ட ஒரு பஞ்சாயத்து அங்கே இயங்கி வருகிறது. அது நான்கு டிவிஷன்களைக் கொண்டிருக்கக் கூடியது. இப்படி 5,000 ஜனத் தொகையையும் நான்கு டிவிஷன்களையும் கொண்டிருக்கக்கூடிய இந்தப் பகுதி தேயிலைத் தொழிலாளர்கள் நூற்றுக்கு நூறு பேர் இருக்கும் பகுதி. உத்தேச மணிமுத்தாறு பகுதியில் இந்தப் பகுதியை இணைத்து மணிமுத்தாறு டவுன்ஷிப் என்று அமைத்தால், எந்த அளவுக்கு அந்தப் பகுதியைச் சரிவர நிர்வகிக்க முடியும், அதனால் எந்த அளவுக்கு அந்தப் பகுதிகளுக்கு உதவி செய்ய முடியும் என்று அரசாங்கம் பரிசீலனை செய்திருக்கலாம். என்றாலும் மேற்கொண்டு பரிசீலனை செய்து முடிவு செய்வது நல்லது என்று நினைக்கிறேன். ஒன்று அந்தப் பகுதியை இதிலிருந்து நீக்கிவிட்டு தனியான டவுன்ஷிப்பாக மாஞ்சோலைக்கு அமைக்கலாம், அல்லது அது தனியாக பஞ்சாயத்தாக இயங்கிவிடலாம் என்பதுதான் என்னுடைய பணிவான கருத்து.





மற்றொன்று தாளையூத்துக்கு அருகில் இருக்கும் பகுதியை இணைத்து அதைத் தனியான டவுன்ஷிப்பாக அமைக்கவேண்டுமென்பது அரசாங்கத்தின் பிரேரணை. நான் அறிந்திருக்கக்கூடிய மட்டில் அது இப்போது நாரணம்மாள்புரம் பஞ்சாயத்தில் ஒரு பகுதியாக இருக்கிறது. அது தனியாக டவுன்ஷிப்பாக இயங்க வேண்டுமென்று ஒரு புறம் இண்டஸ்ட்ரியல் பகுதியிலிருந்து பல காலமாக வந்துகொண்டிருக்கிறது. அப்படி அமைப்பது தொழிலாளர்களுக்கு நல்லதாக இருக்கலாம். ஆனால் நாரணம்மாள்புரம் பஞ்சாயத்தில் தாளையூத்துதான் மிகவும் வருமானம் தரக்கூடிய பகுதியாக இருக்கிறது. நாரணம்மாள்புரத்திலிருந்து சங்கர்நகரைத் தனித்து துண்டிப்பதன்மூலம் பஞ்சாயத்தின் வருமானம் தாழ்ந்து போகும் நிலைமை ஒரு புறம் இருக்கலாம். தாளையூத்து பகுதியைத் தனியாகப் பிரிப்பதன் மூலமாகச் சுற்றிலும் இருக்கக்கூடிய பகுதிகள் எந்த அளவுக்கு பாதிப்பதாயிருக்கிறது என்ற கண்ணோட்டமும் இருக்கவேண்டும் என்பதுதான் என்னுடைய எண்ணம். இந்தத் தொழில்—சிமெண்ட் தொழில்—இருக்கும் பகுதியில் சுற்றிலும் 2, 3 மைலுக்குத் தொழில் வாய்ப்பு இருப்பது வாஸ்தவமாக இருந்தாலும், அது சுகாதார பங்கம் இழைக்கக் கூடியதாக இருக்கிறது என்பது அரசாங்கத்திற்குத் தெரியும். அந்தத் தொழிற்சாலையைச் சுற்றிலும் 2—3 மைலுக்கு எந்த வீட்டிலும் தினம் தினம், காலையிலிருந்து இரவு வரையில் சுகாதாரத்திற்கு பங்கம் இழைக்கக்கூடியதுகள் அல்லது பொடி விழக் கூடிய நிலையை, உணவிலும்கூட கலக்கும் நிலைமை இருக்கலாம். ஆகவே இதுபோல இன்னும் பல பகுதிகளிலேகூட இந்த மாதிரி இருக்கலாம். மதுக்கூரிலேகூட இந்த மாதிரி இருக்கலாம். சிமெண்ட் தொழிற்சாலைப் பகுதியைத் தனியாகப் பிரித்து டவுன்ஷிப்பாக அமைக்கும்போது, பஞ்சாயத்துப் பகுதிகளை கவனித்துக் கொள்ள வேண்டியது அவர்கள் கடமை இல்லை என்று விட்டுவிடக்கூடாது. இன்றைய தினம் பஞ்சாயத்தோடு சேர்ந்திருப்பதன் காரணமாக அந்தப் பகுதிக்குப் பக்கத்திலுள்ள பஞ்சாயத்துப் பகுதிகளுக்கு ஆஸ்பத்திரி வசதிகள், இன்னும் பல வசதிகள் அளிப்பதன் காரணமாக அந்தப் பஞ்சாயத்தில் சுற்றிலும் உள்ள குக்கிராமங்களுக்கு இன்றைய தினம் வசதிகள் கிடைத்திருக்கலாம். அந்த வசதிகளைச் செய்ய வேண்டியது அவர்களுடைய கடமை என்று அதற்குரிய வசதிகளைச் செய்துகொண்டிருக்கலாம். இவற்றுக்கு ஒரு பங்கம் ஏற்படாமல் இருக்கவேண்டும். இது போன்று அமைப்பதன் காரணமாக, குறிப்பாக சிமெண்ட் தொழிற்சாலை இருக்கும் பகுதியில், அதேபோல கெமிக்கல்ஸ் தொழிற்சாலை இருக்கும் பகுதியில், அதோடு அதைச் சுற்றிலும் இருக்கக்கூடிய மக்கள் எத்தனையோ தியாகங்களைச் செய்திருக்கிறார்கள். அந்தத் தொழிற்சாலையிலிருந்து கிளம்பக்கூடிய புகை, கழிவு நீர், தூசி இவைகளுடைய கஷ்டங்களைச் சுற்றிலும் இருக்கக்கூடிய ஜனங்கள் அனுபவிப்பது உணரப்படுகிறது. இது போன்று அமைப்பது அவசியம் என்ற நிலைமை ஏற்படும்போது, சுற்றிலும் இருக்கிற பஞ்சாயத்துக்களின் வருமானம் எவ்வளவு

பாதிக்கப்படுகிறது, அதோடு இணைந்திருக்கும் பஞ்சாயத்துகளுக்கு இது வரையில் சுகாதார வசதிகள் ஆபீஸ் மூலமாகச் செய்து வரப்படுகிற காரியங்களுக்கு எந்த விதமான பங்கமும் ஏற்படாமல் எந்த அளவுக்கு அவர்களுக்குப் பாதுகாப்பு கொடுக்கவேண்டும், அவர்களுக்குக் கிடைத்து வந்த வசதிகளெல்லாம் நீடித்து கிடைக்கக்கூடிய அளவுக்கு என்ன செய்வது, என்னென்ன பண வசதி கொடுப்பது என்று தீர்க்கமாக ஆலோசனை செய்வதற்கு இன்னும் அவகாசம் வேண்டுமானால் எடுத்து நல்ல முடிவு செய்யலாம். அவசியம் செய்ய வேண்டுமென்ற நிலைமை ஏற்பட்டாலும் நான் குறிப்பிடக்கூடிய இது போன்ற சிரமங்களைத் தவிர்க்க என்னென்ன வழிவகை செய்வது என்று கவனித்து தீர்க்கமாகப் பரிசீலனை செய்யவேண்டும். முடிந்தால் இன்னும் சில நாட்கள் தள்ளி வைத்து அடுத்த செஷனுக்கு வரும்போது தீர்க்கமாக யோசித்து, சீர்திருத்தி அடுத்த செஷனில் செய்து கொள்ளலாமா என்று உங்கள் மூலமாக அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன். —

**திரு. கே. பொன்னையா :** தலைவர் அவர்களே, கடந்த 4—5 வருஷங்களாக வால்பாறை பஞ்சாயத்தை டவுன்ஷிப்பாக மாற்றிக் கொடுக்கும்படி சர்க்காரிடம் பல முறை அணுகினேன். வால்பாறை பஞ்சாயத்து தொழிலாளர் நிறைந்த பிரதேசம். அது ஒரு இண்டஸ்ட்ரியல் ஏரியா. . .

**கனம் சபாநாயகர் :** அந்தப் பிரதேசத்தைப் பற்றி இந்தத் தீர்மானத்தில் இருக்கிறதா ?

**திரு. கே. பொன்னையா :** இல்லை வேண்டுமென்று கேட்கிறேன்.

**கனம் சபாநாயகர் :** அதை எப்போதும் கேட்டுக்கொள்ளலாம். இதிலே இருப்பதைப் பற்றி ஏதாவது சொல்லவேண்டுமானால் சொல்லுங்கள்.

**திரு. கே. பொன்னையா :** வால்பாறை பஞ்சாயத்தை டவுன்ஷிப்பாக மாற்றுவதற்கு சகல அருகதையும் உண்டு. பெரிய ஒரு அணைக்கட்டும் ஆகிறது. அதனால் அது யாத்திரீக ஸ்தலமாகவும் ஆகிறது. ஆகவே அதை அவசியம் ஒரு டவுன்ஷிப்பாக மாற்றிக் கொடுக்கவேண்டும். இப்போது சொல்லப்படும் டவுன்ஷிப்புகள் 1963-ம் வருஷம் ஏப்ரல் மாதம் 1-ம் தேதியிலிருந்து வரப்போகிறது. அதையும் இதோடு சேர்த்துக் கொண்டால் நலம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜே. மாதா கவுடர் :** கனம் சபாநாயகர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் இந்தப் பிரேரணையை ஆமோதிக்கிறேன். அதே நேரத்திலே என்னுடைய தொகுதியாகிய அரவங்காடு கார்டைட் பாக்டரி ஏரியாவுக்கு டவுன்ஷிப் கமிட்டி அமைப்பது பற்றியும் நான் சந்தோஷப்படுகிறேன். மற்ற டவுன்ஷிப் கமிட்டிகளுக்கு 'நான்-அபீஷியல்' மெம்பர்ஸ் போடலாம் என்று காணப்பட்டிருக்கிறது. இந்த



அரவங்காடு ஏரியாவுக்கு மாத்திரம் 'The Committee will not contain non-official members." என்று குறிப்பிலே போடப்பட்டிருக்கிறது. ஒருகால் அங்கே வெடிமருந்து உற்பத்தி செய்வதன் காரணமாக, மத்திய சர்க்காரின் கீழ் இருக்கக்கூடிய ஏரியாவாக இருப்பதன் காரணமாக, அங்கே நான் அபிஸியல் மெம்பர்ஸ் போடுவதில்லை என்று சர்க்காருக்கு உத்தேசம் ஏற்பட்டிருக்கிறதா என்பதைப்பற்றி நான் அறிய விரும்புகிறேன். ஒருகால் மத்திய சர்க்காரிடமிருந்து நமது மாநில சர்க்காருக்கு நான்-அபீஷியல் மெம்பர்ஸ் போடக்கூடாது என்று ஏதாவது உத்தரவு வந்திருந்தால்கூட அது சரியல்ல என்பதை தங்கள் மூலம் கனம் அமைச்சர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அரவங்காடு பாக்டரியை மட்டும் குறிக்கோளாக வைத்துக்கொண்டு ஒரு டவுன்ஷிப் கமிட்டி அமைப்பது முறையல்ல. அந்த வட்டாரத்து மக்களுக்கு என்ன செய்யவேண்டும், அது இண்டஸ்டிரியல் ஏரியாவாக இருக்கிறதே என்பதை மனதில்கொண்டு அந்த ஏரியா மக்களுடைய நலனுக்காக இந்த கமிட்டிகளை அமைக்கிறோமே அல்லாது மருந்து பாக்டரிக்கு மட்டும் என்று அமைக்கவில்லை. கார்டைட் பாக்டரிக்கு மத்திய சர்க்காருடைய தனியான சட்டம் இருக்கிறது. அது தனியாக அந்த சட்டத்தின்கீழ் இயங்கிக்கொண்டிருக்கிறது. அவர்கள் மாநில சர்க்காரின் எந்த அதிகாரத்தின் கீழும் வருவதில்லை. மாநில சர்க்காருக்கு அவர்கள் கட்டுப்படுவதில்லை. தனியாக அவர்களுக்கு ஏரியா பிரிக்கப்பட்டிருக்கிறது. அப்படியிருக்கும்பொழுது, கேட்டி, ஜகதாளா, ஹுபதளை, குன்னூர் ஆகிய ரெவின்யூ கிராமங்களை இணைத்து அங்கு வசிக்கக் கூடிய பொதுமக்களை இணைத்து ஒரு டவுன்ஷிப் கமிட்டி ஏற்படுத்தும் பொழுது அந்தக் கமிட்டியில் ஒரு 'நான்-அபீஷியல்' மெம்பர் இல்லையென்றால் எப்படி யோசனை சொல்ல முடியும் என்பதை யோசிக்க வேண்டும். இம்மாதிரி சர்க்காரே அதிகாரத்தை வைத்துக்கொண்டு நடத்தினால் அப்பொழுது 'நான்-அபீஷியல்' மெம்பர்களைக் கொண்ட பஞ்சாயத்து எதற்கு, பஞ்சாயத்து யூனியன் எதற்கு, சட்டமன்றம் எதற்கு, வேண்டியது அவசியமில்லை என்ற நிலை ஏற்பட்டுவிடுமே? பாதுகாப்பு கமிட்டிகளுக்குக்கூட 'நான்-அபீஷியல்' மெம்பர்களை போட்டுக்கொண்டிருக்கிறோம். நாட்டினுடைய பாதுகாப்புக் கமிட்டிக்கே அப்படிப் போட்டிருக்கும்பொழுது, டவுன்ஷிப் கமிட்டிக்கு என்று மாத்திரம் நான்-அபீசியல் மெம்பர் போட்டுவிட்டால் என்ன ஏற்பட்டுவிடும் என்று என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. இம்மாதிரி நான்-அபீஷியல் மெம்பர் போடுவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். அப்படிப் போட்டால்தான் மக்களுக்கு நன்மை செய்ய முடியும்.

இப்பொழுதுகூட சில குறைகள் ஏற்பட்டிருக்கின்றன. அரவங்காடு கார்டைட் பாக்டரிக்கு கிராமப்புறத்திலிருந்து குடிதண்ணீர் கொண்டு போகப் படுகிறது. குடிதண்ணீருக்கு மட்டுமல்ல, வெடி மருந்து உற்பத்தி செய்வதற்கும் அந்தத் தண்ணீரை உபயோகப்படுத்துகிறார்கள். அந்த பாக்டரிக்குப் பக்கத்தில் கோபாலபுரம் என்ற பகுதியிருக்கிறது. ஹரிஜனங்கள் வாழக்கூடிய இடம் அது. பாக்டரி தொழிலாளர்கள் வாழக்கூடிய இடம் அது. அந்தப் பகுதிக்கு குடி தண்ணீர் கொண்டுவருவதற்கு ஒரு

[திரு. ஜே. மாதா கவுடர்] [2nd February 1963]

யை பாக்டரியிலிருந்து கொடுக்கமாட்டேன் என்று சொல்லுகிறார்கள். நமது மாநில சர்க்கார் மத்திய சர்க்காரிடம் சொல்லி இதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். அது செண்டிரல் கவர்ண் மெண்ட் கண்ட்ரோலில் இருப்பதால் அந்தத் தண்ணீரை எடுத்துக் கொள்ள முடியாத நிலையில், எங்களுக்கு பாக்டரியிலிருந்து தண்ணீர் தர முடியாது என்று சொல்லுகிறார்கள். டவுன்ஷிப் கமிட்டியில் 'நான்-அபிஷியல்' மெம்பர் போடாவிட்டால், கார்டைட் பாக்டரியில் இருக்கக்கூடிய சூபரிண்டெண்டண்ட் என்ன சொல்லுகிறாரோ அதன் பிரகாரம்தான் காரியங்கள் நடக்குமே அல்லாது தொழிலாளர்கள் வசிக்கக்கூடிய இடங்களுக்கு எந்தவிதமான அனுகூலமும் ஏற்பட்டுவிடமுடியாது, டவுன்ஷிப் கமிட்டியினால் மக்களுக்கு எந்த விதமான பிரயோசனமும் ஏற்பட்டுவிட முடியாது என்பதை நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

டவுன்ஷிப் கமிட்டிகள் அமைப்பது பற்றி நான் மகிழ்ச்சி அடைகிறேன். டிஸ்டிரிக் டெவலப்மெண்டு கமிட்டியில் கூட நாங்கள் இதைப்பற்றி தீர்மானம் போட்டோம். ஆனால், டவுன் ஷிப் கமிட்டி சரியானபடி வேலை செய்ய முடியாமல் அதை அதிகாரிகளிடம் மட்டுமே ஒப்படைக்கக்கூடிய நிலையைப் பார்த்து வருந்துகிறேன்.

அது மாத்திரமல்ல, கனம் சபாநாயகர் அவர்களின் கவனத்திற்கு ஒரு விஷயத்தைக் கொண்டு வரவிரும்புகிறேன். ஊர் பெயர்களை தமிழில் மொழி பெயர்த்திருப்பது சரியில்லை. கேட்டி என்பதற்கு கெட்டி என்றும், ஹுபதளை என்பதற்கு குப்பாத்தலை என்றும், ஜகதாளா என்பதற்கு ஜகத்தலா என்று மொழி பெயர்க்கப்பட்டு தமிழ் கொலையாகிக் கிடக்கிறது.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அவைகளெல்லாம் தமிழ் பெயரல்ல. அதனால் தான் கொலையாகியிருக்கிறது.

**கனம் சபாநாயகர் :** தமிழ் பெயர் இல்லை என்று சொல்லுகிறார்கள். வேறு பெயரை மாற்றி வைத்துக்கொள்ளுங்கள்.

**திரு. ஜே. மாதா கவுடர் :** ஆங்கிலப் பெயர்களுக்கு சரியான மொழிப் பெயர்ப்பு செய்து இடங்களை சரியாகக் குறிப்பிட வேண்டும். ஊர் பெயர்களை எப்படி எப்படியோ மாற்றி மொழி பெயர்த்திருக்கிறார்கள்.

**கனம் சபாநாயகர் :** அந்தப் பெயர்களுக்கு சரியான தமிழ்ப் பெயர்களை கனம் அங்கத்தினர் அவர்கள் எழுதிக் கொடுத்துவிட்டால், அவைகளை 'இண்ட்ரொடியூஸ்' பண்ணிவிடலாம்.

**திரு. ஜே. மாதா கவுடர் :** என்னைக் கேட்டிருந்தால் எழுதிக் கொடுத்திருப்பேன். இப்பொழுதுதான் இந்தச் சபையில் என்னைக் கேட்டிருக்கிறீர்கள். இந்த டவுன்ஷிப் கமிட்டியில் நான்-அபிஷியல்களை சேர்த்துக் கொள்ளவேண்டும் என்று சொல்லிக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, அந்த வட்டாரத்தைப் பற்றி குறிப்பிடும் பொழுது ரெவின்யூ வில்லேஜ் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. கேட்டிக்கு தனி பஞ்சாயத்து இருக்கிறது. ஜகதாளாவுக்கு தனி



2nd February 1963] [திரு. ஜே. மாதா கவுடர்]

பஞ்சாயத்து இருக்கிறது. இந்த ஏரியாவில் கார்டைட் பாக்டரியும் சேர்க்கப்பட்டிருக்கிறது என்று குறிப்பிடப்படவில்லை. எந்தெந்த ஹாம்லெட்டுகள் என்று குறிப்பிட்டிருந்தால், எந்த வட்டாரங்களை பிரித்து டவுன் ஷிப் ஏற்படுத்தினால், நலம், எதைச் சேர்க்கவேண்டும். எதைச் சேர்க்கவேண்டிய அவசியமில்லை என்றெல்லாம் பேசுவதற்கு வசதி ஏற்படும். ரெவின்யூ கிராமம் என்று சொன்னால் விளக்கமாக இல்லை. குன்னூர் ஒரு முனிசிபல் ஏரியா. குன்னூர் ரெவின்யூ கிராமம் என்று சொன்னால், எந்தெந்த பகுதி அதில் சேர்க்கப்பட்டிருக்கிறது என்று திட்டவட்டமாக சொல்லியிருந்தால் நான் அதைப் பற்றி விமர்சிப்பதற்கு வசதியாக இருக்கும். அதே நேரத்தில், கார்டைட் பாக்டரி ஏரியா மாத்திரம் என்று சொன்னால், பக்கத்தில் என்னுடைய தொகுதியில் வெலிங்டன் கண்டோன்மெண்டு ஏரியா இருக்கிறது. அது மிலிடெரி ஏரியா. அதற்கு கண்டோன்மெண்டு போர்டு ஒன்று இருக்கிறது. மத்திய சர்க்காரின் அதிகாரத்தின் கீழ் கண்டோன்மெண்டு போர்டு இருந்தாலும், நான் அபிஷியல் மெம்பர்கள் அதில் இருக்கிறார்கள். நான்-அபிசியல் மெம்பர்கள் அபிசியல் மெம்பர்கள் சேர்ந்துதான் கண்டோன்மெண்டு போர்டில் வேலை செய்துக் கொண்டிருக்கிறார்கள். குன்னூர் ரெவின்யூ கிராமத்தைக்கொண்டு வந்து அரவங்காடு பாக்டரி டவுன்ஷிப் கமிட்டியில் இணைக்கும் பொழுது இடையிலே உள்ள வெல்லிங்டன் கண்டோன்மெண்டு எப்படி வந்து அதில் சேரும்? அந்த இணைப்பு எப்படியென்று புரியவில்லை, வெல்லிங்டன் கண்டோன்மெண்டு போர்டு இருக்குமா, அல்லது அந்த போர்டு இல்லாமல் செய்துவிட்டு, வெல்லிங்டன் கண்டோன்மெண்டு ஏரியாவையும் இதனுடன் இணைத்து டவுன் ஷிப்பாக அதை மாற்றுவார்களா என்பதைப்பற்றி எங்களுக்கு புரியாமல் இருக்கும் காரணத்தினால் கனம் அமைச்சர் அவர்களை அதை விளக்குமாறு நான் கேட்டுக்கொள்கிறேன்.

MR. SPEAKER : The hon. Member is going into the details. He can say whether he approves the formation of these Townships. He can go into the details afterwards.

**திரு. ஜே. மாதா கவுடர் :** இப்பொழுதே ஆரம்பத்தில் சொல்லிவிட்டால், டவுன்ஷிப் கமிட்டி ஏற்பட்ட பிறகு இங்கு வந்து குழப்பிக் கொண்டிருக்கத்தேவையில்லை. முதலிலேயே சொல்லிவிட்டால் அதை நல்ல முறையிலே அமைக்க முடியும் என்பதற்காகத்தான் இப்பொழுதே சொல்லுகிறேன். வெல்லிங்டன் ஏரியாவில், பட்டாளத்திற்காக இருக்கக்கூடிய ஏரியாவில், பட்டாளத்திற்கு டிரைனிங் கொடுக்கக்கூடிய முக்கியமான இடத்தில் அந்த போர்டில் நான்-அபிஷியல் மெம்பர்கள் சேர்க்கப்பட்டிருக்கும் பொழுது, அரவங்காடு பாக்டரி ஏரியாவில் மாத்திரம் நான்-அபிஷியல் மெம்பரைச் சேர்க்கக்கூடாது என்று கனம் அமைச்சர் அவர்கள் எண்ணியிருக்க முடியாது. ஒரு கால் அங்கு வெடி மருந்து பாக்டரி வைத்திருப்பதால் மத்திய சர்க்காரிடமிருந்து அம்மாதிரி உத்தரவு வந்திருந்தால், மறுபடியும் மத்திய

சர்க்காருக்கு இதைப் பற்றிச் சொல்லி, இந்தக் கமிட்டியில் நான்-அபீஷியல் மெம்பரைப் போடவேண்டும், அப்படிப் போட்டால் தான் டவுன்ஷிப் கமிட்டி அமைப்பதில் அர்த்தம் இருக்கும் என்பதைத் தெரிவித்து, இந்த சட்டம் அமுலுக்கு வருவதற்கு முன்பாக 'நான்-அபீஷியல்' மெம்பர் போட்டு இந்த கமிட்டி நல்ல விதமாக அமையக்கூடிய நிலைமையை ஏற்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்தப் பிரேரபணையை நான் ஆமோதிக்கிறேன்.

* திரு. க. கோமதி சங்கர தீக்ஷிதர் : கனம் சபாநாயகர் அவர்களே, கனம் நிதிஅமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டுள்ள இந்த டவுன்ஷிப் பிரேரபணையை ஆதரித்து, அதில் எனது தொகுதியைச் சேர்ந்த மணிமுத்தாறு டவுன்ஷிப் பார்மேஷன் பற்றி என்னுடைய அபிப்பிராயத்தைத் தெரிவித்துக்கொள்ள முன்வந்துள்ளேன். 1958-ம் ஆண்டு பஞ்சாயத்து ஆக்ட் 4-வது செக்ஷன்படி பஞ்சாயத்துக்களைவிட, டவுன்ஷிப்களை அமைப்பது அந்த வட்டாரத்திலுள்ள மக்களுக்கு நல்ல முன்னேற்றமான காரியங்கள் செய்யப்படுவதற்கு மிகவும் சௌகரியமாக இருக்கும். இருந்தாலும், திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த மாஞ்சோலை, அயன் சிங்கம்பட்டி, ஜமீன் சிங்கம்பட்டி போன்ற பகுதிகளை விசேஷ கவனத்தில் எடுத்துக்கொள்ளும்படியாக நான் மந்திரி அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். மாஞ்சோலை என்பது மணிமுத்தாறு அணையிலிருந்து 27½ மைல் தூரத்தில் இருக்கிறது. அது தேயிலைத் தோட்டங்கள் நிறைந்த ஒரு கிராமம் ஆகும். 5,000 தோட்டத் தொழிலாளர்கள் அங்கே இருக்கிறார்கள். அந்தக் கிராமம் 10 மைல், 5 மைல், 3 மைல் தூரத்திலுள்ள சிறு சிறு பிரிவுகளாக பிரிந்திருக்கிறது. அவைகளுக்கு நேர் ரோடு கிடையாது. அங்கெல்லாம் வாழ்கின்ற தொழிலாளர்களுக்கு மாஞ்சோலை வருவதென்றால் மிகவும் கஷ்டம் ஏற்படுகிறது. இப்பொழுது தான் 2 வருஷங்களுக்கு முன்னால் மாஞ்சோலையில் பஞ்சாயத்து அமைக்கப்பட்டு பஞ்சாயத்து நல்ல முறையில் பணியாற்றிக்கொண்டு வருகிறது. மாஞ்சோலைத் தோட்டம் 99 வருட கட்டுக்குத்தகையில் இருப்பதால் பஞ்சாயத்து அமைக்கப்பட்டாலும் கூட, அங்கே பள்ளிகள் ஏற்படுத்துவதற்கு இடம் கிடையாது. ரோடுகள் அமைக்கப்படவில்லை, அங்குள்ள மக்களுக்கு லைட் வசதி கிடையாது. இந்தக் குறைகளெல்லாம் நீங்கவேண்டுமானால் அங்கே டவுன்ஷிப் ஏற்படுத்துவது மிகவும் நன்மை பயக்கக்கூடியதாக இருக்கும். ஆனால், மணிமுத்தாறு டவுன்ஷிப் என்று சொல்லுவதைவிட, மாஞ்சோலையை ஆதாரமாகக் கொண்டு, மாஞ்சோலை டவுன்ஷிப் அமைப்பது தொழிலாளர்களுக்கு மிகவும் நன்மை பயக்கக்கூடியதாக இருக்கும். ஆகையால் அங்கே தனியாக மாஞ்சோலை டவுன்ஷிப் அமைக்கும்படியாகக் கேட்டுக்கொள்கிறேன். மேலும் இந்த இரண்டு வருஷ காலத்தில் பஞ்சாயத்து நல்ல முறையிலே பல கஷ்டங்களுக்கிடையே வேலை செய்து கொண்டு வந்திருக்கிறது. ஆகையால் நான் மந்திரி அவர்களை மாஞ்சோலைக்கு தனியாக டவுன்ஷிப் அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, அதில் கவனம் செலுத்தி விரைவில் அதை அமுலுக்கு கொண்டுவர வேண்டுமென்று கூறி, என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.





கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் சபாநாயகர் அவர்களே, இதற்கு முன்பு சில டவுன்ஷிப்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன என்பது கனம் அங்கத்தினர்களுக்குத் தெரியும். முதன் முதலாக, சில ஆண்டுகளுக்கு முன்பு, மேட்டூர் டவுன்ஷிப் அமைப்பதற்குத் தனியாகச் சட்டம் கொண்டுவந்து, மேட்டூர் டவுன்ஷிப் அமைக்கப்பட்டது. இம்மாதிரி டவுன்ஷிப் அமைக்கப்படுவதன் அடிப்படை நோக்கம் என்னவென்றால் குறிப்பிட்ட ஒரு நீர்ப்பாசத் திட்டம் அல்லது தொழிலாளர்கள் சேர்ந்திருக்கிற ஸ்தலங்கள், தொழில்கள் நடைபெறுகிற ஸ்தலங்கள், டி.பி. ஸானடோரியம், குற்றாலம் போன்ற சுகாதார ஸ்தலங்கள், இவைகளுக்கு பிரத்தியேக கவனம் செலுத்தவேண்டுமென்பதுதான். தொழில்கள் நடத்துகிறவர்களாய் இருந்தால், அவர்களே இதற்கானசெலவுகளைச் செய்கிறார்கள். அப்படிச் செலவு செய்கின்றபொழுது, மற்ற வசதிகளையும் கவனிக்கக் கூடிய வாய்ப்பு இருக்கவேண்டும். ஆகவே, சாதாரண பஞ்சாயத்து என்று வைக்காமல், இவைகளை டவுன்ஷிப்பாக அமைக்க வேண்டும் என்பதுதான் அடிப்படை நோக்கம். தனியாகச் சட்டம் செய்து மற்ற டவுன்ஷிப்புகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. மேட்டூர் டவுன்ஷிப்புக்குப் பிறகு, பவானிசாகர், குற்றாலம் டவுன்ஷிப்புகள் அமைக்கப்பட்டு, இப்பொழுது, இயங்கிக் கொண்டு வருகின்றன. நாம் முன்பு சட்டம் செய்த பொழுது, இம்மாதிரி வேறு சில ஸ்தலங்களை டவுன்ஷிப்புகளாக அமைக்க வேண்டியிருக்கும், ஒவ்வொன்றுக்கும் தனித்தனியாக சட்டம் கொண்டுவர வேண்டாம், எந்தெந்த ஸ்தலத்தை அவ்வாறு டவுன்ஷிப்பாக அமைக்கவேண்டுமோ அதற்கு இந்த சட்டத்திலே இடம் கொடுத்தமைத்து, பிறகு சட்ட சபைகள் முன்பு ஒரு நோட்டிபிகேஷனை வைப்பது என்ற அடிப்படையிலே இப்பொழுது இந்தத் தீர்மானம் ஆறு டவுன்ஷிப்புகளைப் பொறுத்த வரையில் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

மணிமுத்தாறு டவுன்ஷிப்பைப் பற்றி கனம் உறுப்பினர்கள் திரு. செல்வராஜன் அவர்களும், திரு. கோமதி சங்கர தீக்ஷிதர் அவர்களும் பேசினார்கள். மணிமுத்தாறுக்கும் மாஞ்சோலைக்கும் 13 மைல் தூரம் இருக்கிறது. சேர்ந்தாற்போல் இருக்கிறது. தனித்தனியாக இல்லை. இவை இரண்டையும் சேர்த்து டவுன்ஷிப்பாக அமைப்பதுதான் நலம். தனித்தனியாக டவுன்ஷிப்புகளை அமைத்தால் எந்த நோக்கத்தோடு டவுன்ஷிப்பு அமைக்கப்படுகிறதோ, எந்தப் பிராந்தியத்தின் வசதிகள் கவனிக்கப்பட வேண்டுமோ, அவைகள் போதிய அளவுக்கு கவனிக்கப்படாமல் போய்விடும் என்ற காரணத்தால், 13 மைல் தூரத்தில் இருப்பதை இரண்டையும் ஒன்றாகச் சேர்த்து, இரண்டு பிராந்தியங்களுக்கும் பயன் கிடைக்கும் வகையில் டவுன்ஷிப் அமைக்கப்பட்டிருக்கிறது. கனம் உறுப்பினர் தீக்ஷிதர் அவர்கள் பெயர் நல்ல பெயராக இருக்க வேண்டும் என்று சொன்னார்கள். மணிமுத்தாறு என்ற பெயர் அழகாக இருக்கிறது. மாஞ்சோலை என்ற பெயரும் அழகாகத் தான் இருக்கிறது. மாம்பழம் சாப்பிடுவதுபோல் இருக்கிறது. (சிரிப்பு.) மணிமுத்தாறுத் திட்டம் நாம் அமைத்த திட்டம். மாஞ்சோலை இயற்கையாகவே இருக்கிறது. ஆகவே நாம்

[திரு. எம். பக்தவத்சலம்] [2nd February 1963

பெருமையோடு மனிமுத்தாறு என்று பெயரை வைத்துக் கொள்ளலாம். கனம் உறுப்பினர் தீக்ஷிதர் அவர்கள் இதைப் பொருட்படுத்தமாட்டார் என்று நினைக்கிறேன்.

கனம் அங்கத்தினர் செல்வராஜன் அவர்கள் தாழையூத்து டவுன்ஷிப்பைப் பற்றி பேசினார்கள். அது ஒரு இண்டஸ்டிரியல் காலனி, அங்கே தொழில் நடைபெறுகிறது. அங்கே தொழிலை ஒட்டி, தொழிலாளர்களை ஒட்டி, எத்தனையோ வசதிகளை, மனேஜ்மெண்டார் செய்திருக்கிறார்கள். செலவையெல்லாம் அவர்களே ஏற்றுக்கொள்கிறார்கள். நாரணம்மாள்புரம் பஞ்சாயத்தின் வருமானத்திலிருந்து செலவு செய்யப்படவில்லை. அந்த பஞ்சாயத்து இந்த டவுன்ஷிப்பிலிருந்து தொழில் வரியெல்லாம் தங்களுக்குக் கிடைக்க வேண்டும் என்று எண்ணுவது இயற்கையே. இதே மாதிரி பெருந்துறை ஸானடோரியத்தை டவுன்ஷிப்பாக செய்கிறபோது, அங்கேயுள்ள பஞ்சாயத்தும் தங்களுடைய வருமானம் போய்விடுமே என்று சொன்னார்கள். அவர்களுக்கு அங்கேயிருந்து கிடைக்கக்கூடிய தொழில் வரி போய்விடுகிறதே என்ற கவலை. ஆனால் ஸானடோரியம் நிர்வாகிகள்தான் செலவுகளைச் செய்கிறார்கள். மொத்தத்தில் பார்க்கும்போது சம்பந்தப்பட்ட பிராந்தியத்தின் நன்மையையும், வசதிகளையும் பெருக்குவதுதான் நோக்கமாய் இருக்க வேண்டும். யார் செலவு செய்கிறார்களோ அவர்களுக்கு மேலும் வாய்ப்பு இருக்க வேண்டும், இன்னும் சிறாக அமைத்துக் கொள்ளக் கூடிய வகையிலே அவர்கள் முயற்சி எடுக்க வேண்டும். நாராணம்மாள்புரம் இந்தப் பகுதியிலே இருக்கிறது, அதை எடுத்துவிட்டால் வருமானம் குறைகிறது என்று சொன்னால், அதற்கு செலவு ஒன்றும் இல்லை என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். பொதுவாக ஒரு கொள்கையை நாம் எல்லோரும் ஒப்புக்கொள்கிறோம். அதாவது எந்த இடத்திற்கு வசதி செய்கிறோமோ அந்த இடத்திலிருந்து வருமானம் வர வேண்டும். கடைத் தேங்காயை எடுத்து வழிப்பிள்ளையாருக்கு உடைப்பது சரியல்ல. இப்பொழுது எங்கெங்கே டவுன்ஷிப்புகள் அமைத்திருக்கிறோமோ அவைகளுக்கு வருமானம் இருக்கிறது. செலவும் செய்கிறார்கள். வசதிகளைப் பெருக்க இன்னும் அதிகமாகச் செலவு செய்ய வேண்டும், அதனால்தான் டவுன்ஷிப்பு அமைக்கப்பட்டிருக்கிறது.

**திரு. எம். எஸ். செல்வராஜன் :** நான் சொன்னது என்னவென்றால், ஏற்கனவே மானேஜ்மெண்டார் சுற்றுப்புற பகுதிகளுக்கு செய்து வந்த வசதிகளுக்கு பங்கம் இல்லாமல் வழிவகை செய்ய வேண்டும். அதே நேரத்தில் பஞ்சாயத்தின் பொருளாதார நிலை எந்த அளவுக்குப் பாதிக்கப்படுகிறதோ, அதை ஈடுசெய்ய வேண்டும்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** டவுன்ஷிப்புக்குள்ளேயே எல்லாம் கவனிக்கப்பட வேண்டும். டவுன்ஷிப்புக்கு வெளியே இருந்தால், அங்கே இருக்கிற சிமெண்ட் பாக்டரியினால் சுகாதாரம் கெட்டுப் போகிறது என்று சொல்லுகிறார்கள். ஆகவே அந்தப் பகுதியைச் சேர்த்து டவுன்ஷிப்பாக ஆக்கிவிடுங்கள் என்று சொன்னால் அது கவனிக்கப்படும். அப்படியில்லை என்றால்



2nd February 1963] [திரு. எம். பக்தவத்சலம்]

எங்களுக்கு பிரத்யோகமாக சுகாதார வசதிகள் செய்து கொடுக்க வேண்டும், பிரத்யேகமான முறையிலே கவனம் செலுத்தப்பட வேண்டும் என்று சொல்லுவது வேறு விஷயம். ஆகவே டவுன்ஷிப்பு அமைப்பதைப் பற்றி எந்த விதமான ஆட்சேபணைக்கும் இடம் இல்லை.

கனம் உறுப்பினர் பொன்னையன் அவர்கள் வால்பாறையைப் பற்றிச் சொன்னார்கள். வால்பாறையில் ஒரு டவுன்ஷிப் அமைக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய கருத்து. அது தனியாக எடுத்துக் கொள்ளப்படவேண்டிய விஷயம். ஏற்கனவே அது ஒரு பெரிய பஞ்சாயத்தாக இருக்கிறது. அந்த பஞ்சாயத்து யூனியனிலே ஒரே பஞ்சாயத்துதான் இருக்கிறது. அந்த எல்லை பூராவும் ஒரு பெரிய பஞ்சாயத்தாக இருக்கிறது. இப்பொழுது திருப்திகரமாக இல்லை. டவுன்ஷிப்பு அமைக்கப்பட வேண்டும் என்பதுதான் என்னுடைய நோக்கமும். அதுபற்றி தனியாக கவனம் செலுத்தப்படும்.

அடுத்தபடியாக, கனம் உறுப்பினர் மாதா கவுடர் அவர்கள் அரவங்காடு டவுன்ஷிப்பை பற்றிச் சொன்னார்கள். அவர் அந்தத் தொகுதியின் பிரதிநிதி. உத்தியோகப் பற்று இல்லாதவர்களை அந்த டவுன்ஷிப்பு கமிட்டியில் விட்டுவிட்டார்கள் என்று சொன்னார்கள். மந்திய அரசாங்கத்திற்கு என்ன கருத்து இருக்கிறதோ அதே கருத்துதான் இந்த அரசாங்கத்திற்கும் இருக்க வேண்டும் என்பது இல்லை. இந்த விஷயத்தில் மத்திய அரசாங்கம் உத்தரவு ஒன்றும் போடவில்லை. இதிலே உத்தியோகப் பற்று இல்லாதவர்களை சேர்க்கவேண்டாமென்பது இந்த அரசாங்கத்தின் நோக்கம். ஏதோ மத்திய அரசாங்கம் சொன்னார்கள், வேறு வழியில்லாமல் ஏற்றுக்கொண்டு விட்டோம் என்று யாரும் நினைக்க வேண்டாம். குறிப்பாக, எதிர்க்கட்சியிலுள்ளவர்கள் அவ்வாறு நினைக்க வேண்டாம். கண்டோன்மெண்டுகளிலே உத்தியோகப் பற்று அல்லாதவர்கள் இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அங்கே பட்டாளங்கள் இருக்கின்றன. பட்டாளங்கள் மக்களோடு இப்பொழுது நெருங்கிய தொடர்பு கொள்கிறார்கள். ஏதாவது விபத்து ஏற்பட்டால் பட்டாளங்கள் மக்களோடு ஒத்துழைத்து ரோடு போடுவது முதலிய வேலைகளைச் செய்கிறார்கள். இப்பொழுது பட்டாளத்துக்கும் மக்களுக்குமுள்ள நெருங்கிய தொடர்பு மேலும் மேலும் வளர்ந்துகொண்டே போகிறது. பட்டாளங்கள் இருக்கும் பிராந்தியங்களில் தனியாக கண்டோன்மெண்டுகள் வைத்து, உத்தியோகப் பற்று இல்லாதவர்களும் தேர்தலில் கூட நின்று வருகிறார்கள். ஆகவே பட்டாளம் இருக்கிறது என்று சொல்லுகிற விஷயம் வேறு. ஆனால் அரவங்காட்டிலே அம்யூனிஷன் செய்யப்படுகிறது. விசேஷ கவனம் செலுத்த வேண்டும். விசேஷபாதுகாப்புத் தேவை. அங்கே உத்தியோகப் பற்று இல்லாதவர்களைப் போட வேண்டும் என்று சொன்னால், அது அவ்வளவு உசிதம் அல்ல என்று இந்த அரசாங்கம் கருதுகிறது. ஆகவேதான் உத்தியோகப் பற்று அல்லாதவர்களைப் போடாமல் உத்தியோகஸ்தர்கள் போடப்பட்டிருக்கிறார்கள். வெல்லிங்டன் தனியாக இருக்கிறது. அது ஒரு கண்டோன்மெண்டு. ஆனால் இந்த அரவங்காடு டவுன்ஷிப்பைப் பொறுத்தவரையில், அந்த

[திரு. எம். பக்தவத்சலம்] [2nd February 1963

பிராந்தியத்திலே இருக்கின்ற மக்களுக்கு என்ன வசதிகள் செய்ய வேண்டுமோ, அந்த பிராந்தியம் சம்பந்தமாக என்னென்ன கவனம் செலுத்த வேண்டுமோ, அவ்வாறு கவனம் செலுத்தப் படும். அப்படி பிரத்தியேகமாகக் கவனம் செலுத்துவதற்காகத் தான் டவுன்ஷிப்பு அமைக்கப்படுகிறது.

ஆகவே இந்தத் தீர்மானத்தை .கனம் அங்கத்தினர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய வார்த்தையை முடித்துக் கொள்கிறேன்.

9-30 a.m. MR. SPEAKER : The question is—

"That in pursuance of sub-section (1) of section 4 of the Madras Panchayats Act, 1958 (Madras Act XXXV of 1958) the House do resolve that each of the areas specified in column (1) of the Table below which is an industrial, labour or institutional clony as noted in the corresponding entry in column (2) thereof be declared to be a township."

TABLE

| Description of area. (1) | Whether institutional, industrial or labour colony. (2) |
|---|---|
| 1 The Aravankadu Cordite Factory area comprised within the jurisdiction of Ketti, Hubbathalai, Jagathala and Coonoor revenue villages of the Nilgiris District. | Institutional colony. |
| 2 The Madukkarai Cement Factory area comprised within the jurisdition of Madukkarai revenue village of the Coimbatore District. | Labour colony. |
| 3 The Annamalai University Campus area comprised within the jurisdiction of Usuppur, Tiruvetkulam and C. Kothankudi revenue villages of the South Arcot District. | Institutional colony. |
| 4 The Sankaragar (Thalaiyuthu) Cement Factory area comprised within the jurisdiction of Naranamalpuram revenue village of the Tirunelveli District. | Industrial colony. |
| 5 Harveypatti Mill area comprised within the jurisdiction of Tirupoarankundram revenue village of Madurai District, | Labour colony. |
| 6 The Manimuthar project area comprised within the jurisdiction of Manjolai, Ayan Singampatti, Zamin Singampatti and Aladiyur Panchayats of the Tirunelveli District. | Industrial colony. |

The resolution was put and carried.



2nd February 1963]

## IV. GOVERNMENT BILLS.

### (1) THE MADRAS COMMERCIAL CROPS MARKETS (VALIDATION OF CESS) BILL, 1962 (L.A. BILL NO. 23 OF 1962).

THE HON. SRI P. KAKKAN : Sir, I move—

"That the Madras Commercial Crops Markets (Validation of Cess) Bill, 1962* (L.A. Bill No. 23 of 1962) be taken into consideration."

In its judgment in Writ Petition No. 606 of 1957, the High Court of Madras has held, that in the absence of a Legislative provision regarding any policy or limits of assessment, for the guidance of the assessing authority, the provisions of section 11 (1) of the Madras Commercial Crops Markets Act, 1933, amount to excessive delegation of, legislative power and are therefore invalid. The above decision was upheld, by a Division Bench of the High Court, Madras. The result is that the levy and collection of cess under section 11 (1) of the Madras Commercial Crops Markets Act, 1933, is void and unenforceable and the dealers would be entitled to get refund of any cess levied or collected under that section on the ground of mistake of law.

The Madras Agricultural Produce Markets Act, 1959, has been brought into force on the 22nd October 1962, on which date, the Madras Commercial Crops Markets Act, 1933, stands repealed. The decision of the High Court would not affect the position under the Madras Agricultural Produce Markets Act, 1959, inasmuch as section 18 of that Act, provides for the maximum rate of levy of cess under that section. Hence the Government consider that the levy and collection of cess under the Madras Commercial Crops Markets Act, 1933, rendered invalid should be validated, lest the market committees concerned should suffer pecuniary loss consequent on the invalidity of such levy and collection already made. It is accordingly proposed, to validate the levy and collection of cess, by market committees, under the Madras Commercial Crops Markets Act, 1933, for the period prior to the 22nd October 1962.

The Bill seeks to give effect to the above objects.

This Bill was introduced in the Legislative Assembly, on the 2nd November 1962, the Thirteenth year of the Republic of India. As we are now in the year 1963, the Fourteenth Year of the Republic of India, certain formal amendments are necessary in the Bill which I shall move at the appropriate time.

MR. SPEAKER : The question is—

"That the Madras Commercial Crops Markets (Validation of Cess) Bill, 1962 (L.A. Bill No. 23 of 1962) be taken into consideration."

---

* Published in the *Fort St. George Gazette* Extraordinary, dated 2nd November 1962.

[2nd February 1963

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clause 2 was put and carried.

*Clause* 3

MR. SPEAKER : The question is—

'That clause 3 do stand part of the Bill.'

SRI S. MADHAVAN : Sir, I move—

"(i) In sub-clause (1) after the words 'Notwithstanding anything contained' in lines 8 and 9 insert the words "in any law or".

"(ii) and for the words 'not in accordance with law' in line 13 substitute the words 'made under Section 11 (1) of the Madras Commercial Crops Markets Act, 1933'."

The amendment was duly seconded.

MR. SPEAKER : Now the clause and the amendments are before the House for discussion.

SRI S. MADHAVAN : Sir, I want to say a few words in respect of the amendments proposed by me. The amendments proposed are only formal in nature. The purpose of the Act is very clear from the Statement of Objects and Reasons. The principal Act is XX of 1933. Subsequently, in 1955, Section 11 (1) was brought and incorporated in the principal Act. That Section 11 (1) has been declared as illegal on the principle of excessive delegation of power to the executive authority by the High Court of Madras. The decision has been reported in 1960-1 M.L.J. That has been confirmed by a judgment of the Division Bench. The principle on which the High Court decided is that without laying down any principle to determine the rate of tax or the maximum rate of tax the delegation of power to determine the tax by the executive authority is illegal. The general principle which is laid down by a number of decisions is that "delegated legislation would be invalid if it amounts to the total abdication of the sanction of the Legislature in favour of the executive authority." That principle I hope we all accept. But the result of the decision of the High Court will be that all levies made under Section 11 (1) are void and unenforceable. To validate those levies I think the present legislation has been brought before us. The principle on which the High Court decision has been made is on the principle of excessive delegation of power. So the words 'or in any law' are very necessary as proposed in my first amendment. They should be incorporated under clause 3 of the Bill. At this moment, I should like to say that these words viz., 'or in any law' are found in the amended Act of 1955. Therefore these words are necessary and they may be incorporated in the present Bill.



2nd February 1963] [Sri S. Madhavan]

With regard to amendment (ii) I should like to read the copy of the judgment of the High Court.

About Section 11, 1955 Act, His Lordship has observed.

"I have already held that determination of the tax by the executive Government under Section 11 (1) was invalid, the power not having been validly delegated by the Legislature."

So it has been clearly stated that all the levy under section 11 of 1955 amendment Act are invalid. So the words used under clause 3 of the present Act shall be deemed to be invalid on account of such levy or collection being not in accordance with law. These words are too general for the purpose of this Act. It will give room for various interpreation of the law by the various Courts of this land. So it is very necessary; it is better to say specifically as stated in my amendment viz., 'not in accordance with law' in line 13 substitute the words 'made under section 11 (1) of the Madras Commercial Crops Markets Act, 1933.' If we insert these words it will be free from any doubt and whatever collection is made under Section 11 of the 1955 Act will be made valid according to the present Act. With these words, I request the House to accept my amendments.

THE HON. SRI R. VENKATARAMAN : Mr. Speaker, Sir, the amendments proposed by the hon. Member, Sri S. Madhavan is on the lines of what we call the usual phraseology in law. Whenever we have a consolidating amendment Act we use the expression 'notwithstanding anything contained in any law for the time being in force.' But this is a validating Act which validates the levy of cess made in pursuance of the Act, 1933. The High Court held that the exercise of the power by the Government was excessive of jurisdiction. Therefore, it was not because there was anything contrary which is contained in the law that is sought to be amended. But it is the judgment of the High Court which made certain levy illegal and the levy has to be validated. Therefore, we have said in the section that "notwithstanding any judgment' and that is why we have omitted the words 'notwithstanding any law for the time being in force.' Since the object of the legislation is to validate the levy 'notwithstanding any judgment or decree or order of any court' this levy should be validated. It is superfluous and in fact it may be out of place to add in this particular context after the words 'notwithstanding anything contained' the words 'in any other law.'

So far as the second amendment is concerned that the collection was made under Section 11 (1) of the Act as proposed by the hon. Member Sri S. Madhavan may not be appropriate in this case because that section has been held void and therefore that section does not exist in the Act itself. If any levy has been made in pursuance of the law, it is not in accordance with law. Then

[Sri R. Venkataraman] [2nd February 1963

we say in spite of the fact that it was not ' in accordance with law ' levy may be valid. In the validated Act we say that this was not in accordance with law and therefore we say that this may be validated. If we say that on other hand that the collection was made under Section 11, it would be presumed that Section 11 was valid law and if it was valid there is no need for the validation of the previous valid law. Sir, the point is very simple so far as legal position is concerned. If you say, that levy was not made in accordance with law it covers all the probable ways in which it was held to be not valid. But if you say that it was made under Section 11 which does not exist after the judgment, it is void according to the judgment. It will not convey what the Government wants to do viz., that this levy was made in accordance with law. Therefore, we want to validate. In the circumstances, either of these amendments are not acceptable to the Government.

The amendment was by leave, withdrawn.

Clause 3 was put and carried.

*Clause 1 and the Preamble*

THE HON. SRI P. KAKKAN : Sir, I move—

' That in the enacting formula, for the word " Thirteenth " *substitute* the word " Fourteenth ".'

MR. SPEAKER : The question is—

' In the enacting formula, for the word " Thirteenth ", *substitute* the word " Fourteenth ".'

The amendment was put and carried.

THE HON. SRI P. KAKKAN : Sir, I move—

' In sub-clause (1) of clause 1, for the figure " 1962 " *Substitute* the figure " 1963 ".'

MR. SPEAKER : The question is—

' In sub-clause (1) of clause 1, for the figure " 1962 ", *substitute* the figure " 1963 ".'

The amendment was put and carried.

Clause 1 and the Preamble, as amended, were put and carried.

THE HON. SRI P. KAKKAN : Sir, I move—.

' that the Madras Commercial Crops Markets (Validation of Cess) Bill, 1962 (L.A. Bill No. 23 of 1962) as amended be passed '.

MR. SPEAKER : The question is—

' That the Madras Commercial Crops Markets (Validation of Cess) Bill, 1962 (L.A. Bill No. 23 of 1962) as amended be passed."

The motion was put and carried and the Bill, as amended, was passed.



2nd February 1963]

## IV. GOVERNMENT MOTION.

### CHANGE IN THE ORDER OF BUSINESS.

THE HON. SRI R. VENKATARAMAN : Mr. Speaker, Sir, I suggest that the consideration of the Madras Essential Articles Control and Requisitioning (Temporary Powers) Amendment Bill, 1963, may be taken up first so that there may be continuous speech on the Supplementary Demands.

Accordingly, under Rule 21 (3) of the Madras Assembly Rules, I move—

" That the consideration of the Madras Essential Articles Control and Requisitioning (Temporary Powers) Amendment Bill, 1963, be taken up first before the discussion on the Demands for Grants for Further Expenditure for the year 1962–63 is taken up "

MR. SPEAKER : The question is—

" That the consideration of the Madras Essential Articles Control and Requisitioning (Temporary Powers) Amendment Bill, 1963, be taken up first before the discussion on the Demands for Grants for Further Expenditure for the year 1962–63, is taken up. "

The motion was put and carried.

## IV.—GOVERNMENT BILLS—*cont.*

### THE MADRAS ESSENTIAL ARTICLES CONTROL AND REQUISITIONING (TEMPORARY POWERS) AMENDMENT BILL, 1963 (L.A. BILL No. 1 OF 1963).

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I move—

" That the Madras Essential Articles Control and Requisitioning (Temporary Powers) Amendment Bill, 1963 * (L.A. Bill No. 1 of 1963) be taken into consideration."

The Bill seeks to replace the Madras Ordinance No. 1 of 1963 which was promulgated by the Governor on the 24th January 1963, for extending the life of the Madras Essential Articles Control and Requisitioning (Temporary Powers) Act, 1949, which was due to expire on the 25th January 1963, for a further period of three years, that is, up to and inclusive of the 25th January 1966.

With a view to conserve electrical energy for utilisation for productive purposes connected with war efforts, the Restriction and Control Orders on the supply of electrical energy were first introduced by the Government of India during the last world war under the Defence of India Rules. After the termination of the war, the Restriction and Control, Freezing, Surcharge, etc., Orders relating to electricity have been continued in the State under the Madras Essential Articles Control and Requisitioning (Temporary Powers) Act, 1949, the life of which has been extended from time to time. Though the installed capacity of the Madras Grid has increased

* Published in the *Fort St. George Gazette* Extraordinary, dated 1st February 1963.

[Sri R. Venkataraman] [2nd February 1963

from 256 M.W. to 571 M.W. during the Second Plan period and is likely to increase to 1,131 M.W. at the end of the Third Plan period, yet the power demand in this State always outstrips the power generation with the result that there is chronic power shortage in the State. It has been possible to meet the demands only by certain restriction and control. In the present National Emergency, the demand for power, for defence needs, is being met on a priority and the demand also has increased by leaps and bounds. Hence, further restrictions on the existing supplies for non-essential purposes and in regard to new non-essential loads have become necessary. At the same time, the Government are taking all steps necessary to augment power projects and in order to meet the increased demand, they are exploring all possibilities of advancing the commissioning of power Projects. The Government of India also are extending necessary co-operation in this regard. They have decided that when a third Atomic Power Station is located in this country, it should be at Kalpakkam near Mahabalipuram.

It is, therefore, essential in the meantime, to continue in force, wherever necessary, the existing controls on electricity supply to ensure the most economic use of the available power in the best interests of the public. As the orders relating to the supply of electrical energy and the levy of charges for the supply of electricity have been continued in the State under the Madras Essential Articles Control and Requisitioning (Temporary Powers) Act, 1949, the life of which has been extended from time to time, the Government have decided to keep alive the provisions of the Act for a further period of three years from the 26th January 1963. As the Legislature was not in session, the Madras Essential Articles Control and Requisitioning (Temporary Powers) Ordinance, 1963, was promulgated to achieve the above object and the Bill before the House is intended to replace the above Ordinance.

*திரு. ஜே. மாதா கவுடர்:* கனம் சபாநாயகர் அவர்களே, இது ஒரு சிறிய திருத்த மசோதா. இன்றியமையாத பொருள்களுக்குக் கட்டுப்பாடு விதிக்கும் வகையிலே இரண்டாவது யுத்தம் முடிந்த பிறகு ஒரு சில சாமான்கள் இன்றியமையாத பொருள்கள் என்ற நிலையில் கட்டுப்பாட்டின் கீழே கொண்டு வரப்பட்டன. இந்தச் சட்டத்தை நாம் மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை நீடித்துக்கொண்டு வருகிறோம். இப்பொழுது 'நேஷனல் எமர்ஜென்சி' நிலைமையில் யுத்தம் வருமோ வராதோ என்ற நிலைமை இருந்தாலும் இப்போது அந்தச் சட்டத்தை மேலும் மூன்றாண்டுகளுக்கு அமுலுக்குக் கொண்டு வருகிறோம். இந்த அவசர நிலையில் இன்னும் எந்தெந்தப் பொருள்களுக்குக் கட்டுப்பாட்டைக் கொண்டு வரலாம் என்று திட்டவட்டமான முடிவை எடுத்துக் கொண்டு இந்தச் சட்டத்தை நிறைவேற்றுவது பற்றி அமைச்சர் அவர்கள் ஆலோசிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஜனவரி மாதத்தில் சட்டசபை கூடவில்லையாதலால் இப்போது இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. மேலும்



2nd February 1963] [*திரு. ஜே. மாதா கவுடர்*]

*என்னென்ன பொருள்களுக்குக் கண்ட்ரோலைக்கொண்டு வரலாம் என்பது பற்றி அமைச்சர் அவர்கள் சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு இந்த மசோதாவை ஆதரித்து என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.*

MR. SPEAKER: The question is—

'That the Madras Essential Articles Control and Requisitioning (Temporary Powers) Amendment Bill, 1963 (L.A. Bill No. 1 of 1963) be taken into consideration.'

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clauses 2 and 3 were put and carried.

Clause 1 and the Preamble were put and carried.

THE HON. SRI R. VENKATARAMAN: Mr. Speaker, Sir, I move—

'That the Madras Essential Articles Control and Requisitioning (Temporary Powers) Amendment Bill, 1963 (L.A. Bill No. 1 of 1963) be passed.'

MR. SPEAKER: The question is—

'That the Madras Essential Articles Control and Requisitioning (Temporary Powers) Amendment Bill, 1963 (L.A. Bill No. 1 of 1963) be passed.'

The motion was put and carried and the Bill was passed.

## V.—DEMANDS FOR GRANTS FOR FURTHER EXPENDITURE FOR 1962–63—*cont.*

MR. SPEAKER: I suggest to the hon. Members that, since they will be discussing the Budget next month, they may limit their comments to those items mentioned in the Demands for Grants for Further Expenditure for the year 1962–63.

* *திரு. இராம. அரங்கண்ணல்:* மாமன்றத் தலைவர் அவர்களே, 1962-63-ம் ஆண்டுக்கான துணை மதிப்பீட்டின் மீது பேசுகின்ற நேரத்தில், இன்றையதினம் நாட்டில் ஏற்பட்டிருக்கக்கூடிய நெருக்கடியை உத்தேசித்து அதிகச் செலவுகளுக்காகக் கோரப்பட்டிருக்கின்ற இனங்களைக் கவனிக்கின்ற நேரத்தில் என்னுடைய கட்சியின் சார்பிலே நான் பொதுவாக வரவேற்க வேண்டிய நிலைமையிலேயே இருக்கிறேன். சுதந்திரம் வந்த பிறகு நாட்டிலே போலீசாருக்கு ஏற்பட்டிருக்கின்ற பொறுப்புகளைப் பற்றி நாம் அத்தனை பேரும் நன்றாக அறிவோம். நம்முடைய மாநில போலீசார் திறமை வாய்ந்த முதலமைச்சரின் கீழ் இன்றையதினம் நல்ல முறையிலே பணியாற்றிக் கொண்டு வருகிறார்கள் என்பதை நான் மறுப்பதற்கில்லை. அந்தப் போலீசாரின் வீரமும் தீரமும் வெள்ளிப் பனிமலையில் சீன விரோதிகளை முறியடிப்பதற்காகப்

[திரு. இராம. அரங்கண்ணல்] [2nd February 1963

பயன்படுகிறது என்று அறிகின்ற நேரத்தில் உள்ளபடியே நம்முடைய இதயம் எல்லாம் பூரிக்கின்றது. அந்த அளவுக்குப் பொறுப்புக்களை ஏற்றுப் பணியாற்றுகின்ற போலீசார் பொறுப்புகளை எந்த அளவுக்கு அதிகமாக வகிக்கிறார்களோ அந்த அளவுக்கு வசதிகளை அதிகமாகப் பெற்றிருக்கிறார்கள் என்று சொல்லிவிட முடியாது. அப்படிச் சொல்லுகின்ற நேரத்தில் வசதிகளை அளிப்பதற்கு நம்முடைய அரசாங்கம் தயங்குகின்றது என்கின்ற குற்றச்சாட்டை நான் சாட்ட விரும்பவில்லை. அதிலும் ஏழைக் குடியிலே பிறந்து, ஏழைகளின் துன்பங்களை உணர்ந்து நம்முடைய முதலமைச்சர் அவர்கள் போலீசாருக்குச் செய்யப்பட்ட வேண்டிய காரியங்களைச் செய்வதிலும், போலீசாரை அதிகமாக ஆக்குவதிலும், அவர்களுக்கு வீடுகளைக் கட்டிக் கொடுப்பதிலும் எடுத்துக் கொண்டிருக்கிற சிரத்தைகளை நாம் நன்றாக அறிவோம். இரண்டு தினங்களுக்கு முன் நடைபெற்ற ஒரு விழாவில் கூட, 'தேசிய நெருக்கடியை உத்தேசித்து போலீசாருக்கு வீடுகள் கட்டி கொடுக்கின்ற திட்டத்தை நான் ஒத்திப்போட மாட்டேன்' என்ற உறுதிமொழியை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அளித்திருக்கிறார்கள். அந்த அளவுக்கு போலீசாருக்கு வேண்டிய வீடுகளைக் கட்டிக் கொடுப்பது, பிற நல்ல திட்டங்களையும், அவர்களுடைய குடும்பங்களுக்கு வேண்டிய நிரந்தரமான உதவிகளையும் நம்முடைய அரசாங்கம் கவனித்துச் செய்யவேண்டுமென்று நான் வற்புறுத்த ஆசைப்படுகிறேன். சில சில்லரை குறைகள் ஆங்காங்கு வாழ்கிற அத்தனை போலீசாரிடையேயும் இருந்து கொண்டிருக்கின்றன. அவர்கள் அணிய வேண்டிய உடுப்புகளைப் பற்றியும் காலிலே கட்டிக் கொள்கின்ற பட்டிகளைப் பற்றியும், போட்டுக் கொள்கின்ற பெரிய பூட்சுகளைப் பற்றியும் உத்தரவுகள் கடுமையான அளவில் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அந்த உத்தரவுகள் இருக்கக்கூடாது என்று நான் சொல்லவில்லை. போலீஸ் அலுவலகத்தில் உட்கார்ந்து பணியாற்றுகிற ரைட்டர் போன்றவர்கள் கூட பெரிய பூட்சுகளை போட்டுக் கொள்ள வேண்டுமென்ற நிலைமை கடுமையாக அமல் நடத்தப்படுகிறது. அதைக் கொஞ்சம் தளர்த்தி, ஓய்வு நேரத்தில் அவர்கள் அந்த அணிகளையெல்லாம் அணியாமல் இருக்கும் வகையில் உத்தரவைப் பிறப்பிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றையதினம் தேசிய நெருக்கடியை உத்தேசித்து தேசிய மாணவர்படை ஏற்படுத்தவும் அந்தப் படைப் பிரிவுகளை நம்முடைய கல்லூரிகளில் உண்டாக்கவுமான திட்டம் பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. இன்றுள்ள நிலைமையில் எல்லாக் கல்லூரிகளிலும் இப்படிப்பட்ட மாணவர் படையை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சீன நாட்டை நாம் உற்று நோக்கினால் கம்யூனிஸ்டுகள் சீனாவை ஆளத் துவங்கிய பிறகு எல்லாப் பள்ளிக் கூடங்களிலும், கல்லூரிகளில் மட்டுமல்லாது எல்லாக் கிராமங்களிலும் ஒரு நாளைக் குறித்து அந்த நாளில் கிராமத்தில் இருக்கும் பெண்கள் உட்பட எல்லோரும் போர்ப் பயிற்சி பெறவேண்டுமென்ற ஒரு கட்டாயத்தை உண்டு பண்ணி



2nd February 1963] [திரு. இராம. அரங்கண்ணல்]

னார்கள். அந்த முறையில் நம்முடைய நாட்டிலும் அத்தனை கிராமங்களிலும் வயது வந்தவர்களுக்கு கட்டாய இராணுவப் பயிற்சியைக் கொடுக்கவேண்டும். அநத வகையில் அதற்கு முன்னோடியாக எல்லாக் கல்லூரிகளிலும், எல்லா உயர்நிலைப் பள்ளிகளிலும் கட்டாய இராணுவப் பயிற்சியைக் கொடுக்கவேண்டும். தற்போது, யார் யார் விரும்புகிறார்களோ அவர்கள் நேஷனல் காடட் கோர்சில் சேர்ந்து கொள்ளலாம் என்று விதி இருக்கிறது. ஆண்களுக்கு மட்டுமின்றி பெண்களுக்கும் கட்டாய இராணுவப் பயிற்சியைக் கொண்டுவரவேண்டும். அந்த வகையில் ஆரம்பிக்கப்பட இருக்கும் சயினிக் பள்ளி ஒன்று மட்டும் போதாது. பல பள்ளிகளைக் கொண்டுவருவதற்கான திட்டங்களைச் செயல்படுத்த வேண்டும்.

தேசீய நெருக்கடியைப்பற்றிச் சொல்லுகின்ற நேரத்தில் டிரைவர்கள் ஏராளமாகத் தேவைப்படுகிறார்கள் என்ற காரணத்தால் அவர்களுக்கு ஒரு குறுகிய காலப் பயிற்சியை ஆரம்பிப்பது பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. டிரைவர்களுக்கான அந்தப் பயிற்சி பள்ளியில் துரிதகாலத்தில் டிரைவர்களுக்கான பயிற்சி கொடுக்கப்பட இருக்கிறது. சாதாரணமாக நாம் இன்றையதினம் ஏற்படுகின்ற விபத்துக்களைப் பற்றி நன்றாக அறிவோம். இன்று இருக்கக்கூடிய நெருக்கடி நிலைமையில் அதிகமான டிரைவர்கள் வேண்டுமென்று சொன்னாலும் டிரைவர்களுக்கான பயிற்சி குறுகிய காலப் பயிற்சிக்காக வேண்டாமென்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

தற்போது டாக்டர்கள் அதிகமாகத் தேவைப்படுகிறார்கள் என்று சொல்லி சில விதி முறைகளை மாற்றியமைத்து உத்தரவு பிறப்பித்திருப்பதாக நான் அறிகிறேன். டாக்டர் பட்டம் பெற்றவர்கள் ஓராண்டு காலம் 'இண்டர்னி' ஆக இருந்த பிறகுதான் ஹவுஸ் சர்ஜனைப் போட வேண்டுமென்று இருக்கிறது. இப்போது அந்த விதி மாற்றப்பட்டு ஒரே ஆண்டு காலத்தில் எம்.பி.பி.எஸ். 10-00 a.m.
பாஸ் செய்த பிறகு ஹவுஸ் சர்ஜனை இருந்தால் போதும் என்று உத்திரவிட்டிருப்பதாக அறிகிறேன். தேசீய நெருக்கடி ஒருபுறத்தில் இருந்தாலும் உயிரைப் பாதுகாக்கும் பொறுப்பில் உள்ள உத்தியோகங்களின் விதிகளை அதிகம் தளர்த்தாமல் திறமையை மனதில் கொண்டு பழைய உத்தரவுபடி ஒரு ஆண்டு இன்டர்னியாகவும் ஒரு ஆண்டு ஹவுஸ் சர்ஜனகவும் இருக்கும்படியான பழைய உத்தரவை அமுல் நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நெருக்கடி ஏற்பட்டிருந்தாலும், நாட்டில் ஏற்பட்டிருக்கிற இந்த புதிய உணர்ச்சியை, புதிய மனப்பக்குவத்தை நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். விருப்பங்களைச் சட்டங்களாக ஆக்கிக்கொள்ளலாம் என்பதைவிட்டு விருப்பங்களை நாட்டின் வளத்தைப் பெருக்குவதற்கான நல்ல நிலையை உருவாக்குவது எதிர்காலத்திற்கு நல்லது என்று தெரிந்துக்கொள்கிறேன். கிராமத் தொண்டர் படை அமைக்க திட்டம் இடப்பட்டிருக்கிறது. அதை நான் வரவேற்கிறேன். அதே சமயத்தில் சென்னை மாநகரில் தொண்டர் படை அமைக்கப்பட இருக்கிறதா என்று தெரியவில்லை. ஹோம் கார்ட்ஸ் அமைக்கப்

[திரு. இராம. அரங்கண்ணல்] [2nd February 1963

படும் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. போலீஸுக்கு உதவியாக இருக்கத்தான் அது அமைக்கப்படுகிறது. கிராமங்களில் தொண்டர் படை அமைக்கப்படுவதைப்போல் சென்னை மாநகரில் உள்ள 100 டிவிஷன்களிலும் நல்ல தொண்டர் படைகளை அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கிராமத்தில் தொண்டர் படை உற்பத்தியை பெருக்க, கல்வியைப் பரப்ப, பாதுகாப்பு வேலைகளில் ஈடுபட அமைக்கப்படுகிறது. நகரங்களில் இருக்கிறவர்கள் எந்தக் காரியத்தை செய்ய முடியும் என்று கேட்கலாம்.

நகரத் தொண்டர் படை சிறு சேமிப்புத் திட்டம் மூலமாக ஏராளமாக வருவாய் கொண்டு வந்து சர்க்காருக்குக் கொடுக்கக் கூடிய விதத்தில் பணி புரியலாம். அவ்வகையில் சென்னை மாநகரில் ஒரு தொண்டர்படை அமைக்கப்பட்டால் எங்கள் கட்சி சார்பில் நாங்கள் அதில் ஈடுபட்டு வேண்டிய அளவு சர்க்காருக்கு நிதி திரட்டித் தரவும், சிறு சேமிப்புத் திட்டம் வெற்றி பெறுவதற்கான ஒத்துழைப்பையும் தருவோம் என்று சொல்லிக் கொள்கிறேன். சிறு சேமிப்புத் திட்டம் நல்லமுறையில் நடக்கிறது என்றும் அதற்காக டிஸ்ட்ரிக்ட் வாரியாக அதிகாரிகளை நியமிக்கப் போகிறோம் என்று சொன்னாலும் அத் திட்டம் போதிய பிரகாரத்தையும் போதிய நல்ல முன்னேற்றத்தையும் கண்டிருக்கிறது என்று நாம் கூறமுடியாது. நாடு இருக்கிற நிலையில், நாம் அத்தனை பேரும் நம் ஊதியத்திலும், நம் குடும்ப ஊதியத்திலும் ஒரு பங்கை இதுபோன்ற நல்ல திட்டங்களுக்குத் தரவேண்டிய நிலையில் இருக்கிறோம். அதையும் என் கட்சி ஆதரிக்கிறது. அவ்வகையில் சென்னை மாநகரத்தில் தொண்டர் படை நிறுவப்படுமேயானால் அப்படைகள் இது போன்ற நல்ல முயற்சிகளில் ஈடுபடும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன். அடுத்து முதியோருக்கு பென்ஷன் கொடுப்பது பற்றி சொல்லியிருப்பதில், "25 லட்சத்திலிருந்து 30 லட்சம் வரைதான் தேவைப்படும் என்று தொடக்கத்தில் கருதினோம். நடைமுதல் ஆண்டில் மாத்திரம் இதற்காக ரூபாய் 120 லட்சம் தேவையென கணக்கிடப்பட்டிருக்கிறது" என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. முன்பு, பட்ஜெட் தயாரித்த போது 25 லட்சம் போதும் என்று எப்படி மதிப்பிடப்பட்டதோ தெரியவில்லை. திட்டத்தை விட அதிகப்படியாக செலவிடும் முறை இருக்கிறது. பட்ஜெட் தயார் செய்யும் போது எதைச் செய்தால் எந்த அளவு செலவு ஏற்படும் என்று ஊகிக்கும் தன்மை வாய்ந்த அதிகாரிகள் நம் மாநிலத்தில் இருக்கிறார்கள். அவர்களின் விசாலமான அறிவு நல்ல அளவில் திட்டங்களை உருவாக்க வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன். அடுத்து இத்துணை மதிப்பீட்டில் குடிசைவாழ் மக்களின் பிரச்னைபற்றிய திட்டங்கள் இதில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. என் மயிலைத் தொகுதியைச் சார்ந்த தொச்சிக் குப்பம், டுமிங் குப்பம், குள்ளிக் குப்பம், சீனிவாசபுரம் போன்ற பகுதிகளில் உள்ள மீனவ குடித்தனக்காரர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டங்கள் இதில் சொல்லப்பட்டிருக்கின்றன. இத் திட்டங்களில் நமது தொழில் அமைச்சர் அவர்கள் எந்த அளவு ஊக்கம் காட்டி வருகிறார்கள் என்பதை நமது முதல் அமைச்சர் அவர்கள் அங்கு எல்லாம் சென்று அங்குள்ள



2nd February 1963] [திரு. இராம. அரங்கண்ணல்]

நிலைமையை எல்லாம் கண்டறிந்து வந்திருக்கிறார் என்பதை நான் அறிவேன். இதனால் 2,000 குடித்தனக்காரர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் அங்கு நாலு குப்பங்களில் கிட்டத்தட்ட 6,000, 7,000-க்கு மேற்பட்டவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு 1,100 வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும் என்று சொல்லப்படுகிறது. ஆனால் அந்த வீடுகள் எப்படி கட்டிக் கொடுக்கப்படும், அவை கட்டிக் கொடுக்கப்படும்போது என்ன நிலையில் இருக்கும் என்பதை எல்லாம் நம் அரசாங்கம் அறியும், அதிலுள்ள சிக்கல்களையும் நன்கு அறியும். வீடுகள் கட்டி அவற்றிக்கு 10 ரூபாய், 12 ரூபாய் வாடகை என்று நிர்ணயிக்கிற நேரத்தில் அந்த வாடகையை கொடுக்க முடியாமல் அங்குள்ளவர்கள் அந்த வீடுகளுக்குப் போக மறுக்கிறார்கள். (முதலமைச்சர் அவர்கள் குறுக்கீடு.) அதுபற்றி நமது முதல் அமைச்சர் அவர்கள் குறிப்பிடும் நேரத்தில் அந்த வீடுகளை 30 ரூபாய் வாடகைக்கு அதிகாரிகளுக்கு கொடுத்து வாடகை வாங்கிக் கொண்டிருக்கிறோம், என்கிறார். அதைக்கூட கொடுக்க முடியவில்லை என்று குறைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அது ஒரு புறமிருக்க, இந்தக் குடிசைவாழ் மக்களின் பிரச்னையை சர்க்கார் அதிகாரிகளைக் கொண்டு அணுகி அல்லது ஹவுஸிங் போர்டைக் கொண்டோ நல்ல முறையில் நடத்தி விடமுடியும் என்று கருதி விட முடியாது. நமது முதலமைச்சர் அவர்கள் முதல் அமைச்சராக வந்தபோது ஒவ்வொரு வட்டாரத்திற்கும் சென்று பிரச்னையை அறியப் பாகல் மேடு போன்று சில மகா நாடுகள் நடத்தினார்கள். குடிசை வாழ் மக்களின் பிரச்னையைத் தீர்க்க அமைச்சர்கள் அதிகாரிகள் இவர்கள் அந்தஇடங்களுக்குப் போய் மக்களின் கருத்துக்களை கேட்டு அறிந்து, பின்னர் திட்டங்களை தீட்ட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஹௌஸிங் போர்டிலிருந்து நேரோக உத்தரவுகளைப் போட்டு விட்டால் மட்டும் இந்தப் பிரச்னையைத் தீர்த்து விட முடியாது. குடிசைவாழ் மக்களின் பிரச்னை எத்தகைய சிக்கல்கள் நிரம்பியது, எத்தகைய வேதனை நிரம்பியது என்பதை என் தொகுதியைச் சுற்றி இருக்கிற அத்தனை அமைச்சர்களும் அறிவார்கள் என்று நான் கருதுகிறேன். எல்லோருக்கும் இன்பம் தரத்தக்க வகையில் அப்பிரச்னையைத் தீர்க்க வேண்டும். ஸ்லம் இம்ப்ரூவ்மெண்ட் ஸ்கீம்க்காக மத்திய அரசாங்கமும் ஏராளமாக மான்யங்கள் தருகிறார்கள். நமது அரசாங்கமும் ஏராளமான நிதி உதவிகளைத் தருகிறார்கள். அப்படித் தருகிற நேரத்தில் கட்டிக் கொடுக்கும் வீடுகளுக்கு பத்து ரூபாய் வாடகை வசூல் செய்கிறோமே தவிர அந்த வீடுகள் அவர்களுக்கு சொந்தமாகுமா என்று பார்த்தால் ஆகாது என்ற நிலைதான் இருக்கிறது. அதோடு வீடு ஒன்றுக்கு 5,000-க்கு மேல் செலவாகும் என்றும் சொல்லப்படுகிறது. லோ இன்கம் க்ரூப் ஹவுஸிங் ஸ்கீமை எடுத்துக் கொண்டால் மாதா மாதம் 40 அல்லது 50 ரூபாய் செலுத்தி வந்தால் 15 ஆண்டுகளுக்குள் அந்த வீடுகள் அவர்களுக்குச் சொந்தமாகிவிடும். ஆனால் இங்க ஏழை மக்களைப் போறவத்த வரை அவர்கள் வாடகை கொடுத்துக் கொண்டே இருக்க வேண்டியிருக்கிறது. அவர்கள் வாடகையாக கொடுக்கும்

[திரு. இராம. அரங்கண்ணல்] [26th February, 1963

பணத்தை சேர்த்து அந்த வீடுகளை அவர்களுக்கு சொந்தமாக்குவார்களா என்றால் இல்லை என்ற நிலை இருப்பதால் அங்கு இந்த மக்கள் குடியேற தயங்குகிறார்கள். நேற்றைய தினம் நம் நிதியமைச்சர் அவர்கள்கூடச் சொன்னார்கள், குடிசைவாழ் மக்கள் யாரையும் அப்புறப்படுத்த மாட்டோம் என்று சொன்னார்கள். அந்த உறுதி மொழியை நான் வரவேற்கிறேன். ஏழைகளின் குறைகளை ஏழைக் குடியில் பிறந்த முதல் அமைச்சர் அவர்கள் அறிந்து அவர்களுக்கு தொல்லை கொடுக்காமல் யாரையும் அவர்கள் இடத்திலிருந்து கிளப்பாதிருக்க வழிவகை செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மீனவர்களைப் பொறுத்து யார் யாருக்கு வீடுகள் இல்லையோ அவர்களை வேறு குப்பத்தில் வைப்போம் என்று சொல்கிறார்கள். இன்ன இடத்தில் இவர்தான் பயிர் செய்ய வேண்டுமென்று எப்படிச் சட்டம் வைக்கப்பட்டிருக்கிறதோ அதே போல் நொச்சிக் குப்பத்தில் உள்ளவர்கள் அந்த இடத்தை விட்டு வேறு குப்பத்திற்குச் சென்று மீன் பிடிக்கக் கூடாது, பிடிக்க முடியாது. நொச்சிக் குப்பத்தில் கடலில் கரை இல்லாவிட்டாலும் அவர்கள் மனக் கரையை வைத்து மீன் பிடிக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள். ஆகவே இந்த மீனவ சமுதாயத்தினருக்கு வருகிற பட்ஜட்டிலாவது நல்ல திட்டங்களை நம் நிதியமைச்சர் அவர்கள் அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

MR. SPEAKER : Hon. Members are requested to take not more than six or seven minutes each.

* SRI C. CHIRANJEEVULU NAIDU : Mr. Speaker, Sir, I would like to say a few words on the Supplementary Statement of Expenditure for 1962–63. In the National Emergency, any measures taken and proposed to be taken are welcome. The measures for strengthening the Police Force are also welcome. With these measuress, the agricultural production, which is given second priority, has also to be considered and the facilities provided for the agriculturists mostly in respect of electricity has to be considered. Now electricity supply to the agriculturists is restricted to nights and supply of electricity during nights is not conducive to agricultural operations for dry crops like ragi and groundnut, oil seeds and cotton which have been given prominent place in the production programme. Also, when new connections are given, it is stipulated that the parties concerned should execute an agreement that they would utilise the power only during nights. That might not be helpful to the agriculturists. So this aspect of the matter may kindly be considered and electricity supplied to the agriculturists during the day-time.

Regarding fertilisers, during the last season there has not been a commendable supply of fertilisers in time. The Government allot them to the Collectors who in turn allot them to the wholesale stores which have distributed them only after the season. They have been distributed only out of season, with the result that they could not be properly availed of by the agriculturists in time. So, the supply of fertilisers may kindly be done during the months of



26th February 1963] [Sri Chiranjeevulu Naidu]

August and September in a bulk quantity for distribution by the respective stores and societies. Also, they are supplied in terms of a few kilograms and also on the basis of acreage of wet land. But I feel that dry lands in which wet crops are raised also may be taken into consideration for this purpose and the Government should strictly see that they are supplied during the actual season.

Also food production programmes and special minor irrigation programmes may be integrated together and they may be attended to by one Department. The Food Production Division gives estimate in one way and the Special Minor Irrigation Division gives estimate in another way. So, what is done under the food production scheme and S.M.P. scheme, is not conducive to the benefit of ayacutdars. The convenience of the ayacutdars is not taken into considerations but only the convenience of the contractors and the engineering staff are taken into consideration. This aspect of the matter may kindly be looked into. Some repairs are done in the tanks and some other tanks are strengthened to a level which do not require such repairs. On the other hand, there are tanks which need immediate attention and they may be taken into consideration for the purpose of repairs. Also, along with the repairs to tanks, the supply channel, the source of water-supply and the head works may kindly be repaired. Though it entails a huge amount of expenditure, there is abundant source of water-supply and this aspect of the matter may also kindly be looked into.

Recently, ryots have experienced a lot of difficulties in the matter of disposal of their paddy. There is not a proper market for their produce and there is a slump in the market for foodgrains. So, the Government must come forward to purchase their produce and it should not be entrusted to the middlemen like millers. Procuring of grains may be entrusted to the taluk marketing societies and wholesale stores which are properly and efficiently functioning. If this is done, the benefit will go not only to the agriculturists but also to the societies and their respective share-holders.

In the matter of National Savings Scheme, I suggest that the Postal Department may be addressed to open Savings Bank Account in all the branch offices which have been recently opened. Now most of the branch offices do not have Savings Account. The branch post-master who is an extra-departmental person or a village officer may be entrusted with the savings agency. In 1959–60 the village officers did attractive work in the matter of implementing the National Savings Scheme, and they may be entrusted with this work.

Regarding old-age pension, I suggest that a committee may kindly go into the working of the entire scheme and scrutinize the pending applications and the disposed applications as there has recently been some complaint about it.

As regards new schemes, whenever a new scheme is introduced—whether it relates to family planning or agricultural production—immediately a Deputy Tahsildar or a Revenue Inspector is

[Sri C. Chiranjeevulu Naidu] [2nd February 1963

promoted and posts created and officers posted. That should not be done. Some technical people or people connected with the schemes may be promoted and appointed.

Regarding Harijan Welfare, there is the house-site problem. It has not been effectively solved. In the matter of land acquisition, papers are still pending and I do not know where the bottlenecks are. But there is inordinate delay and this aspect of the matter may be considered and benefit given to the people in Tiruvellore.

As regards some Acts applicable to the Added Territory, they may be repealed before the Budget session.

(At this stage Mr. Speaker sounded the gong.)

So far as the integration of transferred service personnel is concerned, their seniority and qualifications may be respected and their service interests may be safeguarded and integration done at an early date. With these words, I resume my seat. Thank you Sir.

* **திரு. எ. ஆறுமுகம்:** கனம் தலைவர் அவர்களே, நமது மதிப்பிற்குரிய நிதியமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கின்ற ஸப்ளிமெண்டரி பட்ஜெட்டை ஆதரித்து ஒருசில வார்த்தைகள் பேச ஆசைப்படுகிறேன். நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் காலத்திற்குத் தகுந்தார்போல், நேரத்திற்கு ஏற்றாற்போல், காலத்தின் நெருக்கடியை முன்னிட்டு இந்த பட்ஜெட்டை கொண்டு வந்திருக்கிறார்கள். இதைப்படித்துப் பார்க்கிற பொழுது, இப்போது இந்த நாட்டில் ஏற்பட்டிருக்கும் நெருக்கடியை எப்படி சமாளிக்க வேண்டும், இதை சமாளிப்பதற்கு என்னென்ன செய்யவேண்டும் என்பதை உணர்ந்து பல நல்ல காரியங்களை செய்திருக்கிறார்கள். குறிப்பாக நமது நாட்டில் தேசிய நெருக்கடி ஏற்பட்டிருக்கும் இந்த நிலைமையில் போலீஸ் அதிகாரிகளுக்கு பெருத்த வேலைகள் அதிகரித்திருப்பதின் காரணமாக போலீஸ் அதிகாரிகளையும், ஆயுதம் தாங்கிய படைகளையும் அதிகரிக்கவேண்டும் என்று 54 லட்சத்தி 43 ஆயிரம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். இதை நாம் வரவேற்க வேண்டிய நிலைமையில் இருக்கிறோம். நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் சொல்லுவது போல், இத்தகைய தேசிய நெருக்கடி நேரங்களில் போலீஸ் படையினருக்கு நாம் அதிகமான அளவில் தொந்தரவு கொடுக்கக்கூடாது. இதற்காக கிராமப்புறங்களில் மக்கள் அமைதியாகவும் ஒழுங்காகவும், சின்னஞ்சிறு காரியங்களுக்காக, தகராறு போட்டுக்கொள்ளாமல் அமைதியாகவும் இருக்கவேண்டும் என்று அவர்கள் கூறியிருக்கிறார்கள். அதே போல் போலீஸ் படையைச் சேர்ந்த வண்டிகள் எல்லாம் சண்டைக்கு அனுப்ப வேண்டிய நிலைமை ஏற்படலாம். ஆகவே போதிய அளவுக்கு நாம் போலீஸ் தலையிடுவதை தவிர்க்க வேண்டும், நமக்குள்ளேயே நாம் பாதுகாத்துக்கொள்ளவேண்டும் என்று அவர்கள் கூறி வருகிறார்கள். அதற்கிணங்க சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, சேலம் முதலிய



2nd February 1963] [திரு. எ. ஆறுமுகம்]

நகரங்களில் ஊர் காவல் படைகள் (ஹோம் கார்ட்) ஏற்படுத்த வேண்டும் என்று தீர்மானித்து அதற்காக 2 லட்சத்து 64 ஆயிரம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். குறிப்பாக இந்தப் படையை எல்லா ஜில்லா தலைநகரங்களிலும் ஏற்படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய வடஆற்காடு மாவட்டம் மிகவும் வரண்ட பிரதேசம் என்று சொல்வது மிகையாகாது. நாங்களும் மற்ற மாவட்டங்களுடன் போட்டிப்போட்டுக்கொண்டு கனம் முதலமைச்சர் அவர்கள் எங்கள் பக்கத்திற்கு வந்தபோது அவரிடம் 5 லட்சம் ரூபாய் கொடுத்தோம். நாங்கள் அப்போது சொன்னோம், நாங்கள் தஞ்சாவூர், கோயம்புத்தூர் போன்று பல லட்சக்கணக்கான அளவில் வாரி வாரி கொடுக்க முடியாத நிலையில் இருக்கிறோம் என்று. அதற்கு முதலமைச்சர் அவர்கள் பணத்தைப்பற்றி கவலையில்லை, ஆனால் மக்களிடம் இருக்கின்ற உணர்ச்சியை காண்பது தான் முக்கியம் என்று சொன்னார்கள். ஆனால் நான் பெருமையோடு சொல்லிக்கொள்ள முடியும், மற்ற மாவட்டங்களை எல்லாம் விட எங்கள் வட ஆற்காடு மாவட்டத்திலிருந்து தான் அதிகமான பேர்கள் பட்டாளத்தில் சேர்ந்திருக்கிறார்கள். பட்டாளத்தில் வேலை செய்பவர்கள் எங்கள் மாவட்டத்திலுள்ளவர்கள் தான் அதிகம் பேர்கள் என்பதை நான் பெருமையாகச் சொன்னால் அது மிகையாகாது. நம்முடைய மதிப்பிற்குரிய நிதி அமைச்சர் அவர்கள் அமராவதி பக்கத்தில் சைனிக் பள்ளியை திறந்து வைத்தார்கள். அதே போன்று குறிப்பாக எங்கள் பகுதியில் அதாவது சாத்தனூர் அணைக்கட்டுப்பகுதியில் ஒரு சைனிக் பள்ளி திறந்தால் நன்றாக இருக்கும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். நீங்களும் அங்கு வந்தீர்கள். மராமத்து அமைச்சர் அவர்களும் வந்தார்கள். தேசிய மாணவர் படை பயிற்சி பெற்றபோது அங்கு வந்தீர்கள். அப்போது அங்கே பயிற்சி அளித்து வந்த அதிகாரிகள் சாத்தனூர் அணைக்கட்டுப் பிரதேசம் இத்தகைய பயிற்சிக்குத் தகுந்த இடம், மிகவும் சிறந்த இடம் என்று சொன்னார்கள். அங்கே பல கட்டிடங்கள் இருக்கின்றன. ஆகையால் கட்டிட வசதி இருக்கிறது. அதோடு அங்கே காடு இருக்கிறது. காட்டிலே பதுங்கிக்கொண்டு இப்போது இமயமலையிலே உள்ள காட்டிலே சீனர்களை எப்படி பதுங்கிக் கொண்டு தாக்குகிறார்களோ, அதற்கு எந்த முறையில் பயிற்சி வேண்டுமோ அத்தகைய பயிற்சி அளிக்க நல்ல இடமாக இருக்கிறது. ஆகையால் சாத்தனூர் அணைக்கட்டுப் பகுதியில் ஒரு சைனிக் பள்ளியை ஏற்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நம் நாடு விவசாய நாடு. விவசாயத்தைப் பெருக்குவதற்காக, புதுக் கிணறு மானியத் திட்டத்தின்கீழ் கடன்கள் என்ற தலைப்பில் 25 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். நான் ஒரு விவசாயி, விவசாயக் குடும்பத்திலிருந்து வந்திருக்கக் கூடியவன் என்ற காரணத்தினால், விவசாயிகள் சார்பாக இந்த 25 லட்ச ரூபாய் மானியமாக ஒதுக்கியிருப்பதற்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த 25 லட்சம் ரூபாயை கிராமங்களிலே உள்ள சிறு ஏழை விவசாயிகள் பெற

வசதி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 5 ஏக்கர், 4 ஏக்கர், 3 ஏக்கர் வைத்துக்கொண்டிருக்கிற பல ஏழை விவசாயிகள் கிணறு வெட்டி பயிர் செய்து ஜீவனம் செய்வதற்கு அவர்களுக்குத் தக்க நேரங்களில் கடன் வசதி பெற முடியாமல இருக்கிறார்கள். அதே நேரத்தில் பெரிய பெரிய பணக்காரர்கள் கடன் வசதி பெற்றுக்கொண்டு விடுகிறார்கள். ஏழைகள் கடன் மனு போட்டால் அவர்களுக்கு பல கண்டிஷன்ஸ் ஒத்து வருவதில்லை. குறிப்பாக அதிகாரிகள, அவர்களுக்குக் கடன் கொடுத்தால் அவர்கள் சரியான முறையில் திருபபிக் கட்ட மாட்டார்கள், அவர்களோடு போராட வேண்டியிருககும், ஆகையால் யார் சுலபமாகக் கட்டுவார்களோ அவர்களுக்குக் கொடுத்து விடுங்கள் என்று சொல்லி, குறிப்பாக சிறு சிறு விவசாயிகள் இத்தகைய நன்மையைப் பெற முடியாமல் இருக்கிறார்கள். இந்த 25 லட்சம் ரூபாய் மானியத்தையாவது குறிபபாக 10 ஏக்கருக்குள் இருக்கும் விவசாயிகளுக்கு, அதிலும் குறிப்பாக ஹரிஜன விவசாயிகளுக்குக் கொடுக்க வேணடுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஹரிஜனங்களுக்கு பஞ்சம தரிசு என்று 5 ஏக்கர் கொடுத்து பட்டா செய்து கொடுககிறோம். எங்கள் ஜில்லாவில், குறிப்பாக செங்கம் தாலூகாவில் சுமார் 40,000 ஏக்கர் அடமானம் செய்யப்பட இருக்கிறது. 200, 300 ஆண்டுகளாகப் பயிரிட்டுக்கொண்டு இருந்தும் பட்டாக்கள் வழங்கப்பட்டும் பஞ்சம் தரிசு நிலம், ஆகையால் கடன் கொடுக்க முடியாது என்று சொல்லக் கூடிய நிலை இருக்கிறது. அமைச்சர் அவர்கள் உடனே அவர்களுக்கு அந்த பஞ்சம தரிசு நிலங்களை பட்டா செய்து கொடுத்து, அவர்களுக்குக் கடன் வசதியோ அல்லது கிணறு வெட்ட மானிய வசதியோ எல்லாம் செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, சிறு பாசனத் திட்டத்திற்கு ஒவ்வொரு ஜில்லாவிலும் ஒரு டெவலப்மெண்ட் கவுன்ஸிலுக்கு ஒரு தனி என்ஜினீயரைப் போட்டிருக்கிறார்கள். இன்றைக்கு ஒரு ரெவின்யூ டிவிஷனுக்கு ஒரு ஜில்லா விவசாய அதிகாரி என்று போட்டிருப்பது போல ஒவ்வொரு ரெவின்யூ டிவிஷனுக்கும் தனி என்ஜினீயரைப் போட்டு எல்லா இடங்களிலும் பாசனத்தைப் பெருக்க என்ன வசதிகள் செய்யவேண்டுமோ அவைகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும் தொழில் வளர்வதற்கு 5 ஆண்டுகளுக்கு 50,000 ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். என்னுடைய தொகுதியில் இருக்கும் பஞ்சாயத்து யூனியன்களில் தொழில் விஸ்தரிப்பு அதிகாரிகள் இல்லாத காரணத்தினால், தொழில் விஸ்தரிப்பு செய்ய முடியாமல் கஷ்டப்படுகிறார்கள். ஆகையால் எல்லா யூனியனுக்கும் உடனடியாக தொழில் விஸ்தரிப்பு அதிகாரியை நியமிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக வரும்போது, மாதர் நல இலாகாவின் கீழ் பல நல்ல காரியங்களைச் செய்துகொண்டு வருகிறார்கள். ஒவ்வொரு யூனியனுக்கும் ஒரு முக்கிய சேவிகா என்று நியமிக்கிறார்கள். என்னுடைய தொகுதியில் ஒரு யூனியனில் கூட இந்த முக்கிய



சேவிகா இல்லை. அதனால் அங்கெல்லாம் மாதர் நல காரியங்கள் செய்யப்படாமல் இருக்கின்றன. இப்போது பாலர் பள்ளிகள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். என்னுடைய யோசனை ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஆரணி பஞ்சாயத்து யூனியனிலும், திருப்பத்தூர் பஞ்சாயத்து யூனியனிலும் அத்தகைய பள்ளிகளை நிறுவி இருக்கிறார்கள். அதைப் போய் பார்க்கக் கூடிய வாய்ப்பு எனக்கு இருந்தது. சிறு சிறு குழந்தைகள் அங்கே படிப்பதைப் பார்க்க திருப்தியாக இருக்கிறது. இத்தகைய பாலர் பள்ளிகளை எல்லா யூனியனிலும் ஏற்படுத்த வசதி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, அப்பாலர் பள்ளிகளில் பணி புரியும் ஆயாக்களுக்குக் கொடுக்கிற 20 ரூபாயை 40 ரூபாயாக மாற்றிக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

* திரு. எஸ். மணி: மதிப்புக்குரிய தலைவர் அவர்களே, இன்றைய தினம் 1962-63-ம் ஆண்டு துணை மதிப்பீட்டு மானியத்தின் மீது பேச எனக்கு வாய்ப்பு அளித்ததற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைய தினம் நம் நாட்டில் இருக்கக் கூடிய நெருக்கடி நிலைமையைப் பார்த்து, அதை ஆராய்ந்து இந்த மாமன்றத்திலும், பஞ்சாயத்து யூனியனிலும் நாம் பேசிக்கொண்டிருக்கிறோம். அந்த அடிப்படையில் நாம் ஆராய்ந்து பார்க்கும்போது என்னுடைய பகுதியில் இருக்கிற நிலைமையைப் பற்றி இந்த மன்றத்திலே எடுத்துச் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன். என்னுடைய பகுதி பாசன வசதி இல்லாத பகுதி. அங்கு ஏரிகள் தான் இருக்கின்றன. ஏரிகள் பழுது பார்க்கப்படாத நிலைமையில் அங்கு இருக்கும் மக்கள் அவதிப்படுகிறார்கள். என்னுடைய பகுதியில் கிணறு வெட்ட 200 அல்லது 250 அடி ஆழம் வெட்டினாலும் பயன்பட முடியாத அளவுக்கு இருக்கிறது. அதிலே வரக் கூடிய தண்ணீர் உப்புத் தண்ணீராக இருக்கிறது. ஆகையால் இப்படிப்பட்ட நிலைமையில், விவசாயத்தை முன்னேற்ற வேண்டும் என்று சொல்லக் கூடிய நிலைமையில் இதற்கு தக்க வசதிகள் செய்து கொடுக்கவேண்டும். என்னுடைய பகுதியில் சின்னாறு நீர்ப்பாசனம் என்று அமைத்திருக்கிறார்கள். அந்த நீர்ப்பாசனத்தில் 4 மாதங்கள் அந்த ஏரியில் தண்ணீர் வருகிறது. அந்தத் தண்ணீரை நம்பி அங்குள்ள மக்கள் பயிரிடுகிறார்கள். 4 மாதங்கள் ஆனவுடனே தண்ணீர் இல்லாமல் வறண்டு போய் அவர்கள் பயிரிட்ட பயிர்கள் காய்ந்து அதனால் விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள். என்னுடைய பகுதியில் பூலாம்பாடி, அரும்பாவூர், மேட்டூர், பெரியம்மாபாளையம், வெங்கலம், எசனை இன்னும் இது போன்ற இடங்களில் மின்சார வசதி அளிக்கப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு அரசாங்கம் கடன் கொடுத்து மின்சார பம்ப்செட்டுகளை அமைத்துக்கொள்ளுவதற்கு வசதி செய்யவேண்டுமென்று இந்த மாமன்றத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக என்னுடைய பகுதியில் 1962-ல் தீயினால் பாதிக்கப்பட்ட கிராமங்கள் 10. செங்கலம், சிறுநடல், புலியூர், எறைந்தங்குழி, திம்மூர், முருக்கன்குடி இதுபோன்ற கிராமங்கள்

[திரு. எஸ். மணி] [2nd February 1963

யினால் பாதிக்கப்பட்டிருக்கிறது. அந்த கிராமவாசிகளுக்கு அரசாங்கம் வீடு கட்டிக் கொடுத்து அவர்களிடமிருந்து தவணையில் பணத்தை வசூலித்துக்கொள்ள ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, என்னுடைய தொகுதியில் பச்சைமலை என்று ஒரு பகுதி இருக்கிறது. அங்கே நல்ல கனி வளங்கள் இருக்கின்றன. சந்தன மரங்கள், மூங்கில், மற்ற மரங்கள் எல்லாம் இருக்கின்றன. தேன் கிடைக்கிறது. அதிகாரிகள் நல்ல முறையில் இந்த காட்டைக் கண்காணிக்காத காரணத்தினால் அந்தக் காடு நல்ல நிலைமையில் இல்லாது இருக்கிறது. இன்றைக்கு நம்முடைய நாட்டில் விறகுப் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது. அந்த காட்டை நல்ல முறையில் பாதுகாத்தால் அந்தக் காட்டிலிருந்து நல்ல விறகு கிடைக்கும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பட்ஜெட் விவாதத்திலே பேசும்போது எங்கள் பகுதியில் ஜிப்சம் கிடைக்கிறது என்று சொல்லியிருக்கிறேன். இந்த நெருக்கடி நேரத்தில் இந்தத் திட்டத்தை கை விடாமல் எடுத்து நடத்தவேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, என்னுடைய பகுதியில் 4 பஞ்சாயத்து யூனியன்கள் இருக்கின்றன. ரொம்பவும் பிற்பட்ட பகுதியாக இருக்கிற காரணத்தினால் அரசாங்க மானியத்தை எதிர்பார்க்கும் நிலைமையில் இருக்கின்றன, அந்தப் பகுதிகள். ஆலத்தூர், வேப்பூர் ஆகிய இரண்டு பஞ்சாயத்தும் நல்ல முறையில் இயங்க அந்தப் பகுதிக்கு மின்சார வசதி இல்லை, ரோடு வசதி இல்லை. இப்படிப்பட்ட நிலைமை இருக்கிறது. பஞ்சாயத்துக்கள் நாங்கள் என்ன செய்வது என்று அவர்களைப் போய்க் கேட்டபோது சொல்லுகிறார்கள். அந்தப் பிரச்னையைத் தீர்க்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குடி தண்ணீர் பிரச்னைக்கு வரும்போது, பஞ்சாயத்து யூனியனில் ஓவர் ஹெட் டாங்க் கட்ட தொகை போதவில்லை. அரசாங்கத்திடமிருந்து தொகையை எதிர்பார்க்க வேண்டியிருக்கிறது. இந்த குடி தண்ணீர் பிரச்னையை மாவட்ட மன்றத்தில் எடுத்து வைத்து அறிக்கை ஒன்று அரசாங்கத்திற்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அதையும் பரிசீலனை செய்து அதைத் தீர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தண்ணீர் இல்லாத நிலையில் தாயில்லாப் பிள்ளைகளைப் போல் அங்குள்ள மக்கள் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகையால் அதை முக்கியமாக கவனிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

10-30 a.m. அடுத்து, தாழ்த்தப்பட்ட மக்களுடைய நிலைமையைப்பற்றி நான் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். பஞ்சாயத்து யூனியன் நிர்வாகம் வந்தபிற்பாடு, தாழ்த்தப்பட்ட மக்களிடம் 10 வருஷங்களாக தர்காஸ்து நிலமாக இருந்தாலும்கூட, அந்த நிலத்தையெல்லாம் பஞ்சாயத்து யூனியனுக்குச் சொந்தம் என்று சொல்லுகிறார்கள். அடமானம் இல்லாத காரணத்தினாலே பஞ்சாயத்து யூனியனுக்குச் சொந்தம் என்று சொல்லுகிறார்கள். அதிகாரிகள்



2nd February 1963] [திரு. எஸ். மணி]

அங்கு போய் 'இந்த நிலங்களெல்லாம் உங்களுக்கு இல்லை, பஞ்சாயத்து யூனியனோடு சேர்க்கப்பட்டது' என்று சொல்லுகிறார்கள். இந்தப் பிரச்சனையை ரொம்பவும் நல்ல முறையில் தீர்க்கவேண்டுமென்றால், தர்காஸ்து நிலங்கள் சம்பந்தப்பட்ட வரை உடனே அவர்களுக்கு அடமானம் செய்துதர உத்தரவு பிறப்பிக்கவேண்டும்.

அடுத்து, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு கிணறு வெட்ட லோன் கொடுக்கப்படுகிறது, மாடு வாங்குவதற்கும் லோன் கொடுக்கப்படுகிறது. நாம் தாழ்த்தப்பட்ட மக்களை முன்னேற்றுகிறோம் முன்னேற்றுகிறோம் என்று சொல்லுகிறோம். ஆனால், கிராமப் புறங்களில் இந்த லோன்கள் வாங்குவது சம்பந்தமாக இருக்கக்கூடிய நிலைமையை அணுகிப்பார்த்தால், கிராம மக்கள் படும் கஷ்டம் தெரியவரும். அவர்கள் லோன் வாங்குவதற்காக கர்ணம், கிராம முனிசிபுகளுக்கு காணிக்கை கொடுக்கவேண்டியிருக்கிறது. பணம் வாங்கியவுடன் அந்தக் கடனை திருப்பிக் கொடுப்பதற்குத்தான் அவர்களுக்கு சரியாக இருக்கிறது, கிணறு வெட்ட லோன் கேட்டால், கிராம முனிசிபு, கர்ணம் இவர்களுக்கு பணம் கொடுக்க வேண்டியிருக்கிறது. ஆர்டர் வருவதற்கு முன்னாலேயே அவர்களுக்கு பணம் கொடுக்கவேண்டியிருக்கிறது. இப்படிப்பட்ட நிலைமை இல்லாமல் நல்ல முறையில் அவர்களுக்கு சீக்கிரத்தில் கடன் தொகை கிடைப்பதற்கு வழிவகைகள் செய்யவேண்டும்.

**கனம் திரு. பூ. கக்கன்:** கிணறு வெட்டுவதற்கும், மாடு வாங்குவதற்கும் லோன் வாங்கும்பொழுது கிராம அதிகாரிகள் லஞ்சம் கேட்கிறார்கள் என்று கனம் அங்கத்தினர் சொன்னார். ஏதாவது அம் மாதிரி லஞ்சம் கேட்ட சம்பவம் கனம் அங்கத்தினர் கவனத்திற்கு வந்து, அதை அவர் அதிகாரிகளுக்கு, கலெக்டருக்கு ரிபோர்ட்டு செய்திருக்கிறாரா என்பதை அறிய விரும்புகிறேன். அம்மாதிரி சம்பவம் ஏதாவது நடந்திருந்தால் அதை என் கவனத்திற்குக் கொண்டுவந்தால் அதுபற்றி விசாரிப்பதற்குத் தயாராக இருக்கிறேன். வெறுமனே புகார் சொல்லுவதில் அர்த்தமில்லை.

**திரு. எஸ். மணி:** இப்பொழுது அம் மாதிரி சொல்லுவதற்கு ஒன்றும் இல்லை. முன்பு கனம் அமைச்சர் அவர்கள் இந்த மாமன்றத்திற்கு பெரம்பலூர் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு உறுப்பினராக இருந்தபொழுது அந்த நிலைமையிலே அவரும் இம்மாதிரி புகார்களைக் கூறியிருக்கக்கூடும். எனக்கு பேசுவதற்கு வாய்ப்பு அளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன்:** நான் அரியலூர் எம்.எல்.ஏ-வாக இருந்தபொழுது இம்மாதிரி புகார் வந்தால், அதில் கவனம் செலுத்தி தக்க நடவடிக்கை எடுப்பதற்கு ஏற்பாடு செய்திருக்கிறேன்.

**திரு. எஸ். மணி:** இப்பொழுதும் அந்த நிலைமை இருக்கிறது என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

**திரு. பி. ஜயராஜ்:** கனம் தலைவர் அவர்களே, கனம் நிதி அமைச்சர் அவர்கள் கொண்டுவந்துள்ள உபமான்ய கோரிக்கையை ஆதரித்து சில வார்த்தைகள் கூற முன்வந்திருக்கிறேன். யுத்த நெருக்கடியை உத்தேசித்து போலீஸ் படையை அதிகரிக்க வேண்டும், ஊர் காவல் படை, தேசீய மாணவர் படை இவைகளெல்லாம் ஏற்படுத்தவேண்டும், அதற்காக நாம் மான்யத்தை அதிகப்படுத்த வேண்டும் என்ற நிமித்தத்தில் இருக்கிறோம். தமிழ் நாட்டு போலீஸ் நிர்வாகம் நமது பாராட்டுதலுக்குரியது. தமிழ் நாட்டு போலீஸ் அதிகாரிகள் நல்ல முறையில் செயல்பட்டு வருகிறார்கள். மற்ற மாநிலங்களைவிட தமிழ் நாட்டில் இருக்கிற போலீஸ்காரர்கள் கடமை உணர்ச்சியுடன், தேச பக்தியுடன் நடந்துகொண்டு நல்ல முறையில் வேலை செய்துகொண்டிருக்கிறார்கள் என்பதை நாம் பாராட்டாமல் இருக்க முடியாது. ஊர்காவல் படை எப்படி அமையவேண்டும், அதனால் மக்களுக்கு என்ன பலன் ஏற்படும் என்பதைப்பற்றியெல்லாம் விரிவாகவும், விளக்கமாகவும் விளம்பரப் படுத்த வேண்டும். காரணம், பஞ்சாயத்து யூனியன்களை எடுத்துக்கொண்டால், கிட்டத்தட்ட 50 பஞ்சாயத்துக்களைக் கொண்ட யூனியனும் இருக்கிறது. சாதாரணமாக ஒரு பஞ்சாயத்திற்கு 20 நபர்கள் கொண்ட காவல் படை திரட்டினாலும், கிட்டத்தட்ட 1,000 நபர்கள் கொண்ட காவல்படை ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும் அமைக்கப்படும். அதற்கென தனி அதிகாரி போட்டு, ஒரு காவல் படை எப்படி வேலை செய்ய வேண்டும் என்பதற்கெல்லாம் சரியான பயிற்சி கொடுக்கவேண்டும். நாட்டு நிலைமைக்கு தகுந்தபடி, நெருக்கடி நிலைமைக்குத் தகுந்தபடி அவர்களுக்கு பயிற்சி அளித்தால், வருங்காலத்தில் அவர்கள் வீரர்களாகத் திகழ்வதற்கு நல்ல வாய்ப்பு ஏற்படும்.

அதே நேரத்தில், போலீஸுக்கு அதிக மான்யம் கோரும் போது, போலீஸ்காரர்களுக்கு ஓரளவுக்கு நல்ல சௌகரியமான நிலைமை ஏற்படுத்த வேண்டும். சாதாரணமாக, என்னுடைய தொகுதியில், பேரளம், பெரம்பூர் போலீஸ் ஸ்டேஷன்களில் பணிபுரியும் போலீஸ்காரர்களுக்கு தங்குவதற்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப்படவில்லை. நீண்ட நெடுங்காலமாக அங்கே போலீஸ் குவார்டர்ஸ் கிடையாது. போலீஸ்காரர்கள் தங்குவதற்கு வாடகை வீடுகள் கிடைப்பது ரொம்பவும் கஷ்டமாக இருக்கிறது. தாலுகா தலைநகரமாக இருக்கும் நன்னிலம், பேரளத்தில் சப் இன்ஸ்பெக்டர், அஸிஸ்டெண்டு ஸப் இன்ஸ்பெக்டர்களுக்கு தங்குவதற்கு போலீஸ் குவார்டர்ஸ் இல்லாமல் அவர்கள் மிகவும் அவதிப்படுகிறார்கள். மற்றொன்று, பொம்பூரிலிருந்து மங்கநல்லூருக்கு 4 மைல் மண் ரோடு தான் இருக்கிறது. போலீஸ் ஸ்டேஷனுக்கு போவதற்கு கிட்டத்தட்ட 2 மணி நேரம் ஆகிறது. அது குறித்து சென்ற ஆண்டில் மாவட்ட கவுன்சிலில் தீர்மானம் போட்டு சிபார்சு செய்யப்பட்டிருக்கிறது. ஆடுதுறை—மங்கநல்லூர் ரோடு பொறையாரில் போய் சேருகிறது. அந்த ரோடுக்கு 22 மைல் ரோடுக்கு கப்பி போடவேண்டுமென்று சிபார்சு செய்யப்பட்டு அதுவும் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. 22 மைலுக்கு ஒரே நேர் ரோடாக இருக்கிறது வீரசோழன் ஆற்றங்கரை ஓரமாக. அதற்குக் கப்பி போடவேண்டுமென்று பொதுமக்களும் விரும்புகிறார்கள். கப்பி போட்டால் பொது மக்கள் செல்லுவதற்கும் அந்த ரூட்டில் பஸ் விடுவதற்கும் நல்ல வசதியாக இருக்கும்.





அடுத்து, நாம் டிரைவர்களை அதிகரிக்க வேண்டுமென்று சொல்லுகிறோம். யுத்த நெருக்கடி சமயத்தில் அதிகம் பேர்களுக்கு டிரைவர்களாக பயிற்சி கொடுக்கவேண்டுமென்று சொல்லப்படுகிறது. மாஜி ராணுவத்தினர் அநேகம் பேர்கள் டிரைவராக இருந்தவர்கள், அன்று போர் முனையில் இருந்தவர்கள் இன்று ஏர் முனையில் இருந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களை ஒன்று திரட்டி அவர்கள் மறுபடியும் டிரைவர் ஆவதற்கு புதிய வாய்ப்புக்கள் கொடுக்கலாம். சென்ற யுத்த காலத்தில் டிரைவர்களாக இருந்த மாஜி ராணுவத்தினர்கள் கவனிக்கப்படாமல் இருக்கிறார்கள். தனியார் நடத்துகிற பஸ் ஸ்தாபனங்களிலும், அரசாங்கம் நடத்துகிற பஸ் ஸ்தாபனத்திலும் அவர்களுக்கு டிரைவர்களாக வேலை கொடுக்கலாம். அப்படிச் செய்தால் அவர்கள் நல்ல நிலையில் இருப்பார்கள். அவர்களெல்லாம் வேதனைக்குள்ளானவர்களாக இருக்கிறார்கள், சர்க்காரிடம் உள்ள லிஸ்டை வைத்துக் கொண்டு அவர்களை ஒன்று திரட்டி அவர்களுக்கு சீக்கிரமாக பயிற்சி கொடுத்து, யுத்தநிலைமையில் டிரைவர்களாக வேண்டுமானால் அனுப்பலாம்.

வயது வந்தவர்களுக்கு பென்ஷன் கொடுப்பதற்கு ஆண்டுக்கு ரூ. 120 லட்சம் செலவிடப்படலாம் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த பென்ஷன் தொகை கொடுக்கும் முறை சரியானதாக இல்லை. வோட்டர்கள் லிஸ்டு அடிப்படையில் வயதை நிர்ணயிக்கிறார்கள் சர்க்கார் அதிகாரிகள். வோட்டர்கள் லிஸ்டில் ஆணுக்குப் பதிலாக பெண் என்றும், பெண்ணுக்கு பதிலாக ஆண் என்றும் குறிக்கப்பட்டிருக்கிற நிலையெல்லாம் இருக்கிறது. இம்மாதிரி தவறான விஷயங்கள் அதில் இருக்கக்கூடும். அதன் காரணமாக 65 வயதுக்கு மேலானவர்களை 50 வயது என்றும், 50 வயதானவர்களை 65 வயது என்றும் வோட்டர்ஸ் லிஸ்டில் தவறாகக் குறிப்பிடப்பட்டிருக்கலாம். வோட்டர்ஸ் லிஸ்டை அடிப்படையாக வைத்துக்கொண்டு வயதை நிர்ணயித்தால் நியாயமாக பென்ஷன் கிடைக்க வேண்டியவர்களுக்கு கிடைக்காமல் போகக்கூடிய நிலைமை ஏற்படுகிறது. ஆதலால் வோட்டர்ஸ் லிஸ்டு அடிப்படையில் இல்லாமல், கிராமத்திலுள்ள கணக்குப்பிள்ளை, பட்டாமணியம் மூலமாக விஜாரித்து வயதை நிர்ணயிக்கலாம். அரசாங்கம் வயதானவர்களுக்கு ரூ. 20 பென்ஷன் கொடுக்கக்கூடிய காரணத்தினால் அவர்கள் கொஞ்சம் நல்ல நிலைமையில் இருக்கிறார்கள். வயதானவர்கள் அதற்காக அரசாங்கத்தை வாழ்த்துகிறார்கள். அதனால் அரசாங்கத்திற்கு நல்ல பெருமையும்

நல்ல எழுச்சியும் ஏற்பட்டிருக்கிறது. ஆனால், பென்ஷன் கொடுக்கும் முறையை சரியாகக் கவனித்து அமுல் செய்ய வேண்டும். 100 பெடிஷன்கள் போட்டால் 4, 5 பெடிஷனர்கள் தான் பென்ஷனுக்கு தகுதி என்று நிர்ணயிக்கப்படுகிறது. அநேக பெடிஷன்கள் தள்ளுபடி செய்யப்படுகின்றன. வயதை சரியான முறையில் நிர்ணயிக்கவேண்டும். பட்டா மணியம், கணக்குப் பிள்ளை விசாரிப்பது என்றால் ஜாதகம் இருக்கிறதா என்று கேட்கிறார்கள். சில நபர்களால் ஜாதகம் காண்பிக்க முடியாமல் இருக்கலாம். அவர்களிடம் ஜாதகம் இல்லாமல் இருக்கலாம். வேறு தகுந்த டாகுமென்டுகளைக் கொண்டு வயதை நிர்ணயிக்கவேண்டும். அரசாங்கம் தகுந்த முறையில் கண்காணிப்பு செய்து, தகுந்த உத்தியோகஸ்தர்களைக் கொண்டு சரியான முறையில் வயதை நிர்ணயித்து வயதானவர்கள் எல்லோருக்கும் நியாயமான முறையில் பென்ஷன் கிடைக்கும்படி ஏற்பாடு செய்யவேண்டும்.

அதே நேரத்தில் நமது அரசாங்கத்தில் பணியாற்றுகிறவர்களுக்கு 150 ரூபாய்க்கு மேற்பட்டு சம்பளம் வாங்குகிற அதிகாரிகளுக்கு அகவிலைப்படி உயர்த்திக்கொடுக்கப்பட்டிருக்கிறது. அது பாராட்டுதலுக்குரியது. அதுவும் மத்திய சர்க்கார் ஊழியர்கள் பஞ்சப்படி பெறும் அடிப்படையில் மாநில சர்க்கார் ஊழியர்களுக்கும், மற்றுமுள்ளவர்களுக்கும் பஞ்சப்படி உயர்த்திக் கொடுத்திருப்பதின் காரணமாக அவர்கள் மேலும் நல்ல ஊக்கத்தோடு வேலை செய்வதற்கு வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது.

சிறு சேமிப்புத் திட்டத்தை தீவிரப்படுத்துவதற்கு பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன்கள், மாவட்ட அபிவிருத்திக் கவுன்சில்கள் போன்ற மக்கள் ஸ்தாபனங்கள் முன்வரவேண்டும் என்று கூறப்பட்டிருக்கிறது. முன்பே யுத்த நெருக்கடி சமயத்தில் பஞ்சாயத்துக்கள் பொது நிதியிலிருந்து நிதி கொடுப்பதற்கு முன்வந்தன. கடைத் தேங்காயை எடுத்து வழிப் பிள்ளையாருக்கு உடைப்பது கூடாது என்ற முறையில் அரசாங்கம் உத்தரவு போட்டுவிட்டதால் கோடிக்கணக்கான ரூபாய் வருவது நிறுத்தப்பட்டுவிட்டது. 'சிறு சேமிப்புத் திட்டம் நல்ல முறையில் வெற்றிகரமாக அமையவேண்டும் என்பது என்போன்றவர்களின் கருத்து. பொது ஸ்தாபனங்கள், பஞ்சாயத்துக்கள், தேவஸ்தானங்கள் இவைகளிடம் நிறைய பணமும் இருக்கிறது. ஆகையால் சிறு சேமிப்புத் திட்டம் வெற்றிகரமாக நடக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இத்தகைய திட்டங்களுக்கென்று செலவு செய்வதற்காகவும் மான்யம் கோரப்பட்டிருக்கிறது. போலீஸ் துறையிலும் அதிகமாக செலவழிப்பதற்காக மான்யம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்த மான்யங்களை வரவேற்று போலீஸ் சேவை செய்கிறவர்களுக்கு தங்குவதற்கு வீட்டு வசதி செய்து கொடுப்பது மிகவும் முக்கியம் என்றும் மீண்டும் வலியுறுத்திச் சொல்லிக்கொண்டு, எனது உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.





**திரு. ஜே. மாதா கவுடர்**: கனம் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு நிதி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்திருக்கும் இந்த துணை மதிப்பீட்டின் மீது ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

வருடந்தோறும் நம்முடைய மாநிலத்திலே முதல் மதிப்பீட்டிலே நாம் எவ்வளவு தொகை ஒதுக்குகிறோமோ அதற்கு மேலே துணை மதிப்பீட்டிலும் செலவு செய்து வருகிறோம் என்பதைப் பார்க்கிறோம். செலவு அதிகரித்துக்கொண்டே வருகிறது. முதல் மதிப்பீட்டிலேயே ஏன் கணக்கு சரியாகப் போடவில்லை என்று சொல்லுவது சரியல்ல. எவ்வளவு செலவாகும் என்று சுமாராக எதிர்பார்த்து முதல் மதிப்பீட்டிலே காண்பிக்கிறோம். பிறகு திட்டத்தை நடைமுறையில் அமல் நடத்தும்போது செலவு அதிகமாகிறது. இப்படி முதல் மதிப்பீட்டில் போட்டதைவிட இன்னும் அதிகமாக பணம் செலவு செய்ய வேண்டியிருக்கிறது என்று சொன்னால் அது நமது அமைச்சரவையின் திறமையைக் குறிக்கிறது. திட்டங்கள் சரியான முறையில் நிறைவேற்றப்படுகின்றன என்பது தெரிகிறது.

அதே நேரத்தில் இந்தத் துணை மதிப்பீட்டிலே எங்கள் மாவட்டத்தைப் பற்றிய ஒரு குறிப்பு இருக்கும் என்று நான் நினைத்தேன். ஆனால் ஏமாந்து விட்டேன். என்னுடைய மாவட்டத்திலே இருக்கக்கூடிய மக்கள் உருளைக் கிழங்கைப் பிரதானமாக நினைத்துக்கொண்டு வாழ்க்கை நடத்திக்கொண்டு வருகிறார்கள். ஆனால் சென்ற மூன்று ஆண்டு காலமாக உருளைக் கிழங்குப் பயிருக்கு 'லேட் பிளைட்' வியாதி வந்து, உருளைக் கிழங்கு விவசாயம் சீர்கெட்டுவிட்டதைப் பற்றி நமது மாகாண சர்க்காரிடம் முறையிட்டு இருக்கிறோம். மத்திய சர்க்காரிடமும் முறையிட்டு இருக்கிறோம். உருளைக்கிழங்கு விவசாயம் சீர் கெடாமல் இருப்பதற்கு என்னென்ன பாதுகாப்புகள் தேவையோ அவற்றை செய்து கொடுங்கள் என்று கேட்டோம். இந்த உருளைக் கிழங்கு பயிருக்கு வந்திருக்கக்கூடிய நோயைத் தடுப்பதற்கு பூச்சிக் கொல்லி மருந்து (டைகேன்) கொடுங்கள் என்று கேட்டோம். மேலும் ஸ்காட்லாந்திலிருந்து நல்ல விதைகள் தருவித்துக் கொடுங்கள் என்று கேட்டோம். விதைகளும் வந்து சேரவில்லை, மருந்தும் வந்து சேரவில்லை. (டைகேன்) பூச்சிக் கொல்லி மருந்தும் அன்னிய நாட்டிலிருந்து வர வேண்டியிருப்பதால், நமது நாட்டிற்கு வந்து சேருவதில் கஷ்டம் இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. எங்கள் பிராந்தியத்திலுள்ள விவசாய மக்களின் நிலையை நன்கு உணரும்படிக் கேட்டுக் கொள்கிறேன். ஒரு சாதாரண விவசாயி முதலாண்டிலே ரூ. 2,000 வரையில் உருளைக் கிழங்கு சாகுபடிக்காகவும், மற்றும் உரத்திற்காகவும் கடன் வாங்கி, முதலீடு செய்தால், கடைசியாக உருளைக்கிழங்கு விளைந்த பிறகு பார்க்கும்போது இந்த ரூ. 2,000 முதலீட்டுக்கு சுமார் 20 அல்லது 30 ரூபாய்தான் தேறியிருக்கிறது.

[திரு. ஜே. மாதா கவுடர்] [2nd February 1963

இரண்டாவது ஆண்டிலே அதே 2,000 ரூபாய் முதலீடு போட்டவர்களுக்கு "லேட் பிளைட்" வந்த காரணத்தினால் ஒரு காசு கூட தேறவில்லை. சென்ற இரண்டு ஆண்டுகாலமாக அவர்கள் எல்லோரும் கஷ்டப்பட்டுக் கொண்டு இருக்கிறார்கள். சாப்பிடுவதற்குக்கூட கஷ்டப்படும் நிலைமையிலே அவர்கள் இருக்கிறார்கள். தொடர்ந்தாற்போல் மூன்றாவது ஆண்டிலும் உருளைக்கிழங்கு விவசாயம் நீலகிரி மாவட்டத்திலே கெட்டுவிட்டது என்று நம்முடைய மாநிலத்தில் உள்ளவர்களுக்கு மட்டுமல்ல, பாரதத்தில் இருக்கக் கூடியவர்களுக்கு நன்றாகத் தெரியும். இங்கு இருப்பவர்கள் எல்லாம், நீலகிரியிலே வாழக்கூடிய மக்கள் உருளைக் கிழங்கு விவசாயம் செய்து பெரிய செல்வந்தர்களாக இருக்கிறார்கள், அவர்கள் எல்லாம் பெரிய பணக்காரர்கள் என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய தற்போதைய நிலைமையைப் பார்த்தால் ஒரு வேளை சாப்பாட்டிற்குக்கூட விதி இல்லாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. மிகவும் பரிதாபகரமாக இருக்கிறது. சென்ற 6 ஆண்டு காலமாக நான் இந்த சபையிலே பேசும்போது நீலகிரி மாவட்டத்திலே மக்களின் பஞ்ச நிலைமையை பற்றி நான் பேசவில்லை. குறிப்பாக செய்ய வேண்டிய அபிவிருத்தி வேலைகளைப் பற்றித்தான் பேசிவந்தேன். இப்பொழுது இருக்கின்ற நிலைமையைப் பார்த்தால் நீலகிரி ஜில்லாவை ஒரு பஞ்ச பிரதேசம் என்று சொல்லிவிட்டால்கூட பரவாயில்லை என்று தோன்றுகிறது. உருளைக்கிழங்கு விவசாயம் செய்யும் மக்களுக்கு உடனடியாக ஏதாவது பரிகாரம் செய்யாமல் பேசாமல் இருந்து விட்டால் அது உண்மையிலேயே ஒரு பஞ்சப் பிரதேசம் ஆகிவிடும். இதற்கு வழிவகைகள் தேடி ஆக வேண்டும். எவ்வளவு அன்னியச் செலவாணி செலவு செய்தாலும் பரவாயில்லை. ஸ்காட்லாந்திலிருந்து நல்ல விதைகளை வரவழைத்து அவர்களுக்கு கொடுக்க வேண்டும். (டைகேன்) பூச்சிக்கொல்லி மருந்தும் அவர்களுக்கு தேவைப்படும் காலத்தில் கிடைக்கும்படி செய்ய வேண்டும்.

ஒரே ஒரு விஷயத்தை கனம் காட்டு இலாகா அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். முன்பு காட்டு இலாகாவினர், எத்தனை ஏக்கரிலே காடுகள் வைத்தால் மழை பெய்யும் என்று கணக்கிட்டு அத்தனை எக்கரையும் காட்டுப் பிரதேசமாக ஒதுக்கி வைத்தார்கள். மழைக்கு வேண்டிய காடுகள் வேண்டும் என்ற அடிப்படையில் அவ்வாறு செய்து வருகிறார்கள். ஆனால் இன்று நாம் அங்கே மின்சார உற்பத்திக்காக அணைக்கட்டுகள் கட்டியிருக்கிறோம். அணைக்கட்டுகளிலே தண்ணீர் தேங்கியிருக்கிறது. காடுகளிலிருந்து எவ்வாறு ஆவி ஏற்பட்டு மழை பெய்கிறதோ, அதைப் போன்று இந்த நீர்த் தேக்கத்திலுள்ள தண்ணீரிலிருந்து ஆவி ஏற்பட்டு அதுவும் மழையாகப் பெய்யும்போது எங்கள் பிராந்தியத்திலே மழை அதிகமாகப் பெய்கிற காரணத்தால், அங்கு இருக்கக்கூடிய இயற்கை நிலை மாறி இந்த லேட் பிளைட் வியாதி வந்திருக்கிறது.



2nd February 1963] [திரு. ஜே. மாதா கவுடர்]

இந்த நிலையில் சென்ற மாதத்திலே எங்கள் பிரதேசத்தில் இருந்த குளிரைப் பார்த்தால், அது ரொம்பவும் கடுமையாக இருந்தது. சமீபத்தில் இங்கிலாந்தில் பனி பெய்த மாதிரி நீலகிரியிலும் வந்துவிடுமோ என்று அங்குள்ள மக்கள் அஞ்சுகிறார்கள். இவ்வாறு குளிர் அதிகமாக இருப்பதற்குக் காரணம் ஒரு புறம் காட்டுப் பிரதேசம் அதிகமாக வளர்ந்து கொண்டே போகிறது, மற்றொரு புறம் நீர்த் தேக்கங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. அங்கு இருக்கும் விவசாயிகள் (டைகேன்) பூச்சிக்கொல்லி மருந்தை ஸ்பிரே செய்த இரண்டு மணி நேரத்திற்குள்ளாகவே மழை பெய்த காரணத்தால், அதற்கு எபெக்ட் இல்லாமல் போய் உருளைக்கிழங்கு பயிர் முழுவதும் பாழாகிவிட்டது. சென்ற மூன்று ஆண்டுகளாக அவர்கள்படும் கஷ்டத்தை நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். கனம் விவசாய அமைச்சர் அவர்களையும், ரெவின்யூ அமைச்சர் அவர்களையும் காட்டு இலாகாவின் பொறுப்பை வகிக்கும் கூட்டுறவு அமைச்சர் அவர்களையும் நான் கேட்டுக் கொள்வது என்னவென்றால், தயவு செய்து உருளைக்கிழங்கு பயிராகும் பிரதேசங்களை பஞ்சப் பிரதேசமாக பிரகடனம் செய்யவில்லை என்றாலும்கூட, அந்த விவசாயிகள் மீது விதிக்கப்பட்டிருக்கக்கூடிய நில வரியை உடனடியாக ரைட் ஆப் செய்ய வேண்டும். இப்பொழுது மற்ற விவசாயிகளுக்கு கொடுக்கக்கூடிய கடன்களைப் பொறுத்த வரையில், ஒவ்வொரு வருஷமும் அவர்கள் அமைச்சர்களிடம் முறையிட்டு, இந்தக் கடன் வசூலை தள்ளிப் போட்டுக் கொண்டே போகிறார்கள். அந்த முறையிலே இந்த தக்காவி கடன்களையெல்லாம் ரைட் ஆப் செய்ய வேண்டும். கூட்டுறவு முறையைப் பொறுத்தவரையில், ரிஸர்வ் பாங்கு சட்டம் இடம் கொடுக்கவில்லை என்றாலும்கூட, குறுகிய காலக் கடன்களை நீண்ட காலக் கடன்களாக மாற்றி, விவசாயிகளின் நிலையில் அபிவிருத்தி ஏற்பட்ட பிறகு அவற்றை வசூல் செய்வதற்கு வழிவகை செய்யவேண்டும். அவர்களுக்கு திருப்பிக் கொடுக்கும் சக்தி ஏற்படுகிற வரையில் தயவு செய்து கடன்களை வசூல் செய்வதை நிறுத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்படி நிறுத்தி வைக்கவில்லை யென்றால், அவர்களது பூமியை ஜப்தி செய்ய நேரிடும். விளையாத பூமியை வைத்திருப்பதைவிட அரசாங்கத்திற்கு கொடுப்பதே நலம் என்று கொடுத்துவிடுவார்கள். ஆகவே இவற்றை அளிக்கவில்லை என்றாலும்கூட, இந்த மாதம் கொண்டுவரப் போகிற பட்ஜட் உரையிலாவது அவர்களுக்கு ஒரு பரிகாரம் கண்டுபிடித்து, அவர்களைக் காப்பாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

* திரு. மா. இராசாங்கம்: கனம் சட்ட மன்றத் தலைவர் அவர்களே, இந்தத் துணை மானியக் கோரிக்கையின் மீது என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைச் சொல்ல விழைகின்றேன். அனுபவம் வாய்ந்த அமைச்சர் அவர்கள் சொல்லாமல் சொல்லிப் பழக்கப்பட்ட அமைச்சர் அவர்கள் எங்களுக்குச் செய்யாமலேயே சில காரியங்கள் செய்யவேண்டு என்று நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். நகரப் புறங்களுக்கு அதிகப்படியான காய்கறிகள் உற்பத்தி என்ற முறையில், கோவை, சென்னை நகரங்

போன்ற இடங்களில் அதை அறிமுகப் படுத்தியிருக்கிறார்கள். அதைக் கிராமப்புறங்களுக்கும் கொண்டுவரவேண்டும். விவசாயத்தையே பெருந் தொழிலாகக் கொண்டிருக்கும் எங்கள் பகுதிக்கு அதை அறிமுகப்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

பாக்கேஜ் ப்ரொக்ராம் என்று சொல்லப்படுகிற விவசாய உற்பத்தித் திட்டத்தில் உரம், மற்ற பொருக்கு விதைகள் திட்டத்தையும் எங்கள் பக்கத்திற்கு விஸ்தரித்தால் மிக நன்மை பயப்பதாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நெருக்கடியான நேரத்தில், 'விலைவாசி ஏறியிருக்கிறது, விலைவாசி ஏறியிருக்கிறது' என்று சொல்லிக்கொண்டிருந்த நாங்கள், விலைவாசி ஒரு இடத்தில் இறங்கியிருக்கிறது என்று நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். நான் எதில் விலைவாசி இறங்கியிருக்கிறது என்று சொல்கிறேன் என்றால், ஏலக்காய் விலை இறங்கியிருக்கிறது. அமைச்சர் அவர்கள் எங்கள் பகுதிக்கு வந்திருந்த நேரத்தில், மக்கள் கொடுத்த மகசர்கள் அத்தனையிலும் மிக முக்கியமாகச் சொல்லப்பட்டது ஏலக்காய் விலை இறங்கியிருக்கிறது என்பதாகும். அன்னிய நாட்டுச் செலவாணியைச் சேகரித்துத் தருகிற ஏலக்காய் நம் நாட்டு மக்களுக்கு உபயோகக் குறைவாய் இருந்தாலும், வெளிநாட்டுக்குப் போவது கூடுதலாக இருக்கிறபடியால், உற்பத்திச் செலவு அதிகமாக இருக்கிறது. அதன் விலை இறங்கியிருக்கிறபடியால், ஏலக்காய் விவசாயிகள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுடைய நிலையைக் கவனித்து, அவர்களுக்கு வேண்டிய வழிவகைகளைச் செய்யுமாறு சர்க்காரைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

குளத்து விவசாயம் என்ற வகையில், எங்கள் பகுதியில், ஏ-1, ஏ-2 என்று குளங்கள் பிரிக்கப்பட்டிருக்கின்றன. குளம் இருந்தாலும், இல்லாவிட்டாலும் கீழே இருக்கும் நிலம் விளையும் என்ற நிலை இருக்கிறது. கீழே இருக்கும் நிலத்தை சாதாரண மக்கள் விவசாயம் செய்கிறார்கள். அப்பேர்ப்பட்ட குளத்தைத் தியாகிகளுக்குக் கொடுத்திருக்கிறார்கள். மேல் புறத்தில் தியாகிகளும், கீழ்ப் புறத்தில் சாதாரண விவசாயிகளும் இருக்கிறார்கள். மேல் புறத்தில் தியாகிகளுக்கு நிலம் ஜாரி செய்யப்பட்டும், கீழ்ப் புறத்தில் உள்ள விவசாயிகளுக்கு வரி மேல் வரி போட்டு, அவர்களுக்கு நிலம் கிடைக்கக்கூடாத அளவுக்கு, அவர்களைப் பயமுறுத்துகிற தன்மையில் காரியங்கள் நடந்துகொண்டிருக்கின்றன. பத்து, பன்னிரண்டு வருஷங்களாக விவசாயம் செய்து வந்தார்கள். பத்து வருஷங்களாக வரியைக் குறைத்துக் கொண்டு வந்தார்கள். பதினாறு பங்கு இருந்த வரியை எட்டாக்கினார்கள். பின்பு நான்காக்கினார்கள். ஆனால், இப்பொழுது அது மறுபடியும் கூட்டப்பட்டிருக்கிறது. இந்த நிலைமையை உத்தேசித்து ஆவன செய்ய வேண்டும். செய்யக்கூடாத வேலையைச் செய்துகொண்டிருப்பவர்கள் இப்பொழுது விவசாயம் செய்ய வந்திருப்பவர்களுக்கு ஆதரவளிக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.



இலட்சக்கணக்கான ரூபாய் செலவு செய்து ஒரு குறுக்கு ரோடு போடப்பட்டிருந்தது. அது பிறகு நடைமுறையில் உதவாத வகையில் இருக்கிறது. அது சில சொந்த நிலங்களைப் பாதிக்கும் போது, அதற்காக இடையிலே அந்த ரோடு வேலையைக் கைவிட்டு விட்டார்கள். இப்படிப்பட்ட இடங்களில் அமைச்சர்கள் வரும் போது நேரடியாகச் சொல்ல முடிவதில்லை. சொல்வதற்கு வாய்ப்பு கிடைப்பது இல்லை. ஏனென்றால் பழையபடியும் அந்தத் தேர்தலில் சம்பந்தப்பட்டவர்கள் ஒட்டிக்கொள்ளுகிறார்கள். நாங்கள் சொல்வதற்கு இடமே இல்லாமல் போய் விடுகிறது. அமைச்சர் ஒரு காரிலும், நாங்கள் அடுத்த காரிலும்தான் போகவேண்டியிருப்பதால், போய்ச் சேருகிற இடத்தில்தான் எங்களுடைய கஷ்டநஷ்டங்களைச் சொல்ல வேண்டியிருப்பதால், அந்தந்த இடத்தில் சுட்டிக்காட்டும் வாய்ப்புகளை நாங்கள் இழந்துவிடுகிறோம். அமைச்சர்கள் அடுத்த முறை வரும்போது, அவைகளை நாங்கள் சுட்டிக்காட்டுவதற்கான சூழ்நிலையை ஏற்படுத்தித் தருவார்கள் என்று நான் நம்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** அமைச்சர்கள் போகிற இடங்களில் முன்னதாகத் தெரிவித்தால், அமைச்சர் காரிலேயே கனம் அங்கத்தினர் வருவதில் ஆட்சேபணை இல்லை. அப்படி எதிர்க்கட்சி கனம் அங்கத்தினர்களும் அமைச்சர்கள் காரில் வந்துகொண்டு தான் இருக்கிறார்கள்.

**திரு. மா. இராசாங்கம்:** அடுத்த தடவையாவது சும்மாதிரி சூழ்நிலை அமைந்தால் நன்றியுள்ளவனாக இருப்பேன்.

கும்ரி காடுகள் சம்பந்தப்பட்டவரையில், காட்டிலாகா அமைச்சர்கள் வந்து நேரடியாகச் சுற்றிப் பார்த்தார்கள். பார்த்தபோதே, கும்ரி காடு வசாயிகளுக்கு நிறைய நிலங்கள் கொடுப்பதாகவும், அடுத்தபடியாக விவசாயத்தை அதில் பெருக்குவதற்காக வழிவகை செய்து கொடுப்பதாகவும் வாக்குறுதி கொடுத்தார்கள். அப்படிப்பட்ட நிலங்களில் கூப் ஏலம் விட்டதற்குப் பிறகு, மரம் வெட்டியானபிறகு காலியிடத்தில் கும்ரி காடுகள் மூலமாக, மரங்களை இடையில் வைத்து வளர்த்து, மூன்று அல்லது ஐந்து வருஷங்களுக்கு லீஸ் கொடுக்கும் பழக்கத்தையும், இன்னும் 300, 400 ஏக்கரா நிலங்களை லீஸுக்கு விட்டிருக்கிறார்கள். ஆயிரக்கணக்கான ஏக்கர்கள் இரண்டு மலைச் சாரல்களின் இடையில் காலியாக இருக்கிறது. அதைக் கொடுத்து உதவினால், இந்த நெருக்கடியான நேரத்தில் உணவு உற்பத்தியைப் பெருக்கவேண்டுமென்கிற நேரத்தில், இது பெரும் உதவியாக இருக்கும் என்று நான் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

கிராமத் தொண்டர் படை அமைப்பதில் ஒரு நெருக்கடியான நிலைமை என்னவென்றால், கிராமத் தொண்டர் படை சாதாரணமாக பாட்ஜ் குத்திக்கொண்டு பயிற்சி செய்யச் சொல்கிறார்கள். வெறும் பாட்ஜ் மட்டும் குத்திக்கொண்டு வந்தால், ராணுவ

உணர்ச்சி குறைந்து போகும். அவர்களுக்கு வேண்டிய உடை வசதி செய்து கொடுத்தால், ஜூனியர், ஸீனியர் ஆபீசர்கள் வரும் போது அவர்களுக்குச் செலுத்த வேண்டிய மரியாதையை 'ஸல்யூட்' மூலமாகச் செலுத்த முடியும். மிலிடரி சட்டப்படி தொப்பி வைக்காமலும், பெல்ட் இல்லாமலும் மரியாதை செலுத்துவது சரியாக இருக்காது என்ற காரணத்தால், பெரிய அதிகாரிகளுக்கு தொண்டர் படையைச் சார்ந்தவர்கள் காட்டவேண்டிய மரியாதைக்காகவோ, கௌரவத்திற்காகவோ இல்லாமற்போனாலும் குறைந்த பட்சம் யூனிபார்ம் உடை என்ற வகையிலாவது நல்ல விதமாகக் கொடுத்துதவினால் பின்னால் ஊக்குவிக்கும் தன்மை வரும் என்று நான் சொல்லிக்கொள்ளுகின்றேன்.

கிராமப் புறங்களில் ப்ளாக்குகளுக்காகப் பணம் ஏராளமாய் சாங்ஷன் ஆயிருந்தும், வேலைகள் தடைபட்டிருக்கின்றன. அப்படித் தடைபட்டிருக்கும் வேலைகளைக் காலா காலங்களில் செய்வதற்கு வழிவகை செய்வதற்கு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகின்றேன். வணக்கம்.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்** : கனம் சட்ட மன்றத் தலைவர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கும் இந்த உப மான்யக்கோரிக்கையை ஆதரித்து நான் ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகின்றேன். உப மான்யக் கோரிக்கையில், குறிப்பாக போலீஸ் படைக்கு 54 லட்சம் 43 ஆயிரம் ரூபாய் ஒதுக்கியதை நான் மிகவும் பாராட்டுகின்றேன். ஏனென்றால் நாட்டிலிருக்கும் நெருக்கடி நிலைமையின் காரணமாக, போலீஸ் படைக்காக இன்னும் அதிகமான தொகை ஒதுக்கினால் கூட பொது மக்கள் அதற்கு நல்ல ஆதரவு கொடுப்பார்கள், ஆகையால், இதை நான் வரவேற்கிறேன்.

அதோடு கூட, குறிப்பாக போலீஸ் இலாகாவில் உள்ள ஸி.ஐ.டி. பிரிவை இன்னும் விஸ்தரித்து, அதிகமான பேர்களை நியமிக்க வேண்டுமென்று நான் கூறிக்கொள்ளுகின்றேன். ஒரு நாள் என்னுடைய தொகுதியில் நடந்த சம்பவமொன்றை உதாரணத்திற்குச் சொல்லிவிட்டு மேற்கொண்டு இதிலே பேசலாம் என்று நினைக்கின்றேன். ஒரு கருவேப்பிலைக்கார அம்மாள் நான் சென்று கொண்டிருந்த ஒரு பஸ்ஸில் பிரயாணம் செய்துகொண்டிருந்தாள். அந்த அம்மாளைப் பார்த்து, "என்னம்மா! சீனாக்காரன் வந்து கொண்டிருப்பதைத் தடுக்க நாமெல்லாம் பணம் கொடுக்க வேண்டாமா?" என்று நான் கேட்டதற்கு, "ஆமாம், சீனாக்காரன் வந்திருக்கிறான், முந்தி தருமன் ஆண்டான்; நல்லா இருந்தது; ரூபாய்க்கு எட்டு படி கிடைத்தது; இப்பொழுது கலியன் வந்திருக்கிறான்; அதிக விலை வந்தது; ஆகையால், தருமனைப்போல சீனாக்காரன் வந்திருக்கிறான்" என்று சொன்னாள். அவர்களுக்குத் தெரியாமலேயே, அந்தப் பாமர மக்கள் மத்தியில் யாரோ ஒரு சில



விஷமக்காரர்கள், இந்த நாட்டைக் காட்டிக் கொடுப்பதற்காக, கூட்டங்கள் மத்தியிலும், பெண்கள் மத்தியிலும் பிரசாரம் செய்து கொண்டிருக்கிறார்கள். இதை உடனடியாக நானே கலெக்டரிடத்தில் சொல்லி, மீண்டும் அம்மாதிரிப் பேச்சு வராமல் பார்க்க தக்க நடவடிக்கை எடுத்திருக்கிறோம். இம்மாதிரி விஷயங்களைக் கவனிப்பதற்காக ஸி.ஐ.டி. போலீஸை இன்னும் அதிகமாக நியமித்தால் நன்றாக இருக்கும் என்று வலியுறுத்தித் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

இப்பொழுது நாம் கிராமத் தொண்டர் படை அமைத்திருக்கிறோம். அவர்கள் சரியாக இயங்கவேண்டுமென்றால், ஜில்லா வாரியாக அந்தந்த ஜில்லாவில் இருக்கும் பஞ்சாயத்துத் தலைவர்கள் அத்தனை பேர்களையும் அழைத்து, கூட்டம் கூட்டி, இதை நல்ல முறையில் நடத்த வேண்டுமென்று ஒரு நல்ல கருத்தினை அவர்களுக்கு எடுத்துச் சொல்லி, அவர்களுடைய ஆலோசனைகளையும் கேட்டறிந்து, இதை இன்னும் தீவிரப்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன். தேசியப் பாதுகாப்புக்காக, டில்லியில் கூடி, பாராளுமன்ற அங்கத்தினர் அத்தனை பேருக்கும் துப்பாக்கிப் பயிற்சி கொடுப்பதாகவும், அதிலே பெண்கள் ரொம்ப நல்ல முறையில் துப்பாக்கி சுடுவதில் ஆர்வம் காட்டியிருப்பதாகவும் கனம் அமைச்சர் திரு. அழகேசன் அவர்கள் கூறியிருக்கிறார்கள் என்று பத்திரிகையில் செய்தி வந்திருந்தது. அதே போன்று நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த வரையில், இந்த சட்டசபை அங்கத்தினர்கள் அத்தனை பேர்களுக்கும் துப்பாக்கி சுடும் பயிற்சி கொடுப்பதில் நாம் சற்று கவனம் செலுத்துவோமானால் பின்னால், சமயம் வரும்போது நம்மை நாமே பாதுகாத்துக்கொள்ள நல்ல முறையாக இருக்கும் என்று நான் தெரிவித்துக்கொள்ளுகின்றேன். (ஒரு கனம் அங்கத்தினர் குறுக்கீடு) 'நம்மை' என்று நான் சொல்லும்போது நம்முடைய தேசத்தைத்தான் குறிப்பிடுகிறேன். தேசத்தைப் பாதுகாப்பதற்காக துப்பாக்கிப்பயிற்சி பெற்றிருந்தால், எதிரிகளை விரட்டியடிப்பதற்கு உதவியாக இருக்கும் என்பதற்காகத்தான் இதை நான் குறிப்பிடுகின்றேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்** : அப்படிப் பயிற்சி கொடுப்பதாயிருந்தாலும், கனம் அங்கத்தினர்கள் ஒருவருக்கொருவர் சுட்டுக் கொள்ளாமல் இருக்கவேண்டுமே! (சிரிப்பு)

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்** : ஒருவரை ஒருவர் சுட்டுக் கொள்கிற பண்பு நம்மிடம் இல்லை. இருந்தாலும், வெளி எதிரிகள் வரும்போது, நம்மை நாம் பாதுகாத்துக்கொள்ள வேண்டியவர்களாக இருக்கவேண்டும் என்பதற்காகத்தான் இதை நான் எடுத்துச் சொன்னேன். இப்போது சைனிக் பள்ளி ஒன்று நடந்து கொண்டிருப்பதாகப் பார்த்தேன். இன்னும் சில பள்ளிகளை இது மாதிரியாக அமைக்கவேண்டும் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன். எங்கள் ஜில்லாவில் தான் ஏற்படுத்தவேண்டும் 11-00 a.m.

[திருமதி. ஏ. எஸ். பொன்னம்மாள்] [2nd February 1963

என்பதில்லை. அதுமாத்திரம் அல்ல. நெருக்கடி நிலைமையின் காரணமாக நம்முடைய ஐந்தாண்டுத் திட்டங்களின்கீழ் போடப்பட்ட பல காரியங்களை நிறைவேற்றாமல் விடக்கூடாது என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன். நல்ல திட்டங்களை, மக்களுக்கு அவசியமான திட்டங்களை உடனடியாக நிறைவேற்ற வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். மஞ்சள் ஆறு திட்டத்திற்கு இதில் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. திருமங்கலம் கால்வாய்க்கு பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. மேலும் குள்ளக் கோம்பை திட்டம் நிறைவேற்றப்படவேண்டும் என்று குறிப்பிட்டேன். அதற்கும் பணம் சாங்ஷன் ஆகியிருப்பதாக அறிந்து நான் மதுரை மக்களின் சார்பாக, நிலக்கோட்டை தாலூக்கா மக்களின் சார்பாக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்போது சிறிய நீர்ப்பாசனத் திட்டத்திற்கு பணம் ஒதுக்கியிருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். நிலக்கோட்டை தாலூகா, சோழவந்தான் தொகுதி வடகரைக்கு போய்க்கொண்டிருந்த போடிநாயகன்பட்டி டைரெக்ட் சானெல் இல்லாத காரணத்தினால் நிலத்தில் தண்ணீர் பாய்ந்து பயிர் நாசமடைகிறது. ஒரு ஏக்கர், இரண்டு ஏக்கர் பூமி வைத்துள்ளவர்களின் பயிர் எல்லாம் தண்ணீர் தேங்கி வீணாகிவிடுகிறது. ஆகவே உடனடியாக இந்த டைரெக்ட் சானலுக்கு நில ஆர்ஜிதம் செய்து பயிர்கள் அப்படி நாசமடையாமல் காப்பாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதற்கு அடுத்த பட்ஜெட்டில் பணம் ஒதுக்க வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

இப்போது பெண்களுக்கு என்று பாலிடெக்னிக் ஏற்படுத்தியிருக்கிறோம். அதற்காகப் பணம் செலவழிக்கிறோம். அது போலவே இன்னொரு விஷயம் பத்து வயது முதல் பன்னிரண்டு வயது வரை உள்ள அநாதைப் பெண் குழந்தைகள் பலவிடங்களில் சுற்றிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குத் தக்க பாதுகாப்பு அளிக்கவேண்டியது, அவர்களுக்கு நல்லதொரு வாழ்க்கை பிற்காலத்தில் அமைய வழிவகுத்துத் தரவேண்டியது அரசாங்கத்தின் கடமை. அதற்காக தனியாக ஒரு ஸ்தாபனம் ஏற்படுத்தவேண்டும்.

மேலும் காய்கறி உற்பத்தியில் கவனம் செலுத்துவதற்காக அமைக்கப்பட்டிருக்கும் திட்டங்கள் சில ஜில்லாக்களில், சில நகரங்களில் மட்டும் தான் ஏற்படுத்தப்படுகின்றன. எல்லா ஜில்லாத் தலைநகரங்களுக்கும் இதை அமுலுக்குக் கொண்டு வந்தால் நன்றாக இருக்கும். ராணுவப் படை அமைப்பதிலும் ஐந்து நகரங்களையே எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். இத் திட்டத்தை எல்லா இடங்களுக்கும் விஸ்தரிக்கவேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

* **திரு. எஸ். முத்துலிங்கம்:** கனம் சபாநாயகர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கும் துணைமான்யக் கோரிக்கையின் மீது என் தொகுதியிலுள்ள சிலபல குறைபாடுகளை நான் எடுத்துச் சொல்ல ஆசைப்படுகிறேன்.



2nd February 1963] [திரு. எஸ். முத்துலிங்கம்]

குறிப்பாக எங்கள் தொகுதியில் உள்ள ஹரிஜன மக்களுக்காக சர்க்காரால் வழங்கப்படும் மாட்டு வாரகம், கிணற்று வாரகம், பம்பு செட்டு லோன்கள் முதலியவைகள் சரிவர வழங்கப்படுவது கிடையாது. அப்படியே வழங்கினாலும் மிகவும் காலதாமதமாக ஒருசிலருக்குத்தான் வழங்கப்படுகிறது.

அடுத்து ஹரிஜன மக்கள் சர்க்கார் புறம்போக்கு நிலங்களில் சாகுபடி செய்து ஜீவித்து வருவதை அந்த அந்த கிராமங்களிலுள்ள பஞ்சாயத்து பிரிசிடெண்டுகள் தங்களுக்குக் கொடுத்திருக்கும் அதிகாரத்தைப் பிரயோகப்படுத்தி அந்தப் புறம்போக்கு நிலங்களிலிருந்து ஏழை ஹரிஜன மக்களை அப்புறப்படுத்தும் கொடுமைகளைச் செய்கிறார்கள். அவர்களை எப்படியாவது அப்புறப்படுத்திவிடவேண்டுமென்ற கெட்ட எண்ணத்தில் அவர்கள் அநுபவித்து வரும் நிலத்திற்காக 100 அல்லது 150 ரூபாய் வரையில் அபராதத் தீர்வை போட்டு வசூலிக்கவும் வழிவகை செய்கிறார்கள். உதாரணமாக வந்தவாசி தொகுதியில் கடைசி கிராமமாகிய மாவலவாடி கிராமத்திலுள்ள ஒரு ஹரிஜனனும், இன்னொரு நாவித விதவையும் சுமார் 30 வருஷ காலமாக சர்க்கார் புறம்போக்கு நிலத்தில் சாகுபடி செய்து ஜீவித்து வருகிறார்கள். அவர்கள் இருவருக்கும் உண்மையிலேயே வேறு நிலம் கிடையாது. அவர்களை மேற்படி கிராமத்திலுள்ள பஞ்சாயத்து பிரசிடெண்ட் அவர்கள் வேண்டுமென்று மேற்படி நிலத்திலிருந்து அப்புறப்படுத்துவதற்காக கொடுத்துக் கொண்டிருக்கும் கஷ்டநஷ்டங்கள் சொல்லவே முடியாது. வந்தவாசி தாலூகாவில் கடைசி கிராமமாகிய சுரோத்திரிய காட்டேரி என்று சொல்லப்படும் ஹரிஜன புதிய காலனிக்கு ரோடு போடுவதற்காக சர்க்காரில் சாங்ஷன் செய்யப்பட்டிருக்கிறது. காலனிக்கு நேராக ரோடு போடவும், நடுவில் இரண்டு, மூன்று பேர்களின் நிலங்கள் ஓரமாகப் பாதிக்கப்பட்டாலும் முன்னாலும் பின்னாலும் சர்க்கார் புறம்போக்கு புஞ்சை நிலங்கள் இருக்கின்றன. சர்க்காருக்கு ரோடு போடப் பணம் அதிகக் குறைவாகச் செலவாகும். ஏரிக் கரையை அகலப்படுத்தினாலும் சரி, ஏரி வடகரையிலேயும்கூட காலனிக்கு ரோடு போட வசதியாக இருக்கிறது. அதை விட்டுவிட்டு இந்த நெருக்கடியான நேரத்தில் உணவு உற்பத்தி அதிகமாகப் பெருக்கவேண்டுமென்று சர்க்கார் சொல்லுகிற நேரத்தில் அதே கிராமத்தில் உயர்சாதி இந்துக்களாகிய இருபது விவசாயிகளின் நிலங்களின் மத்தியில் ரோடு போட டிஸ்ட்ரிக்ட் வெல்பேர் ஆபீசரவர்கள், வெல்பார் தாசில்தார், வெல்பேர் ரெவின்யூ இன்ஸ்பெக்டர் ஆகியவர்கள் அந்த நிலங்களின் மத்தியில் காணிக்கற்களை நட்டு வைத்திருக்கிறார்கள். எனக்கு மேற்படி சம்பவத்தைக் குறித்து 20-1-63-இல் மேற்படி பாதிக்கப்பட்ட விவசாய மக்களிடமிருந்து ஒரு மகஜர் வந்து நான் நேரில் போய்ப் பார்த்து அவர்கள் கோரியது உண்மை என உணர்ந்து 21-1-63-ஆம் தேதி வேலூருக்குச் சென்று ஜில்லாக் கலெக்டரவர்களிடமும், ஜில்லா வெல்பேர் ஆபிசரிடமும் சொல்லியிருந்தும் அவர்கள் இதுவரையிலும் ஒன்றும் செய்ததாகத் தெரியவில்லை. இது விஷயமாக கனம் மந்திரியவர்களுக்கும் மகஜர்

[திரு. எல். முத்துலிங்கம்] [2nd February 1963

அனுப்பியிருப்பதாக அந்த விவசாயிகள் தெரிவித்தார்கள். நஞ்சை நிலங்களின் மீது ரோடு போடக் கூடாதென்று சர்க்கார் உத்தரவு இருந்தும் கூட விவசாயிகளின் பயிர்கள் நாசமாகும்படி இங்கே நடவடிக்கை எடுத்துக்கொண்டிருப்பதை சர்க்கார் கூர்ந்து கவனித்து உடனடியாக அந்த ரோடு அமைப்பை ரத்து செய்து நேர்ப்புறமாக ரோடு அமைக்க ஆவன செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக என்னுடைய தொகுதியாகிய வந்தவாசி, காலவேடு, தெள்ளார், தேசூர் போன்ற இன்னும் இதர கிராமங்களிலும் 100-க்கு 25 சத விகிதம் கூட மின் விளக்குகள் போடப்படவில்லை. காரணம் வந்தவாசி, தெள்ளார், தேசூர் கிராமங்களிலுள்ள சூப்ரவைசர், கன்ஸ்ட்ரக்ஷன் சூப்ரவைசர் ஆகிய அதிகாரிகள் சரிவர வேலை பார்ப்பது கிடையாது. விவசாயிகளின் அக்ரிமென்ட் செய்ய சாங்ஷனாகியிருந்தும் கூட இரண்டு மூன்று வருடங்களாக பெண்டிங்கிலிருந்து வருகிறது. விவசாயிகள் சர்வீஸ் பணம் கட்டி ஒன்றிரண்டு மாதங்களானாலும் சர்வீஸ் கொடுக்க சூப்ரவைசர் டிலே செய்கிறார். விவசாயிகள் போய்க் கேட்டால் சரியாகப் பதில் சொல்வது கிடையாது. இம் மாதிரியாக அங்கங்கே இருக்கும் நிர்வாகக் குறைபாடுகளை அகற்ற வேண்டுமென்பதாகக் கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**திருமதி டி. என். அனந்தநாயகி :** கனம் சபாநாயகர் அவர்களே, 1962-63-ஆம் ஆண்டுக்கான துணை மதிப்பீட்டின் பேரில் ஒருசில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். இந்தத் துணை மதிப்பீட்டிலே, புதிய திட்டங்களுக்காக பல லட்சக் கணக்கான ரூபாய்களை, சற்றேக் குறைய 14 கோடி ரூபாயைக் கோரி இருக்கிறார்கள். இது உண்மையிலேயே வரவேற்கத்தக்கது. புதிய திட்டங்களை இடையிலே ஏற்றுக்கொள்ள அரசாங்கம் தயங்கவில்லை. மக்களின் கோரிக்கைகளை உடனடியாகக் கவனித்து இந்தத் துணை மதிப்பீட்டிலே சேர்த்திருக்கிறார்கள். குறிப்பாக, மருத்துவக் கல்லூரி மாணவர்கள் ஹவுஸ் சர்ஜன்களாகப் பணியாற்றுகின்ற நேரத்தில் பண உதவி தேவையென்று கேட்டார்கள். மிகப் பரந்த மனப்பான்மையோடு அரசாங்கம் அதை ஏற்றுக்கொண்டு பணம் ஒதுக்க முன் வந்து அதனை இந்தக் கோரிக்கையிலே சேர்த்திருக்கிறார்கள். நெருக்கடி நிலைமை காரணமாக பல புதிய காரியங்களை ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலையில் மாணவர்களுக்கெல்லாம் என்.சி.சி. டிரெயினிங் கொடுப்பதற்காக செலவாகக் கூடிய தொகையையும் இந்தத் துணை மதிப்பீட்டிலே கோரியிருக்கிறார்கள். ஆகவே, இந்தத் துணை மதிப்பீடு வரவேற்கக் கூடியதாகும். அதே சமயத்தில் ஒருசில குறைபாடுகளை நாமே குறைத்திருக்கலாம் என்றும் நான் கூற ஆசைப்படுகிறேன்.

போலீஸ் இலாகாவுக்கு அதிகமான தொகையைக் கேட்டிருக்கிறார்கள். யுத்த நெருக்கடி நிலையில் போலீஸ் இலாகாவினருக்குப் பயிற்சி கொடுக்க அதிகத் தொகை கோரியிருப்பது வரவேற்கத்



2nd February 1963] [திருமதி டி. என். அனந்தநாயகி]

தக்கதுதான். ஆனால், இடையிடையே இந்த இலாகாவுக்கு அனாவசியமான செலவுகள் ஏற்படுவதையும் நாம உணர்ந்து பார்க்க வேண்டும். கொஞ்ச நாட்களுக்கு முன்னால் ஏதோ வேலை நிறுத்தம் நடந்தது என்பதற்காக போலீஸ்காரர்களைப் பல பகுதிகளுக்கு அனுப்பினோம். இங்கிருக்கும் போலீஸ்காரரை அங்கேயும் அங்கிருக்கும் போலீஸ்காரரை இங்கேயும் என்று மாற்றினோம். அவர்களுடைய பாதுகாப்புக்காக போலீசாரை அனுப்பினோம். கட்சிகளின் ஊர்வலங்களுக்குப் பாதுகாப்புக்காகப் போலீசாரை அனுப்பியதாலும் ஏகப்பட்ட பணம் விரயமாகி இருக்கிறது. இதனை எல்லாக் கட்சியினரும் உணர்ந்து இந்த மாதிரி வீண் செலவுகளைத் தவிர்க்க வேண்டும். இதிலே பொறுப்பு ஆளும் கட்சிக்கு மட்டுமல்ல. மக்களின் வரிப் பணத்திலிருந்துதான் நாம் இந்தச் செலவுகளையெல்லாம் செய்கிறோம். ஆகவே, வருங்காலத்திலாவது ஊர்வலங்கள் போன்றவற்றால் வீண் செலவாவதைத் தவிர்க்கவேண்டுமென்பதை எல்லாக் கட்சியினரும் உணரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சில இலாகாக்களைப் பொறுத்தவரை ஒவ்வொரு ஆண்டும் துணை மதிப்பீட்டின்போது அதிகத் தொகை கோரப்படுகிறது. 'வெல்பேர் ஆப் பாக்வார்டு கிளாஸஸ்'-க்கு ஒவ்வொரு ஆண்டும் துணை மதிப்பீட்டின்போது அதிகத் தொகை கோரப்படுகிறது. வரவு செலவுத் திட்டத்தின்போதே இந்த மாதிரி இனங்களுக்கு அதிகமான தொகையை ஒதுக்கிவிட்டால் மறுபடியும் துணை மதிப்பீட்டின்போதும் அதிகத் தொகை கோரும் நிலைமை ஏற்படாது. இந்த இனத்தைப் பொறுத்தவரையில் செலவழிக்கப் பட வேண்டியது அவசியம். மாணவர்களுடைய படிப்புக்கு அதிகத் தொகை ஒதுக்க வேண்டியது மிக அவசியமானதாகும். வேறு சில துறைகளிலே நாம் பணத்தைப் போடுவதனால் சில சமயங்களில் 100-க்கு 50 பங்கு, 25 பங்கு நஷ்டம் ஏற்படலாம். ஆனால் பிற்பட்ட சமூகத்தினரும், ஹரிஜன மக்களும் கல்வியில் முன்னேற்றம் அடைவதற்காகச் செலவழிக்கப்படக்கூடிய பணம் எந்த வகையிலும் நஷ்டத்தைத் தராது. அவர்களுடைய சமூகம் நன்கு முன்னேறி வருங்காலத்திலாவது அவர்கள் சமூகத்தினால் அரசாங்கத்துக்குத் தொல்லை இல்லாத நிலைமை ஏற்படும்.

இப்போது முதியோர்களுக்குப் பென்ஷன் கொடுக்கப்படுகிறது. சென்னையைப் பொறுத்தவரையில் இருக்கக்கூடிய முதியோர்களுக்கு அந்தப் பென்ஷனைக் கொடுப்பது மிக மிக அவசியமாகும். கிராமப் பகுதியில் இருக்கும் முதியோர்களுக்காவது யாராவது கொஞ்சம் சாப்பாடாவது போடுவார்கள். ஆனால் சென்னையிலுள்ளவர்களுக்கோ, சோறு போட வேண்டுமென்று நினைத்தாலும் போட முடியாத நிலைமை இருக்கிறது. அந்தப் பணத்தைக் கொடுப்பதிலும் கலெக்டர் ஆபீசில் உள்ளவர்கள் எந்த முறையிலாவது பென்ஷன் மனுவை 'டிஸ்க்வாலிபை' பண்ணத்தான் பார்க்கிறார்களே தவிர அவர்களுக்குப் பென்ஷன் தொகை கொடுக்க வேண்டுமென்ற முறையில் அணுகுவதில்லை. ஏதோ ஒரு வீட்டில்

வேலை செய்து கொண்டு மாதம் ஐந்து ரூபாய் பணம் பெற்றாலோ அல்லது ஏதாவது ஒரு கடையில் லேபராக மாதம் ஐந்து ரூபாய் பெற்றாலோ பென்ஷன் தொகை கிடையாது என்று சொல்லி விடுகிறார்கள். சிலர் பெறக் கூடிய பென்ஷனே ஏழு ரூபாய் என்று இருப்பவர்கள் முதியோர் பென்ஷன் தொகையைக் கேட்கிறார்கள். இந்த முதியோர் பென்ஷனைப் பொறுத்தவரை விரிவான முறையில் பரிசீலிப்பதற்கு நகர எம்.எல்.ஏக்களைக் கொண்ட கமிட்டியைப் போட்டு சீராகப் பரிசீலித்து புதிய வழிகளை வகுக்க முடியுமா என்பதைப் பற்றி ஆலோசிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, நேரம் இல்லாததால் இத்துடன் முடித்துக் கொள்கிறேன்.

* திரு. எம். எஸ். செல்வராஜன்: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் உப மதிப்பீட்டுக் கோரிக்கையை நான் வரவேற்கிறேன். திட்ட வேலைகள் எல்லாம் முறையாக நடந்து வருகின்றன என்று அமைச்சர் அவர்களுடைய குறிப்பிலே காணப்படுகிறது. அது எல்லோருக்கும் ஆறுதலைத் தருகிறது. உப மதிப்பீட்டுக் கோரிக்கை ஏறக்குறைய 14 கோடிக்கு அதிகப்பட்டு இருந்தாலும்கூட, பெரும்பகுதி தேசத்தில் எழுந்துள்ள அவசர கால நிலைக்கு உரியதாக இருப்பதால் எல்லோரும் ஏற்றுக்கொள்ளுவார்கள்.

சமீப காலத்தில் 400 ரூபாய் வரை அடிப்படைச் சம்பளம் உள்ள என்.ஜி.ஓ.க்களுக்கு 'டியர்னஸ் அலவன்சை' உயர்த்திக் கொடுத்தார்கள். நானூறு ரூபாயை அடுத்து சம்பளம் வாங்கக் கூடிய ஒரு சில என்.ஜி.ஓ.க்கள் இருக்கிறார்கள். அவர்களும் இந்த உயர்வினால் பயன்பெறும் வகையில் பொதுவாக என்.ஜி.ஓ.க்கள் என்ற முறையில் இந்த டியர்னஸ் அலவன்ஸ் உயர்வைக் கொடுத்தால் நலமாக இருக்கும். இது பற்றி அரசாங்கம் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த அவசர காலத்தில் உணவுப் பொருள் உற்பத்திக்காக வேகமாகப் பல நல்ல திட்டங்களைப் போட்டுக் கொண்டிருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில் நான் ஒன்றைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். சென்னை நகரத்தைப் பொறுத்தவரையில் ஏராளமாக உணவுப் பொருள்கள் விரயமாகிறது. குறிப்பாக நகரப் புறங்களில் நடத்தப்படுகிற ஹோட்டல்களில் அவசியமின்றி, நாகரிகத்தையொட்டி, விபரீதமான மிச்சம் (வேஸ்டேஜ்) ஏற்படுகிறது.

இது சாதாரண சிறு ஹோட்டல்களில் ஏற்படுவதில்லை. தட்டுகளில் பறிமாறும் பொருள்களை அளவிற்கு அதிகமாக வைத்து அவற்றை கூடை கூடையாக சாக்கடையில் கொட்டும் பயங்கர நிலை இருக்கிறது. இந்தத் தேசிய விரயத்தை எப்படித் தவிர்ப்பது என்று பரிசீலிக்க வேண்டும். பெரிய நகரங்களுக்குச் செல்லும் வாய்ப்பு எனக்கு ஏற்பட்டிருக்கிறது. நமது தலைநகரில் உள்ளதைப் போன்று உணவில் கலப்படம் செய்வதை நான் எங்கும் பார்த்ததில்லை. அவ்வளவு பயங்கரமாக இருக்கிறது. இதை எப்படி



நிவர்த்தி செய்வது என்பதில் கவனம் செலுத்த வேண்டும். இப்போதும் சட்டபூர்வமாக நடவடிக்கைகள் எடுத்து வருகிறார்கள். காரணமாக இல்லாதவர்கள் தண்டனை அடைந்து நியாயமான பொறுப்பாளிகள் அதிலிருந்து தப்பிவிடுகிறார்கள். உற்பத்தி ஸ்தலத்தில் கண்காணிப்பு தேவை. அதையும் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்தபடியாக, திருநெல்வேலி ஜில்லாவில் ஸ்பெஷல் மைனர் இரிகேஷன் ஸ்கீம், டீ. வீல்டிங்-கம்-ரிக்ளமேஷன் ஸ்கீம், அது பரீட்சார்த்தமாக பேய்குளம் என்ற இடத்தில் ஒன்று எடுக்கப்பட்டது. அதை எடுத்து ஐந்து ஆண்டுகளாகியும் பரீட்சார்த்த திட்டம் பரீட்சார்த்த நிலையில் இருக்கிறதே தவிர அதைத் தொடர்ந்து நடத்த முடியாமல் இருக்கிறது. அதிலுள்ள கஷ்ட நஷ்டங்கள் என்ன என்று ஆராய்ந்து பார்த்து அவைகளை நிவர்த்தி செய்வதில் அரசாங்கம் போதிய கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சென்னையில் சமீபத்தில் ஏற்பட்ட தொத்து நோயை நிவர்த்திக்க ஸ்பெஷலாக சானிட்டரி இன்ஸ்பெக்டர்கள் சாங்ஷன் செய்யப்பட்டார்கள். அவர்களுக்கு சரிவர சம்பளம் நிர்ணயிக்கப்படாது கடந்த நான்கு மாதங்களாக அவர்கள் ஒழுங்காக சம்பளம் பெறமுடியாத நிலையில் கஷ்டப்படுகிறார்கள் என்ற தகவலை அறிகிறேன். பின்னர் கம்பவுண்டர் பயிற்சி கொடுக்க வேண்டுமென்று நினைக்கிறோம். பார்மஸிஸ்ட் ட்ரெயினிங்க்கு ஆள்களை எடுத்துக் கொண்டிருக்கிறோம். சென்ற ஆண்டு வரை சில ஆண்டு காலம் பழக்கம் இருந்தால் போதும் டாக்டர் சர்டிபிக்கட் கொண்டு செய்யலாம் என்ற விதி இருந்தது. இந்த அவசரக் காலத்தில் அதைத் தொடர்ந்து வைத்து அப்பேர்ப்பட்டவர்களை வைத்துக்கொள்வதைப் பற்றி பரிசீலனை செய்வது நல்லது. இந்த சபையின் கவனத்திற்கு அப்பாற்பட்டதாகக் கருதினாலும் சங்கராந்தியை அடுத்து, ஜனவரி மாதத் தொடக்கத்திலிருந்து சில தினங்கள் திருநெல்வேலியிலிருந்து புறப்பட்டு வருகிற எல்லா ஸ்டேஷன்களிலும் டிக்கட் எடுத்தவர்கள் குறைந்தது பத்து பேர்களாவது டிக்கட்டைப் பயன்படுத்த முடியாமல் ரயிலில் ஏற முடியாத கஷ்ட நிலை இருக்கிறது. அவர்கள் கஷ்டத்தைப் போக்க பஸ் போக்குவரத்து மூலமாகவாவது ஈடு செய்ய முடியுமா என்பதை பரிசீலனை செய்யலாம். எவ்வளவுக் கெவ்வளவு உப மானியக் கோரிக்கைகள் வருகின்றனவோ அவ்வளவுக்கவ்வளவு வரி விதிப்பைப் பற்றியும் அரசாங்கம் கவனம் செலுத்தும். சமீபத்தில் பஸ்டிரான்ஸ் போர்டுக்கு வரி விதித்தார்கள். அதிகபட்சமாக கட்டணம் நிர்ணயிக்கப்பட்டிருந்தது. ஆனால் இந்த வரி விதிப்பிற்குப் பிறகு எவ்வளவு பாக்கியமாக கட்டணம் விதிக்க முடியுமோ அந்த அளவு கட்டணத்தை அதிகப்படுத்துவார்கள் என்று அரசாங்கம் எதிர்பார்க்கவில்லை. அதில், அவர்கள் வருமானத்தில் 1/3 பங்கு அரசாங்கத்திற்கு வரியாக கிடைக்கலாம் என்று நினைத்ததுண்டு. ஆனால் அரசாங்கம் எதிர்ப்பார்ப்பதற்கு மாறாக அதிக பட்ச அளவு கட்டணம் உயர்த்தப்பட்டிருக்கிறது. பஸ்காரர்களிடம் சேர்ந்து கிடைக்கும் பணத்தோடு இப்போது அதிகப்படி லாபமும் கிடைக்கிறது. இதிலும் அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும். (பெல்)

[திரு. எம். எஸ். செல்வராஜன்] [2nd February 1963

மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்க நினைக்கிறோம். மாணவர்களுக்கு குறைந்தபட்சம் இந்த ரோடு சென்ஸ், ஒழுங்காக எப்படிச் செல்வது, வாகனங்கள் செல்லும்போது ரோடில் எப்படி செல்வது, எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பன போன்ற பயிற்சிகளை எல்லாப் பாடசாலைகளிலும் கற்றுத் தந்து அந்த ரோடு சென்ஸ் என்பதை, அந்த உணர்ச்சியை ஏற்படுத்த வேண்டும். இந்த உணர்ச்சி ஏற்பட்டால் தேசப் பாதுகாப்பு உணர்ச்சி தானாக வந்து விடும். இந்த மானியத்தை நான் ஆதரிக்கிறேன்.

* திரு. நா. ப. செங்கோட்டுவேலு: சட்டமன்றத் தலைவர் அவர்களே, விவாதத்திற்கு வந்திருக்கும் இந்த துணை மதிப்பீடுகள் மீது நான் சில கருத்துக்கள் சொல்ல ஆசைப்படுகிறேன். நாட்டின் தற்போதைய நிலையை முன்னிட்டு உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்பதற்காக இந்த துணை மதிப்பீட்டில் அதிகப் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இப்படி ஒதுக்கப்பட்டிருக்கிறபோது, சேலம் போன்ற பகுதிகளில் மிகுந்த அக்கறை காட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சேலம் போன்ற மாவட்டங்களில் ஏரி, குளங்கள் அதிகம் வெட்ட முடியாத சூழ்நிலை இருப்பதால் சிறிய நீர்ப்பாசனத் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட தொகையிலிருந்து போர் வெல்ஸ் அமைத்து பாசன வசதி செய்து கொடுத்தால் அங்கு விவசாயம் சிறப்பாக நடைபெறும். அதற்கேற்ற வகையில் நமது அரசாங்கம் நல்ல வேலைகள் செய்து அங்குள்ள விவசாயிகள் நன்மை பெறத்தக்க வகையில் திட்டங்கள் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்பகுதிகளில் விவசாயத்திற்காக இரவு நேரங்களில் மின்சாரம் சப்ளை செய்யப்படுவதால் அதனால் விவசாயிகளுக்கு தொந்தரவுகள் அதிகமாக இருப்பதால் சினிமா போன்றவற்றிற்கு மின்சாரம் கொடுப்பதை நிறுத்தி, அவர்களை டயனமோக்களை உபயோகிக்கக் கட்டளையிட்டுவிட்டு அந்த மின்சாரத்தை விவசாயிகளுக்குக் கொடுத்தால் விவசாயிகளுக்கு நன்மை ஏற்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். சமூக நலத் திட்டத்தின்கீழ் ஏராளமாக பணம் செலவாகிறது என்றாலும் அத்திட்டங்கள் நல்லமுறையில் செயல்படுவதில்லை. அதற்காகப் பஞ்சாயத்து யூனியன்கள் செலவு செய்யும் பணம் நல்லமுறையில் செலவு செய்யப்படவில்லை. ரோடுகள், கிணறு வெட்டுதல் போன்ற வேலைகள்தான் நடந்து கொண்டிருக்கின்றனவே தவிர பெரிய திட்டங்கள் எதுவும் செயல்படுவதில்லை. அப்படி பஞ்சாயத்து யூனியன்கள் நல்ல முறையில் வேலை செய்யாதது பஞ்சாயத்து யூனியன்களில் குழப்பங்கள் நிறைந்திருப்பதால் பஞ்சாயத்து யூனியன்களை எல்லாம் பழைய மாதிரி ஜில்லா போர்ட், தாலுகா போர்ட் என்று மாற்றிவிட்டால்கூட உருப்படியான வேலைகள் செய்ய முடியும் என்று நான் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். ஏனெனில் சில இடங்களில் கிணறுகள் வெட்டினால் அங்கு அந்தக் கிணறுகளில் தண்ணீர் இருப்பதில்லை. அவை ஒவ்வொன்றிலும் கிட்டத்தட்ட 10, 15 கிணறுகள் வெட்டுகிறார்கள். ஒவ்வொரு கிணற்றிற்கும் 10,000, 20,000 ரூபாய்



2nd February 1963] [திரு. நா. ப. செங்கோட்டுவேலு]

என்று செலவு செய்யப்படுகிறது. அப்படிச் செலவு செய்வதினால் பணம் பாழாகிறதே தவிர குடிதண்ணீர் கிடைப்பதில்லை. இப்படி கிணறு ஒன்றுக்கு 10,000 20,000 என்று செலவு செய்வதைவிட போர் வெல்ஸ் அமைத்துக் கொடுத்தால் தண்ணீர் கிடைக்க வழி ஏற்படும். தண்ணீர் கிடைக்காத முறையில் பல கிணறுகள் வெட்டுவதை விட பணம் செலவு செய்து ஒரு சில போர் வெல்ஸ் தோண்டினாலாவது ஒருவாறு குடிதண்ணீர் பிரச்னையைத் தீர்க்க முடியும். அடுத்து, தற்போதைய நெருக்கடி நிலையை முன்னிட்டு ராணுவ வீரர்களுக்குப் பலவித சலுகைகள் அளிக்கப்பட்டு வருகின்றன. அதுபோன்ற சலுகைகளை ஓய்வு பெற்று இருக்கும் ராணுவ வீரர்களுக்கும் அளித்தால் புதிதாக ராணுவத்தில் சேரும் வீரர்களுக்கு அது உற்சாகமூட்டக்கூடியதாக இருக்கும். பழைய ராணுவ வீரர்களுக்கு இப்போது என்ன சலுகைகள் அளிக்கப்படுகின்றனவோ அதை மறுபடியும் பரிசீலனை செய்து தற்போதைய விலைவாசிக்கேற்ப அதிகப்படி பணம் அளித்து, கல்வி, மருத்துவ வசதி போன்ற சலுகைகளை அவர்களுக்கும் விஸ்தரிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அவர்களுக்கு காலாகாலத்தில் பென்ஷன் தொகை கிடைக்கவும் ஏற்பாடு செய்ய வேண்டும். அடுத்து, கிராமங்களில் தொழில் துறையில், தொழில் நடத்துபவர்களுக்கு சில சலுகைகள் அரசாங்கத்தில் இருந்து கொடுக்கப்பட்டிருந்தாலும் அவற்றை அவர்கள் எளிதாக பெற முடியவில்லை. கிராமங்களில் உள்ளவர்கள் தொழில் செய்ய லைசென்ஸ் கேட்டால் அதிகாரிகள் எவ்வளவு தூரம் தொல்லைகள் கொடுக்க முடியுமோ அவ்வளவு தூரம் தொல்லை கொடுத்து லைசென்ஸ் பெறுவதில் கஷ்ட நிலையை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அரசாங்கம் அவர்கள் கஷ்டத்தை தீர்த்து அதிகாரிகள் லஞ்சம் வாங்குவதைத் தடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டும், அந்த வகையில் அவர்கள்மீது நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்றும் 11-30 a.m.
கேட்டுக் கொள்கிறேன். அவர்கள் லைசென்ஸ் வேண்டுமென்று மனுப் போட்டால், லைசென்ஸ் கிடைப்பதற்கு ஓராண்டு காலம் ஆகிறது. அதற்கு மேலும் ஆகிறது. பஞ்சாயத்து போர்டு முதல் DHO அலுவலர் கிடைப்பது வரையிலும் லஞ்சம் கொடுத்துதான் இந்த லைசென்ஸ் வாங்க வேண்டியிருக்கிறது. இந்த நிலைமை மாறினால்தான் தொழில் வேகமாக முன்னேற முடியும். ஆகவே இவற்றையெல்லாம் யோசித்து அரசாங்கம் நல்ல முறையில் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். லைசென்ஸ் பெறுவதில் ஏற்படும் காலதாமதத்தை தவிர்க்கவேண்டுமென்றால் அரசாங்கம் மிகவும் இதில் அக்கறை செலுத்த வேண்டும். அப்போதுதான் பல தொழில்களை ஏற்படுத்துவதற்கு மக்கள் முன்வருவார்கள். அவர்களுக்கு அரசாங்கம் கடன் உதவி அளித்து உதவுவதுடன் லைசென்ஸ் சீக்கிரமாக கிடைப்பதற்கு வசதி செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பஸ் போக்குவரத்தைப் பொறுத்தவரையில் இப்போது பல புதிய பஸ் மார்க்கங்களில் பஸ் விடுவதைப் பற்றி பரிசீலனை செய்யப் போவதாக கவர்னர் அவர்களது உரையில் கூறப்பட்டிருக்

[திரு. நா. ப. செங்கோட்டுவேல்] [2nd February 1963

கிறது. புதிய பஸ் ரூட்டுகள் விட்டால்தான் மக்கள் துரிதமாக பல இடங்களுக்குப் போய் வேண்டிய காரியங்களைச் செய்து கொள்ள முடியும். இதில் அரசாங்கம் நல்லமுறையில் கவனம் செலுத்தி எந்த இடங்களில் எல்லாம் அதிகமான பஸ்களை விடவேண்டுமோ அந்த இடங்களுக்கெல்லாம் அரசாங்கம் காலதாமதம் இல்லாமல் பஸ் போக்குவரத்து வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இதில் பேசுவதற்கு சந்தர்ப்பம் அளித்ததற்கு நன்றி தெரிவித்துக்கொண்டு என் பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

திரு. சி. பொன்னுசாமி நாடார்: கனம் தலைவர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கும் துணை மான்யக் கோரிக்கையை ஆதரித்து சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். உடனடியான நாட்டின் முக்கியமான தேவைகளைக் கருதி போலீஸ் இலாகாவுக்கு நிறைய பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இது மிகவும் வரவேற்கக்கூடியது. இந்த போலீஸ் மான்யத்தோடு ஊர்க்காவல் படைக்கும் மான்யம் கோரப்பட்டிருக்கிறது. அது மிகவும் குறைவாக இருக்கிறது என்பதை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இதில் வேறு பல இனங்களில் அதாவது சில்லறை செலவு, இதர செலவு என்ற இனங்களின் கீழ் பல லட்சக்கணக்கான ரூபாய்கள் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதைப் பற்றி சிறிது பரிசீலனை செய்து போலீஸ் படையையும் ஊர்க்காவல் படையையும் ஒன்றாக சேர்த்து கவனித்தால் நன்றாக இருக்கும் என்று கருதுகிறேன். ஏனென்றால் ஊர்க்காவல் படைக்கும் உபரியாக ஏற்படுத்தப்போகும் போலீஸ் படைக்கும் நாம் கவனம் செலுத்திக் கொண்டிருக்கிறோம். இதில் நாம் வியாபாரக் கண்ணோட்டத்தோடு பார்க்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் சாதாரணமாக எப்போதும் எமர்ஜென்ஸி ஏற்படுவதில்லை. அந்த நேரங்களில் கிராமப் புறங்களில் மக்களிடம் கண்ணியம், கட்டுப்பாடு, ஒழுக்கம் இவைகளை வளர்ப்பதற்கு நாம் முயற்சி செய்யவேண்டும். அந்த முறையில் பணியாற்றுவதற்கு நல்லவிதமாக பிரச்சாரம் செய்யவேண்டும், அதற்கு இந்த ஊர்க்காவல் படை பிரயோசனமாக இருக்கும். அது மாத்திரமல்ல. இப்போது நாம் உணவு உற்பத்தி சம்பந்தமாக காய்கறிகளை அதிகமாக உற்பத்தி செய்யவேண்டும் என்று எல்லோரும் ஆசைப்படுகிறோம். எல்லா காய்கறிகளையும் அதிகமாக உற்பத்தி செய்யவேண்டுமென்றால் கிராமங்களிலுள்ள சிறிய இடங்களில் உற்பத்தி செய்ய முடியும். ஆனால் எல்லா இடங்களிலும் தக்காளிப் பழம், முருங்கைக்காய் இவைகளை பயிரிடலாம். எல்லா இடத்திலும் இது உண்டாகும். நாம் குளிக்கும்போது வெளியே போய் கொண்டிருக்கும் தண்ணீரை பாய்ச்சினாலேயே இந்த தக்காளி செடியை வளர்க்கலாம். அதன் பக்கத்தில் பத்து செடிகளைப் போட்டால் சீக்கிரமாக வளர்ந்து பலன் தரும். ஒவ்வொரு செடியிலிருந்தும் 4 ராத்தல், 5 ராத்தல் தக்காளிப்பழம் கிடைக்கும். அதேபோன்றுதான் முருங்கை மரமும். இந்த இரண்டுக்கும் முக்கியத்துவம் கொடுத்தால் உடனடியாக பலன் கிடைக்கும்.



2nd February 1963] [திரு. சி. பொன்னுசாமி நாடார்]

இதில் அனைவரும் கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். முக்கிய சில காரியங்களில்தான் காய்கறிகள் உற்பத்தி செய்ய முடியும். தக்காளிப்பழம் எந்த காலத்திலும் உற்பத்தி செய்ய முடியும். இதுபோன்ற காரியங்களுக்கு கிராம மக்களை பயன்படுத்தலாம். மற்றும் சிறு சேமிப்புத் திட்டத்திலும் அதிகமாக பங்கு கொள்வதற்கு ஊர்க்காவல் படையினர் நல்ல பிரச்சாரம் செய்யவேண்டும். இப்போது நமது நாட்டில் ஏற்பட்டிருக்கும் நெருக்கடியின் காரணமாக ஊர்க்காவல் படையினரையும், புதிதாக போலீஸ் படையினரையும் அமைத்துக் கொள்கிறோம். இவர்களுக்கு யுத்தம் நடந்து கொண்டிருக்கும் போது தான் வேலை இருக்குமே ஒழிய வேலை இல்லாத நேரத்தில் இவர்களுக்கு நான் முன்னால் சொன்ன வேலைகளை கொடுக்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நகர சுத்தி தொழிலாளர்கள் பற்றி சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். சமீபத்தில் மத்திய சர்க்காரிடத்திலிருந்து நகர சுத்தித் தொழிலாளர்களுக்கு சுகாதார பாதுகாப்புக்காக பல பொருட்களை வாங்குவதற்காக 100-க்கு 50 விதம் மான்யமாக கொடுப்பதாக தெரிகிறது. இந்த மான்யத் தொகையை நமது மாநில சர்க்கார் எல்லா ஸ்தாபனங்களுக்கும் எடுத்துக்கூறி புதியத் திட்டங்களின் கீழ் நகர சுத்தித் தொழிலாளர்கள் சுகாதாரமாக வாழ்வதற்கு வேண்டிய வகையில் வாங்குவதற்கு உதவி செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். பல நகரங்களிலும் அரிஜன மக்களும், நிலமற்றவர்களும் புறம்போக்கு நிலங்களில் வீடுகளை கட்டி தங்கி வருகிறார்கள். இம்மாதிரிப்பட்டவர்களுக்கு நிரந்தரமாக வீடு கட்டிக் கொள்வதற்காக ஐந்து சென்ட் நிலம் கொடுத்து, அவர்கள் பேரிலேயே பட்டாவும் செய்து கொடுத்து உதவி செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அப்படி பட்டா செய்து கொடுக்கும்போது ஒரு கட்டுப்பாடு இருக்கவேண்டும். ஏனென்றால் இம்மாதிரி கொடுக்கப்பட்டவர்களுக்கு ஏதாவது கஷ்டங்கள் வருகின்ற நேரத்தில் அவர்கள் தங்களுக்கு கிடைத்த நிலத்தை விற்றுவிடுகிறார்கள். இதை பண வசதி படைத்தவர்கள் வாங்கிக் கொள்கிறார்கள். இந்த நிலைமை ஏற்படாத வகையில் இம்மாதிரி கொடுக்கப்பட்ட நிலம் பரம்பரையாக அனுபவித்து கொள்ளலாமே தவிர யாரும் விற்க முடியாது என்று ஒரு சட்டத்தைக் கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் எல்லாக் கிராமங்களுக்கும் குடிதண்ணீர் வசதி செய்து கொடுத்திருப்பதாகத் தெரியவில்லை. எங்கள் பகுதியை பொறுத்தவரையில் தூத்துக்குடியில் பல கிராமங்களில் ஒரு மைல் இரண்டு மைல் சென்று நிலத்தை தோண்டி—அவ்விதம் தோண்டினாலும் நல்ல தண்ணீர் கிடைப்பதில்லை—உப்புத் தண்ணீராக இருக்கும்—பெண்கள் கஷ்டப்பட்டு அந்த உப்புத் தண்ணீரை எடுத்துக்கொண்டு வருகிறார்கள். ஆகவே நமது மூன்றாவது திட்டத்தில் குடி[illegible]

[திரு. சி. பொன்னுசாமி நாடார்] [2nd February 1963

செய்வதற்கு முக்கியத்துவம் கொடுத்து நமது மாகாணத்தில் எல்லா கிராமங்களிலும் மக்களுக்கு குடிநீர் வசதி கொடுத்தாக வேண்டும். அதற்குத் தகுந்த திட்டத்தை அரசாங்கம் கொண்டு வரவேண்டும். இதற்காக உபமான்யக் கோரிக்கைகள் கொண்டு வந்தாவது இவற்றை நிறைவேற்றவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னும் பல கிராமங்களுக்கு சிறிய சிறிய ரஸ்தாக்கள் அமைப்பதற்கு உதவி செய்தால் கிராமங்களில் போய் அங்குள்ள மக்களிடம் மொபைல் வான் மூலமாக போய் சிறு சேமிப்பு பெற்றுக்கொள்வதற்கு வசதியாக இருக்கும் என்பதை தெரிவித் துக் கொள்கிறேன்.

மேலும், எனக்குத் தெரிந்த வரையிலும் மத்திய சர்க்காரிடத் தில் முக்கியமாக தெரிவிக்க வேண்டிய விஷயம் என்னவென்றால், திருநெல்வேலி, ராமநாதபுரம் ஜில்லாக்களிலிருந்து தான் உலகத் திற்கெல்லாம் தேவைப்படுகிற மருந்துகளுக்கு வேண்டிய சென்னாய் இலை, அவரி இலை இருபது ஆண்டுகளுக்கு முன்னாலேயே இருந்து வெளிநாடுகளுக்குப் போய்க்கொண்டிருக்கிறது. முன்னால் இது இரண்டு கோடி ரூபாய் அளவுக்குப் போய்க்கொண்டிருந்தது, இப் போது 50 லட்சம் ரூபாயாக குறைந்திருப்பதாக தெரிகிறது. ஏன் இந்த அளவுக்கு குறைந்திருக்கிறது என்பதை கண்டுபிடிக்க ஒரு குழுவை அமைக்குமாறு மத்திய சர்க்காரை மாநில சர்க்கார் கேட்டுக்கொண்டால் அதன் மூலம் நமது தொகையை அதிகப் படுத்தி நமது அன்னியச் செலாவணியை இந்த நெருக்கடியான நேரத்தில் பெருக்கிக் கொள்ளலாம். இப்போதுள்ள கணக்கின்படி பார்த்தால் குறைந்து போயிருக்கிற இந்த ஒன்றரை கோடி ரூபாய்க்கு நமக்கு அந்நிய செலாவணி கிடைக்கும். அப்பொழுது நாம் மத்திய சர்க்காரிடம் லட்சக் கணக்காக மான்யம் வாங்கி நல்ல காரியங்களுக்கு செலவு செய்யலாம். இதற்கு அரசாங்கம் உடனடியாக ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* திரு. கே. எஸ். அர்த்தநாரீசுவர கவுண்டர் : கனம் தலைவர் அவர்களே, கனம் நிதி அமைச்சர் அவர்களால் கொண்டு வந்திருக் கக்கூடிய உப மான்யக் கோரிக்கையை ஆதரித்து சில வார்த்தை கள் சொல்ல ஆசைப்படுகிறேன். குறிப்பாக நெருக்கடி காலத்தில் வந்திருக்கின்ற இந்த உப மான்யக் கோரிக்கையானது மிகவும் குறைவாகத்தான் இருக்கிறது என்று சொல்லவேண்டும். தன்னு டைய அனுபவத்தின் காரணமாக கனம் அமைச்சர் அவர்கள் சென்ற பட்ஜெட்டை நல்ல முறையில் பரிசீலனை செய்து தயார் செய்திருந்தும், இப்போது நாட்டில் ஏற்பட்ட அவசர நிலைமை காரணமாக இந்த உப மான்யக் கோரிக்கையை கொண்டு வந்திருக் கிறார்கள். குறிப்பாக இதுமட்டுமல்ல, நாட்டில் நெருக்கடி இருந்துகொண்டிருக்கின்ற நேரத்தில் தைரியமாக நமது நாட்டின் பாதுகாப்பை ஒட்டி டிஃபன்ஸ் டாக்ஸ் கொண்டு வரவேண்டும் என்று வற்புறுத்தி அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன்.



2nd February 1963] [திரு. கே. எஸ். அர்த்தநாரீசுவர கவுண்டர்]

இதுவரையிலும் நமது நாட்டில் இல்லாத வகையில், ஏற்கனவே நமது நாட்டில் கூட்டுறவு திட்டத்தின்கீழ் எப்படி பாதுகாப்பு நிதி என்று வைத்திருக்கிறோமோ அதேபோன்று டிஃபன்ஸ் ஃபண்ட் என்று ஒரு நிதி இருந்தால் நன்றாக இருக்கும் என்பதை அரசாங் கத்திற்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக வரப்போகிற பட்ஜெட் கூட்டத்திலே விளம் பரம் செய்கிறார்களே சினிமாவிலே அதற்கும், சுவரொட்டிகள்; விளம்பரப் பலகைகள் ஆகியவைகளுக்கும் டாக்ஸ் போடவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் அதன் மூலமாக அரசாங்கத்திற்கு நல்ல வருவாய் கிடைக்கும் என்று எதிர்பார்க் கிறேன்.

அடுத்தபடியாக இந்த நெருக்கடி நிலைமையில் ஹொகனக்கல் திட்டத்தை சர்க்கார் கொண்டுவராமல் இருப்பது வருந்தத் தக்கது. அமைச்சரோடு நானும் சென்ற மாதம் அங்கே சென்று பார்த்தேன். ஐம்பத்திரண்டு கோடி ரூபாய் செலவு செய்து இந்தத் திட்டத்தை நிறைவேற்றினால் வருஷத்திற்கு 11½ கோடி ரூபாய் வருவாய் வரும். இத்தகைய திட்டத்தைப் பற்றி மிகவும் யோசித் துக்கொண்டு வேறு மாகாணத்தோடு பேசிக்கொண்டிருப்பதால் பயன் இல்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன். பேச்சுவார்த்தை களை பிற்பாடு வைத்துக்கொண்டு நெருக்கடி நிலைமையில் இப் போதே மத்திய சர்க்காரோடு கலந்து இந்த வேலையை எடுத்துக் கொண்டால் 600 மெ. வா. மின்சாரம் உற்பத்தி செய்யக்கூடிய நிலைமை ஏற்படும் என்றும் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்கு முன்பே செய்திருந்தால் நன்றாக இருக்கும். கால தாமதம் ஆனாலும்கூட, நெருக்கடி நிலைமையில் இன்னும் கால தாமதம் செய்யாமல் இந்தத் திட்டத்தை எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கல்லூரி மாணவர்களைப் பொறுத்த வரையில் என்.ஸி.ஸி., ஏ.ஸி.ஸி. ஆகியவைகளைச் சட்டாயமாகக் கொண்டு வருவது வரவேற்கத் தகுந்தது. அத்தனை மாணவர்களுக்கும் மோட்டார் மற்றும் பெரிய யந்திரங்களை ஓட்ட பயிற்சி கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கிராமங்களில் தொண்டர் படை அமைக்கப் பட்டிருக்கிறது. வெறுமனே தொண்டர் படை அமைத்து விட்டோம் என்று சொல்லாமல் 18 வயதுக்கு மேற்பட்ட வாலிபர் கள் அத்தனை பேர்களுக்கும் இரவு நேரங்களில் ராணுவப் பயிற்சி கொடுக்க சர்க்கார் திட்டத்தைக் கொண்டுவரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, உணவு உற்பத்தியைப் பொருத்தவரையில் விவசாயி களுக்கு ட்ராக்டர்களை அதிகமாகக் கொடுத்து, ட்ராக்டர்களுக்கு வேண்டிய ஸ்பேர் பார்ட்ஸ் எல்லாம் கொடுத்தால் இன்னும் அதிக உற்பத்தி செய்ய வாய்ப்பு இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு. கே. எஸ். அர்த்தநாரீசுவர கவுண்டர்] | 2nd February 1963

காய்கறி திட்டத்தைப் பற்றி பேசும்போது இன்றைக்கு காய்கறி விலை ஏறுகிறது என்று சொல்லுகிறார்கள். அதற்காக நகரங்களுக்குப் பக்கத்தில் இருக்கக் கூடியவர்களுக்கு இந்தத் திட்டத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அதை விட பிற்போக்காக இருக்கக் கூடிய கிராமங்களுக்கு இந்தத் திட்டத்தை விஸ்தரித்தால் நலமாக இருக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன். ஏனென்றால் நகரங்களுக்குப் பக்கத்தில் உள்ள இடங்களில் விவசாயத்தை நல்ல முறையில் செய்யாத காரணத்தினால், வெளியே இருக்கக் கூடிய கிராமங்களுக்குக் கூட இந்தத் திட்டத்தை விஸ்தரித்தால் நன்றாக இருக்கும். குறிப்பாக இன்றைக்கு சென்னையில் இருக்கக் கூடிய கொத்தவால்சாவடியில் கறிகாய்களின் விலை அதிகரிக்கிறது என்று சொன்னால், வெளியில் இருந்து வரக் கூடிய காய்கறிகளை அங்குள்ள கடைகளில் வைத்துக்கொண்டு விலையை ஏற்றி விற்கிறார்கள். அதைத் தவிர விவசாயியால் விலை ஏறவில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

விவசாயத்தைப் பொருத்த வரையில் காரண்டீட் ப்ரைஸ் என்று வைத்தால் நன்றாக இருக்கும். சென்ற ஆண்டில் கரும்பு, வெல்லம் ஆகியவைகளின் விலை குறைவாக இருந்தது, இன்று ஏறியிருக்கிறது. அதே போல நெல் விலை இன்று குறைந்திருக்கிறது. காரண்டீட் ப்ரைஸ் இல்லாத காரணத்தினால் ஒவ்வொரு ஆண்டும் இந்த நெருக்கடி ஏற்படுகிறது. இதை சர்க்கார் நன்றாக பரிசிலனை செய்து காரண்டீட் ப்ரைஸ் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக க்ராப் இன்ஷ்யூரன்ஸ் ஸ்கீமை கொண்டுவர வேண்டும் என்று சர்க்கார் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இப்பொழுது பூச்சிகளின் தொந்தரவினால் விவசாயம் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது. இந்த மாதிரி சங்கடங்களிலிருந்து விவசாயிகளைக் காப்பாற்ற க்ராப் இன்ஷ்யூரன்ஸ் திட்டத்தைக் கொண்டு வந்தால் நன்றாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மேட்டூரில் இண்டஸ்ட்ரியல் ஸ்கூல் இந்த ஆண்டு ஆரம்பித்திருக்கிறார்கள். கிட்டத்தட்ட 150 மாணவர்களை சேர்க்க இருந்தபோது சரியான விளம்பரம் செய்யாத காரணத்தினால் 32 மாணவர்களைத் தான் சேர்ந்திருக்கிறார்கள். அடுத்த ஆண்டில் கட்டிடங்களை நல்ல முறையில் கட்டி பயிற்சிக்கு வேண்டிய மாணவர்களைச் சேர்க்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தொழிலாளர் பிரதேசத்தில் மாதர்களுக்குச் சரியான வேலை இல்லை என்று சர்க்காருடைய கவனத்திற்கு கொண்டு வருகிறேன். நம் எல்லையில் இருக்கும் சிப்பாய்களுக்கு வேண்டிய உடைகளை கையால் செய்யவேண்டுமென்றால் அதற்கு வேண்டிய பயிற்சியை தொழிலாளர் இருக்கும் பிரதேசத்தில் அங்குள்ள எல்லா பெண் மணிகளுக்கும் கொடுத்தால் அவர்களுக்கு வருவாய் வருவதோடு நம் எல்லையில் இருக்கும் சிப்பாய்களுக்கு நல்ல உடையைத்



2nd February 1963] [திரு. கே. எஸ். அர்த்தநாரீசுவர கவுண்டர்]

தயாரித்துக் கொடுக்க முடியும். அங்கு இருக்கக் கூடிய மாதர் சங்கங்கள் அதற்குத் தயாராக இருக்கின்றன என்று சொல்லிக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக தொழிலாளர் பிரதேசத்தில் தொழிலாளர்களுக்கு இருக்கக் கூடிய இயக்கத்தில் தலைவர்களைத் தேர்ந்தெடுப்பது, வொர்க்ஸ் கமிட்டிக்குத் தேர்ந்தெடுப்பது ஆகிய தேர்தல்களை ஒத்தி வைத்து, தொழிற் சங்கங்களில் கட்சிக்கு தகுந்த மாதிரி பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்தால் அவர்களுக்குள்ளே உள்ள மனக் கசப்பைப் போக்க வாய்ப்பு இருக்கும். ஆகையால் நெருக்கடி நிலைமை தீரும் வரையில் இத்தகைய தேர்தல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

* திரு. மு. ரா. கிருஷ்ணமூர்த்தி : தலைவர் அவர்களே, 1962-63-ம் ஆண்டு துணை மதிப்பீட்டுக் கோரிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

குறிப்பாக, சீன ஆக்கிரமிப்பினால் ஏற்பட்டுள்ள இந்தத் தேசிய நெருக்கடி காரணமாக உணவு உற்பத்திப் பெருக்கத்திற்கு அதிக நிதியையும், போலீஸ் பாதுகாப்புக்கு அதிக நிதியையும் ஒதுக்கியுள்ளதை வரவேற்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இப்படி அதிக நிதி ஒதுக்கியுள்ள சமயத்தில் போலீஸ்காரர்களுக்கு வேண்டிய வசதிகளை இன்னும் அதிகமாகச் செய்ய வேண்டிய அவசியத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன். அந்த வகையில் போலீஸ்காரர்களுக்கு உள்ள தினப்படி, பயணப் படி, என்பது மாதத்திற்கு 20 நாட்களுக்குத்தான் கொடுக்கப் படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொண்டு, அதை மாதம் முழுவதும் கொடுக்க வேண்டிய அவசியத்தை உணர்ந்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே சமயத்தில் உணவு உற்பத்திப் பெருக்கம் காரணமாக பாசன வசதி எவ்வளவு அவசியம் என்பதைப் பற்றி ஆங்காங்கு பாசன வசதி வேண்டுமென்று பல அங்கத்தினர்கள் இங்கே வற்புறுத்திக் கூறியதையும் எல்லோரும் அறிவோம். பாசன வசதிக் குறைவு காரணமாக எனது தொகுதியாகிய காட்டுமன்னார் கோவிலில் உள்ள பல குறைபாடுகளில் சிலவற்றை எடுத்துக் கூற விரும்புகிறேன். எனது தொகுதியில் உள்ள ஒரு ஏரியாகிய வீராணம் ஏரி 20,000 ஏக்கர் நிலம் சாகுபடியாவதற்கு வேண்டிய தண்ணீரைக் கொடுக்க வேண்டிய நிலையில் இருக்கிறது. அதோடு சென்னைக்கு வேண்டிய குடி தண்ணீர் சப்ளை செய்யும் பிரச்னையைத் தீர்க்க வேண்டிய ஏரியாகவும் இருக்கிறது. நல்ல முறையில் தண்ணீர் கட்டும்படி இல்லாமல் நடு மத்தியில் காடு உண்டாகி, மண் மேடிட்டு இருப்பதைப் பற்றி எனக்குப் பேசுவதற்கு சந்தர்ப்பம் கிடைத்த போதெல்லாம் பேசியிருக்கிறேன். இப்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி காரணமாக இதை நல்ல முறையில் சீர்திருத்தம் செய்தால் சிதம்பரம் வட்டத்திற்கு வேண்டிய தண்ணீர் பிரச்னையைத் தீர்ப்பதோடு அந்தப் பகுதியில் மூன்று முறை பயிரிட வாய்ப்பு ஏற்படும். அதோடு அந்தப் பகுதியில் தண்ணீரினால்

[திரு. மு. ரா. கிருஷ்ணமூர்த்தி] [2nd February 1963

சேதம் உண்டாகியிருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். சென்ற ஆண்டில் பெய்த மழை காரணமாகவும் இந்த ஆண்டிலே பெய்த மழை காரணமாகவும் திருச்சி மாவட்டத்துக்கும் எங்கள் மாவட்டத்துக்கும் இடையில் உள்ள 'காட்டு வாரி' என்ற ஓடை உடையார்பாளையம் வட்டாரத்திலுள்ள வங்குடி., நரசிங்கம்பாளையம் கிராமப்புறங்களிலிருந்து மழை காலங்களில் வெள்ளம் ஏற்பட்டுப் பெரிய நதி போன்ற உருவமெடுத்து சென்னை பெருஞ் சாலையைக் கடந்து வெண்ணங்குழி வழியாக காட்டுமன்னார் கோவில் தொகுதியிலுள்ள வீராநந்தபுரம் பஞ்சாயத்தைச் சேர்ந்த கிராமங்களும், கண்டமங்கலம், குருங்குடி, நாட்டார்மங்கலம் முதலிய கிராமங்களிலுள்ள 1,700 ஏக்கருக்கு மேல் நஞ்சை வேளாண்மையைக் கெடுத்து சேதத்தை உண்டாக்கி இருக்கிறது. இப்படி வெள்ளத்தினால் அதிகச் சேதம் உண்டாகியது என்பதைக் குறித்து சர்க்காருக்குப் பல தந்திகள் அனுப்பியும், மகஜர்கள் அனுப்பியும் மக்கள் தெரிவித்திருக்கிறார்கள். அதன் காரணமாக ரெவின்யூ போர்ட் அங்கத்தினர்களும் அங்கு வந்து சரியான முறையில் பார்வையிட்டு அதற்கு வேண்டிய காரியங்களை ஆராயவில்லை என்று மக்கள் குறை கூறியிருக்கிறார்கள் என்றும் சர்க்கார் அறிந்திருப்பார்கள் என்று நான் நினைக்கிறேன். அந்தக் காட்டு வாரி ஓடை கால்வாய்கள் கெட்டுப் போகின்றன என்பதை நான் எடுத்துச் சொல்ல ஆசைப்படுகிறேன். இந்த ஓடையை உடையார்பாளையம் தாலுகா வங்குடி கிராமத்தில் ஏரியாக அமைத்துத் தடுத்து இட்டால் ஆயிரக் கணக்கான ஏக்கர்களுக்குத் தண்ணீர் பாயும்; இந்தத் திட்டத்தை திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை என்று அறிகிறேன். இல்லையென்றாலும் ஓடையை செங்கால் ஓடை வழியாக வெட்டித் திருப்பினால் 4 பர்லாங்கு வித்தியாசத்தில் வீராணம் ஏரியில் சேர்க்க முடியும். அப்படிச் சேர்த்தால் இந்த மாதிரி சேதம் ஏற்படுகிற பிரச்னை தீரும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். அதே போன்று பல வாய்க்கால்கள் வெட்ட சாங்ஷன் ஆகியும் வெட்டப்படாமல் இருக்கிறது. முக்கியமாக கப்பலடிக் குட்டை கிராமத்திற்கு ஒரு வாய்க்கால் 1949-ம் ஆண்டு வெட்ட ஆரம்பித்து இப்போது வேலை நிறைவேறாமல் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்துவதன் காரணமாக உபயோகிப்போர் கூட்டுறவு சங்கங்களை 9 நகரங்களில் ஆரம்பிக்கப்போவதாகக் கூறப்பட்டிருக்கிறது. இந்தக் கூட்டுறவுச் சங்கத்தை 10,000 மக்கள் வசிக்கும் கிராமங்களுக்கும் விஸ்தரிக்க வேண்டுமென்று வேண்டுகிறேன்.

முக்கியமாக, கிராமத் தொண்டர்கள் படை ஒவ்வொரு கிராமத்திலும் ஏற்பட்டு இருக்கிறது. கிராமத் தொண்டர்கள் படை 3 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. உற்பத்திப் பிரிவு, விளக்கப் பிரிவு, கிராமப் பாதுகாப்புப் பிரிவு என்று பிரிக்கப்பட்டிருக்கிறது. கிராமத்திலுள்ள புறம்போக்கு நிலங்களில் காய்கறிகளைப் பயிரிடவும், மற்றும் உணவுப் பண்டங்களின் உற்பத்தியை அதிகரிக்கவும் வேண்டிய வசதிகளைச் செய்து கொடுப்பது விவசாயக் குழுவின் வேலை. அநேக இடங்களில் புறம்போக்கு நிலங்களில் உள்ள ஆக்கிரமிப்பு கிராம அதிகாரிகளால் தீர்க்கப்படாமல் இருக்கிறது. கிராம அதிகாரிகள் அந்த ஆக்கிரமிப்புகளை உடனடியாக அகற்றும் வகையில் அவர்களுக்கு ஒரு அவசரமான தாக்கீதைப் பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கிராமத் தொண்டர் படையிலுள்ளவர்களுக்குக் கௌரவம் அளிக்கும் வகையிலும், அவர்களை ஊக்குவிக்கும் வகையிலும், அவர்களுக்கு நல்ல உடை முதலியவைகளைக் கொடுத்து, அவர்களுக்குச் சில அதிகாரங்களைக் கொடுத்து அதற்கு வேண்டிய பயிற்சியையும் அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



2nd February 1963] [திரு. மு. ரா. கிருஷ்ணமூர்த்தி]

மற்றொன்று, முதியோர் பென்ஷன் திட்டம் சில கிராமங்களிலே சரியாக அமுல் நடத்தப்படவில்லை. அதற்குக் கொஞ்சம் செலவானாலும் நல்ல முறையில் எல்லாக் கிராமங்களிலும் அந்தத் திட்டத்தை அமுல் நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேமாதிரி, ஹரிஜனங்களுக்கு வீட்டு மனை அளிக்கும் விஷயத்திலும் பல ஆண்டுகளாக நடவடிக்கை எடுக்கப்படாமல் இருக்கக் கூடிய நிலைமை இருக்கிறது. பல கிராமங்களில் இம்மாதிரி நிலை இருக்கிறது. வீராணந்தபுரம், முட்டம் ஆகிய கிராமங்களில் இந்தப் பிரச்னையை துரிதமாக நல்ல முறையில் தீர்க்க வேண்டும்.

சில மாவட்டங்களில் காய்கறி உற்பத்தித் திட்டத்திற்காக தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது. தென்னாற்காடு மாவட்டத்திலும் அந்தத் திட்டத்தை ஏற்படுத்தி, அங்கும் நல்ல முறையில் காய்கறிகளைப் பயிரிடுவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகிறேன். வணக்கம்.

**திருமதி பி. கே. ஆர். லக்ஷ்மிகாந்தம்:** கனம் தலைவர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கும் துணை மதிப்பீட்டுக் கோரிக்கையை ஆதரித்துச் சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். இந்த நாட்டிலே சீன ஆக்கிரமிப்பு ஏற்பட்ட பிறகு, போலீஸ் படைகளைப் பெருக்குவதற்கும், ஆயுதங்களை அதிகமாக உற்பத்தி செய்வதற்கும், விசேஷ போலீஸ் படைகளை அபிவிருத்தி செய்வதற்கும் வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வதில் நாம் கவனம் செலுத்திக் கொண்டு வருகிறோம். அந்த முறையிலே துணை மதிப்பீட்டிலே போலீஸ் இலாகாவுக்காக அதிகமான தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது. அது நாம் அனைவரும் வரவேற்கவேண்டிய ஒரு அம்சமாகும். சென்ற முன்பு விசேஷ போலீஸ் படைகளை போலீஸ் காரியங்களைச் செய்வதற்கு அல்லாமல் மற்றும் சமூக வேலைகளைச் செய்வதிலும் ஈடுபடுத்தி வந்தோம். ஆனால் இப்பொழுது இருக்கும் சூழ்நிலைக்கு ஏற்ப, அதிகமான போலீஸ் படையை உண்டாக்குவதில் நம்முடைய கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. அந்த துறையில் செலவுக்காக ஒதுக்கப்பட்ட தொகையானது மிகவும் இன்றியமையாதது என்பதை நாம் அனைவரும் ஒப்புக்கொள்வோம். அதோடுகூட, சில

[திருமதி பி. கே. ஆர். லக்ஷ்மிகாந்தம்] [2nd February 1963

இனங்களில் செலவு அதிகமாக் ஆகியிருப்பதற்கும், துணை மதிப்பீட்டில் கணக்குகள் இருக்கின்றன. அதுவுமல்லாமல் புதிய பணிகளுக்காகத் துணை மதிப்பீட்டில் அதிகமான தொகைகள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. இவைகளை நாம் ஆதரிப்பதில் மிகவும் மகிழ்ச்சி அடைகிறோம்.

நாட்டின் பாதுகாப்பு என்று சொல்லும்போது, போலீஸ் படை, ஆயுதம் தாங்கிய படை அல்லது நேரிடையாகச் சென்று யுத்தம் செய்யக்கூடிய, எதிர்ப்பு செய்யக்கூடிய படைகள் மட்டும் இருந்தால் போதாது. உள் நாட்டில் குழப்பம் இல்லாமல், நாட்டில் எந்தவிதமான கலவரமும் இல்லாமல் இருக்க வேண்டும் என்று சொன்னால், நாட்டிலே இருக்கிற அமைதி பாதுகாக்கப்படவேண்டும். அதற்காக ஊர்காப்புப் படை, தொண்டர் படை, ஹோம் கார்டு படை இவைகளையெல்லாம் நாம் ஏற்படுத்துவதற்கு முக்கியமாகன செலவு இந்த மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இவ்வளவும் நமக்கு மிகவும் அத்தியாவசியம்தான்.

நெசவாளர்களுக்கு பிராவிடண்டு பண்டு தொகை சம்பந்தமாக ஏற்கனவே கொஞ்சம் பணம் ஒதுக்கப்பட்டிருந்தாலும், இந்தத் துணை மதிப்பீட்டிலே அதிகமான தொகை அதற்காக ஒதுக்கப்பட்டிருப்பதை நான் வரவேற்கிறேன். அதுவுமல்லாமல், நெசவாளர்களுக்குத் துணைக் கருவிகள் கொடுப்பதற்காகவும், மூலக் கருவிகள் கொடுப்பதற்காகவும் ஏற்கனவே ரூ. 8¼ லட்சம் ஒதுக்கப்பட்டிருந்தது. ஆனால் இன்னும் அவர்களுக்கு அதிகமான கருவிகள் கொடுக்கப்பட வேண்டுமென்பதற்காக கிட்டத்தட்ட ரூ. 11-½ லட்சம் செலவு செய்யப் போவதாக இதில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதற்காக சர்க்காருக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

கல்வித் துறையிலே பார்க்கும்பொழுது பல இடங்களிலே புதிய முறைகளெல்லாம் வகுக்கப்பட்டு, அதற்காகப் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. புது முறைத் திட்டங்களெல்லாம் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. உதாரணமாக, காந்தி கிராமத்தில் இந்தப் பயிற்சிக் கல்லூரியை இப்பொழுது புதியதாக துவக்கப் போகிறார்கள். அதற்காகத் துணை மதிப்பீட்டில் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதையும் நான் வரவேற்கிறேன்.

அதுமட்டுமல்லாமல் ரூ. 150-க்கு அதிகப்படியான சம்பளம் பெறும் அரசாங்கப் பணியாளர்களுக்கும், ஸ்தல ஸ்தாபனங்களிலுள்ள பணியாளர்களுக்கும், ஆசிரியர்களுக்கும், அகவிலைப் படி அதிகமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதற்காகத் துணை மதிப்பீட்டில் தொகை ஒதுக்கியிருப்பது வரவேற்கத்தக்கதாகும். மேலும், ஆஸ்பத்திரிகளிலே நர்சுகள், பார்மஸிஸ்டுகள் போன்றவர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காக அதிகமான தொகை ஒதுக்கப்பட்டு, அவர்களுக்குப் பயிற்சி அளிக்கக்கூடிய வாய்ப்புகளெல்லாம் செய்யப்பட்டிருப்பது மிகவும் வரவேற்கத்தக்கதாகும். யுத்த காலத்தில் அவர்களுக்கு அதிகப்படியான தேவை இருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. ஆகவே, அப்படிப்பட்ட பயிற்சிகள் கொடுப்ப



2nd February 1963] [திருமதி பி. கே. ஆர். லக்ஷ்மிகாந்தம்]

தானது மிகவும் நல்ல முறையில் இருக்கும் என்று நான் கருதுகிறேன். மேலும், விருதுநகர்—மானாமதுரை ரயில் பாதை போடுவதற்காக சர்வே வேலை, நில ஆர்ஜித வேலை இவைகளுக்காகப் பணம் ஒதுக்கப்பட்டு, போக்குவரத்துத் துறையிலே அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்குத் துரிதமாக வேலை செய்வதற்கு ஏற்பாடுகள் செய்திருப்பதாக நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கிறேன். இம்மாதிரி பொதுப்படையாகப் பார்க்கும்பொழுது துணை மதிப்பீட்டுக் கோரிக்கையானது மிகவும் அவசியமான கோரிக்கை என்பதை உணர்ந்து, நான் அதை மிகவும் நன்றியுடன் ஆதரித்து என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* **திருமதி சி. குழந்தையம்மாள்:** கனம் சட்ட மன்றத் தலைவர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கும் துணை மானியக் கோரிக்கையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். நமது மகாணத்திலே சிறப்பாக அமராவதியில் சைனிக் பள்ளி ஏற்படுத்துவதற்காக அனுமதிக்கப்பட்ட தொகை ரூ. 4,48,200. அதில் மாணவர்களுக்கு உபகாரச் சம்பளம் கொடுப்பதற்காக ஏற்பட்ட தொகை ரூ. 78,600. இந்த ஒரு சிறந்த ஏற்பாட்டிற்கு என்னுடைய நன்றியையும், வணக்கத்தையும் செலுத்துவதோடுகூட, ஒரு ஆலோசனையையும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அமராவதியில் ஏற்பட்டிருக்கும் சைனிக் பள்ளியில் ஒரு பரீட்சை நடத்துகிறார்கள். அந்தப் பரீட்சையில் வெற்றி பெற்றவர்களுக்கு செலக்ஷன் கிடைக்கிறது. அந்தப் பரீட்சையிலே யார் வெற்றி பெறுகிறார்கள் என்றால், நம்முடைய மாகாணத்தில் இருக்கும் இங்கிலீஷ் மீடியம் பள்ளிகளில் படிக்கக் கூடிய மாணவர்கள் தான். அதாவது தாய் மொழி தமிழ் அல்லாமல், தெலுங்கு, கன்னடம், குஜராத்தி போன்ற மொழிகளைத் தாய் மொழியாகக் கொண்ட மாணவர்கள் தான் அந்தப் பரீட்சையில் தேர்வு பெறுகிறார்கள். நாம் இந்த நிலையை இன்றைக்கு எண்ணிப் பார்க்கும் பொழுது, நாட்டில் இருப்பவர்கள் எல்லோரும் ஓரினம் என்று சொன்னாலும், தமிழைத் தாய் மொழியாகக் கொண்டவர்கள் அந்தத் தேர்தலிலே, வெற்றி பெறுவதற்கான சந்தர்ப்பம் 12 noon
இல்லாமல் இருக்கிறது. தமிழ் நாட்டிலே இருக்கக் கூடிய இந்தப் பள்ளியிலே, ஒரு சத விகிதத்தை நிர்ணயித்து தமிழ் நாட்டு மாணவர்கள் இவ்வளவு பேர் அந்தப் பள்ளியிலே படிக்க வேண்டும் என்ற ஒரு அடிப்படைக் கொள்கை இருக்க வேண்டும் என்று இந்தச் சபை முன்பு எனது கருத்தைச் சமர்ப்பிக்கிறேன். தேர்வுக் குழுவிலே பிரின்ஸிபால், டி.இ.ஓ. இருக்கலாம். ஆனால் இம்மாதிரி பல்வேறு இனத்தவருக்கும் பங்கு கிடைப்பதற்காகச் சட்ட மன்ற உறுப்பினர்களும், பாராளுமன்ற உறுப்பினர்களும் இதிலே அங்கம் வகிக்க வேண்டும் என்பதை ஞாபகப் படுத்த விரும்புகிறேன்.

என்னுடைய தொகுதியிலே கண்ணம்பாளையத்தில் 32 கதிர் நூற்பு நெசவு பையலட் ஸ்கீம் ஏற்பாடு செய்வதற்காக ரூ. 1,52,950 ஒதுக்கப்பட்டிருக்கிறது. துணை மானியக் கோரிக்கையிலே இன்

[திருமதி சி. குழந்தையம்மாள்] [2nd February 1963

திட்டம் இடம் பெற்றதைக் குறித்து எனது நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். பாரத நாடு முழுவதிலும் ஒரே ஒரு யூனிட்டுதான் பரீட்சார்த்தமாக நடத்தப்பட்டு வருகிறது. சென்ற 2, 3 மாதங்களாக ஸீஸன் இல்லாத சமயத்திலே கருங்கண்ணிப் பஞ்சை வாங்கி இந்த வேலையைச் செய்து இருக்கிறோம். இருந்தாலும், லாபகரமாக இருக்கிறது. எங்கள் வட்டாரத்தில் இருக்கிற மில் முதலாளிகள் இந்தத் திட்டம் வெற்றிகரமாக நடந்து மில்களிலே மோட்டா நூலை நெசவு செய்வதற்கு வாய்ப்பு இல்லாமல் போய்விடுமோ என்று நினைத்து அமைச்சரவையிடம் முறையிட்டு இருப்பதாகத் தெரிகிறது. ஸீஸன் இல்லாத காலத்திலே கூட இந்தக் கருங்கண்ணி பஞ்சை வாங்கி ஓரளவு லாபத்திலே நடத்திக்கொண்டு வந்திருக்கிறோம். அடுத்த ஆண்டு நல்ல லாபம் கிடைக்கும். 32 கதிர் நூற்பு நெசவு பைலட் திட்டத்தை மற்ற இடங்களுக்கும் விஸ்தரிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

கலெக்டர் ஆபீஸ், டெவின்யு டிவிஷனல் ஆபீஸ் இவைகள் நல்ல முறையில் ஒரே மாதிரியான அமைப்பில் இருப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்திருப்பது வரவேற்கத்தக்கது. இதற்காக இந்த உப-மான்யக் கோரிக்கையிலே பணம் ஒதுக்கி இருக்கிறார்கள். எங்களுடைய ஜில்லா கலெக்டர் அலுவகத்திலே இருக்கிற ஹரிஜன நல இலாகா அதிகாரிக்குப் போன் கனெக்ஷன் கிடையாது. அதே மாதிரி டெபுடி கூட்டுறவு ரெஜிஸ்டிராருக்கும் போன் கனெக்ஷன் கிடையாது. இன்று வளர்ந்து வரக்கூடிய சமுதாயத்திலே, ஜனத்தொகை பெருகிக் கொண்டு வருகிற நேரத்திலே பல வேலைகளைச் செய்ய வேண்டியிருக்கிற காரணத்தினால், இந்த அதிகாரிகள் இருக்கிறார்களா, இல்லையா என்று தெரிந்து கொள்ள வேண்டுமென்றால் நேரிலே போய்த்தான் பார்க்க வேண்டி இருக்கிறது. ஆகவே இந்த இரண்டு அதிகாரிகளுக்கும் போன் கனெக்ஷன் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

(கனம் சபாநாயகர் தலைமை)

அடுத்தபடியாக, கூட்டுறவுப் பால் வினியோகச் சங்கங்கள் பரவலான முறையிலே பல ஜில்லாக்களிலும் நடந்து வருவது பாராட்டத்தக்கது. ஆனால் அந்தப் பாலை வாங்கும்போது ஒரு லிட்டருக்கு 52 அல்லது 53 நயா பைஸா கொடுக்கிறார்கள். ஆனால் அதையே உபயோகப்படுத்துபவர்களுக்கு விற்கும்போது 75 அல்லது 78 நயா பைசாவாக விற்கிறார்கள். இப்படி ஒரு லிட்டருக்கு 25 நயா பைசா கூடுகிறது என்றால் இதிலே நிர்வாகச் செலவு தான் நிறைய ஆகிறது. இப்படி வித்தியாசம் இருக்குமேயானால், விவசாய மக்களும், ஏழைகளும் குறைந்த வருமானம் உள்ளவர்களும் பால் சாப்பிட வேண்டுமென்று நாம் நினைக்கும்போது இந்த முறையானது ரொம்பவும் நியாயமாய் இருக்கிறது என்று சொல்ல முடியாது. கூட்டுறவின் பெயரில் அங்கேயும் ஒரு முதலாளித்துவம் வளருவதற்காகவா நாம் இந்தக் கூட்டுறவு முறையை நமது நாட்டிலே பரப்புகிறோம்? ஏழை விவசாய மக்களுக்கு அதிக



2nd February 1963] [திருமதி சி. குழந்தையம்மாள்]

மாகப் பயன்பட வேண்டும் என்பதற்காகத் தான், ஆகவே இதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, கோவை செஞ்சிலுவைச் சங்கத்தார் யுத்த களத்திலே போரில் ஈடுபட்டிருக்கக்கூடிய வீரர்களுக்குக் கம்பளி உடைகள் தைத்து அனுப்ப வேண்டும் என்று விரும்புகிறார்கள். ஆனால் கோயம்புத்தூரிலும் சரி, மதராசிலும் சரி, 'உலன்' கிடைக்கவில்லை. டில்லியிலே கிடைக்கிறது என்று சொல்லுகிறார்கள். கோவையில் உள்ள மாதர்கள் தங்கள் ஓய்வு நேரத்திலே இந்த ஆடைகளைப் பின்னிக் கொடுப்பதற்காக வாக்குக் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே அவர்களுக்குப் போதிய அளவு 'உலன்' நூல் கிடைக்க வழிவகை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்து, ஹைவேஸிலே, பஸ் போனால் ரோடு போடுகிறோம் என்று சொல்லுகிறார்கள். ஆனால் அவ்வாறு பஸ் போவதற்கு ஹைவேஸ் டிவிஷனல் என்ஜினியரிடமிருந்து பிட்னஸ் சர்டிபிகேட் வாங்க வேண்டும் என்று சொல்லுகிறார்கள். இது ஒன்றுக்கொன்று முரணாக இருக்கிறது. ஆர்.டி.ஓ.-விடம் போய் பஸ் விட வேண்டும் என்று சொன்னால் டிவிஷனல் என்ஜினியரிடமிருந்து பிட்னஸ் சர்டிபிகேட் வாங்கி வர வேண்டும் என்று சொல்லுகிறார்கள். இதற்கு ஏதாவது ஒரு வழி செய்ய வேண்டும். நல்ல முறையில் இருக்கிற ரோடுகளில்தான் பஸ்கள் விட முடியும். போக்குவரத்திற்காக எவ்வளவோ பணத்தை செலவு செய்திருக்கிறோம். என்று சொன்னால் கிராமப் புறங்களிலே பஸ் வசதி ஏற்படாது என்று சொல்லிக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

*திரு. பி. முருகையன்: மதிப்பிற்குரிய சட்டமன்றத் தலைவர் அவர்களே, நிதி அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்த துணை மான்யக் கோரிக்கையின் மீது பேசுவதற்கு எனக்கு வாய்ப்பு தந்தமைக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இப்பொழுது நாட்டிலே ஏற்பட்டிருக்கக் கூடிய இந்த நெருக்கடி நேரத்தில் இந்தத் துணை மான்யக் கோரிக்கையை வரவேற்க முடியாத நிலையிலே இருக்கிறேன். சைனிக் பள்ளியை இந்த மாநிலத்திலே ஓர் இடத்தில் அமைத்திருப்பதாக கனம் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இந்த சைனிக் பள்ளிகளை மாவட்டங்கள்தோறும் வைப்பது சாத்தியமில்லாமல் போனாலும், இரண்டு மூன்று மாவட்டங்களை ஒன்றாக இணைத்து ஒரு சைனிக் பள்ளியை அமைத்துக் கொடுத்தால் நலமாய் இருக்குமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, உணவு உற்பத்தி பெருகினால்தான் நாட்டிலே எந்த விதமான இக்கட்டான நிலைமையையும் சமாளிக்க முடியும் என்று கருதி சில தீர்ப்பாசனத் திட்டங்களை இந்தத் துணை

[திரு. பி. முருகையன்] [2nd February 1963

மானியக் கோரிக்கையிலே கொடுத்திருக்கிறார்கள். சிறு சிறு நீர்ப்பாசனத் திட்டங்களுக்கு எல்லாம் தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று கூறுகிற நேரத்திலே, மதுரை மாவட்டத்திலும் மற்றும் சில பகுதிகளிலேயும் நிறைவேற்றப் போகும் சில திட்டங்களைச் சேர்த்திருக்கிறார்கள். வேறு சில நீர்ப்பாசனத் திட்டங்களைக் குறிப்பிடாதது பற்றி வருத்தப்பட வேண்டியிருக்கிறது. அடுத்த பட்ஜெட் அறிக்கையிலாவது அவைகளைச் சேர்ப்பார்கள் என்று நினைக்கிறேன்.

ஆசிரியர்களுக்கும், ஸ்தல ஸ்தாபனங்களில் வேலை செய்கின்றவர்களுக்கும் பஞ்சப் படியை உயர்த்தியிருப்பதாக அவர்கள் சார்பிலே அமைச்சர் அவைக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். முதியோருக்காகக் கொடுக்கப்படுகின்ற உதவித் தொகையைப் பொறுத்த வரையில் மதிப்பீட்டுத் தொகைக்கு அதிகமாகச் செலவிடப்பட்டிருப்பதை வரவேற்கிறேன். மேலும் அதிகமான முதியோர்களுக்குப் பென்ஷன் கிடைக்கும்வகையில், தக்க அதிகாரிகளை நியமித்து ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். இந்த மன்றத்திலே பேசிய உறுப்பினர்கள் எல்லோருமே இந்த முதியோர் பென்ஷன் கொடுக்கும் விஷயத்திலே இருக்கும் குறைபாடுகளைப் பற்றிச் சொன்னார்கள். இப்பொழுது ஓட்டர் லிஸ்டில் குறிப்பிட்டிருக்கும் வயதின் அடிப்படையிலே முதியோர்களுக்குப் பென்ஷன் கொடுக்கப்படுகிறது. ஓட்டர் லிஸ்டில் கொடுக்கப்பட்டிருக்கும் வயதிற்கும், உண்மையான வயதிற்கும் சில வேறுபாடுகள் இருக்கின்றன. இதன் காரணமாக அதிகப்படியான முதியோர்களுக்குப் பென்ஷன் தொகை கொடுப்பது மறுக்கப்பட்டிருக்கிறது. இதை அரசாங்கம் பரிசீலனை செய்து, தக்க ஏற்பாடுகள் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அதே நேரத்தில் தென்னார்காடு மாவட்டத்திலே நிலக்கடலை உற்பத்தித் திட்டம் ஒன்றுக்கு அரசாங்கம் தொகை ஒதுக்கியிருக்கிறது. அதுபோன்ற திருச்சி மாவட்டத்திலுள்ள புதுக்கோட்டை பகுதியிலும், தஞ்சை மாவட்டத்திலுள்ள பட்டுக்கோட்டை, ஓரத்த நாடு தாலுக்காக்களிலும் நிலக்கடலை சாகுபடி அதிகமாகச் செய்கிறார்கள். இதுபோன்று சர்க்கார் அவர்களுக்கும் உதவி செய்ய முன் வருவார்களேயானால் மிகவும் நலமாய் இருக்குமென்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மருத்துவத் துறையில் தரம் கெடாத வகையிலே, மருத்துவர்களுடைய அந்தஸ்து குறையாத வகையிலே அளித்து இந்திய நாட்டின் வீரர்களின் நிலைமையை உத்தேசித்து அவர்களுக்குத் தக்க முறையில் பயிற்சி கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

* திரு. ஏ. எஸ். தட்சிணாமூர்த்தி கவுண்டர்: கனம் சட்ட மன்றத் தலைவர் அவர்களே, இப்பொழுது நிதி அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்ட துணை மானியக் கோரிக்கையை வரவேற்று நான் சில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.



2nd February 1963] [திரு. ஏ. எஸ். தட்சிணாமூர்த்தி கவுண்டர்]

நம்முடைய நாட்டிலே பழங்காலந்தொட்டு, படை அல்லது ராணுவம் என்பது ஒரு தனியான அமைப்பாகவே இருந்திருக்கிறது. அதைவிட முக்கியமாக, பொதுமக்களிடத்திலே பரவலான முறையில் போர்ப் பயிற்சி என்பது நம்முடைய நீண்டகாலத் தமிழ்நாட்டுப் பண்பாக அமைந்திருக்கின்றது. அதைக் குறித்துத் தான்,

"ஈன்றுபுறந் தருதலென் றலைக் கடனே
சான்றோ னாக்குதல் தந்தைக்குக் கடனே
வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே
நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே
ஒளிறுவா ளருஞ்சம முருக்கிக்
களிறெறிந்து பெயர்த்தல் காளைக்குக் கடனே".

என்று புறநானூற்றில் கூறப்பட்டிருக்கிறது. அந்த ஒரு நிலையானது தமிழ் மக்களிடத்திலே அந்தக் காலத்தில் இருந்த பொதுவான போர்ப் பயிற்சி முறையைக் குறிப்பிடுவதாக அமைந்திருக்கிறது. நம்முடைய நாடானது அன்னிய ஆட்சியின்கீழ் பல்லாண்டுக் காலம் இருந்ததினாலே இந்தப் பண்பாடு மறைந்து போயிற்று; அல்லது ஒடுக்கப்பட்டுவிட்டது. அதை ஏதோ காரணத்தினால் சுதந்திரம் பெற்ற பின்புங்கூட இதுவரையில் கொஞ்சம் மறந்தே இருந்து விட்டோம் என்றுதான் சொல்ல வேண்டியிருக்கிறது. போர்ப்பயிற்சி அளிக்கும் பண்பாட்டை சீன தேசம் கையாண்டதால்தான் இந்தப் பெரிய நாட்டைப் படையெடுத்து வருகிற ஒரு அளவுக்கு அது சக்தி பெற்றது என்றால் அது மிகையல்ல. நேற்று பேசிய கனம் எதிர்க் கட்சித் தலைவர் திரு. நெடுஞ்செழியன் அவர்கள் 'சீன தேசத்தில் மக்கள் படையானது மிகப் பெருவாரியாக அமைந்திருக்கிறது' என்று குறிப்பிட்டார்கள். அந்த மக்கள் படை என்பதுதான் நம்முடைய நாட்டில் முன்பு இருந்த பண்பாடாகும். அந்த நிலையை எய்துவதற்கு நமது கல்வி அமைச்சரும் நிதி அமைச்சருமாக இருப்பவர்கள், மாணவர்களுக்குப் போர்ப் பயிற்சி முறையைக் கொண்டுவந்திருப்பதை நாம் மிகவும் பாராட்டக் கடமைப்பட்டு இருக்கிறோம். நெருக்கடியான இந்தக் காலத்தைச் சமாளிப்பதற்கும், வருங்காலத்தில் பலம் வாய்ந்த ஒரு சமுதாயத்தை ஏற்படுத்துவதற்கும் இது அடிகோலும் என்று நான் நினைக்கிறேன். ஆகையால், இதைப் பெருங் களிப்புடன் நான் வரவேற்கிறேன். பொதுவாகவே, நம்முடைய நாட்டில் இருக்கின்ற ஒரு குழப்பமான கல்வி முறையைச் சீர்திருத்துவதற்கு ஒரு அருமையான திட்டத்தைக் கொண்டுவருகிற நமது கல்வி அமைச்சர் அவர்கள் மாணவர்களுக்குப் போர்ப் பயிற்சி முறையையும் கொண்டுவர இருப்பது அத்திட்டத்திற்கு ஒரு சிகரம் வைப்பதாக அமைந்திருக்கிறது என்று நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

[திரு. ஏ. எஸ். தட்சிணுமூர்த்தி கவுண்டர்] [2nd February 1963

பெண்களைப் பொறுத்த வரையில் கொஞ்சம் மாறுபட்டுள்ள ஒரு கருத்தை நான் கொண்டிருக்கிறேன். அதாவது, நேரடியான ராணுவப் பயிற்சி பெண்களுக்குத் தேவையா என்பதில் எனக்குக் கொஞ்சம் கருத்து வேறுபாடு இருக்கிறது.

**கனம் சபாநாயகர்:** கனம் உறுப்பினருக்குப் பயமாக இருக்கிறதா?

**திரு. ஏ. எஸ். தட்சிணுமூர்த்தி கவுண்டர்:** ஒரு அச்சத்தினுலே தான் நான் அதைக் கிளப்பினேன். என்னதான் இருந்தாலும், இயற்கையாக பெண்மை, ஆண்மை என்பது தனித்தனியான ஒரு பான்மை என்பதை யாரும் மறுக்க முடியாது. பெண்களுக்குத் தேசிய உணர்ச்சி வேண்டும், அது எப்போதுமே இருந்தது என்பதையும் யாரும் மறுக்க முடியாது. ஆனுலுங்கூட, அவர்களுக்கு இருக்கும் தேசியப் பற்றை இராணுவத்தில் போய்த் தான் காட்டிக் கொள்ளவேண்டும் என்ற நிலையை நான் வெறுக்கிறேன். காரணம் என்னவென்றுல், அவர்கள் அந்த நிலைமைக்குப் போவதனுல் பெண்மை என்கிற ஒரு பாங்கே அழிந்துவிடும் என்று நான் கொஞ்சம் அச்சப்படுகிறேன்.

அதற்கு மேலே, பெண்கள் இராணுவப் பயிற்சி பெற்று, போர்க் களத்திற்குச் சென்று விட்டால் குடித்தனம் என்ன ஆகிறது என்றுதான் எனக்குப் புரியவில்லை. (சிரிப்பு). அதை ஆண்கள் பார்த்துக்கொள்ளலாமென்றுல், குழந்தை வளர்ப்பது யார்? (மீண்டும் சிரிப்பு). பெண்களுக்குப் பதிலாக ஆண்கள் தாலாட்டுப் பாடினுல் குழந்தைகள் தூங்காது; நிச்சயமாக அழும். (மீண்டும் சிரிப்பு). தாய்மை உணர்ச்சி, தாய்மைப் பான்மை என்பது இயற்கையில் அமைந்த ஒரு விதி. ஆண்களுக்கும் அப்படித்தான். அந்த விதியை யாராலும் தடுக்க முடியாது. இதுவரையில் தடைப்படவும் இல்லை என்று நான் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். ஆகையால், தேசிய உணர்வோ, தேசியப் பற்ருே, வீர உணர்ச்சியோ தாய்மார்களுக்கு பெண்களுக்கு வேண்டாமென்று நான் சொல்லவில்லை. அது நிறைய இருந்தால்தான் வருங்கால சந்ததி அந்தப் போருணர்வு பெற்று, புதிய சமுதாயத்தை உருவாக்குவதற்கு ஆக்கம் அளிக்கும் என்பதை நான் ஏற்றுக் கொள்ளுகிறேன். இருந்தாலுங்கூட, பெண்கள் நேரடியான இராணுவப் பயிற்சி பெறுவதையும், யுத்த களத்திற்குச் செல்வதையும் நான் வெறுக்கிறேன்.

நம் தமிழ்நாட்டிலிருந்து, போலீஸ் இலாகாவிலுள்ள ஒரு சிறிய பகுதியை இமய மலைச் சாரலுக்கு அனுப்பியதாக நான் அறிக்கையில் பார்த்தேன். அதைப் பார்த்து நான் மிக மிகப் பெருமைப்படுகின்றேன். அதனை ஈடு செய்வதற்காகவும் வருங் காலத்தில் ஒரு குழப்பமான சூழ்நிலையில் நம்முடைய நாட்டை வைக்காமல் இருப்பதன் நிமித்தமாகவும் போலீஸ் இலாகாவை விரிவபடுத்துவது என்ற நிலைமையையும் நான் அறிக்கையில் கண்டேன். அதி மிக மிக இன்றியமையாத ஒரு அம்சமாகும்.



2nd February 1963] [திரு. ஏ. எஸ். தட்சிணுமூர்த்தி கவுண்டர்]

அதை விரிவுபடுத்துவதோடு மட்டுமல்லாமல் திறம்படைத்ததாகவும் ஆக்கவேண்டுமென்று நான் சர்க்காரைக் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

அதற்கு மேலே, அவர்களுக்காக ஒதுக்கும் மான்யத்தை முடிந்த வரையில் உயர்த்திக் கொடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன். ஒவ்வொரு போலீஸ் ஸ்டேஷனிலும் சர்க்காராலேயே வாங்கிவைக்கப்பட்டிருக்கக் கூடிய சைகிள்கள் நிறைய இருக்கவேண்டும். சப்-இன்ஸ்பெக்டருக்குக் குறைந்த பட்சமாக ஒரு மோட்டார் சைகிள் சர்க்கார் சார்பில் கொடுக்கப்படவேண்டும் என்று சென்ற ஆண்டிலேயே நான் கேட்டுக் கொண்டேன். இயலுமானுல் செய்யலாம். போலீஸ் அவுட் போஸ்டிலும், போலீஸ் ஸ்டேஷனிலும் சமயத்திற்கு சைகிள் கிடைப்பது இல்லை. ஆகவே, போலீஸ் ஸ்டேஷனில் சைக்கிள் வசதி சர்க்காரால் செய்து கொடுக்கப்பட வேண்டும் என்று நான் வற்புறுத்திக் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

பொதுவாக, இந்த உப-மான்யக் கோரிக்கையானது நம்முடைய நாட்டின் நிலைமைக்கேற்ப அமைக்கப்பட்டிருக்கின்றமையால், நான் கனம் நிதி அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய தொகுதி மக்கள் சார்பாகவும் நாட்டு மக்கள் சார்பாகவும் நல் வாழ்த்துக் கூறி, உப மான்யக் கோரிக்கையை வரவேற்று என்னுடைய உரையை இத்துடன் முடித்துக் கொள்ளுகின்றேன். வணக்கம்.

* **திருமதி ராஜாத்தி குஞ்சிதபாதம்:** கனம் தலைவர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற துணை மதிப்பீட்டு அறிக்கையை ஆதரித்து நான் ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். முக்கியமாக நான் இந்த அறிக்கையின் மீது ஒரு சில வார்த்தைகள் சொல்ல வேண்டுமென்று நினைத்ததற்குக் காரணம், அடுத்த நாட்டார் நம் நாட்டின் மீது படையெடுத்து இருக்கின்ற இந்த நெருக்கடியான நிலைமையில், இந்த நெருக்கடியைச் சமாளிப்பதற்குப் பல விதமான முறைகளை நாம் கையாளும்போது, இந்த நாட்டின் பெண்களும் தேசப் பற்றில் எந்த வகையிலும் ஆண்களைவிட குறைந்தவர்கள் அல்ல. எனக்கு முன் பேசிய கனம் அங்கத்தினர் ஒருவர் குறிப்பிட்டது போல, பெண்களுக்கும் அதில் ஒரு நல்ல பங்கு கொடுக்க வேண்டும் என்பதைத்தான் நான் கூறிக்கொள்ள விரும்பினேன்.

முக்கியமாக, போலீஸ் மான்யத்தைப்பற்றிச் சொல்லியிருக்கும் போது, 54 லட்சம் ரூபாய்க்கு மேலாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்ற குறிப்பு காணப்படுகிறது. அதை ஆதரிக்கின்றேன். மேலும், இன்னும் அதிகமாகச் செலவு ஏற்பட்டாலுங்கூட, அதைச் செலவழிப்பதற்கு அமைச்சர் அவர்கள் தயங்கக்கூடிய நிலைமையில் இருக்க முடியாது என்பதை நாம் இந்தச் சந்தர்ப்பத்தில் உணர்ந்திருக்கிறோம்.

போலீசில் பெண்களை அதிகமாகச் சேர்ப்பது பற்றி, அவர்கள் போலீஸ் இலாகாவில் எந்தெந்த துறையில் பணியாற்றக்கூடும் என்பதைப்பற்றி சென்ற ஆண்டுகளில் இந்த மன்றத்தில் நான்

குறிப்பிட்டிருக்கிறேன். ஆனால் பெண்களை போலீஸ் இலாகாவில் சேர்த்துக்கொள்வது என்றால் போதுமான மெஷர்மெண்டுகள் இருப்பதில்லை. உயரம், வெயிட் போதுமான அளவுள்ள பெண்கள் கிடைப்பதில்லை, என்று சொல்லப்பட்டது. அதன் காரணமாகத் தான் அவர்கள் சேர்க்கப்படவில்லை என்றார்கள். ஆனால் இப்போது ஏற்பட்டிருக்கும் நெருக்கடியை போன்ற சமயங்களில் ஊர் நிர்வாகத்தைக் கவனித்துக் கொள்வதற்குரிய சந்தர்ப்பம் அவர்களுக்குக் கொடுத்தால் அப்பணியை அவர்கள் சிறப்பாகச் செய்ய முடியும். பெண்களைக் கட்டாய ராணுவ சேவையில் சேர்ப்பதை எனக்கு முன்னே பேசிய அங்கத்தினர் குறிப்பிட்டது போல நானும் ஆதரிக்கவில்லை. அவர்கள் அப்பணிக்கு லாயக்கில்லை என்ற காரணத்தினால் அல்ல. அவர்களுக்குத் தேசியப் பற்று இருக்காது என்பதனாலும் அல்ல. ஆண்களைவிட அவர்கள் தேச பக்தியில், உணர்ச்சியில் சளைத்தவர்கள் அல்ல. ஆனாலும் எனக்கு முன் பேசிய கனம் அங்கத்தினர் குறிப்பிட்டதுபோல அவர்களுக்கு ஆண்களை விட ஒரு பெரும் கடமை இருக்கிறது. உடல் இயற்கையே அவர்களுக்கு அத்தகைய ஒரு நிலையை உண்டாக்கியிருக்கிறது. குடும்பத்தை ரட்சிக்க வேண்டிய பெரும்பொறுப்பு உடையவர்கள், பெண்கள் என்பதையும் ஒப்புக்கொள்கிறேன். குழந்தைகளைப் பெற்றெடுத்துக் காக்கின்ற பொறுப்பை ஆண்டவன் அவர்களிடம் தான் கொடுத்து வைத்திருக்கிறான். ஆகவே தான் கட்டாய ராணுவ சேவைக்கு அவர்களை அனுப்ப வேண்டுமென்று சொல்லவில்லை. குழந்தைக்குத் தாயாகி குழந்தையைக் காப்பாற்றுகின்ற தாய்மார்கள், ஊருக்குத் தாயாகி ஊரைக் காக்கின்ற படைகளில் சேர்ந்து சிறந்த பணியாற்ற சந்தர்ப்பம் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் பெண்களுக்கு என்று அதிகமாகப் பாலிடெக்னிக் ஏற்படுத்த வேண்டுமென்று கோரியிருக்கிறோம். இன்னும் டெலிபோன், டெலிகிராபி போன்ற இத் துறைகளில் எலோம் பெண்களுக்குப் போதுமான பயிற்சி அளிக்கப்பட்டால் ஊர் நிர்வாகத்தைக் காப்பாற்றிக்கொள்வதற்கு அவர்களுக்கு ஒரு சந்தர்ப்பம் இருக்கும். இன்னும் பஸ் டிரான்ஸ்போர்ட் இலாகாவில் பெண்களை அதிகம் சேர்க்கலாம் என்று சொன்னோம். முன்பு கண்டெக்டராக சிலர் சேர்க்கப்பட்டார்கள். நடைமுறையில் சில சங்கடங்கள் ஏற்பட்டதனால் இப்போது அவ்வாறு நியமிக்கப்படுவதில்லை என்றார்கள். நான் ஒரு யோசனை சொல்ல விரும்புகிறேன். டிரைவர்களாகப் பெண்களை நியமிக்கலாம். கண்டெக்டர்கள் என்றால் பிரயாணிகளிடம் பணம் வாங்கவேண்டும், சில்லறை கொடுக்கவேண்டும், ஓரிடத்தில் நிற்க முடியாது. அங்கும் இங்கும் போகவேண்டி இருப்பதனால் சங்கடங்கள் ஏற்படலாம், ஆனால் டிரைவர்களாக பெண்களைப் பயிற்சி கொடுத்து நியமித்தால் அவர்கள் உட்கார்ந்த இடத்தில் இருந்து பஸ்களை நன்றாக ஓட்டுவார்கள். இதில் ஒன்றும் சங்கடம் இராது. ஆகவே டிரைவர் வேலையில் பெண்களை நியமிக்கலாம் என்பது என்னுடைய அபிப்பிராயம். தனியார் துறையில் பெண்களுக்கு டிரைவிங் சொல்லித் தரக்கூடிய பள்ளி ஒன்று திருநெல்வேலியில் இருக்கிறது. பெண்



களுக்குக் கொஞ்சம் சலுகையும் கொடுக்கிறார்கள். அதுபோல பெண்களுக்கு டிரைவிங் சொல்லித் தர ஆங்காங்கே பள்ளி வசதிகளையும் ஏற்படுத்தலாம் என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக இப்போது முதியோர் பென்ஷன் திட்டத்தை இந்தச் சர்க்கார் கொண்டு வந்திருக்கிறது. இதனால் 25 லட்சம் செலவாகிறது, 35 லட்சம் செலவாகிறது என்றால் இது மிகமிகக் குறைவு. இத்திட்டத்தை நல்லமுறையில் செயல்படுத்த 125 லட்சம் தேவைப்படும், இந்த ஆண்டு 40 லட்சம் தேவைப்படும் என்று குறிப்பிட்டிருப்பது என் போன்றவர்களுக்குப் புரியவில்லை. எத்தனை லட்சமானாலும் பாவாயில்லை. "என்னைக் காக்க பிள்ளையில்லையே, சுற்றத்தினர் இல்லையே" என்று வாடி வதங்கிய முதியோர்கள் எல்லாம் இன்றைக்கு "என்னைக் காகக்க ஒரு பிள்ளை இருக்கிறான். பாட்டாளி மகன், காமராச் இருக்கும் வரையில் எனக்கு கவலையில்லை. ஐந்தாம் தேதிக்குள் விடு தேடிக்கொண்டு மணியாடர் கொண்டுவந்து கொடுக்கும்படியாக செய்து என் போன்றவர்களை எல்லாம் வாழவைக்கும் மகன் இருக்கிறான்" என்றார்கள். ஆகவே 126 லட்சத்திற்கு மேல் செலவழித்தாலும் பாவாயில்லை. இத்திட்டத்தை உடனடியாக விஸ்தரிக்க வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

அதேமாதிரி கூட்டுறவு சொஸைடிகள் அங்கங்கே வைக்கப்படுகிறது. ஆனால் திருநெல்வேலியில் இல்லை. திருநெல்வேலி என்று எடுத்துக் கொண்டால் திருநெல்வேலி, மேலப்பாளையம், பாளையங்கோட்டை ஆகிய இடங்களில் 2-½ லட்சத்திற்குமேல், ஜனங்கள் இருப்பார்கள். இந்த மாவட்டத்தில் அவசியம் கூட்டுறவு பண்டகசாலையை ஏற்படுத்துவது அவசியமாகும். ரிஜிஸ்ட்ரார் வந்திருந்தபோது கூட இதைப்பற்றி அவரிடம் சொன்னேன். கவனிப்பதாகக் குறிப்பிட்டார்கள். அதையும் கவனித்து ஆவன செய்யுமாறு கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. ஜி. இ. சின்னதுரை: கனம் சட்டசபைத் தலைவர் அவர்களே, நிதி அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கக்கூடிய 62-63-ஆம் ஆண்டு துணை மான்யக் கோரிக்கையின் மீது சில வார்த்தைகள் கூற முன்வந்துள்ளேன். நாட்டில் ஏற்பட்டுள்ள இந்த நெருக்கடியை நல்லமுறையில் தீர்ப்பதற்குள் பலப் புதுப் பிரச்சனைகள் தோன்றுகின்றன. இவற்றைத் தீர்ப்பதற்குக் கூடுதல் நிதி தேவைப்படுகிறது. அதோடு நாட்டிலே அமைதியையும், ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் நிலைநாட்டுவதற்குப் போலீஸ் துறையில் கொஞ்சம் அதிகப் பணம் செலவிட்டாக வேண்டியிருக்கிறது. போலீஸ் படைக்குத் துணையாக ஊர்க்காவல் படையையும் திரட்ட வேண்டியதாக இருக்கிறது. ஆகவே இந்தச் செலவினங்களுக்கு எல்லாம் நிதி ஒதுக்குவது அவசியமாகிறது. இந்த நாட்டில் கள்ளத்தனமாக மதுவைக் காய்ச்சுவதும், குடிப்பதும், விற்பனை செய்து வருவதும் தடுக்கப்பட்டாக

வேண்டும். இல்லையென்றால் அமைதி ஏற்படுவது கஷ்டமாக இருக்கும். ஆகவே தீவிரமாக மதுவிலக்குச் சட்டத்தை அமுலாக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதோடு இன்னும் அதிகமாகப் போலீஸ் படையையும், ஊர்காவல் படையையும் ஏற்படுத்தி இந்தக் குற்றங்களைக் கண்டுபிடித்துத் தக்க தண்டனை அளிக்க வேண்டுமென்பதாகக் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் இந்த நெருக்கடியான நேரத்தில் மக்களிடையே பீதியை உண்டாக்கக்கூடிய வகையில் சிலர் மக்களிடையே தப்பான பிரசாரம் செய்து வருகிறார்கள். எனக்கு முன்னால் பேசிய கனம் சகோதரி அங்கத்தினர் பேசியது போல சீனாக்காரன் வந்தால் நமக்கு அதிகப்படியான நன்மைகள் ஏற்படும் என்று சொல்லக் கூடியவர்கள் நாட்டில் இருக்கிறார்கள். இம்மாதிரி மக்களிடையே பீதியை உண்டாக்கக்கூடிய வகையில் பிரசாரம் செய்கின்றவர்களை நாம் கண்டு பிடித்துத் தக்க தண்டனை கொடுக்க வேண்டும். அதோடு நாட்டில் இருக்கக்கூடிய நிலைமை மெய்யுற்றி அவ்வப்போது மக்களுக்கு எடுத்துச் சொல்வதோடு மக்கள் இந்த நெருக்கடியான நிலைமையில் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்றும் பிரசாரம் செய்யவேண்டும். இது மிகமிக அவசியமாகும்.

ஓல்ட் ஏஜ் பென்ஷனைப் பற்றிப் பலர் குறிப்பிட்டிருக்கிறார்கள். வயதானவர்களுக்கு ஒரு வரபிரசாதமாக இந்தத் திட்டம் வந்திருக்கிறது. இதில் சில குறைபாடுகள் இருக்கின்றன இந்த உதவித் தொகை சரியான முறையில் கொடுக்கப்பட ஆவன செய்ய வேண்டும். உண்மையிலேயே இந்த உதவித் தொகை தேவைப் படுகின்றவர்களுக்கு இது கிடைக்கும்படியாகச் செய்யவேண்டும். இன்னும் நகரசபைகளில் வேலை செய்கின்றவர்களுக்கு பென்ஷன் திட்டம் இல்லாத நிலைமையில் இருக்கிறது. பென்ஷன் திட்டத்தை நகரசபை உத்தியோகஸ்தர்களுக்கும் கூட அமுலாக்கவேண்டு மென்று இந்த இடத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன். நெசவாளர்களுக்குப் பிராவிடெண்ட் பண்டு திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். அதன்மூலம் நெசவாளர்கள் அத்தனைபேரும் பயன் அடைவதில்லை. ஒருசில கூட்டுறவு சங்க அங்கத்தினர்கள் மட்டும்தான் பயன் அடைகிறார்கள். எனவே இந்த பிராவிடெண்ட் பண்டு திட்டத்தை எல்லாக் கூட்டுறவு சங்கங்களுக்கும் விஸ்தரித்து, எல்லா நெசவாளர்களுக்கும் பயன் கிடைக்கும் படியாகச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

12-30 p.m. *திரு. சா. கணேசன்: கனம் சபாநாயகர் அவர்களே, இப்பொழுது நம் சபையின் முன் வந்திருக்கிற உபரி மானியக் கோரிக்கைகள் சுமார் 14 கோடி. மொத்த பட்ஜெட்டுக்குப் பிறகு 14 கோடிக்கு உபரி மானியம் கேட்டு வருவது கொஞ்சம் அதிகம் என்பதை நான் சொன்னால் யாரும் மறுக்க மாட்டார்கள் என்றே கருதுகிறேன். அதிலும் நெருக்கடி காலம் என்று கருதி



ஒப்புக் கொள்ளுகிற இந்த நேரத்திலே ஓரளவு சிக்கனத்தையும் நாம் கைக்கொள்ள வேண்டும். எதை எதை செய்ய வேண்டியது அவசியமோ அவற்றுக்காகச் செலவு செய்வதைப் பற்றி நான் குறை சொல்லவில்லை. தேசத்தைக் காப்பதற்காக தேச மக்களின் நலன்களைப் பரப்புவதற்காக நிச்சயமாக செய்ய வேண்டியவற்றை யெல்லாம் செய்துதான் தீர வேண்டும். அதே நேரத்திலே இந்த நெருக்கடி காலத்தில் எந்த எந்த இனங்களிலே சிக்கனங்களைக் கையாள வேண்டும்; கையாள முடியும், என்பதைப் பற்றியும் நாம் நன்றாகச் சிந்திக்க வேண்டும். அப்படிச் சிந்தித்துப் பார்க்கின்றபோது பல தேவையில்லையென்று பலராலே கருதக்கூடியவை எல்லாம் இந்தக் கோரிக்கைகளுக்குள்ளே வருவதை நாம் காணுகிறோம். இப்போதே அரசாங்கத்தின் பல்வேறு இலாகாகளுக்கு ஏராளமான ஜீப்புகளும், கார்களும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இப்போது வேலைகள் துரிதமாக நடைபெறவில்லை என்று எண்ணி இன்னும் துரிதமாக நடைபெறுவதற்காக இந்த ஜீப்புகள் மேலும் வழங்கப்படக் கூடும் என்பது புலப்படுகிறது. ஒன்றை நாம் நன்றாகச் சிந்திக்க வேண்டும். இந்த மாதிரி ஏராளமான ஜீப்புகளை யெல்லாம் வழங்கிய பிறகு வேலைகள் துரிதமாக நடந்திருக்கின்றனவா என்பதைக் கவனிக்க வேண்டும். என்னுடைய அனுபவத்தைக் கொண்டு நான் அறிந்த வரையில் வேலை துரிதமாக நடைபெறவில்லை என்றுதான் நான் தெளிவாக நம்புகிறேன் அந்தந்த இலாகாக்களிலே வேலை பார்க்கிறவர்களுக்கு அலவன்ஸ் என்று எவ்வளவு வேண்டுமானாலும் கொடுங்கள். ஆனால் சர்க்காருக்குச் சொந்தமான கார், ஜீப்களைக் கொடுத்தால் அரசாங்கத்துக்கு அதிகமான நஷ்டம் ஏற்படுகிறது. நம்முடைய சொந்தக் காரிலே பழுது ஏற்பட்டால் அதைப் பழுது பார்ப்பதற்காக ஐந்து ரூபாய் கொடுத்தால், அதே கார் அரசாங்கத்துக்குச் சொந்தமானது என்றால் 50 ரூபாய் என்று பில் போடுகிறார்கள். இதனை நான் கண்ணாலேயே கண்டிருக்கிறேன். சர்க்கார் வேலை என்று சொன்னால் சீக்கிரம் பணம் வராது, ஒரு மாதம் இரண்டு மாத காலம் ஆகும் என்று சொல்லி அதிகப் பணத்திற்குப் பில் அனுப்புகிறார்கள். அரசாங்கத்திலே பல்வேறு நெறிமுறைகள் இருப்பதாலே பணத்தைப் பெற ஓரிரண்டு மாதங்கள் ஆகலாம். அதற்காகப் பத்து மடங்கு அதிகமாக, ஐந்து ரூபாய்க்கு ஐம்பது ரூபாய் என்ற வகையில் பில் போடுவது நியாயம், நெறி அல்லது சரி என்று ஏற்றுக் கொள்ளுவதற்கில்லை. ஆதலாலே நாம் இது பற்றி எண்ணுகிற ஒன்றிரண்டு கருத்துக்களைக் குறிப்பிடுகிறேன்.

மந்திரிமார்கள் உட்பட இப்போது பலருக்குக் கவர்ன்மெண்ட் கார் கொடுக்கப்படுகிறது. அதை வேண்டாமென்று சொல்கிற தெம்பு எண்ணத்தில் நான் இல்லை. அவர்களுக்குக் கார் வேண்டும், நான் மறுக்கவில்லை. இப்போது அவர்களுக்குக் கொடுக்கப்பட்டு வருகிற கார் அலவன்சை இரட்டிப்பாக ஆக்குங்கள். அவர்கள் சொந்தத்திலே கார் வைத்துக் கொள்ளட்டும். எல்லோராலும் கார் வாங்க முடியும் என்று நான் சொல்லவில்லை. அப்படி முடியாதவர்களுக்குக் கார் வாங்க வேண்டியதற்கான தொகையை வட்டி இல்லாக் கடனாக வேண்டு

[திரு. சா. கணேசன்] [2nd February 1963

மாளுலும் கொடுங்கள். அப்போது இந்த மாதிரி ரிப்பேர் செய்வதற்காக ஆகக் கூடிய செலவுகள் பெரும்பகுதி குறைக்கப்படும். நான் சொல்வது புதிது அல்ல, இல்லாத ஒன்றை நான் சொல்லவில்லை. மத்திய ஆட்சியிலே ஸ்பீக்கர் உட்பட, மந்திரிமார்கள் அனைவருக்கும் கவர்ன்மெண்ட் கார் கிடையாது. அதிகப்படி அலவன்ஸ் கொடுக்கப்படுகிறது. அந்த முறையை நம்முடைய மாநிலத்திலும் கையாண்டால் செலவுகளை ஓரளவு குறைக்கலாம். மந்திரிமார்களுக்கு இடையூறு செய்ய வேண்டுமென்ற நோக்கத்துடன் இதை நான் சொல்லவில்லை. வசதிகளைச் செய்து கொடுக்கத்தான் வேண்டும். அதே நேரத்தில் மாகாண சர்க்காரின் பணம் விரயமாகாமல் இருக்க இது ஒரு வழியாகும் என்ற காரணத்தாலேயே இது சரியான முறையாக இருக்குமென்று இந்த ஆலோசனைச் சபையின் முன் சபாநாயகர் மூலமாகச் சமர்ப்பிக்க முன் வருகிறேன்.

அதே நேரத்திலே சில இன்றியமையாத காரியங்களுக்காகச் செலவு செய்ய வேண்டியவற்றை நான் வேண்டாமென்று சொல்லவில்லை. போலீஸ் துறையைப் பொறுத்தவரை கொஞ்சம் அதிகத் தொகை தேவையிருக்கிறது என்பதை உணருகிறேன். அதை வரவேற்கவும் செய்கிறேன். அந்தத் தொகையைச் செலவு செய்வதிலே ரொம்பக் கண்டிப்பும் கண்காணிப்பும் இருக்க வேண்டுமென்பதைப் பற்றி மட்டும் நான் சொல்ல விரும்புகிறேன். நமது மாநிலத்திலே இருக்கக் கூடிய எல்லா நகரங்களிலும், நகரத்தை ஒட்டியுள்ள இடங்களிலும் உள்ள போலீஸ் ஸ்டேஷன்களில் டெலிபோன் இருக்கும்படிச் செய்ய வேண்டும். இப்போது ஒருசில பகுதிகளில் தான் டெலிபோன் வசதி இருக்கிறது. சில இடங்களில் டிபுடி சூப்பரிண்டெண்டண்டுக்குக் கூட போன் கிடையாது. உதாரணமாக, காரக்குடி பகுதியில் மூன்று தாலுகாக்களுக்குரிய டெபுடி சூப்பிரண்டண்ட சிவகங்கையில் இருக்கிறார். அவருக்கு டெலிபோன் கிடையாது. அதற்குக் காரணம் கேட்டால், அந்த டெபுடி சூப்பிரண்டெண்ட் வாடகை வீட்டில் இருக்கிறார் என்று சொல்லுகிறார்கள். அந்தக் காரணம் பொருத்தமாக எனக்குத் தோன்றவில்லை. அது உண்மையான காரணமா என்று எனக்கு நிச்சயமாக தெரியாது. அங்கு சொல்லப்படுகிற காரணம் இது. அதே போன்று சப் இன்ஸ்பெக்டர்கள் எல்லாம் மோட்டார் சைகள்கள் வேண்டுமென்று சொல்கிறார்கள். அவர்களுக்கு மோட்டார் சைக்கிள் அலவன்ஸ்தான் கொடுக்க வேண்டுமே தவிர கவர்ன்மெண்ட் மோட்டார் சைக்கிளைக் கொடுக்கக் கூடாது. ஏனென்றால் அரசாங்க மோட்டார் சைகிளாக இருந்தால் மூன்று ரூபாய் பெறுமான ஸ்பிரிங்குகளுக்கு 30 ரூபாய் செலவாகிவிடும். ஆகவே, இதுமாதிரியான நிலைகளிலே கொஞ்சம் கண்காணிப்பாக இருப்பது நல்லது என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதற்கு மேலே வீட்டு வசதிகளைப் பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. நான் ஆண்டுதோறும் சொல்லிக் கொண்டே வருகிறேன்—ரொம்பத் தாழ்த்தப்பட்டவர்களாகக் கருதப்படுகிறவர்கள் வலையர்கள். அவர்களுக்கு ஒரு வசதியும் இல்லை. அவர்களுக்கு



2nd February 1963] [திரு. சா. கணேசன்]

நிலத்திலே பாத்தியதை இல்லை என்ற நிலைமை ஒரு சட்டம் மாதிரியாக இருக்கிறது. அவர்கள் எங்கேயாவது குடியிருக்கலாமே தவிர பொட்டு நிலம்கூட அவர்களுக்குச் சொந்தமாகக் கிடையாது. மிகவும் பிற்போக்கான நிலையிலே இருக்கிற இந்த வலையர் சமூகத்தினரைக் கவனிக்க வேண்டியது நம்முடைய தவிர்க்க முடியாத கடமை என்பதைப் பணிவோடு வற்புறுத்திச் சமர்ப்பித்துக் கொள்ளுகிறேன்.

அதற்கு மேலே இன்னொன்றையும் நாம் கவனிக்க வேண்டும். இது அவசர காலம். அவசர காலத்தில் எவ்வளவு பணம் தேவையோ, எவ்வளவு சக்தி தேவையோ அவ்வளவுக்கு நமது நல்ல பெயரும் காப்பாற்றப்பட வேண்டும். அதனால் மற்ற காலத்திலே காப்பாற்றப்பட வேண்டாமென்று நான் சொல்லவில்லை. இந்த நோக்கிலே மிகவும் கண்காணிப்பாக இருக்க வேண்டுமென்றுதான் சொல்லுகிறேன். உலகம் பூராவிலும் பார்த்தால் ஏற்றுமதிச் சரக்கு (எக்ஸ்போர்ட் குவாலிடி) அந்தப் பிராந்தியத்திலே இருப்பவர்கள் அனுபவிப்பதைவிட வெளி நாட்டிலே வாங்குகிறவனுக்கு அற்புதமானதாக இருக்கும். பிரிட்டனில் தயாரிக்கப்படும் சைக்கிள் திறமானதாகத் தயாரிக்கப்படுபவை மலேயாவில் வந்து குவியும். சிறந்த பொருள்கள் வெளிநாடுகளிலே கிடைக்கும்படியான கண்காணிப்பை நாம் கொண்டிருக்க வேண்டும். ஒரு துறையில் மட்டும் இன்று அது அமல் நடத்தப்படுகிறது. துணி வகைகளைப் பொறுத்தவரையில் பக்கிங்ஹாம் அண்டு கர்நாடிக் மில்ஸ் போன்றவர்கள் தயாரிக்கும் துணி வகைகளில் எக்ஸ்போர்ட் குவாலிடி அருமையானதாக இருக்கிறது. துணியிலே ஒரு நூல் இழை முறுக்கேறிவிட்டாலும் 'கண்டெம்டு' என்று சொல்லித் தள்ளி விடுகிறார்கள். துணிகள் கடைசி வரை ஒழுங்காக இருக்கிறதா என்பதைப் பார்க்க எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து விட்டுத்தான் அனுப்பி வைக்கிறார்கள். முன்னே பேசிய கனம் உறுப்பினர் ஒருவர் ஏலத்தைப் பற்றிக் கூறினார்கள். ஏல அரிசியை ஏற்றுமதி செய்கிறோம். ஏலத்தை நசுக்கினால் கையிலே எண்ணெய் வர வேண்டும். அதுதான் சரியான ஏல அரிசி. காய்ந்து போய் வறண்டிருந்தாலும் மன்னிக்கலாம். ஆனால் எலிப் புழுக்கையை கலந்து அனுப்பலாமா? இதை நான் புதிதாக சொல்லவில்லை. கனம் அமைச்சரும் நானும் பேசிக் கொண்டிருந்ததைத்தான் கூறுகிறேன். அதனால்தான் வெளிநாட்டுக்காரன் இந்தியச் சரக்கு வேண்டாமென்று விஸ்வாமித்திர வேஷம் போடுகிறான். மிளகு இருக்கிறதே அதோடு அந்திமந்தாரை விதை கலக்கப்படுகிறது. பப்பாளிப்பழம் இருக்கிறதல்லவா அதற்குள்ளே இருக்கிற விதை கலக்கப்படுகிறது. கண்ணால் பார்த்துத்தான் இதைச் சொல்கிறேன். பப்பாளி விதையைக் கலப்பதால் தீமை அதிகமில்லை; அதாவது கொடுமை இல்லை. இப்படிச் சொல்வதால் பப்பாளி விதையைக் கலக்கலாம் என்று நான் சொல்லவில்லை. அந்திமந்தாரையில் விஷச் சத்து இருக்கிறது. அது உடலுக்குத் தீமை புரியும். போன ஆண்டிலேயே மஞ்சளைப் பற்றிச் சொன்னேன். அதில் 5 சத விகிதம் காரீயம் கலக்கலாம் என்று அரசாங்க

உத்தரவு இருந்தது. அந்த உத்தரவு இப்போதும் இருக்கும் என்றுதான் நினைக்கிறேன். கலப்பது என்னவென்றால் காரியம். உணவிலுள்ள விஷச் சத்தைப் போக்கவே மஞ்சள் போட்டுக் கொள்கிறோம். சாம்பாரில் மஞ்சள் போடுவது கலருக்காக அல்ல. கேசரிப் பவுடர் போடுவதுதான் கலருக்காக. குடலில் உள்ள புண்ணை ஆற்ற மஞ்சள் உபயோகிக்கிறோம். குடலில் உள்ள வெக்காட்டைக் குணப்படுத்த மஞ்சள் உபயோகிக்கிறோம். அப்படியிருக்க பிணியை உண்டாக்கும் மூலப்பொருளை, காரியத்தை, அதோடு சேர்ப்பது கலர் கொடுப்பதற்காகத்தான் என்று வாதம் செய்கிறார்கள். இது தர்மமா? நியாயமா? இது நம் தேசத்திற்கு நல்ல பெயரைத் தருமா? இவற்றை எல்லாம் நாம் சிந்திக்க வேண்டும். சிந்திப்பதால் மட்டும் பிரயோஜனமில்லை, செயலுக்கும் வர வேண்டும். மனு காலத்திலிருந்து நேற்று வரை வருகிற சட்டங்கள் எல்லாம் எதற்காக வருகின்றன? மனிதன் தர்மத்திற்காக மட்டும் பயந்து வாழ்வதில்லை. மனிதர்களில் 5 சத விகிதம் தான் தர்மத்திற்காகவும் கடவுளிற்காகவும் பயப்படுகிறார்கள். தொண்ணூறு சதவிகிதம் சட்டத்திற்கே பயப்படுகிறார்கள். மீதி 5 சத விகிதம் தான் தப்பித்துக் கொள்ளலாம் என்று நினைத்துக் கொண்டிருப்பவர்கள். ஆக, கலப்படத்திற்கு, கலப்படம் செய்பவர்களுக்கு, கடுமையான தண்டனை விதிக்க வேண்டும். உணவுப் பொருள்களில் கலப்படம் செய்பவர்களுக்கு ஆறு ஆண்டுகள் தண்டனை என்றும், வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகிச் செல்கிற பண்டங்களில் கலப்படம் செய்கிறவர்களுக்கு ஆயுள் தண்டனை என்றும் போட வேண்டும். ஜப்பானில் இந்த மாதிரியான முறை இருக்கிறது. நான் இங்குள்ள ஒருவரின் பவுண்டன் பேனாவைத் திருடினால் எனக்கு இந்த ஊர் மாஜிஸ்ட்ரேட் 3 மாதம் தண்டனை போடுவார். ஆனால் நான் ஒரு வெளிநாட்டுக் காரரின் பவுண்டன் பேனாவைத் திருடினால் எனக்குக் கிடைக்கும் தண்டனை ஆறு வருடங்கள். காரணம் இதுதான். திருடியது ஒரேமாதிரி உள்ள பவுண்டன் பென்தான். நான் இவர் பேனாவைத் திருடினால் "கணேசன் திருடி விட்டான்" என்று சொல்வார்கள். ஆனால் வெளிநாட்டுக்காரனிடம் திருடினால் "இந்தியன் திருடிவிட்டான்" என்றுதான் சொல்வான். ஆக. இங்கு இவரிடம் திருடினால் கணேசன் திருடினான் என்று சொல்ல எனக்கு மட்டும் தான் கெட்ட பெயர். ஆனால் வெளிநாட்டானிடம் திருடினால் இந்தியன் திருடிவிட்டான் என்று சொல்ல, கெட்ட பெயர் நாட்டுக்கே வந்துவிடுகிறது. இந்தியன் மோசக்காரன் என்ற பழி ஏற்பட்டு விடுகிறது. ஆகவே நான் சொன்னது போல் இந்தக் கலப் படத்திற்குக் கடுமையான தண்டனை விதிக்க வேண்டும், அதற்கு வழி செய்ய வேண்டும், வழி செய்ய வேண்டியது நம் கடமை. ஆட்சி என்பதற்கு குறிப்புச் சொல் கோல் அல்லது தண்டம். கோல் என்பது தமிழ் வார்த்தை, தண்டம் என்பது சமஸ்கிருதம். கோலைக் கண்டு பயம் ஏற்பட வேண்டும். அந்தக் கோல் தவறு செய்பவர்களைத் தண்டிக்கிறது. இப்போது நாம் ஒரு சட்டம் போட்டால் மேஜையின் அடியில் நுழைகிறார்கள், மேஜைக்கு மேலே கொண்டு வந்தால் ஜமக்காளத்தினடியில் நுழை



கிறார்கள். ஆகவே சட்டத்தில் சந்து பொந்து இல்லாதபடி கடுமையான, பயங்கரமான தண்டனை கலப்படம் செய்பவர்களுக்கு விதிக்கப்பட வேண்டும். சட்டம் போடுவதோடு அதை நிலை நாட்டவும் வேண்டும். அது நிலைநாட்டப்பட வேண்டியது சர்க்காரின் தலையாய கடமையாகும். அதற்கு மேலே, விவசாய வரி எல்லாம் வந்திருக்கிறது. இருக்கிற வரியைப் போல் இரண்டு மடங்குக் குறைச்சல் இல்லாமல் மேலே போய்விடும். யாருக்கும் வரி போடக்கூடாது என்றோ அல்லது செலவு செய்யக் கூடாது என்றோ சொல்லவில்லை. உணவு உற்பத்தி செய்பவர்கட்கு வரி தடையாகி விடப்படாது. எந்த இடத்தில் வரி போட்டு உறிஞ்ச முடியுமோ அங்கு வரி போட்டுக் கொள்ளலாம். ஊட்ட வேண்டிய இடத்தில் உறிஞ்சி, உறிஞ்ச வேண்டிய இடத்தில் ஊட்டக் கூடாது. விவசாயிகள் அப்பாவிகள்; தொழிலாளர் வர்க்கம் போல் போட்டி போட்டு எழுச்சி பெறாதவர்கள் இவர்கள். இவர்களை வாய் இல்லாப் பூச்சிகள் என்று சொல்லலாம். இவர்களுக்கு வெஸ்டட் இண்டரஸ்ட் இருக்கிறது. மாடு, உழவுக் கருவிகள், நம் சொத்து என்ற உணர்ச்சி இவர்களுக்கு வந்து விடுகிறது. ஆகவேதான் இவர்கள் பயங்கொள்ளிகளாக இருக்கிறார்கள். ஆகவே, சவலைப் பிள்ளையிடம் தாய் தனியாக அக்கறை காட்டுவதுபோல் விவசாயிகள் மீது அரசாங்கத்திற்குத் தனி அக்கறை இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்த பட்ஜெட்டில் உள்ள நல்லவற்றை ஆதரித்து இம்மாதிரி நல்ல ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். சிறப்பாக விவசாயிகளுக்குத் துன்பம் ஏற்படாமல் செய்ய வேண்டும்; கலப்படக்காரர்களுக்குக் கடுமையான தண்டனை கொடுக்க வேண்டும் என்பனவற்றையும் வற்புறுத்தி என் உரையை முடிக்கிறேன். வணக்கம்.

* திரு. இரா. நெடுஞ்செழியன்: மதிப்பிற்குரிய அவைத் தலைவர் அவர்களே, கனம் நிதியமைச்சர் அவர்களால் இம் மன்றத்தின் முன் வைக்கப்பட்டுள்ள 1962-63-ம் ஆண்டுக்கான துணை மதிப்பீட்டுக் கோரிக்கைகள் பற்றிச் சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். 1962-63-ம் ஆண்டுக்கான துணை மதிப்பீட்டுக் கோரிக்கைகளுக்கென 14 கோடியே 18 லட்சம் ரூபாய் கோரப்பட்டிருக்கிறது. பொதுவாகப் பார்க்கிறபோது துணை மதிப்பீட்டுக் கோரிக்கைகளுக்கான இந்தத் தொகை அதிகப்படியான அளவில் காணப்படுகின்ற நிலையில் இருந்தாலும் நாட்டில் ஏற்பட்டிருக்கிற நெருக்கடி நிலையையொட்டி பாதுகாப்பு முயற்சிகளுக்காக ஏற்படுகிற செலவினங்களையொட்டி இந்த மதிப்பீடுகள் கொண்டு வரப்பட்டிருக்கின்றன என்பதைக் காணும்போது அவை ஏற்றுக் கொள்ளப்பட வேண்டியவைகளாக இருக்கின்றன. அதையொட்டி பலர் பல கருத்துக்களை எடுத்துக் கூறினார்கள். செலவினங்கள் வளர்வதின் மூலம் துணை மதிப்பீட்டுக் கோரிக்கைகளுக்கு அதிகப் பணம் ஒதுக்க வேண்டுமென்று கேட்கிற நோக்கில் சில நண்பர்கள் எடுத்துக் கூறியதுபோல் எந்தெந்த வகையில் செலவினத்தைக் குறைக்க முடியுமோ அந்தந்த வகையில் குறைத்துக் கொள்ளலாம், அதன்மூலம் ஓரளவு கணிசமான அளவிற்கு

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [2nd February 1963

மதிப்பீட்டின் அளவைக் குறைப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம். நாட்டில் ஏற்பட்டிருக்கிற நெருக்கடி நிலையையொட்டி அரசினர் சிக்கன முயற்சியில் ஈடுபட வேண்டியவர்களாக இருக்கிறார்கள். தமிழக மாநில அரசு எந்தெந்த வகையில் சிறந்த முயற்சிகளை மேற்கொண்டு எந்தளவிற்குச் சிக்கனம் செய்து அதன் மூலம் துணை மதிப்பீடுகளை அதிக அளவில் குறைத்திருக்கிறது என்பதை கனம் நிதி அமைச்சர் அவர்கள் மூலம் நான் அறிய விரும்புகிறேன். இந்தத் துணைமதிப்பீட்டுக் கோரிக்கைகளுக்காகக் கேட்கப்படுகிற பெரும் தொகையில் பாதுகாப்பு முயற்சிக்காகவே அதிகப்படி ஒதுக்கப்படுகிறது என்பதை நாம் அறிகிறோம். அதிலே காவல் துறையினரின் எண்ணிக்கையைப் பெருக்கி அதன்மூலம் அவர்களின் பணியை நாட்டுப் பாதுகாப்பு முயற்சிக்குப் பயன்படுத்த வேண்டும் என்ற நோக்கம் உள்ளபடியே வரவேற்க வேண்டியதொன்றாகும். காவல் துறையில் ஈடுபட்டிருப்பவர்களின் பணியை நாட்டுப் பாதுகாப்பு முயற்சியில் பெருமளவு ஈடுபடுத்திவிட்டு அவர்களுக்குச் சற்றுக் குறைந்த திறமை, தகுதி படைத்தவர்களை ஊர்க்காவல் படையினரோடு இணைத்து, காவல் துறைப் படையில் ஊர்க்காவல் படையினரை ஓரளவு ஒதுக்கி வைப்பது என்று முடிவு எடுத்திருப்பது ஓரளவு வரவேற்கத்தக்கதாகும். காவல் துறையை விரிவு படுத்துவதற்கான முயற்சி எடுத்து அவர்களின் எண்ணிக்கையைப் பெருக்குகின்றதோடு காவல் துறையினரின் வசதிகளையும்கூட ஓரளவு பெருக்குவதற்கான முயற்சிகளில் அரசியலார் ஈடுபட வேண்டும் என்பதையும் வற்புறுத்திக் கூறிக் கொள்ள விரும்புகிறேன். ஊர்க்காவல் படை இன்றையதினம் ஐந்து பெரு நகரங்களில் ஏற்படுத்தப் போவதாக திட்டமிட்டிருப்பதாக கனம் நிதி அமைச்சர் அவர்கள் எடுத்துத் தெரிவித்திருக்கிறார்கள். ஊர்க்காவல் படைக்குத் தேர்ந்தெடுப்பதற்கு எந்தத் திறமை, எந்தத் தகுதி, எந்தத் தன்மை இருக்க வேண்டும் என்பது இன்னும் தெரியாத நிலைமையில் இருந்து வருகின்றது. நிதி அமைச்சர் அவர்கள் அதற்கெல்லாம் விளக்கம் தருவார்கள் என்று கருதுகிறேன். சாதாரண காவல் துறையினருக்கு என்னென்ன உரிமைகள் அளிக்கப்பட்டிருக்கின்றனவோ அவைகள் எல்லாம் ஏறத்தாழ இந்த ஊர்க்காவல் படையினருக்கும் இருக்கும் என்ற அளவில்தான் கூறப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. ஏறத்தாழ காவல் துறையினருக்கு என்ன தகுதி, என்ன திறமை, என்ன தன்மை இருக்க வேண்டுமோ அதே திறமை, தன்மை தகுதி இவைகளெல்லாம் உள்ளவர்கள்தான் இந்த ஊர்க்காவல் படைக்கும் தேர்ந்தெடுக்கப்படுவார்கள் என்று நம்புகிறேன். அதோடு, பொதுவாக ஏற்பட்டிருக்கும் நெருக்கடி நிலைமையை அனுசரித்து, பொது மக்களுடைய தேவைகளை நிறைவேற்றும் பொருட்டு மருத்துவக் கல்லூரிகளில் பயிற்சி அளிக்கப்படும் என்றும் அமைச்சர் அவர்கள் அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். அத்தகைய முயற்சிகள் உள்ளபடியே வரவேற்கத்தக்க ஒன்றாகும். மருத்துவத் துறையில் பயிற்சி பெறுகின்றவர்கள்,



2nd February 1963] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

தங்களுக்கு ஏற்ற வகையில் எல்லா வசதிகளையும் பெறுவது என்பது உள்ளபடியே பாராட்டி போற்றப்படவேண்டியதொன்றாகும். அதற்கான வசதிகளைப் பெருக்குவதற்கு வேண்டிய கவனம் செலுத்த வேண்டியவர்களாக நாம் இருக்கிறோம் என்பதை நாம் அனைவரும் உணர வேண்டும். ஏனென்றால், இப்போது மருத்துவக் கல்லூரிகளில் சேர்க்கப்பட்டிருக்கின்ற மாணவர்கள் போதுமான அளவுக்குப் பயிற்சி பெற முடியாத அளவுக்கு வசதியில்லாத அளவுக்கு சில கல்லூரிகள் இருக்கின்றன. அந்த வகையில் ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியில் மாணவர்களுக்குப் போதுமான பயிற்சி பெறுவதற்கான வசதிகள் இல்லை என்று ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியில் படிக்கும் மாணவர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். எண்ணிக்கையில் மாணவர்கள் பெருகியிருந்தாலும், பயிற்சி பெறும் வசதி குறையாத அளவுக்கு நாம் பார்த்துக் கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம். மாணவர்கள் பெறுகின்ற பயிற்சியின் தரம் நாளுக்கு நாள் உயரும் அளவுக்கு வழி முறைகளை நாம் காண வேண்டியவர்களாக இருக்கிறோம். ஸ்டான்லி கல்லூரியில் படிக்கும் மாணவர்கள் தங்களுடைய பயிற்சியை முழு அளவுக்குப் பெற முடியாத அளவுக்குச் சில இடர்பாடுகள் இருப்பதாக எடுத்துத் தெரிவிக்கின்றார்கள். ஜி.வி.ஐ.எம். மருத்துவக் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த மாணவர்கள் இந்தக் கல்லூரியோடு இணைந்ததின் காரணமாக ஒரே வகுப்பில் மட்டும் 226 மாணவர்கள் உட்கார்ந்து பாடங்களைப் படிக்க வேண்டிய நெருக்கடியான நிலைமை ஏற்பட்டிருப்பதாகவும், பயிற்சியின் முழு அளவு வசதியைப் பெற வழியில்லாமல் இருக்கிறார்கள் என்று அங்குள்ள மாணவர்கள் எடுத்துத் தெரிவிக்கிறார்கள். ஒரே கல்லூரியில் ஏராளமான மாணவர்களைக் குவித்து வைத்திருக்கின்ற தன்மையை மாற்றி பல்வேறு கல்லூரிகளுக்கும் அனுப்பி நிரவி அனுப்பினால் அது நலமாக இருக்கும் என்பதைக் கனம் கல்வி அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். மற்ற மருத்துவக் கல்லூரிகளோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, சென்னையில் இருக்கின்ற மட்ராஸ் மெடிகல் காலேஜில் ஒரு வகுப்பில் 116 மாணவர்கள் இருக்கிறார்கள் என்றால் அதே நிலையில் ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியில் 196 பேர்கள் படிக்க வேண்டிய நிலைமை இருக்கின்றது என்பதை எடுத்துச் சொன்னார்கள். 116 பேர்கள் உட்கார்ந்திருந்து படிக்கக்கூடிய வகுப்பில் 196 பேர்கள் இருந்து பாடங்களை நெருக்கடியான நிலையில் பயில வேண்டிய நிலையில் இருக்கிறார்கள் என்பதையும் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். மேலும் நோயாளிகளைப் பக்கத்திலிருந்து கவனித்துப் பயிற்சி பெறுகின்ற முறையில் வார்டுகளுக்குச் சென்று பயிற்சி பெறுவதிலும் பல வசதிக் குறைவுகள் இருப்பதாக அங்குள்ள மாணவர்கள் எடுத்துத் தெரிவித்திருக்கிறார்கள். சாதாரணமாக ஒவ்வொரு தொகுப்புக்கும் (யூனிட்) அதாவது ஒவ்வொரு குழுவினராக 20, 25 மாணவர்கள் இருக்கிறார்கள். இது தான் சாதாரணமாக இருக்கக்கூடிய எண்ணிக்கை. ஆனால், இது ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியில் மட்டும் ஒரே தொகுப்பில் 40, 45 மாணவர்கள் ஈடுபட்டிருப்பதாகவும், இதன் காரணமாக வார்டுகள் நோயாளியின் பக்கத்தில் நிற்கவோ, அதற்கான மருத்துவ சிகிச்சை

பயிற்சியைப் பெறவோ வசதியில்லாத நிலைமை இருந்து வருகிறது என்றும் தெரிவிக்கிறார்கள். அதே போன்று தான் அவுட் பேஷண்ட்—வார்டுகளை எடுத்துக் கொண்டாலும் 70 மாணவர்களைச் சேர்த்து வைத்திருக்க வேண்டிய நிலைமை ஏற்படுகிறது என்றும், இதன் காரணமாகப் பயிற்சி பெறுவதற்குப் பல இடையூறுகள் ஏற்படுவதாகவும் தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே ஸ்டான்லி கல்லூரியில் இருக்கும் இந்த நெருக்கடியைத் தீர்க்கின்ற வகையில் அங்குள்ள மாணவர்களைப் பல கல்லூரிகளிலும் இணைத்துவிடுவதற்கு முயற்சி எடுக்க வேண்டும் என்று கனம் கல்வி அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். இதை எதற்காக குறிப்பிடுகிறேன் என்றால், இந்த நெருக்கடி காலத்தில் மருத்துவப் பயிற்சி அளிப்பதற்காகத் திட்டம் போட்டிருக்கின்ற இந்த நேரத்தில், கொடுக்கின்ற பயிற்சியின் தரம் குறைவாக இருக்கக் கூடாது, அவர்களின் தரத்தை பெருக்கிக் கொள்வதற்கான எல்லாவித வசதிகளையும் பெருக்குவதற்கான முறையில் திட்டத்தைத் தீட்ட வேண்டும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மற்றொன்று, தொழில் நுணுக்க அறிவைப் பெருக்கிக் கொள்வதற்காக ஓவர்சீயர். டிராப்ட்ஸ்மென், சர்வேயர்கள் இவர்களுக்கான பயிற்சி மத்திய அரசாங்கத்தின் கீழும், மாநில அரசாங்கத்தின் கீழும் கொடுக்கப்பட்டு வருவதாகத் தெரிகிறது. இவ்வாறு பயிற்சி பெற்றவர்கள் பணிபுரிய வேண்டும் என்று விரும்புகின்றவர்கள் சாதாரணமாகத் தேர்வு எழுதி, வெற்றி பெற முயலுகிறார்கள். இதற்கான அரசாங்கத்தின் சார்பாக நடைபெறும் நிலையங்களில் பயிற்சியைப் பெற்று தேர்வு மட்டும் எழுதுகின்ற வாய்ப்பு தரப்படுகிறது. ஆனால் இதற்கான தகுதிப் பயிற்சியைப் பெறுவதற்குத் தனியார் நடத்தும் கல்லூரிகளிலோ, தனியார் நடத்தும் நிலையங்களிலோ போய்தான் பயிற்சி பெறவேண்டியவர்களாக இருக்கிறார்கள். மேலும் இது வரையிலும் லோயர், ஹையர் என்ற இரு கிரேட்களிலும் பயிற்சி பெற விரும்புகிறவர்கள் படிப்படியாக ஒவ்வொரு கிரேட் தேர்விலும் எழுதித் தேர்ச்சி பெறுகிறார்கள். ஆனால் இப்போது ஒரேயடியாக திடீரென்று ஒரே பிரிவாகத் தான் எழுத வேண்டும் என்று குறிப்பிடுகிற உத்தரவைத் தொழில் நுணுக்க இயக்குநர் பிறப்பித்திருப்பதாகவும், அதன் மூலம் இதில் பயிற்சி பெறுகிறவர்களுக்குப் பல இடர்பாடுகள் ஏற்பட்டிருப்பதாகவும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இம்மாதிரியான புது உத்தரவு பிறப்பிக்கும்போது முன்னால் இருந்த படிப்புக்கு அல்லது பயிற்சிக்கு ஒரு காலக்கெடு கொடுக்க வேண்டும். முன்னால் இருந்து வந்த சலுகையை மாற்றி ஏப்ரல் மாதம் மட்டும் ஒரே கிரேட் தேர்வு எழுத வேண்டும் என்றும், அப்படி எழுத வேண்டியவர்கள் அரசாங்க அலுவலகங்களில் அரசாங்கத்தில் தொடர்ந்து பணியாற்றியிருக்கின்ற ஐந்து ஆண்டு அனுபவம் பெற்றிருக்க வேண்டும் என்றும் திடீரென்று சொல்லுவதாகத் தெரிகிறது. இவ்விதம் ஓர் உத்தரவைக் கொண்டுவருவதாக இருந்தால் முன்கூட்டியே தெரிவித்தால் நலமாக இருக்கும் என்றும் இப்போதைய உத்தரவு ஒரு புதிய நெருக்கடியை ஏற்படுத்தியிருப்பதாகவும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இதில் ஏற்பட்டிருக்





கின்ற நெருக்கடி என்னவென்றால், ஏப்ரல் மாதத்தில் மட்டும் தேர்வு எழுதலாம் என்றிருப்பதாலும், காலக்கெடு இல்லாமலிருப்பதாலும், சென்ற முறை தேர்வில் தோற்றுப் போனவர்களுக்கு இந்த ஆண்டு தேர்வு எழுத முடியாத நிலை ஏற்படுகிறது. இதன் காரணமாக அலுவலகங்களில் ஈடுபட்டு வேலையைக் காயப்படுத்திக் கொள்ள வேண்டும் என்று எண்ணிக் கொண்டிருப்பவர்களுக்கு அந்த வாய்ப்பில்லாமல் போகின்றது. ஆகவே இவ்விதம் பயிற்சி பெறுகின்றவர்களுக்கு வசதியான முறையில் உத்தரவைப் பிறப்பிக்கும் வகையில் அரசாங்கம் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று கனம் நிதி அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

மற்றொன்று, கனம் நிதி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இப்போது பள்ளிகளில் தொழிற் பயிற்சிக்குக் கற்றுக் கொடுத்துக்கொண்டிருந்த தொழில் நுணுக்க ஆசிரியர்கள் எல்லாம் இப்போது பகுதி நேர ஆசிரியர்களாக ஆக்கப்பட்டிருக்கிறார்கள் என்று தெரிகிறது. தற்போது, 8-வது வகுப்பை உயர்நிலைப் பள்ளிப் படிப்போடு இணைத்துவிட்டதின் காரணமாக இந்தப் பயிற்சிக்குச் சிறிதளவு தேவை குறைந்திருப்பதன் காரணமாக, சுமார் 6,000 ஆசிரியர்கள்—தொழில் பயிற்சி கற்றுக் கொடுத்துக்கொண்டிருந்த ஆசிரியர்கள்—இன்றையதினம் பகுதி நேர ஆசிரியர்களாக ஆக்கப்பட்டிருக்கிறார்கள் என்றும், இதன் காரணமாக அவர்களுக்கு பல இடர்பாடுகள் ஏற்பட்டிருப்பதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. இவர்களுடைய நிலைமையை எந்த அளவுக்கு சீர்படுத்த முடியும் என்பதைப்பற்றி கனம் கல்வி அமைச்சர் அவர்கள் உடனடியாக பரிசிலனை செய்து பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். 6,000-க்கு மேற்பட்டவர்கள், முழு நேர ஊழியர்களாக இருந்து வந்தவர்கள், இன்றைக்கு பாதிக்கப்பட்டிருக்கிறார்கள், அவர்களின் நிலைமையை சீர்படுத்துவதற்கேற்ற முறையில் இந்தத் திட்டத்தை மாற்றி இவர்களை எல்லாம் எந்த அவுக்கு முழு நேர ஊழியர்களாக ஆக்க முடியும், அதற்கான முயற்சிகள் என்னென்ன மேற்கொள்ளவேண்டும் என்பதை கனம் அமைச்சர் அவர்கள் சிந்தித்துப்பார்த்து, அதற்கு உடனடியாக தக்கதொரு முடிவு எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இதற்காக கல்வியின் அடிப்படையிலேயே பல சீர்திருத்தங்களை கொண்டு வர வேண்டும் என்று கனம் கல்வி அமைச்சர் அவர்கள் விரிவான பல கருத்துக்களை தெரிவித்திருக்கிறார்கள். அதை ஒட்டி இந்த முறைகளை எல்லாம் சீர்படுத்தி அமைக்கவேண்டும் என்று கல்வி அமைச்சர் அவர்களை கேட்டுக் கொள்கிறேன்.

விலைவாசி உயர்வைத் தடுக்கவேண்டும் என்றும், விலைவாசிகள் உயர்ந்து விடாமல் தடுக்க உபயோகிப்போர் கூட்டுறவு சங்கங்களை அமைக்க நினைத்திருக்கிறோமென்றும், மொத்த வியாபாரம் செய்யக் கூடிய கூட்டுறவு சங்கங்களோடு இணைக்கப்பட்டிருக்கும் இந்தக் கூட்டுறவு சங்கங்கள் என்றும், ஒரு லட்சத்துக்கு மேல் மக்கள் தொகை உள்ள 9 நகரங்களில் முதல் முதலாக செயல் 1-00 p.m.

படுத்தப்படும் என்றும் இந்த அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது. இரண்டு அல்லது மூன்று திங்களுக்கு முன்பே இந்தக் கருத்து தெரிவிக்கப்பட்டது. இனிமேல்தான் இது செயல்பட இருப்பதாக கனம் நிதி அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். நியாய விலைக் கடைகளையும், இப்படிப்பட்ட கூட்டுறவு சங்கங்களையும் ஏற்படுத்த முயற்சி செய்யும்போது, வேறு பல நகரங்களுக்கும் இதை விரிவுபடுத்தி இந்த முயற்சிகளை மேற்கொள்ளுவதன் மூலம் எதிர்பார்க்கிற பலன் பெற வழிவகை செய்ய வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அகவிலைப் படியை அரசாங்க ஊழியர்களுக்கு உயர்த்தி, மத்திய அரசாங்க ஊழியர்களுக்குக் கிடைக்கிற அத்தகைய அளவுக்கு மாநில அரசாங்க ஊழியர்களுக்கும் கிடைக்கச் செய்கிற முயற்சி உள்ளபடியே வரவேற்கத் தகுந்த ஒன்றாகும். அதே நேரத்தில் வேறொரு குழப்பமும் ஏற்பட்டிருக்கிறது. அரசாங்க ஊழியர்கள் வேலை பார்க்கிற வயது உச்சவரம்பு பற்றி இருவித கருத்துக்கள் நாட்டிலே பரிமாறப்பட்டு வருகின்றன. இந்திய சர்க்காரின் கீழ் பணிபுரிகிறவர்களுக்கு உச்ச வரம்பாக 58 வயதாக ஆக்கியிருக்கிறார்கள். அதே நிலைமை இங்கே வேண்டுமென்று சில பேர்கள் விரும்புகிறார்கள். ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். அலுவலர்களுக்கு உச்சவரம்பு வயதை 58-ஆக நிர்ணயித்து விட்டு, இந்திய சர்க்கார் அலுவலகங்களிலே பணிபுரிகிறவர்களுக்கு உச்ச வரம்பு வயது 58 என்று நிர்ணயித்திருக்கும்போது இந்த மாநில சர்க்காரிலே பணிபுரிகிறவர்களுக்கு உச்ச வரம்பு அப்படியே 55-ஆக வைத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. இந்திய சர்க்கார் ஊழியர்களுக்கு 58 வயது என்று உச்ச வரம்பு நிர்ணயிக்கும்போது மாநில சர்க்காரைக் கலந்துகொண்டு அந்த முடிவுக்கு வந்தார்களா அல்லது இந்திய அரசினருக்கு மாநில அரசினர் இதைப் பற்றி ஏதாவது கருத்துத் தெரிவித்தார்களா, அத்தகைய கருத்தை யொட்டி இந்த முடிவை இந்திய அரசினர் செய்தார்களா, அல்லது இந்திய அரசினர் தாங்களாகவே இப்படிப்பட்ட முடிவைச் செய்திருக்கிறார்களா என்று கனம் நிதி அமைச்சரிடமிருந்து அறிந்துகொள்ள விரும்புகிறேன். மேலும் இந்திய அரசு 58 வயது வரை வேலை பார்க்கலாம் என்று நிர்ணயித்திருக்கும் போது இங்கே 55 வயது வரம்பே போதும் என்று மாநில அரசு முடிவு எடுக்கக் காரணம் என்ன என்பதையும், அதற்கான விளக்கங்களையும் கனம் நிதி அமைச்சர் மூலமாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

இத்தகைய நிலைமைகளைச் சீர் செய்வதற்கு முயற்சி செய்வதோடு, துணை மதிப்பீட்டுக் கோரிக்கைகளைப் பற்றி கூறப்பட்டிருக்கிற அத்தகைய நல்ல செயல்களை விரிவு படுத்தி, நான் முதலில் எடுத்துக் கூறிய மாதிரி சர்க்காருடைய செலவைக் கட்டுப்படுத்த, சிக்கனப்படுத்த என்னென்ன வழிவகைகள் செய்யப்பட்டன, என்னென்ன முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்று அறிவிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



இன்னும் வேறு பல பிரச்னைகளைப் பற்றி நிதி நிலை அறிக்கை வரும்போது விரிவாக, விளக்கமாகப் பேச வாய்ப்பு இருக்கிற காரணத்தினால், துணை மதிப்பீட்டுக் கோரிக்கைகளைப் பற்றி உறுப்பினர்கள் எடுத்துக் கூறிய நல்ல கருத்துக்களை நடைமுறைக்குக் கொண்டுவர முழு முயற்சி எடுக்கவேண்டுமென்று கூறி எனது உரையை முடித்துக்கொள்கிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்**: கனம் சபாநாயகர் அவர்களே, இது உப மான்யக் கோரிக்கை. முன்பு அங்கீகரிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டத்திலே சேராத இனங்கள்—சேராத கோரிக்கைகள் இவை. இந்த மன்றத்தின் அங்கீகாரத்தைப் பெறுவதற்காக உப மான்யக் கோரிக்கை என்று வருகிறது. ஆண்டு தோறும் வருகிறது. எல்லா ஆட்சிகளிலும் இது தவிர்க்க முடியாதது. முன்பு தெரிவித்ததுபோல திட்டத்தில் சேர்ந்த செலவினங்கள் இருக்கின்றன—திட்டத்தில் சேராத செலவினங்களும் இருக்கின்றன. இரண்டிலும் எதிர்பாராத செலவினங்கள் ஏற்படுகின்றன. அப்படி ஏற்படும்போது மன்றத்தின் அங்கீகாரத்தைப்பெற உப மான்யக் கோரிக்கை வருகிறது. 14 கோடி ரூபாய்க்கு மேல் உப மான்யக் கோரிக்கை என்றால், நான் கூட ஒப்புக் கொள்ளுகிறேன், அதிகம் தான். தவிர்க்க முடியாதது என்றாலும், 14 கோடிக்கு மேற்கொண்டு உப மானியக் கோரிக்கை என்று சொன்னால், தொகையைப் பொறுத்த மட்டில் அதிகம்தான். ஆனால் இந்த ஆண்டிலே ஜூலை மாதத்தில் தான் வரவு-செலவுத் திட்டத்தை நிறைவேற்றினோம், தேர்தலுக்குப் பிறகு வரவு-செலவு திட்டத்தை நிறைவேற்றினோம். மார்ச் மாதத்திலேயே வர-செலவுத் திட்டத்தை நிறைவேற்றியிருந்தால், ஜூலை மாதத்தில் ஒரு உப மானியக் கோரிக்கை வந்திருக்கும். இப்போது வரக் கூடியது இரண்டாவது உப மான்யக் கோரிக்கையாக இருக்கும். மார்ச் மாதத்தில் மூன்றாவது உப மான்யக் கோரிக்கை கொண்டு வருவது வழக்கம். ஆனால் இது முதல் உப மான்யக் கோரிக்கை. இரண்டாவது விஷயம் கனம் அங்கத்தினர்களெல்லோரும் உணருவார்கள். எதிர்பாராத நெருக்கடி நிலைமையினால் சில செலவினங்கள் ஏற்பட்டன என்று தெரிவித்துக்கொள்கிறேன். 14 கோடியும் எதிர்பாராத செலவு என்று எடுத்துக் கொள்ளக்கூடாது. இந்த 14 கோடியிலே, நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். 4 கோடி தான் செலவு. 4 கோடி தான் அதிகச் செலவு—எதிர்பாராத செலவு. எதிர்பாராத இனங்கள், எதிர்பாராத தொகை 4 கோடி தான். அதுவும் ரெவின்யூ அக்கவுண்டில் 2 கோடி தான். 2 கோடி என்று சொல்லும்போது நூற்றுக்கு 2 வீதம் ஆகிறது. அது ஒன்றும் அதிகம் இல்லை என்று எல்லோரும் ஒப்புக்கொள்வார்கள். ஆனால் 10 கோடி என்ன ஆயிற்று என்று கேட்கலாம். இது என்ன மாயமோ, ஜாலமோ என்று நினைக்கலாம். அது கணக்குத்தான். கணக்குக்கான் 10 கோடி. அப்போதைக்கப் போது மத்திய சர்க்காரிடமிருந்து பணம் வருகிறது. அப்போதைக்கப்போது ரிஸர்வ் பாங்கிடமிருந்து பணத்தை வாங்கிச்

[திரு. எம். பக்தவத்சலம்] [2nd February 1963

செலவு செய்கிறோம். சில சமயங்களில் வருவாய்க்கு மேல் செலவு ஆகிறது. காரணம் என்ன என்றால் மத்திய சர்க்காரிடமிருந்து வருவதிலோ அல்லது மற்ற வருவாயிலோ தவக்கம் ஏற்படுகிறது. மாதந்தோறும் செலவு செய்யும்போது வருவாய் குறைவாக இருக்கும். நாம் எப்படி பாங்கில் ஓவர்டிராஃப்ட் அரேன்ஜ்மெண்ட் வைத்துக்கொண்டு பணம் வாங்குகிறோமோ அந்த மாதிரி வாங்குகிறோம். அதற்குத்தான் வேஸ் அண்ட மீன்ஸ் அட்வான்ஸ் என்று பெயர். அதிலே வாங்குகிறோம். பட்ஜெட் இயரிலே திருப்பிக் கொடுக்கிறோம். அப்படி திருப்பிக் கொடுப்பது 10 கோடி. இன்றைக்கு மத்திய சர்க்காரிடமிருந்து மானியம் வருகிறது. சில செலவுகளை முற்றிலும் கூட ஏற்றுக்கொள்கிறார்கள். இருந்தாலும் அப்படி வருகின்ற பணத்தை வரவு வைத்து விடுகிறோம். ஆனால் இந்த மன்றத்தின் அங்கீகாரத்தோடுதான் செலவு செய்யவேண்டும். ரீபேமெண்ட் ஆஃப் வேஸ் அண்ட் மீன்ஸ் அட்வான்ஸ் இருக்கிறதே அதுதான் 10 கோடி ரூபாய். மேலும் சில இனங்களில் நாம் எதிர்பாராத வகையில் செலவு அதிகம் ஆகிறது. ஏன் முன்னமேயே எதிர்பார்க்கக் கூடாது என்று கனம் அங்கத்தினர்கள் கேட்கலாம். அதற்கெல்லாம் சமாதானம் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறோம். நெருக்கடி நிலைமையையொட்டி வருவது மாத்திரமல்ல. வரவு-செலவுத் திட்டத்தில் வந்திருந்தாலும் அந்தத் திட்டங்களை எடுத்துக்கொண்டு நடத்தும்போது எதிர்பாராத செலவு ஏற்படுகிறது. கனம் அங்கத்தினர் அனந்தநாயகி அவர்கள் ஏன் ஹரிஜன் ஸ்காலர்ஷிப் இதெல்லாம் அப்போதே தெரியாதா, உப மானியம் கேட்பதற்கு பதில் அப்போதே ஒதுக்கியிருக்கலாமே என்று சொன்னார்கள். எவ்வளவு ஆகும் என்று அப்போதே கூட தெரிகிறது. இருந்தாலும் வருவாய்க்குத் தகுந்தபடிதான் செலவு செய்ய முடியும். ஏழை மாணவர்களுக்கு தாராளமாக உதவி அளிக்கவேண்டும் என்று எண்ணினாலும் வருவாய்க்குத் தகுந்தபடிதான் ஒதுக்க வேண்டியிருக்கிறது. போகப் போக வருவாய் கொஞ்சம் அதிகம் வருவது போலத் தெரிகிறது. வந்தால் அப்போது அதிகம் கொடுக்கிறோம். அதில் தவறு இல்லை. முதலிலேயே அவ்வளவு கொடுக்கமுடியாது. எவ்வளவு வருவாய் இருக்கிறது என்று பார்க்கிறோம், பிறகு தைரியம் இருந்தால் கொடுக்கிறோம். அதே மாதிரிதான் முதியோர் பென்ஷன் கொடுப்பது. டெஸ்ட்டிட்யூட்ஸ் என்று வைத்திருக்கிறோம். இதிலே 40 லட்சம், 120 லட்சம் என்று இருப்பதில் ஒரு குழப்பம் ஏற்பட்டிருக்கிறது. இந்தத் திட்டம் இந்த ஆண்டு சாங்ஷன் செய்யப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டிலே 3 மாதங்கள் அல்லது 4 மாதங்கள் கணக்கும் போடுவதிலும் விதிகள் தயாரிப்பதிலும் சென்றுவிட்டன. அதற்குப் பிறகு இந்தத் திட்டம் ஆரம்பமாகியது. இந்த ஆண்டில் பூராச் செலவு என்று சொல்ல முடியாது. முதலில் இவ்வளவு எதிர்பார்க்கவில்லை. முழு ஆண்டுக்கு 120 லட்சம் ஆகும் என்று இப்போது நாம் எதிர்பார்க்கிறோம். முதலிலே இதை எதிர்பாக்க முடியாது—எப்படி எதிர்பார்க்க முடியும்?



2nd February 1963] [திரு. எம். பக்தவத்சலம்]

டெஸ்ட்டிட்யூட்ஸ் அதிகமாக இருக்கிறார்கள் என்று குறைக்கப் போவதில்லை. எல்லோருக்கும் கொடுக்கிறோம். பணத்தை தாராளமாகக் கொடுக்கவேண்டுமென்று சொன்னார்கள். அவர்கள் அனுதாபத்தைப் பாராட்டுகிறேன். அதே மாதிரித்தான் கொடுக்கிறோம். இல்லை என்றால் 120 லட்சம் என்று சொல்லுவோமா? 20 லட்சத்தில் அடக்கிக் கொள்ளலாம் என்று சொல்லலாமே. அப்படி சொல்லவில்லை. ஆனால் ஒழுங்காகக் கொடுக்கவேண்டும். தவறுகள் நடக்கக்கூடும். அதற்காக விதிகள் போட்டிருக்கிறோம். தவறுகள் நடவாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். தவறுகள் நடக்க முடியாத வகையில் கவனம் செலுத்த வேண்டியிருக்கிறது. ஆகையால் மொத்தத்தில் 14 கோடி என்று சொல்லும்போது கனம் அங்கத்தினர்களுக்கெல்லாம் பிரமிப்பு ஏற்படலாம், ஏதாவது விரயம் செய்கிறோமோ, செலவைக் குறைக்க எவ்வளவோ வசதி இருக்குமே என்று நினைக்கலாம். நெருக்கடி நிலைமை பற்றி கனம் அங்கத்தினர்கள் சிலர் கவனித்திருப்பார்கள். செலவு ஆகிறது. ஆனால் செலவைக் குறைக்கவேண்டுமென்பதை நான் ஒத்துக் கொள்கிறேன். எந்தெந்த துறையிலே குறைக்கலாமோ அந்தந்தத் துறையிலே குறைக்கலாம். செலவைக் குறைப்பதை மாத்திரம் நோக்கமாக வைத்துக்கொண்டு, பலனைக் குறைப்பதற்கு ஏற்பாடு செய்யக்கூடாது. கனம் சுதந்திராக் கட்சித் தலைவர் அவர்கள் ஜீப் எதற்கு என்று சொன்னார்கள். அதை ரிபேர் செய்வதற்கு அதிகச் செலவு ஆகிறது என்று சொன்னார்கள்; இருக்கலாம், இருக்கக்கூடும், நான் அதை உணராமல் இல்லை. அதைக் கண்காணிக்க வேண்டியிருக்கிறது. அதைக் கண்காணித்துக்கொண்டும் இருக்கிறோம். சர்க்கார் வாகனங்களுக்காக ஒரு மோட்டார் வொர்க்ஷாப் ஆங்காங்கு வைத்துவிட்டால், தொல்லை இருக்காது. ஆனால், சர்க்கார் வொர்க்ஷாப் வைத்து எப்படி அதை சிக்கனமாக நடத்துவது என்பதும் கவனிக்கவேண்டிய விஷயம். அது சுலபமானதல்ல. ஜீப் வேண்டாம். கார் வேண்டாம் என்றால், சம்பளத்திற்குத் தகுந்தமாதிரி கடன் கொடுத்து திருப்பிப் பெற்றுக் கொள்ளலாம். ஆனால், அப்படிச் செய்தாலும் 'டிப்ரீஸியேஷன்' ஆகிறது என்று சொல்லி அவர்களுக்கு கார் வைத்துக்கொள்ளத் தோன்றாது. அப்படி கார் வைத்துக்கொள்ள வேண்டுமென்று நாம் அவர்களை நிர்ப்பந்தப்படுத்துவதும் நியாயமாக இருக்காது. ஜீப், கார் ஓடிக்கொண்டிருப்பதைப் பார்த்தால் எல்லோருக்கும் ஜீப், கார் அனாவசியமாக ஓடிக்கொண்டிருக்கிறது என்று தோன்றுகிறது. எனக்குக்கூட தோன்றிற்று. ஆனால் சமீபத்தில் போய் பார்க்கும்பொழுது, ஜீப், கார் வேண்டாம் என்று கூறுவதற்கில்லை, ஜீப், கார் இல்லாவிட்டால் வேலை நடக்காது என்றுதான் தெரிய வருகிறது. ஆனால், கனம் சுதந்திராக் கட்சித் தலைவர் சொன்னது ஒன்றை ஏற்றுக்கொள்கிறேன். அதற்குக்கூட கொஞ்சம் தயங்குகிறோம். சப்-இன்ஸ்பெக்டர், இன்ஸ்பெக்டர்களுக்கு மோட்டார் சைக்கிள் வாங்கிக் கொடுத்துவிடலாம் என்று சொன்னார். வாங்கிக் கொடுப்பதற்கில்லை. அவர்களுக்கு கடன் கொடுத்து, அதற்கான செலவைக் கொடுத்து; 'நீங்கள் மோட்டார் சைக்கிள் வைத்துக்

*[திரு. எம். பக்தவத்சலம்]* [2nd February 1963

கொள்ளலாம்' என்று சொல்லலாம். அவர்களுக்கு அலவன்சு கொடுக்கலாம் என்பது அரசாங்கத்தின் யோசனை. அதிலேயே கொஞ்சம் தயக்கம் இருக்கிறது. மோட்டார் சைக்கிள் வாங்கிக் கொடுப்பதாக உத்தேசம் இல்லை. நாம் அவர்களுக்கு ஓரளவுக்கு வாகன வசதி செய்து கொடுக்கத்தான் வேண்டும்.

மந்திரிகளுக்கு அரசாங்கக் கார்கள் எதற்கு என்று சொன்னார்கள். அரசாங்கக் கார்கள் இல்லை என்று சொன்னால் அவர்களே கார்கள் வாங்கவேண்டும், வாங்கி அதை உபயோகப்படுத்த வேண்டும். அரசாங்கத்தின் காரை மினிஸ்டர் பெயருக்கு வாங்க முடியாது. (குறுக்கீடு) 'இண்டரெஸ்டு ப்ரீ'-யாக கடன் கொடுத்தால் அதுவும் ஒரு சலுகை. பிறகு டெப்ரிஸியேஷன் 'ப்ரீ'-யாக கொடுக்கவேண்டியிருக்கும். அவர்கள் கையிலிருந்து பணம் போட்டு கார் வாங்கவேண்டுமென்றால், அவர்களுக்கு ஏதாவது சொத்து இருந்தால்தான் அதை வைத்துச் செலவு பண்ணலாம். போக்குவரத்து வசதி அவர்களுக்கு இருக்கவேண்டும். அவர்களுடைய சக்திக்கு ஏற்வாறு கார் வாங்கவேண்டும். கார் வைத்துக்கொண்டால் அதற்கு டிப்ரிஸியேஷன் இருக்கிறது, ரிபேர் செலவு இருக்கிறது. ரிபேர் செலவு, பெட்ரோல் செலவு இவைகளை மந்திரிகளே ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். ரிபேர் செலவைக்கூட எல்லாவற்றையும் அரசாங்கத்தின் மீது போடுவதில்லை. ஓரளவுக்கு மந்திரிகளேதான் ஏற்றுக்கொள்ளுகிறார்கள். ஓரளவுக்கு சர்க்கார் கொடுக்கிறது. இந்தத் திட்டம் 1937-ஆம் ஆண்டில் ஏற்பட்டது. அப்பொழுதுதான் அந்தத் திட்டம் அமுலுக்கு வந்தது. இப்பொழுது பல ராஜ்யங்களிலும் இம்மாதிரி திட்டம்தான் நிறைவேற்றப்பட்டு வருகிறது. இது அன்னியிலே, 'போன்' வசதியைப் பற்றிச் சொன்னார்கள். அதையெல்லாம் கவனிக்கலாம்.

'கிராப்ட் இன்ஸ்ட்ரக்டர்ஸ்' பற்றி கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். அதை நான் நேற்றே விளக்கியிருக்க வேண்டும். சென்ற ஆண்டில் திடீரென்று பாரங்களில் கல்வி முறையிலே மாறுதல் ஏற்பட்டது. அதன் விளைவாக இப்பொழுது 'கிராப்ட் இன்ஸ்ட்ரக்டர்களுக்கு' வேலை அதிகம் இல்லை. போதனை காலம் 18-லிருந்து 12 மணியாகக் குறைந்துவிட்டது. மூன்று பாரங்களைச் சேர்த்து 2 பாரங்களாகக் குறைத்துவிட்டதால் வேலை குறைந்துபோய்விட்டது. அதனால் 'பார்ட்-டைம்' கிராப்ட் இன்ஸ்ட்ரக்டர்களை வைத்துக்கொள்ளலாம் என்று சொன்னோம். 'ஹோல்-டைம்' இன்ஸ்ட்ரக்டர்களாக இருப்பவர்களுக்கு ரூ. 85 கிடைத்துக்கொண்டிருந்தது. அவர்கள் 'பார்ட்-டைம்' ஆக வேலை செய்தால் ரூ. 30, 35 தான் கிடைக்கும். இந்தக் கஷ்டநிலையை உணர்ந்துதான் கல்வி இலாகா ஒரு உத்தரவைப் பிறப்பித்திருக்கிறது. முன்னமேயே உத்தரவு போட்டாகிவிட்டது. இப்பொழுது ஏற்கனவே முழு நேர ஊழியர்களாக இருப்பவர்களை இப்பொழுது பகுதி நேர ஊழியர்களாக ஆக்கவேண்டாம், அவர்கள் அப்படியே இருக்கலாம். இந்த ஆண்டுக்கு அவர்கள் அப்படியே இருப்பார்கள் என்று உத்தரவு போடப்பட்டிருக்கிறது. அதற்கு மேலே கல்வித் திட்டம் மாற்றப்பட்ட பிறகு என்ன நிலை



2nd February 1963] *[திரு. எம். பக்தவத்சலம்]*

என்று பார்த்து செய்யலாம் என்பது அரசாங்கத்தின் எண்ணம். இதுவரையில் முழு நேர ஊழியர்களாக இருக்கக்கூடியவர்களுக்கு பாதகம் ஏற்படாத வகையில் செய்யவேண்டுமென்பதுதான் உத்தேசம். புதியதாக கிராப்ட் இன்ஸ்ட்ரக்டர்களை வைத்துக் கொண்டால் அவர்களை 'பார்ட்-டைம்' ஊழியர்களாக வைத்துக் கொள்ளலாம் என்று உத்தரவு போடுவதைப் பற்றி ஆட்சேபிக்கக் கூடாது.

"கோவாபரேடிவ் ஸ்டோர்ஸ்" பற்றி சொன்னார்கள். லட்சத்திற்கு மேற்பட்ட ஜனத்தொகை உள்ள 9 நகரங்களில் இந்த ஸ்டோர்ஸ் அமைக்கப்பட்டிருக்கின்றன என்று நான் நேற்றே சொன்னேன். நான்கூட போய் சில கடைகளைப் பார்த்தேன். மார்க்கெட் விலையைவிட விலை கொஞ்சம் குறைவாக இருக்கிறது. அரிசி மாத்திரமல்ல, மற்ற உணவுப் பொருள்களும் மார்க்கெட் விலைக்குக் கொஞ்சம் குறைவான விலைக்கு விற்கப்படுகின்றன. இன்னும் இதை விருத்தி செய்யலாம். மொத்தமாக வாங்கக்கூடிய அமைப்பை நாம் விருத்தி செய்துவிட்டால், நாம் இன்னும் குறைவான விலைக்குக் கொடுக்க முடியும். இப்பொழுது சாதாரணமாகப் போய் அங்கு வாங்குகிறவர்கள் அதைப் பாராட்டுகிறார்கள். இதற்குப்பிறகு 75,000 ஜனத்தொகை உள்ள இடம், 50,000 ஜனத்தொகை உள்ள இடம் என்று சில இடங்களுக்கு விஸ்தரிக்கலாம். அதை கூடியமட்டும் பூராவாகச் செய்யலாம் என்றுதான் இருக்கிறோம். கிராமங்கள் பூராவும் இம்மாதிரி ஸ்டோர்ஸ் ஏற்படுத்துவதென்றால், அது ஒரு பெரிய திட்டமாகப் போய்விடும். நகரங்களில்தான் இந்தத் தொல்லை அதிகமாக இருக்கிறது. அதனால் அங்கெல்லாம் முதலில் இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதாக இருக்கிறோம். தொழிலாளர்கள் இருக்கக்கூடிய இடங்களில் தொழிலாளர்களுக்கென்று தனியாக ஸ்டோர்ஸ் ஏற்படுத்தப்படுகின்றன, இதற்கெல்லாம் மத்திய அரசாங்கம் பெரிய அளவுக்கு உதவி அளிக்கிறது. பணம் இதில் போடுவதற்கும், மற்ற செலவுகளுக்கும் அவர்கள் உதவி அளிக்கிறார்கள். அதை வைத்துக் கொண்டுதான் நாம் இந்தத் திட்டங்களை நிறைவேற்றுகிறோம்.

இப்பொழுது ரூ. 150-க்கு மேல் சம்பளம் வாங்குபவர்களுக்கு பஞ்சப்படியை உயர்த்தினோம் என்றால், அதற்குப் பிறகு ரூ. 400-க்கு மேல் சம்பளம் வாங்குகிறவர்களுக்கும் உயர்த்தக்கூடாதா என்று திரு. எம். எஸ். செல்வராஜன் அவர்கள் கேட்டார்கள். இப்படிக் கேட்டுக்கொண்டே போகலாம். இப்பொழுது மத்திய அரசாங்கம் எந்த அளவுக்கு செய்திருக்கிறார்களோ, அந்த அளவுக்கு நாமும் செய்திருக்கிறோம். ரூ. 400-க்கு மேல் சம்பளம் வாங்குகிறவர்களுக்கும் பஞ்சப்படி கொடுக்கலாம், கொடுத்தால் ஒன்றும் தப்பு இல்லை, கொடுத்தால் நல்லதுதான் கொடுப்பதற்கு ஒரு வரம்பு இருக்கிறது. கொடுப்பது அவசியமா என்பதையும் பார்க்க வேண்டும்.

அரசாங்க ஊழியர்கள் ரிட்டையர் ஆகும் வயதைப்பற்றி கனம் எதிர்கட்சித்தலைவர் அவர்கள் சொன்னார்கள். மத்திய அரசாங்கத்திலே ரிட்டையர் ஆகும் வயதை 55-லிருந்து 58-ஆக உயர்த்தி

[திரு. எம். பக்தவத்சலம்] [2nd February 1963

இருக்கிறார்கள். ஆனால் மத்திய அரசாங்கத்தில் ஊழியர்களாக இருப்பவர்களில் பெரும் பகுதியினர் இப்பொழுதே 60 வயதானவர்களாக இருக்கிறார்கள் என்று அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். விதியின்படி பெரும் பகுதியினர் அப்படியே இருக்கிறார்கள். இன்னொன்று அவர்கள் மத்திய பே கமிஷன் ஒன்று அமைத்தார்கள். அந்த பே கமிஷன் செய்த சிபார்சுப்படி சம்பள விகிதம் கொடுத்தார்கள். அந்த பே கமிஷனுடைய சிபார்சு ரிடையராகும் வயதை 55-லிருந்து 58-ஆக்கவேண்டும் என்பது. அதையும் இப்பொழுது மத்திய அரசாங்கம் நிறைவேற்றினார்கள். அகில இந்திய சர்வீஸைச் சேர்ந்தவர்கள் நம்முடைய மாநில ஆட்சியில் இருப்பவர்களுக்கும் அதே மாதிரி செய்வது நலம் என்று யோசனை தெரிவித்தார்கள். அதை நாம் ஏற்றுக்கொண்டிருக்கிறோம். அம்மாதிரி 55-வது வயதிலிருந்து ரிடையராகும் வயதை 58-க்கு உயர்த்துவதில், யாருடைய வேலையிலாவது நமக்குத் திருப்தியில்லை என்றால், நாம் 3 மாத நோட்டீஸ் கொடுத்துவிட்டால், நாம் அவர்களை எடுத்துக்கொள்ள முடியாது என்று சொல்லிவிடலாம். அல்லது அந்த உத்தியோகஸ்தர்களே தாங்களே வேலையை விட்டுப் போகிறோம் என்றும் சொல்லலாம். அகில இந்திய சர்விஸைப் பொறுத்தமட்டிலே ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., சர்வீஸுகளுக்கு மத்திய அரசாங்கம் செய்ததுபோல நாமும் செய்திருக்கிறோம். ஏன் நம்முடைய மாநில அரசாங்க ஊழியர்களுக்கும் அம்மாதிரி ரிடையராகும் வயதை உயர்த்தவில்லை என்றால் நாம் ஒரு பே கமிஷன் நியமித்தோம். அந்த பே கமிஷன் இம்மாதிரி சிபார்சு செய்யவில்லை. அதை நான் சாக்காகச் சொல்லவில்லை. மேலும், நம்முடைய மாநிலத்தில் இதுபற்றி ஊழியர்களிடத்திலே இரண்டு விதமான அபிப்பிராயங்கள் இருக்கின்றன. ஒரு சில உத்தியோகஸ்தர்கள், கொஞ்சம் வயதானவர்கள், 58-ஆக உயர்த்துவது நல்லது என்று சொல்கிறார்கள். வயது குறைவாக இருப்பவர்கள், இன்னும் உத்தியோகத்தை எட்டிப்பார்க்காதவர்கள் இன்னும் மூன்று ஆண்டுகளுக்கு தங்களுக்கு சான்ஸ் இருக்காதே என்று சொல்லுகிறார்கள். கொஞ்சம் வயது வந்தவர்கள் தங்களுக்கு ப்ரமோஷனுக்கு சான்ஸ் இருக்காதே என்று சொல்லுகிறார்கள். படித்துவிட்டு உத்தியோகத்திற்காக மனுப் போட்டுக் கொண்டிருப்பவர்கள் தங்களுக்கு பிளாக் ஆகிவிடுமே, 3 ஆண்டுகளுக்கு வேலை கிடைக்காமல் போய்விடுமே என்று சொல்லுகிறார்கள். ஊழியர்களின் ஒரு சங்கம் இதை ஆதரிக்கக்கூடாது என்று தெரிவித்திருக்கிறது. இன்னொரு சங்கம் இம்மாதிரி ரிடையராகும் வயதை உயர்த்த வேண்டும் என்று சொல்லியிருக்கிறது. அது அவர் அவர்களுடைய மனோபாவம், அவரவர்களுடைய நிலையைப் பொறுத்திருக்கிறது. அரசாங்கம் இந்தப் பிரச்சனையை நன்றாக ஆராய்ந்து ரிடையராகும் வயதை உயர்த்துவதில்லை என்று முடிவு செய்திருக்கிறது. ரிடையராகும் வயது இப்பொழுது இருக்கிறபடியே 55 வயதாக இருக்கட்டும் என்று தான் முடிவு செய்திருக்கிறது.



2nd February 1963] [திரு. எம். பக்தவத்சலம்]

மாணவர்களுக்கு ராணுவப் பயிற்சி கொடுப்பது பற்றி குறிப்பிட்டார்கள். இப்பொழுது அந்தப் பயிற்சி கொஞ்சம் விரிவாக்கப்பட்டிருக்கிறது. ஆனால் வருகிற ஆண்டிலிருந்து ஆண் மாணவர்களுக்கு கட்டாயமாக இந்தப் பயிற்சி கொடுக்கப்படும். மாணவர்கள் என்று சொன்னால் ஆண், பெண் இருபாலரையும் குறிக்கும் என்று நினைத்துதான் ஆண் மாணவர்கள் என்று சொன்னேன். மாணவிகளுக்கு அந்தப் பயிற்சி கட்டாயமில்லை. எனக்குக் கொஞ்சம் ஏமாற்றம்தான். இங்கு இருக்கிற பெண் அங்கத்தினர்கள், ரொம்ப உற்சாகம் உள்ளவர்கள், தீவிரவாதிகள், முற்போக்கு வாதிகள் இதைப்பற்றி ஒன்றும் கேட்கவில்லை. கனம் தங்கமணிமூர்த்தி கவுண்டர் இதைப்பற்றிச் சொன்னார்கள். அது அவர்களுடைய நிலை. பயம் என்று சொன்னார்கள். துப்பாக்கி இல்லாமலே எதைஎதையோ வைத்து சில சம்பவங்கள் நடக்கின்றன. துப்பாக்கியை வைத்துக்கொண்டிருந்தால் அச்சமாக இருக்கிறது என்று சொன்னார்கள். ஆனால், பண்டைக் காலத்தில் பெண்மணிகள் வீரர்களாக திகழ்ந்தார்கள். துப்பாக்கி எடுத்து, கத்தி ஏந்தி சண்டை செய்தார்கள். தமிழ் நாட்டில் கட்டபொம்மன் நாடகத்தை கனம் சுதந்திராக் கட்சித் தலைவர் அவர்கள் பார்த்திருக்கலாம். நாடகத்தைப் பார்த்துத் தானே தெரிந்து கொள்ளலாம். நாம் நேராகவா பார்த்திருக்கிறோம். கட்ட பொம்மன் நாடகத்தில் ஒரு பெண் வீராவேசத்தோடு கத்தியை ஆட்டுகிறாள். அதைப் பார்த்து புருஷன் பயப்படுகிறான். (சிரிப்பு.) அம்மாதிரியெல்லாம் நாம் பார்க்கிறோம். ஜான்ஸி ராணியைப்பற்றி கேள்விப்பட்டிருக்கிறோம். கனம் அங்கத்தினர் அவர்கள் புறநானூரை நன்றாகப் படித்தவர்கள். நான் சொல்லுகிறேன், தற்காப்புக்கு ராணுவப் பயிற்சிகூட முக்கியமாக வேண்டும். இப்பொழுது ராணுவப் பயிற்சி கொடுப்பதென்றால், என்.ஸி.ஸி. மாணவர்களுக்கு பயிற்சி கொடுப்பதென்றால், நேரே யுத்தத்திற்கு போவதற்காக கொடுக்கப்படவில்லை; தற்காப்புதான் இப்பொழுது முக்கியம், தற்காப்புக்கும் ஒரு கட்டுப்பாடு வேண்டும். ஒரு துணிவு வேண்டும். சாதாரணத் துணிவைவிட அதிகத் துணிவு வேண்டும். ஆண்களுக்கும், பெண்களுக்கும் வேண்டும். மகாத்மா காந்தி அவர்கள் கூறியிருப்பதை கனம் அங்கத்தினர்கள் உணர்ந்திருப்பார்கள் என்று நினைக்கிறேன். அவர்கள் பலாத்காரத்தைத் தடை செய்யவில்லை. ஆபத்து ஏற்பட்டால், பலாத்காரத்திலும் பெண்மணிகள் ஈடுபடலாம் என்று சொல்லியிருப்பதை கனம் அங்கத்தினர்களுக்கு நினைவூட்டுகிறேன். இந்த மாதிரிப் பயிற்சி இல்லை என்றால், துணிவு எப்படி வரும்? இயற்கையாக சில சம்பவங்களைப் பற்றிக் கேள்விப்படுகிறோம். அதுவும் கிராமங்களிலேதான். நகரங்களில் அம்மாதிரி இல்லை. இப்பொழுது ஆண்களுக்கு பயிற்சி கட்டாயமாக வைத்திருக்கிறோம். பெண்களுக்கு பயிற்சி கொடுக்கப்படுகிறது; கட்டாயம் ஆக்கப்படவில்லை. சட்டசபையில் இருக்கும் பெண்களின் பிரதிநிதிகள்கூட அவ்வாறு கேட்கவில்லை. இங்கே உள்ள பிரதிநிதிகள் வயதானவர்கள். ஒரு வேளை பயப்படுகிறார்கள் போலும். ஆனால் என்னிடத்திலும், கனம் முதலமைச்சர் அவர்களிடத்திலும் கல்லூரி மாணவிகள்

[திரு. எம். பக்தவத்சலம்] [2nd February 1963

அவர்கள் கல்லூரியிலே இந்தப் பயிற்சி கொடுக்கமாட்டோம் என்று சொல்வதாகப் புகார் செய்கிறார்கள். மாணவிகள் இந்தப் பயிற்சி பெறத் துடிக்கிறார்கள். குடியரசு தினத்தன்று கனம் எதிர்க் கட்சித் தலைவர் அணிவகுப்பை யெல்லாம் பார்த்தார்கள். அந்த அணி வகுப்பிலே என்.ஸி.ஸி. மாணவிகள் சென்ற மிடுக்கு ஆண்களிடத்திலே காணப்படவில்லை. (சிரிப்பு.) மாணவிகளெல்லாம் என்னிடத்திலேயும் கனம் முதல் அமைச்சர் அவர்களிடத்திலும், கல்லூரிகளிலே அவர்களை சேர்க்கமாட்டேன் என்று சொல்லுவதாக புகார் சொன்னார்கள். எல்லாக் கல்லூரிகளிலும் இது கட்டாயமில்லை என்றாலும், ஒரு யூனிட்டாவது வைத்துக்கொள்ள வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். எல்லோரும் ஒப்புக் கொண்டு இருக்கிறார்கள். ஒரே ஒரு கல்லூரி மட்டும் அதற்கு ஒப்புக்கொள்ளவில்லை. மனச் சாட்சி இடம் கொடுக்கவில்லை என்றும், பெண்களைக் கொல்லுவதா என்றும் சொல்லுகிறார்கள். (ஒரு அங்கத்தினர் : அது எந்தக் கல்லூரி?) சென்னை நகரிலுள்ள கல்லூரி அது. அவர்கள் ஆட்சேபணை தெரிவிக்கிறார்கள். பெண்கள் கூட கொலை செய்கிறார்கள் என்பது வேலூரில் உள்ள பெண்கள் சிறைக்குச் சென்றுபார்த்தால் தெரியும். அதிலும் இப்பொழுது பெண்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருப்பது பிரத்தியேகமான பயிற்சி. ஆண்களுக்குக் கொடுப்பது மாதிரி அல்ல. முதல் உதவி, நர்ஸிங், டெலி-கம்யூனிகேஷன், இவைகளில் எல்லாம்கூட பயிற்சி கொடுப்பதற்கு ஏற்பாடு செய்து இருக்கிறோம்.

ஹோம் கார்டு படை போலீசாருக்கு உதவியாக இருக்கும். முழு நேரப் படை என்று இதை எடுத்துக்கொள்ளக் கூடாது. வருகிற சட்டசபைக் கூட்டத்திலே இதற்கான மசோதா கொண்டு வரப்படும். சீக்கிரமாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதற்காக ஒரு அவசரச் சட்டம் பிறப்பித்திருக்கிறோம். இந்தப் படை நகரத்திலேதான் இருக்கும். கிராமத்திற்கு வேண்டியதில்லை. போலீசாருக்கு உதவியாக இந்தப்படை இருக்கும். இதிலே பயிற்சி பெறுவது நல்லது. சமயத்திற்கு உதவ வேண்டும் என்ற நோக்கத்தோடு இந்த ஹோம் கார்டு படை நிறுவப்படுகிறது. நெருக்கடியான சூழ்நிலையில் மட்டும் அல்லாமல், நிரந்தரமாக இந்த ஹோம் கார்டு படையை வைத்துக்கொள்ள வேண்டும் என்பதுதான் என்னுடைய எண்ணம்.

கிராமத் தொண்டர் படையைப் பற்றி கனம் அங்கத்தினர்கள் சிலர் குறிப்பிட்டார்கள். கிராமங்களிலே உள்ளவர்கள் விழிப்பாக இருக்க வேண்டும், வழிகாட்டியாக இருக்க வேண்டும். அதற்கும் ஒரு பயிற்சி வேண்டும். இளைஞர்களையும், ஆசிரியர்களையும்கூட இதிலே சேரச் சொல்லியிருக்கிறோம். பஞ்சாயத்து அங்கத்தினர்களும் இதிலே சேரவேண்டும் என்பது என்னுடைய அவா. கனம் அங்கத்தினர்கள் சிலர் வேறு சில கருத்துக்களையும் தெரிவித்தார்கள். அதெல்லாம் இப்பொழுது வேண்டியதில்லை. இப்பொழுது இந்தப் படை தொடங்கப்பட்டு ஒரு நியூக்ளியஸாக இருக்கும். அதற்குப் பிறகு எந்த வகையில் இதை மேலும் விரிவு படுத்தலாமோ அந்த வகையில் விரிவுபடுத்தலாம்.



2nd February 1963] [திரு. எம். பக்தவத்சலம்]

வைத்தியக் கல்லூரியில் உள்ள நெருக்கடியைப் பற்றி கனம் எதிர்க் கட்சி தலைவர் அவர்கள் சொன்னார்கள். நாம் குறைந்து போய்விட்டது என்றும் சொன்னார். இந்த விஷயம் இப்பொழுது கவனிக்கப்பட்டு வருகிறது. சீக்கிரத்திலே, மருத்துவக் கல்லூரி இல்லாத மாவட்டத்திலே ஒரு நல்ல கல்லூரியை அமைக்க வேண்டும் என்பதுதான் அரசாங்கத்தின் உத்தேசம். வருகிற வரவு-செலவுத் திட்டத்திலோ, அல்லது வைத்திய மானியம் வரும் பொழுதோ, எந்த இடத்திலே இந்தக் கல்லூரி வைக்கப்படும் என்பது தெரிவிக்கப்படும். ஒரு பெரிய கல்லூரியை அமைக்க வேண்டும் என்பதுதான் நோக்கம்.

வேறு சில கருத்துக்களைப் பற்றியும் இங்கே சொன்னார்கள். ஓவர்ஸியர் பயிற்சியைப் பற்றிச் சொன்னார்கள். எல்லாவற்றையும் கவனிக்கலாம். இது உபமான்யக் கோரிக்கைகளின் மீது நடக்கும் விவாதம். இலாகாக்களைப் பற்றியது. ஆனால் கனம் அங்கத்தினர்கள் பலர் பொது வரவு-செலவுத் திட்டத்தைப் பற்றி பேசினார்கள். இருந்தாலும் எல்லாம் கவனிக்கப்படும். ஒவ்வொன்றாக குறிப்பிடாததற்கு நான் சமாதானம் சொல்லுகிறேன் என்று நினைக்கவேண்டாம். அவரவர்களுடைய கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள்.

அடுத்து காய்கறிகள் உற்பத்திக்காக ஒரு திட்டம் இருக்கிறது. காய்கறிகள் பயிரிடும் திட்டத்தை கிராமங்களுக்கு விஸ்தரிக்க வேண்டும் என்று சொன்னார்கள். இது நல்ல யோசனை. கிராமத்தில் உள்ளவர்களும், விவசாயிகளும் இதை எடுத்துக் கொள்ள வேண்டும். பஞ்சாயத்து அங்கத்தினர்கள் ஊக்கம் காட்ட வேண்டும். சட்ட மன்ற அங்கத்தினர்கள் அவர்களை ஊக்குவிக்க வேண்டும். பிறகு ஏதாவது உதவி வேண்டுமென்றால், விவசாய அமைச்சர் அவர்களிடம் தெரிவித்து எந்தெந்த வகையிலே மேலும் ஊக்கம் அளிக்கலாம் என்பதைப் பற்றி கவனிக்கலாம்.

ஏற்றுமதியை அதிகப்படுத்துவது மிகவும் முக்கியம். நமது நாட்டின் செல்வ நிலையை உயர்த்த வேண்டுமென்றால் ஏற்றுமதியை உயர்த்தாமல் அதைச் செய்ய முடியாது. இன்றைக்கு ஐரோப்பாவிலே வாழ்க்கைத் தரத்திலே ஒரு நாடு முதன்மையாக இருக்கிறது என்றால், அந்த நாட்டின் செல்வம் ஏற்றுமதியின் மூலமாகத்தான் வளர்ந்திருக்கிறது. நாமும் இது விஷயத்தில் கவனம் செலுத்த வேண்டும். அதற்காக எக்ஸ்போர்ட் பிரமோஷன் கவுன்சில் என்று ஒன்று இருக்கிறது. அதற்கென்று மந்திய அமைச்சர் ஒருவரும் இருக்கிறார். சமீபத்திலே சென்னையிலே ஒரு மகாநாடு நடந்தது. இதையெல்லாம் நல்ல முறையிலே செய்ய வேண்டுமென்றால் நாணயம் மிகவும் முக்கியமானது. இதைப் பற்றி கனம் சுதந்திரா கட்சித் தலைவர் குறிப்பிட்டார். இதிலே எல்லாம் பொது மக்களுடைய கண்காணிப்பு வேண்டும். எவ்வளவோ சட்டம் போட்டாலும், தண்டனையை அதிகப்படுத்தினாலும் போதாது. பொது மக்களுடைய கண்காணிப்பு முக்கியம் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

[திரு. எம். பக்தவத்சலம்] [2nd February 1963

அடுத்தபடியாக, சைனிக் பள்ளிக்கூடத்தைப் பற்றி பேசினார்கள். அகில இந்தியாவிலும் 11 பள்ளிகள்தான் இருக்கின்றன. ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு பள்ளிக்கூடம் வேண்டும் என்று கேட்கிறார்கள். இப்பொழுது இந்தப் பள்ளியை அமராவதியில் நிறுவியிருக்கிறோம். அங்கே ஏற்கெனவே சில வீடுகள் இருந்தன. அங்கே ஆரம்பித்து இருக்கிறோம். மதுரையிலே இருக்கிறவர்கள் தங்களுக்கு ஒரு பள்ளி வேண்டுமென்று கேட்டார்கள். இப்பொழுது கோயம்புத்தூரில் இருக்கக் கூடியவர்கள் இந்தப் பள்ளி போய்விடுமே என்று வேறொரு பள்ளி வேண்டும் என்றும் கேட்கிறார்கள். இது ஒரு சிறந்த பள்ளிக்கூடம். நான் போய்ப் பார்த்தேன். கனம் அங்கத்தினர்கள் எல்லோரும் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். என்னிடம் தெரிவித்தால் சுற்றிப் பார்ப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யலாம். இது ஒரு பப்ளிக் ஸ்கூல் மாடலிலே இருக்கிறது. 100-க்கு 67 வீதம் தமிழ் நாட்டுப் பிள்ளைகள் படிக்கிறார்கள். அகில இந்திய உணர்ச்சி ஏற்பட வேண்டும் என்பதற்காக மற்ற மாநிலங்களிலுள்ள பிள்ளைகளும் இங்கு படிக்கிறார்கள். பஞ்சாபிலிருந்து ஏராளமாக வந்திருக்கிறார்கள். அந்தந்த ராஜ்யங்களிலே உள்ள மாணவர்களுக்கு அந்த ராஜ்ய அரசாங்கம் ஸ்காலர்ஷிப் கொடுக்கிறது. நாமும் ஓரளவு ஸ்காலர்ஷிப் கொடுக்கிறோம். மாணவர்களுக்கு நல்ல பயிற்சி கொடுக்கப்பட்டு வருகிறது. நேரடியாக ராணுவப் பயிற்சி என்று இல்லை. சரித்திரம், விஞ்ஞானம், பூகோளம் எல்லாம் போதிக்கப்படுகிறது. உடல் பயிற்சி நல்ல முறையில் கவனிக்கப்பட்டு வருகிறது. எனக்கு அந்தப் பிள்ளைகளைப் பார்த்ததிலே ஒரு திருப்தி. கனம் அங்கத்தினர் திருமதி கொளந்தையம்மாள் அவர்கள், ஆங்கிலம்தான் பொதுவான மொழியாக இருக்கிறது என்று சொன்னார்கள். தமிழுக்கு ஒன்று, தெலுங்குக்கு ஒன்று, கன்னடத்திற்கு ஒன்று என்று வைத்துக்கொள்ள முடியாது. ஆங்கிலம் தெரிந்தவர்கள் இந்தப் பள்ளியில் படிக்கிறார்கள். நல்ல பயிற்சி அங்கே அளிக்கப்பட்டு வருகிறது. இது தாற்காலிகமானதுதான். பின்னர் அந்த கட்டிடத்திற்கு எல்லாம் பயன் இருக்கும். கோடைக்கானலில் நிரந்தரமாக அமைப்பது என்பதுதான் உத்தேசம். இடம் பார்த்தாய் விட்டது. வன இலாகாவினர். ஒரு இடத்தை ஒதுக்கி இருக்கிறார்கள். நிரந்தரமாகக் கட்டுவதற்கு நாளாகும். அதற்குள்ளாகவே ஒன்று அமைக்க வேண்டும் என்று கருதி, ஏற்கெனவே மத்திய பாதுகாப்பு அமைச்சராக இருந்தவர்கள் இதிலே அக்கறை காட்டி. இந்தப் பள்ளி ஆரம்பிக்கப்பட்டது. மத்திய அரசாங்கத்தின் மேற்பார்வையில் இருந்தாலும், இந்த அரசாங்கத்தின் பள்ளியாகத்தான் இருக்கிறது. இம்மாதிரிப் பள்ளிகளை, இரண்டு. மூன்று என்று அதிகப் படுத்த முடியாது.

1—30 மேலும் சில பிரச்சினைகளைப்பற்றியும். குறிப்பாக போலீசாருக்குச் செய்யப்பட வேண்டிய வசதிகளைப் பற்றியும் கனம் அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள். போலீசாருக்கு வசதி செய்து கொடுக்கப்பட்டுத்தான் வருகிறது. முக்கியமாக வீட்டு வசதிகள் போலீசாருக்குப் பெருக்கப்பட்டு வந்தாலும், அதிலே மேலும்



800 009

2nd February 1963] [திரு. எம். பக்தவத்சலம்]

அதிகக் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. போலீசாருடைய வீடுகளுக்காக மாத்திரம் இந்த ஆண்டு மட்டும் 79 லட்சம் ரூபாய்க்கு மேலே செலவாகும். இத் திட்டத்தை 1958-ஆம் ஆண்டிலிருந்து தொடங்கினோம். இது வரை 362 லட்ச ரூபாய் வரை செலவு செய்யப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டுச் செலவையும் சேர்த்தால் சுமார் 4½ கோடி ரூபாய் வரைக்கும் போலீசாருடைய வீட்டு வசதிக்காகச் செலவு செய்யப்பட்டிருக்கிறது. போலீசாருக்கு வீட்டு வசதி எவ்வளவு தூரம் பெருக்க முடியுமோ, அவ்வளவு தூரம் பெருக்கிக் கொண்டுதான் வருகிறோம். போலீசார்களே இது பற்றிப் பெருமைப்படுவதுண்டு. சைன்யங்களில் சேர்ந்து எல்லைப் புறத்தில் போராடிக்கொண்டு வருகிறார்களே அவர்களுக்கே பெருமை அளிக்கக் கூடியதாக இருக்கிறது. அவர்கள் போவதால் இன்னும் அதிகமாகப் போலீசாரை வைத்துக்கொள்ள வேண்டியதாக இருக்கிறது.

ஹெளஸ் ஸர்ஜன்களுக்கு முன்பு அலவன்ஸ் இல்லாமலிருந்தது. இப்பொழுது கொடுப்பதாக ஒத்துக்கொண்டோம். ஹெளஸ் ஸர்ஜன், இன்டர்னீஸ் இரண்டு பேர்கள் வேண்டாம் என்று நிறுத்தி விட்டோம். பயிற்சிக் குறைபாடு பற்றி சில கனம் அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள். பயிற்சியின் தரம் ஒரு சிறிதும் குறைபாதபடியும், நம்முடைய தேவை உடனடியாக பூர்த்தியாக வேண்டும் என்பதையும் மனதில் கொண்டுதான் இது கவனிக்கப்பட்டு வருகிறது.

மீன்குப்பம் பற்றி கனம் அங்கத்தினர் ஒருவர் குறிப்பிட்டார். எனக்கு ரொம்ப நாளாகத் தெரிகிறது எத்தனையோ மாறுதலாயிருக்கிறது. இது மிகவும் கஷ்டமான பிரச்சினை. கையை வைத்தால் எத்தனையோ ஆட்சேபனைகள் வருகின்றன. ஏழை மக்கள் சௌகரியமாக வாழ வேண்டும். அவர்களுக்கு அவதி இருக்கக்கூடாது. நாம் எந்தச் சட்டம் செய்தாலும், அவர்களுக்கு ஒரு அவதியும் இல்லாமல் செய்யவேண்டும். இப்பொழுது வீடுகள் கட்டுவதற்குத்தான் உப மான்யம் கோரப்படுகிறது. வீடுகள் ஓரளவு கட்டப்பட்டு வருகின்றன. இப்பொழுதிருக்கும் வீடுகள் போதாதுதான். வீடுகள் கட்டுவதை எந்த அளவுக்கு அதிகப்படுத்த முடியும் என்பதைக் கவனித்து, அதைச் செய்யலாம்.

திருத்தணிப் பிரதிநிதி அவர்கள் பேசும்போது, விவசாயிகளுக்கு உரம் கிடைக்கவில்லை, இன்னும் சில வசதிகள் கிடைக்கவில்லை' என்று சொன்னார். ஆனால், திருத்தணியிலிருந்து ஆந்திராவுக்கு உரம் போய்விடுகிறது என்று புகார்களும் வருகின்றன. உர விநியோகப் பொறுப்பை கூட்டுறவு சங்கங்களுக்குக் கொடுத்திருக்கிறோம். என்றாலும். திருத்தணியிலிருந்து ஆந்திராவுக்கு உரம் போகிறது என்று சொல்கிறார்கள். அதையும் கொஞ்சம் கவனிக்க வேண்டும். உரம் எல்லோருக்கும் கொடுப்பது [illegible]

[திரு. எம். பக்தவத்சலம்] [2nd February 1963

தான் ஏற்பாடு செய்திருக்கிறோம். ஆனால், அந்தப் பகுதியிலிருந்து ஆந்திராவுக்கு உரம்போவதால்தான் பற்றாக்குறை வருகிறது.

இப்பொழுது நியாய விலைக் கடைகள் வைப்பதற்காக ஓரளவு மில்காரர்களிடமிருந்து அரிசி வாங்குவதாக இருக்கிறோம். விவசாயிகளிடம் நேராகப் போனால், அவர்களுக்கு கஷ்டம் ஏற்படுமே என்று தான் இந்த முறையை வைத்திருக்கிறோம். 'நேராகவே நாங்கள் கொடுக்கிறோம், தாலூகா கூட்டுறவு சொஸைட்டி மூலமாகக் கொடுக்கிறோம்' என்று சொல்லி, விவசாயிகள் முன்வருவார்களானால், அப்படிக் கொடுக்கலாம். நாம் கொடுக்கும் விலை குறைந்த விலையாயிற்றே, அவர்களுக்குக் கஷ்டம் ஏற்படுமே என்றுதான் இந்த முறையை வைத்திருக்கிறோம். விவசாயிகளே நேரடியாகக் கொடுப்பதாக இருந்தாலும், அரசாங்கத்திற்கு ஆட்சேபணை இல்லை.

நீலகிரி பிரதிநிதி அவர்கள்—அவர் எப்போதும் கண்காணிப்பாக இருக்கிறவர்—பேசும்போது, நீலகிரியில் ப்ளாட் டிஸீஸ் இருக்கிறது என்று சொன்னார். நீலகிரியில் இருக்கிற இந்த டிஸீஸ் செங்கற்பட்டுக்கு வரவில்லையே என்று அவர் சொல்லமாட்டார் என்றே நான் நினைக்கிறேன். எது எப்படியிருந்தாலும், உருளைக் கிழங்கு விஷயத்தில் தேவைப்படுகிற மருந்தை இறக்குமதி செய்ய வேண்டியிருக்கிறது. அதற்கு அன்னிய நாட்டுச் செலாவணி தேவைப்படுகிறது. அதைப்பற்றி மத்திய அரசாங்கத்திடம் வற்புறுத்தியதன் பேரில் மருந்தும் வருகிறது. ஸ்காட்ஸ் ஸீட்ஸ் கிடைக்கவும் ஏற்பாடு செய்துதான் வருகிறோம். நீலகிரியில் தான் வறட்சி என்று சொல்வது சரியல்ல. வறட்சி எங்கும்தான் இருக்கிறது. தமிழ்நாடு வறட்சி பகுதிகள். வறட்சி அப்படியே இருக்கிறது என்றும் சொல்லக்கூடாது. இக்கரைக்கு அக்கரைப் பச்சையாகத் தோன்றும். வறட்சி நீங்கிக்கொண்டுதான் வருகிறது. விவசாயத்தில் எங்கெங்கு பிற்போக்கான நிலை இருக்கிறதோ, அங்கெல்லாம் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. அந்த வகையிலே தான் இப்பொழுது இத்தனை மான்யக் கோரிக்கைகள் சபை முன் வந்திருக்கின்றன.

போலீஸ் ஸ்டேஷனில் உள்ள ரைட்டருக்கு யூனிபாரம் ட்ரெஸ் வேண்டியதில்லை என்று ஒரு கனம் அங்கத்தினர் சொன்னார். இதிலெல்லாம் நாம் தலையிடக் கூடாது. இது டிஸிப்ளின் சம்பந்தப்பட்ட விஷயம். போலீஸ் துறையிலுள்ளவர்கள் கருத்துப்படி தான் நாம் செய்ய வேண்டுமே தவிர, அரசாங்கமே இங்கிருந்து உத்தரவு போடக்கூடாது. ரைட்டர்கள் யூனிபாரம் ட்ரெஸ் போட்டுக் கொண்டுதான் இருக்கவேண்டும். ஏனென்றால், போலீசாருக்கு கட்டுப்பாடு என்பது அடிப்படையாகக் காணப்பட வேண்டிய அம்சம். இதில் எல்லாம் கனம் அங்கத்தினர்கள் ஒன்றும் கவலைப்பட வேண்டாம் என்று கேட்டுக்கொண்டு என்னுடைய வார்த்தைகளை இத்துடன் முடித்துக் கொள்கிறேன்.



II.—ANNOUNCEMENTS—*cont.*

(2) THE MADRAS ADDITIONAL ASSESSMENT AND ADDITIONAL WATER CESS BILL, 1963.

MR. SPEAKER: I have to announce to the House that the Governor has given his recommendation to the introduction in and consideration by the Madras Legislative Assembly of the Madras Additional Assessment and Additional Water Cess Bill, 1963. The Bill will be taken up for introduction on Monday, the 4th February 1963.

The House will now adjourn and meet again at 8-30 a.m. on Monday, the 4th February 1963.

The House then adjourned. 1-33 p.m.

VI.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

### A. Statutory Rules and Orders.

* 87. *Notification issued with G.O. Ms. No. 4516, Revenue, dated 7th December 1962 appointing the 3rd January 1963 as the date on which the provisions of the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1948 other than sections 1, 2, 4, 5, 7, 8, 58-A, 62, 67 and 68 which have already come into force, shall come into force in Mudukkavayal under-tenure estate of Tiruvadanai taluk in the Ramanathapuram district. [Laid on the Table of the House under section 67 (4) of the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1948 (Madras Act XXVI of 1948).]*

* 88. *Notification issued with G.O. Ms. No. 2272, Rural Development and Local Administration, dated 18th October 1962 issuing "The Conduct of Election of Corporation Councillors Rules, 1962" under the Madras City Municipal Corporation Act, 1919. [Laid on the Table of the House under section 348 (d) of the Madras City Municipal Corporation Act, 1919 (Madras Act IV of 1919).]*

### B. Reports, Notifications and other papers

† 22. *Short Review of the activities of the Weights and Measures Department during the period from 1st April to 30th September 1962.*

* Placed on the table of the House on 1st February 1963.

† Kept in the library for perusal by Members.

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

**Monday, 4th February 1963.**

The House met in the Assembly Chamber, Fort St. George, at half-past eight of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

## I.—QUESTIONS AND ANSWERS

## STARRED QUESTIONS.

*Tamil medium of instruction (colleges)*

* 53 *Q.*—SRI K. A. MATHIALAGAN (on behalf of Sri M. Kalyanasundaram): Will the Hon. the Minister for Finance be pleased to state the steps taken to review the progress and assess the achievement in education as a result of the introduction of Tamil as medium of instruction for collegiate studies and the results of such a review?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: The Government have appointed a Committee called the Programme Evaluation Committee to watch the Progress of Education through the Tamil medium in the B.A. Degree course. The report of the Committee has been placed on the Table of the House in answer to question No. 1320, answered on 2nd November 1962. Copies of the same are available in the library. Its recommendations are under consideration.

*அரசினர் திட்ட மதிப்பீடு குழு ஒன்றினை நிறுவி பி.ஏ. பட்ட வகுப்பில் தமிழ் மூலமாக போதிக்கப்படுவதை கண்காணிக்க அமைத்திருக்கிறார்கள். 1962-ம் வருஷம் நவம்பர் மாதம் 2-ம் தேதி அன்று பதிலளிக்கப்பட்ட 1320-ம் எண் கேள்விக்கு பதிலாக அந்தக் குழுவின் அறிக்கை ஏற்கனவே சட்டசபை முன் வைக்கப் பட்டிருக்கிறது. அந்த அறிக்கையின் நகல்கள் சட்டசபை நூலகத்தில் இருக்கின்றன. அந்த குழுவின் சிபார்சுகள் கவனிக்கப் பட்டு வருகின்றன.*

***ஆங்கில போதனா மொழி (உயர்நிலை பள்ளிகள்)***

* ***54 கேள்வி.—திரு. கே. ஏ. மதியழகன் (திரு. க. ர. நல்லசிவம் சார்பாக):*** *கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—*

*(அ) 1962-ல் ஆங்கிலம் மூலம் பாடம் போதிக்க எத்தனை உயர் நிலைப் பள்ளிகளிலிருந்து அனுமதி கோரப்பட்டுள்ளது?*

*(இ) எத்தனை பள்ளிகளுக்கு அனுமதி கொடுக்கப்பட்டுள்ளது?*

***கனம் திரு. எம். பக்தவத்சலம்:*** *(அ) 145.*

*(இ) 98.*

[4th February 1963

**திரு. வை. சங்கரன்:** அந்தப் பள்ளிகளிலே ஆங்கிலம் மட்டுமே இருக்கவேண்டுமென்று அம்மாதிரி அனுமதி கேட்டிருக்கிறார்களா? அப்படியானால் எத்தனை பழைய உயர்நிலைப் பள்ளிகள், எத்தனை புதிய உயர்நிலைப் பள்ளிகள் கேட்டிருக்கின்றன?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** தமிழ் போதனா மொழியாக பல செக்ஷன்களிலே இருக்கின்றன. அதோடு சிலர் ஆங்கிலம் வேண்டுமென்றும், அதற்கு ஒரு செக்ஷனை வைத்துக் கொள்ளலாம் என்றும் கேட்டுக்கொண்டார்கள். அப்படி 145 பள்ளிகள் கேட்டதற்கு இதுவரையில் 98 பள்ளிகளுக்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது.

**திரு. இரா. நெடுஞ்செழியன்:** ஆங்கிலம் பயிற்சி மொழியாக இருக்கவேண்டுமென்று கேட்கின்ற சில பள்ளிகளிலே, தமிழிலே சொல்லிக் கொடுப்பதற்கு ஒரு செக்ஷனை ஏற்படுத்தி வசதி செய்து கொடுக்கவேண்டுமென்று ஏதாவது கோரிக்கை வந்திருக்கிறதா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** அவ்வாறு ஒன்றும் வரவில்லை. ஆனால் முன்பு ஆங்கிலமே வைத்துக் கொண்டிருந்த பள்ளிகளிலே கூட தமிழ், தெலுங்கு போன்ற நம்முடைய மொழிகளைச் சேர்த்திருக்கிறார்கள். உதாரணமாக கிருஸ்துவ உயர்நிலை பள்ளியில் முன்பு எல்லாம் ஆங்கிலத்தைத் தவிர வேறு மொழியிலே பாடம் சொல்லிக் கொடுக்கப்படவில்லை. இப்பொழுது அது மாற்றப்பட்டு தமிழிலும் சொல்லிக் கொடுக்கப்பட்டு வருகிறது.

**திரு. டி. கார்ச்சா கவுடர்:** வருகிற கல்வி ஆண்டில் ராஜ்யத்திலுள்ள எல்லா உயர்நிலைப் பள்ளிகளிலும் ஆங்கிலத்தில் ஒரு செக்ஷனை வைத்துக்கொள்ளவேண்டுமென்று அரசாங்கம் உத்திரவிடுவார்களா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** அவ்வாறு செய்வதற்கு அரசாங்கத்திற்கு உத்தேசம் இல்லை, அவசியம் இல்லை.

**திரு. வை. சங்கரன்:** முக்கிய நகரங்களிலுள்ள பள்ளிக்கூடங்களில் ஆங்கிலத்தை வைப்பதற்கு மனுக்கள் வந்தால் எந்த முறை அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** கூடியவரை நகரங்களில் இருந்து இம்மாதிரி மனுக்கள் வந்தால் கவனிக்கப்பட்டு வருகின்றன. எல்லா மாவட்ட தலைமை ஸ்தலங்களிலும் ஏதாவது ஒரு பள்ளி இருக்க வேண்டும். அப்போதுதான் பக்கத்து பிராந்தியத்தில் இருப்பவர்கள் அந்தப் பள்ளிக்குப் போகமுடியும். அதோடுகூட நம்முடைய சர்க்கார் ஊழியர்களுக்கு அடிக்கடி மாற்றம் ஏற்பட்டால் அவர்களுடைய பிள்ளைகள் வேறு மொழியிலே அங்கு படிக்க முடியும். மொத்தத்தில் இவர்களுடைய நலனை உத்தேசித்து ஜில்லா தலைமை நிலையத்தில் ஒரு பள்ளி அமைக்கப்பட்டு வருகிறது.



4th February 1963]

**திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, இப்போது எந்த வகுப்பிலிருந்து ஆங்கிலம் கற்பிக்கப்பட்டு வருகிறது. அதில் ஏதாவது மாற்றம் உண்டா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** இப்போது ஆங்கிலம் 4-வது ஸ்டாண்டர்டிலிருந்து சொல்லிக்கொடுக்கப்பட்டு வருகிறது. அடுத்த ஆண்டிலிருந்து 3-வது ஸ்டாண்டர்டிலிருந்து சொல்லிக் கொடுக்க அரசாங்கம் உத்தேசித்திருக்கிறது.

**திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர்:** சட்டமன்றத் தலைவர் அவர்களே, தமிழ் நாட்டைப் பொறுத்தவரை கனம் கல்வி அமைச்சருடைய கருத்துக்கள் மிகவும் உயர்வானவை. அவைகள் எப்போது அமுலாக்கப்படும் என்று அறிய விரும்புகிறேன். அடுத்தபடியாக, அவர்களுடைய கருத்துக்கள் பெரும்பாலும் பெற்றோர்களாலும், மாணவர்களாலும் மிகமிக ஆதரிக்கப்பட்டு வருகின்றன. ஆகையால் அவைகளை எப்பொழுது அரசாங்கம் அமுலாக்க உத்தேசித்திருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** கல்விப் பிரச்னையைக் குறித்து அரசாங்கம் கொண்டிருக்கும் கருத்துக்கள் முடிவாக ஆராயப்பட்டு மார்ச் மாதம் 30-ம் தேதி யன்று இந்த மன்றத்தின் முன் சமர்ப்பிக்கப்பட்டு, மன்றத்தின் அபிப்பிராயம் தெரிந்து கொள்ளப்படும் என்று நான் முன்பே சொல்லியிருக்கிறேன். அப்பொழுது கனம் அங்கத்தினர் தங்களுடையப் பாராட்டுதலையும் ஏதாவது யோசனைகளையும் சொல்லவேண்டுமென்றால், அதாவது மார்ச் மாதம் 30-ம் தேதியன்று அரசாங்கத்தின் முடிவை சமர்ப்பிக்கும்போது, சொல்லலாம். அப்பொழுது எல்லோருடைய யோசனைகளையும் கேட்ட பிறகு, அடிக்கடி மாற்றக்கூடிய நிலைமை இல்லாமல் ஒரு இறுதியான கல்வித் திட்டத்தை ஏற்படுத்த முடியும் என்று நம்புகிறேன்.

### தேச பாதுகாப்புச் சட்டம் (கைது செய்யப்பட்டவர்கள்)

*55. கேள்வி.—திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தேச பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டவர்கள் எத்தனை பேர்?

(இ) அவர்களில் இதுவரை விடுதலை செய்யப்பட்டவர்கள் எத்தனை பேர்?

(உ) விடுதலை செய்யப்பட்டதின் காரணம் என்ன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) 107 persons were detained under the Defence of India Rules.

(b) Of these, 61 have been since released.

(c) Their release was ordered, as it was considered, after a review of their cases that it was not necessary to keep them under detention any longer.

[4th February 1963

திரு. என். மாதவன் : கேரளாவில் கம்யூனிஸ்ட் ஆட்சி இருந்தபோது அதைவிடக் குறைவான பேர்கள்தான் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் என்பது உண்மையா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கேரள மாநிலத்தில் இப்பொழுது கம்யூனிஸ்ட் ஆட்சி இல்லை. கனம் அங்கத்தினரின் கருத்திற்கும்; சர்க்கார் நிலைமைக்கும் பெரிய வித்தியாசம் இருக்கிறது.

திரு. கே. ஏ. மதியழகன் : இப்பொழுது விடுவிக்கப்பட்டிருக்கும் கம்யூனிஸ்ட் தலைவர்களைவிட சிறையில் அதிகமான தலைவர்கள் இருக்கிறார்களே, இப்பொழுதுள்ள சூழ்நிலையை உத்தேசித்து அரசாங்கம் மீண்டும் பரிசீலனை செய்து அவர்களை விடுதலை செய்வார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நான் முன்பு கூறியதுபோல் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் கைது செய்தவர்களின் விஷயத்தைப் பற்றி அப்போதைக்கப்போது பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது. அவர்களை சிறையில் வைக்கவேண்டிய அவசியம் இல்லை என்று தோன்றினால், அவ்வப்போது அவர்களை விடுதலை செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும்.

திரு. கரு. சீமைச்சாமி : தலைமறைவாக இருந்த திரு. பி. ராமமூர்த்தி என்னென்ன வேலை செய்தார் என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அரசாங்கத்திற்குத் தெரிந்திருந்தாலும்கூட சொல்ல முடியாது.

திரு. என். மாதவன் : தலைவர் அவர்களே, இப்பொழுது கைது செய்யப்பட்டு விடுதலை செய்யப்படுபவர்களிடமிருந்து ஏதாவது கையெழுத்து வாங்கிக்கொண்டு அல்லது அவர்களுடைய நடவடிக்கைகளை ஆராய்ந்து பார்த்து விடுதலை செய்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : எழுதிவாங்கவேண்டிய நிபந்தனை ஒன்றும் இல்லை. அதற்குமேல் அரசாங்கம் என்னென்ன செய்கிறது என்று கூற முடியாது.

திரு. து. ப. அழகமுத்து : அவர்கள் எந்த வகுப்பில் வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்று அறிய முடியுமா ?

கனம். திரு. எம். பக்தவத்சலம் : டிடன்ஷனில் வைக்கப்பட்டிருக்கிறவர்கள் உயர்ந்த வகுப்பில் தான் வைக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்குப் படிச் செலவும் பிரத்யேகமாக நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

திரு. ஜே. மாதா கவுடர் : இப்பொழுது நமது அரசியல் தலைவர்கள் காலையில் இங்கே பேசினால் மாலையில் பீகிங் ரேடியோவில் ஒலி பரப்பப்படுகிறதே. இதுவரை விடுவிக்கப்பட்டுள்ள கம்யூனிஸ்டுகள் ஏதாவது தகவல் கொடுக்கிறார்களா ? விடுவிக்கப்பட்டவர்களின் மீது கண்காணிப்பு இருக்கிறதா ?



4th February 1963]

கனம் திரு. எம். பக்தவத்சலம் : பீகிங்கின் திறன் தான் இதிலிருந்து புலப்படுகிறது. இங்கேயிருக்கிற கம்யூனிஸ்டுகளோ, மற்றவர்களோ நாட்டு நலனுக்கு விரோதமாகச் செய்கிறார்கள் என்று அதிலிருந்து எடுத்துக் கொள்ள முடியாது.

திரு. கே. மூக்கையா தேவர் : பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டுள்ள சீனாக்காரர்கள் எவ்வளவு பேர் ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதைப்பற்றி இப்போது என்னிடம் தகவல் இல்லை.

திரு. கரு. சீமைச்சாமி : மவுண்ட்ரோடிலுள்ள சீனாக்காரர் ஹோட்டல் பழுது பார்க்கப்படுகிறது என்று சொல்லி ஜனவரி 26-ம் தேதியிலிருந்து 28-ம் தேதி வரையில் மூடப்பட்டிருந்ததே. அப்போது அந்த ஹோட்டல் அரசு கண்காணிப்பில் மராமத்து செய்யப்பட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதுபற்றியெல்லாம் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் தக்க கவனம் செலுத்தப்படும். அந்த விவரங்களை எல்லாம் இங்கே கொடுப்பது சரியல்ல முறையாகாது.

*Employees' State Insurance Scheme*

*57 Q.—Sri K. MOOKIAH THEVAR : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) whether there is any proposal to reorganise the Employees' State Insurance Scheme in order to enable the employees to derive the benefits to which they are entitled fully and promptly; and

(b) if so, the details thereof?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (a) The State Government are responsible for providing medical treatment under the Employees' State Insurance Scheme and the scale and standard of medical benefits to which the employees are entitled and as prescribed by the Employees' State Insurance Corporation are being fully ensured. The question of reorganising the Employees' State Insurance Scheme does not arise.

(b) Does not arise.

(அ) தொழிலாளர் அரசாங்க இன்சூரன்ஸ் திட்டத்தின்கீழ், தொழிலாளருக்கு வைத்திய சிகிச்சைக்கு ஏற்பாடு செய்யும் பொறுப்பு மாநில அரசாங்கத்தினுடையது. தொழிலாளருக்கு அளிக்கவேண்டிய மருத்துவ உதவிகளின் அளவும், தரமும், தொழிலாளர்களுக்கான அரசாங்க இன்சூரன்ஸ் கார்ப்பரேஷனால் நிர்ணயிக்கப்பட்டவாறு முழுமையாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தைத் திருத்தி அமைக்க வேண்டுமா என்கிற பிரச்னைக்கு இடமேயில்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

[4th February 1963

## கைதிகளுக்கு மத போதனை

* 58 **கேள்வி.—திரு. முனு ஆதி :** கனம் நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தமிழ்நாடு சிறைச்சாலைகளிலுள்ள கைதிகளுக்கு மத, நீதி போதனை வகுப்புகள் நடத்தப்படுகின்றனவா ?

(இ) ஆம் எனில் எம்முறையில் யாரால் இவ்வகுப்புகள் நடத்தப்படுகின்றன ?

(உ) எந்த மத அடிப்படையில் இப்போதனைகள் நடைபெறுகின்றன ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** (அ), (இ) & (உ) சிறைகளில் மத போதனை வகுப்புகள் நடைபெறுவதில்லை. ஆனால், அந்தந்த மத போதகர்கள் தங்கள் தங்கள் மதத்தைச் சேர்ந்த கைதிகளுக்கு மதம் சம்பந்தமாகவும், ஒழுக்கம் சம்பந்தமாகவும் உரைகள் நிகழ்த்துகிறார்கள்.

(a) to (c) : No religious classes are held in jails, but religious and moral lectures are given by religious and moral lecturers who confine their attention to prisoners of their respective faith.

**திரு. ஜே. மாதா கவுடர் :** சிறையிலே கடவுள் பக்தி அற்றவர்கள் இருப்பார்கள். அவர்களுக்குக் கடவுள் பக்தியும், நாட்டுப் பற்றும் உண்டாகக்கூடிய வகையில் போதனை அளிக்கப்படுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கடவுள் பக்தி இல்லாதவர் இருக்கலாம் என்றாலும் ஒழுக்கம் இல்லையென்று சொல்ல முடியாது. ஒழுக்கம் எல்லோருக்கும் முக்கியமானது. சிறையில் உள்ளவர்களும் ஒழுக்கத்தைப் பின்பற்ற போதனை நடைபெற்று வருகிறது.

**திருமதி ராஜாத்தி குஞ்சிதபாதம் :** தலைவர் அவர்களே, மதத்தில் பக்தி உள்ளவர்களும், கடவுளிடத்தில் நம்பிக்கை உள்ளவர்களும் சிறையில் இருந்தால் அவர்கள் கோயில்களுக்குச் சென்று வழிபட மாதத்திற்கு ஒரு முறையாவது அல்லது ஆறு மாதத்திற்கு ஒரு முறையாவது அழைத்துச் சென்று வரப்படுவதற்கு ஆலோசிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** வெளியில், கோயிலுக்குப் போய் தான் வழிபடவேண்டுமென்பதில்லை. இறைவன் எங்குமுளான். இறைவனை எங்கிருந்தபடியும் தொழ முடியும்.

**திரு. கே. ஏ. மதியழகன் :** சிறையில் மதபோதனை, ஒழுக்க போதனை என்ற பெயரால் மீண்டும் பழமையும், பயனில்லாத கருத்துக்களும் நிலைப்பதற்கு கதாகாலட்சேபம் செய்யாமல், முற்போக்குக் கருத்துக்கள் அவர்களிடையே பரவுவதற்கு, புதிய



4th February 1963]

சமுதாயத்தை, புதிய உலகத்தை உருவாக்குவதற்கு ஏற்ற முறையில் போதனை நடைபெறுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** நண்பர் இப்போது நடக்கிற கதாகாலட்சேபங்களைக் கேட்டிருக்கமாட்டார்கள் என்று நினைக்கிறேன். கதாகாலட்சேபங்களிலும்கூட முற்போக்குக் கருத்துக்கள் வலியுறுத்தப்படுகின்றன. சிறையில் உள்ளவர்கள், எந்த மத போதகராவது பிற்போக்கான கருத்துக்களை வற்புறுத்துகிறார்கள் என்று புகார் செய்தால் அதன்பேரில் தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளலாம்.

**திரு. எஸ். முருகையன் :** இந்த மத போதனை அரசாங்கத்தின் நிதியிலிருந்து செலவு செய்து நடத்தப்படுகிறதா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அரசாங்க நிதியிலிருந்து இதற்கு எதுவும் பணம் செலவு செய்யப்படுவதில்லை. வேறு ஸ்தாபனங்கள் செய்கின்றன.

**திரு. எம். எஸ். மணி :** கொள்ளை அடிக்கிறவர்களும், கொலைகாரர்களும் கூட ஆண்டவனை வணங்குகிறார்கள் என்பது உண்மைதானே ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** ஆண்டவன் எல்லோரிடத்திலும் அன்பு காட்டுகிறவன். இறைவனுடைய அன்பு கொள்ளை அடிக்கிறவர்களுக்கும் உண்டு, கொலைக்காரர்களுக்கும் உண்டு. அன்பே சிவம் என்பார்கள். எல்லோரும் ஆண்டவனை நினைக்கலாம், தொழலாம்.

**திரு. மா. இராசாங்கம் :** மதபோதனை அளிக்க சிறைக்குப் போகிறவர்கள் அரசாங்கத்தின் அங்கீகாரம் பெற்றுத்தான் போகிறார்களா ?

அதிகமாகச் சொல்லப்போனால், 'ஸேல்ஸ் டாக்ஸ் ஆன் பெட்ரோலியம் ப்ராடக்ட்ஸ்' என்ற இனத்தின் மூலம் சென்னை நகரத்தில் ரூ. 2 கோடி வசூலிக்கப்படுகிறது. ஆக, ரூ. 2 கோடியும், 1 கோடியும் சேர்ந்து ரூ. 3 கோடி வசூலாகிறது. இதில் சர்க்காரிடமிருந்து சென்னை நகர சபைக்கு ரூ. 3 லட்சம் தான் போய்ச் சேருகிறது. ஏன் இதை குறிப்பிடுகிறேன் என்றால், மோடார் வெஹிகிள்ஸ் டாக்ஸேஷனை மாநில சர்க்கார் எடுத்த நேரத்தில், 1929-30ம் ஆண்டில், இந்த இனத்திலிருந்து எவ்வளவு வருமானம் வருகிறதோ அதை நகர சபைக்கு ஈடு செய்வதாக உறுதியளித்தார்கள். 1929-ம் ஆண்டில் ரூ. 3 லட்சமாக இருந்தது, இன்றைக்கு ரூ. 30 லட்சம், 50 லட்சம், 90 லட்சம், 1 கோடி ஆக உயர்ந்திருக்கிறது. ஆனால் இப்பொழுது சென்னை நகர சபை இதிலிருந்து 3 லட்சம் ரூபாய் தான் பெறுகிறது. சாலைகளைப் பராமரிப்பது, வேறு ரோடு வசதிகளையெல்லாம் செய்து கொடுப்பது ஆகிய இனங்களுக்குச் செலவு ஏறக்குறைய ஒரு கோடி ரூபாய் பிடிக்கிறது சென்னை நகரசபைக்கு. இதனால் இந்த வரி போட்டதன் நோக்கம் நிறைவேற்றப்படவில்லை. இது நம்முடைய கனம் அமைச்சர் அவர்களுக்குத் தெரியாதது அல்ல. மோட்டார் வெஹிகிள்ஸ் டாக்ஸிலிருந்து நகர சபைக்கு ஈடுபடுத்தப்படும் தொகை ஒரு அடையாளத் தொகையாகத்தான் இருக்கிறது. அவர்களுக்கு ரூ. 3 லட்சம்தான் கிடைக்கிறது. (குறுக்கீடு). இன்னமும் விசித்திரம். இந்த ரூ. 3 லட்சத்தைக் கொடுத்துவிட்டு, கார்ப்பரேஷன் லாரிகள், கார்கள், இதர மோட்டார் வாகனங்களுக்காக சர்க்கார் ஏறக்குறைய 3 லட்சம் ரூபாயை வரியாக நகரசபையிடமிருந்து திருப்பி வாங்கிவிடுகிறார்கள். இந்த வரியின் பெயரால் சர்க்காருக்கு ரூ. 3 கோடி வருமானம் வருகிறது. சென்னை நகர சபை ரோடுகள் பராமரிப்புக்காக ரூ. 1 கோடி செலவு செய்யவேண்டியிருக்கிறது. ஆனால் நகரசபைக்குக் கொடுக்கப்படும் ரூ. 3 லட்சத்தையும் அவர்கள் அவர்களுடைய வாகனங்களுக்குப் போடப்படும் வரியாக சர்க்காருக்குத் திருப்ப வேண்டியதாக இருக்கிறது. ஒரு நோக்கத்திற்காக ஒரு வரியை போட்டுவிட்டு, அந்த இனத்திற்கு அதனுடைய வருமானம் சரியாகப் போய்ச் சேராமல் இருக்கும் நிலையில் நகரசபை அதிக சிரமங்களுக்கு உள்ளாக வேண்டியிருக்கிறது. இது அவர்களுக்கு ஒரு சுமையாக இருக்கிறது. சென்னை நகரப் பிரதிநிதியானாலும்கூட, சென்னைக்கு மட்டும் வாதாடுகிறேன் என்பதல்ல. எல்லா நகரங்களுக்காகவும் வாதாடுகிறேன். இதனால் வருகிற வரித் தொகையை நீங்கள் ஒரு புனிதமான காரியத்திற்காக ஒதுக்குங்கள் என்று வேண்டுகிறேன். சேரிகளுடைய சீரமைப்புக்காகவும், அங்கு வாழ்பவர்களின் நல் வாழ்வுக்காகவும், இந்தத் தொகையை நீங்கள் செலவிடவேண்டுமென்று தான் இந்த நேரத்திலே உங்களை நான் வேண்டிக் கொள்கிறேன்.

நம்முடைய கனம் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் இந்த மசோதாவை இங்கு கொண்டுவருவதன் மூலம், ஒரு பெரிய முற்போக்கான மசோதாவைக் கொண்டு வருகிற சிறப்பைப் பெற்றிருக்கிறார்கள். நான் சொன்ன கருத்துக்களையும், இன்னும்



எங்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள் சொல்லப் போகும் கருத்துக்களையும், மற்ற கருத்துக்களையும் செலக்ட் கமிட்டி நல்ல வகையிலே ஆராயும் என்று கருதுகிறேன். இந்தக் காரியங்கள் செவ்வனே நடைபெறுவதற்கும், நகர மன்றம் நல்ல வருவாய் பெறுவதற்கும், அதன் மூலம் ஏழை எளிய மக்களுக்கு நல் வாழ்வு அளிப்பதற்கும் வசதி ஏற்படும்படிச் செய்யவேண்டும். நல்ல காரியத்திற்காக வரி போடுங்கள், அதை நியாயமான காரியங்களுக்குச் செலவிடுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். சட்டத்தில் சந்து, பொந்து தேடிக் கொண்டு உயர்ந்த மட்டத்தில் வாழ்கின்ற மேட்டுக் குடியினர் தப்பிக்க முயலுவார்கள். நான் புலி என்று சொன்னால், பூனை என்று சொன்னார்கள். புலி பதுங்கிப் பாயும். வரி என்பது ஒரு மொத்தக் கணக்கில் போடாமல், யார் அதனால் லாபம் பெறுகிறார்கள், தொழில்கள் மூலம் நிரந்தரமாக யாருக்கு லாபம் வருகிறது, வசதி, வளம் நிறைந்தவர்கள் யார் யார் இருக்கிறார்கள் என்று பாகுபாடு செய்து, எல்லோருக்கும் ஒரே மாதிரியாக வரி போடாமல், 2, 3 பகுதியாக படிப்படியாக அமைத்து நிலங்களுக்கு வரி போடவேண்டுமென்று குறிப்பிடுகிறேன். 'மார்க்கெட் வால்யூ' என்பதற்குத் திட்டவட்டமான விளக்கம் தேவை, அதை நன்றாகத் தெளிவுபடுத்த வேண்டும். நீங்கள் பிரிக்கின்ற 'கிளாஸிபிகேஷன்' சரியாக அமையவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த மசோதாவை செலக்ட் கமிட்டியின் பரிசீலனைக்கு அனுப்புவதை நான் மனமார வரவேற்று, எங்களுடைய கட்சியின் சார்பிலே வரவேற்று, இந்த மசோதாவின் மூலம் ஏழை எளிய மக்களுக்கு நல் வாழ்வு அளிப்பதற்கு வகை இருக்க வேண்டும் என்று கூறி, என்னுடைய உரையை முடிக்கின்றேன். வணக்கம்.

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி:** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவை நான் பொதுவாக ஆதரித்து வரவேற்கிறேன். இது காலம் கடந்து கொண்டுவரப்பட்ட மசோதா என்றாலும், இதனுடைய நோக்கத்தைப் பரிசீலிக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. வருமானத்தில் மட்டும் அக்கறை வைத்து, ஏதோ விலைவாசி உயர்ந்துவிட்டது. அதன் காரணமாக நகரத்தில் இருப்பவர்கள் அதிக வரி கொடுக்கலாம் என்ற எண்ணத்தில் இந்த மசோதாவைக் கொண்டுவந்திருப்பதாகத் தெரிகிறது. நான் செலக்ட் கமிட்டியில் ஆலோசனைக்கு என்னுடைய ஒரு கருத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். வருவாயை மட்டும் அடிப்படையாக வைத்து இந்த மசோதாவை ஆராயக் கூடாது. நம் நாட்டிலே தோன்றியிருக்கிற சோஷலிஸ மனப்பான்மையையும் நாம் சற்று கவனிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். சென்னை நகரத்திலும், நகரைச் சுற்றியும் இப்பொழுது பல பங்களாக்களைப் பார்க்கிறோம். ஏறக்குறைய 2 ஏக்கர், 3 ஏக்கர் விசாலமான இடத்தில் ஒரு வீட்டைக் கட்டியிருக்கிற நிலைமையைப் பார்க்கிறோம். அதே சமயத்தில் ரோடு ஓரங்களில் 10 அடி, 8 அடி அகலமுள்ள இடத்தில் கூட பல குடும்பங்கள் வாழ்கின்ற நிலைமையைப் பார்க்கிறோம். இந்த மசோதாவினுடைய நோக்கம், எங்கு நிலங்கள் வீணாக்கப் பட்டிருக்கிறதோ, எங்கு பங்களாக்களைச் சுற்றி பல ஏக்கர் நிலங்

[திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி] [4th February 1963

களை தங்கள் வசதிக்காக வீடுகளை வைத்துக்கொண்டிருக்கிறார்களோ அதனைத் தகர்க்கின்ற முறையில் அமையும்படி கொண்டு வரப்பட்டிருந்தால், மிகவும் நன்றாக இருந்திருக்கும் என்று நான் இந்த மன்றத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நிலத்திற்கு உச்ச வரம்பு கட்டிவிட்ட நாம், மற்ற துறையிலும் சோஷலிஸ தத்துவத்தைப் புகுத்துகின்ற நாம், நகரத்திலே இருக்கிற ஒரு நபர் ஒரு வீட்டை வைத்துக்கொண்டிருப்பவர், வீட்டைச் சுற்றி இவ்வளவு இடம் தான் வைத்துக் கொள்ளவேண்டும் என்று இது வரையிலே கட்டுப்பாடு செய்ய முன் வரவில்லை. இந்த மசோதாவின் மூலம் போடுகின்ற வரியை அதிகமாக உயர்த்துவதன் மூலம் அந்த நிலைமையை மேற்கொள்ள முடியும் என்றால், அதை செலக்ட் கமிட்டியார் பரிசீலனை செய்து பார்க்கவேண்டும். பல பங்களாக்களின் சுற்றுப் புறங்கள் காலியாக இருக்கிற காரணத்தால் சாதாரண மக்கள் நெருக்கடியான பிரதேசங்களில் தங்குகின்ற நிலைமை இருக்கிறது. பெரும் பெரும் பணக்காரர்கள் இருக்கின்ற இடங்களில், பெரிய பெரிய பங்களாக்களைச் சுற்றி காலியாக இருக்கின்ற இடங்களில் கட்டடங்கள் கட்ட வேண்டுமென்று சொன்னால், சொந்தக்காரர்கள் தங்களுடைய உரிமையைப் பற்றி வாதிக்க முற்படுவார்கள். ஆனால், அத்தகைய இடங்களை மட்டும் தனியாகப் பிரித்து, அவைகளுக்கு அதிக வரி போடுவதன் மூலமாக அந்த இடங்களில் கட்டடங்கள் கட்டக்கூடிய வாய்ப்பு ஏற்படக் கூடும். அவ்வாறு கட்டடங்கள் கட்டினால், வரி தளர்த்தப்படும், இல்லையென்றால் வரி அதிகமாகப் போடுவோம் என்று சொல்வதன் மூலமாக, காலியாகக் கிடக்கும் இடங்களில் அதிகமான கட்டடங்கள் வருவதற்கு . நல்ல வசதியாக இருக்கும் என்று நான் கருதுகின்றேன்.

இந்த வரி அரை சத விகிதம் அளவுக்கு இருக்கும் என்று சொல்லப்படுகிறது. இந்த அளவுக்கு வரி நிர்ணயிக்கப்பட்டிருப்பது பாராட்டுக்குரியது தான் என்றாலும், எல்லோருக்குமே அரை சத விகிதம் தான் என்று சொல்வதை விட்டுவிட்டு, மக்களுக்கு வருகின்ற வருமானத்தை அடிப்படையாக வைத்து, வரி விதிக்கப்பட வேண்டும். ஏழைகள், நடுத்தரக் குடும்பங்கள், நிறையப் பணம் சம்பாதிக்கின்றவர்கள் என்று மூன்று பிரிவினராகப் பிரித்து, அடித்தளத்தில் ஏழைகளாக இருக்கின்றவர்களுக்கு அரை சத விகிதம் என்றும், அதற்கு மேற்பட்டவர்களுக்குச் சற்று உயர்த்தியும், நிறைய வருமானத்தைப் பெறுகிறவர்களுக்கு இன்னும் அதிகமான வரியையும் போடுவதன் மூலம், இந்தச் சட்டத்தினுடைய நோக்கத்தை நாம் நிறைவேற்றிக்கொண்டவர்களாக இருப்போம் என்று நான் சொல்லிக் கொள்ளுகின்றேன்.

இந்தச் சட்டமானது, ஏற்கனவே இருக்கின்ற மற்ற வரிகளையெல்லாம் ரத்து செய்துவிட்டு, புதிதாகப் போடப்படுகின்ற சட்டமாகத் தெரிகிறது. ஏற்கெனவே இருக்கும் வரிகளிலிருந்து இது வரை எவ்வளவு வந்தது, இந்தச் சட்டத்தின் மூலமாக எவ்வளவு வரி வசூல் செய்யப்படும் என்பதுபற்றி மசோதாவில் கொடுத்திருக்கிற ஃபினான்ஷியல் மெமோராண்டத்திலிருந்து எதுவும் தெரியவில்லை. இந்தச் சட்டத்தினால் அரசாங்கத்திற்கு அதிக வருவாய் கிடைக்குமா அல்லது இருக்கின்ற வருவாயும் குறைந்துவிடுமா என்று இந்த நேரத்தில் சொல்ல முடியாது என்று சொல்லியிருக்கிறார்கள். ஒருவருக்கு வருகின்ற வருமானத்தை அடிப்படையாக வைத்து, வரி விகிதத்தை மேலும் மேலும் உயர்த்தும் விதத்தில் இந்த மசோதாவைப் பரிசீலிக்க வேண்டும் என்று நான் செலக்ட் கமிட்டியாருக்கு இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.



4th February 1963] [திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி]

எனக்கு முன்னால் பேசிய எங்களுடைய கட்சிச் செயலாளர் அவர்கள், 'சென்னை மாநகரத்திற்கும் மற்ற முனிசிபல் நகரங்களுக்கும் இந்தச் சட்டம் விஸ்தரிக்கப்படும்போது, அதிகப்படியாக வரும் வருமானத்திலிருந்து ஒரு பங்கினைச் சென்னைக் கார்ப்பரேஷனுக்கும், மற்ற முனிசிபாலிட்டிகளுக்கும் கொடுக்கவேண்டும்' என்று சொன்னார்கள். அதனை நானும் இங்கே வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன். மோட்டார் வாகன வரிச் சட்டத்தில் கொடுக்கின்ற வரித் தொகை முன்பு கார்ப்பரேஷனுக்குச் சென்று கொண்டிருந்தது. அந்தச் சட்டத்தை எடுத்துவிட்டுப் புதிய சட்டம் வந்ததற்குப் பிறகு, அந்த வருமானங்கள் எல்லாம் சென்னை அரசாங்கத்தோடு சேர்ந்துவிடுகிறதே தவிர, ரோடுகளை மெயின்டினென்ஸ் செய்யும் கார்ப்பரேஷனுக்குச் செல்லவில்லை. அதே போல் தான், இந்தச் சட்டத்தின் மூலமாக அதிகப்படியாக வரும் வருமானத்திலே ஒரு பெருமளவு (மேஜர் போர்ஷன்) அந்தந்த முனிசிபாலிடிகளுக்கும், கார்ப்பரேஷனுக்கும் கொடுப்பதன் மூலமாக நகரங்களை நல்ல முறையில் வைத்துக் கொள்ளுவதற்கு நாம் அவர்களுக்கு உதவியவர்களாக இருப்போம். இப்பொழுது நகரசபை விதிக்கும் வரியானது, ஏறக்குறைய சட்டத்தில் கண்டிருக்கும் அதிக அளவைத் தாண்டும் நிலைமையில் இருக்கிறது. சட்டத்தில் உயர்ந்த பட்சமாக எவ்வளவு விதிக்கப்பட்டிருக்கிறதோ, அந்த அளவுக்கு வரி உயர்த்தப்பட்டுவிட்டது. மேலும் மேலும் தேவைப்படுகிற நிதியை, அவைகளுக்கு அடிக்கடி துண்டு விழும் தொகையை அரசாங்கம் கடனாகத்தான் கொடுக்கிறதே தவிர, மான்யமாகக் கொடுக்க முடியாமலிருக்கிறது. அந்தப் பற்றாக்குறையைச் சமாளிப்பதற்காவது, இந்தச் சட்டத்தின் மூலம் வரும் வருமானத்தில் அதிகப்படியான பங்கினைக் கார்ப்பரேஷனுக்கும், அந்தந்த முனிசிபாலிட்டிக்கும் கொடுப்பது பற்றி செலக்ட் கமிட்டியார் பரிசீலிக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

பொதுவாக, சென்னைமாநகரத்தில் ஒரு வியாபாரம் நடந்து கொண்டிருக்கிறது. அந்த வியாபாரம் என்னவென்றால், வெளியிலிருக்கும் பெரும் பெரும் பணக்காரர்கள் தங்களுடைய நிலத்தை, நிலச் சீர்திருத்தச் சட்டம் வருவதற்கு முன்பாகவே விற்றுவிட்டு, அந்தப் பணத்தைக்கொண்டு, இன்வெஸ்ட் செய்கிற முறையில், இப்பொழுது நிலம் வாங்கி விற்கும் வியாபாரத்தை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அதனால், சென்னை மாநில வீடு கட்டும்

[திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி] [4th February 1963

திருவனமும், வீடில்லாத தனிப்பட்ட ஏழை மக்களும், தங்களுக்கு வீடு கட்ட மனை கிடைக்கவில்லை என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். வீட்டு மனை கிடைத்தாலும் அதிக விலை கொடுத்தே வாங்கவேண்டியுள்ளது. இந்தச் சென்னை மாநகரத்தில் க்ரௌண்டு விலை ஏறக்குறைய, ரூ. 5,500 என்ற அளவில் இருக்கிறது. இரண்டு, மூன்று ஆண்டுகளுக்கு முன்னால் இந்த அளவு விலை உயராமலிருந்தது. இப்பொழுது மட்டும் ஏன் இந்த விலை உயர்ந்திருக்கிறது என்பதற்கான காரணங்களை நாம் ஆராயவேண்டும். பத்தாயிரம், இருபதாயிரம் ரூபாயை வைத்துக்கொண்டு நிலத்தை வாங்கி வைத்துக்கொண்டு, ப்ரோக்கர் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்கள் சென்னையில் பலர் இருக்கிறார்கள். அவர்கள் நூற்றுக்கு நூறு லாபம் சம்பாதிக்கும் நிலைமை இருக்கிறது. அந்த நிலைமையை எவ்வாறு தடுப்பது என்பதைச் செலக்ட் கமிட்டியார் தயவு செய்து யோசித்துப் பார்க்க வேண்டும். இப்படிச் சென்னை மாநகரத்திலும், மற்ற முனிசிபல் நகரங்களிலும் உள்ள நிலத்தின் விலை உயர்ந்துகொண்டே போவதால் மனைக் கட்டுகளை ஏழைகளும், தொழிலாளர்களும் வாங்க முடிவதில்லை. தொழிலாளர்களுடைய வருமானத்திற்கும் மனைக்கட்டுகள் விற்கும் விலைக்கும் வித்தியாசம் இருக்கிறது. அந்த வித்தியாசத்தைப் போக்கும் முறையில் மனைக் கட்டு விலை உயர்வைக் கட்டுப்படுத்த வேண்டும். கார் வாங்கினால் அதை ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள்ளாக விற்கக் கூடாது என்ற முறையை வைத்திருக்கிறோம். அதுபோல்தான், இதிலும் ஒரு ஏற்பாடு இருப்பது நல்லது. நகரங்களில் இருக்கும் மனைக்கட்டுகளை வாங்கி வாங்கி விற்பதன் மூலமாக விலை ஏற்றம் ஏற்படுகிறது. அதைத் தவிர்க்கும் முறையில், இந்தச் சட்டத்தில் ஏதாவது பிரிவுகள் இருக்கின்றனவா என்று ஆலோசித்துப் பார்த்து, அதைத் தடுப்பதற்கு உண்டான வசதிகளை செலக்ட் கமிட்டியார் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

இந்தச் சட்டம் காலங்கடந்து வந்தாலும், பொதுவாக இதை நாங்கள் வரவேற்கின்றோம். இந்தச் சட்டத்தின் செக்ஷன்களை செலக்ட் கமிட்டியார் ஆலோசிக்கும் சமயத்தில், சோஷலிச மனப்பான்மையை மனதில் வைத்துக்கொண்டு ஆராயவேண்டும். ஏழைகளுக்கு நிலம் கிடைக்க வேண்டும். அதன் மூலமாக அவர்கள் அந்த நிலத்திலே வீடு கட்டிக் கொள்ளுவதற்கு உண்டான வசதிகளைச் செய்ய வேண்டும். அதே போல், அரசாங்கத்திற்கு நல்ல வருவாய் தேடித் தர வேண்டும். அந்த வருவாயிலிருந்து கார்ப்பரேஷனுக்கும் முனிசிபாலிடிகளுக்கும் பங்கு கொடுக்க வேண்டும். ஏழைகளும் மற்றவர்களும் நல்ல வகையில் வாழவேண்டும். அதிகமாகப் பண வசதி உடையவர்கள் தங்களுடைய சௌகரியங்களை சோஷலிச மனப்பான்மையில் விட்டுக்கொடுத்து, தங்கள் பங்களாக்களைச் சுற்றியிருக்கும் காலி இடங்களை மற்றவர்களுக்கு வீடு கட்டிக்கொள்வதற்காகக் கொடுக்கத் தக்க வகையில், இந்தச் சட்டத்தினுடைய செக்ஷன்களைத் திருத்தி, அதற்குண்டான வசதிகளைச் செய்ய வேண்டுமென்று நான் ஆட்சியாளர்களுக்கு யோசனை சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.



4th February 1963] [திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி]

இந்தச் சட்டத்திலிருக்கும் ஒவ்வொரு பிரச்சினையையும் பற்றி நாம் இங்கே விவாதிக்க வேண்டியதில்லை. ஏனென்றால், செலக்ட் கமிட்டியார் இதைப் பரிசிலனை செய்து, அதற்குப் பிறகு இது சட்டசபை முன் வருகின்ற சமயத்தில், நாம் இதை விவாதிக்கலாம் என்றாலும், இதிலேயிருக்கும் தத்துவார்த்தத்தையும், அடிப்படையையும் மட்டும் முதலில் பார்த்து, இதை எப்படி எப்படி மாற்றியமைத்து, எப்படி எப்படித் திருத்தினால் பொதுவான சோஷலிச சமுதாயத்தை அமைக்கக் கூடிய நிலையில் இருப்போம் என்பதை மனதிலே கொண்டு, இந்தச் சட்டத்தை ஆராயவேண்டும் என்று செலக்ட் கமிட்டியாருக்கு யோசனை கூற விரும்புகின்றேன்.

இந்தச் சட்டத்தை நான் வரவேற்கின்றேன். ஆனால், இந்தச் சட்டத்திலிருக்கும் ஓரிரு வாக்கியங்கள் திருத்தியமைக்கப்பட வேண்டும். எல்லோருக்கும் ஒரே விகிதத்தில் வரி என்ற முறையை விட்டுவிட்டு, 'ஸ்லாப்' முறையில் விதிக்க வேண்டும். வருமான வரி கொடுக்கிறவர்களுக்கு ஒரு விகிதமும், வருமான வரி கொடுக்காத நடுத்தர நிலைமையில் இருப்பவர்களுக்கு ஒரு விகிதமும், விதிக்கப்படவேண்டும். மற்றபடி, பல ஆண்டுகளாக தம்முடைய வீட்டிலேயே இருந்துகொண்டு, வீட்டை விற்காமலிருக்கும் நடுத்தர மக்களுக்கு இந்த வரியிலிருந்து விதி விலக்கு அளித்து, இந்த ½ சத விகித வரியை அப்படியே வைத்துக் கொள்ளக்கூடிய வகையில் செலக்ட் கமிட்டியார் பரிசீலனை செய்தால், இந்தச் சட்டத்தினுடைய நல்ல அம்சங்கள் தெரிய வரும் என்று தெரிவித்து, இந்த மசோதாவை வரவேற்று என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகின்றேன்.

திரு. ஜே. மாதா கவுடர்: கனம் சபைத் தலைவர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கும் இந்த மசோதாவை நான் ஆதரித்து ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். முன்பு சாதாரணமாக கிராமப் புறங்களில் இருக்கும் நிலங்களுக்கெல்லாம் நிலவரி, விவசாய வருமானவரி, தண்ணீர்த் தீர்வை இப்படிப்பட்ட வரிகள் எல்லாம் நாம் விதித்து வந்தோம். ஆனால், நகர்ப் புறங்களில் இருக்கும் பூமிகளின் பேரில் நியாயமான அளவுக்குக் கூட வரியை நாம் இதுவரையில் விதிக்கவில்லை. நகர்ப் புறங்களில் இருபது, முப்பது ஆண்டுகளுக்கு முன்பு என்ன வரி விதிக்கப்பட்டிருந்ததோ அதே வரி தான் இன்றைக்கும் கொடுக்கப்பட்டு வருகிறது. இந்த நிலையிலேதான் இன்றைக்கு நகரப் புறங்களிலே இருக்கக்கூடிய நிலங்களுக்கு அதிகமான வரியைப் போடுவது மிகமிக அவசியமாக இருக்கிறது. அவ்வாறு போட்டுத்தான் ஆகவேண்டும். முன்பு, சாதாரணமாக நகரப் புறத்தில் கூட 20 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு கிரௌண்டின் விலை ரூ. 100-ஆக இருந்தது. அது இப்பொழுது ரூ. 5,000-ம் ஆக உயர்ந்திருக்கிறது. எத்தனை மடங்கு உயர்ந்திருக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும். அதே நேரத்தில் கிராமப் புறத்திலுள்ள நிலங்களின் மதிப்பு அவ்வளவு உயரவில்லை. நகரப் புறத்திலே இந்த விலையேற்றத்திற்குக் காரணம் என்ன என்பதை நாம் பார்க்கவேண்டும்.

[திரு. ஜே. மாதா கவுடர்] [4th February 1963

அதற்குக் காரணம், குறிப்பாக, சென்னை கார்ப்பொரேஷன் ஏரியாவை, சர்க்காரின் அதிகமான பணத்தை வைத்து செலவு செய்து அதிக முன்னேற்றம் அடையும்படியாகச் செய்த காரணத்தினால், நகரத்திலே அதிகமான வசதிகள் இருக்கின்றன என்ற காரணத்தினால், கிராமப்புறங்களில் உள்ளவர்கள் நகரப் புறங்களில் வந்து குவிகிறார்கள். கிராமப் புறங்களிலே நிலங்களின் மீது ஒரு சிறிய வரியை விதித்தாலும்கூட, அந்த பூமியை விற்று, நகரத்திலே வந்து, பெரிய, பெரிய வீடுகளை அமைத்து விடுகிறார்கள். இப்படிப் பலர் கிராமங்களிலிருந்து நகர்ப்புறங்களுக்கு வந்து, நகரங்களிலுள்ள நிலத்தின் விலையை உயர்த்தி இருக்கிறார்கள். ஆகவே, அதிகமான மக்கள் இங்கு வந்து குடியிருப்பதன் காரணமாக, நிலங்களின் விலை ஏறியிருக்கிறது. அதே நேரத்திலே, நகரப் புறங்களிலே சர்க்காருடைய பணத்தை எல்லாம் அதிகமாகச் செலவு செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டு, அந்தக் காரணத்தினாலே விலை உயர்ந்துகொண்டே போகிறது.

இந்த வரி விதிப்பின் மூலமாக வரும் தொகையில் கார்ப்பொரேஷனுக்கு 90 சத விகிதத்தைக் கொடுத்தால் நல்லது என்று கனம் அங்கத்தினர் திரு. மதியழகன் சொன்னார். என்னுடைய கருத்து என்னவென்றால், இதற்கு முன்பு 20, 30 வருஷ காலமாக வரிப் பணத்தை எல்லாம் நகரப் புறங்களிலே செலவு செய்த காரணத்தினால், நகரத்திலுள்ள சொத்தின் மதிப்பு அதிகரித்திருக்கிறது. அதன் பலனை நகர வாசிகள் அனுபவித்து வருகிறார்கள். ஆகவே இந்த சொத்துக்களின் மீது விதிக்கக் கூடிய வரிப் பணத்தை மறுபடியும் கிராமப் புறத்திற்குத் திருப்பி விட வேண்டும். அதிலே ஒரு சதவிகிதத்தைக் கூட நகர்ப் புறங்களிலே உள்ள மக்களுக்காகச் செலவு செய்யக் கூடாது. நகர்ப் புறங்களிலுள்ள மக்களுக்கு என்னென்ன வசதிகள் இருக்கின்றனவோ, அந்த வசதிகளை எல்லாம் கிராமப் புறங்களுக்கும் செய்து, கிராம மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயரச் செய்யவேண்டும். நகர்ப் புறத்திலேயே மேலும் 90 சதவிகிதத்தைச் செலவு செய்தால், இப்பொழுது ஒரு கிரௌண்டின் விலை 10,000 ரூபாயாக இருந்தால், இன்னும் ஐந்து ஆண்டுகளுக்குள் அதிகப்படியான வசதிகள் செய்து கொடுப்பதன் காரணமாக, ரூ. 20,000-ம் ஆக ஆகிவிடும். பிறகு மேலும் வரியை உயர்த்த வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும். ஆகவே, நகரப் புறங்களிலுள்ள மக்களுக்கு மேலும் மேலும் அதிக வசதிகள் செய்வதைக் குறைத்து, அந்தப் பணத்தை எல்லாம் கிராமப் புறங்களுக்குச் செலவிடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே நேரத்தில் இந்தச் சட்டத்தை முனிசிபல் நகரங்களுக்கும், டவுன்ஷிப்புகளுக்கும் விஸ்தரிக்கப் போகிறோம். அதற்கான அதிகாரத்தை நாம் சர்க்காருக்கு வழங்கிவிடப் போகிறோம். ஒரு நோட்டிபிகேஷன் போட்டு, இந்தச் சட்டத்தை விஸ்தரித்துவிடலாம். மறுபடியும் சட்டமன்றத்திற்கு வரவேண்டிய அவசியமில்லை. மேலும் முனிசிபல் எல்லையில் இருக்கக் கூடிய இடங்கள், டவுன்ஷிப்பில் இருக்கக்கூடிய இடங்கள், சென்னை நகரத்தில் இருக்கக்கூடிய இடங்கள், இவற்றின் தாரதரத்தைப் பார்த்துப் பிரிக்கும்பொழுது, உன்னிப்பாக கவனித்து செய்யவேண்டும். முனிசிபல் ஏரியாவுக்கு ½ சத விகிதம் என்று இந்த மசோதாவிலே கண்டிருக்கிறது. முனிசிபல் ஏரியாவுக்கு ½ சத விகிதம் என்று சொன்னால், சென்னை கார்ப்பொரேஷன் ஏரியாவுக்கு ஒரு சத விகிதமாகவாவது உயர்த்தி பாடுபாடு செய்வது நலம். இப்படி அதிக வரி விதிப்பதிலே அவர்களுக்கு பாதகம் ஏற்பட்டுவிடாது. அவர்களுக்கு கட்டுவதற்கு வசதியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். குறிப்பாக, இந்த மசோதா பொறுக்குக் கமிட்டிக்குப் போவதால், மசோதாவிலுள்ள பிரிவுகளைப் பற்றி விவாதிக்கும்பொழுது விவரமாகப் பேசமுடியும் என்ற காரணத்தினால், ஒன்றிரண்டு விஷயங்களை மட்டும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.



இரண்டாவது கிளாஸிலே, 'பில்டிங்' என்றால் என்னவென்று கீழ்க்கண்டவாறு சொல்லப்பட்டிருக்கிறது :—

"building" includes a house out-house stable, latrine, godown, shed, hut, wall and any other structure, whether of masonry, bricks, mud, wood, metal or any other material whatsoever."

'குடிசை' என்று போட்டிருப்பதால், நிலத்தினுடைய விலையை எப்படிப் பாகுபாடு செய்து பிரிக்க முடியும் என்று தெரியவில்லை. ஸோனல், சப்-ஸோனலாகப் பிரிக்கும்பொழுது, குடிசை கட்டியிருக்கக்கூடிய இடத்தை கிரௌண்டு கணக்கிலோ அல்லது சென்ட் கணக்கிலோ இருக்கும்பொழுது, இதற்கு இவ்வளவு வரி கொடுத்தால் போதும் என்று அந்தக் குடிசைக்காக உள்ள மதிப்பை விட்டுவிட்டு, நிலத்தின் மதிப்பின் அடிப்படையில் போடும்பொழுது, அந்த ஸோனுக்குள்ள விகிதம் வந்துவிட்டால், எப்படி வரி விதிப்பார்கள் என்பது எனக்குப் புரியவில்லை. அதை கனம் அமைச்சர் அவர்கள் விளக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். 'குடிசை' என்று போட்டிருப்பதை எடுத்து விட்டால் என்ன? ஒருவேளை பெரிய மாளிகைகளிலே கட்டப்படும் குடிசைகள் என்று நினைத்துவிட்டார்களோ, என்னவோ தெரியவில்லை. ஆனால் சேரிப் பகுதிகளிலே இருக்கக்கூடிய பகுதிகளுக்கு இது எப்படிப் பொருந்தும் என்பது எனக்கு விளங்கவில்லை.

அடுத்தபடியாக 'அர்பன் நிலம்' என்பதற்கு விளக்கம் கொடுத்திருப்பதிலே, கீழ்க்கண்டவாறு சொல்லப்பட்டிருக்கிறது :—

"but does not include any land which is registered as wet in the revenue accounts of the Government and used for the cultivation of wet crops."

கீழே கொடுக்கப் பட்டிருக்கும் எக்ஸ்பிளனேஷனிலே, என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்றால் "Explanation :—For the purposes of this clause, any site on which any building has been constructed shall be deemed to be urban land."

[திரு. ஜே. மாதா கவுடர்] [4th February 1963

நகர்ப் புறங்களிலே உள்ள நிலங்கள் கட்டடத்திற்காக உபயோகப்படுத்துவதற்கு லாயக்காக இருந்தாலும், அரசாங்கத்தின் ரெவினியூ அக்கௌண்டிலே 'வெட் லாண்டு' என்று பதிவு செய்யப்பட்டிருந்தால், இந்த வரி விதிக்கப்படாது என்று போடப்பட்டிருக்கிறது. அதே நேரத்திலே, அதே இடத்திலே ஏதாவது ஒரு கட்டடம் இருந்து விட்டால், அது 'அர்பன் நிலம்' ஆகிவிடும், என்று எக்ஸ்பிளனேஷனில் போட்டிருப்பது பொருந்துமா? முனிசிபல் ஏரியாக்களிலே விவசாயம் செய்கிறவர்களுக்கு நிறைய வெட் நிலங்கள் இருக்கின்றன. ரெவினியூ அக்கவுண்டிலே 'வெட் நிலம்' என்று போடப்பட்டிருக்கிறது. மற்றும் டவுன்ஷிப்களுக்கும் இந்த மசோதா பொருந்தும். வாய்க்கால் ஓரத்திலே இருக்கக்கூடிய பூமிகள், 'வெட் லாண்டு' என்று ரெஜிஸ்தர் செய்யப்பட்டு இருந்தால், அவற்றை 'வெட் லாண்டு' என்று சொல்லிவிடுகிறோம். அதே நேரத்தில் வீடு ஒன்று இருந்துவிட்டால், அது 'அர்பன் நிலம்' ஆகிவிடும். ஐந்து ஏக்கர் நிலம் இருக்கக்கூடிய இடத்திலே தானியங்கள் வைப்பதற்காக ஒரு ஷெட்டோ அல்லது கோடவுனோ இருக்கும். அல்லது தொழிலாளர்களுக்காக வீடுகள் கட்டப்பட்டிருக்கும். அப்படி வீடுகள் கட்டிவிட்ட காரணத்தினால் மட்டும், 'அர்பன் லாண்டு' என்று சொல்லுவதை பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இல்லாவிட்டால், பிறகு சிக்கல்கள் வரும். செலக்ட் கமிட்டிக்குப் போய் ஒரு புதிய சட்டமாக வரும்பொழுது, அடிக்கடி திருத்தங்கள் கொண்டு வர வேண்டிய நிலைமை ஏற்படாமல், சிறுசிறு துண்டுகளாக ஒட்டி ஒட்டி சட்டத்தைக் கெடுத்து விடக்கூடிய நிலைமை ஏற்படாதவாறு பார்த்துக்கொள்ளும்படிக் கேட்டுக்கொள்கிறேன். செலக்ட் கமிட்டிக்குப் போகும்பொழுது, முனிசிபல் ஏரியாவிலுள்ள விவசாயிகளிடமிருந்து கிளர்ச்சி வரக்கூடிய நிலைமை ஏற்படாமல் இருக்க, முதலிலேயே இதை ஜாக்கிரதையாகப் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

10-00 a.m. மேலும் இந்தச்சட்டத்தை கெஜட்டில் பிரசுரித்துவிட்டால் மட்டும் போதாது. அர்பன் ஏரியாவில் இருக்கிற மக்கள் இதை நன்கு புரிந்துகொள்ளவேண்டுமென்றால் அங்கங்கே டாம் டாம் மூலமாக இதைப்பற்றிய விவரங்களை அறிவிக்கவேண்டும். மக்கள் இந்தச் சட்டத்தின் 'இம்ப்ளிகேஷனை' நன்கு புரிந்து கொள்ளும்படியாகச் செய்யவேண்டும்.

கடைசியாக இந்த மசோதா செக்ஷன் 25-இல் வரி 'மூவபில், இம்மூவபில் ப்ராபர்ட்டிக்குப்' போடப்படும் என்று இருக்கிறது. மூவபில் ப்ராபர்டி என்று எதற்குப் போடுவது, எதை அப்படி கருதுகிறார்கள், ஒருவர் வைத்திருக்கிற பர்னிசர், ரேடியோ போன்ற பொருள்களுக்கு என்று வரியா, இதுபற்றிய விவரங்களைக் கனம் அமைச்சர் அவர்கள் விளக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து மார்க்கெட் விலைக்கு வரி போடுவது பற்றிச் சொன்னார்கள். மார்க்கெட் விலை என்று நிர்ணயிக்கும்போது—இன்றைக்கு ஒருவர் ஒருவரிடமிருந்து ஒரு லட்சம் ரூபாய்க்கு ஒரு பங்களாவை



4th February 1963] [திரு. ஜே. மாதா கவுடர்]

வாங்குகிறார் என்றாலும் கூட ஒரு லட்சம் ரூபாய்க்கு ரிஜிஸ்டர் செய்வதில்லை. பத்தாயிரம், பதினையாயிரம் என்று ஸ்டாம்ப் செலவு குறைவாக இருக்கவேண்டும் என்பதற்காகவே ரிஜிஸ்டர் செய்கிறார். இப்படி ஓரிடத்தில் இல்லை. அநேகமாக எல்லாவிடங்களிலும் குறைந்த விலைக்கே பத்திரம் எழுதுகிறார்கள். அதில் சற்று கவனம் செலுத்தவேண்டும். அதுவும் ஜோனலாக வரி போடுவது என்று வருகிறபோது சில சிக்கல் வரலாம். ஆகவே, இதுபற்றி நகரசபைகள் போட்டிருக்கக்கூடிய விலை என்ன, அந்தப் பகுதியில் உண்மையில் நிலவிலை எவ்வாறு இருக்கிறது என்பதை எல்லாம் நன்றாகக் கணக்குப் பார்த்தே இந்த வரி போடப்படவேண்டும். இதில் எவ்விதச் சிக்கலும் உண்டாகாதவாறு பொறுக்குக் கமிட்டி பரிசீலனை செய்து நிர்ணயிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, அப்பீல் பற்றியது. இந்தச் சட்டப்படி அப்பீல் செய்துகொள்ள ட்ரிப்யூனலுக்குப் போகவேண்டுமென்று காணப்படுகிறது. ட்ரிப்யூனல் எந்த அடிப்படையில் அமைய இருக்கிறது என்று தெரியவில்லை. ஜோனல் அடிப்படையில் என்றால் நீலகிரியில் இருக்கக்கூடியவர் எடுத்த எடுப்பில் அப்பீல் செய்துகொள்ள மெட்ராஸ் வரவேண்டுமென்று சொன்னால் அது சரியாக இருக்காது. ஆகவே, முதலில் அந்த அந்த ஜில்லாக் கலெக்டர்களுக்கு அப்பீல் செய்துகொள்வது என்று செய்தால் நலமாக இருக்கும். கலெக்டர் முடிவையும் திருப்திகரமாக ஏற்றுக்கொள்ள முடியாது இருந்தால் கடைசி பட்சமாக ட்ரிப்யூனலுக்கு அப்பீல் செய்துகொள்வது என்று இருந்தால் போதும் என்பது என் அபிப்பிராயம். அதையும் பொறுக்குக் கமிட்டி நன்றாகப் பரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த மசோதாவை மனப்பூர்வமாக வரவேற்று என் வார்த்தையை முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. நா. மகாலிங்கம்:** கனம் சபாநாயகர் அவர்களே, இன்றைய தினம் கனம் மராமத்திலாகா அமைச்சர் கொண்டு வந்திருக்கிற இந்தச் சட்டம் ஒரு புதிய முறை வரி விதிப்புக்கொள்கையை நம் அரசாங்கத்திற்கு ஏற்படுத்திக் கொடுக்கிறது. நகர்ப்புறங்களில் இருக்கும் இடங்களுக்கு அதனுடைய தற்கால மார்க்கெட் விலையை அனுசரித்து வரி விதிக்கவேண்டுமென்று இந்தச் சட்டம் குறிப்பிடுகிறது. நகரத்திலுள்ள வீடுகளுக்கு ஏற்கனவே நகரசபைகள் விதிக்கின்ற வரி இருக்கிறது. இது இரண்டாவது வரி. இந்த இரண்டாவது வரி எந்தமுறையில் கொண்டுவரப்படுகிறது, இதைத் தாங்கக் கூடிய சக்தி நகரப் பகுதியில் உள்ளவர்களுக்கு இருக்குமா என்று சிந்தித்துப் பார்க்கவேண்டும். ஏற்கனவே சில அங்கத்தினர்கள் குடிசை வாழ் பகுதி மக்கள். இந்த வரியைக் கொடுப்பது என்றால் மிகவும் கஷ்டமாக இருக்குமென்று குறிப்பிட்டார்கள். நகரங்களை எடுத்துக்கொண்டால் சமீப காலத்தில் நகரங்கள் மிகவும் அபிவிருத்தி அடைந்து வந்திருக்கிறது. குறிப்பாக, சென்னையில் உள்ள மவுண்ட்ரோடு பகுதியை எடுத்துக்

[திரு. நா. மகாலிங்கம்] [4th February 1963

கொண்டால் பத்துப் பதினைந்து லட்ச ரூபாய்களுக்கு மேல் செலவழித்து பல அபிவிருத்திகளைச் செய்திருக்கின்றோம். அதனால் அந்தப் பகுதியில் நிலத்தின் மதிப்பு என்ன ஆயிற்று? முன்பு இரெளண்டு பத்துப் பன்னிரண்டாயிரம் ரூபாய் இருந்தது என்றால், இப்போது 50 ஆயிரம் ரூபாய் வரையில் விலை உயர்ந்திருக்கிறது. அதுமாதிரியே சென்னையில் உள்ள இதர பகுதிகளில் விலை உயர்ந்திருக்கிறதா என்றால் இல்லை. பொதுவாகப் பார்த்தால் சென்னையில் இரெளண்டு நாலாயிரம் ரூபாய் வரை விற்கிறது. சிலவிடங்களில் ஏழாயிரம் ரூபாய் வரை போகிறது. மார்க்கெட் விலையை அனுசரித்து இந்த வரியை விதிப்பது என்றால் சென்னையில் மட்டும் பலவகை வரியினம் வரும். ஜோனல் என்று வைத்து நிர்ணயித்தால் சிலர் பாதிக்கப்படவும் கூடும். இங்குள்ள எல்லா உறுப்பினர்களுக்கும் அநேகமாகத் தெரிந்திருக்கும். சென்னையில் உள்ள பணக்காரர்கள் எனப்படுகிறவர்கள் பரம்பரைப் பணக்காரர்கள் அல்ல. பெரிய வாழ்க்கைத்துறையில் இருப்பவர்கள் என்று கொள்வதற்கும் இல்லை. நகரத்தில் வாழக்கூடியவர்கள் பெரும்பாலோர் நடுத்தர வர்க்கத்தினர். கிராமப் பகுதியில் உள்ள நிலபுலன்களை விற்று வந்து இங்கே வீடு கட்டிக்கொண்டிருக்கிறவர்கள் பலர் இருக்கிறார்கள். காரணம், அவர்கள் இங்கே தொழில் செய்துகொண்டிருக்கிறவர்கள், அல்லது வேலை செய்துகொண்டிருக்கிறவர்கள். இங்கே கார்ப்பரேஷன் வரியும் மிக அதிகமாக இருக்கிறது. சமீபத்தில் கூட வரியை உயர்த்தியிருக்கிறார்கள். அந்த வரியைக் கொடுப்பதே பெரும்பாலான வீட்டுச் சொந்தக்காரர்களுக்கு மிகவும் கஷ்டமாக இருக்கிறது. அதற்குமேல் இப்போது புதிதாக நில வரியை மார்க்கெட் விலையை அனுசரித்துப் போடுவது என்று சொன்னால் இது அவர்களுக்கு மிகவும் சுமையாக இருக்கும். இதற்கு மாறாக வேறு ஏதாவது வரி போட முடியுமா என்பது சிந்திப்பதற்குரியதாகும். பட்ஜெட் உரையின்போதும் சென்ற ஆண்டு நான் குறிப்பிட்டிருக்கிறேன். இன்றுள்ள மார்க்கெட் நிலவரப்படி இந்த வீடுமனை வரியை விதிப்பதற்குப் பதிலாக, இப்போது ஏற்பட்டிருக்கிற விலை உயர்வு, விலையேற்றம் இருக்கிறதே அதில் ஒரு பங்கை இந்த வரியை விதிப்பதற்கு கணக்காக எடுத்துக்கொள்வது பொருத்தமாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். நிலத்தின் விலை உயர்வினால் விவசாயிகள், பெரிதும் லாபம் அடைந்துவிடவில்லை. மொத்தமாக நிலத்தை வாங்கி லே அவுட் போட்டு மனையாக விற்கின்ற இடைத்தரகர்களுக்கு வேண்டுமானால் லாபம் இருந்திருக்கக்கூடும். நில மனைக் கட்டு வியாபாரம் செய்கின்றவர்கள் தான் மொத்தமாக ஐந்தாயிரம், ஆறாயிரம் ரூபாய் என்று விலை கொடுத்து வாங்கி, லே அவுட் போட்டு இரெளண்டு மூவாயிரம், நாலாயிரம் ரூபாய் என்று விற்பனை செய்திருக்கிறார்கள். ஆகவே இந்த மாதிரியாக வரி போடுவதை விட்டு இனி விஸ்தரித்துக்கொண்டே இருக்கிற நகரங்களில் அங்கங்கேயுள்ள காப்பரேஷனோ, அரசாங்கமோ புதிதாக லே அவுட் போட்டு விற்பனை செய்வது என்றால் மிகுந்த லாபம் அரசாங்கத்திற்கோ, கார்ப்பரேஷனுக்கோ வரக்கூடும். ஆகவே இனி ஒவ்வொரு நகரசபையின் எல்லைக்குள் லே அவுட் போடக்



4th February 1963] [திரு. நா. மகாலிங்கம்]

கூடிய அதிகாரம் நகரசபை அல்லது அரசாங்கத்திற்கு இருக்கும் என்று சொன்னால் நகரங்களில் ஏற்படுகிற விலை உயர்வானது நகரசபைகளுக்கு வந்து சேரும், அல்லது அரசாங்கத்திற்கு வந்து சேரும் என்று குறிப்பிட விரும்புகிறேன்.

கோவை நகர அபிவிருத்திக்கான சில திட்டங்களுக்குக் கணக்குகள் போட்டோம். அதனை அரசாங்கத்துக்குச் சமர்ப்பித்திருக்கிறோம். அதைப் பற்றி விரிவாக நான் இப்போது குறிப்பிட விரும்பவில்லை. அந்தத் திட்டத்திலே கொடுத்திருக்கும் கணக்கின்படி, தார் ரஸ்தாக்கள் அமைத்து, அண்டர் கிரவுண்ட் டிரெயினேஜ், மின்சாரம், தண்ணீர் கட்டும் அணை ஆகிய எல்லா வேலைகளையும் செய்து முடித்தாலும் ஏக்கருக்கு 15,000 ரூபாய் வரை நஞ்சைக்குக் கொடுத்தால், செண்ட் ஒன்றுக்கு 700 ரூபாய், அதாவது கிரவுண்ட் 4,000 ரூபாய்க்குக் கொடுக்க முடியும் என்று கணக்குப் போட்டிருக்கிறோம். இன்றையதினம் கார்ப்பரேஷனின் நிலை என்ன? இன்று 'லே அவுட்' போடுகிறார்கள் என்றால், கார்ப்பரேஷனுக்கு அண்டர் கிரவுண்ட் டிரெயினேஜுக்காகவும், மின்சாரத்திற்காகவும் பணம் கட்டுகிறார்கள். அவர்கள் கட்டக்கூடிய பணம் பூரணமாக அண்டர் கிரவுண்ட் டிரெயினேஜ் கட்டக்கூடப் போதாமல் இருக்கிறது. 'பிரைவேட் லே அவுட்' வந்தது என்று சொன்னால், கார்ப்பரேஷனுக்கும் சர்க்காருக்கும் அதிகச் செலவு வந்து சேருகிறதே தவிர வருவாய் இல்லை. இந்த நிலைமையை மாற்றியமைக்கும் சட்டமாகக் கொண்டு வந்தால்தான் இந்தச் சட்டம் மக்களுக்கு உண்மையிலேயே பிரயோசனம் உள்ளதாக இருக்கும். அப்படிச் செய்தால்தான் விலையை ஓரளவு குறைக்கவும், விலை ஓரளவு உயர்ந்தால் அதனால் ஏற்படக் கூடிய லாபம் சர்க்காருக்கோ, ஸ்தல ஸ்தாபனங்களுக்கோ போகக் கூடிய நிலைமையும் ஏற்படும். இது புதிய சித்தாந்தம் அல்ல. இது போன்ற சட்டங்களைப் பல நாடுகளிலே செய்திருக்கிறார்கள். சோஷலிச முறையிலே அமைந்திருக்கக் கூடிய ஐரோப்பிய நாடுகளிலே இது மாதிரியான சட்டங்கள் இருக்கின்றன. ஸ்வீடன் தலைநகரான ஸ்டாக் ஹோம் நகரத்தில் இருக்கும் பூமி பூராவும் கார்ப்பரேஷனுக்குத்தான் சொந்தம். விவசாயம் செய்கிற நிலத்தை மாற்றி வீடு கட்டும் நிலமாக மாற்றவேண்டுமென்று சொன்னால் கார்ப்பரேஷன் 'லே அவுட்' பெற்றுத்தான் செய்ய முடியும். அதே போன்று வீடு இருக்கும் பகுதியைக் கடையாக மாற்றவேண்டுமென்று சொன்னால் அதற்கு வீட்டிலிருப்பவர்களுக்கு உரிமை கிடையாது. வீடுகள் கட்டியிருக்கக் கூடிய பகுதி நெருக்கடியின் காரணமாக வியாபார ஸ்தலமாக மாறிவிட்டது என்று சொன்னால் அந்தப் பகுதியிலிருப்பவர்களுக்கு வேறு வீடு கட்டிக் கொடுத்து விட்டு அந்த ரஸ்தாவையே வியாபார ஸ்தலமாக மாற்றியமைக்கக் கூடிய அதிகாரத்தைக் கார்ப்பரேஷன் பெற்றிருக்கிறது. அவ்வளவு பெரிய மாறுதல்களை நமது சட்டத்திலே செய்ய முடியாவிட்டாலும், விவசாய நிலங்களை வீடு கட்டும் நிலங்களாக மாற்றக் கூடிய அதிகாரத்தை அரசாங்கமோ, ஸ்தல ஸ்தாபனங்களோ பெற்றுக் கொள்வது பொருத்தமாக இருக்கும். அதன் மூலம் இன்னும் அதிகமான பணம் வரும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

[திரு. நா. மகாலிங்கம்] [4th February 1963

இன்றையதினம் இந்தச் சட்டத்தின் மூலம் எவ்வளவு பணம் அரசாங்கத்திற்கு வரும் என்று கணக்கிட்டிருக்கிறார்கள் என்று நிச்சயமாகத் தெரியவில்லை. சென்னை நகரத்திற்கு மட்டுமென்று எடுத்துக்கொண்டால் சென்ற ஏப்ரலில் கொண்டு வந்த இந்த வரி திருத்தமானது, இப்போது பிப்ரவரியில்தான் வருகிறது. வரி வசூல் செய்து பணம் வந்து சேர ஒரு வருஷமாகும். ஏற்கனவே நாம் வீடு கட்டுவதற்காக விவசாய நிலங்களை 'அக்வைர்' செய்ய விலை நிர்ணயம் செய்யலாம் என்பதற்கான திருத்தச் சட்டத்தைச் செய்திருக்கிறோம். ஆகவே ஒவ்வொரு ஊருக்கு என்று இல்லாமல் கோவை நகரம், சென்னை நகரம் போன்ற இடங்களில் உள்ள நிலங்களுக்கு விலை நிர்ணயம் செய்தால் விவசாயிகளுக்கு ஓரளவு நன்மை ஏற்பட முடியும். கரூர் பக்கத்தில் மூன்று போக நஞ்சை இருக்கிறது. விவசாய நிலம் என்ற வகையில் அந்த நிலங்கள் 15,000 அல்லது 20,000 விலை பெறும். அதை அனுசரித்து நாம் நஷ்ட ஈட்டை விவசாயிக்குக் கொடுக்கும்போது விலையை நிர்ணயம் செய்ய வேண்டுமென்ற முறையிலே சட்டத்தை அமைக்கலாம். அதனால் நிச்சயமாக நல்ல லாபம் வரும். லாபம் வராவிட்டாலும் அபிவிருத்தி செய்யச் செலவாகக் கூடிய பணம் பூராவும் வந்து விடும். அந்த வகையிலே நகரசபையும், சர்க்காரும் ஓரளவு வருமானம் பெற முடியும் என்பதைச் சொல்லிக் கொண்டு, இப்போது இருக்கிற முறையிலே வியாபார ஸ்தலங்களாக வைத்திருக்கக் கூடியவர்களால் வரி கொடுப்பதிலே சிரமம் இருக்காது என்று சொன்னாலும், நடுத்தர மக்களை மிகவும் பாதிக்கக் கூடிய வரியாக இது இருக்கிறதென்பதைச் சிந்தித்து, சரியான முறையிலே வருவாயைப் பெறுவதற்கான வழிகளைச் செய்யவேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்டு, என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

**கனம் திரு. வெ. ராமைய்யா:** கனம் சபாநாயகர் அவர்களே, 1963-ம் ஆண்டு சென்னை நகர்ப்புற நிலவரி மசோதாவினுடைய முக்கியமான அம்சங்களைக் குறித்து செலக்ட் கமிட்டி நன்கு தீவிரமாகப் பரிசிலனை செய்து முடிவு எடுக்கும். குறிப்பாக இந்த மசோதாவின் மீது கருத்துக்களைச் சொல்ல முன் வந்த அங்கத்தினர்கள் பொதுவான ஒரு வரவேற்பைக் கொடுத்திருக்கிறார்கள். குறிப்பாக திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக தங்களுடைய கருத்தைச் சொல்ல முன் வந்த கனம் மதியழகன் அவர்கள் இதை நல்ல முறையிலே வரவேற்றுப் பேசினார். இந்த மசோதா எந்த நோக்கத்தோடு கொண்டுவரப் பட்டிருக்கிறதோ அந்த நோக்கம் பூர்த்தியாகக் கூடிய முறையிலே எந்த விதமான ஓட்டை உடைசலும் இல்லாமல் பார்த்துக் கொள்ளவேண்டுமென்று கூறினார்கள். பொறுக்குக் கமிட்டி எல்லா விதமான தீவிரமான பரிசிலனைகளையும் செய்யும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அதே போன்று மற்ற கனம் அங்கத்தினர்களும் இந்த மசோதாவினுடைய பொது நோக்கத்தை வரவேற்றிருக்கிறார்கள். இதிலிருந்து வரக் கூடிய வருவாயை, திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரை, கனம் மதியழகனைப் பொறுத்தவரை, 'நகர சபைக்கே பெரும் பங்கைக் கொடுத்துவிட வேண்டுமென்று சொன்னார்கள். அதற்குக் காரணங்களைச் சொல்லும்போது, இப்போது நடைமுறையில் இருக்கக்கூடிய மோட்டார் வெஹிகிள் டாக்சேஷனைப் பற்றியும், சேல்ஸ்டாக்ஸ் குறித்தும் குறிப்பிட்டார்கள். இதைப் பற்றிக் குறிப்பிடும்போது அவர்கள் இந்த வருமானம் எந்த வகையிலே வருகிறது என்பதைப் பற்றி யோசித்துப் பார்க்க மறந்து விட்டார்கள். பெரும்பகுதி வருமானம் இந்த மாகாணத்தில் இருக்கக் கூடிய மற்ற எல்லா மக்களும் சேர்ந்து கொடுக்கக் கூடிய வருமானம். சென்னை நகரத்தில் வரக் கூடிய வருமானம் முழுவதும் சென்னை நகரத்திலேயே செலவு செய்யப்பட வேண்டுமானால் உண்மையிலேயே பெரும் சிக்கல்கள் ஏற்படும். அரசாங்கத்தைப் பொறுத்தவரை சென்னை நகரத்திற்கும் மற்றுமுள்ள பெரிய நகரங்களுக்கும் எந்த எந்த வகையில் விசேஷ சலுகைகளைக் காட்ட வேண்டுமோ அந்தச் சலுகைகளையெல்லாம் காட்டிக் கொண்டுதான் வருகிறார்கள். சென்னை நகரத்தைப் பொறுத்த மட்டில் பல முக்கியமான இடங்கள் எல்லாம் இருக்கின்றன. பல்கலைக் கழகத்தை எடுத்துக் கொண்டாலும் சரி, பெரிய ஆஸ்பத்திரியை எடுத்துக் கொண்டாலும் சரி, சென்னை நகரத்தில்தான் இருக்கின்றன. மேலும் சென்னை நகரத்தில் துறைமுகம் இருக்கிறது. ஆகவே, இங்கே வரக் கூடிய வருமானம் நகர மக்களுக்கு மட்டுமே சொந்தமாக இருக்கவேண்டுமென்ற கருத்தை யாருமே ஏற்றுக் கொள்ள முடியாது. மதியழகன் அவர்களும் அதை வற்புறுத்திச் சொல்ல மாட்டார்கள். லாபம் அதிகமாகப் பெறக் கூடியவர்களிடமிருந்து வருமானத்தைப் பெறக் கூடிய நிலையிலே இந்த மசோதா அமையவேண்டும்' என்று மதியழகன் அவர்கள் சொன்னார்கள். கடைசியில் பேசி முடித்த கனம் மகாலிங்கம் அவர்கள் கூட, இந்த மசோதாவினால் நடுத்தர மக்களும், ஏழை மக்களும் அதிகமாகப் பாதிக்கப்படுவார்களோ என்ற சந்தேகத்தை எடுத்துச் சொன்னார்கள். குறிப்பாக இந்த மசோதாவைப் பல பிரிவுகளாக, உப பிரிவுகளாகப் பிரிக்கும்போது, எந்தெந்த உப பிரிவுகளிலே, எந்த நிலையில் வரி போட வேண்டும். எப்படி அமலில் கொண்டுவரவேண்டுமென்பதற்காக விசேஷமாகக் கவனம் செலுத்தி ஒரு முடிவு எடுக்கக் கூடிய சூழ்நிலையை உண்டு பண்ணி இருக்கிறோம்.



4th February 1963] [திரு. வெ. ராமைய்யா]

இந்த மசோதா மூலம் யாருமே அவசியம் இல்லாமல் பாதிக்கப் படவேண்டுமென்று அரசாங்கத்திற்கு எந்தவிதமான நோக்கமும் இல்லை. அது அரசாங்கத்தின் கருத்தும் அல்ல. பொதுவாக நகரங்களை எடுத்துப் பார்த்தால், சென்னை நகரம் அல்லது கோவை நகரம் அல்லது மதுரை நகரத்தை எடுத்துக் கொண்டாலும் சரி—குறிப்பாக சாதாரண மக்கள் மனதில் கொண்டிருப்பது—எந்த விதமான முயற்சியும் இல்லாமலேயே அரசாங்கத்தின் திட்டங்களை நிறைவேற்றுவதன் மூலமாக, அல்லது பொதுவாக மாகாணத்தில் பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டிருக்கக் கூடிய காரணத்தினால் நகரங்களில் இருக்கக் கூடிய சொத்து அல்லது பூமியின் மதிப்பு மிக வேகமாக உயர்ந்து கொண்டு போகக் கூடிய காட்சியைப் பார்க்கிறோம். எந்தவிதமான முயற்சியும் இல்லாமலேயே நகரங்களில் நிலம் வைத்திருப்பவர்களுக்கு அதிகப்படியான லாபம் வந்து கொண்டிருக்கிறது. இந்த லாபத்தில் ஒரு பங்கை அரசாங்

[திரு. வெ. ராமைய்யா] [4th February 1963

கத்தின் முன்னேற்ற வேலைகளுக்கு வேண்டுமென்று கேட்கும் போது அதற்கு யாருமே அதிக ஆட்சேபணையைச் சொல்ல மாட்டார்கள் என்பதில் சந்தேகமே கிடையாது. கனம் அங்கத்தினர் மதியழகன் அவர்கள் பேசும்போது மௌண்ட் ரோட்டைச் சுட்டிக் காட்டிச் சொன்னார்கள். அங்கு ஒரு குறிப்பிட்ட அளவு நிலம் சில ஆண்டுகளுக்கு முன்பு இருந்த விலையையும், இன்று அது எந்தளவு உயர்ந்திருக்கிறது என்பதையும் எடுத்துக் காட்டிச் சொல்லும்போது இந்த லாபத்தில் ஒரு பங்கு தான் அரசாங்கத்திற்கு வேண்டும் என்பதுதான் இந்த மசோதாவின் கோரிக்கை. இந்த மசோதாவை அறிமுகம் செய்து வைக்கும்போது நான் விவரமாக எடுத்துச் சொல்லியிருக்கிறேன். எப்படி கிராமப்புறங்களில் உள்ள நிலங்களுக்கு ஒரு ஸ்திரமான வரி விதிப்பை நீண்ட காலமாக ஏற்றுக் கொண்டிருக்கிறோமோ அதேபோல் நகரங்களில் உள்ள நிலங்களுக்கும் குறிப்பாக இந்த நேரத்தில் அதிகமான வருவாய் வரும் சமயத்தில் அதிகமான லாபம் ஏற்பட்டிருக்கும்போது அதில் ஒரு பங்கு அரசாங்கத்திற்கு வரவேண்டும். குறிப்பாக அபிவிருத்தி வேலைகளுக்காக அந்த பங்கு வரவேண்டும். சாதாரண நடைமுறைச் செலவுக்காக அல்ல. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தை எடுத்துக் கொண்டால் நாம் ஏராளமான பொருள்களை கண்டு பிடிக்க வேண்டும். அப்படியிருக்கும்போது முதல் இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களை நிறைவேற்றியதின். காரணமாக ஏற்பட்டிருக்கக் கூடிய உயர்ந்த வருமானத்தில் அல்லது லாபத்தில் அரசாங்கம் ஒரு பங்கு வாங்கிக் கொள்ளும் கருத்தை பொதுவாக அங்கத்தினர்கள் வரவேற்றிருக்கிறார்கள். சட்டசபையும் வரவேற்றிருக்கிறது. இதேபோல் எல்லோருமே வரவேற்பார்களா என்பதில் சந்தேகம் இருக்கிறது. திரு. மதியழகன் அவர்கள் சொன்னார்கள், புலி வேட்டைக்குப் போய் பூனையோடு வந்து விடக் கூடாது என்று. ஏனெனில் எதிர்ப்புகள் இருக்கலாம். பொறுக்குக் கமிட்டியைப் பொறுத்தவரையில் இந்த மசோதாவின் நோக்கத்தை மனதில் வைத்துக் கொண்டு சட்டசபை அங்கத்தினர்கள் கூறியிருக்கும் கருத்துக்களை எல்லாம் மனதிற்கொண்டு இதை நல்லவிதமாக, புலி வேட்டைக்குப் போனவர்கள் பூனையோடு திரும்பி வராமல் நல்ல மசோதாவாக நிறைவேற்றுவதற்கு வேண்டிய எல்லா முயற்சிகளையும் பொறுக்குக் கமிட்டி எடுக்கும் என்று இந்த சந்தர்ப்பத்தில் சொல்லிக் கொள்கிறேன். இந்த மசோதாவில் உள்ள பல பிரிவுகளைக் குறித்து மாதாகவுடர் அவர்கள் அவர்களது கருத்துக்களைச் சொன்னார்கள். ஒவ்வொன்றுக்கும் தனித்தனியாக இந்த நேரத்தில் விவரமாக பதில் சொல்ல நான் விரும்பவில்லை. அவர்கள் கூறிய கருத்துக்களை பொறுக்குக் கமிட்டி பரிசீலனை செய்யும். அடிப்படைப் பிரச்னைகள் பற்றி பேசப்பட்டிருக்கின்றன. பொதுவாக பிரிவுகள், உப பிரிவுகள் எப்படி அமைய வேண்டும். மார்க்கட் வால்யூ எப்படி நிர்ணயமாகும் என்பதையெல்லாம் முறையாக பரிசீலனை செய்து நல்லவிதமாக பொறுக்குக் கமிட்டி இந்த சபைக்கு அதன் ரிப்போர்ட்டைக் கொடுக்கும் நேரத்தில், அந்த நேரத்திலும் அங்கத்தினர்கள் சொல்லும் கருத்துக்களையும் பொதுவாக மாநிலத்தில் உள்ள கருத்துக்களையும்



4th February 1963] [திரு. வெ. ராமைய்யா]

மனதிற்கொண்டு அரசாங்கம் சட்டமாக்க முயற்சி எடுக்கும் என்று இந்த சந்தர்ப்பத்தில் கூறிக்கொண்டு, திராவிட முன்னேற்றக் கழக அங்கத்தினர்களுக்கும் மற்ற அங்கத்தினர்களுக்கும் இந்த மசோதாவிற்குக் கொடுத்த வரவேற்பிற்கு நன்றியைத் தெரிவித்துக் கொண்டு இந்தப் பிரேரேபணையை சபை ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

MR. SPEAKER: The question is—

"That the Madras Urban Land Tax Bill, 1963 (L.A. Bill No. 2 of 1963) be referred to a Select Committee consisting of the following 15 Members of the Assembly:—

1. The Hon. Sri M. Bhaktavatsalam.
2. The Hon. Sri V. Ramaiah.
3. Sri K. S. G. Haja Sheriff.
4. Srimathi T. N. Anandanayaki.
5. Sri V. Sankaran.
6. Sri G. Venkataraman.
7. Sri G. E. Chinnadurai
8. Sri T. P. Elumalai.
9. Sri Kanchi Manimozhiyar.
10. Sri M. S. Mani.
11. Sri Saw Ganesan.
12. Sri T. L. Sasivarana Thevar.
13. Sri P. Ramachandran.
14. Sri N. Subramaniam Chettiar.
15 Pulavar K. Govindan."

The motion was put and carried.

MR. SPEAKER: Under Rule 99 (1) of the Madras Assembly Rules, I do hereby nominate the Hon. Sri V. Ramaiah to be the Chairman of the Committee.

### (3) THE MADRAS ADDITIONAL ASSESSMENT AND ADDITIONAL WATER CESS BILL, 1963 (L.A. BILL NO. 4 OF 1963).

THE HON. SRI V. RAMAIAH: I beg to introduce the Madras Additional Assesment and Additional Water Cess Bill, 1963 * (L.A. Bill No. 4 of 1963), and move—

"that the Bill be referred to a Select Committee consisting of the following 16 Members of the Assembly:—

1. The Hon. Sri M. Bhaktavatsalam.
2. The Hon. Sri V. Ramaiah.
3. Sri M. Dhandayuthapani.
4. Sri K. B. Palani.

* Published in the *Fort St. George Gazette*, dated 23rd January 1963.

[Sri V. Ramaiah] [4th February 1963

5. Sri A. R. Subbiah Mudaliar.
6. Srimathi Parvathi Arjunan.
7. Sri V. Ramanathan.
8. Sri G. Rajaram.
9. Sri R. Subramaniam.
10. Sri P. Ramachandran.
11. Sri S. Murugaiyan.
12. Sri A. Thyagarajan.
13. Sri A. Thangavelu.
14. Sri K. Cheemaichamy.
15. Sri K. Mookiah Thevar.
16. Sri A. Swamidhas."

The Bill together with the Statement of Objects and Reasons was published last week.*

The hon. Members are already aware that when the Budget for 1962–63 was presented to the House in June last, the House was informed that the Government proopsed to enhance the assessment on wet lands and water-rates. It was indicated that the assessment on wet lands would be raised by 60 per cent in respect of lands under Class I and II sources and by 40 per cent in respect of other sources of lower classes and that the water rates payable on dry lands would be increased by 100 per cent in respect of Class I and II sources and by 50 per cent in respect of other sources. At the time of the Budget discussions and during the Motion of Thanks to the Governor's Address last time, hon. Members gave some suggestions in the implementation of the proposals and these have been taken into consideration in framing the present Bill. The assessment on lands registered as wet in revenue accounts has not been revised during the last 30 years in view of the policy of the Government not to have fresh settlements. These lands are all under old irrigation projects completed before the settlement operations and the assessment on them is less than the charge now levied on lands under the new projects. Also, after construction of certain new projects at high cost no increase of water rate or wet assessment has been made. As the hon. Members are aware, the value of the land has increased and the prices of agricultural produce have substantially risen as also the cost of maintenance of all irrigation works. The land revenue assessment alone has remained stationary; in fact, it is very low when compared with the market value of the land and the benefit derived by the landowners from them. The contribution from land revenue to the State Exchequer has naturally to be increased. Further, our resources have to be mobilised to the utmost capacity if we are to successfully fulfil our commitments during the Third Five-Year Plan period in respect of both developmental and

*Published in the *Fort St. George Gazette*, dated 23rd January 1963.



4th February 1963] [Sri V. Ramaiah]

non-plan schemes. The necessity to augment our resources is all the aggression.

The wet assessment is a consolidated levy which includes a basic assessment for land and a charge for water. The water rate component of the wet assessment may be taken as equivalent to 60 per cent of the consolidated charge on the land for lands under class I and II sources and 40 per cent of the assessment for wet lands under lower classes of sources. Our aim is to double the water-rate now being charged. The Government have, therefore decided that the assessment on wet lands should be raised by 60 per cent in respect of lands irrigated by Class I and II sources and 40 per cent in respect of lands irrigated by other sources.

10-30 a.m. The total assessment including the proposed increase will, however, be subject to a maxima. The maximum will be different for different categories of land such as Single Crop wet land, Double Crop wet land and Compounded Double Crop wet land and will also depend upon whether the lands are under I and II class sources or under lower classes of sources. The maxima are as below:

| | I and II Classes. RUPEES. | Lower Class. RUPEES. |
|---|---|---|
| Registered double Crop .. .. | 30 00 | 30 00 |
| Compounded Double Crop .. | 25 00 | 17 00 |
| Single Crop .. .. .. .. | 20 00 | 15 00 |

Agreeably with the increase in wet assessment, the Government also propose to raise the water-rates payable on dry lands served by I and II class sources by 100 per cent and by 50 per cent in respect of lower classes of sources. The water rate as increased will be subject to a maximum of Rs. 15 per acre. This limit has been fixed keeping in view the water-rate in Cauvery-Mettur Project area of Rs. 10 per acre.

In respect of the lands served by some of the new irrigation projects completed since the First Plan period, the water rates have been fixed only comparatively recently with due consideration to the ruling prices and cost of the profit. The rates are generally higher than those in force in respect of old projects. The assessment on wet land—single crop, double crop and compounded double crop—served by these new projects has already been increased by raising the classification of the sources. The Government have, therefore, decided that the lands served by the following projects should be exempted from the provisions of the Bill:—

1. Amaravathi Reservoir Project.
2. Krishnagiri Reservoir Project.
3. Lower Bhavani Project.

[Sri V. Ramaiah] [4th February 1963

4. Mettur Canal Project.
5. Parambikulam-Aliyar Project.
6. Sathanur Project.
7. Vaigai Reservoir Project.
8. New Kattalai High Level Canal Scheme; and
9. Pullambadi Canal Scheme.

It is proposed not to apply the increase to the lands in the Transferred Territory in the Kanyakumari district and the Shencottah taluk of the Tirunelveli district and to the leasehold villages in the State. The Government will have the power to extend the Act to these areas by notification at a later date. With a view to minimise the levy on landholders, the additional assessment or the additional water-cess will not be taken into account for the purpose of calculating standard acre under the Madras Agricultural Income Tax Act, 1955, assessment of local cess and local cess surcharge under the Madras Panchayats Act, or calculating standard acre or the compensation payable under the Land Ceiling Act. The provisions of the Bill will apply to the lands in the area added to this State from the Andhra Pradesh and the Additional Wet Assessment Act in force in that area will be repealed.

Hon. Members will therefore see that the Government have taken all efforts to see that the additional taxation is distributed equitably. With these words, I commend the Bill for the acceptance of the House.

MR. SPEAKER : Motion moved—

"That the Madras Additional Assessment and Additional Water Cess Bill, 1963, [L.A. Bill No. 4 of 1963] be referred to a Select Committee consisting of the following 16 Members of the Assembly :—

1. The Hon. Sri M. Bhaktavatsalam.
2. The Hon. Sri M. Ramaiah.
3. Sri M. Dhandayuthapani.
4. Sri K. B. Palani.
5. Sri A. R. Subbiah Mudaliar.
6. Srimathi Parvathi Arjunan.
7. Sri V. Ramanathan.
8. Sri G. Rajaram.
9. Sri R. Subramaniam.
10. Sri P. Ramachandran.
11. Sri S. Murugaiyan.
12. Sri A. Thyagarajan.
13. Sri A. Thangavelu.



4th February 1963] [Mr. Speaker]

14. Sri K. Cheemaichamy.
15. Sri K. Mookiah Thevar.
16. Sri A. Swamidhas."

[திருமதி ஏ. எல். பொன்னம்மாள் தலைமை]

* திரு. எஸ். மாதவன் : மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் இந்த நில வரி மசோதாவைப் பற்றி என்னுடைய சில கருத்துக்களை சொல்ல முன்வந்திருக்கிறேன். பொதுவாக விவசாய பெருமக்களுக்கு மேலும் பளுவை சுமத்தக்கூடாது என்கின்ற கருத்தை எல்லாக் கட்சி அங்கத்தினர்களும் ஒத்துக்கொள்வார்கள் என்று நம்புகிறேன். ஆனால் இந்த மசோதாவை பிரேரேபித்த அமைச்சர் அவர்களும் கனம் நிதி அமைச்சர் அவர்களும் ஏற்கனவே இந்தச் சட்டம் கொண்டு வருவதற்கு என்ன காரணம் என்பதை இங்கே எடுத்துச் சொன்னார்கள். அதில் முன்பாக நம்முடைய அரசியல் அமைப்புச் சட்டத்தில் குறிப்பாக ஒவ்வொரு ஏழை மகனும் அவனுடைய வாழ்க்கை வசதியை பெருக்கிக்கொள்வதற்கு அரசாங்கம் வாய்ப்பு அளிக்கவேண்டும் என்கின்ற தத்துவத்தை, கொள்கையை ஏற்படுத்தியிருக்கிறோம். அதைப்பின்பற்றித்தான் தனி மனிதனுக்கு உணவில்லையேல் ஜகத்தினை அழித்திடுவோம் என்று பாரதியார் சொல்லியிருக்கிறார்கள். அதே போல் இந்த நாட்டில் தனிப்பட்ட மனிதன் எதை தன்னுடைய வாழ்க்கை வசதிக்கு நம்பியிருக்கிறானோ அந்த விவசாயத்தைப் பாதிக்கின்ற முறையில் மசோதா கொண்டு வரப்படுகின்ற சூழ்நிலை இப்போது ஏற்பட்டிருக்கிறது. ஆனால் இந்த மசோதாவை ஏன் கொண்டு வந்திருக்கிறோம் என்று காரணங்களை கூறும்போது, கனம் அமைச்சர் அவர்கள் ஏற்கனவே இந்த மாகாணத்தில் வரக்கூடிய மொத்த வருமானத்தில் எவ்வளவு முன்னால் இருந்ததோ அதை விட இப்போது எத்தனை சதவிகிதம் குறைந்து இருக்கிறது என்று குறிப்பிட்டுச் சொன்னார்கள். ஆனால் அவர்கள் சொன்ன காரணத்தைப் பரிசீலிக்கும்போது ஒன்றை நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். பழைய காலத்தில் நம்முடைய மாகாணத்தில் வரி செலுத்தும் நிலத்தின் பரப்பு குறைவாக இருந்தது. ஆகவே நிலவரியின் சதவிகிதம் அதிகமாக தென்பட்டது. இன்றைக்கு நம்முடைய மாநிலத்தில் வரி செலுத்தும் நிலத்தின் பரப்பு பெருகியிருக்கிறது. அதனால் சதவிகிதம் குறைவாக காணப்படுவதும் இயல்பு. ஆகவே இதை ஒரு காரணமாகக் காட்டி இந்த வரியை உயர்த்தலாம் என்று சொல்வது எந்த வகையில் பொருந்தும் என்று எனக்குத் தெரியவில்லை. அதோடு கூட நிலத்தைப் பொறுத்தளவில் பொதுவான பரப்பளவு இவ்வளவு என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இந்த பரப்பு பெருகுவதற்கு எந்தவிதமான வாய்ப்பும் நமக்கில்லை. மற்ற துறைகளில் எல்லாம் பெருகுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஆகவே விவசாயத்துறையைப் பொறுத்தமட்டில் மற்ற துறைகளில் ஏற்பட்டிருக்கின்ற அளவுக்கு வருமானம் அதிகரிப்பதற்கு வாய்ப்பு

இல்லை என்பது ஆச்சரியப்படுவதற்கில்லை. ஆகவே இந்தக் காரணத்தைக் கொண்டு வரியை அதிகரிக்கலாம் என்று சொல்வதும் சரியாக இல்லை என்பதைக் கூற ஆசைப்படுகிறேன்.

அதற்கடுத்தபடியாக, நில வருவாய் இன்றுகுறைந்திருக்கிறது என்று ஆடிட்டர் ஜெனரல் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள் என்றும், நிலத்தில் வருவாயை பெருக்கிக்கொள்வதற்கான திட்டங்களுக்காக செலவு செய்யப்படும் தொகையில் 1.1 சதவிகிதம் தான் ரிட்டர்னாக வருகிறது என்றும் குறிப்பிட்டார்கள். திட்டங்களுக்காக செலவு செய்யப்படும் தொகையிலிருந்து, மிகவும் குறைவாகவே வருவாய் வருகிறது. ஆகவே இந்த வரியை உயர்த்தலாம் என்றும் குறிப்பிட்டார்கள். சாதாரணமாக மலேயா, இலங்கை முதலிய இடங்களிலிருந்து வருகின்ற பணமுள்ளவர்களிடம் போய், நீங்கள் அந்த நாடுகளில் லட்சக்கணக்கில் முதலீடு செய்திருக்கிறீர்களே, அதைக்கொண்டு வந்து இந்த நாட்டிலுள்ள தொழில் துறையில் போடுங்களேன், என்று கேட்டால், அவர்கள் சுமார் 10 லட்சம் ரூபாயை வைத்துக்கொண்டு ஒரு வட்டிக் கடையை ஆரம்பித்துவிட்டால் ஒரே இடத்திலிருந்துகொண்டு அதிகமான அளவுக்கு வருவாயைத் தேடிக்கொள்ளலாம் என்று சொல்லுவது வழக்கம். பொதுவாக விவசாயத் துறையில் அதிகமான அளவுக்கு செலவு செய்யப்பட்டு வருகிறது என்றும், அதே போல் நீர்ப்பாசனத் திட்டங்களுக்காக அதிகமான அளவில் பணம் செலவு செய்யப்படுகிறது என்றும் ஆகவே அதன் மூலமாக வருகிற வருவாயின் காரணமாக, இந்த வரியை அதிகரித்தோம் என்று சொல்லுவது, வட்டிக்கடைக்காரன் கணக்குப்பார்ப்பது போல் தான் இருக்கிறது என்பதை சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அதே சமயத்தில் ஒன்றை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன். இவ்விதமான வரிகளைப் போடுவதற்கு முன்னால் என்ன சொல்லப்படுகிறது என்றால், மக்களுடைய நன்மைக்காக அதிகமான அளவில் பணம் செலவு செய்யப்படுகிறது. அதன் மூலமாக மக்கள் அதிக பலனைப் பெறுகிறார்கள், ஆகவே வரியை உயர்த்தலாம் என்றும் அரசாங்கத்திலிருந்து சொல்லப்படுகிறது. இந்தத் தத்துவம் நம்முடைய ஜனநாயக ஆட்சியில் இருக்கக்கூடாது என்பது தான் என்னுடைய கருத்தாகும். ஏற்கனவே செஸ் வரியை போட்ட காலத்தில் பிரிட்டீஷ் ஏகாதிபத்தியம் 1865-ல் இதே கருத்தை சொல்லியிருப்பதை இந்த மாமன்றத்திற்கு சொல்ல ஆசைப்படுகிறேன். 1865-ம் ஆண்டில் மெட்ராஸ் இறிகேஷன் செஸ் ஆக்ட் கொண்டு வரும்போது, அப்போதிருந்த பிரட்டிஷ் அரசாங்கம் . . .

" . . .Whereas large expenditure out of Government funds has been and still being incurred in the construction and improvement of the works of irrigation and drainage; and " whereas it is right and proper that a fit return should in all cases a like made to the Government on account of the increased profits derivable from lands irrigated by such works."

என்று இதே கருத்தைத்தான் கூறியிருக்கிறது. நாங்கள் விவசாயிகளுக்கு பலன்தரக்கூடிய பல திட்டங்களுக்காக



செலவழித்திருக்கிறோம். ஆகவே விவசாயிகளிடத்தில் ஒரு பகுதியை வரியாக வாங்குவது சரிதான் என்று அன்றைக்குள்ள மசோதாவிற்கு காரணம் காட்டியிருக்கிறார்கள். அதே காரணத்தை ஜனநாயக அரசாங்கமும் காட்டலாமா என்று யோசிக்கவேண்டும் என்று இந்த மாமன்றத்தைக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, அமைச்சர் அவர்கள் இந்த மசோதாவுக்கான காரணங்களை கூறும்போது இப்போது நிலங்களுடைய விலை மதிப்பு கூடி விட்டது. ஆகவே வரியை உயர்த்தலாம் என்று சொன்னார்கள். நிலத்தின் விலை எங்கே கூடியிருக்கிறது என்று பார்த்தால், ஆற்றுப் பாசனம் இருக்கக்கூடிய இடங்களிலும் புதிதாக அமைத்த திட்டங்களின் மூலம் வசதி பெறும் இடங்களிலுமுள்ள நிலங்களின் விலைதான் கொஞ்சம் அதிகமாக உயர்ந்திருக்கிறது. ஆனால் அதே சமயத்தில் எங்கள் மாவட்டத்தைப் போன்ற, ராமநாதபுரம் மாவட்டத்தைப் போன்ற, மழையை எதிர்பார்த்திருக்கும் இடங்களில் கூட நிலங்களின் விலை உயர்ந்திருக்கிறது. இதற்குக் காரணம் என்ன என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஆகையால் பண விக்கம்தான் நில விலை உயர்வுக்குக் காரணம் என்று சொல்லலாமே ஒழிய, திட்டங்களால் விலை உயர்ந்து விட்டது என்று சொல்ல முடியாது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ராமநாதபுரம் போன்ற பகுதிகளில், மழையை எதிர் பார்த்துத்தான் விவசாயி தன் வாழ்க்கையை நடத்தும் பகுதியிலாவது, இந்த சட்டத்தை அமுலாக்கக் கூடாது என்று தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதே சமயத்தில் இந்த மசோதாவைப் படிக்கும்போது, 11-வது பிரிவைப் படித்தால் எங்கெங்கே பெரிய பெரிய திட்டங்கள் போட்டு நிறைவேற்றியிருக்கிறதோ அங்கெல்லாம் ஏற்கனவே 1955-ம் ஆண்டிலே பெட்டர்மெண்ட் டாக்ஸ் கொண்டு வந்து விட்டோம் என்று சொல்லி விதி விலக்கு செய்திருக்கிறார்கள். மிகுதி இருக்கக் கூடிய பகுதி ஆற்றுப் பாசனத்தை நம்பி இருக்காத பகுதி. மழையை நம்பி இருக்கக் கூடிய பகுதிகளைத் தான் இது பாதிக்கும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். உதாரணமாக, எங்கள் பகுதியில் பாலாறு ஓடுகிறது. பாலாறு என்று பெயரே ஒழிய மழை விழுந்தால்தான் தண்ணீர் வரும். அப்படி மழை பெய்து ஆற்றில் தண்ணீர் வரும்போது ஆங்காங்கு மண் அணை போட்டுத் தடுத்து தண்ணீரை நிலங்களுக்குப் பாய்ச்சிக் கொள்வார்கள். இப்போது புதிய திட்டங்களின் படி மண் அணைக்கு பதில் கல்லணை கட்டிக் கொடுக்கிறார்கள். இதற்கு லட்சக் கணக்காகச் செலவு செய்கிறார்கள். அதனால் என்ன பலன் ஏற்பட்டிருக்கிறது? விவசாயிகள் மண் அணை போட்டுக்கொள்வதற்கு பதில் சர்க்கார் கல் அணை போட்டிருக்கிறார்கள்— அதனால் விவசாயிகள் வேலை கொஞ்சம் குறையும்—அவ்வளவு தான். இதனால் விவசாய உற்பத்தி பெருகியிருக்கிறதா என்று பார்த்தால், மழை பெய்தால் தான் கல்லணையிலும் தண்ணீர் நிற்கக் கூடிய நிலைமை

இருக்கிறது. இதனால் விவசாய உற்பத்திக்கு எந்த விதமான புதிய பலனும் இல்லை. அந்தப் பகுதிக்கு வரியை உயர்த்த வேண்டும் என்று நினைக்கக் கூடாது. ஆகவே அந்தப் பகுதிகளை (exclude) நீக்கம் செய்து விடவேண்டும் என்று இந்த மாமன்றத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு சிறு அளவிலே, குறைந்த அளவிலே, 5 ஏக்கர், 10 ஏக்கர் என்று வைத்துக்கொண்டிருக்கிறவர்களுக்கு விதி விலக்கு கொடுக்கவேண்டுமென்று வற்புறுத்த ஆசைப்படுகிறேன். காரணம் ஏற்கனவேயே அக்ரிகல்சுரல் இன்கம்-டாக்ஸ் என்று போட்டு விட்டோம். அதிலே குறிப்பிட்ட வருமானத்திற்கு மேல் விவசாயி பெறக்கூடிய சூழ்நிலை இருந்தால் அதன் மீது வரி போடப் படுகிறது. அதே முறையில் இதையும் ஒரு ப்ரொக்ரெஸிவ் டாக்ஸாக வைத்து நிலம் கூடக் கூட, பரப்பளவு அதிகமாக அதிகமாக வரியை அதிகமாக வைக்க வேண்டுமே தவிர, 5 ஏக்கர், 10 ஏக்கர் என்று அதற்குட்பட்டு வைத்திருக்கக்கூடியவர்கள் வரி ஏற்றம் கூடவே கூடாது என்று சொல்லிக்கொள்ள ஆசைப் படுகிறேன்.

அடுத்தபடியாக, இந்த மசோதாவைக் கொண்டு வந்தபோது ஏற்கெனவே கனம் நிதி அமைச்சர் அவர்கள் ஒன்றைக் குறிப்பிட்டார்கள். 1802-ம் ஆண்டிலிருந்து பார்த்தால் நில வரி—அடிப்படை பேசிக் லாண்ட் ரெவின்யூ—அப்போதுதான் நிர்ணயிக்கப்பட்டது, காலம் கடந்து விட்டது, விலைவாசி ஏறி விட்டது, விவசாயியின் வருமானம் பெருகி விட்டது, புதிய முறையிலே பேசிக் லாண்ட் ரெவின்யூவை அமைப்பதற்கு பதில் வரியை கொஞ்சம் அதிகப்படுத்தலாம் என்று குறிப்பிட்டார்கள். நான் இந்த நேரத்தில் ஒன்றை நினைவுபடுத்த விரும்புகிறேன். வெள்ளைக்காரன் காலத்தில் சட்டத்தைக் கொண்டு வந்தபோது தெளிவாகக் கூறியிருக்கிறான். விவசாயிகள் அதிக அளவு பாதிக்கப்படும் அளவுக்கு மேலும் உயர்த்த மாட்டோம் என்று வெள்ளைக்காரன் காலத்தில் 1802 ல் மெட்ராஸ் பர்மனெண்ட் ரெகுலேஷன் கொண்டு வந்தபோது தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறான். “whereas the Government have resolved to fix for ever a moderate assessment of public sevenue on such lands the amount of which shall never be liable to be increased under any circumstances.” என்று வெள்ளைக்காரன் கொடுத்த உறுதியை நாம் மீறலாமா? இன்றைக்கு அப்படி மாற்றுவதற்கு வேண்டிய நிலைமை என்ன ஏற்பட்டிருக்கிறது என்று சிந்தித்துப் பார்க்கவேண்டும். விவசாயிகளுக்கு தன்மை செய்கிறோம் என்பதை ஒப்புக்கொள்கிறோம். இப்படிப்பட்ட நன்மை செய்கிறோம் என்று பார்க்கும்போது. விவசாயிகள் இந்த நாட்டுக்கு அடிப்படையாக இருக்கக்கூடியவர்கள். ‘உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம் தொழுதுண்டு பின் செல்பவரே’ என்று தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த சமுதாயத்திற்கு அச்சாணியாக விளங்குகிறவர்கள்





உழவர்கள் என்று திருவள்ளுவர் குறிப்பிட்டிருக்கிறார்கள். சமுதாயத்தைக் காப்பதற்காக விவசாயிகள் பயன்படுவதால், சமுதாய மக்களுக்கு உணவு அளிப்பதால், சமுதாயம் வாழ்வதற்கு அவர்கள் முக்கிய காரணமாக இருப்பதால் வெள்ளைக்காரன் 1802-ம் ஆண்டிலேயே முடிவு கட்டினான் என்பதை முதலிலே இந்த மாமன்றம் யோசித்து பிறகு மாற்றவேண்டும் என்று முடிவு எடுத்தால், நிச்சயம் ப்ரொக்ரெஸிவ் டாக்ஸாக இதை வைத்து குறைந்த அளவு வைத்திருக்கிறவர்கள் விதி விலக்கு அளிக்கும் அடிப்படையை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று கூறி முடித்துக் கொள்கிறேன்.

*கனம் திரு. எம். பக்தவத்சலம்: கனம் தலைவர் அவர்களே, இப்போது பேசிய கனம் அங்கத்தினர் சில கருத்துக்களைத் தெரிவித்தார்கள். அதற்குச் சில விளக்கங்களைக் கூறவேண்டுமென்று தங்கள் அனுமதியின் பேரில் இந்த விவாதத்திலே கலந்து கொள்ள முற்படுகிறேன்.

ஏதோ 1802-ல் வெள்ளைக்கார ஆட்சி பர்மனெண்ட் செட்டில் மெண்ட் செய்தார்கள், அவைகளை மாற்றவில்லை என்று சொன்னார்கள். அதை இந்த அரசாங்கம் மாற்றுகிறது என்றும் சொன்னார்கள். கனம் அங்கத்தினர் ஒரு வழக்கறிஞர். அதுவும் ஜமீன் பிராந்தியத்தில் இருக்கிறவர். அந்த ஜமீன் பிராந்தியத்தில் இருப்பதைப் போல எங்கும் ஒரே முறை என்று அவர் நினைக்கிறாரோ என்னவோ தெரியவில்லை. சட்டம் தெரியாமல் கூறுகிறார் என்று நான் கூற மாட்டேன். பர்மனெண்ட் செட்டில்மெண்ட் என்றால் என்ன? ரயத்வாரிக்கு அது பொருந்தாது. கனம் அங்கத்தினர்களுக்குத் தெரியும் அப்போதைக்கப்போது செட்டில்மெண்ட் நடந்துகொண்டே இருந்தது. 1802-க்குப் பின்னால் ஒவ்வொரு செட்டில் மெண்ட்டிலும் வரி உயர்ந்துகொண்டிருக்கிறது. கொஞ்ச காலத்துக்கு முன்னால் தான் ரீ-செட்டில்மெண்ட் எல்லாம் நிறுத்தப்பட்டது—ஆனால் அது ரீ-செட்டில்மெண்ட் ஆஃப் ரயத்வாரி. பர்மனெண்ட் செட்டில்மெண்ட் என்பது ஜமீன் பிராந்தியங்கள், சுரோத்திரியம் பிராந்தியங்கள் ஆகியவைகளுக்கு. யாருக்கு செட்டில்மெண்ட்? ஜமீன்தாருக்குச் செட்டில்மெண்ட். விவசாயிகளுக்கா செட்டில்மெண்ட்? அப்போதே விவசாயிகள் எவ்வளவு தூரம் புகார் செய்துகொண்டிருந்தார்கள்? ஜமீன்தார்கள் வரியை உயர்த்திக்கொண்டே இருக்கிறார்கள் என்று எவ்வளவோ புகார்கள் இருந்தன அதைத் தவிர்க்கத் தானே 1938-ம் ஆண்டிலேயும், 1946-47-ம் ஆண்டிலேயும் சட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. ஜமீன்தாருக்குத்தான் பர்மனெண்ட் செட்டில்மெண்ட். இதை கனம் அங்கத்தினர் தெரிந்து கொள்ளவேண்டும். ஆகவே அதை நாம் மாற்றி விட்டோம் என்று சொல்லுவது சரியல்ல. ஜமீன் பிராந்தியத்திலே விவசாயிகள் அதிக வரி கொடுத்துக்கொண்டு வந்தார்கள். ஏதோ ராமநாதபுரம், சிவகங்கை பகுதிகளில் வேண்டுமானால் கொஞ்சம் குறைவாக இருக்கலாம் பொதுவாக

வரி அதிகமாக இருந்தது. ஜமீன் ஒழிப்புச் சட்டத்தை நிறைவேற்றிய பிறகு அதை அக்கம் பக்கம் உள்ள அளவுக்குக் குறைத்திருக்கிறோம். பர்மனெண்ட் செட்டில்மெண்டிலே இருந்ததை விடக் குறைந்திருக்கிறது.

இன்னொன்று சொன்னார்கள். குறைந்த பட்சம் நிலம் உள்ளவர்களுக்கு எடுத்து விடலாம், வரி அதிகரிப்பதை ஸ்லாப் ஸிஸ்டம் வைத்து யார் யார் அதிகமாக வைத்திருக்கிறார்களோ அந்த அளவுக்குத் தகுந்தபடி அதிகப்படுத்தலாம் என்று சொன்னார்கள். வருமானத்திற்கு வரி என்றால் அது சரி. ஆனால் இந்த மசோதாவிலே நீர்ப்பாசனத்திற்கு வரி போட்டிருக்கிறோம். இதை வரி என்றுகூடச் சொல்ல முடியாது--இது ஒரு ஸெஸ். நீர்ப்பாசனத்திற்குத் தான் இந்த வரி. ஒரே அளவில் போடுவது தான் முறையே தவிர அதிகப்படுத்திக்கொண்டுபோவது முறையல்ல. ஒரு ஏக்கர் வைத்துக்கொண்டிருந்தாலும், 2 ஏக்கர் வைத்துக்கொண்டிருந்தாலும் அந்தந்த அளவுக்கு நீர்ப்பாசனம் நிலச்சொந்தக்காரர்களுக்குப் பயன்படுகிறது. அப்படி பயன்படுகிறபோது அதற்கு ஏற்றவாறு அவர்கள் வரி செலுத்தவேண்டும். முன்பு இருந்த வரியை விட இப்போது உயர்த்த வேண்டுமென்று இந்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது.

அப்புறம் கனம் அங்கத்தினர் அவர்கள் சொன்னார். அங்கேயும் வெள்ளைக்கார ஆட்சியை எடுத்துக்கொண்டார்கள். ஆனால் நான் தாழ்மையோடு தெரிவித்துக்கொள்கிறேன், கனம் அங்கத்தினர் அவர்கள் இந்த ஆண்டிலே தான் அங்கத்தினராக வந்திருக்கிறார், இதற்கு முன் வழக்கறிஞராக இருந்திருக்கிறார், அரசியலில் அக்கறை காட்டக் கூடியவர், இதற்கு முன் சட்ட சபையில் நடந்த விவாதங்களை கவனித்திருப்பார்கள் என்று நினைத்தேன். 10 ஆண்டுகளுக்கு முன் இந்த சட்ட மன்றத்தில் காங்கிரஸ் ஆட்சி நீர்ப்பாசனத்தைப் பற்றி, நீர்ப்பாசனத் திட்டங்களை எடுத்துக் கொள்வதைப் பற்றி கொள்கையை நிர்ணயித்து தெரிவித்திருக்கிறது. அதற்கு முன்பு வெள்ளைக்கார ஆட்சி இருந்தபோது, கனம் அங்கத்தினர் குறிப்பிட்டது போல ஒரு நீர்ப்பாசனத் திட்டத்தை எடுத்துக்கொள்வதென்றால், போடக்கூடிய மூலதனத்துக்கு வட்டி எவ்வளவோ, அது போக எவ்வளவு லாபம் வரும் என்று பார்ப்பது வழக்கம். தொழில் செய்கிறவர்கள் மூலதனத்தை வட்டிக்கு விட்டால் எவ்வளவு வட்டி கிடைக்குமோ அது போக எவ்வளவு லாபம் வரும் என்று பார்ப்பார்களோ அந்த முறையில் தான் வெள்ளைக்கார ஆட்சியில் இருந்தது. 1802-லிருந்து வெள்ளைக்கார ஆட்சி அனுசரித்து வந்த கொள்கை அதுதான். அதேமாதிரி பரிசீலனை செய்து பல நீர்ப்பாசன திட்டங்களை அவர்கள் கைவிட்டுவிட்டார்கள். கீழ் பவானித் திட்டத்தை ஜனநாயக ஆட்சி ஏற்பட்ட உடனேயே நாம் எடுத்துக்கொண்டு, நிறைவேற்றியிருக்கிறோம். அதனால் இப்பொழுது விவசாயிகள் பயனடைந்து வருகிறார்கள். அந்தத் திட்டம் 50 ஆண்டுகளுக்கு முன்பே இருந்த திட்டம். அந்தத் திட்டம் 50 ஆண்டுகளுக்கு



முன்பே நிறைவேற்றப்பட்டிருந்தால், குறைந்த செலவில் நிறைவேற்றப்பட்டிருக்கலாம். அம்மாதிரி பல நீர்ப்பாசனத் திட்டங்கள் வெள்ளையர் ஆட்சியால் நிறைவேற்றப்படாமல் கைவிடப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு நீர்ப்பாசன திட்டத்திற்கும் கணக்குப் போட்டுப் பார்த்து, வட்டி வாராது, வட்டிக்கு மேலே லாபம் இவ்வளவு வேண்டும், அதிகமான லாபம் வேண்டும் என்றெல்லாம் டிவிடெண்டு பெறுவது மாதிரி கணக்குப்போட்டுப் பார்த்து—அதைத் தான் 'ரெம்யூனரேடிவ்' என்று சொல்லுவார்கள்—அதெல்லாம் தங்களுக்கு சரிப்படாது என்று கருதி பல திட்டங்களை அன்று ஆங்கிலேய ஆட்சியில் கைவிட்டுவிட்டார்கள். அப்படித் தான் 40 ஆண்டுகள், 50 ஆண்டுகளுக்கு முன்பாக நிறைவேற்றப்படவேண்டிய திட்டங்களெல்லாம் நிறுத்திவைக்கப்பட்டிருந்தன. இந்த ஆட்சி வந்த பிறகு இந்தத் திட்டங்களையெல்லாம் ஒவ்வொன்றாக எடுத்து நிறைவேற்றிக்கொண்டு வருகிறோம். நாங்கள் அப்பொழுதே இந்த மன்றத்தில் தெரிவித்திருக்கிறோம். அந்தக் கொள்கையை நாம் அடியோடு கைவிட்டுவிட்டோம். நீர்ப்பாசனத் திட்டங்களைப் பொறுத்த மட்டில் வெள்ளைக்கார ஆட்சியில் கையாண்டுவந்த கொள்கையை, அந்தத் திட்டங்கள் லாபத்தைக் கொடுக்கவேண்டுமென்ற கொள்கையை நாங்கள் கைவிட்டுவிட்டோம். நான் இந்த மன்றத்தில் அப்பொழுது எத்தனையோ முறை விளக்கியிருக்கிறேன். நீர்ப்பாசன திட்டத்தின் மூலம் விவசாயிகளுக்கு லாபம் வருகிறது என்றால், வட்டிக் கணக்குப் பார்க்காமல், அதற்கு மேலே லாபம் என்ன வருகிறது என்று கணக்குப் பார்க்காமல், விவசாயிகள் அதன் மூலம் செழிப்பாக வளர்ச்சி அடைந்தால், அது தான் அரசாங்கம் எதிர்பார்க்கிற லாபம். அந்த லாபத்தை மனதில் வைத்துக்கொண்டு, பல திட்டங்களை ஒரு பெர்செண்ட், 2 பெர்செண்ட் விதம் வருமானம் வருகிற திட்டமாக இருந்தால் கூட, தயங்காமல் நிறைவேற்றிக் கொண்டு வருகிறோம். அப்பேர்ப்பட்ட திட்டங்களினால் லாபம் பார்த்தால், லாபம் கிடையாது, விவசாயிகள் அடையும் பயன் தான் லாபம். வெள்ளையர் ஆட்சியில் அனுசரித்த கொள்கைக்கு முற்றிலும் முரண்பட்ட கொள்கை இது. ஆனால், இந்தத் திட்டங்களின் மூலம் விவசாயிகள் லாபம் அடைகிறார்கள், பயன் அடைகிறார்கள். அந்த லாபத்தைத்தான் சர்க்கார் பார்க்கிறது. அதைத்தான் லாபம் என்று கருதி இந்தத் திட்டங்களையெல்லாம் நிறைவேற்றிக் கொண்டு வருகிறோம்.

இந்தத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கும் ஒரு வரம்பு இருக்கிறது. நாம் இந்தத் திட்டங்களுக்காக பணத்தை செலவு செய்கிறோம் என்றால், லாபத்தை எதிர்பார்க்கவில்லை என்றாலும், எவ்வளவு தூரம் ஒரு திட்டத்தினால் நாம் பலன் அடையமுடியும் என்பதைக் கவனிக்கவேண்டியிருக்கிறது. லட்சக்கணக்கான ரூபாய்கள் செலவு செய்து 100 ஏக்கர் நிலங்களுக்கு மேலே, 50 ஏக்கர் நிலங்களுக்கு மேலே பயன் அடையாது என்று தெரிந்தால் அதையும் நாம் கவனிக்க வேண்டியதாயிருக்கிறது.

[திரு. எம். பக்தவத்சலம்] [4th February 1963

இப்பொழுது நீர்ப்பாசன வரியை அதிகப்படுத்துவது பற்றி சொன்னார்கள். நீர்ப்பாசன வரி நிலத்தை வைத்துக்கொண்டிருப்பவர்களுக்கு போடப்படுகிறது. சாதாரணமாக எதை வேண்டுமானாலும் பேசலாம். கனம் அங்கத்தினர்கள் இதைக் கொஞ்சம் கவனித்துப் பார்க்கவேண்டும். நிலச் சொந்தக்காரர்கள் எவ்வளவு பேர்கள் இருக்கிறார்கள்? தமிழ் நாட்டில் நிலம் இல்லாதவர்கள் எவ்வளவு அதிகமாக இருக்கிறார்கள்? நிலம் வைத்துக் கொண்டிருப்பவர்கள் ஓரளவுக்கு வசதி படைத்தவர்கள். அவர்கள் வேளாண்மை செய்வது அவர்களுக்கு மட்டுமல்ல, நிலம் இல்லாதவர்களுக்கும் சேர்த்துதான். அதனால்தான் வேளாண்மைத் தொழில் ஒப்புயர்வற்ற தொழில் என்று சொல்லுகிறோம். ஆட்சி செலுத்துகிறவர்கள் எல்லோருடைய வசதிகளையும் கவனிக்க வேண்டியதாக இருக்கிறது. ஒரு சிலருக்கு மட்டும் அதிகமாகச் செலவு செய்து அவர்கள் பயன் அடையும்படி செய்வது முறையல்ல. அதனை இப்பொழுது எல்லோரும் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். அம்மாதிரி செய்வது நமது சோஷலிஸ பாலிசிக்கு முரண்பட்டது என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, நீர்ப்பாசன திட்டங்களை நிறைவேற்றுவதிலே இப்பொழுது என்ன செலவாகிறது, அதனால் என்ன பலன் ஏற்படுகிறது என்பதையும் பார்க்கவேண்டும். நான் இப்பொழுது மற்றொன்று சொல்ல விரும்புகிறேன். அன்றே ஒன்று குறிப்பிட்டேன். மொத்த வருமானம் ஏறிக்கொண்டே வருகிறது, அந்த அளவுக்கு நில வரி ஏறவில்லை என்று சொன்னேன். ஏறவில்லை என்று சொன்னேனே தவிர, வருமானம் வருகிற அந்த அளவுக்கு ஏறவேண்டுமென்று நான் சொல்லவில்லை. முன்பே எடுத்துக் காட்டினேன். கடைசியிலே கணக்குப் போட்டதிலே, மொத்த வருமானத்திலே 100-க்கு 50 வீதம் நிலவரி இருந்தது 1952-53-ல். இப்பொழுது 100-க்கு 9.3 வீதம் இருக்கிறது என்று சொன்னேன். மறுபடியும் இதை 100-க்கு 50-ஆக உயர்த்தவேண்டுமென்ற நோக்கமல்ல. நில வரியைக் கொஞ்சம் அதிகப்படுத்தலாம் என்பதுதான் நோக்கம். 100-க்கு 50 வீதம் வராவிட்டாலும், 100-க்கு 9-லிருந்து 10, 12, 13, 15 ஆகும், அவ்வளவுதான் ஆகும். நீர்ப்பாசன பெட்டர்மெண்ட் லெவி ஏன் விதித்திருக்கிறோம் என்றால், அதுவும் சோஷலிஸ்ட் கொள்கையை கருத்தில் கொண்டுதான். ஒரு நீர்ப்பாசனத் திட்டத்திற்கு செலவு செய்தால், அதனால் ஒரு சிலர் பலன் அடைகிறார்கள். அந்த நீர்ப்பாசன திட்டத்தை நிறைவேற்றுவதற்கு பொது மக்கள் கொடுக்கும் வரிப் பணத்திலிருந்து செலவு செய்கிறோம். அப்படிச் செலவு செய்வதில் ஒரு பகுதியை அவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்ற அடிப்படையில் தான் அபிவிருத்தி வரி விதித்திருக்கிறோம். புதிய திட்டங்களுக்காக அபிவிருத்தி வரி போட்டிருக்கிறோம். அதனால்தான் அவர்களை இந்த வரி விதிப்பிலிருந்து விலக்கியிருக்கிறோம். அடியோடு மழையை எதிர்பார்க்கிற பிராந்தியமாக இருக்கலாம். அப்படி மழையை எதிர்பார்க்கிற பிராந்தியமாக இருந்தால், அதற்கு வரி வராது. ஒரு நீர்ப்பாசன அமைப்பு இருந்து, குளமாக இருந்தாலும் சரி, மற்றபடி கண்மாயாக இருந்தா



4th February 1963] [திரு. எம். பக்தவத்சலம்]

லும் சரி, அல்லது கால்வாயாக இருந்தாலும் சரி, அல்லது ஒரு நீரோட்டமாக இருந்தாலும் சரி, அதனால் பயன் அடையக்கூடிய பிராந்தியத்திற்குத்தான் இந்த வரி போடப்படுகிறது. அந்த நீர்ப்பாசன அமைப்புக்காக சர்க்கார் செலவு செய்யவேண்டியிருக்கிறது, மேலும் அதை சரிப்படுத்த வேண்டியிருக்கிறது. இம்மாதிரி வகையிலேதான் தண்ணீர் தீர்வை இருந்துகொண்டிருக்கிறது. அதை ஓரளவுக்கு உயர்த்தியிருக்கிறோம், நீர்ப்பாசன அமைப்பினால் பயன் அடைந்தவர்களுக்கு மானாவாரிப் புஞ்சை என்று சொல்லுவார்கள், அதாவது மழையையே எதிர்பார்த்த நிலமாக இருந்தால், அதற்கு இந்த வரி வராது. மற்ற விவரங்களை யெல்லாம் செலக்ட் கமிட்டியில் பேசிக்கொள்ளலாம். கனம் அங்கத்தினர் தவறான கருத்தைக் கொண்டிருந்ததால், அதை உடனே அவர்களுக்கு விளக்கவேண்டும் என்றுதான் இப்பொழுது இந்த விவாதத்தில் தலையிட்டேன்.

திரு. கோ. சி. மணி: கனம் தலைவர் அவர்களே, இன்றைய தினம் இந்த நிலவரி விதிப்பின் மசோதா மீது என்னுடைய கட்சி உறுப்பினர் எடுத்துச் சொன்ன கருத்துக்கு கனம் அமைச்சர் அவர்கள் இங்கே பதில் சொல்லியிருக்கிறார்கள். குறிப்பாக, விதித்திருக்கிற வரி யார் தலையில் சுமத்தப்படுகிறது என்பதை அமைச்சர் அவர்கள் ஓரளவுக்கு நன்றாக உணர்ந்திருப்பார்கள் என்று கருதுகிறேன். நிலத்திற்கு வரி விதித்தால், நிலச்சுவான்தார்களை பாதிக்கும் என்று பேசும் பேச்சுப் போய், விவசாயிகளை பாதிக்கிறது என்று சொல்லுகிற நிலைமையில் உறுப்பினர்கள் இங்கே பேச வந்திருக்கிறோம். அப்படிச் சொல்லுவதற்கான காரணம், யாரிடத்திலே நிலம் கிடைக்கவேண்டுமோ, யார் உழுகிறார்களோ அவர்களுக்கு நிலம் சேருகிற அளவுக்கு சட்டம் செய்திருக்கிறோம் என்று அமைச்சர் அவை கூறியிருப்பதை யாரும் மறந்திருக்கமாட்டார்கள். நில வரி என்பது 1960-ஆம் வருஷத்திற்குப் பிறகு ஓரளவுக்கு விதிக்கவேண்டும், விதிக்க வேண்டுமென்று சொல்லி, அந்த வரியும், செஸ், அபிவிருத்தி வரியும் இப்படி பல கோணங்களில் வரி விதிக்கப்பட்டு வருகிறது. 1960-ஆம் வருஷத்தில்தான் நில உச்ச வரம்புச் சட்டம் கொண்டுவந்தோம் அதற்குப் பிறகு வரி விதிப்பைப் பற்றி கொஞ்சம் அதிகமாகவும் எடுத்துச் சொல்லிக்கொண்டு வருகிறோம். ஏதாவது அபிவிருத்தி வரி விதிக்கவேண்டுமானால், நிலத்தின் அடிப்படையிலே விதிக்கலாம் என்று சொல்லுகிறோம். பஞ்சாயத்தானாலும், பஞ்சாயத்து கூட்டுறவு ஆனாலும், செஸ்களை இப்பொழுது நில அடிப்படையிலே விதித்துக்கொண்டு வருகிறார்கள். சர்க்கார் கொள்கையை நிலம் பரவலாக்கப்பட்டு, உழுபவர்கள் கையில் சேர்க்கப்பட்டுவிட்டதாக அறிவிக்கப்பட்டிருக்கிற கொள்கையை அந்த அளவுக்கு இந்த மசோதாவைப் பொறுத்தவரையிலே வைத்துக்கொண்டு அமைச்சர் அவர்கள்கூட குறிப்பிட்டிருக்கிறார்கள். நிலம் ஒரு சிலர் கையிலே தான் இருக்கிறது, ஆனால் நிலத்தை நம்பி வாழ்பவர்கள், நிலத்தை உழுபவர்கள் பல பேர்கள் இருக்கிறார்கள் என்று குறிப்பிட்டார்கள்.

நிலம் சிலரிடத்தில்தான் இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் இப்பொழுதுதான் குறிப்பிட்டு அதைச் சொன்னார்கள். அவர்களை பாதித்தாலும் பரவாயில்லை என்ற உள் நோக்கத்தோடுதான் இதை எடுத்துச் சொன்னார்கள். நிலத்திற்கு உச்ச வரம்பு கட்டும் பொழுது, ஒரு நபருக்கு 15 ஏக்கர் இருந்தால் போதும் என்று எடுத்துச் சொன்ன நேரத்தில் இதே காரணத்தைத்தான் இந்த மன்றத்தில் நாங்கள் எடுத்துச் சொன்னோம். 15 ஏக்கர் வைத்துக் கொண்டால் போதும். நிலம் இல்லாதவர்கள் ஏராளமாக இருக்கிறார்கள் என்று இந்த மன்றத்தில் நிடுத்துச் சொன்னோம். அப்பொழுது அது கூடாது, அது முடியாத காரியம், அவர்களுக்கு 30 ஸ்டாண்டர்டு ஏக்கர் இருந்துதான் தீரவேண்டும் என்று குறிப்பிட்டுவிட்டார்கள். இந்த வரியின் காரணமாக லாப நஷ்டக் கணக்கை இங்கே எடுத்துக் கூறியிருக்கிறார்கள். விவசாயத்தை அபிவிருத்தி செய்வதற்காக பெரிய நீர்ப்பாசன திட்டங்களையும், சிறிய சிறிய நீர்ப்பாசன திட்டங்களையும் நிறைவேற்றி, அதனால் விவசாய உற்பத்தியை ஊக்குவிக்கவேண்டும் என்றுதான் வரி விதிக்கிறோம் என்பதையும் இங்கே எடுத்துக் கூறியிருக்கிறார்கள். குறிப்பாக ஒரு விவசாய நிலத்திற்கு ஒரு அபிவிருத்தி செய்திருக்கிறோம், ஒரு பாசன வசதி செய்திருக்கிறோம் என்றால் அந்த ஆண்டிலே அதனுடைய பலனை நாம் எதிர்பார்த்துச் செய்யவில்லை. ஒரு ரெகுலேடரைக் கட்டினால், அல்லது 'பெட் டாம்'-ஐக் கட்டினால், அதன் பலனை அந்தப் பகுதி நிரந்தரமாக எப்பொழுதும் அனுபவிக்கவேண்டும் என்றுதான் அதைக் கட்டுகிறோமே தவிர, அந்த வருஷத்திற்கு லாபம் எவ்வளவு, அந்த வருஷம் எத்தனை கோடி ரூபாய் ரெகுலேடர் கட்டுவதற்கு செலவாகியிருக்கிறது, அந்தப் பசலிக்கு அந்தப் பகுதியிலிருக்கிற எத்தனை ஏக்கருக்கு எவ்வளவு ரூபாய் வருமானம் என்ற கணக்கை நாம் போடுவதில்லை.
11-00 a.m. அப்படிப் போடுவது நியாயமில்லை. ஏதாவது ஒரு திட்டத்தை நிறைவேற்றினால், அந்தப் பகுதிகளிலுள்ள நஞ்சை நிலம் உள்ளவரை, புஞ்சை நிலம் உள்ளவரை, அந்தப் பாசனத்தை நம்பி அந்தப் பகுதியிலுள்ள மக்கள் வாழலாமென்ற அடிப்படையிலே தான் திட்டங்களை உருவாக்கிக்கொண்டிருக்கிறோம். அப்படி உருவாக்கப்படுகிற திட்டங்களுக்கு நாம் லாப நஷ்டக் கணக்குப் போடுவது அவ்வளவு நியாயமாக இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். குறிப்பாக, மானாவாரி நிலங்களுக்கு இந்த வரி இல்லை. அடுத்தாற்போல் ஆறுகள் பாய்ந்துகொண்டிருக்கிற நிலங்களுக்கு இந்த வரி உண்டு என்று சொல்லியிருக்கிறார்கள். நான் ஆறுகள் ஓடிக்கொண்டிருக்கும் பகுதியிலிருந்து வருபவன். தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்தவன். தஞ்சை மாவட்டத்திற்கு மேட்டூரிலிருந்து தண்ணீர் வருகிறது. மேட்டூர் தேக்கத்திலே தண்ணீர் நிரம்பி ஆறுகளிலே வந்தாலும், அப்படி ஆற்றிலே வருகிற தண்ணீர் கால்வாய்களுக்குப் போகிற உத்தரவாதம் உண்டா என்று சொன்னால் பல பகுதிகளிலே இல்லை. அப்படி கால்வாய்களுக்கு வந்தாலும், மடைகளை எட்டிப் பார்க்குமா என்ற உத்தரவாதம் இடையாது. மடைக்கு வருகிற தண்ணீர் வயலுக்கு எட்டுமா



என்று பார்த்தால் சென்ற வருடம் வந்த வெள்ளத்தின் காரணமாக சில பகுதிகள் மேடிட்டிருக்கின்ற காரணத்தால், தண்ணீர் வயலுக்கு ஏறாத அளவுக்கு இன்று அந்தப் பகுதிகள் காட்சி அளிக்கின்றன. சர்க்கார் என்ன நினைத்திருக்கிறார்கள் என்றால், காவிரித் தண்ணீர் வந்து கொண்டேயிருக்கிறது, கால்வாய்கள் எல்லாம் நிரம்பி வழிகின்றன, ஆகவே தஞ்சையிலே இருக்கின்ற நஞ்சை நிலங்களுக்கு ஏராளமாக வரி போடலாமென்று கருதுகிறார்கள். அப்படி தண்ணீர் பாய்ந்தாலும், உள்ளபடியே அங்கே விவசாயம் செய்யப்படும் 'மாடல்' பகுதிகளிலே நடக்கும் திட்டங்களை வைத்துக் கணக்கிடலாம். சர்க்கார் நடத்தும் பண்ணைகளை வைத்துப் பார்த்தாலும்கூட, எந்த அளவுக்கு அங்குள்ள விவசாயிகளுக்கு வரவு செலவிலே மிகுதிப்படும் என்பது தெரியவரும். கிராமப் புறங்களிலே உள்ள விவசாயிகள் பல்வேறு வரிகளைக் கொடுக்கவேண்டியிருக்கிறது. பஞ்சாயத்துக்கு செஸ் வரி கொடுக்கவேண்டும். இன்னும் கிராமப் புறங்களில் உற்சவங்கள் நடக்கும்பொழுது நிலத்தின் அடிப்படையில் தான் வரி வசூலிக்கிறார்கள். ஒரு சாலை போடவேண்டுமென்று சொன்னாலும் ஒரு பள்ளி அமைக்கவேண்டுமென்று சொன்னாலும், கிராமத்திலே இருக்கிறவர்கள், அவர்களிடம் இவ்வளவு ஏக்கர் நிலம் இருக்கிறது என்றால், இவ்வளவு வரி கொடுக்க வேண்டுமென்ற அடிப்படையில் வசூலித்துக் கொண்டிருக்கிறோம். இப்படியெல்லாம் வசூலிக்கும்பொழுது, அந்த எல்லை எந்த அளவுக்கு உச்ச கட்டத்தை அடைகிறது என்பதைப் பார்க்க வேண்டும். நிலத்தின் மதிப்பைப்பற்றி வருவாய்த்துறை அமைச்சர் இங்கே குறிப்பிட்டார்கள். வருமானத்தைப் பற்றியும் குறிப்பிட்டார்கள். என்னுடைய கட்சியைச் சேர்ந்த ஒரு அங்கத்தினர் ஆறுகளால் பாசனம் அடையும் நிலங்களுக்கும், மழை பெய்தால் தான் தண்ணீர் வரும் என்ற நிலையில் உள்ள இடங்களுக்கும் வேறுபாடு குறிப்பிட்டுச் சொன்னார்கள். ஆறுகள் ஓடுகின்ற எல்லா இடங்களிலும், எல்லா நிலங்களும் ஒரே தரமாக இருப்பதில்லை. நெருக்கடிக்குத் தக்கவாறு விலை நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இந்த நிலம் இன்னாருக்கு இப்பொழுது அவசியம் தேவை என்கிற அளவில் இருக்கிற நிலங்களுக்குத்தான் விலை ஏறியிருக்கிறது. எல்லா நிலங்களைப் பொறுத்தவரையிலும் விலை ஏறவில்லை. விவசாயிகளைப் பொறுத்தவரையில் வருடா வருடம் நிலத்தை வாங்கி விற்கிறார்களா என்று பார்த்தால், அதையே தொழிலாகக் கொள்ளவும் இல்லை. நஞ்சையையோ, புஞ்சையையோ நிச்சயமாக விற்பனைப் பொருளாகக் கருதக்கூடாது. சாஸ்வதமான ஒரு இடத்தில் அவை இருக்கின்றன. ஒரு மனிதன் நிலத்தை விற்கிறான் என்று சொன்னால், வேறு வழியில்லை, விற்பதற்கு வேறு பொருள்கள் இல்லை என்றுதான் அர்த்தம். அதை விற்காமல் காலம் கழிக்க முடியாது என்கிற பொழுதுதான் நிலத்தை விற்பான். அப்படி விற்கும்பொழுது விலை ஏறினாலும் ஒன்றுதான், ஏறாவிட்டாலும் ஒன்றுதான். அதைப் பொருத்து வரி விதிப்பது என்று சொன்னால், அது அவ்வளவு உகந்ததாக இல்லை. பாசன வசதிகளைப் பெருக்குகிறோம், அதற்காக செலவு

செய்திருக்கிறோம் என்பது மறுக்க முடியாத உண்மைதான். ஓரளவுக்கு பாசன வசதிகள் என்ற பெயரில் திட்டங்கள் நிறைவேற்றப் படுகின்றன. ஆனால் அவைகள் பலன் கொடுப்பது இனிமேல் தான் இருக்கிறது. இந்தப் பலன் வருவதற்குள்ளேயே, வரியை மேலும் மேலும் சுமத்துவது அவ்வளவு நல்லதல்ல. எல்லா நிலங்கள்மீதும் வரி போடவேண்டாமென்று நான் சொல்லவில்லை. புதிதாக பாசன வசதிகள் செய்து கொடுக்கும்பொழுது, புதிதாக ஒரு வாய்க்கால் வெட்டும்பொழுது, அதனால் பலன் அடைகிற பகுதிகளுக்கு வரி விதிக்கவேண்டாமென்று நான் சொல்லவில்லை. விவசாயிகளின் நிலைமையை ஊடுருவிப் பார்த்தால், 5 ஏக்கர் அல்லது 10 ஏக்கர் பயிர் செய்பவர்களுடைய நிலைமை மிகவும் மோசமாக இருக்கிறது என்பது தெரியவரும். உச்ச வரம்பு சட்டப்படி பிரிக்கப்படாத நிலங்கள், மொத்தமாக இருக்கிற நிலங்கள் இருக்கின்றன. உச்ச வரம்பு சட்டம் அவைகளைத் தொட்டுக்கூடப் பார்க்கவில்லை. தஞ்சை மாவட்டத்திலேயுள்ள மடங்களுக்கும், தேவாலயங்களுக்கும் எத்தனையோ லட்சக் கணக்கான ஏக்கர்கள் சொந்தமாக இருக்கின்றன. 30 ஸ்டாண்டர்டு ஏக்கர் நிலத்திற்குமேல் ஒருவர் வைத்திருக்கக்கூடாது என்று சட்டம் செய்துவிட்டு, லட்சக் கணக்கான ஏக்கர் நிலங்களை எல்லாம் அப்படியே வைத்திருக்கிறோம். யார் யாரோ உழுது பயிரிடுகிறார்கள் என்றாலும் தேவஸ்தானத்தைச் சேர்ந்த நிலங்களுக்கு தேவஸ்தானம்தான் சொந்தக்காரர்கள். அதேமாதிரி மடாலயங்களைச் சேர்ந்த பல்லாயிரக்கணக்கான நிலங்களுக்கு மடாலயங்கள்தான் சொந்தக்காரர்கள். ஒரு தனிப்பட்ட நபரை எடுத்துக்கொண்டால், 30 ஸ்டாண்டர்டு ஏக்கரிலிருந்து வரும் லாபம்தான் கிடைக்கும். ஆனால் லட்சக் கணக்கான ஏக்கர் நிலம் இருந்தால், ஏற்கெனவே 10 ரூபாய் வீதம் கிடைத்தால் இப்பொழுது ரூ. 8 வீதமாவது கிடைக்கிறது. ஆகவே தேவாலயங்களுக்கும், மடாலயங்களுக்கும் வரி விதிப்பதில் எந்தவித மான தவறும் இல்லை. ஆடம்பரச் செலவுகளை அந்த ஸ்தாபனத்தினர் குறைத்துக்கொள்ளலாம். எழுதி வைத்த நியதிப்படி எந்தெந்த மடங்களிலே நடைபெறுகின்றன என்பது கனம் அமைச்சர்களுக்கு எல்லாம் தெரியும். தூய்மை தாண்டவமாடுகிறது, சைவம் தழைத்தோங்குகிறது என்று கூறுகிற நோக்கிலே, இன்று தேசியப் பாதுகாப்பு நிதிக்கு நாம் அவர்கள் கொடுப்பதைப் பெற்றுக்கொண்டு வருகிறோம். இவ்வளவு தரவேண்டுமென்று அவர்களை மிரட்டிக்கூட நாம் கேட்கவில்லை. அவர்களாகக் கூப்பிட்டுத் தருவதைத்தான் நாம் பெற்றுக்கொள்கிறோம். கிராமங்களிலே, பஞ்சாயத்துத் தலைவர்களும், சட்டமன்ற உறுப்பினர்களும், ஒரு ஏக்கருக்கு ரூ. 10-ஆவது தரவேண்டுமென்ற அடிப்படையில்தான் நிதி வசூல் செய்து வருகிறோம். ஒருவர் ஒரு குடிசை வைத்திருந்தால், பஞ்சாயத்துக்கு 8 அணா வரி செலுத்தினால் ஆறு மாதத்து வரியை கொடுக்கவேண்டுமென்று கேட்டு வாங்குகிறோம். ஆனால் கோடிக்கணக்கான அளவில், லட்சக் கணக்கான அளவில் பணம் வைத்திருப்பவர்கள், மாடமாளிகை



கூட கோபுரத்தில் வசிப்பவர்கள், ஒரு குடிசைக்கு 8 அணா விதம் கொடுக்கின்ற அளவுக்காவது நிதி கொடுக்கிறார்களா என்பதை அருள் கூர்ந்து பார்க்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆகவே,நான் ஒரு குழி இருந்தாலும், ஒரு ஏக்கர் இருந்தாலும், இந்த வரியைக் கொடுத்துத்தான் தீரவேண்டுமென்று சொல்ல வேண்டாமென்று மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன்.

நீர்ப்பாசனத் திட்டங்களைப் பற்றி வருகிற நிதிநிலை அறிக்கை விவாதம் வரும்பொழுது நல்ல முறையில் எடுத்துச் சொல்லுகிறேன். ஆனால் நீர்ப் பாசன வசதிகளைப் பொறுத்தவரையில் என்னுடைய மாவட்டத்திலே பல குறைபாடுகள் இருக்கின்றன. தஞ்சை மாவட்டத்திலே நிலைமை இப்படியிருக்கிறது என்றால், மற்ற மாவட்டங்களைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை என்று நினைக்கிறேன். இன்னும் நீர்ப்பாசனத் திட்டங்களை விரிவுபடுத்த வேண்டும். வரியை உயர்த்தாமல் எப்படி நீர்ப்பாசனத் திட்டங்களை நிறைவேற்ற முடியும் என்று அமைச்சர் அவர்கள் கேட்கலாம். பணத்தை எதிர்பார்த்துத்தான், லாப நஷ்டக் கணக்கைப் பொருத்துத்தான் எல்லா இலாக்காக்களும் இயங்கவில்லை. மீன் பண்ணைகளும் வைக்கிறோம். மாடல் பண்ணைகளும் வைக்கிறோம். இவையெல்லாம் வருவாயைக் கருதி வைப்பதில்லை. பின் வாரிசுகளுக்காகவே இத்தகைய திட்டங்களெல்லாம் வைக்கின்றோம். இப்படிப் பல திட்டங்களை இந்தச் சர்க்கார் வைக்கின்றது. அப்படிப்பட்ட சர்க்கார், இந்த நிலத்திற்கு மட்டும் இவ்வளவு லாப நஷ்டக் கணக்கு போட வேண்டிய அவசியம் இல்லை என்று கூறி, என்னுடைய உரையை முடிக்கின்றேன். வணக்கம்.

**திரு. ரா. சுப்பிரமணியன்:** கனம் சபைத் தலைவர் அவர்களே, கனம் ரெவினியூ அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் இந்த நிலவரி, தண்ணீர்த் தீர்வை அதிகரிப்பு பற்றிய மசோதாவை ஆதரித்து நான் சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். கனம் அமைச்சர் அவர்கள் இந்த மசோதாவின்மீது பேசும் போது, 'தண்ணீர்த் தீர்வையும், நில வரியும் செட்டில்மெண்ட் காலத்தில் போடப்பட்டது, அதுவே இன்னும் இருந்து வருகிறது. ஆகவே தீர்வை அதிகரிப்பு செய்ய வேண்டியது நியாயம்' என்று கூறினார்கள். அத்துடன்கூட, 'ஸ்டேட்மெண்ட் ஆஃப் ஆப்ஜெக்ட்ஸ் அண்டு ரீசன்ஸ்'ஸில், "நிலத்தினுடைய மதிப்பு உயர்ந்திருக்கிறது. நிலத்திலிருந்து வரக்கூடிய வருமானம் உயர்ந்திருக்கிறது" என்று கண்டிருக்கிறது. பழைய செட்டில்மெண்ட் காலத்தில் போடப்பட்ட தீர்வையே இப்பொழுது இருக்கிறது என்பதைப்பற்றி நான் அதிகமாக ஒன்றும் சொல்ல வேண்டிய தேவை இல்லை. ஆனால், அதே தீர்வைதான் இப்பொழுதும் செலுத்திக்கொண்டு வருகிறோமென்றாலும், வேறு அடிப்படையில் தீர்வை அதிகமாக்கப்பட்டிருக்கிறதா என்பதையும் நாம் கவனிக்க வேண்டும். நிலவரி, தண்ணீர்த் தீர்வை இவைகளைப் பொறுத்த வரையில், அதே அளவில் இருந்தாலுங்கூட, விவசாயிகள் செலுத்தக்கூடிய வரி நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே வந்திருக்

[திரு. ரா. சுப்பிரமணியன்] [4th February 1963

இறது என்பதைப்பற்றி யாருக்கும் சந்தேகமில்லை. பஞ்சாயத்தில் அதிகமாக வரி விதித்திருக்கிறார்கள், அதன் காரணமாக ஒவ்வொரு விவசாயியும் தீர்வை அதிகமாகச் செலுத்திக்கொண்டு வருகிறான் என்பதைப்பற்றி எந்த விதமான சந்தேகமும் கிடையாது.

அத்துடன், 'நிலத்தினுடைய மதிப்பு உயர்ந்திருக்கிறது' என்று அவர்கள் சொன்னார்கள். நிலத்தினுடைய மதிப்பு உயர்ந்திருப்பதற்கும் இப்பொழுது தீர்வை போடுவதற்கும் எந்த விதமான சம்பந்தமும் கிடையாது. ஆனால், 'நிலத்திலிருந்து வருகின்ற வருமானம் அதிகரித்து இருக்கிறது' என்று சொல்கிறார்கள். நிலத்திலிருந்து வருகின்ற வருமானம் அதிகரித்திருக்கின்றது என்றால், சாகுபடி செய்வதற்கும் செலவு அதிகம் ஆகிக்கொண்டு வந்திருக்கிறது. எனவே, இந்த இரண்டையும் கணக்கு பார்த்தால், அதிலிருந்து, நமது அமைச்சர் அவர்கள் எடுத்துரைக்கின்றபடி, அதிகமான வருமானம் கிடையாது என்பதைத்தான் நான் தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன். சாதாரணமாக முன்பெல்லாம் ஒரு ஏக்கர் நிலத்திலிருந்து என்ன வருமானம் வந்ததோ அதைவிட இப்பொழுது அதிகமான வருமானம் வருகிறதென்றால், சாகுபடிச் செலவும் மிகவும் அதிகமாகிவிட்டது. நிலத்தீர்வையைப் பற்றித்தான் நாம் கவலைப்படுகிறோமே தவிர, நிலத்தில் சாகுபடி செய்வதற்கு எவ்வளவு கஷ்டம் இருக்கிறது. அதற்கு என்ன என்ன சாமான்கள் வேண்டியனவோ, அவற்றினுடைய விலையைக் குறைக்க வேண்டும் என்பதைப்பற்றி நாம் இதுவரையில் எந்தவிதமான முயற்சியும் எடுத்துக்கொண்டதாகத் தெரியவில்லை. ஆகையால், ஏதோ இப்பொழுது விலை உயர்ந்திருக்கிறது என்றால், இது நிரந்தரமானதல்ல. ஒரு வருஷத்தில் நெல் விலை அதிகமாக இருக்கிறது. இன்னொரு வருஷத்தில் குறைந்து விடுகிறது. இம்மாதிரி ஏறியும் இறங்கியும் இருந்துகொண்டிருக்கக் கூடிய இந்தக் காலத்தில் இப்பொழுது விற்கும் விலையை நிரந்தரமானது என்று வைத்துக்கொண்டு நாம் அதிகத் தீர்வை போடுவது நல்லதா என்று நான் கேட்க ஆசைப்படுகிறேன். அப்படி நாம் போடுவதாயிருந்தால், சாகுபடிதாரர்களுக்குக் கட்டுப்படியாகக் கூடிய நிலைமையில் நெல் விலை நிர்ணயிக்கப்பட வேண்டும். இம்மாதிரி வருஷம் வருஷம் 'ஃப்ளக்சுவேஷன்' இருந்துகொண்டிருக்கக் கூடிய இந்த காலத்தில் இப்பொழுது விற்கும் விலையை அனுசரித்து நாம் தீர்வை மட்டும் போட்டுவிட்டால் அது விவசாயிகளுக்குக் கட்டுபடியாகாது என்று நான் சொல்லிக் கொள்ளுகிறேன்.

அதற்கடுத்தபடியாக, இந்த மசோதாவினால் மிகவும் பாதிக்கப்படக் கூடியவர்கள் தஞ்சை ஜில்லா விவசாயிகள் என்றே நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். ஏனென்றால், இந்த மசோதாவின் 11-வது செக்ஷன் பிரகாரம் ஒன்பது ப்ராஜெக்டுகளை இந்த அதிக வரி விதிப்பிலிருந்து நீக்கியிருக்கிறார்கள். அத்துடன், திருநெல்வேலி ஜில்லாவில் ஏற்கனவே இந்த நில வரி சற்று அதிகமாகவே இருந்து கொண்டிருக்கிறது. ஆகையால், அதிகமாகப் பாதிக்கப்படக்கூடியவர்கள் தஞ்சை ஜில்லா பூராவிலும் உள்ள விவசாயிகள், சிதம்பரம் தாலுகாவில் உள்ளவர்கள், திருச்சி



4th February 1963] [திரு. ரா. சுப்பிரமணியன்]

ஜில்லாவில் ஒரு பகுதியினரும் ஆவர். ஆகையால் ஏதோ தஞ்சை ஜில்லா விவசாயிகளையே மனதில் வைத்துக்கொண்டு இந்த மசோதாவைக் கொண்டு வந்திருக்கிறார்களோ என்றுகூட எனக்கு சந்தேகமாக இருக்கிறது.

அத்துடன்கூட, இன்னும் ஒன்று நான் சொல்ல ஆசைப்படுகிறேன். இதை எந்த மாதிரியான தருணத்தில் நாம் கொண்டு வந்திருக்கிறோம். சென்ற பட்ஜெட் விவாதத்தின்போது, கொள்கையளவில் நாம் வரி விதிக்கவேண்டுமென்று ஒத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால், இந்த மசோதாவை முன்னதாகவே கொண்டு வந்து, இந்த வரியையும் சேர்த்து ஒரேயடியாக அவர்களுக்கு கணக்குக் கொடுத்து, வசூல் செய்திருந்தால் மிகவும் நலமாக இருக்கும். ஆனால், இப்பொழுது என்ன நிலை இருக்கிறது? இந்த வருஷத்துக்கு எவ்வளவு வரி என்று கணக்கப்பிள்ளைகள் கணக்குக் குறித்துக் கொடுத்துவிட்டார்கள். ஆனால், 'இந்த சட்டம் 1961-ஆம் வருஷம் ஜுலை மாதம் 1-ஆம் தேதியன்று அமுலுக்கு வருகிறது' என்று சொல்லியிருக்கிறோம். ஆகையால் இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டவுடனே என்ன செய்யப்போகிறார்கள்? அடுத்தபடியாக, இன்னும் நாலைந்து மாதங்கள் கழித்து இந்த வருஷத்துக்கு மறுபடியும் ஒரு தடவை தீர்வை வசூலிக்கப் போகிறார்கள். இது மிகவும் கஷ்டமான காரியமாக இருக்கும், வருஷத்தில், அதிலும் குறிப்பாக தஞ்சை ஜில்லாவைப் பொறுத்த வரையில், குறுவை சாகுபடி மழையினால் மிக மிகப் பாதிக்கப்பட்டுவிட்டது. அதனால், குறுவை அறுவடைக் காலத்தில் அறுக்கவே முடியவில்லை. வெளி ஜில்லாக்களில் இருக்கிறவர்களுக்கு இதைப்பற்றி அனேகமாக நன்றாகத் தெரியாது என்றே நான் நினைக்கிறேன். மழை காரணமாக குறுவை நெல்லை அறுக்க முடியாத நிலை ஏற்பட்டது. சிலவிடங்களில் கூலி ஆட்களுக்குக் கூலி கொடுத்தாலே போதும் என்ற நிலைமை வந்துவிட்டது. இன்னும் சிலவிடங்களில் எத்தனையோ ஏக்கர்களில் அறுவடை செய்யாமலே உழுது நட்டார்கள். அந்தச் சமயத்தில் ரெவின்யூ அமைச்சர் அவர்கள் தஞ்சை ஜில்லாவுக்கு வந்திருந்தார்கள். நான் இதைப்பற்றி அவரிடத்தில் சொன்னேன். 'பல ஏக்கர்களில் அறுவடை செய்யாமல் உழுது நட்டார்கள், மிகவும் நஷ்டம் ஏற்பட்டு இருக்கிறது' என்று நான் அமைச்சர் அவர்களிடத்தில் எடுத்துச் சொல்லியிருக்கிறேன். அதன் பிறகுதான், இம்மாதிரியாக நாங்கள் கஷ்டப்படக்கூடிய காலத்தில்தான், அதாவது மார்கழி மாதத்தில், விவசாயிகளிடத்தில் எந்தவிதமான பணமும் கையில் இல்லாத காலத்தில் நாங்கள் தேசப் பாதுகாப்பு நிதி சேகரிக்கவேண்டும் என்ற முயற்சியை எடுத்துக் கொண்டோம். இவ்வளவு கஷ்டப்படக்கூடிய நேரத்தில், முதல் அமைச்சர் அவர்கள் தஞ்சை மாவட்டத்திற்கு வருவதற்குள்ளாக இருபது லட்ச ரூபாய் திரட்டவேண்டுமென்று நாங்கள் மாவட்ட டெவலப்மெண்ட் கவுன்சில் கூட்டத்தில் முடிவு செய்திருந்தாலும்கூட, இவ்வளவு தொகையை வசூல் செய்ய முடியுமா என்ற சந்தேகம் எங்களுக்கு ஏற்பட்டது. ஆனால், எங்களுடைய சந்தேகத்தையெல்லாம் மீறிவிட்டது மக்கள் உற்சாகம். அந்த

[திரு. ரா. சுப்பிரமணியன்] [4th February 1963

மக்கள் யார் என்றுதான் நாம் கவனிக்க வேண்டும். அந்த மக்கள்தான் இந்த ஏழை விவசாயிகள். இந்த விவசாயிகள் அத்தனை பேரும் மனமுவந்து நாங்கள் எதிர்பார்த்த உற்சாகத்தையும் மீறி, தேசியப் பாதுகாப்பு நிதிக்கு பணம் வழங்க முன் வந்திருக்கிறார்கள். ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், மறுபடியும் அதே விவசாயிகளுக்கு இந்தச் சம்பா மகசூலிலும் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. அவர்கள் எதிர்பார்த்ததைவிட மிகக் குறைவாகவே நெல் கண்டிருக்கிறது. நெல் குறைவாகக் கண்டிருக்கிறது என்பதோடு நெல்லின் விலையும் குறைந்திருக்கிறது. இம்மாதிரி தருணத்தில்தான் இந்த மசோதாவைக் கொண்டுவந்திருக்கிறோம். எனவே, 1—7—1962 என்று இருப்பதை ஒரு வருஷத்திற்கு அப்புறமாகத் தள்ளிப்போட்டு, அடுத்த வருஷமாவது நாம் இந்தப் பூராப் பணத்தையும் ஒரே தடவையாக வசூல் செய்வதற்குள்ள ஏற்பாடு செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக என்னுடைய கருத்து என்னவென்றால், நாம் இந்த அளவுக்கு அதிக வரி போடுவதை விவசாயிகளால் தாங்க முடியாது. இப்போதுள்ள நிலைமையில், நில வரியை 60 சத விகிதமாகவும், தண்ணீர்த் தீர்வையை 100 சத விகிதமாகவும் உயர்த்தியிருக்கின்றோம். இது தாங்க முடியாதது. ஆகையால், இந்த மசோதாவில் குறிப்பிட்டிருக்கும் ஒவ்வொரு இனத்திலும் ஐம்பது சத விகிதமாவது குறைக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன். செலக்ட் கமிட்டியார் பரிசீலனை செய்யும்போது, இதைக் கவனிக்கவேண்டுமென்றும் நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

ஆனால் அவர்கள் சொல்லலாம். அதுதான் நாம் காம்பவுண்டு செய்வதற்கு வசதி செய்திருக்கிறோமே என்று. ஆனால் அந்த உயர்ந்த பட்ச அளவுக்கு தஞ்சை ஜில்லா நிலங்கள் வராது. தஞ்சை ஜில்லாவில் பத்துப் பன்னிரண்டு ரூபாய்க்குமேல் கிடையாது. இதை வைத்துப் பார்த்தால் தெரியும். காம்பவுண்டு செய்தால் தஞ்சை ஜில்லா நிலங்களுக்கு எந்தவிதமான லாபமும் கிடையாது. வேறு ஜில்லாக்களில் உள்ளவர்களுக்கு வேண்டுமானால் இதனால் பிரயோசனம் ஏற்படலாம். ஆகையால்தான் நில வரியை 60 சதவிகிதம் உயர்த்துவது என்பதற்கு பதிலாக 30 சத விகிதம் என்றாவது, தண்ணீர் தீர்வையை நூற்றுக்கு நூறு என்று உயர்த்துவதற்கு பதிலாக 50 சத விகிதம் என்றாவது மசோதாவில் விதித்திருப்பதை அடியோடு நீக்க முடியாவிட்டாலும் குறைக்க பொறுக்குக் கமிட்டியில் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதாகக் கேட்டுக்கொள்கிறேன்.

அதற்கு அடுத்தபடியாக, விவசாய வரியைப்பற்றி நான் அடிக்கடி முன்னதாகச் சொல்லிக்கொண்டு வருகிறேன். நிலவரியை அடிக்கடி உயர்த்திக்கொண்டு போகிற காலத்தில் விவசாய வருமான வரியை இந்தத் தருணத்தில் குறைக்க முடியுமா? இது இருக்கத்தான் வேண்டுமா என்பதையும் யோசிக்கவேண்டும். இவற்றையெல்லாம் கவனித்து விவசாய மக்களுடைய பளுவைக் குறைக்க இந்த அரசாங்கம் முன் வந்தாலொழிய விவசாயத் தொழிலை நல்லமுறையில் செய்வது முடியாத காரியமாகிவிடும் என்று தெரிவித்துக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.



4th February 1963] [திரு. ரா. சுப்ரமணியன்]

SRI C. CHIRANJEEVULU NAIDU : Madam, I rise to oppose this Bill in all its entirety. In the Statement of Objects and Reasons appended to the Bill, it has been stated that the revenue that is being assessed is out-moded and bear little relation to the productivity of the land and the price which the land owners are getting for their produce. The value of the land has risen. But the statement that the land revenue has not been increased is not correct. Land Revenue might not have been increased considerably. But the collections from the agriculturists by way of land revenue, cess and other taxes have been enhanced. The cess which was only 2 pies has been increased to 50 nP. In the Panchayats Act the Panchayat Unions have been empowered to levy surcharge on land. Panchayat Unions are levying tax ranging from 25 nP. to 93 nP. per rupee. This works out to more than 150 per cent of the existing land revenue. This tax is being paid by the agriculturists. Then there is provision for *kudimaramat* levy. Discretion is given to Panchayats to levy certain taxes whenever developmental and improvement works are done in the villages such as construction of school buildings, primary health centres and roads. It is stated that productivity has risen and that value of land has risen, but correspondingly the cost of agriculture has also risen abnormally. Now to-day we hear about fertilisers and they are being used for cultivation purposes. In olden days we had never used these fertilisers. Now they are being used and inevitably the cost of cultivation has abnormally risen. Correspondingly, the price of the paddy is definitely not higher when compared with prices of other commodities. When the surcharge is enhanced the ryot is being asked to pay more than what he was paying till now. It is not just and reasonable to ask them to pay 60 per cent of the land revenue at this stage.

After the abolition of Zamindari system and after enacting certain rent reduction Acts there has been some changes. The Survey and Settlement work have been undertaken and some irrigation sources have been classified as I and II class irrigation sources. There are serious defects in the classification of tanks. Tanks which cannot command irrigation for eight months have been classified as first class source. Tanks which cannot command irrigation for even 4 months have been classified as second class source. Side by side with this Additional Assessment Bill consideration, the Settlement Department may be asked to re-investigate the entire classification of I and II class sources and then fix the additional wet assessment. Till then, I suggest this Additional Assessment Bill may be deferred so as to facilitate the Settlement Department to classify the irrigation sources correctly and rectify all the defects already done by them.

There is provision in this Act for repeal of the Andhra Land Revenue (Additional Wet Assessment) Act relating to Tiruttani taluk which is an added territory. I suggest that this repeal may be given effect to with retrospective effect from 1370 fasli as ryots in the added territory have been paying both the taxes from 1st April 1960. They may be permitted to pay only the land revenue that was in vogue in the Madras State and exempt them from paying Andhra Additional Assessment for their lands.

Regarding this measure, when land has been touched so heavily and the agriculturists have been asked to pay such heavy land tax, there is no assurance for the agriculturists for their cultivation. Whenever there is drought, whenever there is an attack of pests resulting in the failure of crops, the ryots are not assured of their income. So there must be a crop insurance scheme and assurance of prices and proper purchase of commodities produced by the agriculturists. Even in jamabandi when the grievances are represented, they are not properly taken into consideration. I had hoped that the Hon. Minister, who was very much inclined to do something in this regard, would drop this measure. It was announced in the last Budget session also. Now I appeal to the Government that the Select Committee could go into it and reduce the taxes to some extent and give some relief to the ryots.

Regarding the water-cess I want to be cleared of certain doubts. I see from the Bill that there will be enhancement of water-cess and enhancement of land revenue. These provisions may be clubbed together and given a consolidated levy without allowing the agriculturists to know from the Village Officers, what he should pay and what are the amounts collected in different categories. They should not be put under any confusion. Such provisions in the Act put the Agriculturists in a difficult position and they are not able to assess their position and they have to be at the mercy of the revenue authorities like Village Officers, Tahsildars and Jamabandi Officers. With these words, I request the Government to consider what amount they can reduce, so that some relief may be given to them.

* **திரு. கே.ஆர். ஆர்எம். கரியமாணிக்கம் அம்பலம் :** சபைத்
11-30 a.m. தலைவர் அவர்களே, ரெவின்யூ மந்திரியவர்கள் கொண்டு வந்திருக்கும் 1963-ஆம் ஆண்டு சென்னை கூடுதல் தீர்வை, கூடுதல் தண்ணீர் வரி மசோதாவை எதிர்த்து ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். சென்ற வருஷத்தில் வரி உயர்வு மசோதாவைக் கொண்டு வந்தார்கள். அப்போது இந்தச் சபையிலுள்ள பல மெம்பர்கள் அதை எதிர்த்து பேசினார்கள். அதன் காரணமாக இந்த வரி உயர்வு மசோதாவைக் கொண்டு வர மாட்டார்கள் என்று எதிர்பார்த்தோம். ஆனால் இப்போது அந்த மசோதாவினைக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் பேசும்போது கூட, இந்த மசோதாவை ஆதரித்து என்று மட்டும் சொல்லிக்கொண்டு, வரி வரியாக அதிலிருக்கின்ற குறைபாடுகளைத் தான் எடுத்துச் சொன்னார்கள். எங்கள் பிராந்திய





மான கிழக்கு இராமநாதபுரம் போன்ற பிற்பட்ட பகுதிகளில் விவசாயிகளின் நிலை மிக மிக மோசமான நிலையிலே இருந்து கொண்டிருக்கிறது. அங்கே இருக்கிற காட்டாறுகளில் மண் அணை போட்டு விவசாயிகள் தண்ணீர் பாய்ச்சி விவசாயம் செய்து வருகிற நிலைதான் இன்னும் இருக்கிறது. அங்கெல்லாம் இன்னும் பாசன வசதிக்காகத் தடுப்பு அணைகள் கட்டிக் கொடுக்கப்படவில்லை. இப்போது வரி உயர இருக்கிறது என்பது அங்கிருக்கும் விவசாயிகளுக்கெல்லாம் பெருத்த வேதனையை ஏற்படுத்தியிருக்கிறது. விவசாயிகள் ஏற்கெனவே இருக்கக் கூடிய வரிகளையே செலுத்த முடியாமல், அவர்களுடைய சொத்தை ஜப்தி செய்து வரி வசூல் செய்து கொண்டிருக்கக் கூடிய நிலைமை எங்கள் பகுதியிலே இருக்கிறதென்பது ரெவின்யூ மந்திரியவர்களுக்கே நன்றாக தெரியும். எங்கள் கிழக்கு இராமநாதபுரத்திற்கும் இந்த வரி உயர்வு ஏற்படும் என்பதை நினைத்தால் எங்களுக்கெல்லாம் இரவிலே தூக்கம் கூட வருவதில்லை. எங்கள் பகுதி போன்ற அபிவிருத்தி ஏற்படாத பிராந்தியங்களுக்கு இந்த வரி உயர்வை அறவே கொண்டு வரக் கூடாது என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

தற்போது விவசாயக் கூலி மிக மிக உயர்ந்திருக்கிறது. கூலியானது நான்கைந்து வருஷங்களுக்கு முன் இருந்ததைக் காட்டிலும் இப்போது நான்கைந்து மடங்கு உயர்ந்திருக்கிறது. உரங்களை வாங்குவதற்கான விலையும் இப்போது அதிகரித்திருக்கிறது. சாதாரண விவசாயி இரசாயன உரத்தையே நிலத்தில் போட்டுப் போட்டு பழக்கமாகிவிட்ட காரணத்தால் அந்த நிலம் இரசாயன உரத்தையே எதிர்பார்க்கக் கூடிய நிலையில் இருக்கிறது. புண்ணாக்கு போன்ற நல்ல உரங்களின் விலை எல்லாம் மிகவும் உயர்ந்து விட்டன. விவசாயிகள், பஞ்சாயத்து வரி, பஞ்சாயத்து யூனியன் வரி, கல்வி வரி, ரோட்டு வரி, வருமானவரி முதலியவைகளை எல்லாம் கொடுக்கிறார்கள். விவசாயிகளின் நிலங்களுக்கு வேறு உச்ச வரம்பு கொண்டு வரப்பட்டிருக்கிறது. எந்த வருஷத்திலாவது இந்தச் சர்க்கார் வரி விதிக்காத நிலையிலே விவசாயிகள் நிம்மதியாக இருந்திருக்கிறார்கள் என்று சொல்ல முடியுமா? ஒவ்வொரு வருஷமும் விவசாயிகளுக்கு ஏதாவது ஒரு வரியைப் போட்டுத் தொந்தரவு கொடுத்துக் கொண்டே இருக்கிறீர்கள்.

விவசாய நிலத்திலே பத்து வருஷங்களுக்கு முன்பு இருந்த மகசூல் இப்போது இருக்கிறதா என்று நன்றாகச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். வருஷத்திற்கு வருஷம் மகசூல் குறைந்து கொண்டே வருகிறதே தவிர, அபிவிருத்தி ஏற்படவில்லை. இந்த மன்றத்திலிருக்கிற பெரிய விவசாயிகளுக்கு அது நன்றாகத் தெரியும். நாற்று நட்டுவிட்டு வந்தால் நட்ட பயிர் குறுகிக் கொண்டு வருகிறது. இதற்கு காரணம் பூச்சிகளின் தொந்தரவாக இருக்குமோ என்று பார்த்தால், என்னுடைய அனுபவத்தைப் பொறுத்தவரை, இந்த மாதிரி பூச்சிகளின் தொந்தரவு இது வரை ஏற்பட்டதில்லை. இப்போது இருக்கின்ற நிலையைப் பார்க்கும் போது அணுக் கதிர் இயக்கம் நாட்டிலே பரவி விவசாயத்தைக் குன்ற வைக்கிறதோ என்று நான் எண்ண வேண்டியிருக்கிறது.

அந்த நிலையிலே விவசாயம் குன்றிக் கொண்டே போகும்போது மேலும் மேலும் தொந்தரவு கொடுக்கக்கூடிய வரிகளைப் போட வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நமது ரெவின்யூ அமைச்சர் அவர்கள் புதுக்கோட்டை பகுதியைச் சேர்ந்தவர்கள். புதுக்கோட்டை ஸ்டேட்டில் முன்பு எவ்வளவு வரி இருந்தது? இப்போது மக்கள் எவ்வளவு வரி கட்டுகிறார்கள்? என்பதை அவர்கள் யோசித்துப் பார்க்க வேண்டும். அந்த ஏரியா இப்போது பெரிய அபிவிருத்தி அடைந்து விட்டதா என்று பார்த்தால் அதுவும் இல்லை. ஆனால் வரி மட்டும் மூன்று மடங்கு உயர்ந்து கொண்டே போகலாமா என்று கேட்க விரும்புகிறேன். சீனாக்காரன் நம் இந்தியாவின் மீது படை எடுத்துக் கொண்டிருக்கும் இந்த நேரத்திலே விவசாயிகளுடைய மனத்தை வருந்த விடாமல் விவசாயத்தை நல்ல முறையிலே செய்ய விவசாயிகளுக்கு நிவாரணம் அளிப்பதோடு, இந்த வரியைப் போடக்கூடாது என்று கேட்டுக் கொண்டு இந்தச் சந்தர்ப்பத்தை அளித்ததற்காக நன்றி தெரிவித்துக் கொண்டு முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. ஏ. எஸ். தட்சிணாமூர்த்தி கவுண்டர்:** கனம் சட்டமன்றத் தலைவர் அவர்களே, இப்பொழுது ரெவின்யூ மந்திரியவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கும் கூடுதல் தீர்வை, கூடுதல் தண்ணீர் வரி மசோதாவை ஆதரித்து சில கருத்துக்களைக் கூற ஆசைப்படுகிறேன். எனக்கு முன்பு பேசிய கனம் அங்கத்தினர் ஒருவர், "சோழநாட்டுக்கு, தஞ்சைப் பகுதிக்கு இந்த வரியிலிருந்து விலக்குக் கொடுக்கவேண்டும், தமிழ் நாட்டிலே ஏனைய பகுதிகளிலே புதிய பாசனத் திட்டங்களால் பயன் அடைந்திருக்கும் நிலங்களுக்கு உபரி வரி போடுவதில் ஆட்சேபணை இல்லை" என்று சொன்னார்கள். 'சோழ வள நாடு சோறுடைத்து' என்று சொல்லப்பட்டிருக்கிறது. நம்முடைய தமிழகத்திலே செல்லுகின்ற காவிரி நதியினாலே பரம்பரையாக ஒரு சிறப்பான அம்சத்தை அடையக் கூடிய ஒரு பெரும் பாக்கியம் கொண்டது சோழ நாடு அல்லது தஞ்சாவூர் மாவட்டம். புறநானூற்றில் கூட 'அந்தண் காவிரி வந்து கவர்பு ஊட்ட' என்று சொல்லப்பட்டிருக்கிறது. காவேரி நதியானது பல கிளைகளாகப் பிரிந்து சோழ நாட்டை உண்பிக்கிறது என்று அதிலே கூறப்பட்டிருக்கிறது. அதனால் எங்களுக்கெல்லாம் கொஞ்சம் கூடப் பொறாமை கிடையாது. அந்தக் காவேரி நதி எங்கள் பகுதிக்கு, கோவை மாவட்டத்திற்கு எவ்வாறு பயன்படுகிறது என்று சொன்னால், கரையோரப் பகுதிகளில் வாழ்கின்ற மக்கள் நீராடுவதற்கு, குறிப்பாக ஆடி 18-ம் நாள் நீராடுவதற்கு காவேரி நதியானது பயன்படுகிறது. இப்போது கீழ் பவானித் திட்டம் கூட நேரடியாக காவேரியிலிருந்து வந்த திட்டமல்ல. பவானி ஆற்றிலிருந்து கொண்டு வரப்படுகிற ஒரு திட்டம். அது மிக நல்ல அம்சமாக, நன்றாகப் பயன்பட்டு வருகிறது. அவருக்கு என்ன பொறாமையோ தெரியவில்லை. புதிய பாசனத் திட்டங்களுக்கு வரி போடுவதில் ஆட்சேபணை இல்லை. ஆனால் தொன்றுதொட்டு பாசன வசதி பெற்று வரும் சோழ மண்டலத்தில் வரி போடுவதை ஆட்சேபிக்





கிறேன் என்று அவர்கள் சொன்னார்கள், அதை ஆட்சேபிக்கத்தான் நான் பேச வந்தேன். அரசாங்கம் கொண்டு வந்திருக்கிற வரி உயர்வுக் கொள்கையை நான் நிச்சயமாக வரவேற்கிறேன். அயன் தீர்வையை உயர்த்தியது, தண்ணீர் தீர்வையை உயர்த்தியது, அதற்கு மேல் அந்தந்தப் பகுதி பஞ்சாயத்து அல்லது பஞ்சாயத்து யூனியன் போடுகிற வரி இதை எல்லாம் பார்க்கிறபோது லோயர் பவானி ஏரியாவில் ஏக்கருக்கு 25 முதல் 30 ரூபாய் வரை நாங்கள் கட்டி வருகிறோம். வரியை ஏற்றும் போது நான் குறிப்பாக ஒன்று கூற விரும்புகிறேன். விவசாய வருமான வரியையாவது கண்டிப்பாக எடுத்துவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நில உடைமைக்கு உச்சவரம்பு கட்டிவிட்டோம். 30 ஏக்கருக்கு மேல் இனி எந்த விவசாயியும் நிலம் வைத்துக்கொள்ள அனுமதி கிடையாது. முன்பு இருந்த நில வரியை உயர்த்தும் அளவிற்கு நாம் வந்திருக்கிறோம். தண்ணீர் தீர்வையை அதிகமாக விதிக்கிறோம். கிராமப் பகுதிகளை செழிக்க வைக்க பஞ்சாயத்து அல்லது பஞ்சாயத்து யூனியன் ரூபாய்க்கு இவ்வளவு என்று வரி போடுகிறார்கள். இவைகளை எல்லாம் சேர்த்துப் பார்க்கிறபொழுது கிட்டத்தட்ட ஏக்கருக்கு 30 ரூபாய் வரை வருகிறது. அதற்கு மேல் விவசாய வருமான வரியையும் போட்டால் விவசாயிகளால் தாங்க முடியுமா என்று அரசாங்கம் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆகவே விவசாய வருமான வரியை தயவுசெய்து எடுத்து விடுவது நல்லது விவசாயிகளுக்கு. அதோடு விவசாய வருமான வரி இலாகாவிற்கு செலவு செய்யப்படுகிற பணம், அவர்களுக்கு கொடுக்கும் சம்பளம் கூட சர்க்காருக்கு மீதப்படும். அதோடு விவசாயிகளுக்கு ஏற்படும் தொந்தரவும் நிச்சயமாகக் குறையும். புதிதாக ஏற்படுத்தப்பட்டுள்ள நீர்ப்பாசன நிலங்களுக்கு விதி விலக்கு அளிக்கப்பட்டிருப்பதை நான் வரவேற்கிறேன். சோழ நாட்டாரின் பேச்சை கேட்க வேண்டாமென்று சர்க்காரை கேட்டுக் கொள்கிறேன். சமீபத்தில் நமது ரெவின்யூ அமைச்சர் அவர்கள் கீழ்ப்பவானி ஆயக்கட்டு பகுதியில் சுற்றுப்பிரயாணம் செய்தார்கள். அவர்கள் அதைப் பார்த்து திருப்திப்பட்டார்கள் எங்கள் நிலங்களின் அவலட்சண நிலையைப் பார்த்து, பரிதாபப் பட்டார்கள். எங்கள் கை வண்ணம் கழல் வண்ணம் இவற்றைப் பார்த்து அவர்கள் மிக்க மகிழ்ச்சியும் கொண்டார்கள். கை வண்ணம் அங்கு கண்டேன் கழல் வண்ணம் இங்கு கண்டேன் என்று கம்பராமாயணத்திலேயே கூறப்பட்டிருக்கிறது. அங்கு எங்கள் பகுதியைக் கண்டு அவர்கள் எங்களைப் பாராட்டினார்கள். ஆக, எங்கள் கீழ்ப் பவானி ஆயக்கட்டுப் பகுதியை வரி விதிப்பிலிருந்து விலக்கியதற்காக அரசாங்கத்திற்கு என் பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொண்டு இந்த விவசாய வருமான வரியை எடுத்துவிட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடிக்கிறேன். வணக்கம்.

* **திரு. எஸ். நஞ்சுண்ட ராவ்:** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த பில்லை ஆதரித்து பேச இன்று காலையில் நான் நினைத்த போது ஒன்றிரண்டு கருத்துக்களைச் சொல்ல நினைத்தேன். இந்த

[திரு. எஸ். நஞ்சுண்ட ராவ்] [4th February 1963

சபைக்கு வந்து இந்த பில்லை சில நண்பர்கள் எதிர்த்துப் பேசிய போது இன்னும் சில கருத்துக்களைச் சொல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டிருப்பதால் நான் ஒன்றிரண்டு கருத்துக்களைச் சொல்வதில் யாரும் வருத்தப்பட்டுக் கொள்ளக்கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன். வெள்ளைக்காரன் காலத்தில் எப்படி இருந்தது, இப்போது இப்படி செய்யலாமா என்று கேட்கிறபோது இப்படி விஷயம் தெரியாமல் வெள்ளைக்காரன் ஆட்சியைப் பற்றி இன்னும் பேசிக் கொண்டிருக்கலாமா என்ற கேள்வியைத்தான் நான் கேட்க விரும்புகிறேன். வெள்ளைக்காரன் காலத்தில் வாழைப் பழத்தில் ஊசி ஏற்றுவது போல ஏக்கருக்கு அரை ரூபாய் கிஸ்தி போட்டு எப்படியாவது இந்த நாட்டில் தன் ஆட்சியை நிலை நிறுத்த நினைத்தானே தவிர, ஒரு 'வெல்பேர் ஸ்டேட்டைக்' கொண்டு வர வேண்டும். மக்கள் நிம்மதியாக வாழ வேண்டுமென்று அவர்கள் நினைக்கவில்லை. வெள்ளைக்காரன் "ராஷனல் அப்ரோச்"-உடன், "ராஷனல் தியரி" அனுசரித்து வரி போட்டான் என்று சொல்லமுடியாது. எப்படியாவது தன் ஆட்சியை நிலை நிறுத்தவே அவர்கள் வரி போட்டு வந்தார்கள் "The Sun never sets in the British Empire" என்று சொல்லி வந்தார்கள். தேசம் நன்மை அடையவேண்டுமென்று அவர்கள் நினைக்கவில்லை. சில வரிகளைப் போடுவது, சில இடங்களில் பள்ளிக்கூடங்களை நிறுவுவது, சென்னை, மதுரை போன்ற இடங்களில் ஆஸ்பத்திரிகளை ஏற்படுத்துவது இப்படிப்பட்டவற்றை தன் ஆட்சியை நிலை நிறுத்தவே செய்தான். இப்போது அந்த நிலை மாறி ஒரு 'வெல்பேர் ஸ்டேட்' ஏற்பட்டிருக்கிறது. பழைய காலத்தில் போடப்பட்ட வரியை வைத்துக்கொண்டு இப்போது ஆட்சியை நடத்த முடியுமா என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். வெள்ளைக்காரன் ஆட்சியைப் பற்றி நினைக்கும்போது அதற்குமுன் ஆட்சியைப் பற்றி ஏன் நினைக்கவில்லை? சத்ரபதி சிவாஜி ஆட்சியைப் பற்றி நினைக்க வேண்டும், கௌடில்யரின் அர்த்த சாஸ்திரத்தைப் படித்துப் பார்க்க வேண்டும். அன்று சிவாஜி எப்படி வரி போட்டார்கள்? ஆறில் ஒரு பங்கை வரியாக கொடுக்கவேண்டுமென்றிருந்தது சிவாஜி காலத்தில். ஆறு மூட்டை நெல் கிடைத்தால் அதில் ஒரு மூட்டை கொடுக்கவேண்டும் அரசாங்கத்திற்கு. சிவாஜி சர்வாதிகாரி அல்ல. இன்று எப்படி நேருஜி மக்களின் தலைவராக இருக்கிறாரோ அப்படித்தான் அன்று சிவாஜி மக்களின் தலைவராக இருந்தார். மக்கள்தான் சிவாஜிக்கு சத்ரபதி என்ற பட்டத்தை வழங்கினார்கள். மக்கள் விரும்பித்தான் அந்த வரியைக் கொடுத்தார்கள். அர்த்த சாஸ்திரத்திலும் இப்படித்தான் கூறப்பட்டிருக்கிறது. இப்போது அப்படி கொடுக்க சம்மதிக்கிறோமா? இது சாதாரண வரி, இதற்கே சம்மதிக்க மாட்டோம் என்றிருக்கிறது. ஆறில் ஒரு பங்கை கொடுக்க அப்போது மக்கள் மனம் ஒத்துக்கொள்ளவில்லையா? இப்போது வாக் அவுட் நடத்தி விடுவோம் என்ற அளவில் நிலை இருக்கிறது.

அடுத்தபடியாக, எங்கள் வேடசந்தூர் தொகுதியில் மழை கம்மியாக இருக்கிறது. 20 இஞ்சு கூட இல்லை. கண்மாய் பாசனம் இருந்தாலும் 5 ஆண்டுகளில் 3 தடவை நஞ்சை தீர்வைக்குக் கூட



4th February 1963] [திரு. எஸ். நஞ்சுண்ட ராவ்]

ரெமிஷன் வாங்கி விடுகிறார்கள். சர்க்கார் எது கொடுத்தாலும் வேண்டும். ஆனால் சிறிது வரி கேட்டால் எதிர்ப்பு கிளம்பி விடுகிறது. வோட்டர்களுக்குப் பயந்து எவ்வளவு நாட்கள் ஆட்சி நடத்துவது என்று தெரியவில்லை. எத்தனை கோடி ரூபாய் செலவானாலும் கொடவனாறு திட்டத்தை, இந்த ஆண்டே அதற்கு வேண்டிய தொகையை சாங்ஷன் செய்து, நிறைவேற்ற வேண்டுமென்று கேட்கிறார்கள். அதற்காக போராடுகிறார்கள். கேட்டதை எல்லாம் செய்து கொடுக்க பணம் எங்கிருந்து வரும்? எங்கிருந்து பணத்தை திரட்ட முடியுமோ அங்கிருந்து திரட்டி அதைக் கொண்டு இல்லாத ஊர்களுக்கும், எல்லோருக்கும் கொடுக்க முடியுமே தவிர சில கட்சித் தலைவர்கள் சொல்வது போல் "பாரின் எய்ட்" கொண்டு நம் நாட்டு ஆட்சியை நடத்த முடியுமா என்று கேட்கிறேன்.

நமக்கு ஒரு நன்மை கிடைக்கவேண்டுமென்றால் நாம் ஏதாவது கொடுக்கத்தான் வேண்டும். எனவே, பொறுப்புள்ள ஒரு ஜனநாயக அரசாங்கத்தை வளர்ப்பதற்கு இந்த சபையிலுள்ள அங்கத்தினர் அனைவரும் ஒத்துழைக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அந்த முறையில் சபை முன் வந்திருக்கின்ற மசோதாவைப் பற்றி சபை அங்கத்தினர்கள் அனைவரும் கொஞ்சம் நல்ல முறையில் சிந்திக்கவேண்டும் என்று மன்றாடி கேட்டுக்கொள்கிறேன். நிலவரி மசோதா என்று சொன்னவுடனேயே விவசாயிகளிடத்தில் நாம் பீதியை உண்டுபண்ணிவிடக் கூடாது. வேடசெந்தூர் பகுதியில் விவசாயத்திற்கு தண்ணீர் இறைப்பதற்கு மூன்று ஹார்ஸ் பவர் உள்ள மெஷின் வைக்கவேண்டும். இதற்கு இரண்டு ஏக்கர் நிலத்திற்கு 150 ரூபாய் எலக்ட்ரிஸிட்டி கியாரண்டியாக கட்ட வேண்டும். இதைப்பற்றி யாரும் வருத்தப்படுவதாகத் தெரியவில்லை. கழிந்த 15 வருட காலமாக தமிழ்நாட்டில் மின்சார வசதிகள் வளர்ந்து கொண்டே வருகின்றன. வேடசெந்தூர் பகுதியைப் பொறுத்த மட்டில் ஒரு கோடி ரூபாய்க்கு திட்டங்கள் போடப்பட்டுள்ளன. மின்சாரத்தின் மூலமாகத்தான் பிற்போக்கான இடங்களுக்கு எல்லாம்—மழை பெய்யாத இடங்களுக்கெல்லாம்—தண்ணீர் வசதி பெருகி விவசாய உற்பத்தியை நல்ல முறையில் பெருக்க முடிகிறது. இதன் காரணமாக அங்குள்ள மக்கள் எல்லாம் திருப்தி அடைந்து கொண்டிருக்கிறார்கள். அந்த திருப்தியை கெடுக்கக்கூடிய வகையில்தான் இன்று இந்த மசோதாவை எதிர்த்த கனம் அங்கத்தினர்களுடைய பேச்சுக்கள் இருந்தன. தண்ணீர் பாசனத்திற்கு கொடுக்கின்ற முறையில்தான், எங்கள் பகுதியில் மின்சாரத்திற்கென்று, ஏக்கருக்கு 75 ரூபாய் கொடுக்கிறோம். ஆனால் கண்மாய் பாசன வசதியுள்ளவர்களுக்கு குறைந்த செலவிலேயே தண்ணீர் கிடைக்கிறது. இதே நேரத்தில் எந்தவிதமான வழியும் இல்லாமல் தண்ணீர் வசதி கிடைக்காமல் எங்கள் பகுதி போன்ற பல இடங்களில் மக்கள் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய கஷ்டங்களை எல்லாம் இங்கு எதிர்த்துப் பேசிய நண்பர்கள் கவனிக்கவில்லை என்றுதான் தோன்றுகிறது. இப்பேர்ப்பட்ட மக்கள் இன்னும்

கஷ்டப்பட்டுக்கொண்டேயிருக்கலாம் என்று எண்ணுகிறவர்கள் இந்த மசோதாவை தாராளமாக எதிர்க்கலாம் என்று கேட்டுக் கொள்கிறேன். இல்லாவிட்டால் மின்சாரத்திற்கு வரண்ட பிரதேசத்திலுள்ள மக்கள் கொடுக்கும் கட்டணத்தையாவது குறைக்க வேண்டும். இப்போதிருக்கும் கியாரண்டி பணத்தை குறைந்தது ஏக்கருக்கு 3 குதிரைப்பவர் உள்ள மோட்டார் உள்ள இடத்திற்கு 30 ரூபாய் என்று நிர்ணயம் செய்யப்பட்டாகவேண்டும். அவ்விதமில்லாமல் மின்சார்த்தின் மூலம் தண்ணீர் வசதி பெறும் இடங்களுக்கு ஏக்கருக்கு 75 ரூபாய் என்று நிர்ணயித்துவிட்டு, பிற இடங்களுக்கு தண்ணீர் வரியை உயர்த்தக் கூடாது என்று சொல்வது சரியல்ல. ஆகவே அரசாங்கம் கண்டிப்பாக இன்னும் இது போன்ற வரிகளை கொண்டுவர வேண்டும், அப்பேதுதான் நம் நாட்டிலுள்ள சாதாரண மக்களின் நிலைமை மாறும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். திரு. சிரஞ்சீவலு நாயுடு அவர்கள் பேசும்போது இன்ஷூரன்ஸ் கொண்டு வரப்பட வேண்டும் என்று சொன்னார்கள். இத்திட்டம் கொண்டுவந்தால் மழையில்லாததின் காரணமாக பயிர் சேதமடைந்தால் இன்ஷூரன்ஸ் பணம் கொடுக்க வேண்டும். இம்மாதிரி கொடுப்பதற்கெல்லாம் சர்க்காரிடத்தில் பணம் எங்கேயிருந்து வரும்? வரியை மட்டும் போடுகிற சர்க்கார் அல்ல, நம்முடைய சர்க்கார். வரியையும் போட்டு, மக்களுடைய நலனையும் கவனித்துக்கொள்வதற்காகத்தான் பல வரிகளை போட வேண்டும் என்று சொல்லுகிறோம். இவ்விதம் பல வரிகளைப் போட்டு ஆட்சி நடத்தினால்தான் உண்மையான வெல்பேர் நிலைமையை, காந்தி மகான் கண்ட சர்க்காரை நடத்த முடியும், அதற்காக நாம் எல்லோரும் ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த மசோதாவைப் பற்றி பேசும் போது சில நண்பர்கள் "அக்ரிகல்ச்சர் இன்கம் டாக்ஸ்"-ஐ நிறுத்த வேண்டும் என்று சொன்னார்கள். அதை நான் ஓரளவுக்கு ஆதரிக்கிறேன். இன்டைரக்டாக டாக்ஸ் போடுவதை விட, நல்ல முறையில் தெரிந்த முறையிலேயே டாக்ஸ் (டைரெக்ட் டாக்ஸ்) போடுவது தான் நல்லது என்று நான் நினைக்கிறேன். அந்த முறையில் வரிகளைப் போடவேண்டும் என்று கேட்டுக்கொண்டு நான் முடித்துக் கொள்கிறேன்.

* திரு. அ. ராகவ செட்டி : கனம் தலைவர் அவர்களே, இந்த நிலவரி பற்றி நான் ஏற்கனவே ஒரு நாள் பேசியிருக்கிறேன். இன்னும் இதன் மீது பேசுவதற்கு அவகாசம் கொடுத்ததற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். சாதாரணமாக கிராமங்களில் ஏற்கெனவே இருக்கும் நிலவரியை விவசாயிகள் எவ்வளவு சந்தோஷத்துடன் செலுத்துகிறார்கள் என்பதை கனம் ரெவின்யூ அமைச்சர் அவர்கள் அறியாதவர்கள் அல்ல. இருந்தாலும் சார்க்காருக்கும் பணம் வேண்டும் என்ற கருத்துடன் இந்த வரியையு போட்டாக வேண்டியிருக்கிறது என்று சமாதானம் சொல்லுகிறார்கள். ஒரு அரசாங்கம் நடத்த வேண்டுமென்றால் வரி போட வேண்டியது தான். பணம் இல்லாமல் எந்த





அரசாங்கத்தையும் நடத்த முடியாது. இதை எல்லோரும் ஒத்துக்கொள்வார்கள்; இருந்தாலும் நிலவரியைப் பொறுத்த வரையில், தற்போதுள்ள நிலைமையில் நிலவரியை அதிகப்படுத்துவது நியாயமா என்பதைப் பற்றி நமது அரசாங்கம் சிந்தித்திருக்குமோ என்று பார்த்தால் அதிகமாக சிந்திக்கவில்லை என்றுதான் தோன்றுகிறது. உதாரணமாக, வரி போடக் கூடாது என்ற எண்ணம்தான் ஆளுங்கட்சியிலுள்ள அங்கத்தினர்கள் அவர்களுடைய உள்ளத்தில்கூட இருக்கிறது. ஆனால் வெளிப்படையாக அதைச் சொல்லிக்கொள்ளாமல இங்கே வந்து வரி போடலாம் என்று சொல்லுகிறார்கள். தற்போது பேசிய கனம் அங்கத்தினர் அவர்கள் தனது 20 நிமிட பேச்சிலும் வரி போடுவதை ஆதரிப்பதாக சொன்னாலும்கூட, விவசாயிகளுக்குத் தொந்தரவு கொடுக்கக் கூடாது என்பதைத்தான் வலியுறுத்தி தன்னையறியாமலே சொன்னார்கள். காரணம், அவர் பார்க்கின்ற ஒவ்வொரு விவசாயியின் நிலைமையை உணர்ந்துதான் அவ்வாறு பேசியிருக்கவேண்டும் என்று நினைக்கிறேன். இந்த நிலைமையில் நான் ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். இம்மாதிரியான வரிகளை போடும் போது, விவசாயிகளை கிராம அதிகாரிகளிடத்தில் ஒப்படைத்து, அதற்கான கணக்குகளையும் போட்டு, வருஷம் முழுவதும் வசூல் செய்வதற்கு அவர்களை எல்லாம் உபயோகப்படுத்துவதைவிட ரூபாய்க்கு இத்தனை சதவிகிதம் வரி என்று போடுவது என்று நிர்ணயித்துவிடலாம், அப்படிச் செய்வது நல்லது என்று கனம் நிதி அமைச்சர் அவர்களுக்குச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். 1911-ல் அரசாங்கம் சாவே செட்டில்மெண்டு செய்து, வரிகளை நிர்ணயித்ததைவிட தற்போது ஒரு ரூபாய்க்கு 75 நயா பைசா விதத்தில் போட்டு வசூலித்து வருகிறார்கள். கிராம கர்ணங்கள் அதற்காக கணக்குகளைத் தயாரித்து இந்த வரி, அந்த வரி என்று எட்டு, ஒன்பது வரிகளை காண்பித்திருப்பார்கள். இது தயாரிக்கின்ற விதத்தை கணக்குப்பிள்ளைகள் தான் அறிந்து வைத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் இதில் வாட்டர் செஸ், லாண்ட் செஸ் என்று சொல்லுவதில் ஒரு ஏக்கருக்கு 5 ரூபாய் என்றிருந்தால் அதில் 60 சதவிகிதம் என்று நிர்ணயித்து 3 ரூபாய் 60 ந.பை. என்று போடுவதாக இருந்தால், வாட்டர் செஸ் எந்த முறையில் ஒரு ஏக்கருக்கு போடப்படுகிறது என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. இந்த மசோதாவிலும் அந்த விவரங்கள் காண்பிக்கப்படவில்லை. தமிழ்நாட்டைப் பொறுத்தவரை ஒவ்வொரு கிராமத்திற்கும் வித்தியாசங்கள் இருக்கின்றன. இதில் மொத்ததில் எவ்வளவு ரூபாய் வரும் என்பதைக்கூட இந்த மசோதாவின் மூலம் தெரிந்து கொள்ள முடியவில்லை. ஆகவே இதையெல்லாம் கணக்கிட்டுத்தான் மசோதா தயாரித்திருக்க வேண்டும். பொதுவாக இம்மாதிரி மசோதாவில் ஒரு ரூபாய்க்கு எவ்வளவு என்று போட்டு வசூலித்தால் சல்லிசாக இருக்கும் என்று நினைக்கிறேன். கனம் அங்கத்தினர் தட்சிணாமூர்த்தி கவுண்டர் அவர்கள் சொன்னபடி விவசாய வருமான வரி போடுவதால் சர்க்காருக்கு அதிகமான வருமானம் கிடைப்பதில்லை. காரணம் இதை வசூலிப்பதற்கான சிப்பந்திகளுக்கு கொடுக்கப

படும் பணத்தை எல்லாம் கழித்துவிட்டால், சாதாரணமான அளவில் தான் சர்க்காருக்கு வருமானம் வரும் என்று குறிப்பிட்டார்கள். அதை ரத்து செய்து விடவேண்டுமென்றுதான் கேட்டுக்கொள்கிறேன்.

12-00 noon. முக்கியமாக, முதல் தர தண்ணீர் வசதி இருக்கிற பகுதிகள், இரண்டாவது தர தண்ணீர் வசதி இருக்கிற பகுதிகள் என்று இந்த மசோதாவிலே கண்டிருக்கிறது. அதுவும் அந்தக் காலத்திலே அந்தந்த ஊருக்குத் தகுந்தபடி ஒரு திட்டத்தைப் போட்டு கிஸ்தியை விதித்திருக்கிறார்கள். உதாரணமாக திருவள்ளூர் தாலுகாவில் எனக்கு பெரியபாளையம் கிராமத்தில் 20 ஏக்கர் நிலம் இருக்கிறது. அந்த கிராமம் ஏராளமான இனாம் நிலங்கள் உள்ள கிராமம். அதற்கு எந்த வித தண்ணீர் வசதியும் சர்க்காரால் செய்யப்பட்டிருக்கவில்லை. கடந்த மூன்று ஆண்டுகளாக நஞ்சை தீர்வை என்று ஏக்கருக்கு 1 ரூபாய் இருந்ததை இப்போது 7½ ரூபாய் விதம் செய்திருக்கிறார்கள். 7½ ரூபாய்க்கு 75 நயே பைசே விதம் செஸ் வகையறாக்களைச் சேர்த்தால் 11 ரூபாய் சில்லரை வரும். இந்த வரியையும் போட்டால் 16 ரூபாய் ஆகும் என்று நினைக்கிறேன். வாட்டர் செஸ்கூட இருக்குமோ என்று புரியவில்லை. பக்கத்திலே ஒரு ஆறு போய்க்கொண்டிருக்கிறது. கொஞ்சம் மேடாக இருப்பதால் கிராமத்தில் குடி மராமத்து தான் செய்து தண்ணீர் எடுத்துக்கொண்டு போய்க்கொண்டிருக்கிறோம். இன்றும் அப்படித்தான் இருக்கிறது. அப்படிப்பட்ட கிராமங்களுக்குக்கூட வாட்டர் செஸ் போட்டால் 20 ரூபாய்கூட ஆகும் என்று நினைக்கிறேன். இரண்டு அல்லது மூன்று வருஷங்களுக்கு முன்னால் ஒரு ரூபாய்தான் இருந்தது இந்த வருஷத்திலேயிருந்து 20 ரூபாய் செலுத்தவேண்டியிருக்குமோ என்று நினைக்கிறேன். அந்த மாதிரி பல கிராமங்கள் இருக்கும் என்று நான் கேள்விப்பட்டேன். இப்போது போட்டிருக்கும் பொறுக்குக் கமிட்டியார் நன்றாகப் பரிசீலித்து இந்த மசோதாவைச் சட்டமன்றத்திற்கு அனுப்ப வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

**திருமதி டி. என். அனந்தநாயகி:** கனம் தலைவர் அவர்களே, இந்த மசோதாவில் அரசாங்கம் அதிக கவனம் செலுத்திக் கொண்டு வந்திருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. காரணம், என்னென்ன தொல்லைகள் எப்படியெப்படி ஏற்படுமோ அதையெல்லாம் முன்னரே யோசித்து ஓரளவுக்குக் கொண்டு வந்திருக்கிறது என்பதை மசோதாவைப் பார்க்கும்போதே புரிந்துகொள்ள முடியும். உண்மையிலேயே விவசாயிகளுக்கு நடைமுறையில் இருக்கும் கஷ்டங்களை விவசாய பிரதிநிதிகள் வெகு எளிதாகச் சொல்ல முடியுமே தவிர, நகரத்திலே இருக்கக் கூடிய பிரதிநிதிகள் அவ்வளவு எளிதாகச் சொல்ல முடியாது. இருந்தாலும் விவசாயத்தைப் பற்றி ஒரு சிலவற்றை கூறுவதற்கு வேண்டிய உரிமை உண்டு என்று நான் பேச ஆசைப்படுகிறேன். ஏனென்றால், லாண்ட் ரெவின்யூ இருக்கிறதே அது பழைய நாட்களிலே போடப்பட்டது. அதற்கப்புறம் கொஞ்சம் கொஞ்சமாக ஏற்றிக் கொண்டு





வந்தார்களே தவிர நல்ல முறையில் அந்தப் பிரச்னையை ஆராய்ந்து அலசிப் பார்த்து சீரிய முடிவுக்கு வரவில்லை. அதற்குப் பின் ஜமீன்தாரி அபாலிஷன், இனாம் அபாலிஷன் எல்லாம் வந்த பிறகு ரயத்வாரியாக ஆகிவிட்டது. எந்த எந்த நிலத்துக்கு எந்த எந்த வரி போட்டால் தாங்கும் என்று புதிதாக பரிசீலனை செய்வது அவசியம் என்று நினைக்கிறேன். அந்த வகையிலே கனம் ரெவின்யூ அமைச்சர் அவர்கள் வருவாயில் மாத்திரம் அக்கறை செலுத்தாமல், இதற்கு ஒரு எக்ஸ்பெர்ட் கமிட்டி போட்டு, எந்தெந்த அளவில் எப்படியெப்படி மாற்றம் ஏற்பட்டிருக்கிறது என்று பார்த்து அந்தந்தத் தரத்தில் பாகுபடுத்திப் பிரிக்க ஒரு பெரிய குழு அமைக்க வேண்டியது மிகவும் அவசரம் என்று நினைக்கிறேன்—அவசியமும்கூட. இன்றைக்கு யுத்த நெருக்கடி காரணமாக விவசாயத்திற்கு 25 சதவிகிதம் அதிகமாகச் செலவழிப்பதற்கு ஒரு குழு வருகிறது மாகாணங்களுக்கு. நம் மாகாணத்தில் இருக்கிற சில பிரச்னைகளை ஆராய்ந்து, விரைவாக எதை எதை அவர்களிடம் சொல்லி போக்கியாகவேண்டுமென்று சிந்தித்துப் பார்ப்பது அவசியம்.

முன்பெல்லாம் கிணறு தோண்ட பணம் கொடுத்து வந்தார்கள். இப்போதெல்லாம் கிடையாது. 500 ரூபாய் கொடுத்து 1956-க்குள் கிணற்றை முடிக்கவில்லை என்றால் அந்தப் பணத்தை திருப்பிக் கொடுக்கவேண்டும் என்ற நிலைமை இருந்தது. இந்த மாதிரி 500 ரூபாயை வாங்கிக்கொண்டு, தன் கையை விட்டு 1,000 அல்லது 2,000 ரூபாய் செலவு செய்து கிணறு வெட்டியவர்களுக்கு 1962-லே நோட்டீஸ் கொடுக்கிறார்கள். அவர்களுக்குப் பல சங்கடங்கள். பத்து ஆண்டுகள், 8 ஆண்டுகளுக்குப் பிறகு கூட விவசாயிகளை தொல்லையில்லாமல் விடுவது இல்லை என்று முடிவு கட்டி, ஏதாவது ஒரு காரணத்தைக் காட்டி திருப்பிக் கட்டச் சொல்லுகிறார்கள். சர்வே நம்பர் 567-லே கிணறு வெட்டவேண்டும் என்று லோன் போட்டிருப்பான். சர்வே நம்பர் 568-ம் அவனுடையதாகத்தான் இருக்கும். அதிலே வெட்டு என்று கர்ணம் காட்டியிருப்பார். அவனும் வெட்டியிருப்பான். இன்றைக்கு 567-ல் இல்லை, ஆகையால் 'சேஞ்ச் ஆஃப் ஸைட்' என்று 500 ரூபாயைத் திருப்பிக் கட்டு என்று சொல்லக் கூடிய நிலைமை இருக்கிறது. அதுவும் என்னுடைய நிலம்தான். அதுவும் எனக்குத்தான் சொந்தம், கர்ணம் காட்டினார் என்று வெட்டிவிட்டேன், நல்ல எண்ணத்தில் தான் வெட்டினேன் போனஃபைடி மிஸ்டேக் (bonafide mistake) என்று சொன்னாலும் விடுவது கிடையாது. அதன் பிறகு போர்டுக்கு வந்து, அரசாங்கத்திற்கு வந்து 500 ரூபாய் வரையில் வக்கீலுக்குச் செலவு செய்து . . .

**கனம் திரு. வெ. ராமையா:** கனம் அங்கத்தினர் சட்டம் தெரிந்த அங்கத்தினர். அவர் பேசக்கூடிய பேச்சுக்கும், இந்த மசோதாவுக்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

**திருமதி டி. என். அனந்தநாயகி :** நேரடியாக சம்பந்தம் இல்லாவிட்டாலும் விவசாயிகளுக்கு எவ்வளவு தொல்லைகள் ஏற்படுகின்றன, வரியை வாங்கும் விஷயத்தில் அக்கரை காட்டுகிறோமே அந்த அளவுக்கு அவனுக்கு இருக்கக் கூடிய எத்தனையோ தொல்லைகளை நீக்குவதற்கு முயற்சி செய்கிறோமா என்று பார்க்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதே மாதிரி கிணறு வெட்டுவதிலும், மற்றதிலேயும் தொல்லைகள் இருக்கின்றன. சில கிராமங்களுக்கு மின்சாரம் கொடுத்தால் நல்ல முறையில் பம்ப்செட் வைத்து விவசாயம் செய்ய வகை ஏற்படும். இன்றைய தினம் நம்முடைய மாநிலத்தில் தனி நபர் லைசென்தாரர்கள் 8 பேர்கள் இருக்கிறார்கள். இந்த 8 பேர்கள் இருக்கக் கூடிய இடத்தில் கட்டாயமாக மின்சாரம் கொடுக்கமாட்டேன் என்று சொல்லுகிறார்கள். எந்த நேரத்தில் தேசியமயமாகுமோ, எப்படி கையை விட்டு பணத்தைப் போட்டுச் செய்வது என்று அவர்கள் திட்டவட்டமாகச் சொல்லுகிறார்கள். அவர்கள் சுயநலத்தை நினைக்கிறார்களே தவிர, விவசாயியின் நலனை, பொது நலனைக் கருதாமல் இன்றைய தினம் தடைபடுத்திக்கொண்டிருக்கிறார்கள். இன்றைய தினம் இந்த 8 நபர்களை நீக்கி தேசியமயமாக்கி உடனடியாக மின்சாரத்தைக் கொடுத்தால் சுலபமாக நல்ல விதமாக விவசாயத்தைச் செய்ய முற்படுவார்கள். அவர்களுக்கு மின்சாரமும் கொடுப்பதில்லை, தனி நபர்களும் செய்வதில்லை, அரசாங்கமும் எடுத்துக்கொள்ளவில்லை என்றால் எப்படி விவசாயம் முன்னேறும்? யுத்த நெருக்கடி நோக்கில் விவசாயியின் ஏர், போர் முனைக்கு நேர் என்று அதை முன்னேற்றவேண்டிய நிலை இருக்கிறது. உடனடியாக அவர்களுக்கு என்னென்ன செய்யவேண்டுமென்று யோசித்துப் பார்க்கவேண்டியது அவசியம் என்ற காரணத்தினால், இருக்கக் கூடிய 8 நபர்களுக்கும் இப்போது வரக் கூடிய நஷ்டவீடாவது சொல்லி பணத்தை வாங்கிக் கொடுத்து, எல்லா கிராமங்களுக்கும் மின்சாரம் கொடுத்து இந்தப் பிரச்னையைத் தீர்த்துவிட்டால் தமிழகத்தில் பஞ்சம் இருக்காது. இன்றைய தினம் செங்கற்பட்டிலே பார்த்தால் தஞ்சையைவிட பசுமையாக இருக்கிறது. இதற்குக் காரணம் மின்சாரம், கிணறு, பம்ப்செட் ஆகியவைகள்தான். கடம்பத்தூர் வழியாக வரும்போது பார்க்கும்போது அதற்குமுன் தஞ்சை என்ன செய்யும் என்ற நிலைமை இருக்கிறது . . . . . . .

**கனம் திரு. வெ. ராமையா :** கனம் அங்கத்தினர் அவர்கள் நல்ல அர்த்தமுள்ள கருத்தைச் சொல்லியிருக்கிறார். அவர்கள் செங்கற்பட்டு ஜில்லாவை சுட்டிக் காட்டிச் சொல்லும்போது விவசாயிகள் பம்ப்செட்டை வைத்துச் செய்வதாகச் சொல்லுகிறார்கள். அதே நோக்கில் தஞ்சையை ஒப்பிட்டுப் பேசினார்கள். விவசாயிகள் பம்ப்செட் வைத்து தண்ணீர் இறைக்கும்போது மினிமம் சார்ஜ் 150 ரூபாய் அல்லது 200 ரூபாய் கட்டவேண்டும். ஏக்கர் ஒன்றுக்கு குறைந்த பட்சம் 75 ரூபாய் கட்டவேண்டும். அப்படியென்றால், ஏக்கருக்கு 75 ரூபாய் கட்டும்போது, தஞ்சை ஜில்லா



விவசாயிகள் அந்த அளவுக்குக் கட்ட ஏன் தயங்குகிறார்கள் என்று கவனித்து கனம் அங்கத்தினர்களும் சேர்ந்து அவர்களைக் கட்டும்படிச் செய்ய வேண்டும்.

**திருமதி டி. என். அனந்தநாயகி :** இதையெல்லாம் ஆராய்ந்து பார்க்கத்தான் குழு தேவை என்று சொன்னேன். வாட்டர் செஸ் என்றால் பர்ஸ்ட் க்ளாஸ் ஸோர்ஸ் ஆப் இர்ரிகேஷன், செகண்ட் க்ளாஸ் சோர்ஸ் ஆப் இர்ரிகேஷன் என்றெல்லாம் போட்டிருக்கிறார்கள். எனக்கு முன்னர் பேசிய கனம் அங்கத்தினர் ராகவ ரெட்டியார் அவர்கள் கூறினார்கள். இதிலே கிராமத்திற்கு கிராமம் வித்தியாசம் இருக்கிறது. பர்ஸ்ட் க்ளாஸ், செகண்ட் க்ளாஸ், தேர்ட் க்ளாஸ் என்று சொல்லும்போது ஒரே மாதிரி தண்ணீர் வரி போடுகிறார்களா அல்லது வித்தியாசம் இருக்கிறதா என்று பார்க்க வேண்டும். லாண்ட் செஸ் என்பதை பர்ஸ்ட் க்ளாஸிலே 100 சதவீதம் அதிகரிக்கலாம், தேர்ட் க்ளாஸாக இருக்கும் இடத்தில் 50 சதவீதம் அதிகரிக்கலாம் என்று போட்டிருக்கிறார்கள். இப்போது யூனிஃபார்ம் ரேட்ஸ் இருக்கிறதா என்று பார்க்க வேண்டும், அதற்கும் அரசாங்கம் ஆராய்ச்சியை மேற்கொள்ள வேண்டும் என்று எண்ணுகிறேன். இதற்கெல்லாம் மேலாக கிராப் இன்ஷூரன்ஸ் மிக மிக அவசியம் என்று பல அங்கத்தினர்கள் 5, 6 ஆண்டுகளாகவே சொல்லிக்கொண்டு வருகிறோம். அது யார் காதிலும் விழுவதில்லை. நிலத்திற்கு உச்ச வரம்பு கட்டினோம், விவசாய வருமான வரி கொண்டுவந்தோம். இன்னும் என்னென்ன வரி போடவேண்டியிருக்கிறதோ தெரியவில்லை. நம்முடைய மாநிலத்தில் விவசாயம்தான் ஒரு பெரிய தொழில். அதிலிருந்து வரும் வரியை வைத்துக் கொண்டுதான் நாம் ஐந்தாண்டுத் திட்டங்களை நிறைவேற்றவேண்டியிருக்கிறது. அவர்களிடம் வரி வாங்கித்தான் அரசாங்கத்தை நடத்தவேண்டியதாக இருக்கிறது. வரி வாங்காமல் அரசாங்கத்தை நடத்த எந்தக் கட்சியாலும் முடியாது, எந்த ஆட்சியாலும் முடியாது. அதைச் செய்கிற நாம் நன்றாக யோசித்து அவர்களுக்குத் தக்க வசதிகளைச் செய்துகொடுக்க வேண்டும். விளையாத காலத்தில் ரெமிஷன் கொடுக்கலாம் என்ற நிலைமை இருந்தாலும் ரெமிஷன் வாங்குவதற்குள் எவ்வளவு கஷ்டப்படவேண்டியிருக்கிறது என்பதை நாம் யோசிக்கவேண்டும். ஆகையினால் இப்படிப்பட்ட ஒரு நிலைமையில் கிராப் இன்ஷூரன்ஸ் மிகவும் அவசியம். கிராப் இன்ஷூரன்ஸுக்கு தனி நபர் முன்வரவில்லையென்றால், அரசாங்கமே அதை மேற்கொண்டு விவசாயிகளுக்கு இன்ஷூரன்ஸ் வசதி செய்துகொடுக்க வேண்டும். ஒரு ஆண்டில் விளைந்து, அடுத்த ஆண்டில் விளையாவிட்டால் அவர்கள் அய்யோ என்று இடிந்து போகக்கூடாது. விளையாத நாட்களிலும் அவர்கள் வாழ்க்கை நடத்துவதற்கு வசதி செய்துதரப்பட வேண்டும். நாம் தீவிரமாக அநேக சட்டங்களைக் கொண்டு வருகிறோம், தீவிரமாக அநேக வரிகளைப் போடுகிறோம். விவசாயிகளுக்கு மிகவும் தேவைப்படுகின்ற கிராப் இன்ஷூரன்ஸை

முடிந்தால் இந்த ஆண்டிலேயே ஆரம்பித்து விட்டால் இன்னும் சற்று விருவிருப்போடுகூட விவசாயம் செய்வார்கள். அதைத் துரிதமாகச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மற்றொரு நல்ல அம்சம் இந்த மசோதாவில், 'அடிஷனல் அஸெஸ்மெண்டு ஆப் லாண்டு அண்டு வாடர் செஸ்'-க்கு சர்சார்ஜை விலக்கியிருக்கிறார்கள். எங்கே இதற்கும் சர்சார்ஜ் போட்டு விடுவார்களோ என்று விவசாயிகள் பயந்துகொண்டிருந்தார்கள். அந்த அளவுக்கு அரசாங்கம் இதை உணர்ந்து விதிவிலக்கு அளித்திருப்பது பாராட்டத்தக்கது. இது என்றைக்குமே போடப்படாது என்று. ஒரு அஷ்யூரன்ஸ் கொடுத்தால் நன்றாக இருக்கும். இந்த ஆண்டில் இல்லையென்றாலும், அடுத்த ஆண்டில் லாண்டு ரெவின்யூவோடு சேர்த்து போட்டுவிடுவார்களோ என்று விவசாயிகள் பயப்படுகிறார்கள். சட்டத்தில் அம்மாதிரி விலக்கு இருப்பதால் அமெண்டுமெண்டு இல்லாமல் செய்யமுடியாது. இருந்தாலும், ரெவின்யூ அமைச்சர் அவர்கள் அதுபற்றி ஒரு அஷ்யூரன்ஸ் கொடுத்துவிட்டால் விவசாயிகள் அதை சந்தோஷமாக ஏற்றுக் கொள்ளுவார்கள்.

அடுத்தபடியாக, இந்த மசோதாவிலே அப்பீலுக்கு என்று 30 நாட்கள்தான் டைம் கொடுத்திருக்கிறார்கள். அதற்கு மேல் அப்பெலெட் அதாரிடி டிஸ்கிரெஷனில் 60 நாட்கள் வரையிலும் டைம் கொடுக்கலாம் என்று போடப்பட்டிருக்கிறது. அப்பீல் போடுவதற்கு டைம் 30 நாட்கள்தான் என்றால், அதற்குள்ளே அதை விவசாயி புரிந்துகொண்டு அப்பீல் போடுவது கஷ்டமாக இருக்கும் அதற்குள் 30 நாட்கள் ஆகிவிடும். பின்னால் அதிகாரி 60 நாட்கள் வரை டைம் கொடுக்கலாம் என்ற வகையில் இல்லாமல், அப்பீல் செய்வதற்கே 60 நாட்கள் டைம் கொடுத்துவிட்டால், அவர்களுக்கு வசதியாக இருக்கும். இந்த சிறிய மாற்றத்தை கனம் அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொள்ளுவார்கள் என்று நினைக்கிறேன்.

அடுத்தபடியாக மூன்றாவது கிளாஸில் படித்துப்பார்த்தால் வாசகம் சரியாக அமையவில்லை. அதையும் கனம் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

"In respect of every wet land under first or second of class source of irrigation................"

என்றிருப்பதில் "class" என்ற வார்த்தைக்கு முன்னால் இருக்கும் 'of' என்ற வார்த்தையை எடுத்துவிட்டால், அது சரியாக அமைந்துவிடும் என்று நினைக்கிறேன்.

இந்த நிலப் பிரச்னையில் இன்னொரு விஷயத்தையும் நாம் யோசிக்கவேண்டும். ஒரு சமயத்தில் எள் விளைச்சல் குறைவாக இருந்தால், இங்கே எண்ணெய் விலை அதிகமாகிவிடுகிறது. அதே மாதிரி எத்தனை ஏக்கர் நிலத்தில் தமிழகத்தில் பருப்பு வகைகள் உற்பத்தி செய்கிறார்கள், எத்தனை ஏக்கர் நிலத்தில் எண்ணெய்



விதைகள் உற்பத்தி செய்கிறார்கள் என்பதற்கெல்லாம் தக்க முறையில் ஒரு கணக்கு இல்லாமல் இருப்பதன் காரணமாக, திடீரென்று விலை ஏறுகிறது, திடீரென்று விலை இறங்குகிறது. ஒரு சமயத்தில் இருந்த விலை இன்னொரு சமயத்தில் இருப்பதில்லை. மிளகாய் விலை ரூ. 4-ஆக இருப்பது திடீரென்று ரூ. 6 என்று உயர்ந்து விடுகிறது. நெல் விலை குறைந்து போகிறது என்று கூறப்படுகிறது. மற்ற விளைபொருள்களின் விலையும் ஒரு நாளைக்கு ஒரு விலையாக இருக்கிறது. ஆகையினால் அதை ஸ்திரப்படுத்துவதற்கு வழிவகை காணவேண்டும். ஆகவே, அமைச்சர் அவர்கள் இதற்காக ஒரு குழு அமைத்து இதையும் ஆராய்ந்து விட்டால் நகர மக்களுக்கு வசதியாக இருக்கும் என்று சொல்லி என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. எம். தண்டாயுதபாணி**: கனம் தலைவர் அவர்களே, நிதி அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கும் இந்த மசோதாவைப் பற்றி எனது ஓரிரு கருத்துக்களை சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். இதற்கு முன்பு நடந்த விவாதத்தைப் பார்க்கும்பொழுது, இது நஞ்சை நிலத்திற்கோ, புஞ்சை நிலத்திற்கோ போடப்பட்ட தீர்வை, அதை அனைவரும் கொடுக்க வேண்டுமென்ற எண்ணத்தில் இருந்ததுபோல் இல்லை. தஞ்சை ஜில்லா வாசிகளுக்காக விதிக்கப்பட்ட வரி, அவர்களிடம் அதிகமாக வரி வசூலிக்கவேண்டும், மற்ற பகுதிகளைவிட அவர்கள் குறைவாக வரி கொடுத்து வருகிறார்கள் என்று பல அங்கத்தினர்கள் பேசியதை நான் கேட்டுக் கொண்டிருந்தேன். என்னுடைய ஜில்லாவில் தீவிர சாகுபடி திட்டம் அமுலுக்கு வந்த பிறகு, அரசாங்கம் கணக்குப் போட்டிருக்கிறபடி நில வருமானம் எவ்வளவு வருகிறது, நாங்கள் செலுத்துகிற வரி எவ்வளவு என்பதை இந்தச் சபையின் முன்பு சமர்ப்பித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். தீவிர சாகுபடித் திட்டம் அமுலில் இருக்கும் பகுதியிலே ஏக்கர் ஒன்றுக்கு 36 கலம் வருமானம் அதாவது ஏறத்தாழ 2,260 பவுண்டு என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. கலம் ஒன்றுக்கு ரூ. 8½ மார்க்கெட் விலையாக இருக்கிறது. வருமானத்தின் தொகையை கணக்கிட்டால் 36 கலத்திற்கு சுமார் ரூ. 296 ஆகிறது. சர்க்காரால் கணக்கிடப்பட்டிருக்கிற செலவுப்படி, ரூ. 296 வருமானத்தில், ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 120 செலவாகிறது. ரூ. 296 வருமானத்தில் செலவு ரூ. 120-ஐ கழித்து விடுவோமானால், சர்க்கார் நிர்ணயித்தபடி எங்கள் பகுதியில் ஏக்கர் ஒன்றுக்கு நிகர வருமானம் ரூ. 176. அதில் ரூ. 2 நிலத் தீர்வை, ரூ. 10 தண்ணீர் தீர்வை, ரூ. 6.10 பஞ்சாயத்து விதிக்கும் செஸ், ஆக மொத்தத்தில் ரூ. 18.10 செலுத்திவருகிறோம். இதைத் தவிர ஏக்கர் ஒன்றுக்கு விவசாய வருமான வரி ரூ. 4 செலுத்திவருகிறோம். மொத்தத்தில் நாம் கணக்குப் போட்டுப் பார்த்தோமானால், ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 22.10 செலுத்திவருகிறோம். இப்பொழுது சர்க்காரால் போடப்படும் புது வரி ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 10. ஆக, மொத்தத்தில் ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 32.10 ஒரு விவசாயி கட்டவேண்டிய நிலை ஏற்படும். நான்

முன்பு குறிப்பிட்டபடி, ரூ. 176 வருமானத்தில் ரூ. 32.10 நிலவரி கட்ட வேண்டியிருக்கிறது. அப்படிப் பார்க்கும்பொழுது ஏறத்தாழ வருமானத்தில் 20 சதவிகிதம் வரி கட்ட வேண்டிய அவசியம் இருக்கிறது. மற்ற துறைகளில், உதாரணமாக தொழில் துறையில் எவ்வளவு வரி செலுத்தப்படுகிறது என்பதையும் நாம் பரிசீலனை செய்து ஒரு முடிவுக்கு வரவேண்டும்.

கனம் நிதி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த நிதி நிலை அறிக்கையிலே பஸ்ஸுக்கு வரி போடப்பட்டது. அது உடனே பொது மக்கள் தலையிலே தான் சுமத்தப்பட்டது. டிக்கெட் கட்டணம் உடனே உயர்த்தப்பட்டுவிட்டது. அதேமாதிரி முத்திரைத்தாள் வரி உயர்த்தப்பட்டது. அதன் விளைவாக மதிப்பைக் குறைத்து ரிஜிஸ்டர் செய்வதை நாம் பார்க்கிறோம். இம்மாதிரி சர்க்கார் எவ்வளவு வரி போட்டாலும் அது சாதாரணமாக பொது மக்கள் தலையில் போய் சுமருகிறது. ஆனால் இந்த மசோதாவின் அடிப்படையில் போடப்படும் நில வரி நேரடியாக விவசாயிகளைப் பாதிக்கும். அதோடு மட்டுமல்லாமல் மொத்தமாக வரிக் கணக்கைப் பார்த்தால், வரி போக ஏக்கர் ஒன்றுக்கு நிகர வருமானம் சுமார் ரூ. 132 வருகிறது. பெருமையாக பேசிக்கொள்ளப்படுகிற எங்கள் தஞ்சை ஜில்லாவிலே சராசரி கணக்குப் பார்த்தால் ஒரு குடும்பத்திற்கு 3 ஏக்கர் நிலம் இருக்கிறது. ஒரு ஏக்கருக்கு ரூ. 132 நிகர வருமானம் என்றால், ஏறத்தாழ 3 ஏக்கருக்கு ரூ. 400, ரூ. 420 நிகர வருமானம் வரும். இந்த ரூ. 400 வருமானத்தை வைத்துக்கொண்டு ஐந்து நபர் உள்ள குடும்பத்தை ஒரு ஏழை விவசாயி நடத்த முடியுமா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். தஞ்சை ஜில்லாவில் இருப்பவர்கள் ரூ. 30 வரி கொடுக்கிறார்கள். அப்படி இருக்கும்பொழுது, அவர்கள் இன்னும் அதிகமாக வரி கொடுக்க வேண்டுமென்று சொன்னால், அவர்கள் விவசாயம் செய்வது தவறு என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். எங்களுக்கு விவசாயத்தை விட்டால் வேறு தொழில் இல்லை. வேறு கதி இல்லை. நெருக்கடி சமயத்தில் விவசாயிகளுக்கு வசதியை அதிகரிக்க வேண்டும், விவசாய உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்று கூறும் நேரத்தில், இந்த வரியை அதிகமாகப் போட்டால் எந்த அளவுக்கு விவசாயி விவசாயத்தை பெருக்க முடியும் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். முன்பு ஒரு மூட்டை நெல் ரூ. 22-க்கு விற்றுக் கொண்டிருந்தது. எங்கள் ஜில்லாவில் இந்த வரி அமுல் செய்யப்படப்போகும் நேரத்தில் நெல் விலை ஒரு மூட்டைக்கு ரூ. 17-ஆகக் குறைந்து விட்டது. ஒரு மூட்டை நெல் ரூ. 17-க்கு விற்றால், அந்த விவசாயி எப்படி வாழ முடியும் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். நேரடியாக சாகுபடி செய்யும் விவசாயிகளுடைய வருமானத்தைப் பற்றித்தான் இப்பொழுது குறிப்பிட்டேன். இன்னும் குத்தகைக்கு விடப்பட்டிருக்கும் நிலத்தை எடுத்துக்கொண்டால் நிலைமை மிக மோசமாக இருக்கும், ஏறத்தாழ இவர்கள் வருமானத்தில் 36 சதவிகிதம் வரி விதிக்கப்பட்டு, அதைக்கட்ட வேண்டிய



நிலை ஏற்படுகிறது. இந்த நில வரியை நாங்கள் கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறோம். ஆனால் சற்றுக் குறைத்துப் போடுங்கள் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். ரூ. 18.10 என்று இருப்பதை திடீரென்று ரூ. 32 அளவுக்கு உயர்த்த வேண்டாம். ரூ. 25 அளவுக்கு நீங்கள் உயர்த்தினால், விவசாயிகளுக்கு ஓரளவுக்கு சௌகரியமாக இருக்கும். எங்களுடைய சிரமத்தை உணர்ந்து அதை அமைச்சர் அவர்கள் நல்ல முறையில் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். நாம் இப்பொழுது உற்பத்தியை அதிகரிக்கிறோம். 'உப்பிட்டவரை உள்ளளவும் நினை' என்பது நமது நாட்டில் நிலவி வரும் ஒரு பழமொழி. ஆகவே, மற்ற ஜில்லாக்காரர்கள் எங்கள் தலை மீதே எல்லா வரியையும் போட வேண்டும் என்று நினைக்க கூடாது என்று கேட்டுக் கொண்டு, எனது உரையை முடித்துக் கொள்கிறேன்.

* திரு. ரா. கு. வீரப்ப செட்டியார்: கனம் தலைவர் அவர்களே, இந்த வரி விதிப்பின்மீது சில கருத்துக்களை நான் சொல்ல விரும்புகிறேன். இப்பொழுது நாம் எந்த வரி விதித்தாலும் அது விவசாயிகளின் தலையில்தான் விழுகிறது. விவசாயிகள் பல ஆண்டுகளுக்கு முன்பு இருந்து வந்த வரியை விட இப்பொழுது இரண்டு மடங்கு வரி செலுத்துகிறார்கள். கனம் அமைச்சர் அவர்கள் விவசாயப் பொருள்கள் அதிக விலைக்கு விற்கப்படுகின்றன என்று குறிப்பிட்டார்கள். அதிலும் விவசாயிகள் பல இன்னல்களை அடைந்து வருகிறார்கள். வருடா வருடம் பயிர்களுக்கு நோய் வந்து பயிர்கள் அழிந்துவிடுகின்றன. தக்க பாதுகாப்பு இல்லாமல் இருக்கிறது.

சேலம் ஜில்லாவைப் பொறுத்தவரையில், வட சேலம் மிகவும் வறண்ட பிரதேசம். அங்கே எந்தவிதமான நீர்ப்பாசன வசதியும் இல்லை. இரண்டு திட்டங்கள் நிறைவேறிய போதிலும் எங்களுக்குப் பயன் இல்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். மழையை நம்பி வாழ்கிற மக்கள் நாங்கள். பருவ மழை பெய்யாத காரணத்தினால், விவசாயப் பயிர் எல்லாம் நாசமாகிவிடுகிறது. கிணற்றிலும் தண்ணீர் இருப்பதில்லை. இந்த நிலையில் தண்ணீர் வரியைப் போட்டால், எங்கள் பகுதியிலுள்ளவர்கள் பாதிக்கப்படுவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் நமது ஆளும் கட்சியினர் தாங்கள் அதிகாரத்திற்கு வந்தால் நில வரியைத் தள்ளி விடுவோம் என்று ஒரு காலத்தில் சொல்லி வந்தார்கள். இப்பொழுது அவர்கள் அதிகாரத்திற்கு வந்ததும், விவசாயிகள் மீது வரிக்குமேல் வரி போட்டு, விவசாயிகளை வதைக்கிறார்கள். என்னுடைய பகுதியிலுள்ள ஏரிகள் சரியான முறையில் மராமத்து செய்யப்படவில்லை. பஞ்சாயத்து யூனியனில் ஏரிகளை ஒப்படைத்துவிட்டு, நீங்கள் கவனித்துக் கொள்ளுங்கள் என்று சொல்லிவிட்டு, அதற்காக தொகை ஒதுக்காமல், ஏரிகள் ரிப்பேர் செய்யப்படாத நிலையில் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதை கவனத்தில் வைத்து எங்கள் வறண்ட பிரதேசத்திற்கு அதிக வரி விதிக்காமல் இருக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தற்போது அரசாங்க அமைப்பில் இருக்கக் கூடிய அவசியமில்லாத

இலாகாக்களையும், அவசியமில்லாத பணியாட்களையும் குறைத்து, அதனால் கிடைக்கும் பணத்தைக் கொண்டு சரிக் கட்டவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. டி. கார்ச்சா கவுடர் :** கனம் தலைவர் அவர்களே, கனம் ரெவின்யூ அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்ட இந்த வரி விதிப்பை நான் முழு மனதுடன் ஆதரித்து, என்னுடைய கருத்துக்களைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இந்த வரி விதிப்பு ஏன் அவசியமாக இருக்கிறது, யாருக்கு விதிக்கப்படும் என்பதைப் பற்றி கனம் நிதி அமைச்சர் அவர்களும், கனம் ரெவின்யூ அமைச்சர் அவர்களும் விரிவாக கூறினார்கள். இந்தத் தண்ணீர் தீர்வை உயர்வு தஞ்சை மாவட்டத்திற்கு மட்டும்தான் வருகிறது என்று ஒரு அங்கத்தினர் குறைபட்டுக்கொண்டார். ஏற்கனவே லோயர் பவானிப் பகுதியில் இருக்கிற தீர்வையின் அளவுக்குத் தான் தற்போது உயர்த்துகிறார்கள் என்பதை கனம் நிதி அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். எந்த விதத்தில் பார்த்தாலும் நமது மாநிலத்திலே கந்தாயத்தை ஒரே யூனிபாரம் ரேட்டாகக் கொண்டு வருவதற்கு நமது அரசாங்கம் முயற்சிக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

அடுத்தபடியாக, நில வரி என்பது ஒரு அடிப்படையான வரி. இந்த வரியின் மீது நமது நாட்டிலே ஸர்சார்ஜ் விதிக்கும் அதிகாரத்தை பஞ்சாயத்து யூனியன்களுக்குக் கொடுத்திருக்கிறோம். சில பஞ்சாயத்து யூனியன்களிலே ரூபாய்க்கு 12 நயாபைசா முதல், என்னுடைய தொகுதியான உதகை மாவட்டத்தில் 100 சத விகிதம், ஸர்சார்ஜ் விதித்திருக்கிறார்கள். ஏற்கனவே ரூ. 2 கந்தாயமாகக் கட்டிக்கொண்டிருந்தால், இப்பொழுது ரூ. 4 கொடுக்கவேண்டும். இப்படி 100 சதவிகிதம் உயர்த்தியிருப்பது ஓரளவு அவசியம் என்றாலும்கூட, இந்த ஸர்சார்ஜ் விதிப்பிற்கு பஞ்சாயத்து யூனியன்களுக்குள்ள அதிகாரத்தை எடுத்துவிட்டு, சர்க்காரே மாநிலம் பூராவும் ஒரு யூனிபாரம் ரேட்டில் விதித்து பஞ்சாயத்து யூனியன்களுக்குப் பகிர்ந்து கொடுக்கலாம் என்ற யோசனையைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

கடைசியாக, இப்படி வரிகள் விதித்தாலும் அதை வசூலிக்கும் பொறுப்பு கீழ்மட்டத்திலுள்ள கிராம அதிகாரிகளுக்குத்தான் போய்ச் சேருகிறது. நமது மாநிலத்திற்கு வரும் சுமார் 100 கோடி ரூபாயும் கிராம அதிகாரிகள்தான் வசூலித்து வருகிறார்கள். ஆனால் நாடு சுதந்திரம் அடைவதற்கு முன்பு ஒரு போலீஸ் கான்ஸ்டபிள் ரூ. 30 சம்பளம் வாங்கிக் கொண்டிருந்தால், தற்போது ஏறக்குறைய ரூ. 100 அளவுக்கு வாங்கிக் கொண்டிருக்கிறார். இந்த நிலையில் கிராம அதிகாரிகள் அன்று எவ்வளவு சம்பளம் வாங்கிக் கொண்டிருந்தார்களோ, அதே அளவுதான் இன்றும் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். கனம் ரெவின்யூ அமைச்சர் அவர்களும், கனம் நிதி அமைச்சர் அவர்களும் இந்த



கிராம அதிகாரிகள் நிலைமையை எப்படியாவது உயர்த்த முடியுமா என்பதைத் தீவிரமாகப் பரிசீலித்து ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பயிர் இன்ஷூரன்ஸ் திட்டத்தைப் பற்றி விரிவாகக் கூறப்பட்டது. நமது மாநிலம் பூராவுக்கும் இத்தகைய திட்டத்தைக் கொண்டு வந்தால் நலமாக இருக்கும். அதிலும், குறிப்பாக என்னுடைய மாவட்டத்திலே, இந்தப் பயிர் இன்ஷூரன்ஸ் திட்டத்தைக் கொண்டுவரவேண்டிய நெருக்கடியான நிலைமை இருக்கிறது. நேற்று எங்கள் மாவட்டத்தைச் சேர்ந்த ஒரு அங்கத்தினர் பேசினார். கனம் நிதி அமைச்சர் அவர்களுக்கும் எங்களுடைய மாவட்டத்தைப் பற்றி அதிக அக்கறை இருக்கிறது என்பதை நாங்கள் அறிவோம். ஆனாலும்கூட நெருக்கடி ஏற்பட்ட பிறகு, அமைச்சர்கள் பல மாவட்டங்களிலே சுற்றுப் பிரயாணம் செய்திருக்கிறார்கள். எங்களுடைய நீலகிரி மாவட்டத்திற்கு ஒரு அமைச்சராவது வந்து, "நீங்கள் எப்படியிருக்கிறீர்கள்? பாதுகாப்பு நிதி வசூல் எப்படியிருக்கிறது? 'லேட் பிளைட்' எப்படி இருக்கிறது?" என்று விசாரிக்காமல் இருப்பது வருத்தமாக இருக்கிறது. ஆகவே, தயவு செய்து . . . .

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அந்த மாவட்டத்தைப் பொறுத்தவரையில், சட்டமன்றப் பிரதிநிதிகளிடம் எங்களுக்கு நம்பிக்கை இருக்கிறது. அதனால்தான் அடிக்கடி அங்கு வருவதில்லை.

**திரு. டி. கார்ச்சா கவுடர் :** எங்களுடைய மாவட்டத்தின் பேரில் கனம் நிதி அமைச்சர் அவர்கள் எவ்வளவோ அனுதாபம் வைத்திருக்கிறார்கள். இருந்தாலும் நாங்கள் மக்களிடம் போய்ச் சொல்லும்பொழுது, "மற்ற மாவட்டங்களுக்கு அமைச்சர்கள் சென்று அங்குள்ள குறைகளை அறிந்து வருகிறார்களே, நீங்கள் ஏன் கூப்பிடக் கூடாது" என்று எங்களைக் கேட்கிறார்கள். தயவு செய்து நிதி அமைச்சர் அவர்களுக்கு வர சந்தர்ப்பம் இல்லாமல் போனாலும், இன்னும் 20 நாட்களுக்குள் ஏதாவது ஒரு அமைச்சரை அந்த மாவட்டத்தில் சுற்றுப் பிரயாணம் செய்துவரச் சொல்லும்படிக் கேட்டுக் கொள்கிறேன்.

உருளைக் கிழங்கிற்கு ஏற்பட்டிருக்கிற நெருக்கடியான நிலைமையைக் குறித்து, 41-வது விதியின் கீழ் ஏற்கனவே ஒரு பிரேரணை கொடுத்திருக்கிறோம். அதன் பிரகாரம் அதற்காக விதிக்கப்படும் கந்தாயத்தை ஜா செய்யவேண்டுமென்று கேட்டுக் கொண்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. எஸ். ஜே. ராமசாமி :** மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, விவசாயிகளுக்கு வரி விதிக்கக்கூடிய வகையில் இந்த மன்றத்தின் 12-30 p.m.
முன்பு இப்பொழுது கொண்டுவரப்பட்டிருக்கிற இந்த மசோதாவின்மீது என்னுடைய கருத்துக்களை நான் சொல்ல ஆசைப்படுகிறேன். விவசாயிகள் எப்போதுமே நாட்டுக்காக உழைப்

பவர்கள். சமூகத்திற்காகவே பாடுபடுபவர்கள். அப்படிப்பட்டவர்களைப் பாதிக்கத் தக்க விதத்தில் இந்த மசோதா இப்பொழுது கொண்டுவரப்பட்டிருப்பதாகவே நான் கருதுகிறேன். விவசாயிகள் எப்படிச் சமுதாயத்திற்கு வேண்டியவர்களாக இருக்கிறார்கள் என்றால், அறுவடையான நெல்லை மார்க்கெட்டுக்குக் கொண்டு போய் விற்றுவிட்டு, போரடித்த நெல்லை அவர்கள் தங்களுக்காக வைத்துக்கொள்ளுகிறார்கள். அதிலிருந்தே அவர்களுடைய தியாக மனப்பான்மை நன்றாகத் தெரிகிறது. காய்கறித் தோட்டம் வைத்திருக்கிற விவசாயிகள், நல்ல காய்கறிகளை மார்க்கெட்டுக்கு அனுப்பிவிட்டு, பூச்சி பிடித்த காய்களைத் தங்களுடைய வீட்டுக்குக் கொண்டுபோய்ச் சமைத்து உண்ணுகின்றார்கள். இப்படி, இயற்கையாகவே அவர்களுக்கு சமுதாயத்தின்பால் நல்ல எண்ணம் இருக்கின்றது. ஆனால், சர்க்கார் அவர்களுக்குச் செய்யக் கூடிய உபகாரம் ஒன்றும் இல்லை. அவர்களுடைய நிலைமை மிகவும் வருத்தமாக இருக்கிறது. துரோணர் எப்படி ஏகலைவனுடைய பெரு விரலைக் கேட்டாரோ, அதேபோல, விவசாயிகளுக்கு இந்தச் சர்க்கார் செய்யக்கூடிய ஏராளமான நன்மைகளைக் காட்டி, குரு தட்சிணை கேட்பதுபோல, அவர்களுக்குத் தண்ணீர்த் தீர்வையையும், நிலத் தீர்வையையும் உயர்த்தியிருப்பது சரியல்ல என்று நான் நினைக்கிறேன். இப்பொழுது இந்த மசோதா செலக்ட் கமிட்டியின் பரிசீலனைக்கு விடப்படுகிறது. அதில் இதைப் பரிசீலனை செய்து, கூடுமானவரையில், இந்த வரி விகிதத்தை எவ்வளவுக்கெவ்வளவு குறைக்க முடியுமோ அந்த அளவுக்குக் குறைத்துக் கொண்டால் மிக நன்றாக இருக்கும் என்று நான் கருதுகிறேன.

பம்ப் செட் வைத்துப் பயிரிடுகிறவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் தாங்களாகவே கிணறுகளை ஆழமாக வெட்டித் தண்ணீர் இறைக்க வேண்டியிருக்கிறது. கிணறு வெட்டுவதிலும் பல கஷ்டங்கள் அடைகிறார்கள். வெட்டியும் தண்ணீர் வரவில்லையென்றால், போரின் போட்டு, ஐம்பது, அறுபது அடி ஆழத்திற்கு வெட்டி, பம்ப் செட் போட்டு, தண்ணீரை மேலே எடுத்து வந்து, வயல்களில் பாய்ச்சி விவசாயம் செய்கிறார்கள். இதற்கு அவர்கள் அதிகமாகப் பணம் செலவிட வேண்டியிருப்பதோடு, பல கஷ்டங்களுக்கும் உள்ளாக வேண்டியிருக்கிறது. இப்படி, பம்ப் செட் வைத்துப் பயிரிடுகிறவர்களை எந்த வகையிலும் பாதிக்காத வகையில் இந்தச் சட்டம் அமைக்கப்பட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

கிணறு வெட்டி, பம்ப் செட் வைத்துப் பயிரிடுவதற்கு இப்படிப்பட்ட கஷ்டங்கள் இருக்க, பயிரிடுவதற்கு ஆகும் செலவையும் நாம் கவனிக்க வேண்டும். ஒரு ஏக்கர் பயிர் செய்வதற்கு ஆகும் செலவைப் பார்த்தால், நடவுக்கு ஏறக்குறைய கூலி 150 ரூபாய் ஆகிறது. அதற்கு மேல் தண்ணீர் இறைக்க மின்சாரக் கட்டணம் இருக்கிறது. ரசாயன உரம், பிண்ணாக்கு முதலியவற்றுக்கும் செலவாகிறது. இப்படியெல்லாம் செலவு செய்து பயிரிட்டாலும், ஒரு ஏக்கர் நிலத்தில் கிடைக்கும் மகசூல் 16 அல்லது 20 மூட்டைக்கு மேல் போவதில்லை. நிலைமை இப்படி





யிருக்க, சர்க்காருடைய புள்ளி விவரங்களைப் பார்த்தால், 8,000, 10,000 பவுண்டு ஒரு ஏக்கரில் விளைந்ததாகக் கணக்குக் காட்டுகிறார்கள். 'பள்ளிக் கணக்கு புள்ளிக்கு உதவாது' என்று சொல்லுவது உண்டு. ஒரு ஏக்கரில் பத்தாயிரம் பவுண்டு விளைந்ததாகக் கணக்கு காட்டுகிறார்களே, அது எப்படித்தான் வந்ததோ, ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம். எப்படியோ விவசாயிகளுடைய வருமானம் குறைந்துகொண்டு வருகிறது என்று நான் எடுத்துக் கூற விரும்புகிறேன்.

அதற்குப் பிறகு, ஆற்றுக் கசங்களிலிருந்து பயிரிடப்படும் நிலங்கள் இருக்கின்றன. அந்த நிலங்களுக்கு 10, 15 வருஷங்களாகவே தண்ணீர் வருவது கிடையாது. ஆற்றுக் கால்வாயிலே தண்ணீர் மட்டம் கீழே போய்விட்டது. எவ்வளவு வெட்டினாலும், தண்ணீர் பாய்வதற்கு வசதி கிடையாது. ஆனால், இருபது ஆண்டுகளுக்கு முன்பிருந்த நஞ்சைத் தீர்வைதான் இன்றும் இருக்கிறது. கனம் நிதியமைச்சர் அவர்கள் சார்ந்திருக்கும் ஸ்ரீபெரும்பதூர் தொகுதியிலுள்ள பிச்சிவாக்கம் கிராமத்தில் அப்படியே இருக்கிறது. அவர்கள் அங்கு வரும்போது அங்குள்ள விவசாயிகள், "நஞ்சை நிலங்களைப் புஞ்சையாக மாற்றிவிடுங்கள், தண்ணீரே வருவது கிடையாது" என்று பல மகசர்கள் மூலம் கேட்டுக்கொண்டார்கள். அமைச்சர் அவர்கள் இது குறித்து ஆவன செய்ய வேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்ளுகிறேன். அந்தப் பகுதியில் தண்ணீர் வரலாயக்கற்ற நிலைமை இருக்கிறது. அயன் நஞ்சைத் தீர்வை ஏறக்குறைய 16 ரூபாய்க்கு மேல் இருக்கிறது என்று நான் நினைக்கிறேன். அங்கே எனக்கும் நிலம் இருப்பதால் இதை நான் ஞாபகப்படுத்திச் சொல்ல முடிகிறது. ஆக, அந்தப் பகுதியில், இப்படி நஞ்சை நிலமாக இருப்பவற்றுக்குப் புஞ்சைத் தீர்வை விதிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

கனம் காங்கிரஸ் அங்கத்தினர் ஒருவர், "இன்னும் நன்றாக வரி போடலாம். விவசாயிகள் செழிப்பாக இருக்கிறார்கள், பயிர்கள் பச்சைப் பசேலென்று இருக்கிறது" என்று சொன்னார்கள். உண்மையிலேயே பயிர்கள் பச்சைப் பசேல் என்று இருப்பது உண்மைதான். ரசாயன உரம் தூவினால் உடனே பச்சையாகப் போய்விடுகிறது. ஆனால், பலன் இருக்கிறதா என்றால், உண்மையிலேயே பலன் கிடையாது. பசுமைதான் இருக்கிறதே தவிர, பலன் உண்மையிலேயே கிடையாது என்று இந்த நேரத்தில் கூறிக் கொள்ளுகின்றேன்.

விவசாயிகள் மீது விதிக்கும் வரியைச் சர்க்கார் புனராலோசனை செய்து, அவர்கள் மீது இந்த வரியை விதிக்கவேண்டாமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். கூடுமானவரை பம்ப் செட் வைத்திருப்பவர்களுக்கு இந்த வரியை விதிக்காமல் இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகின்றேன். தண்ணீர் வராமலிருக்கும் கசங்களில் தண்ணீர் அளவு கீழே போய்விட்டது. அவைகளைத் தூர் எடுத்தாலும், அவைகளில் தண்ணீர் வர

முடியாது. ஆகவே, அந்த நஞ்சை நிலங்களுக்கு நஞ்சைத் தீர்வை விதிக்கப்படுவதை மாற்றிப் புஞ்சைத் தீர்வை விதிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

விவசாயிகள் மீது இப்படிப்பட்ட வரி போடுவதை விடுத்து, இந்த வரியை வேறு யார் தலைமேல் வைத்தாலும் தேவலை என்று நான் சொல்வேன். பல்களுக்கு 35 ரூபாய், 40 ரூபாய், 45 ரூபாய் என்ற விகிதாசாரம் இருக்கிறது. அதை ஒரு சீராக வைத்து விட்டால், விவசாயிகளிடம் வரவேண்டிய அவசியமிருக்காது. விவசாயிகள் தலைமீது கை வைக்கவேண்டிய அவசியமிருக்காது என்று கூறிக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகின்றேன்.

**திரு. சி. வே. வேலப்பன்:** கனம் தலைவர் அவர்களே, இப்பொழுது அரசாங்கம் கொண்டுவந்திருக்கும் இந்த மசோதாவின்மீது நானும் எனது கருத்துக்கள் ஒருசிலவற்றைக் கூற விரும்புகிறேன். நாடு முன்னேறுவதற்கு அடிப்படையாக இருக்கக்கூடியது விவசாயம்தான் என்று யாவருமே ஏற்றுக் கொள்ளுவார்கள். அப்படியிருக்க, போடுகின்ற வரியாக இருந்தாலும், மற்றும் இதர வரிகள் எதுவாக இருந்தாலும், விவசாயிகளை அது விடுவதில்லை. காரணம், அரசாங்கம் விவசாயிகள் மீது அக்கறை காட்டுவதாக எண்ணி, விவசாயிகளை எந்த வகையிலும் முன்னேறுவதற்கு விடாமல் தடுத்துக்கொண்டு வருவதாகத் தெரிகிறது. ஆகவே, விதிக்கப்பட்டுள்ள வரிகளினால் விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள். ஒரு ஏக்கரில் விவசாயம் செய்பவர்கள், நாலைந்து ஏக்கர்களில் விவசாயம் செய்பவர்கள், ஏரிகளிலிருந்து பாசன வசதி பெற்று விவசாயம் செய்பவர்கள், கிணற்றிலிருந்து தண்ணீர் இறைத்துப் பாசனம் செய்து விவசாயம் செய்பவர்கள், நடநீர் விவசாயிகள் என்று பலவகையினர் இருக்கிறார்கள். சில விவசாயிகள், நாலைந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை மழை பெய்து அதனால் பலன் அடைகின்றார்கள். இப்படிப்பட்ட விவசாயத்திற்கு, வருஷா வருஷம் நஞ்சைத் தீர்வை விதிக்கப்பட்டு, ஏற்கனவே வசூலிக்கப்பட்டு வருகின்றது. இன்னும் பம்ப் செட் வைத்து விவசாயம் செய்கின்றவர்கள் தண்ணீர் கிடைத்தாலும், அதிகப்படியாகச் செலவிட்டு, அவர்கள் விவசாயம் செய்ய வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். இப்படிப் பார்க்கின்றபோது, அரசாங்கம் வரி விதிக்காமல் இருக்க முடியாது என்றாலும் விதிக்கின்ற வரி எப்படி இருக்க வேண்டும்? நாட்டிலே பல தொழில்கள் இருக்கின்றன.

அப்படி இருக்கக்கூடிய தொழில்களில் எதற்கு வரி குறைந்த அளவில் இருக்கிறதோ, குறைந்த முதலீட்டில் அதிக லாபம் வருகிறதோ அவற்றுக்குக் கொஞ்சம் வரியை அதிகப்படுத்தி, இம்மாதிரி நிலத்திற்குப் போட உத்தேசித்திருக்கிற வரியையே எடுத்துவிடலாம் என்று நான் யோசனை கூற விரும்புகிறேன்.



எனது தொகுதியைச் சேர்ந்த மட்டில் பத்து ஆண்டுகளுக்கு முன்பே விவசாயத்தை அபிவிருத்தி செய்யவேண்டுமென்று தண்டோரா மூலம் அறிவித்து நதிகளில் இருக்கக்கூடிய நீரை விவசாயிகள் தங்கள் தங்கள் சொந்த முயற்சியில் எடுத்து விவசாயம் செய்யவேண்டுமென்றும் தெரிவித்தார்கள். அதை விவசாயிகள் நம்பி, கடன்களை வாங்கி அங்கங்கே பம்பு செட்டுகள் வைத்தார்கள். ஆனால் இன்னமும் அரசாங்கத்தினிடமிருந்து காவேரித் தண்ணீரை எடுத்துப் பாய்ச்சுவதற்கோ, கால்வாய்களில் உள்ள தண்ணீரை எடுத்துப் பாய்ச்சுவதற்கோ பம்பு செட்டுகள் வைத்துக்கொள்ள அனுமதி வழங்கப்படவில்லை. கனம் திரு. ராஜகோபாலாசாரியார் முதல் மந்திரியாக இருந்த காலத்தில் இருந்து இவ்விலாகா சம்பந்தப்பட்ட அமைச்சருக்கும், அரசாங்கத்திற்கும் விண்ணப்பம் செய்துகொண்டு வருகிறோம். அதற்கு என்ன காரணமோ தெரியவில்லை இதுவரை அனுமதி வழங்கப்படவில்லை. இதனால் பல விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். உடனடியாக இவ்விஷயத்தில் அரசாங்கம் ஒரு முடிவுக்கு வந்து, விவசாய உற்பத்தியைப் பெருக்கும் வகையில் இந்த விவசாயிகளுக்குப் பம்பு செட்டு வைத்துக்கொள்ள அனுமதி வழங்க வேண்டும் என்பதாகக் கேட்டுக்கொள்கிறேன். விவசாய வரி விதிக்கின்றபோது பாசன வசதி பெற்றிருக்கக்கூடிய பூமி என்று நிர்ணயிக்கப்பட்டிருப்பதை வைத்து விதிக்கக் கூடாது. உண்மையிலேயே பாசன வசதி பெற்று சாகுபடி ஆகக்கூடிய பூமிகளுக்கே இந்த வரி வரவேண்டும். கிணறு வெட்ட பணம் கொடுக்கப்படுகிறது. கிணறு வெட்டி, தண்ணீர் இல்லாமல் போய் விடக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டாலும் கிணறு வெட்ட வாங்கிய பணம் பூராவையும் தரவேண்டுமென்று அரசாங்கம் கோருகிறது. அதை மாற்றி அமைக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இன்னும் சில ஏரியாக்களில் புஞ்சைப் பயிர் செய்கின்ற பூமிகளுக்கே நஞ்சை தீர்வை விதிக்கப்படுகிறது. இதையும் கவனிக்க வேண்டியிருக்கிறது. பொதுவாக ஏற்கனவே விதிக்கப்பட்டிருக்கிற வரிகளே மிகவும் அதிகமாக இருப்பதால், இந்த வரி விதிப்பு விவசாயிகளுக்கு மிகவும் கஷ்டத்தையே கொடுக்கும். ஆகவே இந்த வரியை நீக்குவதுதான் உசிதம். இல்லையானால் விவசாயிகளுக்கு மிகவும் கஷ்டமாகிவிடும்.

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி:** கனம் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தினை நான் அடியோடு எதிர்க்கின்றேன். அரசாங்கம் பல வரிகளை மேற்கொண்டிருக்கிறார்கள். ஆனால் விவசாயத் துறையிலே இப்படி ஒரு சட்டத்தைக் கொண்டு வருகிறார்கள் என்றால் உண்மையில் என் போன்ற விவசாயிகள் வருத்தத்தைத்தான் அடையவேண்டியிருக்கிறது.

ஐந்தாண்டுத் திட்டங்களின் அடிப்படை நோக்கமே விவசாய உற்பத்தியைப் பெருக்குவதுதான் என்கிறார்கள். ஆனால் அரசாங்கத் தரப்பில் இருந்தே, எவ்வளவு தூரம் விவசாய உற்பத்

[திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி] [4th February 1963

தியைப் பெருக்க வேண்டுமென்று அவர்கள் திட்டமிட்டார்களோ, அந்த அளவுக்கு விவசாய உற்பத்தியைப் பெருக்க முடியவில்லை என்பதை ஒத்துக்கொள்கிறார்கள். விவசாயத்திற்கு உபயோகப் படுகிற அத்தனை சாதனங்களும் இன்று அதிகமான விலையேற்றத்தைக் கண்டு இருக்கிறது. இன்றைக்கு நெல் விலை குறைந்திருக்கிறது என்பதை எல்லோரும் ஒத்துக்கொள்கிறார்கள். சாகுபடிக்கு என்ன செலவாகிறதோ, அந்த அளவுக்கு உற்பத்தியைப் பெருக்க முடியவில்லை. உற்பத்தி பண்ணின சரக்கை விற்றுப் பணம் பெறவும் முடியவில்லை. விவசாயத் துறையில் அதிக லாபம் வருவது போலவும், அதற்காக இந்த வரியைக் கொண்டு வந்திருப்பது போலவும் சொல்லப்படுவது சரியல்ல. நிலத்தின் விலை உயர்ந்திருப்பதனால் வரி போடுகிறோம் என்றால் நிலத்தின் விலை உயர்ந்திருப்பதனால் அதில் விளையக்கூடிய பொருள்களின் உற்பத்தி உயர்ந்திருக்கிறது என்றோ, சாகுபடிக்குச் செலவு போக மீதி அதிகமான லாபம் கிடைத்துக் கொண்டிருக்கிறது என்றோ சொல்ல முடியாது. விவசாய உற்பத்திப் பண்டங்களின் விலை முன்பு இருந்ததைவிட இப்போது உயர்வாக இருக்கிறது என்றால் அதைப்போல பன்மடங்கு சாகுபடிச் செலவு அதிகரித்து விட்டது. முன்பு ஆறில் ஒரு பங்கு இறை வரி வசூல் செய்வது பழக்கம் என்பார்கள். இன்று ஆறில் ஒரு பங்கு அல்ல. நாலில் ஒரு பங்கு, இரண்டில் ஒரு பங்கு வரியாக இப்போது இருக்கிறது. இதற்குமேலும் வரி விதிப்பது என்றால் விவசாயிகள் மிகவும் பாதிக்கப்படுவார்கள். மேல் சபையிலே ஓர் அங்கத்தினர் கூறிப்பிட்டது போல இன்றைக்கு மிகவும் லாபம் தரக்கூடியதாக இருப்பது மூன்று தொழில்கள்தான். ஹோட்டல் வைப்பது, சினிமாப் படத்தில் முதலீடு செய்வது, தொழில் துறையில் முதலீடு செய்வது என்றுதான் மக்களுடைய மனோபாவம் வளர்ந்துகொண்டிருக்கிறது. விவசாயத்தில் லாபம் இல்லை. ஆகவே பலர் நிலங்களை விட்டு விட்டு நகரங்களில் குடியேறுகிறார்கள். இன்கம், காஸ்டாப் ப்ரொடெக்ஷனுக்கு ஈடுகட்டமாட்டேன் என்கிறது. முதலீடு செய்த தொகையே பெற முடியாது இருக்கிறபோது அவர்களுடைய உழைப்பு வியர்த்தமாகிறது. விவசாயத்தில் சரீரபாடும் மிக்க அதிகம் என்பதை யாவரும் ஒத்துக்கொள்வார்கள். ஆகவே உழைப்புக்கேற்ற ஊதியம் இல்லாது, போட்ட முதலையும்கூடத் திரும்பப்பெறமுடியாது பல தொல்லைகளுக்கு உள்ளாகிக் கொண்டிருக்கின்ற விவசாய மக்களின் மீது இன்றையதினம் இந்த வரியையும் போட்டால் அவர்கள் மிகவும் பாதிக்கப்படுவார்கள். ஏற்கனவேயே ஊக்கமும் அக்கறையும் விவசாயத்தில் குன்றி வருகிற மக்களை இது பெரிதும் பாதிக்கும். நம்முடைய நோக்கமே இந்தச் சட்டத்தின் மூலம் அடிபடும். ஆகவே இந்தச் சட்டத்தைக் கொண்டுவரக் கூடாது என்பது என்னுடைய அபிப்பிராயம்.

அரசாங்கம் பொன் முட்டை வேண்டுமென்று நினைத்து வாத்தை அரிகின்ற நிலையிலேதான் இந்தச் சட்டத்தைக் கொண்டு வருகிறார்கள். உணவு உற்பத்தியை அதிகப்படுத்தினால்தான் நாட்டிலே சுபிட்சம் ஏற்படும் என்பதை நாம் நன்றாக யோசித்துப்



4th February 1963] [திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி]

பார்க்க வேண்டும். நாம் அதிகப்படியான சுமைகளை விவசாயிகளின் தலையிலே போடுவதன் காரணமாக விவசாய உற்பத்தி மேலும் மேலும் பாதிக்கப்படும். இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களிலே 900 கோடி ரூபாய் விவசாயத்திற்காகச் செலவழித்தும் அதற்குத் தகுந்த ரிட்டர்ன் கிடைத்திருக்கிறதா என்றால் இல்லை. அதற்குத் தகுந்த ரிட்டர்ன் கிடைக்கவில்லை என்பதை அகில இந்திய ரீதியிலேயே ஒத்துக் கொள்ளுகிறார்கள். விவசாயத்திற்குச் செலவழிக்கும் பணத்தைக் கணக்கிட்டு வரி விதிக்காமல், எதற்கெடுத்தாலும் விவசாயிகளுக்கு வரி, சேல்ஸ் டாக்ஸ் என்ற இந்த இரண்டையும் தவிர இந்த அரசாங்கத்துக்கு மற்ற இனங்களிலே வரி விதிப்புக்கான எண்ணம் ஏற்படுவதில்லை. அமைச்சர் அவர்கள் எந்த எந்த முறையிலே வரி விதிக்கலாம் என்பதைப் பற்றி எதிர்க்கட்சி மெம்பர்களை அழைத்துப் பேசுவாரானால் நல்ல திட்டத்தைச் சொல்ல நாங்கள் தயாராக இருக்கிறோம். நாங்கள் சொல்லுகிற கருத்துக்கள் தேவையில்லையென்று கருதினால் கனம் கே. டி. கோசல்ராம் அவர்களை அழைத்தாலும் நல்ல திமிங்கிலங்களைக் காட்டுவார்கள். அந்தத் திமிங்கிலங்களின் மீது உங்கள் ஈட்டியைப் பாய்ச்சினால் நல்ல பலன் ஏற்படும்.

என்னுடைய வட்டத்தில் ஓரளவு நஞ்சை நிலங்கள் இருக்கின்றன. கிளாஸ் 1, கிளாஸ் 2 இரிகேஷன் என்று சொல்கிறார்களே அந்த நிலங்களுக்குத் தண்ணீர் வேண்டிய அளவுக்குக் கிடைக்கிறதா என்பதை அமைச்சர் அவர்கள் தயவு செய்து என்னுடைய தொகுதிக்கு வந்து பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பி.டபிள்.யூ.டி. ஏரி என்று சொல்லக்கூடிய பல ஏரிகளின் மூலம் ஒரு மாதத்திற்குக் கூடத் தண்ணீர் கிடைப்பதில்லை. புத்தகத்திலே கிளாஸ் 1, கிளாஸ் 2 ஏரிகள் என்று வைத்துக் கொண்டு விவசாயிகளின் தலையில் அதிகப்படியான சுமையைச் சுமத்துகிறார்கள். எங்களுடைய தொகுதியிலே நஞ்சை நிலங்களாக இருக்கக் கூடியவற்றுக்கு இரண்டு ஏக்கர், மூன்று ஏக்கர் வைத்திருப்பவர்கள்கூட மோட்டார் பம்புகளை வைத்துத் தண்ணீர் இறைத்துத்தான் விவசாயம் செய்ய வேண்டியிருக்கிறது. ஒரு மோட்டார் பம்ப் செட் வைக்க வேண்டுமென்றால் மூவாயிரம், நாலாயிரம் செலவு செய்ய வேண்டியிருக்கிறது. அந்தப் பணத்திற்கு வட்டி கொடுக்கக் கூட விவசாயிக்கு வருமானம் இல்லை. இன்றைக்கு நெல் விற்கும் விலையையும், அதே சமயத்தில் கூலி மற்றுமுள்ள செலவுகளையும் கணக்கிட்டுப் பார்த்தால்—உழுதவன் கணக்குப் பார்த்தால் உழக்குக் கூட மிஞ்சாது என்று சொல்வதற்கேற்ப, உழுதவன் விவசாயச் செலவுகளுக்காக வாங்கிய கடனை வீட்டை விற்றுக் கொடுக்க வேண்டிய நிலைமையிலேயே இருக்கிறான்.

(கனம் சபாநாயகர் தலைமை)

நம்முடைய நாட்டிலே இப்போது இருக்கும் தேசிய நெருக்கடியின் காரணமாக முதல் "ப்ரையாரிடி"யை விவசாயத்திற்குக் கொடுத்திருக்கிறோம். இந்த நெருக்கடி சமயத்தில் உண்மையிலேயே இந்த அரசாங்கம் உற்பத்தியைப் பெருக்கவேண்டு

[திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி] [4th February 1963

மென்று கருதுகிறதா என்று நான் கேட்க விரும்புகிறேன். உண்மையிலேயே உற்பத்தி பெருக வேண்டுமென்று சொன்னால் எந்த எந்த ஏரிகளில் தண்ணீர் இல்லையோ, எங்கெங்கு பம்ப் செட் வைத்துப் பாசனம் செய்கிறார்களோ அந்த இடங்களுக்கெல்லாம் இந்த வரியிலிருந்து விதி விலக்கு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். விவசாயத்திற்கு வேண்டிய மூலப் பொருள்களின் விலைகள் ஏறிக் கொண்டே இருக்கும் இந்தச் சமயத்தில், மற்றப் பொருள்களின் விலைகளும் ஏறிக் கொண்டிருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில் விவசாயிகளுக்கு மேலும் வரி விதிப்பது உற்பத்தியைப் பாதிக்கும் என்பதை மனத்தில் கொண்டு செலக்ட் கமிட்டியினர் இந்த மசோதாவைப் பரிசீலனை பண்ண வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நிலத்தினுடைய விலை உயர்ந்து விட்ட காரணத்தால் வரியும் உயர்த்தப்பட்டிருக்கிறது என்று காரணம் கூறினார்கள். ஆனால் அவ்வளவு அதிகமான விலை கொடுத்து நிலத்தை வாங்குவதற்குத் தகுந்த ரிட்டர்ன் இருக்கிறதா என்றால், இல்லை. இரண்டாயிரம் ரூபாய் பெறுமான நிலம் இப்போது ஐயாயிரம் ரூபாய்வரை விற்கப்படுகிறது. ஏழை விவசாயி ஐயாயிரம் ரூபாய் கொடுத்து நிலம் வாங்கினால் அந்தப் பணத்திற்கு அவன் மாதம் 20 ரூபாய் வட்டி கட்ட வேண்டியிருக்கிறது. அவர்கள் வட்டியை அடைக்கவே முடியாத நிலையில் இருக்கும்போது மேலும் மேலும் வரி போட்டு அவர்கள் மீது சுமையை ஏற்றினால் அவர்களால் எப்படிக் கட்ட முடியும்? ஆகவே, தயவு செய்து இந்த முயற்சியிலே ஈடுபட வேண்டாமென்று கேட்டுக் கொண்டு, விவசாயத்தைப் பெருக்க வேண்டுமென்பது அரசாங்கத்தினுடைய அடிப்படைக் கொள்கையாக இருக்குமானால் பொன் முட்டை இடும் வாத்தைச் சாகடிக்க வேண்டாமென்று சொல்லி என்னுடைய பேச்சை முடித்துக் கொள்ளுகிறேன். வணக்கம்.

**திரு. எம். கொளந்தைசாமி கவுண்டர்:** கனம் சபாநாயகர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் வரி உயர்வு மசோதாவை ஆதரித்து ஒருசில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இப்போது போடப்படும் வரியானது சேலம் ஜில்லாவில் ஏற்காடு பகுதியில் உள்ள சேர்வராயன் மலைப் பகுதியில் இருக்கும் விவசாயிகளை அதிகமாகப் பாதிப்பதாகத் தெரிகிறது. மலை மேலே கிணறும் மின்சாரமும் இல்லாத காரணத்தால் மழை பெய்தால்தான் வெள்ளாமை செய்ய முடியும். ஆகவே, மே மாதம் வரை இனி வெள்ளாமை செய்ய முடியாது. மலை மேல் இருப்பவர்களுக்கு ரோடு வசதி கிடையாது. மலை மேலிருந்து கீழே ராசிபுரம் வந்து தான் நெல் மற்றும் உணவுத் தானியங்களை வாங்கிக் கொண்டு போக வேண்டும். மலை மேலே ஏறிப் போவது மிகவும் கஷ்டம். தடியை ஊன்றிக் கொண்டுதான் மலை மேல் ஏறவேண்டும். நாங்கள் மலையை விட்டு அடிவாரத்திற்கு வந்து விடுகிறோம். எங்களுக்கு அடிவாரத்தில் நிலம் கொடுங்கள். மலை மேலே ஜீவிப்பதே மிகவும் கஷ்டமாக இருக்கிறது. கோம்பை என்ற நிலம் ஜரியூரில் இருக்கிறது. அந்த நிலத்தில் விவசாயம் செய்யும் மலைச் சாதியினருக்கு இந்த வரியைப் போடக் கூடாது.



4th February 1963] [திரு. எம். கொளந்தைசாமி கவுண்டர்]

1967-ல் நடக்கும் தேர்தலில் சேலம் ஜில்லாவில் எங்களுக்கு ஒரு ரிசர்வ் சீட் இருந்தால் வசதியாக இருக்குமென்று சொல்லிக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

**SRI K. A. MATHIALAGAN:** On a point of order, Sir. There is no quorum. அதனால் ஏன் adjourn செய்யக் கூடாது?

**கனம் சபாநாயகர்:** அட்ஜேர்ன் செய்யவேண்டுமென்று சொன்னால் சொல்லுங்கள். கோரம் இல்லையென்று சொல்ல வேண்டாம். கோரம் இருக்கிறது. The hon. Member can move for adjournment of the House on some other point. If the Minister is also agreeable, I have no objection. But it should not be on the point of quorum.

**கனம் திரு. வெ. ராமையா:** கனம் சபாநாயகர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த மதியழகன் அவர்கள் இந்த விவாதத்தை நாளை வரைக்கும் ஒத்தி வைக்க வேண்டுமென்று விரும்பினால் அதற்கு நான் தயார்.

**SRI K. A. MATHIALAGAN:** I am sorry. I do not want the House to be adjourned. I thought that there was no quorum.

**கனம் சபாநாயகர்:** ஒரு பக்கத்தில் கோரம் இல்லையென்று நினைக்கிறீர்களா? இரண்டு பக்கத்தையும் சேர்த்துப் பார்க்க வேண்டும். There are 48 hon. Members present in the House.

**கனம் திரு. வெ. ராமையா:** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மசோதா மீது இன்றைக்குப் பல அங்கத்தினர்கள் அவர்களது கருத்துக்களைச் சொன்னார்கள். இதை முதல் தடவையாக இன்று விவாதிக்கவில்லை. சென்ற பட்ஜெட்டின்போது, இந்த வரி விதிப்புப் பிரேரணையை பட்ஜெட் அறிக்கையில் அறிந்தபோது, அதிகப்படியான அங்கத்தினர்கள் பட்ஜெட் விவாதத்தின்போதே தங்கள் மனதில் பட்ட கருத்துக்களை எல்லாம் சொன்னார்கள். அதோடு சென்ற வாரம் கவர்னர் பேருரையின் மீது நன்றி தெரிவிக்கும் தீர்மானம் பற்றி விவாதம் நடந்தபோது அதிகமாகப் பேசப்பட்டதெல்லாம் இந்த மசோதா குறித்துத்தான். ஆகவே சட்டசபையைப் பொறுத்த வரை அநேகமாக எல்லா அங்கத்தினர்களுமே அவரவர்கள் கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள் என்று சொன்னால் மிகையில்லை. இது ஒரு முக்கியமான மசோதாவாக இருப்பதால் இத்தனை பேர்கள் பங்கு எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆரம்ப உரையில் நான் குறிப்பிட்டதுபோல் சென்ற இரண்டு விவாதங்களில் பங்கு கொண்டவர்கள் சொன்னதை மனதில் வைத்து இந்த மசோதாவில் வேண்டிய ஏற்பாடுகளை எல்லாம் செய்திருக்கிறோம். கனம் நிதி அமைச்சர் அவர்கள் பட்ஜெட் விவரதத்திற்குப் பதில் அளிக்கும் நேரத்தில், சென்ற வாரம் நடந்த விவாதத்திற்குப் பதில் சொல்லக்கூடிய முறையிலும் இந்த மசோதாவில் குறிப்பிட்டிருக்கும் வரிக் கொள்கையைப் பொறுத்தவரையில், அதிலுள்ள பிரச்னைகளைப் பொறுத்த

வரையில், நல்லமுறையில் பதில் சொல்லியிருக்கிறார்கள். குறிப்பாக இந்த வருமானத்தை எடுத்துக் கொண்டால் அதில் ஏற்பட்டிருக்கிற மாறுதல்களை எல்லாம் புள்ளிவிவரப்படி சொல்லியிருக்கிறார்கள். முதல் ஐந்தாண்டுத் திட்டத்திற்கு முன்பு நில வருவாய் அதோடு இந்த செஸ் எல்லாவற்றையும் சேர்த்து மொத்த வரவு செலவைப் பார்த்தால் 50 சதவிகிதம் என்று குறிப்பிட்டார்கள். இன்றைய நிலையில் அது 9 சதவிகிதம் ஆகக் குறைந்திருக்கிறது. அதை கனம் அங்கத்தினர்கள் தீவிரமாக கவனத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். குறிப்பாக இன்று விவாதத்தைத் தொடங்கி வைத்த திரு. மாதவன் அவர்கள் இதை நன்கு ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். அவர்கள் விவாதத்தை தொடங்கி வைக்கும் முறையில் வட்டித் தொழிலைக் குறித்து பேசி அவர்கள் கருத்தை அதன் மூலம் சபைக்கு எடுத்துச் சொல்ல முயற்சி எடுத்தார்கள். காரணம், அவர்கள் அந்தத் தொழிலில் இந்த ஊரில் ஈடுபடாவிட்டாலும் மலேயா தேசத்தில் ஈடுபட்டிருப்பார்கள் என்று நினைக்கிறேன்.

**திரு. கே. ஏ. மதியழகன் :** கனம் அமைச்சர் அவர்கள் மலேயா தேசத்தில் அப்படி ஈடுபட்டிருப்பார்களோ என்று நான் கருதுகிறேன்.

**கனம் திரு. வெ. ராமைய்யா :** அமைச்சர் அவர்கள் நிலையை அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். திரு. மாதவன் நிலையை நான் புரிந்து கொண்டிருக்கிறேன். வட்டிக் கணக்கைப் பார்க்கும் போது 10, 15 ஆண்டுகளுக்குப் பிறகு அது 50 சதவிகிதத்தில் இருந்து 9 சதவிகிதமாக மாறியிருக்காது. உயர்ந்துதான் போய்க் கொண்டிருக்கும். திரு. மாதவன் அவர்களுக்குப் பதில் சொல்லும் முறையில் காலையில் நிதியமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்தத் திட்டத்தை எடுத்துக் கொண்டால் அது கட்டுபடியாகாத திட்டம். வெள்ளையர் காலத்தைப் பற்றி மாதவன் அவர்கள் எப்படித் திரும்பத் திரும்பச் சொன்னார்களோ, அந்தக் காலத்தில் இருந்த நிலைக்கு நாம் இத் திட்டங்களை எல்லாம் பரிசீலனை செய்தால், அவர்கள் ஏற்றுக்கொண்டிருந்த கொள்கைப்படி பார்த்தால் தெரியும், நாடு சுதந்திரம் அடைவதற்கு முன்பு பாசனத் திட்டங்களை எடுத்துக் கொண்டால் அப்போது கட்டுபடியாகக் கூடிய திட்டமாக இருக்க வேண்டும். 4½ சதவிகிதம், 5 சதவிகிதம் வருமானம் வர வேண்டும். முதல் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் நிறைவேற்றியிருக்கும் ஒவ்வொரு திட்டத்தை எடுத்துக் கொண்டாலும் ஒரு சதவிகிதம் வருமானம் அரசாங்கத்திற்கு வரவே வராது. மிகக் குறைவான வருமானத்தில் அத் திட்டங்கள் அமைந்த காரணத்தினால்தான் நாடு சுதந்திரம் அடைவதற்கு முன்பு அத் திட்டங்களை நிறைவேற்றாமல் விட்டுவிட்டார்கள். வருமானத்தை அடிப்படையாகக் கொள்ளாமல் மக்கள் முன்னேற்றத்தைக் கருதி, நம் மாநில விவசாயிகளின் கஷ்டங்கள் எல்லாம் நீங்க வேண்டுமென்ற ஒரே காரணத்திற்காகக் கட்டுபடியாகாத திட்டங்



களை எல்லாம் நாம் எடுத்துக் கொண்டிருக்கிறோம். கட்டுபடியாகக் கூடிய திட்டமா, கட்டுபடியாகாத திட்டமா என்ற அந்த சர்ச்சையில் நான் போக விரும்பவில்லை. இத் திட்டங்கள் நிறைவேறியதால் நம் மாநிலத்தில் விவசாயம் முன்னேறி இருக்கிறது என்பதில் எந்த விதமான வேறுபட்ட நினைப்பும் யாருக்குமே கிடையாது. இத்தனை திட்டங்களை நிறைவேற்றினாலும் மேலும் மேலும் திட்டங்களைக் கண்டு பிடித்தாக வேண்டுமென்ற சூழ்நிலையில் இந்த மன்றத்தில் குறிப்பாக நேற்றைக்கு முன் தினம் ஒரு கேள்வி எழுந்தபோது, குறிப்பாக திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பாலாற்றில் தண்ணீர் ஓடுவதற்குப் பதிலாக நெருப்பு ஓடுவதாகச் சொன்னார்கள். அவர்கள் ஹாஸ்யமாக சொல்லியிருக்கமாட்டார்கள். பாலாறு பக்கத்திலுள்ள விவசாயிகள் எல்லோரும் தண்ணீரைக் கொண்டு நல்ல முறையில் விவசாயம் செய்யவேண்டுமென்று அவர்கள் விரும்பக் கூடிய காரணத்தினால்தான் அக் கருத்தை உப கேள்வி மூலம் அரசாங்கத்தினிடம் தெரிவித்தார்கள். இவையெல்லாம் அரசாங்கத்தின் ஞாபகத்தில் இருக்கின்றன. இன்னும் தீவிரமாக எவ்வளவு நல்ல திட்டங்களை எல்லாம் நிறைவேற்ற முடியுமோ அவற்றை நிறைவேற்றித்தான் ஆக வேண்டும். தீர்ப்பாசன இலாகாவை எடுத்துக்கொண்டால் ஒரு திட்டம் கட்டுபடியாகக் கூடியதா இல்லையா என்று பார்க்காது அரசாங்கத்திற்கு வருமானம் தேடித் தரும் நிலை மாறி விவசாயத்திற்கு, விவசாயிகளுக்குத் தண்ணீர் கொடுக்கக்கூடிய எந்தக் காரியத்தை எடுத்துக் கொண்டாலும் அரசாங்கப் பொது நிதியிலிருந்து அதற்கு ஈடு செய்ய வேண்டிய சூழ்நிலையில் இருக்கிறோம். முதல் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் நிறைவேற்றியிருக்கக்கூடிய திட்டங்கள் எந்த ஆயக்கட்டுக்குப் பாசன வசதி கொடுக்கிறதோ அந்த ஆயக்கட்டுக்களை எல்லாம் இந்த மசோதா பாதிக்காமல் இருக்க விதிவிலக்குக் கொடுத்திருக்கிறோம். காரணம் என்ன? இவர்கள் மீதுள்ள அனுதாபமோ அல்லது விசேஷ காரணமோ அல்ல. ஒவ்வொரு திட்டமும் நிறைவேறும்போது அதற்கு விசேஷமாகச் சட்டங்கள் செய்து புது முறையில் பெட்டர்மெண்ட். லெவி என்று அவர்களுக்கு வரி விதித்திருக்கிறோம். குறிப்பாக லோயர் பவானியை எடுத்துக்கொண்டால், அல்லது நான் குறிப்பிட்டிருக்கும் ஏழு இடங்களை எடுத்துக் கொண்டாலும், இன்றுள்ள மற்ற திட்டங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது அவர்கள் அதிக வரி கொடுக்கும் நிலை இருக்கிறது. திரு. நஞ்சுண்ட ராவும், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த திரு. ராமசாமி அவர்களும் சொன்ன மற்றொரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். சென்னை ராஜ்யத்தில் அதிகப்படி கிராம மின்சார விஸ்தரிப்பு நடந்திருக்கிறது. கிராமங்களில் பம்ப்செட்ஸ் மூலம் விவசாயம் ஏராளமாக நடக்கும் நேரம் இது. இந்த ஆண்டு தொடக்கம் வரையில் என்னிடமுள்ள புள்ளிவிவரப்படி 160,000 பம்ப்செட்ஸ் மின்சாரத்தினால் ஓடிக்கொண்டிருக்கும் மாநிலம் இந்த மாநிலம்தான் இப்படி மின்சாரம் உபயோகிக்கக்கூடியவர்

[திரு. வெ. ராமையா] [4th February 1963

கள், தண்ணீர்த் தீர்வை என்ற முறையில் என்றில்லாவிட்டாலும் மின்சாரக் கட்டணம் கொடுக்கிறார்கள். அது எவ்வளவு என்று பார்த்தால் மினிமம் ஒரு குதிரை வேகத்திற்கு 50 ரூபாய் அல்லது 40 ரூபாய் கொடுக்கிறார்கள். ஒரு பம்புசெட் மூலமாக 2 ஏக்கர் 3 ஏக்கர் விவசாயம் செய்கிறார்கள். இதன்படி கணக்குப் போட்டுப் பார்த்தால் ஒரு ஏக்கருக்கு 70 ரூபாய் 80 ரூபாய் கொடுக்கிறார்கள் என்பதை நாம் பார்க்கலாம். இதை எல்லாம் பார்க்கும்போது திருமதி அனந்தநாயகி அவர்கள் சொன்னதுபோல் எல்லாவற்றையும் நாம் பரிசீலித்துப் பார்க்க வேண்டியவர்களாக இருக்கிறோம். ஓரிடத்தில் 30 ரூபாய் கொடுக்க வேண்டும், இன்னொரு இடத்தில் அதாவது லோயர் பவானி பாசனப் பிரதேசம் போன்ற இடங்களில் எப்படியும் வருடத்தில் ஒரு பயிர் எடுக்க முடியும் என்ற இடங்களில் எல்லாம் 25 ரூபாயும், இன்னொரு இடத்தில் 30 ஆண்டுகளுக்கு முன்னால் முடிவு செய்யப்பட்ட வரியையும் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். நீர்ப்பாசனத்தைப் பொறுத்தவரையில் எந்த விதமான ரேஷனலைஸேஷனும் கிடையாது. மற்ற இலாகாக்களைப் பொறுத்தளவில், அதிகமான வித்தியாசம் இருக்காது. மின்சாரத்தை எடுத்துக்கொண்டாலும் அதிகமான அளவில் வித்தியாசம் இருக்க முடியாது. அதே நேரத்தில் எல்லா இடங்களுக்கும் ஒரே விதத்தில் யூனிட்டுக்குத் தகுந்தவாறு கட்டணம் இருக்கிறது. புதிய திட்டங்களின்படி ஏற்படுகின்ற வசதிகளின் மூலமாக அதிகமான அளவு சாகுபடி செய்யக்கூடிய சூழ்நிலை ஏற்படுகிறது. சென்னை ராஜ்யத்தைப் பொறுத்தவரை எடுத்துக் கொண்டால், எல்லா இடங்களுக்கும் ஓரளவு ஒரே யூனிட் கட்டணமாகத்தான் இருக்கும். மேட்டூர் பிராஜக்ட், குந்தா பிராஜக்ட் இவைகளை எடுத்துக் கொண்டால் ஒரே மாதிரியாகத்தான் யூனிட் கட்டணம் இருந்துகொண்டிருக்கிறது. ஆனால் மற்ற துறைகளை எடுத்துக்கொண்டால் அதிகமான அளவு வித்தியாசம் இருக்கிறது. இவற்றை இன்றைக்கு இல்லாவிட்டாலும் கொஞ்சகாலம் பொறுத்தாவது பரிசீலனை செய்யத்தான் வேண்டும். இன்றுள்ள நிலையில் பல மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன. சில விவரங்களை மட்டும் நான் குறிப்பிட விரும்புகிறேன். அன்றைக்கு, அதாவது 1936-வது ஆண்டில் இருந்த திட்டங்களுக்குப் பழுது பார்க்கக்கூடிய செலவுக்காக மட்டும், அதாவது மெயின்டனன்ஸ் இனத்தில் மட்டும், தஞ்சை ஜில்லாவுக்கு மட்டும் பார்த்தால் மிக அதிகமாக இருக்கிறது. தஞ்சை ஜில்லாவைச் சேர்ந்த பல கனம் அங்கத்தினர்கள் ஆவேசமாகக்கூடப் பேசினார்கள். திரு. தண்டாயுதபாணி அவர்கள் தங்களுடைய ஜில்லாவிலுள்ள விவசாயிகளுக்கு மட்டும் கெடுதல் செய்வதாக எல்லாம் சொன்னார்கள். அந்த நினைப்பு யாருக்கும் கிடையாது. அதைவிட மிகவும் பிற்போக்கான பகுதியைச் சேர்ந்தவன் நான். பாசன வசதி என்பதே கிடையாது. அங்கிருக்கின்ற விவசாயிகளுக்கெல்லாம் ஐந்து வருடங்களுக்கொருமுறை மழை பெய்தால்கூட அதன் மூலம் கண்மாய்களின் உதவியால் சாகுபடி செய்கிறார்கள். அவர்களும் இப்போதுள்ள புது மசோதாப்படி அதிகமான வரி கொடுக்கவேண்டியதுதான். கனம் மாதவன் அவர்களும் அவர்களுடைய பகுதியைப்பற்றிப்



4th February 1963] [திரு. வெ. ராமையா]

பேசினார்கள். அதிலும் அதிகமான அளவுக்குப் பாசன வசதி கிடையாது. அதே போன்றுதான் திருநெல்வேலி மாவட்டத்தில் சில பகுதிகள், கோயம்புத்தூர் மாவட்டத்தில் சில பகுதிகள், கிழக்கு இராமநாதபுரம் இவைகளையெல்லாம் எடுத்துக்கொண்டால், மழை பெய்யாத காரணத்தால் விவசாயமே கெட்டுவிடக்கூடிய நிலைமைதான் அதிகமாக இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, தஞ்சை ஜில்லாவுக்கு மட்டும் பாதகம் செய்யவேண்டுமென்ற நோக்கமிருப்பதாகச் சொல்வது சரியல்ல. அந்த நோக்கத்தில் இந்த மசோதா வரவும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். கனம் சுப்ரமணியம் அவர்களும் இதை நன்கு உணர்ந்திருப்பார்கள் என்று நினைக்கிறேன். அவர்கள் தெரிவித்தார்கள், பாதுகாப்பு நிதிக்காக 20 லட்சம் ரூபாய் திரட்டிக் கொடுத்திருப்பதாகவும், ஆகவே இதை ஒரு வருடத்திற்குத் தள்ளி வைக்கலாம் என்றும் சொன்னார்கள். சாதாரணமான காலமாக இருந்தால் தள்ளி வைப்பதைப் பற்றி யாசிக்கலாம். ஆனால் இப்போதுள்ள நிலைமையில், மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் போடப்பட்டிருக்கும் திட்டங்கள் எல்லாம் நடந்தாக வேண்டும். இப்போதுள்ள திட்டங்களை எல்லாம் தள்ளிப் போட முடியாது. முக்கியமாகப் பார்த்தால், அரசாங்கத்தில் போடப்பட்டிருக்கும் பல திட்டங்கள் மூலமாக வேறு விவசாய வசதிகள், வாய்ப்புகள் எல்லாம் பெருகுவதன் காரணமாக, இந்த நிலவரியே வேண்டாம் என்று சொல்லுகின்ற சூழ்நிலையும் ஏற்படலாம். அது இந்த வருடத்திலேயே ஏற்படலாம் என்றல்ல, அடுத்த வருடம் என்றல்ல, எத்தனையோ வருடங்கள் ஆகலாம். அதற்குத் தகுந்த சூழ்நிலை ஏற்படவேண்டும். முன்னால் 50 சதவிகிதம் என்றிருந்தது, இப்போது 9 சதவிகிதம் குறைந்திருப்பது, திட்டங்கள் எல்லாம் வளர்ந்ததற்குப்பின் ஒரு சதவிகிதம் என்று ஆகலாம். அந்த நிலைமை ஏற்பட்ட பின்னால் இந்த ஒரு சதவிகிதமே தேவையில்லை, இந்த வரித் தொந்தரவே வேண்டாம் என்றுகூட முடிவு செய்யப்படலாம். அதிகமான அளவில் அதாவது 50 சதமானம் என்று வந்த காலத்தில் தஞ்சை ஜில்லாவுக்கு மட்டும் மெயின்டனன்ஸுக்காக அதாவது பழுது பார்ப்பதற்காக ஆண்டு ஒன்றுக்கு 5 லட்சத்து 36 ஆயிரம் ரூபாய் செலவிடப்பட்டு வந்தது. இப்போது வருடம் ஒன்றுக்கு அந்தப் பகுதியில், அதாவது காவேரி டெல்டா எல்லாப் பகுதிகளுக்கும் சேர்த்து இப்போது 29 லட்சத்து 62 ஆயிரம் ரூபாய் செலவு செய்யப்படுகிறது. இது பழுது பார்க்கப்படும் இனத்தில் மட்டும் செலவு செய்யப்படுகிறது. காவேரி மேட்டூர் பிராஜக்டுக்கு மட்டும் 1936-ல் 1 லட்சத்து 39 ஆயிரம் ரூபாய் செலவிடப்பட்டு வந்தது. இப்போது வருடம் ஒன்றுக்கு 8 லட்சம் ரூபாய் செலவு செய்யப்படுகிறது. அதேபோல் ஒவ்வொரு திட்டத்திற்கும் மராமத்து செய்யப்படுகிற செலவினங்களுக்கான புள்ளி விவரங்கள் இருக்கின்றன. இதைப் பார்க்கும்போது வருஷா வருஷம் எவ்விகிதம் செலவுக்கு அனுமதிப்பது என்று நிதி இலாகாவில் முடிவு செய்திருக்கிறார்கள். அதாவது 1947-48-வது வருஷத்தை அடிப்படையாக வைத்து அப்போதிருந்த செலவிலிருந்து 2 மடங்கு 3 மடங்கு

[திரு. வெ. ராமையா] [4th February 1963

அதிகமாகச் செலவு செய்யலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். ஒரு மடங்கல்ல, இரண்டு மடங்கல்ல, மூன்று, நான்கு மடங்கு அதிகப்படுத்தி அனுமதிக்கலாம் என்று நிதி இலாகா மராமத்து இலாகாவுக்கு அனுமதி கொடுத்திருக்கிறது. அதோடு மட்டுமல்ல, இன்னும் சாதாரணமாக மராமத்து இலாகா பார்வையில் இல்லாத சிறு ஏரிகள், சிறு கால்வாய்கள் இவைகளும் பல இருக்கின்றன. இவற்றிற்கெல்லாம் எத்தனை ரூபாய் செலவு செய்யப்படும் என்கிற புள்ளி விவரங்கள் சரியாக என்னிடம் இப்போது இல்லை என்றாலும், மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சிறு பாசனத் திட்டங்களுக்காக, ஏறத் தாழ எட்டு கோடி ரூபாய் செலவு செய்ய ஒதுக்கப்பட்டிருக்கிறது. இத்தனை எல்லாம் இருந்தாலும் திரு. ராகவ ரெட்டி போன்றவர்கள் இன்னும் எங்களுடைய பகுதியிலுள்ள ஏரிக்கு தூர் எடுக்கவில்லை என்று தான் சொல்லுவார்கள். ஒவ்வொரு அங்கத்தினரிடமிருந்தும் வருகிற பாசன வசதி கோரிக்கைகள் எவ்வளவோ இருக்கின்றன. ஒரு லட்சம், இரண்டு லட்சம் என்று சுமார் பத்துப் பதினைந்து லட்சம் செலவு செய்வதற்கான கோரிக்கைகள் இருக்கின்றன. சிறு பாசனத் திட்டங்களைப் பொறுத்தவரையில் இதனுடைய மராமத்துக்களை பெருக்குவதற்காகத் திட்டங்கள் போட வேண்டும் என்று கனம் அங்கத்தினர் மாதவன் அவர்கள் சொன்னார்கள். அவர்கள் வலியுறுத்திய கருத்து முரணானதாக இருந்தது. பாலாற்றில் மணணை போதும், கல்லணை தேவையில்லை என்ற விதத்தில் குறிப்பிட்டார்கள். ஆனால் அந்த வட்டாரத்திலுள்ள மக்கள் எல்லாம் தண்ணீர் அதிகமாக வந்தாலும் இல்லையென்றாலும், கல்லணை எங்களுக்குத் தேவை என்று சொல்லுகிறார்கள். கனம் அங்கத்தினர் அவர்களுக்கு விவசாயிகளிடத்தில் போதிய அனுபவம் இராது என்று நம்புகிறேன். அந்த முறையில் தான் விவசாயிகளுடைய கோரிக்கையை நிறைவேற்ற வேண்டும் என்ற முறையில் தான் அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக் கொண்டு வருகின்றது. கனம் அங்கத்தினர் அவர்களுடைய பகுதியிலேயே எந்த அளவுக்கு சிறு பாசனத்திற்காக மராமத்து பார்க்கப்பட்டு வருகிறது என்பதை அறிவார்கள் என்று நம்புகிறேன். இராமநாதபுரம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் பல திட்டங்களைப் போட்டு அதற்காகப் பல கோடிக்கணக்கான ரூபாய்களைச் செலவு செய்து வருகிறோம். எந்த விதத்திலும் நம்முடைய உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்று மூன்றாவது திட்டத்தில் நாம் பல வேலைகளை எடுத்துக் கொண்டிருக்கிறோம். தனியாக மைனர் இரிகேஷன் ஸோர்ஸ் எங்கெல்லாம் இருக்கிறதோ அவற்றை யெல்லாம் அதிகப்படுத்துவதற்கு ஏதாவது பொருள் தேவையிருந்தால் அவற்றை எல்லாம் கொடுக்க இந்திய அரசாங்கம் தயாராக இருப்பதாகக் கூறியிருக்கிறார்கள். இப்போதிருக்கக் கூடிய சூழ்நிலையில் இந்த வரி எல்லா விவசாயிகளையும் பாதித்து விட்டதாகப் பலர் நினைக்கிறார்கள். அதோடு மூன்றாவது திட்டத்தில் போடப்பட்டிருக்கும் புதுத் திட்டங்கள் எதுவும் பாதிக்காது. இதன் காரணமாக எந்தவிதமான பாதகமும் ஏற்படாதவாறு



4th February 1963] [திரு. வெ. ராமையா]

அரசாங்கம் பாதுகாத்துக் கொள்ளும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். நிலத்திற்குத் தண்ணீர் வரி கொடுக்கும் விஷயத்தில் நம் ராஜ்யத்தில் பல இடங்களுக்குள் வித்தியாசம் இருக்கிறது. மராமத்து செய்யக்கூடிய விஷயத்தில் சர்க்கார் பல விதிகளையும் வகுத்திருக்கிறார்கள். தஞ்சை ஜில்லாவைப் பொறுத்தவரை மூன்று மடங்கு வரை அதிகமாக மெயின்டனன்ஸ்க்குச் செலவு செய்யலாம் என்று நிதி இலாகா சொல்லியிருக்கிறது. இந்த நிலையில் இன்று இருக்கக்கூடிய முன்னேற்றம் எல்லாம் கணக்கிட்டுப் பார்க்கும்போது தஞ்சை ஜில்லாவிலுள்ளவர்களுக்கு வரியில் சிறிதளவு உயரும். இதற்காக ஏன் இதை எதிர்க்க வேண்டும் என்று தெரியவில்லை. காரணம் அவர்கள் நீண்டகாலமாக எந்தவிதமான வரி உயர்வும் இல்லாமல் வாழ்ந்து கொண்டிருக்கக்கூடியவர்கள். முப்பது வருஷகாலமாக எந்த ரீசெடில்மெண்டும் இல்லாமல் ஒரே நிலையில் இருந்து கொண்டிருப்பது தான் காரணமாய் இருக்கலாம் என்று நினைக்கிறேன். பத்து வருஷத்திற்கு ஒரு முறை ரீ-செட்டில்மெண்ட் நடந்து கொண்டிருந்தது. அப்போதைக்கப்போது, சூழ் நிலைக்கு ஏற்ற முறையில் செட்டில்மெண்ட் செய்யும் காலத்தில் வித்தியாசங்கள் மறைந்துகொண்டு, மாறிக்கொண்டிருந்தது. ஆனால் 30 வருஷங்களாகச் செய்யாமல் இருக்கக் கூடிய நேரத்தில், திட்டங்களால் லாபம் வராவிட்டாலும், நீர்ப்பசான இலாகா தன்னைத் தானே பார்த்துக் கொள்ளும் அளவிலாவது இருக்க வேண்டாமா? அதுவே முடியாது. இன்றைக்கு இருக்கும் புதுத் திட்டங்களை எடுத்துக் கொண்டால், கனம் நிதி அமைச்சர் அவர்கள் சொன்ன பிரகாரம் பார்த்தால், ப்ளஸ்ஸில் இல்லை, மைனஸில் தான் போய்க் கொண்டிருக்கிறது. கண்மாய்களை எடுத்துக் கொண்டால், ஏரிகளை எடுத்துக் கொண்டால், இன்னும் இந்த மாதிரியான சிறு திட்டங்களை எடுத்துக் கொண்டால் ஏராள நஷ்டம் இருக்கிறது. இந்த நஷ்டத்தைப் பொது நிதியிலிருந்து ஏற்றுக் கொண்டாலும், நன்மை அடையக் கூடிய விவசாயிகள் கொஞ்சம் அவர்களுடைய ஆதரவை, உதவியைக் கொடுக்க முன் வரவேண்டும். அதில் எந்த விதமான தயக்கமும் ஏற்படுவதற்கு, மனக் கசப்பு ஏற்படுவதற்குக் காரணம் இல்லை.

**திரு. கே. ஏ. மதியழகன்** : மைனர் இர்ரிகேஷன் அல்லது ஸாயில் கன்சர்வேஷனுக்கு இந்திய சர்க்கார் ஏற்படுத்தியிருக்கிற அடிஷனல் அலாட்மெண்டில் ரூபாய் 30 கோடிக்கு மேல் இருக்கிறது என்று கருதுகிறேன். அதிலே நமக்கு எவ்வளவு கொடுத்திருக்கிறார்கள்?

**கனம் திரு. வெ. ராமையா** : இந்தக் கேள்வியைத் தனியாகத் தான் கேட்க வேண்டும். என்னிடத்தில் இப்போது பதில் இல்லை. நமது பங்கை நாம் விட்டுவிட மாட்டோம் என்று உறுதியாகச் சொல்ல முடியும். அதோடு இன்னும் அதிகமாகவே வாங்க முடியும். நம் மாநிலத்தில் ஏராளமான சிறு திட்டங்கள் இருக்கின்றன. அதை யெல்லாம் அவர்கள் நிச்சயமாக அங்கீகரிப்பார்கள். நமது

[திரு.வெ. வ. ராமைய்யா] [4th February 1963

உரிமைக்கு மேல், நமது பங்குக்கு மேல் நாம் வாங்க முடியும். நம்முடைய அதிகாரிகளெல்லாம் நல்ல முறையில் நடந்து கொண்டிருக்கிறார்கள்.

நான் இவ்வளவு விரிவாகச் சொன்னதற்குக் காரணம், ஏதோ மாகாணத்தில் உள்ள எல்லோரையுமே பாதிக்குமோ என்ற சந்தேகத்தில் பேசி, பாதிக்கப்படாமல் இருக்கக்கூடியவர்களும் குழம்பிப் போகாமல் இருக்கவேண்டும் என்று நினைத்துதான். கனம் தட்சிணாமூர்த்தி கவுண்டர் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். யாருக்கும் கோபம் வேண்டாம். லோயர் பவானித் திட்டத்தில் ஒரு போகத்திற்குத் தண்ணீர் கொடுத்து, அதுவும் 4 மாதங்களுக்குத் தண்ணீர் கொடுத்துவிட்டு, தீர்வை தஞ்சை ஜில்லாவைவிட அதிகமாக இருக்கிறதே, அதைக் குறைக்கக் கூடாதா என்ற விதத்தில் அவர்களுடைய பேச்சின் தன்மை இருந்தது. இதையெல்லாம் ஞாபகத்தில் வைத்து, நெருக்கடியை மனதில் வைத்து, திட்டங்கள் முன்னேற வேண்டும் என்று அந்த நினைப்போடு பார்த்தால் தாங்க முடியாத வரியாக இருக்காது.

கனம் அங்கத்தினர் ஸ்ரீமதி அனந்தநாயகி சென்னை நகரத்திலிருந்து சட்ட சபைக்கு வந்திருந்தாலும், புகுந்த இடத்தில் உள்ள விவசாயம் சம்பந்தமாகப் பேசுவார் என்று எதிர்பார்த்தேன். ஆனால் அந்தப் பிரச்சனையை விட்டு விட்டார்கள். இந்த சமயத்தில் மின்சாரத்தை அதிகமாகப் பெருக்க வேண்டுமென்று சொன்னார்கள். கடம்பத்தூர் பகுதியில் ஏராளமாகப் பம்ப்செட் போட்டுவிட்டார்கள், அதிக லாபம் சம்பாதிக்கிறார்கள் என்று அவர்கள் வாயிலிருந்து வந்ததை நான் மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொள்கிறேன். தண்ணீருக்காக எவ்வளவு கொடுக்கவேண்டும் என்றால் குறைந்த பட்சம் ரூ. 50 கட்ட வேண்டும். அந்த அளவுக்குத் தஞ்சை ஜில்லா விவசாயிக்கு கொடுக்கவேண்டும் என்ற நினைப்பே கிடையாது. இப்போது இருப்பதைவிட கொஞ்சம் அதிகமாகக் கொடுக்கவேண்டும். அதற்கும் உச்ச வரம்பு வைத்திருக்கிறோம். இன்னும் இன்றைக்கு இந்த விவாதத்திலே பங்கு கொண்டவர்கள், கனம் அங்கத்தினர் ஸ்ரீமதி அனந்தநாயகி போல, பல கருத்துக்களை, நேரடியாக சம்பந்தமில்லை என்றாலும் பேசினார்கள். விவசாயிகளுடைய பிரச்சனையைத் தீர்க்க, விவசாயத்திற்கு நல்ல சூழ்நிலையை உண்டு பண்ண முயற்சிகள் எடுத்துக் கொண்டிருக்கிறோம். இன்றைக்கு மட்டுமல்லாமல் ஏற்கனவே இரண்டு தடவைகள் நடந்த விவாதத்தில் பல வித கருத்துக்களைத் தெரிவித்தது குறித்து பொறுக்குக் கமிட்டி அங்கத்தினர்கள் பரிசீலனை செய்து எங்கெங்கே நல்லது முடியுமோ, எங்கெங்கே நல்ல முடிவுகள் செய்ய முடியுமோ, அப்படிச் செய்து அதிகத் தீங்கு யாருக்கும் ஏற்படாமல் இருக்க, இந்த மசோதாவை நல்ல முறையில் ஆராய்ந்து, நல்ல ஒரு மசோதாவாக மீண்டும் இந்தச் சட்ட சபைக்கு வரும் என்று சொல்லிக் கொண்டு எனது உரையை முடித்துக் கொள்கிறேன்.



4th February 1963]

MR. SPEAKER : The question is—

'That the Madras Additional Assessment and Additional Waster Cess Bill, 1963 [L.A. Bill No. 4 of 1963], be referred to a Select Committee consisting of the following 16 Members of the Assembly, viz.—

1. THE HON. SRI M. BHAKTAVATSALAM.
2. THE HON. SRI V. RAMAIAH
3. Sri M. Dhandayudthapani.
4. Sri K. B. Palani.
5. Sri A. R. Subbiah Mudaliar
6. Srimathi Parvathi Arjunan
7. Sri V. Ramanathan.
8. Sri G. Rajaram
9. Sri R. Subramaniam
10. Sri P. Ramachandran.
11. Sri S. Murugaiyan
12. Sri A. Thyagarajan
13. Sri A. Thangavelu
14. Sri K. Cheemaichamy
15. Sri K. Mookiah Thevar
16. Sri A. Swamidhas.

The motion was put and carried.

MR. SPEAKER : Under Rule 99 (1) of the Madras Assembly Rules, I nominate the Hon. Sri V. Ramaiah to be the Chairman of the Select Committee.

The House will now adjourn and meet again at 8 30 a.m. to-morrow. 1-28 p.m.

The House then adjourned.

## VI.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

### A. Statutory Rules and Orders.

89. *Notifications issued with G.O. Ms. No. 6294, Industries, Labour and Co-operation (Labour), dated 26th December 1963 regarding appointment of Statutory Authorities under the Madras Beedi Industrial Premises (Regulation of Conditions of Work) Act, 1958, in respect of the added territories and application of payments of Wages Act to Beedi Industrial Premises [Laid on the Table of the House under section 41 (3) of the Madras Beedi Industrial Premises (Regulation of Conditions of Work) Act, 1958 (Madras Act XXXII of 1958).]*

### B. Reports, Notifications and other papers.

*Nil.*

LIBRARIAN, SECRETARIAT LIBRARY
11 JUN

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

**Tuesday, 5th February 1963.**

The House met in the Assembly Chamber, Fort St. George, at half-past eight of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

## I.—QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS.

* 56 Q.—SRI T. P. ALAGAMUTHU (on behalf of Sri S. MADHAVAN): Will the Hon. the Minister for Industries be pleased to state whether it is a fact that the deposits of graphite are found near Poovandhi village near Manamadurai in Ramanathapuram district?

THE HON. SRI R. VENKATARAMAN: Graphite bearing rocks have been noticed by the State Geological Branch, 2 miles east of Poovandhi. These rocks can be traced over a length of about one mile on an East-West line near Kiranur and Cholthampatti hamlets. However, the mineral is reported to be hard and occurs as small disseminated crystals which are difficult to separate from the other constituents of the rock.

*திரு. கரு. சீமைச்சாமி:* பத்து ஆண்டுகளுக்கு முன்பாக ஒரு ஜியலாஜிகல் சர்வே ஆபீசர் பூவந்தி கிராமத்தில் ஆராய்ச்சி செய்து 15 மைல் விஸ்தீரணத்திற்கு கிராஃபைட் இருப்பதாக சிபார்சு செய்திருக்கிறார்கள். அந்த அளவிற்கு இருந்தால் அங்கே ஒரு தொழிற்சாலை ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் முன்வருமா?

*கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:* அங்கு கிராஃபைட் தொழிற்சாலை ஆரம்பிப்பதைக் கைவிட்டுவிட்டார்கள். காரணம் என்னவென்றால் அந்த கிராஃபைட்டை பாறைகளில் இருந்து பிரித்தெடுப்பது மிகவும் கஷ்டமாக இருக்கிறது.

*திரு. கரு. சீமைச்சாமி:* அந்தப் பாறையில் எந்தவிதமான கலப்படமும் இல்லாமல் பூராவும் ஜிப்சமாகக் கிடைக்கிறது என்பதை கனம் அமைச்சர் அவர்களே அதை நேரிலே பார்த்துத் தெரிந்துகொள்ளலாம். அடுத்த தடவை நான் சென்னைக்கு வரும் பொழுது அதைக் கொண்டுவந்து அமைச்சர் அவர்களுக்குக் காண்பிக்கிறேன். அதற்குமேல் அதை மீண்டும் பரிசீலனை செய்வதற்கு ஏற்பாடு செய்வார்களா?

*கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:* மூலக் கேள்வி கிராஃபைட்டைப் பற்றியது. கனம் அங்கத்தினர் கூறுவது ஜிப்சத்தைப் பற்றியது. இதற்குத் தனிக் கேள்வி போட வேண்டும்.

[5th February 1963

திரு. ஆ. கு. சுப்பையா : வேறு மாவட்டங்களிலும் இம்மாதிரி ஆராய்ச்சி நடைபெற்று வருகின்றனவா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : சென்னை ராஜ்யத்தில் தனியாக ஒரு ஜியலாஜிகல் சர்வே அமைக்கப்பட்டிருக்கிறது. இதைத் தவிர அகில இந்திய ஜியலாஜிகல் சர்வே வேறு இருக்கிறது. அவைகளும் ஆராய்ச்சி செய்து வருகின்றன.

திரு. ஜே. மாதா கவுடர் : மாநிலம் பூராவும் இருக்கும் தாதுப் பொருள்களைப்பற்றி இதற்கு முன் ஆராய்ந்திருந்தால், கனம் அங்கத்தினர்கள் எந்தெந்தப் பொருள்கள் எங்கெங்கே இருக்கின்றன என்பதைத் தெரிந்து கொள்வதற்காக கனம் அமைச்சர் அவர்கள் அந்த ரிப்போர்ட்டை இந்தச் சபை முன் வைப்பார்களா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கனம் அங்கத்தினர் லைப்ரரிக்குச் சென்று பார்த்தால், அங்கே எல்லா ஜியலாஜிகல் சர்வே ரிப்போர்ட்டுகளும் வைக்கப்பட்டிருக்கின்றன என்பது தெரிய வரும். நம்முடைய ராஜ்யத்தில் தலைசிறந்த ஜியலாஜிகல் எக்ஸ்பர்ட்டான திரு. என். கெ. என். அய்யங்கார் அவர்கள் ஓய்வு பெற இருக்கிறார். அவர் ஓய்வு பெறுவதற்கு முன்னால் அவருடைய நீண்டகால அனுபவத்தைக் கொண்டு என்னென்ன கனிப்பொருள்கள் எங்கெங்கே நம் ராஜ்யத்தில் கிடைக்கின்றன என்பதைப்பற்றி விஸ்தாரமாக ஒரு புஸ்தகம் எழுதிக்கொடுக்கும்படி கேட்டிருக்கிறேன். அது வெகு சீக்கிரத்தில் வெளிவரும் என்று நம்புகிறேன்.

*Municipal Councillors (tenure of office)*

* 63 Q.—SRI A. K. SUBBIAH (on behalf of Sri M. KALYANASUNDARAM): Will the Hon. the Minister for Municipal Administration be pleased to state—

(a) whether there is any proposal to fix the tenure of office of the Municipal Councillors as five years; and

(b) if so, when a final decision will be taken in the matter?

THE HON. SRI S. M. A. MAJID : (a) & (b) Yes; the question is still under the consideration of the Government.

(அ) & (இ) ஆம். இந்தப் பிரேரணை அரசாங்கத்தின் பரிசிலனையில் இருக்கிறது.

திரு. முனு. ஆதி : முனிசிபாலிட்டிக்கும் பஞ்சாயத்திற்கும் தலைவர்களை இனிமேலாவது நேரடியாகத் தேர்ந்தெடுப்பதற்கு அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : என்னிடம் தகவல் இல்லை. இதற்குத் தனிக்கேள்வி போடவேண்டும்.

திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நகராட்சி மன்றத் தேர்தலை சீக்கிரத்தில் நடத்த அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா?



5th February 1963]

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : நெருக்கடி நிலைமை காரணமாக எல்லாத் தேர்தல்களும் ஒத்திவைக்கப்பட்டிருக்கின்றன என்பது எதிர்க்கட்சித் தலைவருக்குத் தெரியும் என்று நம்புகிறேன்.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : தேர்தல் நடத்துவதற்கு இன்னும் 5, 6, மாதங்கள் இருப்பதால், சட்டத்தைத் திருத்தி அங்கத்தினர்களின் பதவிகளை 5 ஆண்டுகளுக்கு நீடிப்பதற்கு அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : ஐந்து ஆண்டுகளுக்கு நீடிக்க வேண்டும் என்பது பரிசிலனையில் இருக்கிறது என்று சொன்னேன். முன்னால் லோக்கல் அட்மினிஸ்ட்ரேஷன் வெள்ளை அறிக்கையில் சிபார்சு செய்யப்பட்டிருந்தது. பின்பு லெஜிஸ்லேச்சர் கமிட்டி அது அவசியம் இல்லை என்று கூறியது. இப்போது திட்டவட்டமான முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை.

திரு. டி. கார்ச்சா கவுடர் : நகராட்சி மன்றத் தேர்தல்களை 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடத்துவதை ஒத்தி வைத்திருப்பதாக கனம் அமைச்சர் அவர்கள் கூறினாரே, அதுமாதிரி பஞ்சாயத்து யூனியன் தலைவர் பதவியையும் ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை தேர்ந்தெடுக்க அரசாங்கம் யோசிக்குமா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : இப்பொழுது பஞ்சாயத்து யூனியன் தலைவர்களின் தேர்தல் 5 வருஷத்திற்கு ஒரு முறைதான் இருந்து வருகிறது. அதேபோல் மாநகராட்சி அங்கத்தினர்கள் பதவிக் காலத்தை 5 ஆண்டுகளுக்கு நீடிக்கலாமா என்பதுதான் இப்போதுள்ள கேள்வி.

திரு. கரு. சீமைச்சாமி : இப்போதுள்ள நெருக்கடி நிலைமை நீடித்துக்கொண்டே போனால் அதுவரைக்கும் இந்தத் தேர்தல்கள் ஒத்திப் போடப்படுமா அல்லது ஒரு சில மாதங்களில் தேர்தல்களை நடத்த அரசாங்கம் யோசிக்குமா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : தாயே பேராபத்தில் இருக்கும் போது குழந்தையைப் பற்றி நினைப்பதற்கு இதுவா தருணம் என்று எனக்குப் புரிந்துகொள்ள முடியவில்லை.

திரு. ஜே. மாதா கவுடர் : அடுத்த நகராட்சித் தேர்தல் ஐந்தாண்டுகளில் நடக்குமா அல்லது மூன்று ஆண்டுகளில் நடக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : பரிசிலனையில் இருக்கிறது என்று சொன்னேன். எப்போது நடக்கும் என்று திட்டவட்டமாகச் சொல்வதற்கில்லை.

திரு. ர. ஜீவரத்னம் : நகரசபை வார்டுகள் 10 வருஷத்திற்கு முன்பு பிரிக்கப்பட்டது என்ற காரணத்தினால் பல நகரசபை வார்டுகளைப் பிரிக்கும் விஷயத்தில் பல தகராறுகள் ஏற்பட

[[illegible] February [illegible]

[illegible], அந்த தேர்தல் நடப்பதற்கு முன் தக்சமய வார்டு களைத் திட்டவட்டமாக நிர்ணயிப்பதற்கு அரசாங்கம் உத்தேசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: ஏற்கனவே இந்தத் தேர்தல் நடக்க இருந்ததால் ரீ டிஸ்ட்ரிப்யூஷன் ஆப் வார்ட்ஸ் செய்ய முடியாத நிலைமை இருந்தது. அதோடு 1961-ல் சென்ஸஸ் நடைபெற்றதனால் பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்று ஒத்திபோடப் பட்டது. இப்போதுள்ள நெருக்கடி நிலைமையை உத்தேசித்து ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: தேர்தல் கமிஷன் இடைத் தேர்தல்கள் நடத்தலாம் என்று சொல்லியிருக்கும்போது, அரசாங்கம் இந்தத் தேர்தல்களையும் நடத்துவதற்கு உத்தேசம் உண்டா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: தேர்தல் கமிஷன் இடைத் தேர்தலைப்பற்றித் தான் கூறுகிறது.

### எக்ஸ்பிரஸ் பஸ்கள் (வருமானம்)

* 64 கேள்வி.—திரு. முனு ஆதி: கனம் கைத்தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1960, 1961 ஆண்டுகளில் நீண்ட தூர எக்ஸ்பிரஸ் பஸ்கள் மூலம் அரசாங்கத்துக்குக் கிடைத்த தொகை எவ்வளவு?

(இ) இவ்வாறு எக்ஸ்பிரஸ் பஸ்கள் விடுவதால் ஆன செலவு எவ்வளவு?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:

(அ) & (இ)

| வருடம் | வரவு | செலவு |
|---|---|---|
| 1960 | ரூ. 4,36,004.88 | ரூ. 3,70,922.82 ந.பை. |
| 1961 | ரூ. 13,09,275.38 | ரூ. 11,39,814.34 ந.பை. |

திரு. ஆ. கு. சுப்பையா: கனம் அமைச்சர் அவர்கள் வருமானத்தையும் செலவையும் சொல்லுகிறபோது லாபம் அதிகமாக வருகிறது என்று தெரிகிறது. ஆகவே அரசாங்கம் இன்னும் அதிகமான பஸ்களை விடுவதற்கு யோசிக்குமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: படிப்படியாக நீண்ட தூர பஸ்களை அதிகமாக்க வேண்டுமென்பது சர்க்காரின் கொள்கை. இது நிதி வசதியைப் பொறுத்து செய்யப்படும்.

திரு. கரு. சிமைச்சாமி: சாதாரணமாக தனியார் துறையில் நடத்தப்படும் பஸ்களில் வரும் லாபத்தைவிட சர்க்காரால் நடத்தப்படும் பஸ்களில் வரும் லாபம் மிகக் குறைவு என்பது சர்க்காருக்குத் தெரியுமா?



[illegible] February [illegible]]

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: கனம் அங்கத்தினர் சொல்வது சரியல்ல. முற்றிலும் தவறு.

திரு. து. ப. அழகமுத்து: எக்ஸ்பிரஸ் பஸ்களில் ஒவ்வொரு பஸ்ஸிலும் கலெக்ஷன் பெர்செண்டேஜ் சொல்ல முடியுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: ஒரு பஸ்ஸுக்கு எவ்வளவு என்று கணக்குப் போட முடியாது. மைலுக்கு எவ்வளவு வருமானம் என்பதைக் கணக்குப் போட்டு வைத்திருக்கிறோம். 1960-ல் எக்ஸ்பிரஸ் பஸ் மூலம் ஒரு மைலுக்கு வருமானம் 108 நயா பைசா, செலவு 92 நயா பைசா. 1961-ல் மைலுக்கு வருமானம் 121 நயா பைசா, செலவு 105 நயா பைசா.

திரு. ஜே. மாதா கவுடர்: இப்பொழுது 120 மைலுக்கு மேலாக உள்ள மார்க்கங்களில் சர்க்கார் பஸ் விடுவது என்ற கொள்கையை வைத்துக் கொண்டிருக்கிறோம். எழுபத்தைந்து மைல்களுக்கு மேலுள்ள ரூட்களிலும் சர்க்கார் பஸ்கள் விடுவதற்கு ஏதாவது ஏற்பாடு செய்ய முடியுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: முதலில் எடுத்த காரியத்தைச் செய்து முடிப்போம். அதற்குப் பிறகு விஸ்தரிப்பது பற்றி யோசிக்கலாம்.

திரு. ம. கமலநாதன்: அரசாங்கம் விடும் பஸ்களில் கட்டணம் அதிகமாக இருப்பதனால், மக்கள் கோயம்புத்தூருக்கு நேரடியாக அதிகமான அளவுக்குப் பிரயாணம் செய்யவில்லை என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா? உதாரணமாக, கிருஷ்ணகிரிக்கு அரசாங்க பஸ்ஸில் ரூ. 7¾ கட்டணம் கொடுக்கிறோம். தனியார் நடத்தும் எக்ஸ்பிரஸ் பஸ்ஸுக்குக் கட்டணம் ரூ. 6 தான். ஆகையால் கட்டணத்தைக் குறைக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இன்றைக்குக் கட்டணம் குறைக்கப்படாமல் இருக்கும்பொழுதே அரசாங்க பஸ்ஸில் எல்லோரையும் ஏற்றிக்கொள்ள முடியவில்லை என்ற குறை ஏராளமாக வந்திருக்கிறது. ஆதலால் குறைவான கட்டணம் ரூ. 6 கொடுத்து சுலபமாகப் பிரயாணம் செய்ய விரும்புகிறவர்கள் தனியார் வண்டியில் போகட்டும். ரூ. 7¾ கொடுத்துப் போக வேண்டும் என்று நினைக்கிறவர்கள் அரசாங்க வண்டியில் போனால் போதும்.

திரு. வை. சங்கரன்: அரசாங்கம் நீண்ட தூர பஸ்கள் விடுவது 'பிரைவேட் எண்டர்பிரைஸோடு' கம்பேர் செய்தால், 'பேவரபிள்'-ஆக இருக்கிறதா? இல்லையென்றால், அதற்குக் காரணம் என்ன?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இதைக் 'கம்பேர்' செய்ய முடியாது. 'கம்பேர்' செய்வதற்கு எந்த விதமான புள்ளி விவரங்களும் சர்க்காரிடத்தில் கிடையாது. கனம் அங்கத்தினர்

அவர்கள் தயாரித்துக் கொடுத்தால், நாங்களும் எங்களுடைய புள்ளிவிவரங்களைக் கொடுக்கிறோம். இரண்டையும் அவர்கள் பார்த்து 'கம்பேர்' செய்துகொள்ளலாம்.

கோழி முட்டை விநியோகம் (சென்னை)

* 56 கேள்வி.—திரு. நா. ப. செங்கோட்டுவேலு : கனம் விவசாய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

சென்னை நகரத்தில் கோழிமுட்டைத் தேவை எவ்வாறு ஈடு கட்டப்படுகிறது?

கனம் திரு. பூ. கக்கன் : கேரள மாகாணத்திலுள்ள கீழ்கண்ட இடங்களிலிருந்து தற்போது ஒவ்வொரு கூடையிலும் 300 முட்டைகள் கொண்ட சுமார் 200 கூடைகள் சென்னை நகரத்திற்கு தினசரி வந்து சேருகின்றன:—

(1) திருவனந்தபுரம்
(2) கொல்லம்
(3) காயங்குளம்
(4) எர்ணாகுளம்
(5) மங்காம்லு
(0) சங்கனாசேரி

மற்றும் தினசரி மூன்று அல்லது நான்கு கூடைகள் நிறைய திருத்தணியிலிருந்தும், நகரியிலிருந்தும் சென்னைக்கு முட்டை வந்து சேருகின்றன. இவைகள் நகரின் தேவைக்கு போதுமானதாயிருக்கின்றன.

About 200 baskets (each basket containing 300 eggs) are being received from the following places in Kerala :—

(i) Trivandrum
(ii) Quilon
(iii) Kayankulam
(iv) Ernakulam
(v) Mangamlu
(vi) Chenganachery.

About 3 to 4 baskets of eggs per day are also received in the city from Thiruthani and Nagari. The supply position is adequate now.

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : Sir, question No. 65 has not been answered.

MR. SPEAKER : Since the Hon. Minister for Agriculture has already answered question No. 66, I will now allow supplementaries on it and then take up question No. 65.





திரு. நா. ப. செங்கோட்டுவேலு : வேறு மாநிலங்களிலிருந்து முட்டைகளைத் தருவிப்பதைவிட, நமது மாநிலத்திலேயே அதிகமாக உற்பத்தி செய்ய சர்க்கார் முயற்சி எடுத்துக்கொள்ளுமா?

கனம் திரு. பூ. கக்கன் : அரசாங்கம் அம்மாதிரி முயற்சி எடுத்திருக்கிறது. இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களில் 28 பௌல்டிரி சென்டர்கள் ஏற்படுத்தி, அதற்காக அதிகமாகச் செலவு செய்திருக்கிறோம். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இட்டத்தட்ட ரூ. 42 லட்சம் செலவு செய்ய வேண்டுமென்று திட்டமிட்டிருக்கிறோம். 20 பௌல்டிரி சென்டர்கள் திறக்க வேண்டுமென்று நாம் திட்டம் போட்டு, இப்பொழுது 16 திறக்கப்பட்டுவிட்டது. 1963-64-ல் 4 சென்டர்கள் திறக்கப்படும்.

திரு. ர. ஜீவரத்னம் : சென்னை நகரத்திற்கு மட்டும் முட்டை தருவிப்பது பற்றி கனம் அமைச்சர் அவர்கள் கூறினார்கள். வேலூர் நகரத்திற்கு எங்கிருந்து முட்டைகள் வருகின்றன என்பது பற்றி கனம் அமைச்சர் அவர்கள் விவரம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : அதுபற்றி தனியாகக் கேள்வி போட வேண்டும்.

திரு. ராம. அரங்கண்ணல் : சென்னை நகரத்திற்குப் போதிய கோழிப் பண்ணைகள் ஏற்படுத்தும் உத்தேசம் உண்டா?

கனம் திரு. பூ. கக்கன் : இது பற்றி அரசாங்கம் பிரயத்தனம் செய்து வருகிறது. அதுவும் யுத்த காலத்தை முன்னிட்டு, கோழி முட்டையும் கோழிக் கறியும் கிடைப்பதற்குத் தக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று கருதி, மத்திய சர்க்காருக்கு, 'இண்டியன் கவுன்சில் ஆப் அக்ரிகல்சரல் ரிஸர்ச்' ஸ்தாபனத்திற்கு நாங்கள் திட்டம் அனுப்பியிருக்கிறோம். அவர்களுடைய அனுமதியை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

திரு. து. ப. அழகமுத்து : அரசாங்க உதவியுடன் கிராமாந்திரங்களில் நடத்தப்படும் கோழிப் பண்ணைகளிலிருந்து நகர்ப்புறத்திற்கு முட்டைகள் வருகின்றனவா?

கனம் திரு. பூ. கக்கன் : நகர்ப்புறத்திற்கு வருவதென்றால் நிறைய முட்டைகள் இருந்தால்தான் கூடையில் வைத்து அனுப்ப முடியும். ஒரு சில முட்டைகள் இருந்தால் அது ஆங்காங்கே விற்பனையாகிவிடுகிறது.

திரு. ஜே. மாதா கவுடர் : ஆவடிக்குப் பக்கத்தில் சர்க்கார் கோழிப் பண்ணை ஒன்று இருக்கிறது. அதை விஸ்தரிப்பதற்கு நல்ல வாய்ப்பு இருக்கிறது. ஆனால் அங்கு குடிதண்ணீர் வசதியில்லாமல் இருக்கிறது. அதைப் பரிசீலனை செய்து அந்த

[illegible]யையும் ஏற்படுத்தி, அந்தக் கோழிப் பண்ணையை விஸ்த ரித்து அதன் மூலம் நகரத்திற்கு அதிகமான கோழி முட்டைகள் கிடைப்பதற்கு வாய்ப்பு ஏற்படுத்த அரசாங்கம் முன்வருமா ?

**கனம் திரு. பூ. கக்கன்** : நான் முன்பு சொன்னபடி யுத்த காலத்தை முன்னிட்டு தக்க ஏற்பாடு செய்வதற்கு, கோழி முட்டைகள் கோழிக் கறி கிடைப்பதற்கு கோழி வளர்ப்புத் திட்டத்தைக் கொண்டுவர 'இண்டியன் கவுன்சில் ஆப் அக்ரிகல்சர் அண்டு ரிஸர்ச்'-க்கு எழுதியிருக்கிறோம். அலமாதி என்ற இடத்தை கனம் அங்கத்தினர் குறிப்பிடுகிறார் என்று நினைக்கிறேன்.

**திரு. ம. கமலநாதன்** : பஞ்சாயத்து யூனியன் பாதி விலைக்குச் சேவல்களைக் கொடுப்பது மாதிரி, கோழிகள் கொடுத்து முட்டைகளை அதிகமாகப் பெறுவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

**கனம் திரு. பூ. கக்கன்** : கிராமாந்திரங்களில் இருக்கிற கிராமக் கோழிகள் நல்ல தரமுள்ள குஞ்சுகள் பொரிப்பதற்கு நல்ல சேவல்களைக் கொடுத்து உதவ ஏற்பாடு செய்திருக்கிறோம். கோழிப் பண்ணைகள் இருக்கிற இடத்திலே கோழிகளை சகஜ விலைக்கு, நியாயமான விலைக்கு விற்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்திருக்கிறது.

**திரு. ர. ஜீவரத்னம்** : முட்டையில் உணவு சத்து அதிகமாக இருப்பதால் ஒவ்வொரு நகரத்திலும் கோழிப் பண்ணையை ஏற்படுத்தி, அந்த நகரத்திற்கு வேண்டிய முட்டைகளை அந்தந்த பகுதிகளே பூர்த்தி செய்துகொள்ளும்படி ஏற்பாடு செய்ய சர்க்கார் முன்வருமா ?

**கனம் திரு. பூ. கக்கன்** : நகரங்களுக்கு மட்டுமல்ல, எல்லா கிராமங்களிலும் கூட கோழி வளர்ப்பதன் மூலம் மக்களுக்கு சத்துள்ள உணவு கிடைப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்து வருகிறது.

**திரு. ஆ. தங்கவேலு** : பஞ்சாயத்து யூனியன்களால் நடத்தப் படும் கோழிப் பண்ணைகள் லாபகரமாக இல்லை என்று கருதி பஞ்சாயத்து யூனியன்கள் அவைகளை மூடிவிடத் திட்டம் போட்டு வருவது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

**கனம் திரு. பூ. கக்கன்** : ஏதோ 5 கோழி, 6 கோழிகளை வளர்த்துவிட்டு லாபம் இல்லை என்று சொல்ல முடியாது. நிறைய கோழிகளை வைத்துக்கொண்டு நடத்திப் பார்க்க வேண்டும்.

**திரு. எஸ். நஞ்சுண்ட ராவ்** : கிராமத் தொண்டர் படை அங்கத் [illegible]களும், அரசாங்கமும் கோழிப் பண்ணைகளை ஆரம்பித்து நல்ல முறையிலே லாபம் சம்பாதிக்கிற அளவுக்குச் சர்க்கார் புதுத் [illegible] கொண்டு வருமா ?



**கனம் திரு. பூ. கக்கன்** : அவர்களும் இம்மாதிரி கோழிகள் வளர்ப்பதற்கு முயற்சி செய்து, கூட்டுறவுச் சங்கம் அமைப்பதற்கு ஏற்பாடு செய்து, அரசாங்கத்திற்குத் தெரிவிக்கும் பட்சத்தில், அதுபற்றி கவனிக்கப்படும்.

**திரு. செ. கோ. விஸ்வநாதன்** : சைதாப்பேட்டை கோழிப் பண்ணையில் இருக்கிற நிர்வாகிகள் பொது மக்களுடன் நல்ல முறையில் ஒத்துழைப்பதில்லை என்று சர்க்காருக்குக் குறைபாடுகள் வந்துள்ளனவா ?

**கனம் திரு. பூ. கக்கன்** : அவ்வாறு குறைபாடு ஒன்றும் அரசாங்கத்திற்கு வரவில்லை. நான் ஒரு நாள் திடீரென்று இந்தக் கோழிப் பண்ணையைப் போய் பார்வையிட்டேன். அதிகாரிகள் நல்ல முறையில் சிறப்பாக அந்தக் கோழிப் பண்ணையை நடத்தி வருகிறார்கள்.

**திரு. பி. பழனிப் பிள்ளை** : கிராமங்களிலுள்ள கோழிப்பண்ணை களில் முட்டைகள் வாங்கினால், முட்டைகளை ஓட்டை போட்டுக் கொடுக்கிறார்களே ? அதைத் தடுப்பதற்கு அரசாங்கம் முன் வருமா ?

**கனம் திரு. பூ கக்கன்** : அரசாங்கத்திற்கு அம்மாதிரி தகவல் ஒன்றும் கிடையாது.

**திரு. கி. இரா. சம்பந்தம்** : மில்க் சப்ளை யூனிட் மாதிரி 'எக் சப்ளை யூனிட்' ஒவ்வொரு இடத்திலும் அமைத்து நடத்துவதற்கு சர்க்கார் முன்வருமா ?

**கனம் திரு. பூ. கக்கன்** : இப்பொழுதுதான் திட்டம் போட்டுக் கோழிப் பண்ணைகளை அதிகமாக ஏற்படுத்துவதற்கு ஏற்பாடு செய்து வருகிறோம். நிறைய முட்டைகள் கிடைக்கும்பொழுது, அம்மாதிரி 'எக் சப்ளை யூனிட்' ஏற்படுத்துவது பற்றி யோசிக்கலாம்.

*Wild animals (sanctuaries)*

* 65 *Q*.—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) whether the Government have any proposal to start new sanctuaries for wild animals in 1962; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR : (*a*) & (*b*) No.

**திரு. வை. சங்கரன்** : முதுமலையைத் தவிர வேறு ஏதாவது வனவிலங்குகளின் சரணாலயம் நம்முடைய மாநிலத்தில் இருக்கிறதா ? அப்படியில்லை என்றால், மேற்கொண்டு இதுபோன்ற அமைப்பு தேவை என்பதை உணர்ந்து, இம்மாதிரி சரணாலயங்களை அதிகமாக ஆரம்பிப்பது பற்றி சர்க்கார் உத்தேசிக்குமா ?

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார்:** இப்பொழுது 3 சரணாலயங்கள் இருக்கின்றன. ஒன்று வேடந்தாங்கலில் பறவைகளுக்காக இருக்கிறது. வனவிலங்குகளுக்கான சரணாலயம் முதுமலையில் ஒன்றும், முண்டந்துறையில் ஒன்றும் இருக்கிறது.

**திரு. ஆ. கு. சுப்பையா:** வேதாரண்ய கோடியக் காடுகளில் வன விலங்குகள் இருக்கின்றன. அங்கு சரணாலயம் ஒன்றை ஆரம்பிப்பது பற்றி அரசாங்கம் ஆலோசனை செய்யுமா?

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார்:** அங்கு ஒன்று ஏற்படுத்த வேண்டுமென்றுதான் அரசாங்கத்திலே திட்டம் வகுத்திருந்தோம். அதிலே பல மாதிரியான நிலங்கள் இருக்கின்றன. காட்டிலாகாவைச் சேர்ந்த நிலம், கோயிலுக்குச் சொந்தமான நிலம், தனியார்களுக்குச் சொந்தமான நிலம் இவையெல்லாவற்றையும் ஒன்றாகச் சேர்த்து, காட்டிலாகாவின் கீழ்க் கொண்டுவர வேண்டும் என்று கலெக்டருக்கு எழுதப்பட்டிருக்கிறது. கலெக்டரிடமிருந்து பதில் இன்னும் எதிர்பார்க்கப்படுகிறது.

**திரு. செ. கோ. விஸ்வநாதன்:** வேடந்தாங்கலிலுள்ள பறவைகள் சரணாலயத்திற்கு வந்து பார்க்கும் பிரயாணிகள் தங்குவதற்கு வசதியான கட்டட வசதியும், தூரத்திலிருந்து பறவைகளைப் பார்க்க வேண்டிய வசதிகளையும் அரசாங்கம் செய்ய முன்வருமா?

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார்:** அதெல்லாம் கட்டிக் கொடுக்கப்பட வேண்டும் என்பதுதான் அரசாங்கத்தின் திட்டம். ஆனால், இப்பொழுதுள்ள நெருக்கடியின் காரணமாகக் காரியங்கள் சற்று தாமதமாக நடக்கின்றன.

**திரு. டி. கார்ச்சா கவுடர்:** முதுமலை வன விலங்கு சரணாலயத்தைப் பார்க்கச் செல்லுகிறவர்கள் சில சமயங்களில் துப்பாக்கி கொண்டுச் சுடுவதாக அரசாங்கத்திற்கு ஏதாவது புகார்கள் வந்திருக்கின்றனவா? தயவு செய்து அதைத் தடுக்க ஏதாவது நடவடிக்கை எடுக்கப்படுமா?

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார்:** அப்படியொன்றும் அரசாங்கத்திற்குத் தகவல் இல்லை.

**திரு. க. தா. பெருமாள் ராஜு:** தாளவாடி மலைப் பிரதேசங்களில் மரங்களை வெட்டி, கரிசுட்டு வியாபாரம் செய்கிறார்கள் என்பது சர்க்காருக்குத் தெரியுமா?

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார்:** இதற்குத் தனிக் கேள்வி வேண்டும்.

**திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, புலி சிங்கம் போன்ற முக்கிய வன விலங்குகளை வளர்ப்பதற்கான முறையில் காடுகள் ஏதேனும் ஒதுக்கப்பட்டிருக்கின்றனவா? அப்படி ஒதுக்கப்பட்டிருந்தால், எந்தெந்தக் காடுகள் அவ்வாறு ஒதுக்கப்பட்டிருக்கின்றன? அங்கு எத்தனை விலங்குகள் வைக்கப்பட்டிருக்கின்றன?



**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார்:** புலிக்கு பாபநாசம்-முண்டந்துறை என்கிற இடத்தில் பாதுகாப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. சிங்கம் நமது தென் ராஜ்யங்களில் இல்லை என்பதை கனம் அங்கத்தினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

**திருமதி சி. குழந்தையம்மாள்:** தலைவர் அவர்களே, இலக்கியங்களில் கண்டுள்ள அன்னத்தைப் பற்றி கனம் அமைச்சர் அவர்கள் ஆராய்ச்சி செய்து, பறவைகள் சரணாலயத்திலோ அல்லது வேறு கண்காட்சிச்சாலைகளிலோ அவைகளை வைக்க ஏற்பாடு செய்வார்களா?

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார்:** வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயத்தில் அன்னத்தைத் தவிர மற்ற பறவைகள் வருவதாகத்தான் தெரிகிறது. அன்னங்கள் மறைந்து கொண்டே வருவதால், அவற்றைப் பார்க்க முடிவதில்லை என்று நான் நினைக்கிறேன்.

**கனம் சபாநாயகர்:** இலக்கியப் புத்தகங்களில் அன்னங்களைப் பற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. இலக்கிய அன்னங்களை சர்க்கார் பாதுகாத்து வைத்திருக்கிறார்கள். (சிரிப்பு).

**திரு. மா. இராசாங்கம்:** வன விலங்கினங்களில் புள்ளி மான்கள் இனம் குறைந்து, அறவே காணப்படாமலிருப்பதற்குக் காரணம் என்ன?

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார்:** புள்ளி மான்கள் ஏராளமாக இருக்கின்றன. கிண்டி ராஜ் பவனத்தில் கூட ஏராளமான புள்ளி மான்கள் இருக்கின்றன. கோடிக்கரைப் பகுதியிலும் அவை ஏராளமாக இருக்கின்றன.

**திரு. வை. சங்கரன்:** கனம் அமைச்சர் அவர்கள், 'மனிதர்களைக் கண்டால் அன்னம் மறைந்துகொள்ளும்' என்று சொல்கிறார்கள். மாதர்களை அன்னங்களுக்கு ஒப்பிடுகிறார்களே, அது ஏன் என்று அமைச்சர் அவர்கள் சொல்வார்களா? (சிரிப்பு.)

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார்:** அதைப் பற்றிச் சொல்வதற்கு எனக்கு அவ்வளவாகப் பழக்கம் போதாது. (சிரிப்பு.)

**திரு. டி. கார்ச்சா கவுடர்:** இந்தியாவின் மற்ற பாகங்களில் இருந்து கிர் ஜாதி சிங்கங்களைக் கொண்டு வந்து சென்னை மாநிலக் காடுகளில் வைப்பதற்குத் திட்டம் ஏதாவது அரசாங்கத்தில் இருக்கிறதா?

**திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார்:** சிங்கத்தைக் கூடக் கொண்டுவருவதாகத்தான் இருந்தது. இப்பொழுதுள்ள நெருக்கடி நிலைமையின் காரணமாக, செலவைக் குறைக்கவேண்டும் என்பதற்காக தற்சமயம் நிறுத்தி வைத்திருக்கிறோம்.

திரு. முனு. ஆதி: இதர மாநிலங்களில் உள்ள காடுகளில் அருமையான எல்லா மிருகங்களும் இருக்கின்றன. ஆனால், நம்முடைய சென்னை மாநிலத்தில் நல்ல மிருகங்கள் இல்லாததால், மேலை நாடுகளிலிருந்து அவைகளைத் தருவித்து நம்முடைய காடுகளில் வைப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார்: நமது காடுகளிலும் அனேகமாக எல்லா மிருகங்களும் இருக்கின்றன. சிங்கம் ஒன்று தான் இல்லை என்று தெரிகிறது. சிங்கம் ஒன்றைத் தவிர, அனேகமாக மற்ற எல்லா மிருகங்களும் நம்முடைய மாநிலக் காடுகளிலும் நல்ல முறையில் இருந்து கொண்டிருக்கின்றன.

திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர்: தலைவர் அவர்களே, முயல் என்னும் வன விலங்கும் பாதுகாக்கப்பட வேண்டிய இனங்களில் சேர்க்கப்பட்டிருக்கிறதா? அப்படியானால், முயல் வேட்டையைத் தடுக்க ஏதாவது நடவடிக்கை எடுக்க உத்தேசம் உண்டா?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார்: 'சாங்ச்சுவரி' என்று சொன்னால், முயலாக இருந்தாலுங் கூட, அதைச் சுடக் கூடாது என்பதுதான் திட்டம்.

*Government Hospital (Palacode)*

* 67 Q.—SRI R. S. VEERAPPA CHETTIAR: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether there is any proposal for increasing the number of beds in the Palacode Government Hospital in Salem district; and

(b) if so, the details thereof?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM:

(a) No.

(b) Does not arise.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார்: இது விஷயமாகப் பாலக்கோடு பொது மக்களிடமிருந்து ஏதாவது கோரிக்கை வந்ததா? அப்படியானால், அதன் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: பாலக்கோடு மக்களிடமிருந்து இதுவரை எந்தவிதமான கோரிக்கையும் வரவில்லை.

*68 Q.—SRI R. S. VEERAPPA CHETTIAR: Will the Hon. the Minister for Public Health be plased to state the steps taken to post a Lady Doctor to the Palcode Government Hospital in Salem district?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM: There is no proposal at present.





திரு. ரா. சு. வீரப்ப செட்டியார்: பாலக்கோடு ஆஸ்பத்திரிக்கு ஒரு லேடி டாக்டரை நியமிக்கவேண்டுமென்று பல முறை அரசாங்கத்திற்குத் தெரியபடுத்தியும், சென்ற ஐந்தாண்டுகளாக லேடி டாக்டர் நியமிக்கப்படவில்லை. இதற்குக் காரணம் என்ன?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: பாலக்கோடு ஆஸ்பத்திரியில் இப்பொழுது 'பெட் ஸ்ட்ரெங்த்' கம்மியாக இருக்கிறது. அங்கு ஏற்கனவே ஒரு ஆண் டாக்டர் இருக்கிறார். இந்த ஆஸ்பத்திரியை அரசாங்கம் தொடர்ந்து நடத்துவதா, அல்லது பஞ்சாயத்தினிடம் ஒப்படைப்பதா என்பது பரிசீலனையில் இருப்பதால் லேடி டாக்டரை தற்சமயம் நியமிப்பதற்கில்லை.

*Government Hospital (Harur)*

* 69 Q.—SRI R. S. VEERAPPA CHETTIAR: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether there is any proposal to increase the number of beds in the Government Hospital at Harur in Salem district; and

(b) if so, when?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM:

(a) No.

(b) Does not arise.

*Water Pollution (prevention)*

70 Q.—SRI A. K. SUBBIAH (on behalf of Sri M. KALYANASUNDARAM): Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether any comprehensive programme is under consideration for the control of water pollution; and

(b) if so, the details thereof?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM:

(a) No.

(b) The question does not arise.

*ஜவ்வரிசி உற்பத்தி சாலைகள், சேலம்*

* 71 கேள்வி.—திரு. நா. ப. செங்கோட்டுவேலு: கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் எத்தனை ஜவ்வரிசி (sago) உற்பத்தி ஸ்தாபனங்கள் உள்ளன?

(இ) இந்தத் தொழிலுக்கு எத்தனை ஆண்டுகள் பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளது?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: (அ) சேலம் மாவட்டத்தில் 200 ஜவ்வரிசி உற்பத்தித் தொழிற்சாலைகள் உள்ளன.

(இ) இந்தத் தொழிலுக்கு 1—1—1951 முதல் ஒன்பது ஆண்டுகளுக்குப் பாதுகாப்பு அளிக்கப்பட்டது.

திரு. நா. ப. செங்கோட்டுவேலு : ஜவ்வரிசித் தொழிலுக்கு மேலும் பாதுகாப்பு அளிக்க உத்தேசம் உண்டா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : பாதுகாப்பு நீக்கப்பட்டு விட்டது. ஆனால், வெளிநாடுகளிலிருந்து ஜவ்வரிசி இறக்குமதி தடை செய்யப்பட்டிருக்கிற காரணத்தால், இதற்குப் போதிய பாதுகாப்பு இருக்கிறது.

திரு. ஜே. மாதா கவுடர் : ஜவ்வரிசி உற்பத்தி செய்யக்கூடிய தொழிற்சாலைகளுக்குப் பக்கத்தில் சகிக்க முடியாத ஒரே நாற்றமான நிலைமை இருக்கிறது. இதனால் அந்தப் பக்கங்களில் உள்ள மக்களுடைய சுகாதாரம் பாதிக்கப்படுகிறதா என்று சர்க்கார் பரிசீலனை செய்ததா ?

கனம் திரு. ஆர் வெங்கட்டராமன் : இது சுகாதார அமைச்சருக்குப் போடவேண்டிய கேள்வி.

திரு. நா. ப. செங்கோட்டுவேலு : ஜவ்வரிசிக்குக் குறைந்த பட்ச விலை நிர்ணயம் செய்ய உத்தேசம் ஏதாவது இருக்கிறதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அந்த விதமான அவசியம் இப்பொழுது ஒன்றுமில்லை. வெளிநாட்டிலிருந்து இறக்குமதி தடை செய்யப்பட்டிருக்கிற காரணத்தால், உள் நாட்டிலேயே சாதாரணமாக நல்ல முறையில் ஜவ்வரிசி விற்பனை ஆகக்கூடிய நிலைமைதான் இருக்கிறது.

*Dharmapuri panchayat*

*72 Q.—SRI R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Municipal Administration be pleased to state the reason for deferring the proposal for the conversion of Dharmapuri Panchayat into a municipality after the publication of the notification?

THE HON. SRI S. M. A. MAJID : The question whether or not the Dharmapuri Panchayat among others should be converted into a Municipality in the present national emergency is under the consideration of the Government.

தற்போதுள்ள தேசிய நெருக்கடியின் காரணமாக, தர்மபுரி பஞ்சாயத்தையும், மற்ற பஞ்சாயத்துகளையும் நகராட்சிகளாக மாற்றுவதா, இல்லையா என்னும் பிரேரணை அரசினரின் பரிசீலனை
9-00 a.m. யில் இருக்கிறது.

திரு.ரா. சு. வீரப்ப செட்டியார் : சார், ஏற்கனவே இது பற்றி கெஜட்டில் பிரசுரம் செய்யப்பட்டு நாளது வரையில் இது அமுலாக்கப்படவில்லை. கெஜட்டில் பிரசுரம் செய்வதில் கோளாறு இருக்கிறது என்பது உண்மையா ? அப்படியானால் அதற்குக் காரணம் என்ன ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : கெஜட்டில் பிரசுரம் செய்வதில் கோளாறு ஒன்றும் இல்லை. தர்மபுரி பஞ்சாயத்தையும் மற்றும் மூன்று பஞ்சாயத்துக்களையும் நகராட்சியாக மாற்றுவது பரிசீலனையில் இருக்கிறது.

MR. SPEAKER : Questions are over.



[*Note*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

## II.—CALLING ATTENTION TO THE HEAVY DAMAGES TO PADDY FIELDS IN THE ANAMALAI FIRKA.

MR. SPEAKER : Now the hon. Member, Sri K. Ponniah, who has given notice under Rule 41 will call the attention of the Hon. Minister for Agriculture.

SRI K. PONNIAH : Sir, I call the attention of the Hon. Minister for Agriculture to a matter of urgent public importance, viz., the gross and heavy damages caused by rats to paddy fields in Anamalai firka, Pollachi taluk, Coimbatore district and the remedial measures taken by the Government.

THE HON. SRI P. KAKKAN : Mr. Speaker, Sir, the rat damage in Anamalai Paddy Ayacut Area is unusually severe this year which was quite unexpected. The total area under paddy in the ayacut area is about 6,500 acres.

The first report on the damage caused by rats was received in the office of the District Agricultural Officer, Pollachi, from the Agricultural Association, Anamalai, on 12—1—1963. The Association has addressed the Plant Protection Officer, Tiruchirappalli, with a copy to the District Agricultural Officer, Pollachi. The Block Development Officer, Anamalai, indented on the District Agricultural Officer, Pollachi, for Cynogas pumps for fumigation. Eight cynogas foot-pumps were accordingly supplied for use and the President of Anamalai Agricultural Association was also informed of the supply. But, none of the ryots came forward to use them and as a result, the foot-pumps had to be returned.

Baiting with zinc phosphide was taken up but the rats could not be effectively controlled. The Plant Protection Assistant, Pollachi toured the affected areas and explained to the ryots about the correct method of baiting with zinc phosphide. The Plant Protection Assistant, Pollachi, contacted Sri V. K. Palaniswamy Gounder, M.L.C., and other leading ryots and explained the correct method of baiting and the steps taken by the Department to combat the menace.

The District Agricultural Officer, Pollachi, also toured the affected areas and contacted ryots and discussed with them. While organising the village volunteer forces and addressing the Panchayat meeting at Anamalai and Then-chittoor, it was decided to utilise the services of the Village Voluntary Force to organise mass eradication of rats by Shramadhan work. This will be taken up shortly. A majority of the ryots have also resorted to catch the rats by professionals to a good degree.

The Special District Agricultural Officer, Parambikulam-Aliyar Project, Pollachi, also toured the villages and explained to the ryots to dig up the burrows and to resort to mechanical control in view of high bunds and remification of the burrows which are deep. The damage due to rats is expected to be about 10 to 15 per cent.

[Sri P. Kakkan] [5th February 1963

Expeditious arrangements are being made by the Director of Agriculture, Madras, to make locally large number of Thanjavur bow-traps for large scale distribution to ryots and every effort is being made to reduce the damage, by mobilising the volunteer force in the villages and organising a campaign for eradication of the rats.

SRI J. MATHA GOWDER : Sir, on a point of information . . . . . .

MR. SPEAKER : No question can be asked at this stage.

SRI J. MATHA GOWDER : On a point of information from the Chair.

நானும், நண்பர் திரு. கார்ச்சா கவுடர் அவர்களும் விதி 41-ன் கீழ் விவரத்தை ரெவினியூ அமைச்சர் அவர்களிடத்திலிருந்து கேட்டோம். சட்ட மன்றத்திற்கு இன்று கடைசி நாளாதலால் அது என்னவாயிற்று என்று அறிய விரும்புகிறேன்.

MR. SPEAKER : The Hon. Minister may not be ready. It will be investigated.

## III.—PRIVILEGE MATTER *re* THE ARREST OF A MEMBER.

MR. SPEAKER : I have received two letters from the hon. Member, Sri M. Kalayanasundaram, M.L.A., now detained in the Central Jail, Cuddalore. He has raised two points of privilege. I am bringing them to the notice of the House.

He has stated that the action of the Commissioner of Police in arresting him and detaining him under Section 151 of the Criminal Procedure Code and of the Deputy Secretary, Public Department, for issuing an order under Rule 30 of the Defence of India Rules for detaining him in the Central Jail, Cuddalore, and that of the Superintendent, Central Jail, Cuddalore, in detaining him there amount to a breach of privilege.

The facts of the case are as follows :—

The hon. Member was arrested on 21st November, 1962, under section 151 of the Criminal Procedure Code under orders issued by the Commissioner of Police and he was remanded to custody in the Central Jail, Madras. Again on 24th November, 1962, the member was served with an order under Rule 30 of the Defence of India Rules by the Deputy Secretary, Public Department, and he was transferred to Central Jail, Cuddalore, where he is still lodged.

The contention of the member is that the Madras Legislative Assembly passed a resolution on 29th October, 1962, regarding the Chinese Aggression and pledged its support to any measure that may be taken up to drive out the Chinese and that he is also a party to the resolution and has taken the pledge to support the Government and that in view of that to arrst him and detain him would amount to a breach of privilege.



5th February 1963] [Mr. Speaker]

Articles 194 (1) and (2) specify certain privileges of Members. Article 194 (3) states that the other privileges could be defined by the Legislature and till they are defined they should be the same as those of the House of Commons of United Kingdom on the date of the commencement of the Constitution. The Madras Legislature has not yet defined the other privileges. So, the other privileges will be the same as those of the Home of Commons of United Kingdom on the 26th January 1950. The privilege of the members of the House of Commons in respect of arrest and detention is limited to civil cases only. The freedom is not allowed to interfere with the administration of criminal justice or emergency legislation.

In civil cases a member cannot be arrested during the continuance of the session and 40 days before the commencement of the session and 40 days after the prorogation or dissolution.

The only privilege that can be claimed in the case of arrests is the right of receiving immediate information of the imprisonment or detention of any member with the reasons for which he is detained.

The hon. Member, Sri M. Kalyanasundaram has not been arrested under civil process. When he was first arrested, it was under Section 151 of the Criminal Procedure Code and subsequently under the Defence of India Rules. It has been held on a previous occasion that arrest under Section 151 Criminal Procedure Code does not amount to a breach of privilege. Further, the Commissioner of Police has communicated the fact of arrest and detention on 21st January 1962 with reference to Rule 245 of the Assembly Rules and the Members of the Assembly have been informed about the arrest and detention and the reasons for the same. Subsequently the member has been served with another order under Rule 30 of the Defence of India Rules by the Deputy Secretary, Public Department, and the member has accordingly been transferred to the Cuddalore Central Jail. According to Rule 245 of the Assembly Rules, intimation of this was also received and communicated to the Members. Further, his arrest and detention is in no way related to his speech made in the Assembly on the 29th October 1962. Arrest and detention under Emergency provisions cannot be said to be a matter coming under the privilege of members. In England, it is not a matter of privilege and therefore in India also it cannot be a matter of privilege in view of the specific provision in the Constitution—Article 194 (3). Further Article 21 of the Constitution states that no person shall be deprived of his life or personal liberty except according to law. Article 22 states certain exceptions to Article 21. But the Defence of India Act, 1962, (Act 51 of 1962) has suspended the operation of Articles 21 and 22. The Government have therefore power to detain anybody who comes under the purview of Rule 30 of the Defence of India Rules. Privilege cannot be invoked in such cases. Though it is a restraint on the freedom of the citizens the State has imposed such restraint for the safety of the State,

[Mr. Speaker] [5th February 1963]

The principle laid down by the House of Commons in 1641 in such a matter is apt and it states that 'Privilege of Parliament is granted in regard to the Service of the Commonwealth and is not to be used to the danger of the Commonwealth'. Similarly, the restrictions imposed under the Defence of India Act for the safety of India.

The other point stated by the member is that he has taken a pledge in the House on 29th October 1962 and to arrest and detain him in spite of that would amount to a contempt of the proceedings. On 29th October, 1962, the Assembly passed the resolution regarding chines aggresion. The Member also spoke on the resolution and the resolution was adopted unanimously. The House is not concerned with the pledges of members and their enforcement. The House cannot be expected to be watching the outside activities of the members as to whether they adhere to their statements made in the House. It is not the function of the House to watch such things. Now there is National Emergency and the rights of all citizens have been curtailed and all fundamental rights under the Constitution have been suspended, and the Members of the Legislature are no exception.

The officers mentioned by the Member have done their duties according to Law and have not committed any breach of privileges of the House or its members. I therefore hold that this does not involve a matter of privilege.

SRI K. A. MATHIALAGAN : I want a small clarification, Sir.

MR. SPEAKER : How can the hon. Member ask a clarification on the ruling already given?

SRI K. A. MATHIALAGAN : I submit to your ruling, Sir. With great respect I submit to it. I only want to ask the Government this.

*கனம் உறுப்பினர் அவர்கள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர் எப்படி பாதுகாப்பிற்கு விரோதமாக நடந்து கொண்டிருப்பதாகக் கருதப்படுகிறது? அந்த நிலைமை இருந்தால் பாதுகாப்புக் கமிட்டியில் அவர்கள் இருக்க இடத்தை ஏன் வைத்திருக்க வேண்டும்? ஏன் அதை நிராகரிக்க ........*

MR. SPEAKER : The question does not arise now.

I have received another notice of privilege from the same hon. Member Sri M. Kalyanasundaram. He says in his notice that he gave some letters to the Jail Superintendent to be despatched to the Speaker but that those letters were sent to Government. Government have in their turn passed on those letters to the Speaker. His claim is that he has a right to send letters direct to the Speaker and not through Government and therefore by sending the letters to Government, the Superintendent, Central Jail, Cuddalore has committed a breach of privilege of the House.



[5th February 1963] [Mr. Speaker]

In my previous ruling I have already read in detail the privileges of the members of the House.

In the House of Commons the matter relating to forwarding of letters of Members under detention was raised in 1909. The Speaker of the House of Commons observed in that connection that he had no control over the prison officials and if the letter written by a member in custody reaches him he would presume the officials have passed it and in fact he had received one letter from the member who had been detained. Later in 1939, Captain Ramsay, a member of the House of Commons was detained under the Emergency Provisions. Captain Ramsay was given every facility in preparing his case and in submitting his case to the Privileges Committee. In fact he was given the widest opportunity of making his representations. The practice in England is that if a member writes a letter to the Speaker then the Jail authorities may forward such letter to the Speaker.

A similar matter was raised in Madras also. A member of the Madras Legislative Assembly (1946–52) was detained under the Preventive Detention Act and the Government withheld his letters addressed to the Speaker, etc. The matter came up before the Madras High Court. The High Court held :—

"As long as a detenu continues to be a member of a legislature, he is entitled to the right of correspondence with the legislature, and to make representations to the Speaker, and the Chairman of the Committee of Privileges, and no executive authority has any right to withhold such correspondence. This right as it appears to us, flows not merely from principles of natural justice, which will be violated by such letters being withheld, but as a continuing member of the House, he would also appear to be entitled to this privilege under Article 194 (3) of the Constitution under which English Parliamentary Practice has to be followed. We accordingly declare the right of the petitioner as a Member of the Legislative Assembly to correspond without let or hindrance with the Speaker and the Chairman of the Committee of Privileges through the Secretary of the Legislature during his period of detention."

As a sequel to this judgment, the Madras Government framed the Madras Security Prisoners' Rules, 1950. Sub-rule 4 of Rule 11 provides as follows :—

"All communications addressed by a security prisoner who is a member of the State Legislature or of Parliament, to the Speaker or Chairman of the House of which he is a member, or to the Chairman of a Committee (including a Committee of Privileges) of such Houses, or of a Joint Committee of both Houses of the State Legislature or of Parliament, as the case may be, shall be immediately forwarded by the Superintendent of the Jail to the Government so as to be dealt with by them in accordance with the rights and privileges of the prisoner as a Member of the House to which he belongs."

The matter was also examined by the Privileges Committee of the Lok Sabha in 1958. A member of the Lok Sabha who was in custody complained that a letter of his to another member was not forwarded. The matter was referred to the Committee of Privileges which among other things recommended as follows :--

"The Committee recommended that the Ministry of Home Affairs may be moved to arrange for incorporation of provisions on the lines of Rule 11 (4) of the Madras Security Prisoners' Rules, 1950, in the Jail Codes, Security Prisoners' Rules etc., of State Governments and Centrally administered areas in respect of all communications, addressed by a Member of Parliament, under arrest or detention or imprisonment for security or other reasons, to the Speaker of Lok Sabha or Chairman of Rajya Sabha, as the case may be, or to the Chairman of a Parliamentary Committee, or of a Joint Committee of both Houses of Parliament."

In Punjab also a similar matter was raised in 1957. The Speaker has ruled that correspondence of members to the Speaker should not be withheld.

It is thus seen that the Jail authorities cannot withhold any letter addressed to the Speaker or the Chairman of a Committee. They have to send such letters to Government to be dealt with according to the rights and privileges. In this case the Superintendent, Central Jail, has sent all letters given to him by the member, to the Secretary, Home Department, who has forwarded them to this Department. The fundamental principle is that all citizens including the members of the Legislature have to be treated equally in the eyes of law. The Security Prisoners' Rules apply to all prisoners including the members of the Legislature.

If the member wants he must take steps to amend the rules afterwards and not now. So far as the rules existing at present are concerned, there is no violation and I hold that it does not involve a matter of privilege.

SRI V. KRISHNAMOORTHY : On a point of information, Sir. I submit to the rulings of the Chair. I want to ask for information from the Chair regarding the contention of the hon. Member Sri M. Kalyanasundaram on the first privilege issue. He has stated that he . . . . . .

MR. SPEAKER : How can the hon. Member have any information from the Chair? I have already given my ruling on the first point raised by the hon. Member Sri M. Kalyanasundaram. If the hon. Member has any difficulty, he can come to my Chamber.

SRI V. KRISHNAMOORTHI rose—

MR. SPEAKER : No two lawyers will agree. The hon. Member is a lawyer and I am also a lawyer and interpretations will vary (laughter).



## IV.—GOVERNMENT RESOLUTION.

### CONCURRENCE OF THE ASSEMBLY FOR AN ACT OF PARLIAMENT ON PUBLIC HEALTH.

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : Mr. Speaker, Sir, I move the following resolution :—

"Whereas, public health is a matter of the utmost importance and the problems that face State Governments in the administration of public health are common to all States;

And whereas, with a view to securing uniformity in the administration of public health throughout the Union of India, it is desirable that Parliament should pass an Act relating to public health applicable to the whole of India;

Now, therefore, in pursuance of clause (1) of Article 252 of the Constitution of India, this Assembly resolves that the matter aforesaid and all other matters connected therewith or incidental thereto, in so far as they fall within Entry 6 in List II (State List) of the Seventh Schedule to the Constitution of India, shall, in this State, be regulated by an Act of Parliament."

In pursuance of the resolution passed by the Central Council of Health at the first meeting held in January 1953, the Government of India constituted a Committee in October 1953 under the Chairmanship of Dr. B. C. Das Gupta, Director of Health Services, West Bengal, to draw up a model comprehensive Public Health Act which the State Government might enact with such modifications as may be necessary to suit local conditions. The report submitted by this Committee was considered by the Executive Committee of the Central Council of Health and it was recommended by the Committee that the draft Model Public Health Act should be circulated to all the State Governments for their comments. The Government of India accordingly in November 1955, sent a copy of the draft Model Public Health Act mentioned above and requested that this Government might offer its remarks. This Government in March 1956 informed the Government of India that the Madras Public Health Act, 1939, already contained many important provisions made in the Model Act. But at the same time they also observed that the Model Act was more comprehensive and contained the trends of modern thought on the subject of health and that it could be no doubt a valuable guide for reasonable approach to the extension of health services in the State.

The Government of India have since considered this question further. Public Health is now a matter of the utmost importance and the problems that face State Governments in the administration of public health are common to all States. They therefore consider that it is very desirable and necessary that there should be uniformity in the administration of Public Health Act in all the States. They have pointed out that the best way of achieving uniformity in this respect is to have the contemplated legislation enacted by Parliament under Article 252 of the Constitution.

[Srimathi Jothi Vencatachellum] [5th February 1963

Under Article 252 of the Constitution, if it appears to the Legislatures of two or more States to be desirable that any of the matters with respect to which Parliament has no power to make laws for the States except as provided in Articles 249 and 250 should be regulated in such States by Parliament by law, and if resolutions to that effect are passed by all the Houses of Legislatures of these States, it shall be lawful for Parliament to pass an Act for regulating the matter accordingly and any Act so passed shall apply to such States and to any other State by which it is adopted afterwards by resolutions passed in that behalf by the House or where there are two Houses by each of the Houses of the Legislature of that State.

The enactment of a law which in pith and substance is relatable to public health (entry 6 in the State list) is within the competence of the State Legislature. It is needless for me to point out that though the Madras Public Health Act, 1939, which has been in force for a long time has been found to be very useful and working satisfactorily during all these years, still it cannot be denied that requisite conditions for public health being the same all over the country, in principle it is good to have a uniform Central legislation in the field of public health. If there are any salient features in our Public Health Act which are not covered by the proposed Central Bill, it is always open for this Government to suggest their incorporation in the Bill. The need for uniformity in public health administration in the country is so obvious that it needs no stressing. In this view I commend the resolution to the House for adoption in order to enable the Parliament to enact the contemplated legislation.

MR. SPEAKER :— Resolution moved—

"Whereas, public health is a matter of the utmost importance and the problems that face State Governments in the administration of public health are common to all States;

And whereas, with a view to securing uniformity in the administration of public health throughout the Union of India, it is desirable that Parliament should pass an Act relating to public health applicable to the whole of India;

Now, therefore, in pursuance of clause (1) of Article 252 of the Constitution of India, this Assembly resolves that the matter aforesaid and all other matters connected therewith or incidental thereto, in so far as they fall within Entry 6 in List II (State List) of the Seventh Schedule to the Constitution of India, shall, in this State, be regulated by an Act of Parliament."

* திரு. கே. ஏ. மதியழகன்: கனம் சபாநாயகர் அவர்களே, இன்றைய தினம் எல்லா மாநிலங்களுக்கும் பயன்படத்தக்க பொதுச் சுகாதாரம் பற்றிய சட்டத்தை மத்திய சர்க்கார் கொண்டு வருவதற்கு நமது மாநிலச் சட்டப் பேரவையின் இசைவைப் பெறுவதற்காக அரசியல் அமைப்பு 252-ஆவது ஷரத்து விதி ஒன்றாவது பாரா நம்முடைய சுகாதார அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற தீர்மானத்தின் மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சில கருத்துக்களை இந்த மன்றத்தின் முன்னால் நான் வைக்கிறேன்.



5th February 1963] [திரு. கே. ஏ. மதியழகன்]

கனம் அமைச்சர் அவர்கள் மிக்க நல்லவகையில் விளக்கமாகவும் தெளிவாகவும் இந்தப் பிரேரணையைக் கொண்டு வருவதற்கான காரணங்களை உரைத்தார்கள். பொதுச் சுகாதாரம் மிகவும் முக்கியம் வாய்ந்த விஷயமானதாலும் அதனுடைய நிர்வாகப் பிரச்சனை எல்லா மாநிலங்களுக்கும் பொதுவாக ஒரே சீராக ஒழுங்குபடுத்தப்பட வேண்டும் என்ற நல்ல நோக்கத்தில் இது கொண்டுவரப்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். பொதுச் சுகாதாரம் உண்மையில் மிகமிக முக்கியமானதுதான். இன்னும் சொல்லப் போனால் நாட்டில் உள்ள எல்லாப் பிரச்சனைகளுக்குமே அடிப்படை திறவுகோல் இது என்று சொல்லலாம். சுவரை வைத்துக்கொண்டுதான் சித்திரம் எழுதவேண்டும். இதில் யாருக்கும் மாறுபட்ட அபிப்பிராயம் இருக்க முடியாது. ஆரோக்கியமான மக்கள் சமுதாயம், வருங்கால குழந்தைகள் சமுதாயம் வளரும்படியாகச் செய்வதே நாட்டின் பலவித அபிவிருத்திகளுக்கும் அடிப்படை. ஆண்டுதோறும் பல கோடிக்கணக்கான ரூபாய்களை வைத்தியத் துறையிலும் பொதுச் சுகாதாரத் துறையிலும் செலவு செய்து வருகிறோம். எனினும் வாழ்க்கையின் கடைக்கோடியில் இருப்பவனுக்கும், சமுதாயத்தின் கீழ் மட்டத்தில் இருப்பவனுக்கும், உயர்ந்த நிலையில் உள்ளவர்களுக்கு அளிக்கப்படுவது போல சுகாதார வசதி பெற, வைத்திய வசதி பெற வாய்ப்பு இன்று இல்லை. கவிஞர் பெருமக்கள் நாட்டின் சின்னஞ் சிறு குழந்தைகளைப் பிள்ளை கனியமுதே என்றும், பேசும் பொற் சித்திரங்களே என்றும் கொண்டாடுகிறார்கள். ஆனால் இந்த நாட்டில் வருங்கால சந்ததிகளாகிய இளம் குழந்தைகள் பிறந்தவுடனேயே கருகிச் சாகின்றன. நோய் நொடியால் மடிகின்றன.

சொல்லப் போனால் மற்ற மாநிலங்களுக்கு எல்லாம் வழிகாட்டியாக நம் மாநிலம் வைத்தியத் துறையில் மிக்க வளர்ச்சி அடைந்திருக்கிறது. எங்கு பார்த்தாலும் ஆஸ்பத்திரிகள் இருக்கின்றன. ஜெனரல் ஆஸ்பத்திரி என்றால் அது மிக விரிந்த அளவில் பல ஆராய்ச்சித் துறைகளை உடையதாக வளர்ந்திருக்கிறது. ஆயினும் அங்கே உயர்ந்த நிலையில் உள்ளவர்கள் அதிக வசதியைப் பெற முடிகிறதே தவிர சமூகத்தின் அடித் தளத்தில் இருக்கிறவர்களுக்கு அவற்றினால் எவ்வித பயனும் கிடைக்கவில்லை. பொதுச் சுகாதாரத்திலும் மிகவும் பின்தங்கிய நிலையில் இருப்பவர்கள் ஏழை மக்கள் தான். நான் இதைச் சொல்வதற்குக் காரணம் அரசாங்கத்தின் மீது குறை சொல்ல வேண்டும் என்பதற்காக அல்ல. கீழ் நிலையில் உள்ள மக்களுக்கும் பயன் ஏற்படத் தக்கவகையில் பொதுச் சுகாதாரமும், வைத்திய வசதியும் நாட்டில் பெருக இந்த அரசாங்கம் ஆவன செய்ய வேண்டியிருக்கிறது. இந்த நிலையில் பொதுச் சுகாதார அதிகாரப் பொறுப்பு இந்த அரசாங்கத்திடம் இல்லாது மத்திய அரசியலாரிடமே விட்டுவிடத்தக்க ஒரு பிரேரணையை நமது கனம் பொதுச் சுகாதார அமைச்சர் கொண்டு வந்திருப்பதைக் காண வருந்துகிறேன். என்னுடைய மனச்சாட்சி (கனம் திரு. பி. ராமையா: முழுக்க முழுக்க இந்தப் பிரேரணையை ஆதரிக்கிறது) அதைத்தான் சொல்ல வருகிறேன். எங்களுடைய திராவிட

[திரு. கே. ஏ. மதியழகன்] [5th February 1963

முன்னேற்றக் கழகக் கொள்கையின் அடிப்படைக்கே இது விரோதமானது. மத்திய அரசாங்கத்தின் ஆதிக்கியம் இருக்கக் கூடாது என்று சொல்கிற நேரத்தில் இதுவரையில் நம்மிடம் இருந்து வந்து பொதுச் சுகாதாரம் பற்றி சட்டமியற்றும் அதிகாரத்தைக்கூட அவர்களிடமே ஒப்படைப்பது என்பதை ஆதரிக்க முடியாது. (Mr. Deputy Speaker in the Chair.) நம்மிடத்தில் இருந்து வரும் அதிகாரத்தை டெல்லிக்கு மாற்றுகிறார்கள். இதைப்பற்றி கனம் அமைச்சர் அவர்களே நன்றாக எடுத்துச் சொன்னார்கள். நான் திரும்பக் கூட படிக்க வேண்டியதில்லை. அரசியல் அமைப்பு 252-ஆவது பிரிவில்

"If it appears to the Legislatures of two or more States to be desirable that any of the matters with respect to which Parliament has no power to make laws for the State except as provided in Articles 249 and 250 should be regulated in such States by
9-30 a.m. Parliament by law, and if resolutions to that effect are passed by all the Houses of the Legislatures of those States it shall be lawful for Parliament to pass an Act for regulating that matter accordingly, and any Act so passed shall apply to such States and to any other State by which it is adopted afterwards by resolution passed in that behalf by the House, or, where there are two Houses by each of the Houses of the Legislature of that State."

இங்கிருக்கும் அதிகாரங்கள் மாற்றப்படுவதற்காக இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட மாநிலங்களின் தீர்மானத்தின் மீது முடிவு எடுக்க வேண்டும் என்று இருக்கிறது. இதற்கான உடன்பாட்டை சட்டசபை கொடுக்க வேண்டும் என்றும் இருக்கிறது. இந்திய அரசியல் சட்டத்தில் 7-வது ஷெட்யூலில் பப்ளிக் ஹெல்த் அன்ட் ஸானிட்டேஷன் (Public Health and Sanitation) ஹாஸ்பிட்டல்ஸ் அன்ட் டிஸ்பென்சரீஸ் (Hospitals and Dispensaries) காணப்படுகிறது. இவைகள் மாநிலங்களுடைய அட்டவணையில் 6-வது பொருளாகச் சேர்க்கப்பட்டிருக்கிறது. நான் பணிவாக இந்த மாமன்றத்திற்கு ஒன்றைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆளும் கட்சியிலுள்ளவர்கள் இதை நன்றாக உணருவார்கள் என்று நம்புகிறேன். இப்பேர்ப்பட்ட ஒரு தீர்மானம் தேவையில்லை. ஏற்கனவே இந்த மாநிலத்தினுடைய அதிகாரங்கள் அதிகமாக இந்த லிஸ்டில் இல்லை. யூனியன் சர்க்கார் அட்டவணைதான் அதிகமான அதிகாரங்களைச் சுமந்து கொண்டிருக்கின்றன. கன்கரண்ட் லிஸ்ட் அதிகமாகப் பெருகிக் கொண்டிருக்கிறது என்பதை எல்லாம் நாம் பார்த்துக்கொண்டிருக்கிறோம். சுகாதாரத்தைப் பொறுத்தவரை அந்த அதிகாரம் நம்முடைய மாநிலத்தில் அட்டவணையில் இருக்கிறது. இந்த நிலையில் நம்மிடம் இருக்கும் இந்த அதிகாரத்தையும் யூனியன் எடுத்துக்கொள்வதற்கு அனுமதி கொடுப்பது என்பது இந்த மன்றத்தில் ஒரு பெரிய கிறல் போடுவது போன்றது. இந்த மாமன்றமே தவிடு பொடியாகி கீழே விழத்தக்க பெரும் வெடிப்பாக நாளாவட்டத்தில் மாறிவிடும். இந்தத் தீர்மானம் பார்ப்பதற்குப் பச்சைக் கொடியாக தோற்றமளித்தாலும் பச்சைப் பாம்பு போன்றதாகும். மாநிலங்களுக்கு [illegible]



5th February 1963] [திரு. கே. ஏ. மதியழகன்]

அதிகாரங்கள் லிஸ்டில் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவைகளை மத்திய சர்க்கார் கையில் கொடுப்பதற்கு நீங்களும் சேருங்கள் என்று சொல்லுவது மிகவும் வேதனைக்குரிய ஒன்றாகும். நான் நமது சட்ட அமைச்சர் கனம் வெங்கட்டராமன் அவர்களைக் கேட்கிறேன். அவர்கள் ஐக்கியநாடு சபை வரை பணியாற்றியிருக்கிறார்கள். இந்தியாவுக்கும் தமிழகத்திற்கும் அவருக்கும் பெருமை தரக்கூடிய வகையில் பல பணிகளை ஆற்றியிருக்கிறார்கள். நமது மாநிலம் இயற்றிய பல சட்டங்களை மற்ற மாநிலங்கள் பின்பற்றியுள்ளன. மட்ராஸ் ஆக்ட் என்றால் மற்ற மாநிலங்களில் பெருமையாக எடுத்துக்கொள்கிறார்கள். அந்தப் பெருமையெல்லாம் நமக்கிருக்கின்ற நேரத்தில் இதற்கு வேண்டிய சட்டத்தை நாமே கொண்டுவர முடியாதா? நாம் நிறைவேற்றுவதைப் பார்த்து வங்காளம் பின்பற்றட்டும், உத்திரப் பிரதேசம் பின்பற்றட்டும். ஏற்கனவே இங்கே இருக்கின்ற கொஞ்ச அதிகாரங்களையும் கொடுத்துவிடுவது நியாயமா? நம்முடைய மனசாட்சி இதை ஒத்துக்கொள்ளுமா? இது ஆரம்பம். இதன் முடிவு எங்கு கொண்டுபோய்விடும்? இன்றைக்கு இந்த தீர்மானத்தை கனம் அமைச்சர் ஜோதி வெங்கடாசலம் அவர்கள் கொண்டு வருகிறார்கள். நாளைக்கு கனம் மாணிக்கவேலு? அமைச்சர் அவர்கள் இது போன்ற தீர்மானத்தைக் கொண்டு வருவார்கள். மறுநாள் கூட்டுறவு அமைச்சர் அவர்கள் கொண்டு வருவார்கள், இவ்விதம் ஒவ்வொன்றாக எடுத்துவிட்டால் எந்த நிலைக்கு நாம் போவோம் என்பதை நாம் வருத்தத்தோடு சிந்தித்துப் பார்க்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இன்னும் கொஞ்ச நேரத்தில் நமது சட்டசபைக் கூட்டம் முடிந்து எங்கள் தொகுதிகளுக்குச் செல்லப் போகிறோம். ஆறு, ஏழு நாட்களுக்கு சட்டமன்றத்தில் என்ன செய்தீர்கள் என்று மக்கள் கேட்டால், "இந்த மாமன்றத்திற்கு இருந்த சில அதிகாரங்களில் ஒரு பகுதியை நாங்கள் மத்திய சர்க்காருக்கு விட்டுக்கொடுத்திருக்கிறோம்" என்று சொன்னால் மக்கள் ஒத்துக்கொள்வார்களா என்பதை நாம் யோசிக்க வேண்டும். ஏற்கனவே இதற்கான வாடையை கவர்னர் உரையின்போது பார்த்தேன். அவர்களது உரையில் 28-வது பிரிவில் . . .

**The Government of India have under consideration the constitution of All-India Services for Medical and Public Health as well as for Engineering and Forestry. This Government have agreed in principle to the formation of such services. Details of the schemes are being worked out in consultation with the Government of India.**

என்று சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் இதைப் பேசிய நேரத்தில் அது தென்றலாக இருக்கவில்லை. வடக்கேயிருந்து வரும் வாடையாகத்தான் இருந்தது. ஏற்கனவே சுகாதார இலாகாவும் காட்டு இலாகாவும் அகில இந்திய சர்வீஸாக இருக்க வேண்டும் என்று எண்ணி அதற்கான வழிகளை மேற்கொள்ள முயன்று கொண்டிருக்கிறீர்கள். இதற்கு இந்தச் சர்க்கார் கொள்கை பூர்வமாக அனுமதி கொடுத்திருப்பதாகத் தெரிகிறது. உண்மையில் இதற்கு

[திரு. கே. ஏ. மதியழகன்] [5th February 1963

அனுமதி கொடுத்திருக்கக் கூடாது. ஜனநாயக அமைப்பின்படி நடக்கின்ற இந்த நாட்டில் உங்கள்மீது அதிகாரம் படைத்த இந்த சட்ட சபையைக் கலந்து கொள்ளாமல் எப்படி அனுமதி கொடுத்தீர்கள்? இந்த சபையில் கொண்டு வந்து ஆலோசனைக்கு விடுவதற்கு முன்பு உங்களாலேயே எப்படி முடிவு எடுக்க முடிந்தது? அப்படி முடிவு எடுக்கலாமா? இதனுடைய விளைவு என்னவாகும்? இன்றைக்கு பப்ளிக் ஹெல்த் டிப்பார்ட்மெண்ட் என்றால், நாளைக்கு அக்ரிகல்சர் டிப்பார்ட்மெண்ட், இப்படிப் போய்க்கொண்டேயிருந்தால், உண்மையிலேயே இந்த மாமன்றத்தினுடைய அதிகாரங்களை எல்லாம் நாமே குறைப்பதற்கான தீவிர முயற்சியில் ஈடுபட்டுவிட்டோம் என்பதுதான் பொருளாகும். இதே போன்று சட்டத்தை எல்லா மாநிலங்களும் இயற்றுவதற்குரியவாய்ப்பு இருக்கிறது. இந்த நிலையில் இப்பேர்ப்பட்ட ஒரு பயங்கரமான விதியை 252 வது விதியின் ஒன்றாவது பிரிவின்படி. தீர்மானம் நிறைவேற்றப்பட்டால் நம்முடைய மாநிலத்தின் அதிகாரம் எந்த நிலைக்கு வரும்? இப்போதே, மத்திய சுகாதார அமைச்சர் கனம் டாக்டர் சுசிலா நய்யார் அவர்கள் கடந்த பாராளுமன்றக் கூட்டத்தொடரில் பேசியபோது, "பாராளுமன்ற உறுப்பினர்களே, போலி மருந்துகள் தயாரித்து விற்கக்கூடிய கடைகளுக்கு அனுமதி வாங்கிக்கொடுக்கிறீர்கள், இந்த நிலையில் என்னசெய்வது?" என்று சொல்லியிருக்கிறார்கள். இந்தமாதிரியான சூழ்நிலை அங்கே இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே தான் சுகாதார விவகாரம் இங்கேயே கவனிக்கப்பட வேண்டும் என்று சொல்லுகிறோம். இந்த நிலையில் இன்னும் மத்திய சர்க்காரிடமே ஒப்படைப்பதாக இருந்தால் நிலைமை இன்னும் இடைஞ்சலாகப் போய்விடும். நம்முடைய ராஜ்ய வைத்திய இலாகா டைரக்டர் குமாரி மரைக்கார் அவர்கள் "இந்த மாநிலத்தில் இருக்கின்ற மருந்துகள் எல்லாம் நன்றாகத்தான் இருக்கின்றன. வட இந்தியாவிலிருந்து இங்கே வரும் மருந்துகள்தான் போலி மருந்துகளாக இருக்கின்றன. இங்கே தயாரிக்கப்படும் மருந்துகளில் பெரும்பாலும் போலி இல்லை. மருந்து தயாரிக்கும் இடங்களை நாங்களே நேரில் பார்வையிடுகிறோம்" என்று குறிப்பிட்டுள்ளார்கள். இதே நிலையில் இன்றைக்கு பல இடங்களிலும் பாமர மக்கள் பாதகமடைகின்ற விதத்தில் உணவுப் பொருட்களில் கலப்படம் ஏற்படுகிறது. பாபனாசத்தில் ஏற்பட்ட சம்பவம், அனைவருக்கும் தெரியும். பல இடங்களிலும் டிஸ்டில்ட் வாட்டர் என்று கூறி பல போலி சிமிழ்களை தயாரித்திருக்கிறார்கள். பெனிசிலின் சிமிழிலே, டிஸ்டில்ட் வாட்டர் இருக்கிறது. நாங்கள் கடந்த ஆண்டு வழக்கு மன்றத்தில் நின்றபோது, போலி மருந்துகளாகத் தயாரிக்கப்பட்ட லட்சக் கணக்கான சிமிழ்களை வண்டி வண்டியாக கொண்டுவந்தார்கள். இந்த கேடுகளையெல்லாம் நாம் பார்க்கின்றோம். ஆகவே நல்லமுறையில் பல சட்டங்களை இயற்றுவதற்கு நம்முடைய மாநிலத்திற்கு வாய்ப்பு இருக்கின்றது. இருக்கின்ற சட்டத்திலே பல தடங்கல்கள் இருக்கின்றன. கொலைபாதகச் செயல்கள் என்று சொல்லத்தக்க வகையில் உணவுப்பொருட்களில் கலப்படம் நடைபெறுகிறது. இதை நாம் தவிர்க்க வேண்டும், இதில் நாம் அக்கறை எடுத்துக்



[5th February 1963 [திரு. கே. ஏ. மதியழகன்]

கொள்ளவேண்டும். இதை விட்டு விட்டு பரந்த இடத்தில் இங்கே இருக்கின்ற அதிகாரத்தை ஒப்படைப்பது என்பது நியாயமாகாது. ஏதோ எண்ணிக்கை பலம் இருக்கிறது என்பதற்காக இதை நிறைவேற்றிவிடலாம், ஆனால் ஆளும்கட்சியினருக்கே இதன் மீது திருப்தி இருக்காது என்பதை நான் அறிவேன். உங்கள் பக்கத்திலுள்ள உறுப்பினர்களுக்கெல்லாம் விப் இஷ்யூ (Whip issue) பண்ணாமல் இருந்தால், அவர்களுக்கெல்லாம் தனியாக அபிப்பிராயத்தைத் தெரிவிப்பதற்கு சுதந்திரம் கொடுத்தால் நிச்சயமாக இந்தத் தீர்மானம் இந்த மன்றத்தில் தோற்கடிக்கப்படும் என்பதை என்னால் உறுதியாகச் சொல்ல முடியும். இம்மாதிரியான பயங்கரமான ஒரு முடிவை என்னால் நினைத்துப் பார்க்கக் கூட முடியவில்லை. நான் முன்னால் கூறியது போன்று இதற்கான சட்டத்தை எல்லாம் இந்த மாநிலமே தயாரித்துக் கொள்ள முடியாதா என்று கேட்டுக்கொண்டு இந்தத் தீர்மானத்தை கனம் சுகாதார அமைச்சர் அவர்கள் திருப்பிப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். எத்தனையோ நோங்களில் உணவுப் பொருட்களில் கலப்படம் செய்கிறார்கள். போலி மருந்துகள் தயாரிக்கிறார்கள், ஹோட்டல்களில் சுகாதாரக் கேடான முறையில் பல காரியங்கள் நடைபெறுகின்றன. இவற்றையெல்லாம் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். இதற்காக கடும் தண்டனை விதிக்கவேண்டும். அதற்காக எங்களுடைய கட்சி தன்னுடைய ஆதரவை கொடுப்பதற்குத் தயாராக இருக்கும். இந்த பயங்கரமான முடிவு, நமக்கிருக்கின்ற உரிமையைப் பறிக்கக் கூடியதாய் இருக்கிறது. குரல்வளையை நெரிக்கின்ற வகையில் அமைந்திருக்கிற இந்தத் தீர்மானம்—பாசக்கயிறு போல் அமைந்திருக்கிற தீர்மானம். இதன் மூலமாக இந்த 252-வது விதியின்படி நமது உரிமைகளை எடுத்துக் கொள்வதற்கான அதிகாரத்திற்கு இந்த மாமன்றம் உடன்பாடு அளிக்கக்கூடாது என்று கேட்டுக் கொள்வதோடு இந்தத் தீர்மானத்தை கனம் அமைச்சர் அவர்கள் திருப்பிப்பெற்றுக் கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். இந்தத் தீர்மானம் நமது மாநிலத்தின் உரிமையை பறிக்கின்ற தீர்மானம், ஏற்கனவே பலமாக இருந்துவருகின்ற டெல்லி சர்க்காரின் அதிகாரம் இன்னும் பலப்படுவதற்கு உதவுகிற இந்த முயற்சி தேவையற்ற முயற்சி ஆபத்தான முயற்சி என்று கூறி, இந்தத் தீர்மானத்தை வன்மையாகக் கண்டித்து என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. ஜே. மாதா கவுடர்: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இன்றைக்குச் சமர்ப்பித்திருக்கிற இந்தத் தீர்மானத்தை நான் முழு மனதோடு ஆதரிக்கிறேன். இது சுகாதாரத்தைப் பொறுத்த வரையில் அகில இந்திய சர்வீஸ் ஏற்படுத்த வேண்டுமா, வேண்டாமா என்பதல்ல, பாராளுமன்றத்தில் அகில இந்தியாவுக்கு ஒரே மாதிரியான சுகாதாரச் சட்டத்தை ஏற்படுத்துவது நல்லது என்பதைப் பற்றி அங்கே பரிசீலித்துக் கொண்டிருக்கிறார்கள். அதை நம் அரசாங்கத்தின் கன்கரன்ஸுக்கு அனுப்பியிருக்கிறார்கள், நம் மாநிலத்துக்கு

அனுப்பப்பட்டிருப்பது போல எல்லா மாநிலங்களுக்கும் அனுப்பப்பட்டிருக்கிறது. கனம் அங்கத்தினர் மதியழகன் அவர்கள் நாங்கள் ஏதோ ரெஸலூஷன் மூவ் பண்ணுவது மாதிரியும், உங்களால் கையாலாகாதா, நம் மாநிலத்தில் சுகாதார சட்டம் செய்ய முடியாதா என்றும், மத்திய சர்க்காரைச் செய்யுங்கள் என்று சொல்லி நம் சர்க்கார் தீர்மானம் கொண்டு வந்த மாதிரியும், ஏன் அந்த மாதிரி பஞ்சாப் சர்க்கார் கொண்டுவரவில்லை என்றும் பேசினார்கள். . .

**திரு. கே. ஏ. மதியழகன்:** மத்திய சர்க்கார் இந்த சர்க்காருக்கு தீர்மானம் போட்டு அனுப்புங்கள் என்று தாக்கீது அனுப்பியிருக்கிறார்களா என்று கனம் அமைச்சரிடமிருந்து அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**திரு. ஜே. மாதா கவுடர்:** பஞ்சாப் சர்க்கார் கொண்டுவரக் கூடாதா, நாம் தான் கொண்டுவரவேண்டுமா என்று பேசினார்கள். நாம் ஒன்றும் கொண்டு வரவில்லை. பஞ்சாப் சர்க்கார் கொண்டு வரவேண்டிய அவசியமும் இல்லை. மத்திய சர்க்காரிலே மாநிலங்கள் பூராவுக்கும் ஒரே மாதிரி வேண்டுமா, வேண்டாமா என்று பேசப்படுகிறது. நமது நண்பர் மதியழகன் அவர்களுடைய கட்சியைச் சேர்ந்தவர்களும் பாராளுமன்றத்தில் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். இது வேண்டும் வேண்டாமென்றால், தனியாகவே இருந்து போகட்டும் என்றால், அகில இந்திய சர்வீஸ் வேண்டாமென்றால், அதைப் பற்றி அங்கு பேசுவது தான் முறை. நாம் கன்கரன்ஸ் தான் அனுப்புகிறோம். நாம் என்ன செய்தாலும் சட்டம் அங்கு நிறைவேறப் போகிறது. அதிலும் இன்று மாநில சர்க்காரிலே சுகாதாரத்தைப் பொறுத்த அளவில் நாம் செய்கிற காரியங்களுக்கும் இந்த ரெஸலூஷனுக்கும் . . .

**திரு. கே. ஏ. மதியழகன்:** இந்தச் சட்டத்தை மாநில சர்க்கார்களின் உடன்பாட்டின் பேரில் தான் நிறைவேற்ற முடியும். கண்டிப்பாக பார்லிமெண்டுக்கு அதிகாரம் இல்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ஜே. மாதா கவுடர்:** நான் உட்காரவில்லை. இந்த சமயத்தில் கனம் அங்கத்தினர் குறுக்கிட்டுப் பேசுவதற்கு எந்த விதமான உரிமையும் இல்லை. பாயிண்ட் ஆஃப் ஆர்டர் ஏதாவது இருந்தால் வேண்டுமானால் குறுக்கிட்டுப் பேசலாம். அடிக்கடி குறுக்கிட்டுப் பேசினால் பிரயோசனம் இல்லை. என்னுடைய கருத்தை நான் சொல்லுகிறேன். . . .

**கனம் உதவி சபாநாயகர்:** நீங்கள் தொடர்ந்து பேசலாம்.

**திரு. ஜே. மாதா கவுடர்:** அகில இந்தியாவுக்கும் பாராளுமன்றத்தில் கொண்டு வருவதன் நோக்கம் என்ன என்றால் இன்றைய தினம் ஒவ்வொரு மாநிலத்துக்கும் எல்லை இருக்கிறது. நம் மாநிலத்துக்கு அண்டையிலே கேரளா இருக்கிறது, கர்நாடகம் இருக்கிறது, ஆந்திரப் பிரதேசம் இருக்கிறது. நம் மாநிலத்தில் இப்போது மலேரியா எராடிகேஷன் செய்கிறோம். இதை அடியோடு ஒழித்து விட வேண்டுமென்று செய்தாலும் நம் பார்டர்





வரை தான் செய்ய முடியும். நம் எல்லை அளவில் நாம் சுகாதாரத்தை பலப்படுத்திக்கொண்டிருக்கும்போது, அண்டை மாநிலக்காரர்கள் செய்யவில்லை என்றால், 'இது தமிழ் நாடு ஆயிற்றே' என்று அண்டையில் இருக்கிற ஆந்திரப் பிரதேசத்தில் இருக்கக் கூடிய மலேரியா பூச்சிகள் பார்டர் என்று அதற்கு மேல் வர பயந்து விடாது—வரத் தான் செய்யும். வேறு மாநிலத்தில் சுகாதாரத்தை சரியாக அமைக்கவில்லை என்றால் நம் மாநிலத்தில் சரியானபடி அமுல் செய்தாலும் எந்த விதமான பலனும் ஏற்படாது. அகில இந்திய சர்வீஸை எடுத்துக் கொண்டாலும் உண்மையில் இந்த சர்வீஸை ஏற்படுத்தினால் சுகாதாரத்தை நல்ல முறையில் பாதுகாக்க முடியும் என்ற ஒரே நோக்கத்தோடு தான் மத்திய சர்க்கார் இதைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதே போன்று என்ஜினியரிங்கிலும் கொண்டு வரலாமா என்று யோசிக்கிறார்கள். மருத்துவத் துறையில் கொண்டுவரலாமா என்று யோசிக்கிறார்கள். இந்த நோக்கத்தை தான் ஆமோதிக்கிறேன். ஆனால் அதே நேரத்தில் மத்திய சர்க்காரிடத்தில் அதிகாரத்தைக் கொண்டு வந்து குவித்து விட்டார்களே என்று அதற்காகச் சொன்னார்களே தவிர, தென்னாடு—வடநாடு என்று பேசாததற்கு நான் உண்மையிலேயே சந்தோஷப்படுகிறேன். அந்தத் தொனியில் பேசாமல் இருந்தது பற்றி அகில இந்தியாவின் பேரில் மிகவும் நல்லெண்ணம் கொண்டிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். அதற்காக அவரை நான் பாராட்டுகிறேன். அந்த நிலையில் பார்க்கும்போது நாம் ஒன்றை மனதில் வைக்கவேண்டும். இப்போது இந்த உரிமையை இந்த ரெஸலூஷன் மூலமாக மத்திய சர்க்காருக்குக் கொடுத்தால் நம் மாநிலத்தினுடைய சுகாதாரத்தைப் பொறுத்த வரையில் நாம் ஏதாவது செய்ய முடியாமல் இருந்துவிடுமோ என்று எண்ண வேண்டியதில்லை. சென்னை மாநில சுகாதாரச் சட்டம் என்று ஒரு சட்டத்தை இயற்றி வைத்திருக்கிறோம். அந்தச் சட்டத்தின் பிரகாரம் காரியங்களைச் செய்துகொண்டிருக்கலாம். ஒரு இணைப்பாகக் கொண்டு செய்தால் நலம் என்று தான் மத்திய சர்க்கார் கொண்டுவரப் போகிறது. முன்பு ஸோனல் கவுன்ஸில் வைப்பது நலம், அதுவே தென்னாடு என்று அவர்கள் தலைவர்களெல்லாம் பேசினார்கள். நான்கு மாநிலத்தைக் கொண்டு ஸோனல் கவுன்ஸில் ஏற்படுத்தவில்லையா? இதைப் பற்றி இந்த மன்றத்தில் கூட கருத்து தெரிவிக்கப்பட்டதே. அதே முறையில் அகில இந்தியாவில் இணைப்பு ஏற்படுத்துவது நல்லது என்பதைப் பற்றி அவர்கள் ஒப்புக்கொள்ள வேண்டுமேயல்லாது அது கூடாது என்று சொல்லுவது சரியல்ல என்று நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இது ஒரு நல்ல திட்டம். மதிப்புக்குரிய அங்கத்தினர் மதியழகன் அவர்கள் ஏதோ 'பாம்பு', 'விஷம்', 'பச்சைப் பாம்பு' என்றெல்லாம் துடி துடித்து விட்டார். பவளக் கொடியைப் பார்த்து பச்சைப் பாம்பு என்று மிரண்டு கொண்டிருந்தால் என்ன செய்வது? பவளக் கொடியைப் பார்த்து பயந்துகொண்டால் எந்த விதமான பயனும் இல்லை. பவளக் கொடியைப் பார்த்து பயனை அடையுங்கள். மத்திய சர்க்கார் என்றும், வடக்கு-தெற்கு

[திரு. ஜே. மாதா கவுடர்] [5th February 1963

என்றும் பேசுவதால் பயன் இல்லை என்றும் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அதே நேரத்தில் சுகாதாரத்தைப் பொருத்த வரையில் மட்டுமல்லாமல் மருத்துவத்துக்கும் அகில இந்திய சர்விஸ் வைப்பது நலம் என்று தெரிவித்துக்கொள்கிறேன். மருத்துவம் சம்பந்தப்பட்ட வரையிலும்கூட அகில இந்திய அடிப்படையில் கொண்டுவரலாம் என்று சொன்னால், மெடிகல் காலேஜுகள் மற்றும் அது சம்பந்தப்பட்ட எல்லா விஷயத்திலும் ஒரே அடிப்படையில் செய்வதானாலும் மிகவும் நல்லது என்று தெரிவித்துக்கொண்டு, இந்தத் தீர்மானத்தை முழு மனதோடு ஆதரித்து, எல்லோரும் எந்த விதமான தடையும் செய்யாமல் நல்ல விதத்தில் பாரத நாடு பூராவிலும் ஒருங்கே இணைந்த சுகாதாரம் ஏற்படுத்த வாய்ப்பு ஏற்பட நம் கன்கரன்ஸுக்கு அனுப்பிய மத்திய சர்க்காருக்கு நாம் நன்றி செலுத்த வேண்டுமென்று சொல்லிக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கனம் சுகாதார அமைச்சர் அவர்கள் இந்த மன்றத்தின் முன் வைத்துள்ள இந்தத் தீர்மானத்தை நான் அடியோடு எதிர்க்கிறேன். இந்தத் தீர்மானத்தை அமைச்சர் அவர்கள் முன்மொழிகிற சமயத்தில் 1952-லேயிருந்து 1962 வரையில் மத்திய சர்க்காருக்கும் மாநில சர்க்காருக்கும் இடையில் ஏற்பட்டுள்ள கடிதப் போக்கு வரத்தின் தகவல்களை எல்லாம் சொன்னார்கள். மாநில சர்க்கார், ஒவ்வொரு சமயத்திலும், நம் மாநிலத்தில் இயங்கி வருகிற சென்னை சுகாதாரச் சட்டம் சீரிய முறையில் பயன்படுத்தப்படுகிறது, அது ஒரு நல்ல சட்டமாக இருக்கிறது, இங்கே நடைமுறையில் இருக்கும் சட்டத்தை தவிர்த்து விட்டு அகில இந்திய ரீதியில் சட்டம் தேவையில்லை என்று பல நேரங்களில் வற்புறுத்தி வந்திருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தினராகிய நாங்கள் சொல்லும் அடிப்படையான கருத்தெல்லாம் இந்த மாநில சர்க்காருடைய சட்டம் போதுமானதாக இருக்கிறது என்பதாகும். இப்படி போதுமானதாக இருக்கிற சட்டத்தை எதற்காக விட்டு விட்டு, மாநில சர்க்காருடைய அதிகாரத்தை மத்திய சர்க்காருக்குக் கொடுத்து அதன் மூலமாக அவர்கள் போடுகிற சட்டத்தை ஏற்கவேண்டுமோ என்று ஏங்கப்படுகிறேன். மாநில சர்க்காருடைய சட்டம் நன்றாக இருக்கிறது. அப்படி இருக்கும்போது எதற்காக நாம் நம் உரிமைகளை விட்டுக் கொடுக்கவேண்டும். இப்படி நம் சட்டங்களை ஒவ்வொரு சட்டமாகப் பிரித்துப் பிரித்துக் கொடுத்து விட்டு மாநிலங்களுக்கு இப்போது இருக்கிற முனிஸிபல் அதிகாரங்களைப் பெறுகிற விதத்தில் தான் பாராளுமன்றத்தில் இருக்கிறவர்கள் பேசிக்கொண்டு வருகிறார்கள். சென்ற வருஷம் பாராளுமன்றத்தில் நடந்த நிகழ்ச்சிகளைக் கவனிக்கும் சமயத்திலே கல்வி பற்றிய சட்டத்தை ......

**கனம் உதவி சபாநாயகர்:** மற்ற சபையினுடைய நிகழ்ச்சிகளைப் பற்றி இங்கே குறிப்பிட வேண்டாம்.



5th February 1963]

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி:** கல்வியானது அனைத்திந்தியாவுக்கும் ஒரே வகையாகத்தான் இருக்கவேண்டும், இந்திய அரசியல் சட்டத்தில் சொல்லியிருக்கிற பிரகாரம் இந்தியை பாட மொழியாக ஏற்கவேண்டும், பல மாநிலங்கள் அம்மாதிரி ஏற்க முடியாமல் இருக்கிறது, ஆகையினால் அதையும் ஒன்றாகச் சேர்க்கவேண்டும், கல்வி பற்றிய சட்டத்தையும் அனைத்திந்தியாவுக்கும் ஒன்றாகச் சேர்க்க வேண்டும் என்றெல்லாம் முயற்சிகள் இருப்பதை கனம் உதவி சபாநாயகர் அறிவார்கள். இப்படி ஒரு இலாகாவை எடுத்து அது சம்பந்தமான நம்முடைய அதிகாரங்களை மத்திய சர்க்காருக்கு எதற்காக வழங்கவேண்டும் என்றுதான் நான் இங்கே கேட்க விரும்புகிறேன். ஆளும் கட்சியில் இருக்கிற உறுப்பினர்கள் தங்களுடைய அமைச்சரவை இந்த சட்டத்தை சரியாக பாதுகாக்க தவறிவிட்டது என்று கருதுகிறார்களா? ஆனால், எதிர்க் கட்சியில் இருக்கும் நாங்கள் நம்முடைய மாநிலத்தில் நடைமுறையில் இருந்துவருகிற சட்டம் நியாயமான சட்டம், போதுமான சட்டம், அந்த சட்டத்தில் ஏதாகிலும் குறைபாடுகள் இருக்குமானால், அதனை நிவர்த்தி செய்துகொள்ளுவதற்கு வேண்டிய சாதுர்யத்தை நம்முடைய மந்திரிகள் இன்னும் இழக்கவில்லை என்றுதான் கருதுகிறோம். 1952-லிருந்து பார்த்தால் ஏறக்குறைய ஆண்டு ஒன்றுக்கு ஒரு சட்டத்தை, நம்முடைய ராஜ்யத்தில் போடுகிற சட்டத்தை மத்திய சர்க்கார் போடுகிற நிலையைப் பார்த்துக்கொண்டுதான் வருகிறோம். நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக நம்முடைய மாநிலத்தினுடைய அதிகாரம் எதற்காகக் குறைக்கப்படவேண்டும்? இப்போது நாடு பூராவும் பார்க்கிறோம், பல மாநிலங்களும் வேண்டுவதைப் பார்க்கிறோம், அதிகமான உரிமைகள் வேண்டும், அதிகமான அதிகாரங்கள் வேண்டும், அதிகப்படியான சட்டங்கள் இயற்றக்கூடிய அதிகாரங்கள் வேண்டும் என்று பல மாநிலங்கள் கோருகின்றன. கனம் உதவி சபாநாயகர் அவர்களுக்கும் மற்றுமுள்ள கனம் அங்கத்தினர்களுக்கும் ஒரு விஷயம் மிக நன்றாகத் தெரியும் என்று கருதுகிறேன். யூனியன் பப்ளிக் சர்வீஸ் கமிஷனை எடுத்துக்கொண்டால் அவர்கள் கொடுக்கிற உத்தியோகங்களில் நம்முடைய மாநிலத்திற்கு சரியான பங்கு கிடைக்கிறதா என்று யாராகிலும் விரல் விட்டு அந்த எண்ணிக்கையைச் சொல்ல முடியுமா? இப்படி ஒரே சட்டமாகப் போடுவதின்மூலம், அகில இந்திய சர்வீஸ் ஏற்படுத்துவதன்மூலம் நம்முடைய மாநிலத்தில் இருக்கிற நல்ல அறிவாளிகளை, நல்ல மருத்துவ நிபுணர்களை, பொறியியல் வல்லுனர்களை புறக்கணிக்கக்கூடிய சூழ்நிலைதான் எதிர்காலத்தில் ஏற்படக் கூடும். அந்த நிலை ஏற்படாமல் இருப்பதற்கு நம்முடைய சட்டத்தை நாமே திருத்திக் கொள்வது நல்லது என்றுதான் நான் கருதுகிறேன். இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றுவதன் மூலம் பாராளுமன்றம் இது சம்பந்தமாக ஒரே சட்டத்தைக் கொண்டு வந்தால், அந்தச் சட்டத்தில் ஏதாகிலும் ஓட்டை உடைசல் இருந்தால் அதை இங்கே நிவர்த்தி செய்து கொள்ளலாம் என்று கனம் அமைச்சர் அவர்கள் சொல்வது எனக்குப் புரியவில்லை. யூனிபார்மிடி வேண்டும் என்று சொல்கிறார்கள்.

[திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி] [5th February 1963

உணவைப் பொறுத்த வரையில் யூனிபார்மிடி வேண்டுமென்று சொல்கிறார்கள், உடையைப் பொறுத்த வரையில் யூனிபார்மிடி வேண்டுமென்று சொல்கிறார்கள், கல்வியைப் பொறுத்த வரையில் யூனிபார்மிடி வேண்டுமென்று சொல்கிறார்கள். எல்லாவற்றிலும் யூனிபார்மிடி, யூனிபார்மிடி என்று சொல்லிக் கொண்டு கடைசியில் மாநிலம் என்று ஒன்று எதற்கு இருக்க வேண்டும் என்று கருதக் கூடிய நிலை எதிர்காலத்தில் வரவேண்டுமென்று நம்முடைய அமைச்சர்கள் கருதுகிறார்களா? இந்த மாநில சர்க்கார் பல இலாக்காக்களை நிர்வகிக்கின்றனர், அதிலே சுகாதார இலாகாவும் ஒன்று. நான் பெருமையோடு, பூரிப்போடு கூறிக் கொள்வேன், நம்முடைய சுகாதார இலாகா நன்றாக நடக்கிறது, அதுவும் கனம் அமைச்சர் திருமதி ஜோதி வெங்கடாசலம் அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு, பெண்ணாக இருப்பதினால் அவர்கள் ஒவ்வொரு மருத்துவச் சாலைக்கும் நேரில் சென்று கவனிக்கக் கூடிய ஒரு நிலைமையைப் பார்க்கிறோம். இந்த சர்க்கார் போட்டிருக்கிற சட்டத்தை, இந்த மாமன்றம் இயற்றியுள்ள சட்டத்தை நிர்வகிக்கிற சமயத்தில்தான் பல இடங்களில் இவ்வளவு நல்ல காரியங்கள் செய்யப்படுவதைக் காண்கிறோம். மத்திய சர்க்கார் சட்டம் போட்டு, மத்திய சர்க்காரின் நேரடி அதிகாரத்தில் இவ்விலாகா வந்தால், டாக்டர்களும் மற்றும் சுகாதார அதிகாரிகளும் மத்திய சர்க்காருடைய நேரடி அதிகாரத்திற்கு உட்பட்ட பிறகு, நம்முடைய மாநில சர்க்காரும் அதே போல் இந்த மாமன்றத்திலுள்ள அங்கத்தினர்களும் எப்படி தங்களுடைய குறைகளை எடுத்துக் கூற முடியும்? அப்படியே நாங்கள் குறைகளை எடுத்துக் கூற விரும்பினாலும் ஆளும் கட்சியில் இருக்கிற அங்கத்தினர்கள் சொல்வார்கள், பாராளுமன்றத்தில் பேச வேண்டிய விஷயங்களை இங்கே பேசுகிறார்கள் என்று. இதை நம்முடைய மாநில முதல் அமைச்சர் அவர்கள் சரி என்று சொல்வார்களா? இது தேவையானதா? ஏதாவது குறைபாடு இருக்குமானால், இதனால் லாபம் இருக்குமானால் இந்த முறையை நாம் கையாளலாம். இதனால் என்ன லாபம் இருக்கிறது? நம்முடைய மாநிலத்தில் இயங்குகிற சட்டம், இயங்குகின்ற முறை சரியாக இல்லை என்றால்தான் மத்திய சர்க்கார் இதை ஏற்றுக் கொள்ளலாம். அமைச்சர் அவர்களே, 'The Madras Public Health Act is very very comprehensive' என்று கூறினார்கள். Why should we pass this resolution? ஆகையினாலே, இந்தத் தீர்மானத்தை நாம் முன்மொழிந்து வழிமொழிவதின்மூலம் தீர்மானத்தை நிறைவேற்றுவதன்மூலம் நமக்கிருக்கிற அதிகாரத்தை விட்டுக் கொடுக்கிற நிலை ஏற்படும், நமக்கிருக்கிற உரிமைகளை விட்டுக் கொடுக்கிற நிலைமை ஏற்படும். நம்மிடம் இருக்கிற நல்ல முறைகளை மறந்துவிட்டு நம்மிடத்தில் இருக்கிற "வீக்னஸ்", இல்லாமையை எடுத்துக்காட்டுகிற அளவிற்குதான் இது இருக்கிறதே தவிர இதற்கு வேறு என்ன பொருள்? இதனால் என்ன லாபம் கிடைக்கிறது? மத்திய சர்க்கார் சுகாதார இலாகாவிற்காக செலவழிக்கிற அத்தனை பணத்தையும் ஏற்றுக் கொள்கிறார்களா? அல்லது இங்கு இருக்கிற டாக்டர்களின் எதிர்கால



5th February 1963] [திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி]

வாழ்க்கை பாழாகாமல் ஏதாவது வசதி செய்ய அவர்கள் முன்வருகிறார்களா? அப்படி ஒன்றையுமே காணோமே? நம்முடைய மாநிலத்தில் இருக்கிற நல்ல சட்டத்தை எதற்காக விட்டுவிட்டு, நம்முடைய மாநிலத்தின் அதிகாரங்களை எதற்காக மத்திய அரசாங்கத்திடம் கொடுக்க வேண்டும்? நான் இங்கே சொல்லிக் கொள்ள விரும்புவது என்னவென்றால் நாம் இந்தத் தீர்மானத்தை இங்கே நிறைவேற்றாமல் இருந்தாலும் சரி, ஏறக்குறைய ஒன்பது மாநிலங்கள் இத் தீர்மானத்தை நிறைவேற்றிவிட்டால் இந்த மாநில சட்டம் செல்லுபடியாகாது என்று சொல்ல பாராளுமன்றத்திற்கு அதிகாரம் இருக்கிறது. அது எங்களுக்கு நன்றாகத் தெரியும். இருந்தபோதிலும்கூட, இங்கிருக்கக்கூடிய சட்டம் நல்ல சட்டமாக இருக்கிறது, இங்கிருக்கிற முறைகள் நல்ல முறைகளாக இருக்கின்றன, நல்ல அமைப்பாக இருக்கிறது, நல்ல நிரந்தரமான சட்டம் இருக்கிற சமயத்தில், நமக்கு சாதகமாக நல்லதொரு இலாகா இருக்கிற சமயத்தில் ஏன் இதனை மத்திய சர்க்கார் பாராட்டக்கூடாது? ஏன் நம்முடைய முதல் அமைச்சர் இது நமக்குத் தேவையில்லை என்று சொல்லக்கூடாது? எந்த மருந்தை எங்கு கொடுப்பது என்பது டாக்டர்களுக்கு அல்லவா தெரியும்? மத்திய சர்க்கார் டாக்டர் உத்தரவு போட்டால்தான் மாநிலத்தில் இருப்பவர்களுக்கு வியாதி போகும் என்று அர்த்தமா? இது ஒரு சாதாரணக் கேள்வி. இதை ஏன் நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் கேட்கவில்லை? 1953-ம் ஆண்டிலே மத்திய சர்க்காருக்கும் இந்த மாநில சர்க்காருக்கும் இது சம்பந்தமாக ஒரு காகிதப் போராட்டம் நடந்தது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இதிலே நமது முதல் அமைச்சர் அவர்கள் தோல்வி கண்டுவிட்டார்களா என்று கேட்க விரும்புகிறேன். ஆகையினாலே நமக்கிருக்கிற நல்ல ஒரு சட்டத்தை விட்டுக்கொடுக்கத் தேவையில்லை. நமக்கிருக்கிற காம்ப்ரிஹென்சிவ் ஆக்ட் இருக்கிறதே அதனை கைவிடத் தேவையில்லை. இந்தத் தீர்மானத்தை இங்கு நிறைவேற்றுவதன் மூலம் நமது உரிமையை நமக்கிருக்கிற ஒரு நல்ல இலாகாவை, ஒரு நல்ல சட்டத்தை இழந்துவிடுவோம். ஆளும் கட்சி அங்கத்தினர்களுக்கும், அமைச்சர்களுக்கும் நான் என்னுடைய தாழ்மையான வணக்கத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன், இந்தத் தீர்மானம் இம் மன்றத்தில் நிறைவேறாமல் தடுப்பதற்கு போதிய அங்கத்தினர்களின் எண்ணிக்கை இன்றைக்கு தி. மு. கழகத்தினரிடையே இல்லாமல் இருக்கலாம். இருந்தாலும், எதிர்காலத்தில், இந்தத் தீர்மானத்தை திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்த்தது என்று சரித்திரத்திலாகிலும் நாங்கள் நிலைநாட்டிவிட்டு இந்தத் தீர்மானத்தை எதிர்க்கிறோம் என்று சொல்லி என் உரையை முடிக்கிறேன்.

**திரு. வை. சங்கரன்:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கும் தீர்மானத்தை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் கூறிக் கொள்ள விரும்புகிறேன். இப்பொழுது நம் முன்னால் உள்ள பிரச்னை இன்று நமக்குள்ள சட்டம் நல்ல சட்டமாக இருக்கிறதா அல்லது நிரந்தரமான சட்ட

மாக இருக்கிறதா, இதை விட்டு விட்டு மத்திய சர்க்கார் ஒரு பொதுவான சட்டத்தை இயற்றுவதால் நமக்கு ஏதாவது லாபம் ஏற்படுகிறதா என்பது அல்ல. அதோடு மட்டுமல்லாமல், இன்னொரு தவறான கருத்து இருக்கிறது. ஏதோ இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றுவதனால் நமது அதிகாரத்தை விட்டுக் கொடுத்து விடுகிறோம், நமக்குள்ள உரிமையை இழந்து விடுகிறோம் என்றெல்லாம் தவறாகக் கருதி எனக்கு முன்னால் பேசிய நண்பர் பேசினார். முதலில் பேசிய அங்கத்தினர் அவர்களும் இவ்வாறு கூறினார்கள். உண்மையிலேயே பார்க்கப்போனால் அதிகாரமோ உரிமையோ பறிபோகிற விஷயமே எழவில்லை. பொதுவாகவே பிரிந்து போக வேண்டுமென்ற ஒரு எண்ணம் இருப்பதினாலேதான் ஒன்று சேர்ந்து நல்லது செய்யலாம் என்று சொன்னாலுங்கூட, ஒன்று சேர வேண்டாம், பிரிந்து போகலாம் என்ற மனப்பான்மை ஏற்படுகிறது. இதை நன்றாகச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். வியாதியைப் பொறுத்த வரையில் 'பிரிவென்டிவ் ஸைட்', 'க்யூரேட்டிவ் ஸைட்' என்று இரண்டு உண்டு. அதாவது ஒன்று வியாதி வருவதற்கு முன்னால் தடுப்பது, மற்றொன்று வியாதி வந்த பிறகு தீர்ப்பது. மெடிக்கல் சம்பந்தப்பட்ட வரையில் ஓரளவிற்கு 'லோக்கலைஸ்' செய்து, நல்ல முறையில் சோஷியல் சர்வீஸ் அந்த அளவிற்கு நன்றாகச் செய்ய வேண்டுமென்று அரசாங்கம் கருதி, 'லோக்கலைஸ்' செய்யப்பட்டிருக்கிறது. 10-00 a.m. நோய் வராமல் தடுக்கக் கூடிய நடவடிக்கைகளை எடுப்பதற்கு பப்ளிக் ஹெல்த் டிபார்ட்மெண்ட் இருக்கிறது. எனக்கு முன்னால் பேசிய ஒரு நண்பர் சொன்னது போல் அல்லாமல், இதெல்லாம் ஒரு யூனிஃபார்ம் முறையில் இருப்பது நல்லது. நாம் வேறு அவர்கள் வேறு என்று இதில் பார்க்க வேண்டியதில்லை. தொத்து நோய்க் கிருமிகள் யாரையும் பாகுபாடு செய்வதில்லை. அரசியலில் வேண்டுமானால் ஆரிய ரத்தம் வேறு, திராவிட ரத்தம் வேறு என்று சொல்லலாமே தவிர, தொத்து நோய்க் கிருமிகள் ரத்தத்தைப் பாகுபாடு செய்வது கிடையாது. ஒரு மாநிலத்தில் இருக்கிற வியாதி, அடுத்த மாநிலத்திற்கும் பரவுகிறது. மாநில வித்தியாசத்தை தொத்து நோய்க் கிருமிகள் பார்ப்பது கிடையாது. ஆகவே, தொத்து நோய்கள் வராமல் தடுப்பது, கலப்படம் முதலியவற்றைத் தடுப்பது போன்ற விஷயங்களில் ஒரே மாதிரியாக இருந்தால், அந்த அளவுக்கு பொறுப்பைப் பகிர்ந்து கொள்ளலாம். அதிகமாக இருக்கும் பொறுப்பை மத்திய அரசாங்கம் நம்முடன் பகிர்ந்து கொள்ளுகிறது. நம் கடமையை ஓரளவு மத்திய சர்க்காரும் ஏற்றுக் கொள்ளுகிறது. எதைக் கண்டாலும் பயந்துவிடக் கூடாது. மத்திய சர்க்கார் என்றாலே பாம்பைக் கண்டு பயப்படுவது போல் பயந்துகொண்டிருக்க வேண்டியதில்லை. டில்லி என்ற பெயரைக் கேட்டவுடனேயே கிலி அடையக் கூடாது. அந்த மனப்பான்மையை ஒழிக்க வேண்டும். சட்டம் படித்தவர்கள்கூட இந்த அளவுக்குப் போவது விந்தையாக இருக்கிறது. சட்டம் தெரியாமல், மேலெழுந்தவாரியாகப் பேசினாலும் பரவாயில்லை. சட்டம் படித்தவர்களே இப்படிப் பேசுவது சரியல்ல. எதை எடுத்தாலும், நல்லதாக இருந்தாலுங்கூட, பிரிந்து போக வேண்டும் என்ற பிரிவினை மனப்பான்மையோடு பேசுவது விஷயம்



தெரியாதவர்கள் பேசுகிற பேச்சாகும். மாநில சர்க்காருடைய பொறுப்பை மத்திய சர்க்காரும் ஓரளவுக்கு ஏற்றுக்கொள்ளத் தக்க வகையில்தான் இந்தத் தீர்மானம் அமைந்திருக்கிறது. உணவுக் கலப்படம் எங்கு பார்த்தாலும் இருக்கிறது. அது ஒரு மாநிலத்தில்தான் இருக்கிறது என்று சொல்ல முடியாது. எல்லா மாநிலங்களிலும் கலப்படம் போன்ற ஊழல்கள் இருக்கின்றன. கலப்படம் செய்யப்பட்ட பொருள்கள் ஒரு மாநிலத்திலிருந்து இன்னொரு மாநிலத்திற்குச் செல்லும்போது, அதுவும் தவிர்க்கப்படவேண்டும். தொத்து நோயும் ஒரு மாநிலத்திலிருந்து இன்னொரு மாநிலத்திற்கும் பரவக்கூடும். இதற்கெல்லாம் சட்ட திட்டங்கள் இந்தியா பூராவுக்கும் ஒரே மாதிரியாக இருக்குமானால், அது மாநிலங்களுக்கும் நல்லது, இந்திய நாட்டுக்கும் நல்லது. அந்த முறையில்தான் இந்தத் தீர்மானம் வரவேற்கத்தக்கதாக இருக்கிறது. ஆக, எதையெடுத்தாலும், பிரிவினை மனப்பான்மையோடு பார்க்காமல், நல்லவற்றையாவது ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று நண்பர்களைக் கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடிக்கின்றேன்.

**திரு. செ. கோ. விஸ்வநாதன்:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கும் தீர்மானத்தின் மீது என்னுடைய கருத்துக்களை நான் சொல்ல விரும்புகிறேன். சுகாதார அமைச்சர் அவர்கள் தீர்மானத்தை மன்றத்தின் முன் வைத்துப் பேசுகையில் இதற்கு முன்பு தமிழகத்திலிருக்கும் பொது சுகாதாரச் சட்டத்தினுடைய நிலைமைகளை எடுத்து வைக்காதது வருந்தத்தக்கது. அந்தச் சட்டத்தினால் நமது நிர்வாகம் எந்த அளவுக்குப் பாதிக்கப்பட்டிருக்கிறது, எந்த விதத்தில் அந்தச் சட்டத்திலிருந்து யார் யார் தப்பித்துக் கொள்ளுகிறார்கள் என்ற நிலைமையை எங்களுக்கு அவர்கள் எடுத்துச் சொல்லவில்லை. பொது சுகாதாரம் தமிழகத்தில் எந்த அளவு பிற்போக்கான நிலைமையில் இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் சொல்ல விரும்புகிறேன். வைத்திய வசதி மட்டும் இந்த நாட்டிலே பரவலாக ஏற்படுத்தப்பட்டிருந்தாலும், பொது சுகாதாரத்தைப் பொறுத்த வரையில், தமிழகம் மிக மிக மோசமான நிலைமையில் இருந்து வருகிறது என்பதை சென்னை நகரத்தில் அண்மையில் ஏற்பட்ட காலரா நோயிலிருந்து தெரிந்துகொள்ளலாம். சென்னை நகரத்தில் பலவிடங்களில் அசுத்தமான நிலை இருந்து கொண்டிருக்கிறது. இப்பொழுதிருக்கும் சட்டத்தை அமல் நடத்துவதிலே சிறிது குறைபாடு இருந்தாலும், இந்தச் சட்டத்தின் மூலமாகவே தவறுகிறவர்களைத் தண்டிக்கக்கூடிய நிலை இருக்கிறது. பொது சுகாதார ஊழியர்களுக்கு அரசாங்கத்திலே நல்ல முறையில் பாதுகாப்பு அளிப்பது இல்லை. குறிப்பாக, இரண்டாந்தர, மூன்றாந்தர நகரசபைகளுக்கு சுகாதார அதிகாரிகளாக நியமிக்கத்தக்க அளவில் டாக்டர்கள் இல்லை. சானிட்டரி இன்ஸ்பெக்டர் என்று சொல்லப்படுகிற ஆபீசர்களை வைத்துக்கொண்டு, சுகாதார நிர்வாகம் நடந்து கொண்டிருக்கிறது. அவர்கள் குறைந்த அனுபவம் உடையவர்கள். சுகாதாரத் துறையை விரிவாக அறிந்துகொள்ள முடியாது

நிலைமையில் உள்ள அவர்கள் பொது சுகாதாரத்தைப் பாதுகாக்க வேண்டிய அளவுக்குத் திறமையற்றவர்களாக இருக்கிறார்கள். அந்தக் காரணத்தால் அவர்கள் பொது சுகாதாரத்தை நகரங்களிலும், மற்றக் கிராமப் புறங்களிலும் நல்ல முறையில் நிறைவேற்ற முடியாமல் இருந்துகொண்டிருக்கிறார்கள். ஆகவே, பொது சுகாதாரத்தை நல்ல முறையில் செம்மையாக தமிழகத்தில் பாதுகாக்க வேண்டுமென்றால், சுகாதார அமைச்சர் அவர்கள் எப்படி வைத்திய வசதிகள் பற்றி பல பல திட்டங்களை வகுத்திருக்கிறார்களோ, அதே முறையில் பொது சுகாதாரத்தையும் பாதுகாக்க வேண்டிய அளவுக்கு நல்ல திட்டங்களை இந்த மாநிலத்தில் நிறைவேற்ற முன்வர வேண்டும். இப்பொழுதிருக்கும் சட்டத்தைக் கொண்டே எந்தவிதமான குறைபாடும் இல்லாமல் பொது சுகாதார வசதிகளைச் செய்து கொடுக்க முடியும். அதிகாரங்களையும், மற்ற பல சலுகைகளையும் நாட்டிலே பரவலாக்க வேண்டும் என்று மத்திய ஆட்சியிலே பேசப்பட்டுக்கொண்டிருக்கும் இந்த நேரத்தில், மத்திய ஆட்சியாளர்தான் இந்தச் சட்டத்தை செய்ய வேண்டும், நாடு முழுவதும் ஒரே சட்டம்தான் இருக்கவேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். நம்முடைய சட்டத்திலே எந்தக் குறைபாடும் இருப்பதாக இதுவரை தெரியவில்லை. இப்பொழுதிருக்கும் சட்டம் போதுமானது. இதை மேலும் விரிவு படுத்துவதன்மூலம் இந்த மாநிலத்தில் ஏற்படக்கூடிய குறைபாடுகளைத் தீர்க்க முடியும் என்று நான் நினைக்கின்றேன்.

உணவுப் பொருள்களில் கலப்படம் இருப்பதைப்பற்றி நான் குறிப்பிட விரும்புகிறேன். உணவுப் பொருள்களில் குறிப்பாக பருப்பு வகைகளிலும், நெய் போன்றவற்றிலும்தான் கலப்படம் அதிகமாக இருக்கிறது. அதுபற்றிப் பல வழக்குகள் நம்முடைய மாநிலத்தில் நடந்திருக்கின்றன. கிராமப் புறங்களில் சிறிய கடைகள் வைத்து நடத்துகிறவர்கள் சென்னை நகரத்தில் இருக்கும் பெரிய மொத்த வியாபாரிகளிடமிருந்து பருப்பு முதலிய பொருள்களை வாங்கி, கிராமத்தில் கடைகளில் வைத்து விற்கும்போது, அதில் கலப்படம் இருப்பதாகச் சொல்லி, சுகாதார அதிகாரிகள் அந்தப் பொருள்களை கைப்பற்றி, ஆராய்ச்சிசாலைகளுக்கு அனுப்பி, அவற்றில் உள்ள கலப்படத்தைக் கண்டுபிடித்து, வழக்குகள் போட்டு, ஆயிரக் கணக்கான ரூபாய் அபராதம் கட்டச் சொல்லும் நிலைமை கிராமத்தில் பத்து ரூபாய் முதல் வைத்து நடத்தும் கடைக்காரர்களுக்கு இருக்கிறது. கிராமப் புறங்களில் இருக்கும் சிறு வியாபாரிகள் கலப்படம் செய்வதில்லை. நகர்ப் புறங்களில் இருக்கும் சில பெரிய மொத்த வியாபாரிகள் பொருள்களில் கலப்படம் செய்து சிறிய வியாபாரிகளுக்குக் கொடுத்துவிடுவதால், சிறிய வியாபாரிகள் கலப்படக் குற்றத்திற்காகத் தண்டிக்கப்படக்கூடிய நிலைமை ஏற்படுகிறது. ஆகவே, எந்த இடத்தில் கலப்படம் செய்யப்படுகிறது என்பதை அமைச்சர் அவர்கள் கண்டுபிடிக்கச் செய்து, அதற்கு வேண்டிய வழி வகைகளைச் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

பொது சுகாதாரச் சட்டத்தின்கீழ் கைது செய்யப்படுகிற நபர்கள் கோர்ட்டிலே அதிகமாகத் தண்டிக்கப்பட்டாலும், இங்கிருக்கும் ஆராய்ச்சிச்சாலையில் செய்யப்படுகிற முடிவும்,





கல்கத்தாவிலுள்ள ஆராய்ச்சிச்சாலையில் செய்யப்படுகிற முடிவும் வித்தியாசமாக இருக்கிறது. இந்த வித்தியாசத்திற்குக் காரணம் என்ன என்பதை ஆராய்ந்து, பொருள்களை சென்னையிலுள்ள பரிசோதனைச் சாலையிலே பரிசோதனை செய்து, நிலைமையை அபிவிருத்தி செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

மருந்துக் கடைகளில் போலி மருந்துகள் சமீப காலத்தில் அதிகமாக விற்கப்படுகிறதென்பதைப் பார்த்து வருகிறோம். போலி மருந்துகளைத் தடுப்பதற்கு சட்டத்தையே நம்பியிருப்பதற்குப் பதிலாக, உணவுப் பொருள்களை கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக விற்பது போல, மருந்துகளையும் கூட்டுறவு சங்கங்கள் மூலமாக விற்பதற்கு ஏற்பாடு செய்தால், போலி மருந்துகள் விற்பதை ஓரளவுக்குக் குறைக்க முடியும் என்று நான் தெரிவித்துக்கொள்ளுகின்றேன். கனம் அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கும் இந்தத் தீர்மானத்தை நான் ஆதரிக்க முடியாத நிலையில் இருக்கிறேன். நம்முடைய சட்டமே போதுமானதாக இருக்கிறது என்று என்னுடைய கருத்தைக் கூறி, என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகின்றேன்.

**திருமதி டி. என். அனந்தநாயகி:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்தத் தீர்மானத்தை முழு மனதோடு வரவேற்று ஒரு சில வார்த்தைகளைச் சொல்ல நான் விருப்பப்படுகிறேன். எனக்கு முன்னால் பேசிய கனம் மதுரை அங்கத்தினர் அவர்கள் சொன்ன மாதிரி, அகில இந்திய ரீதியிலும், இன்னும் பல விதமான வகையிலும், நோய்கள் வராமல் தடுப்பு நடவடிக்கைகளை எடுப்பதற்காக இந்தத் தீர்மானம் வந்திருக்கிறதே தவிர, ஏதோ மாநிலத்தின் உரிமையைப் பறிப்பதற்காகவோ, அல்லது மாநிலத்தின் அடிமைப் புத்தியைக் காட்டுவதற்காகவோ இந்தத் தீர்மானம் கொண்டுவரப்படவில்லை என்று நான் இங்கே தெரிவித்துக் கொள்ளுகின்றேன். மருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய் என்கிற மாதிரி, மத்திய சர்க்கார் என்றாலே மருண்டு போயிருக்கும் கட்சிக்கு எதைப் பார்த்தாலும் பயமாக இருக்கிறது போலும். அதே போல், புரிந்து கொள்கின்றவர்களுக்கு அது பழுதையாகவும், புரிந்து கொள்ளாதவர்களுக்கு அது பாம்பாகவும் காட்சியளிக்கும். தக்க வகையில் இதைப் புரிந்து கொண்டால், உண்மையிலேயே இதன் மூலம் மாநிலத்தின் உரிமை பறிபோய் விடுமா என்று ஆராய்ந்து பார்ப்பதற்கு வாய்ப்பு கிடைக்கும்.

இதுவரை ஸ்டேட் லிஸ்டில் இருந்த 'பப்ளிக் ஹெல்த்' இந்தத் தீர்மானத்தின் மூலம், அரசியல் சட்டத்தின் ஆர்ட்டிகிள் 252-ன் படி கன்கரண்ட் லிஸ்டில் கொண்டுவரப்படுகிறது. இந்தத் துறையைப் பொறுத்த வரையில், மாநில சர்க்கார் ஒன்றுக்குத்தான் அதிகாரம் இருந்துகொண்டு வந்தது. இதன் மூலமாக, இரண்டு மாநிலங்களுக்கு மேலே இதை அகில இந்திய அடிப்படையில் வைத்துக்கொள்ளுவதற்கு ஆசைப்பட்டால், 11 மாநில சட்டசபைகளில் அது நிறைவேற்றப்பட்டால் மத்திய அரசாங்கம் இதுவரை ஸ்டேட் லிஸ்டில் இருந்த துறையிலே தானும் தன்னுடைய அதிகாரத்தை, கூட இருந்து செலுத்த முடியும் என்பதற்காகத் தான் இந்தத் தீர்மானத்தை இச்சபை முன் இப்பொழுது

[திருமதி டி. என். அனந்தநாயகி] [5th February 1963

அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கிறார்கள். அதன்மூலமாக ஏதோ அப்படியே மாகாணத்தின் அதிகாரம் பறிபோய்விட்டது, நமக்கு எவ்வித அதிகாரமும் இல்லை என்று சொல்வது இவ்விஷயத்தை நன்றாகப் புரிந்து கொள்ளாத கோளாறேயொழிய வேறு ஒன்றுமில்லை.

இன்றைய தினம் மோட்டார் வெஹிகில்ஸ் ஆக்ட் அட்மினிஸ்ட்ரேஷன் இருக்கிறது. அரசியல் அமைப்புப்படி எல்லா மாகாணத்திற்கும் பொதுவாக மத்திய அரசாங்கமே அந்த நிர்வாகத்தை ஏற்றுக்கொண்டிருக்கிறது. எனினும் அந்த சட்டத்திலேயே மாநில அரசாங்கங்கள் தங்கள் தங்கள் மாநிலங்களுக்கு ஏற்ப அதில் சிற்சில மாறுதல்களைச் செய்துகொள்ளலாம் என்ற உரிமை வழங்கப்பட்டிருக்கிறது. அதைப்போலவே இன்றைக்கு பொது சுகாதார நிர்வாகத்தை மத்திய அரசாங்கத்திடம் ஒப்படைத்தாலும் நம்முடைய மாநிலத்திற்கு ஏற்ப சிற்சில மாறுதல்களை அதில் நாம் செய்துகொள்வதற்கு ஏற்ற அதிகாரத்தையும் இதில் எடுத்துக்கொள்ளலாம். அப்படி எடுத்துக்கொள்வதற்கு இந்தச் சட்டத்தில் இடம் இருக்கும்படியாக இதை அமைக்கவேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன். இதில் உரிமை பறிபோகிறது என்பதற்கே இடமில்லை. அதுவும் நம்முடைய முதல் அமைச்சர் இருக்கிற வரையில் நம்முடைய உரிமைகள் எதுவும் பறிபோகாது காப்பாற்றப்படும் என்கிற நம்பிக்கை எல்லோருக்கும் உண்டு. ஆகவே இந்தமாதிரியாக பொது சுகாதாரம் மத்திய அரசாங்கத்தின் நேரடிப் பொறுப்பின் கீழ் வருவதை விஷயம் தெரிந்தவர்கள் ஆதரிக்கத்தான் செய்வார்கள்.

ஆனால் நான் முன்பு குறிப்பிட்டதுபோல வைத்திய இலாகாவையும், சுகாதார இலாகாவையும் ஒன்றாக இணைக்கும் பிரச்சினையை மட்டும் கைவிட்டுவிட்டால் நல்லது. சொல்லலாம், இணைப்பதற்கு முக்கியமான காரணமே இவை ஒன்றுக்கொன்று இணைந்த முறையில் செயல்பட வசதியாக இருக்கும் என்று. இப்பொழுதே இணைந்து செய்ய முடியும். இவை இரண்டும் இணைந்து பணியாற்ற வகை செய்யலாம். 'Co-ordination is better than amalgamation'. சுகாதார இலாகா மத்திய அரசினரின் நிர்வாகத்தின் கீழ் வருவதனால் மேல் நிலையில் உள்ள உத்தியோகஸ்தர்களிடையே மாற்றம் ஏற்படலாமே தவிர கீழ் நிலையில் அங்கங்கேயுள்ள உத்தியோகஸ்தர்கள் அங்கங்கே தான் இருப்பார்கள். இதைப்பற்றியும் கவலை வேண்டியதில்லை. இப்படி அகில இந்திய அடிப்படையில் அமைப்பதனால் நம்முடைய மாநில அறிஞர்களின் அறிவு பெருமைபடுத்தப்படும்; தாழ்வடையாது. சுகாதார வளர்ச்சி மேம்படும்; தாழ்வடையாது. மற்ற பாகங்களில் உள்ளவர்களுக்கும் நம் சேவை பயன்படுத்தப்பட்டு, நம் பிராந்திய அறிஞர்களின் பெருமை பாராட்டப்படும். ஆகவே இந்தத் தீர்மானத்தை முழு மனதுடன் ஆதரித்து, இன்னும் வேறு சில துறை நிர்வாகத்தையும் இப்படியே ஆக்குவதற்கு முன் வந்திருக்கிறார்கள், அவற்றையும் கொண்டுவந்தால் நல்லது என்று சொல்லி முடித்துக்கொள்கிறேன்.



5th February 1963]

* SRI C. CHIRANJEEVULU NAIDU: Mr. Deputy Speaker, Sir, I rise to support this resolution. The resolution which aims to secure uniformity in the administration of public health throughout the Union of India is desirable and is also of utmost importance. This resolution relates not only to the preventive side but also to the setting up of services in a better and effective manner. The only doubt that has been focussed by some hon. Members is as to how this item should be listed under Article 252 of the Constitution. It only seeks the concurrence of the Legislature. I wish to point out that without giving any clarification the concurrence of the Legislature is sought now.

Regarding the amalgamation of the Medical and Public Health Departments, I wish to say that it is a welcome measure. The principle with which the amalgamation will be done would be conducive to the proper working of the two departments, viz., Public Health and Medical. When primary health centres are being established in rural areas and when preventive and curative sides are being integrated in the village level, they should not function as two separate bodies, i.e., in two distinct forms. There should not only be integration but also amalgamation at district and State level. There should not be any dual control over these two departments. The only thing that has to be considered now is that there should be safeguard for the services, i.e., personnel working in the Health Department. Considering this resolution and also considering the amalgamation of Medical and Health Departments a clarification is sought for by the public as to the scope of the resolution when it is passed as a measure by Parliament in relation to the proposal of the State Government for amalgamation of the Medical and Public Health Departments I would be glad to have a clarification from the Hon. Minister. With these words, I wholeheartedly support this resolution.

திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர்: கனம் சட்ட மன்ற துணைத் தலைவர் அவர்களே, இப்போது சுகாதார அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் இணைப்புப் பிரேரணையை நான் ஆதரித்துச் சில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

எனக்கு முன்னால் பேசிய எதிர்க்கட்சி நண்பர் திரு. மதியழகன் அவர்கள் உணர்ச்சி ஊட்டக்கூடிய ஒரு உரையை நிகழ்த்தினார்கள். அந்த உணர்ச்சியிலே நானும் கொஞ்சம் ஈர்க்கப்பட்டேன். ஆனால் அமைதியாக நோக்குகின்றபோது அதில் எவ்வளவு தூரம் உண்மை இருக்கிறது, இத்தனை துவேஷ உணர்ச்சியைக் காட்டவேண்டிய நிலை அல்லவே இது என்று தெரிந்தது. அவர் குறிப்பிட்ட ஒரு முக்கியமான விஷயம் என்னவென்றால் இம்மாதிரி அதிகாரம் மாற்றப்படுவதனால் ஏதோ உரிமை பறி போகிறது என்பது பற்றித்தான். தமிழ்நாட்டின் உரிமை இதனால் கொஞ்சங்கூடப் பறி போகவில்லை என்றுதான் நான் ஆழ்ந்து யோசித்த பிறகு சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

சில நாட்களுக்கு முன் ஐரோப்பிய நாடுகள் தங்களுக்குள் ஒரு வர்த்தக ஒப்பந்தம் செய்துகொண்டன. பிரிட்டன் அப்போது அதில் சேர மறுத்துவிட்டது. அப்படி ஒப்பந்தம் செய்து

[திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர்] [5th February 1963

கொண்ட நாடுகளுக்கு இன்றைக்கு ஏற்பட்டிருக்கிற அனுகூலங்
களைப் பார்த்து பிரிட்டன் அந்தக் கூட்டில் தானும் சேர்வதற்கு
இப்போது துடிக்கிறது. ஆனால் அவர்கள் பிரிட்டனை சேர்த்துக்
கொள்ள சம்மதித்ததாகத் தெரியவில்லை. அதுபோல எல்லா
மாநிலங்களுக்கும் பொதுவாக பொதுசுகாதார இலாகாவை
அமைக்கும்போது நாம் அதில் சேராது இருந்துவிட்டால் பின்னால்
அதனால் வரக்கூடிய அனுகூலங்களை நாம் இழந்துவிடுவோம்.
ஆகவே இந்தப் பிரேரணையை நாம் ஆதரிக்க வேண்டியது மிகவும்
முக்கியம். இன்றைக்கு கிராமப் பகுதிகளில் பொதுசுகாதார
வசதிக் குறைவு இருப்பதனால் காலரா, அம்மை போன்ற தொத்து
நோய்கள் வருஷாவருஷம் வருவதையும், பல மக்களின் உயிரைக்
கொள்ளை கொண்டு போவதையும் பிரத்யட்சமாகப் பார்த்துக்
கொண்டிருக்கிறோம்.

சுதந்திரம் கிடைத்த பின்பு ஓரளவு நம்முடைய சர்க்காருடைய
பெரும் முயற்சியாலும், காலத்தையொட்டி வந்த பல தடுப்பு
மருந்துகளாலும் சமயாசமயத்திற்கு அதைக் கையாண்டதாலும்
கிராமப் புறங்களில் இப்போது அநேகமாக தொத்து வியாதிகளைத்
தடுத்துவிட்டோம் என்றே நிச்சயமாகச் சொல்லலாம். அப்படி
இருக்கின்ற ஒரு நிலைமையிலே அகில இந்திய ரீதியிலே சுகாதார
அமைப்பில் ஒரு இணைப்பை ஏற்படுத்திக் கொள்வோமேயானால்,
வளருகின்ற ஒரு உலகத்தில் எத்தனையோ புதிய மருந்துகள் அயல்
நாடுகளில் கண்டுபிடிக்கப்படுகின்றன. அவைகள் எல்லாம் தமிழ்
நாட்டுக்கு உடனுக்குடன் வர அகில இந்திய ரீதியில் இணைப்பு
மிகவும் உபயோகமாக இருக்கும் என்று நம்பலாம். மத்திய
சர்க்காரிலிருந்து தமிழ் நாட்டுக்கு வரக்கூடிய பங்கைப் பெறு
வதில்லை அல்லது அவர்கள் கொடுப்பதில்லை என்று குறைப்பட்டுக்
கொள்ளுகிறோம். இந்த மாதிரி இணைப்பு இருக்குமானால் சுகாதார
அடிப்படையிலே புதிய கண்டு பிடிப்பு மருந்துகளை நாம் கேட்கா
மலே பெறக் கூடிய வாய்ப்பு கிடைக்கும். ஆகையால் இந்த
சுகாதார அடிப்படையிலே நம்முடைய தமிழ் நாடானது அகில
இந்திய ரீதியில் இணைவதானது ஒரு அரிய வாய்ப்பாக இருக்குமே
யன்றி அதனால் நம்முடைய உரிமை கொஞ்சம் கூடப் பாதிக்கக்
கூடிய நிலைமை இல்லையென்பதைத் தெரிவித்துக் கொள்ள ஆசைப்
படுகிறேன். சிறு பாசனத் திட்டங்களை எடுத்துக் கொண்டாலும்,
நம்முடைய மாநில சர்க்கார் பங்கு இவ்வளவு, மத்திய சர்க்கார்
பங்கு இவ்வளவு என்ற நிலையிலே அவர்களுடைய உதவி கிடைக்
கிறது. மத்திய சர்க்காருடைய உதவி இல்லாவிடில் நம்முடைய
தமிழகத்திலே இவ்வளவு தூரம் பாசன வசதி ஏற்படுத்தி இருக்க
முடியாது என்பதை நாம் கண்டிப்பாகச் சொல்லலாம். சுகாதார
முறையிலே கூட அகில இந்திய ரீதியிலே இணைப்பு இருக்குமானால்
அதனால் நம்முடைய தமிழகத்திற்கு அதிக உபயோகமாக
இருக்கும் என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். உரிமை
என்று சொன்னால், அதிகாரம் என்று சொன்னால் இந்தக் காலத்தில்
பொறுப்பு என்றுதான் அர்த்தம். அதிகாரத்தை மத்திய சர்க்கா
ருக்குக் கொடுக்கிறோம் என்றால், அதற்குண்டான பொறுப்பு அவர்
களிடத்திலே ஏற்படுகிறது என்பதை நாம் கண்டிப்பாகக் கவனிக்க
வேண்டும். அந்தப் பொறுப்பு வந்த உடனேயே அதற்குண்டான



5th February 1963] [திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர்]

அனுகூலம் நம்முடைய தமிழகத்திற்குக் கிடைக்கத்தான்
போகிறது. நம்முடைய சுகாதார அமைச்சர் அவர்கள் கொண்டு
வந்திருக்கும் அதிகாரத்தைப் பகிர்ந்து கொடுக்கும் இந்தத்
தீர்மானத்தை நான் மனதார வரவேற்று இத்துடன் என்னுடைய
உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* திரு. இரா. நெடுஞ்செழியன்: மதிப்பிற்குரிய சட்டமன்ற
துணைத் தலைவர் அவர்களே, கனம் சுகாதார அமைச்சர் அவர்கள்
எல்லா மாநிலங்களுக்கும் பயன்படத்தக்க பொதுச் சுகாதாரம்
பற்றிய சட்டம் ஒன்றினைப் பாராளுமன்றத்தில் கொண்டு வர,
இச்சட்டப் பேரவையின் இசைவினைப் பெறுவதற்கு இந்திய
அரசியலமைப்பு 252-வது விதியின் (1) பகுதியின்படி தீர்மானத்
தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இந்தத் தீர்மானத்தினுடைய
நோக்கம் கொஞ்சம் நல்ல முறையிலே, விரிவாக விளக்கமாகத்
தெளிவுபடுத்தப்பட்டிருக்குமானால் குழப்பம் ஏற்பட இடம் ஏற்
பட்டிருக்காது என்று நான் கருதுகிறேன். இதன் மூலம் மாநிலத்
திற்கு இதுவரை இருந்த நிர்வாக அதிகாரம் பறிக்கப்பட இடம்
இல்லை, உரிமைகள் பறிக்கப்பட இடம் இல்லை, சுகாதார அமைப்பு
எப்படி எப்படி அமைந்தால் நல்லது, எப்படி எப்படி இயங்கினால்
நல்லது, அதனுடைய முறைகளும், வகைகளும், வழிகளும் எப்படி
இருந்தால் நல்லது என்ற யோசனையைக் குறித்த அளவுக்குத்தான்
இந்தச் சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட இருக்கிறது
என்ற கருத்தின் அடிப்படைதான் இந்த தீர்மானத்தின் நோக்கம்
என்பதை கனம் தொழில் அமைச்சர் அவர்களிடத்தில் இருந்து
நான் தெரிந்து கொண்டேன். இந்த விளக்கங்கள் கொடுக்கப்பட்
டிருந்தால் குழப்பம் ஏற்பட இடம் இருக்காது. இன்னொரு ஏற்
பாட்டினைச் செய்திருந்தாலும் நன்றாக இருந்திருக்கும். எல்லா
மாநிலங்களுக்கும் பயன்படத்தக்க பொதுச் சுகாதாரம் பற்றிய
சட்டத்தை இந்தியப் பேரரசு உருவாக்கி அதை மாநில சட்ட
மன்றங்களுக்கு அனுப்பி வைத்து நாம் எல்லாம் அதைக் காண்கிற
அளவு இடம் தந்து, அதற்கு நம்முடைய ஆலோசனைகளின் அடிப
படையில் திருத்த வேண்டியவற்றைத் திருத்தி இந்தியப் பாராளு
மன்றம் சட்டமாகக் கொண்டு வர முயற்சித்தால் இன்னும் கொஞ்
சம் நன்றாக இருக்கும். இப்போது அந்தச் சட்டத்தினைக் கொண்டு
வருவதற்கான இசைவை மட்டுந்தான் நம்மிடமிருந்து பெறுகிறார்
கள். அந்தச் சட்டம் எப்படி இருக்கும், அதனுடைய வழிவகை
கள் என்ன என்பதைப் பற்றி நாம் இப்போது அறிந்து கொள்ள
முடியாது. ஆகவே, அந்த முறையில் அந்தச் சட்டம் இயற்றப்
படும் நிலைமையிலே இந்தச் சட்ட மன்ற உறுப்பினர்கள் தங்களு
டைய யோசனைகளை, திருத்தங்களைக் கூறுவதற்கான ஏற்பாட்டினை
அமைச்சரவை செய்து தந்தாலும் நன்றாக இருக்குமென்று கூறிக்
கொள்ள விரும்புகிறேன். பொதுச் சுகாதாரச் சட்டம் எல்லா
வகையிலும் ஒரே விதமாக அமைகின்ற அளவு, நாம் கொண்டிருக்
கும் கருத்துக்கள் ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய வகையில்,
அமைச்சரவை தங்களுடைய யோசனைகளைச் சொல்லக் கூடிய
வகையில், அந்தச் சட்டம் நம்முடைய மாநிலத்திற்கு முரணாகாத
வகையில், நிர்வாகத்தை இழக்காத வகையில், கூடுமானால் இன்னும்

உரிமைகளைப் பெறும் அளவுக்கு வழிவகைகளைக் காண்பதற்கு வழிகோலும் முறையில் அதனை இந்த மன்றத்தில் கொண்டு வந்து ஆலோசனைகளைப் பெற முயலவேண்டுமென்று கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

மற்றும் சுகாதாரத் துறையையும் மருத்துவத் துறையையும் இணைக்கும் முயற்சியைப் பற்றிய கருத்துக்களை கவர்னர் உரையின் விவாதத்தின் போதே பலரும் எடுத்துக் கூறியிருக்கின்றனர். கவர்னர் உரையின்போது கூறிய அதே கருத்துக்களை நான் மீண்டும் வலியுறுத்திக் கூறுகிறேன். பொதுநலத் துறை தடுப்புத் துறை, மருத்துவத் துறை தீர்வுத் துறை இரண்டுக்கும் உள்ள வேறுபாட்டை நாம் நன்றாக உணரவேண்டும். பொது நலத் துறை பொதுவாக மக்களிடையே நோய் வாராமல் தடுப்பது, ஊர்களில் நோய் பரவாமல் தடுப்பது, மாவட்ட வாரியாக நோய் பரவாமல் தடுப்பது என்ற நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார்கள். ஆனால் மருத்துவத் துறை தீர்வுத் துறை என்ற முறையில், ஏற்பட்டு விட்ட நோயைத் தீர்க்கும் பணியிலே ஈடுபட்டிருக்கிறது. ஒவ்வொருவரையும் தனித் தனியாகக் கண்டு, அவரவர்களின் உடல் வளத்திற்கேற்ப, நோய்களின் தன்மைக்கேற்ப எண்ணிக்கைக்கேற்ப தனித் தனியாக ஒவ்வொருவரையும் கண்காணிக்க வேண்டிய துறை. ஆகவே மருத்துவ துறையும், பொது நலத் துறையும் தனித் தனியாக இருந்தால் நன்கு செயல்பட முடியும். இரண்டுக்கும் நல்ல உறவு ஏற்படும் வகையில், ஒத்துழைப்புத் தரும் வகையில் தொடர்பு இருக்கும் காரணத்தால் உறவை நிலைநாட்டி, தனித் தனியாக இயங்கச் செய்வதால் பணிகள் செம்மையுற ஆற்ற முடியும். இந்த மாநிலத்தினுடைய உரிமைகளும், அதிகாரங்களும் பறி போகாத வகையிலே, இன்னும் சீர் பெறும் வகையிலே இந்தச் சட்டம் கொண்டுவரப் பட்டால் நல்லது என்று கூறி என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** கனம் துணைத் தலைவர் அவர்களே, நான் இன்றைக்குப் பொதுச் சுகாதாரம் பற்றிய சட்டம் ஒன்றினை பார்லிமெண்டில் கொண்டு வர இச்சட்ட சபையின் இசைவினைப் பெறுவதற்காகக் கொண்டுவந்த தீர்மானத்தின்மீது பலரும் பேசினார்கள். முதலில் கனம் மதியழகன் அவர்கள் பேச்சையில் இந்தத் தீர்மானத்தை ஆதரித்துப் பேசுவதாக ஆரம்பித்து, பச்சைப் பாம்பின் விஷத்தைப் போன்ற ஒரு எதிர்ப்பைத் தெரிவித்தார்கள். குறிப்பாக இன்று நம் நாட்டிலே இருக்கும் 'ட்ரக் ஆக்ட்', 'அடல்ட்ரேஷன் ஆக்ட்' எல்லாம் மத்திய அரசாங்கத்தின் 'ஆக்ட்ஸ்'-ஆக இருந்து கொண்டிருக்கின்றன. இருந்தபோதிலும் நடைமுறையிலே 'அட்மினிஸ்ட்ரேடிவ் பவர்' எல்லாம் நம்முடைய மாகாணத்திற்கு உட்பட்டிருக்கிறது.

கனம் அங்கத்தினர் அவர்கள் கூறியதை நான் ஒப்புக்கொள்வதற்கு இல்லை. அவர் இதை எதிர்ப்பதற்கு காரணம் என்னவென்றால், என் புத்திக்கு எட்டிய மட்டில் சொல்லுகிறேன், இந்த சட்ட [illegible] முடிந்த பிறகு தன் தொகுதிக்குச் சென்றால் வாக்காளர்களுக்கு என்ன பதில் சொல்ல வேண்டும் என்பதுதான்.



**SRI K. A. MATHIALAGAN :** Sir, I am sorry, it is an insinuation.

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** அவர்களுக்குச் சொல்ல வேண்டிய பதிலை நானே அவர்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். நம் பெருவாரியான வாக்காளர்கள் ஏழை மக்கள்தான். அவர்களைப் போய்த்தான் காண வேண்டிய சந்தர்ப்பம் ஏற்படும். அவர்கள் சுகாதாரத்தையொட்டித்தான் இந்தச் சட்டம் யூனிபாரமாக எல்லா மாநிலங்களுக்கும் இருக்க வேண்டுமென்றுதான் இந்தத் தீர்மானம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. உணவுக் கலப்படத்தைப்பற்றி இங்கு கூறப்பட்டது. இன்றைய தினப் பத்திரிகையை நீங்கள் பார்த்திருப்பீர்கள். மத்திய சுகாதார அமைச்சர் டாக்டர் சுசீலா நய்யார் அவர்கள் அதற்கு கடுமையான தண்டனை விதிக்க வேண்டும் என்றும் அதற்கேற்ப சட்டம் கொண்டு வர, ஒரு அமெண்ட்மெண்ட் கொண்டு வர இருக்கிறார்கள் என்றும் பங்களூரில் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். மக்களுக்கு பயன்படும் முறையில் செய்யவேண்டுமென்றுதான் இத்தீர்மானம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் ஆல் இந்தியா சர்விஸ் பற்றி கூறினார்கள். ஆல் இந்தியா சர்விஸ் முறையில் கொண்டு வர தற்சமயம் எந்தவிதமான ஏற்பாடும் இல்லை. இருந்தபோதிலும் அது அநேகமாக பட்ஜெட் செஷனில் வரும். ஆகவே அவர்கள் வேண்டுகோள் பற்றி பட்ஜெட் பேச்சில் விளக்குகிறேன். திருமதி அனந்தநாயகி அவர்கள் இத்தீர்மானத்தை ஆதரித்து சில வார்த்தைகள் கூறியதுபற்றி என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நல்ல முறையில் இதை நடைமுறைக்கு கொண்டு வரவேண்டும், எல்லா மாநிலங்களிலும் வரவேண்டும். மக்களுக்கு இது பயன் படவேண்டுமென்று அவர்கள் கூறினார்கள். சில அங்கத்தினர்கள் பப்ளிக் ஹெல்த், மெடிக்கல் அமால்கமேஷன் பற்றிக் கூறினார்கள். அதைப் பற்றி நான் இப்போது சொல்வதற்கில்லை. பட்ஜெட் டிமாண்ட் வரும்போது அதுபற்றி விரிவாகப் பேச எல்லா அங்கத்தினர்களுக்கும் சந்தர்ப்பம் ஏற்படும். அப்போது அவரவர்கள் கூறும் அபிப்பிராயங்களை மனதில் கொண்டு அரசாங்கம் எந்தத் தீர்மானத்திற்கு வருகிறதோ அதை அப்போது கூறிக் கொள்ள விரும்புகிறேன். இதை ஒரு தீர்மானமாக கொண்டு வரவேண்டுமென்று மத்திய அரசாங்கம் கேட்டதா என்று ஒரு அங்கத்தினர் கேட்டார்கள். மத்திய அரசாங்கம் கேட்டுக் கொண்டதின் பேரில்தான் இத்தீர்மானம் இங்கு கொண்டு வரப்பட்டது. இது குறித்து மத்திய அரசாங்கம் லெஜிஸ்லேஷன் கொண்டு வருவதற்கு முன்பாக இந்த சபையில் வைத்து இந்த சபை அங்கத்தினர்களின் அபிப்பிராயங்களை அறிந்த பின்னர் ஒரு ஆக்ட் கொண்டு வர வேண்டுமென்று எதிர் கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். நமது மாநில பப்ளிக் ஹெல்த் ஆக்டைப் பொறுத்த மட்டில் எந்த மாநிலத்திலும் இந்த மாதிரி ஆக்ட் கிடையாது. நமது ஆக்டைப் பார்த்து சென்ட்ரல் லெஜிஸ்லேஷன் இருக்க வேண்டுமென்று சென்ற ஆண்டு நடந்த ஹெல்த் மினிஸ்டேர்ஸ் கான்பரன்ஸில் கூறியதால், அப்படி விரும்பியதால், இந்தத் தீர்மானத்தை

கொண்டு வந்திருக்கிறோம். நமது அட்மினிஸ்ட்ரேஷன் பொறுத்து நடக்க வேண்டியதை, நம் மாநிலத்தைப் பொறுத்தவரையில் அவர்கள் எல்லாவற்றையும் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். இந்த சென்ட்ரல் ஆக்ட் பாலானால் சென்னை மாநிலத்திற்குப் பொருந்திய ஆக்ட்தான் எல்லா மாநிலங்களுக்கும் வரப் போகிறது. இது பாலான பிறகும் அதுபற்றி பேசுவதற்கு சந்தர்ப்பம் இருக்கும். அதில் இடைஞ்சல்கள் ஏதாவது இருந்தால் அதுபற்றிக் கூற உரிமை உண்டு. நமது உரிமையைப் பாதுகாத்துக் கொண்டுதான் சென்ட்ரல் ஆக்ட் கொண்டு வரப்படுகிறது. நாஷனல் இராடிகேஷன் ப்ரோக்ராம் வரும்போது நமக்கு இந்த ஆக்டைப் பொறுத்தவரை கஷ்டமான நிலை இருக்கிறது. எல்லா மாநிலங்களுக்கும் யூனிபார்மாக இருந்தால் அதனால் நன்மை ஏற்படும் என்று கருதித்தான் இந்தத் தீர்மானம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. நம் ஆக்டில் உள்ள குறிப்புகளை எடுத்துத்தான் சென்ட்ரல் ஆக்ட் பாஸ் செய்யப் போகிறார்கள். என்றென்றும் நம் உரிமை நம்மிடம் இருக்கிறது. என்றைக்கும் அமெண்ட்மெண்ட் கொண்டு வரவும், நம் கமண்ட்ஸை சொல்லவும் நமக்கு வாய்ப்பு இருக்கிறது. அதை அவர்கள் ஏற்றுக் கொள்ளவும் வாய்ப்பு இருக்கிறது என்று கூறிக்கொண்டு அவர்கள் ஆக்ட் கொண்டு வருவார்களே தவிர அட்மினிஸ்ட்ரேட்டிவ் பவர்ஸ் மாநிலத்திற்குத் தான் உள்ளது என்று கூறிக் கொண்டு இத்தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

MR. DEPUTY SPEAKER : The question is—

"Whereas, public health is a matter of the utmost importance and the problems that face State Governments in the administration of public health are common to all States.

And whereas, with a view to securing uniformity in the administration of public health throughout the Union of India, it is desirable that Parliament should pass an Act relating to public health applicable to the whole of India;

Now, therefore, in pursuance of clause (1) of Article 252 of the Constitution of India, this Assembly resolves that the matter aforesaid and all other matters connected therewith or incidental thereto, in so far as they fall within Entry 6 in List II (State List) of the Seventh Schedule to the Constitution of India, shall, in this State, be regulated by an Act of Parliament."

The Resolution was put and carried.

## V.—ANNOUNCEMENT.

### THE MADRAS GENERAL SALES TAX (AMENDMENT) BILL, 1963.

MR. DEPUTY SPEAKER : I have to announce to the House that the Governor has given his recommendation to the introduction in and consideration by the Madras Legislative Assembly of the Madras General Sales Tax (Amendment) Bill, 1963.



## VI.—GOVERNMENT BILLS.

### (1) THE MADRAS GENERAL SALES TAX (AMENDMENT) BILL, 1963

THE HON SRI R. VENKATARAMAN : Mr. Deputy Speaker, Sir, I move—

"That leave be granted for the introduction of the Madras General Sales Tax (Amendment) Bill, 1963".

MR. DEPUTY SPEAKER : The question is—

"That leave be granted for the introduction of the Madras General Sales Tax (Amendment) Bill, 1963."

The motion was put and carried and leave was granted.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I introduce the Bill.

MR. DEPUTY SPEAKER : The Bill is introduced.

### (2) THE MADRAS APPROPRIATION BILL, 1963 (L.A. BILL NO. 3 OF 1963).

THE HON. SRI R. VENKATARAMAN : Mr. Deputy Speaker, Sir, on behalf of the Minister for Finance, I move—

"That the Madras Appropriation Bill, 1963 (L.A. Bill No. 3 of 1963) be taken into consideration."

MR. DEPUTY SPEAKER : Motion moved—

"That the Madras Appropriation Bill, 1962 (L.A. Bill No. 3 of 1963) be taken into consideration."

* திரு. இரா. நெடுஞ்செழியன் : மதிப்பிற்குரிய சட்டமன்றத் துணைத் தலைவர் அவர்களே, 1963-ம் ஆண்டு சென்னை நிதி ஒதுக்க மசோதாவை கனம் நிதி அமைச்சர் அவர்கள் சார்பாக கனம் தொழில் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்து வைத்துள்ளார்கள். குறிப்பாக கொள்கை பற்றிய ஒரு சிறிய விளக்கத்தை மட்டும் கூறி என் கருத்தைத் தெரிவிக்கலாம் என்று கருதுகிறேன். நிதி ஒதுக்க மசோதா மூலம் இந்த ஆண்டு 14 கோடி சில்லரை ரூபாய் துணை மதிப்பீட்டுக் கோரிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்டிருக்கின்றன. இந்த கோரிக்கைகள் செலவினங்களின் அவசியமான தன்மையை ஒட்டி வளர்ந்து போகும் தன்மையைப் பார்க்கிறோம். அதற்கேற்ப துணை மதிப்பீட்டில் செலவினங்கள் ஒதுக்க வேண்டிய அவசியம் உள்ளவர்களாக இருக்கிறோம். அவசியமான செலவினங்களுக்கு மதிப்பீடுகள் ஒதுக்க முயற்சி எடுப்பது போல் அனாவசியமான சில செலவினங்களைக் குறைப்பதற்கான முயற்சிகளையும் அரசினர் மேற்கொள்ள வேண்டுமென்று எடுத்துக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். எந்தெந்த வகையில் செலவினத்தைக் குறைக்க முடியுமோ அந்தந்த வகைகளில் எல்லாம் குறைப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும். சாதாரணமாக அரசாங்க செயல்கள் என்றால் பொதுவாக மக்களிடத்தில் இருந்து வருகின்ற எண்ணம், அரசாங்க செயல்கள் என்றால் செலவினங்கள் அதிகமாகும் என்றும், தனியார் துறையில் என்றால். செலவினங்கள் குறைவாகவே இருக்கும் என்றும் அரசாங்கச்செலவு என்றால் பொருள் விரயமாகும், காலம் விரயமாகும் என்ற பொதுவான [illegible]

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [5th February 1963

மக்களிடத்தில் இருந்து கொண்டிருக்கிறது. அதை மாற்றுவதற்கான எல்லா முயற்சிகளையும் அரசினர் மேற்கொள்ளவேண்டும். ஒரு காரியத்தை தனியார் ஏற்றுக் கொண்டால், சிக்கனமாகவும், பொருள் விரயமில்லாமலும், சீக்கிரமாகவும் செய்து முடிப்பார்கள் என்றும், பொதுத்துறையில் மேற்கொண்டால், பொருள் விரயம் அதிகமாகவும் செலவு அதிகமாகவும், காலக்கெடு அதிகமாகவும் ஆகும் என்று எண்ணுகின்ற நிலைமை இருந்து வருகின்றது. ஆகவே ஒரு காரியம் நல்லவிதமாக நடந்தேற வேண்டுமென்றால் பொதுத்துறையில் அதனை மேற்கொண்டாலும் நடைபெறும் என்கின்ற நிலைமையை உருவாக்கித் தரவேண்டிய பொறுப்பு அரசினரைச் சார்ந்ததாகும். அதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்தாகவேண்டும். இதன் பேரில் சில பல குறைகளைப் பலர் சொன்னாலும் அவைகளை எல்லாம் போக்குவதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும் என்று வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் அரசினர் நடத்தும் கடிதப் போக்குவரத்துக்களில் ஏற்படுகின்ற காலதாமதங்களை பல நேரங்களில் காண்கின்றோம். அதை சீர்படுத்தும் முறையில் நிர்வாக அமைப்பைச் சீர்படுத்த வேண்டும் என்பதையும் இச்சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன். எடுத்துக்காட்டுக்காக ஒன்றை குறிப்பிட விரும்புகிறேன். சாதாரணமாக சிறையில் கைதிகளாக இருக்கின்ற மன்ற உறுப்பினர்கள் அவர்கள் சிறையில் இருக்கின்ற நேரத்தில், சட்டமன்ற கூட்டங்கள், மற்றும் பல குழுக் கூட்டங்கள் நடந்து கொண்டிருக்குமானால் அதில் கலந்து கொள்ள விரும்புகிறார்கள் என்றால் கிரிமினல் ப்ரொசிஜர் கோட் 401-வது பிரிவின்படி கலந்து கொள்வதற்கு விண்ணப்பம் செய்து கொள்ளலாம் என்றிருக்கிறது. அப்படி விண்ணப்பம் செய்து கொண்டால் அனுமதி அளிப்பதும் அளிக்காமல் இருப்பதும் அரசாங்கத்தின் பொறுப்பாகும். இந்த விதியின்படி நான் சென்ற செப்டம்பர் திங்களில் 20 அல்லது 21-ம் நாள் சபாநாயகர் அவர்கள் மூலமாக இந்த மன்றத்தின் தலைவரும், நிதி அமைச்சருமாக இருக்கின்ற கனம் பக்தவத்சலம் அவர்களுக்கு ஒரு விண்ணப்பத்தை அனுப்பினேன். அக்டோபர் திங்களில் 3, 4, 5, நாட்களில் மதிப்பீட்டுக்குழுவின் கூட்டங்களும், அக்டோபர் திங்கள் 20-ம் நாள் விற்பனை வரி ஆலோசனை குழு கூட்டமும் 22-ம் நாள் பொதுநிதிக்குழு கூட்டமும் இருந்தது. அத்துடன் அக்டோபர் 28-ம் நாள், 29-ம் நாள் சட்டமன்றக் கூட்டங்களும் இருந்தன. இந்த நான்கு கூட்டங்களிலும் கலந்துகொள்வதற்கு அனுமதி வழங்கவேண்டும் என்று விண்ணப்பம் அனுப்பியிருந்தேன் சபாநாயகர் அவர்கள் மூலமாக—இதற்கு அனுமதி வழங்குவதும் வழங்காமல் இருப்பதும், அதற்கான உரிமையும் அரசினருக்கு இருக்கிறது. இந்த நிலைமையில் எனக்கு அக்டோபர் திங்கள் 23-ம் நாள் இந்தக் கூட்டங்களில் கலந்துகொள்ள அனுமதியில்லை என்று அரசாங்கத்திடமிருந்து பதில் வந்தது. மதிப்பீட்டுக்குழு கூட்டங்கள் அக்டோபர் திங்கள் 3, 4, 5-ம் நாட்கள், விற்பனைவரி ஆலோசனைக்குழுக் கூட்டம் அக்டோபர் 20-ம் நாள்,



5th February 1963] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

ஆனால் இவற்றில் கலந்து கொள்ள அனுமதி இல்லை என்ற பதில் எனக்கு அக்டோபர் திங்கள் 23-ம் நாள் வருகிறது. இப்படி காலதாமதமாகிப் பதில் வருகின்ற தன்மையை எல்லாம் செம்மைப்படுத்தவேண்டும். அதற்கு தகுந்தவாறு கடிதப்போக்குவரத்து நிர்வாகத்தை மாற்றி அமைப்பதற்கான முயற்சிகளை அரசினர் மேற்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பொதுவாக இந்தத்துறைகளில் கூறப்படும் குறைகளைப் போக்குவதற்கு எந்தெந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியுமோ அவைகளை எல்லாம் மேற்கொள்ளவேண்டும், அதற்கேற்ற முறையில் தேவைப்பட்டால் நிர்வாக அமைப்புக்களையும் மாற்றி அமைக்கவேண்டும் என்றும் வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைய நிலையில் எந்த அளவுக்கு சிக்கனத்தை கையாள முடியும் என்பதை பார்க்கின்ற வகையில், எந்தெந்த இனங்களில் செலவினத்தை மிச்சப்படுத்த முடியும் என்பதைப் பார்த்து, அவைகளை எல்லாம் குறைப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்து, அந்தந்தத்துறைகளில் சிக்கன முறையைகையாண்டு நிதிநிலையை நல்ல முறையில் வைத்துக்கொள்வதற்கான எல்லா முயற்சிகளையும் கைக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

* கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கனம் எதிர்கட்சித் தலைவர் அவர்கள் கூறிய கருத்துக்களை சர்க்கார் தரப்பில் நாங்கள் ஆதரிக்கின்றோம். நெருக்கடி ஏற்பட்டிருக்கின்ற இந்தக் காலத்தில் யாரும் எந்தவிதத்திலும் அதிகமாகச் செலவு செய்துவிடக்கூடாது, அதைப் பாதுகாத்துக் கொள்ளவேண்டும் என்பது உண்மை. அதைக் கருத்தில்கொண்டு ராஜ்ய சர்க்கார் பல விதிகளைப் பிறப்பித்திருக்கிறார்கள். உதாரணமாக சிக்கனத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக நிதி இலாகாவிலிருந்து எல்லா இலாகாக்களுக்கும் எவ்வளவு குறைவாக பிரயாணம் செய்யமுடியுமோ அந்த அளவு குறைவாக இருக்கவேண்டும் என்றும், அவசரமில்லாத பல காரியங்களையும் ஒத்திப் போட வேண்டும் என்றும் உத்தரவுகள் பிறப்பித்திருக்கிறோம். ஆகவே இந்தச் சிக்கனத்தைக் கடைப்பிடிப்பதில் இம்மியளவு கூட இந்த அரசாங்கம் தயங்காது என்பதை நான் தெளிவாக வலியுறுத்திக்கூற விரும்புகிறேன்.

